சங்கத் தமிழ்



கலைஞர்
மு.கருணாநிதி

சங்கத் தமிழ்

கலைஞர்
மு. கருணாநிதி

ராஜ் டீ போர்ட்
பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை - 83

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

சங்கத் தமிழ்

கலைஞர்
மு. கருணாநிதி

வெளியீட்டாளர்

ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ்
(பி) லிட்.
33, 10வது நிழற்சாலை,
அசோக்நகர்,
சென்னை 600 083.
தமிழ்நாடு - இந்தியா.

சங்கத் தமிழ்

கலைஞர்
மு.கருணாநிதி



ராக்ஃபோர்ட்
பப்ளிகேஷன்ஸ்(பி)லிட்.,
சென்னை-83

நூல் அளவை

தலைப்பு : சங்கத் தமிழ்.

ஆசிரியர் : கலைஞர் மு. கருணாநிதி.

பொருள் : இலக்கியம் (சங்கத் தமிழுக்கு, எளிய நடையில் விளக்கக் கவிதை வரிகள்)

வெளியீட்டகம் : ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட். - சென்னை - 600 083.

வெளியீடு : 4.

பதிப்பு : ஒன்று.

தாள் : மாப் லித்தோ.

அளவு : 14 x 21½ சி.எம்.

படிகள் : 3,000.

காலம் : ஆகஸ்ட் 1987.

விலை : ரூ. 125|- (ரூபாய் நூற்று இருபத்தி ஐந்து)

எழுத்து : 18 புள்ளி.

ஓவியங்கள் : கோபுலு - ஜெயராஜ் - மாருதி உமாபதி - மருது.

தலைப்புகள் : ஓவியக் கவிஞர் அமுதோன்.

ஒளி அச்சுக் கோர்வை : காந்தளகம் - சென்னை-2.

அச்சிட்டோர் : சீனிவாஸ் பைன் ஆர்ட்ஸ் - சிவகாசி.

முன்னுரை

முதுபெரும் அறிஞர் பெருமதிப்புக்குரிய திரு. நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் "உலகத்தமிழ்" என்னும் இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்க வேண்டுமென என்னை மிகவும் கேட்டுக் கொண்டார். யான் நினைத்து பார்த்து பார்த்து அஞ்சி அஞ்சி இந்த நூலின் பொருள் பெரும் உள்ளத்திலிருந்து எழுந்த திடீர் தூண்டுதலையே இதோ வாழ்த்துரையாக எழுதிக் கொடுத்தேன். இந்த நூல் வெளிவரும் பொழுது அவர் நம்மிடையே உயிருடன் இருப்பார். புகழ் உடலுக்கு இறப்பில்லை. உலகத் தமிழ்ப் பெருமக்களை ஒன்றாக நினைவில் நிறுத்தும் விழாக்களை நடத்தி வரும் இன்றைய தமிழர்களின் ஆர்வத்தினால் இந்த நூலும், அவ்வரிய பெரியவரின் வாழ்த்துரை; நாமக்கல் பதிப்பகமும் பெருமை அடைகிறேன்.

தமிழ் முழு உரிமை பெற்றுள்ள

இலக்கிய பதிப்பகத்தாருக்கும், இந்தப் பதிப்பை வெளியிடும் நாமக்கல் வெளியீட்டகத்தாருக்கும் நன்றி உரியதாகுக.

அன்புள்ள,

மே திங்கள்
1987

நாள் : 19-10-1985.

கீ. இராமலிங்கனுர் மடல்!

கனிந்த அன்புமிக்க கலைஞர் பெருமானுர் அவர்கள் தித் திக்கும் திருமுன்னுக்கு,

26.7.85நாளிட்ட தங்கள் தேன் என இனிக்கும் திருமடலுக்கு இன்றே விடை வரைகின்றேன். பெற்றதுமே பெருமிதத்தோடு படித்துப் பெருங்களிப்படைந்தேன். நன்றிகூர்ந்தேன். தங்கள் அன்பின் கட்டளையை நிறைவேற்றுவதையே முதற் கடமையாகக் கொண்டேன்.

சங்கத் தமிழ் என்னும் கலைநலமும் கவிநலமும் ஒருங்கே பொருந்திய நூலுக்கு ஒரு கட்டுரை வடிவிலே ஓர் அணிந்துரை வரைவதிலே முயன்று நின்று முடித்தேன். அதற்கே பேராசிரியர் திரு. முருகேசனுர் உதவி உடனிருந்து உறுதுணை புரிந்தது. என் உள்ளத்திற்கு உகந்த வகையிலே அது அமையாது போயினும், தங்கள் கட்டளையை ஒருவாறு நிறைவேற்றினேன் என்பது எனக்கு மனநிறைவு அளிக்கின்றது.

தள்ளாமையின் விளைவான தடுமாற்றத்தினுல் கால் தவறிக் கீழே விழுந்து விட்டேன். இடப்புறச்சப்பை அடிபட்டு அசைக்க முடியாதபடி வலியும் ஏற்பட்டிருக்கிறது. படுக்கையில் இருக் கிறேன். உண்பதும் கழிப்பதும் கூட படுக்கையிலேயே நிகழ வேண்டியிருக்கின்றன.

நண்பர் பேராசிரியர் முருகேசனுர் காண வந்தார். அவர் அன்பினை நாடி இதனை வரைய முடிந்தது. நேரில் வரவும், கலந்து உரையாடவும் வாய்ப்பிழந்த நிலையில் உள்ளேன். அணிந் துரையைத் தாங்களே செப்பனிட்டு அச்சுக்கு அனுப்பக் கோருகிறேன்.

தங்கள் கருத்தறிந்து மேலும் செய்ய வேண்டுவன இருப்பின் செய்து முடிக்க ஆயத்தமாய் உள்ளேன்.

அடியேனையும் ஒரு பொருளாகக் கருதி அணிந்துரை வரை யப் பணித்த தங்கள் அன்பின் மாண்பு மாப்பெரிது. அதனைப் போற்றிப் பரவுகின்றேன்.

இங்ஙனம் தங்கள்

கீ. இரா.



கலைஞர், கவிஞர், மூதறிஞர் மு. கருணாநிதி அவர்களின் ''சங்கத் தமிழ்''

''சங்கத் தமிழ்'' என்னும் நூல், சங்க காலத் தமிழ்ச்சொல் ஓவியங்கள் சிலவற்றை, இன்றைய தமிழர், இனிது படித்து உணர்ந்து உவகை கொள்ளும் வகையில், தெள்ளத் தெளிந்த தமிழ்க் கவிதைகளாக ஆக்கியளிக்கும் இனிய பனுவல், உள்ளத்தைக் கவ்வும் பாங்கிலும், நெஞ்சத்தில் தோயும் செஞ்சொற்களாலும், வடிக்கப் பெற்றிருப்பதால், உள்ளபடியான 'கவி-தை' நூலாகும் இது. எதுகையையும், மோனையையும், சீரையும், தளையையும் தேடுவதில் சிந்தையைச் செலுத்திக் கொண்டிராமல், உள்ளிருந்து ஊற்றெடுக்கும் மொழியும் பொருளும் இயல்பாக இயங்குமாறு உரிமை நலம் வழங்கப் பெற்ற, உண்மைப் பாடல்களை உருவாக்கித் தரும் உயர் நூல், பட்டுச் சொல்லும் பான்மையால் பாடல்களாயின.

சங்க காலம் என்பது, இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம். இன்றுள்ள உலக மொழிகள் பலவற்றில், இலக்கியம் என்பதே எட்டிப்பாராதிருந்த காலம் அது. நம் முன்னோர், அந்நாளிலேயே சங்கமாகக் கூடியிருந்து தமிழை ஆராய்ந்தனர். இன்றும், என்றும், மறந்து போய்விடலாகாத, உயிர்த்துடிப்புள்ள செய்திகளைச் செம்மை சிவணிய மொழியில் சொற்படங்களாக்கி, நாம் எக்காலத்தும் நுகர்ந்து மகிழும் நல் உடைமைகளாக நமக்கு வழங்கிச் சென்றுள்ளனர். 'சங்கு' தமிழகம் அறிந்த, கண் கவரும் கடற் பொருளாகும். உள் குவிந்து, அமைந்த உலகம் நலியனைத்தையும் ஒருங்கு திரட்டிக் கொண்டு ஓம் என்னும் மூல ஒலியை உண்டாக்கும், வடிவம் அது. பேரறிஞர் பலர் ஒன்று கூடி, உள் குவிந்து ஒன்றி நின்று, ஓசை நயம் பூண்ட தமிழால் என்றும் நிலைத்திருக்கக் கூடிய மொழி ஓவியங்களைப் படைத்தளித்த நிறுவனமே 'சங்கம்' என்பது.

இந்நூலுள் விளக்கப்பெறும் பாடல்கள், மூன்றும் சங்கத்தைச் சேர்ந்தன என்பர். அதற்கு முன் இரண்டு சங்கங்கள் இருந்தன வாகவும் கூறுவர். முதலிரண்டு சங்கங்கள் ஆய்ந்து படைத்த இலக்கியங்களுள் தொல்காப்பியம் தவிர மற்றவை இன்று நமக்குக் கிட்டவில்லை. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் என்பது மரபு. எனவே தொல்காப்பியத்திற்கும்

முன்பு பல இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும். அகத்தியம் என்னும் இலக்கண நூலும் முதல் சங்கத்தது என்பர். அது உருவா வதற்கு ஆதாரமாக பல இலக்கியங்கள் இருந்திருத்தல் வேண்டும். எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம்என்னும், அகத்திய நூற்பா இன்றும் புலவர் கள் வாயால் வழங்குவதைக் காணலாம். காலத்தின் கோலம்! முச்சங்கங்களுக்கும் முன்பும், நம் முன்னோர் ஆய்புகாலத்துக்கு உகந்தவாறு பல சங்கங்களை அமைத்துக் கொண்டு தமிழ் வளம் பரந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. காலத்தின் கேட்டினுல், அடியோடு அழிந்து விடாமல், இப்போது கிடைத்துள்ள அள வாவது சங்கத்தமிழ் நூல்கள் நமக்குக் கிட்டியிருப்பதற்கு, நம் முன்னோரின் தமிழ்ப் பற்றினை நாம் போற்றிப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். ஓலைச் சுவடிகளில் எழுத்தாணியால் பொத்தி உருச்செய்து, நீராலும், மண்ணுலும், காற்றுலும், நெருப் பாலும் பழுதுபடாமல் காத்து வைத்த அப் 'பொத்தகங்கள்' (பின் னுல் இது 'புத்தகம்' ஆகிப் 'புஸ்தகமும்' ஆகி விட்டிருக்கிறது) இன்று நம் கைக்கு எட்டியிருப்பதே மாபெரும் வியப்பாகும்!

மூன்றும் சங்கம் படைத்தும் திரட்டியும் வைத்துச் சென்ற நூல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம் என்பர். இவற்றுள் அகத்துறை, புறத்துறை பற்றிய பாடல்களைத் தொகுத்து வைத்த எட்டு நூல்களைக் கொண் டது ''எட்டுத்தொகை'' என்பது. அகத்துறைப் பாடல்கள் என்பது, ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கொள்கையில் நிலை நின்று, காதலிக் கும் இருவர் உள்ளத்து நிலவிய இருவரது உள்ளத்தையும் கதுவுவதா உணர்ச்சிகளைப்பற்றிச் சொல்வது இருவரது அகத் தளவில் நிகழ்ந்து இருவருக்கும் இன்பம் பயக்கும் உணர்வுகளாகும். அவ்வின்பம் இந்தத் தன்மையது என்று அவர்களாலேயே ஒருவருக் கொருவர் எடுத்தியம்பிக் கொள்ள இயலாது. மற்றச் செய்திகள் யாவும் புறத்துறையினவாகும். எட்டுத் தொகை நூல்களுள், ஐந்து அகப்பொருள் பற்றிக் கூறுவன. பரிபாடல் என்னும் நூலுள்ளும் அகப்பொருட்கள் வருகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் புற நானூறு, பதிற்றுப்பத்து என்னும் இரண்டும் புறத்துறைச் செய்தி களைக் கூறுவன. இவையிரண்டில் புறநானூற்றுப் பாடல்கள் இந் நூலில் விளக்கப் பெறுகின்றன.

எட்டுத்தொகை நூல்களுள் முழுக்க முழுக்க அகப்பொருட் செய்திகளை கூறப்பெறும், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களிலிருந்தும் பதி னைந்து பாடல்கள் இந்நூலுள் விரிவுரைக்கப் பெறுகின்றன. அவ் வாறே புறநானூற்றிலிருந்து பதினைந்து பாடல்கள் விளக்கப் பெறுகின்றன. இவற்றை இயற்றியவர் பெண்பாலர் மூவர், ஆண் பாலர் பதினுல்வர்.

இதுவரை வந்துள்ள மொத்தம் 21 இதழ்களில் வெளிவந்த பாடல்கள், இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளன. முதல் பத்து இதழ்களில் வெளியான, 12 பாடல்களின் விளக்கமான செய்திகள், பின்வரும் கவர்ச்சியான பத்துத் தலைப்புகளில் அறிமுகம் செய்யப்பெறுகின்றன.

1. 'தகடூரான் தந்த கனி'
2. 'பறம்பு மலைப் பாவேந்தர்'
3. 'செவிலி தேடிய சித்திரப்பாவை'
4. 'வாடைக்காற்றில் வாடிய காதலி'
5. 'வாணன் மணந்த வண்ணத்திருமகள்'
6. 'ஒரு பொதுமகளின் புலம்பல்'
7. 'மானங்காத்த மறவன்'
8. 'துணை நின்ற தோழி'
9. 'பாவை புகழ்ந்த பன்றி'
10. 'உலைக்களத்து இரும்பும் ஒரு துளி நீரும்'

விளக்கக் கவிதையைப் படித்துச் சுவைத்து வரும்போதே ஒவ்வொரு தலைப்பும், உரிய சங்கப்பாடலின் உள்ளீட்டை எத்துணை நுட்பமாகவும், பொருத்தமாகவும் நுணுகி அறிந்து கூட்டப் பெற்றிருக்கின்றது என்பதை உணர்ந்து உளங் களிக்கலாம். சங்கத்தமிழ்ப் பாடல்களைப் படித்து இன்புறும் எண்ணம் மங்கி வந்துவிட்ட இக் காலத்தில், அவற்றின் இலங்குகின்ற தன்மையை - இலக்கியப் பாங்கை - மக்கள் நுகரவொட்டாமல் - பயிலவொட்டாமல் புறக் கணிக்கத் தூண்டும் சிலருடைய போக்கு மிகுந்து வரும் இந்நாளில், அவற்றைப் போற்றிப் படிக்கும் ஆர்வத்தை பொது மக்களிடையே வளர்க்கின்ற அரும் பணியைப் புரிகின்றன இத்தலைப்புகளைக் கொண்டு விளங்கும் இந்நூலாசிரியர் விளக்கக் கவிதைகள்.

இத்தமிழ்த் திருப்பணியை ஆற்றுவதுடன், பின் பகுதியான, பதினேர் இதழ்களில் வெளியாகியுள்ள பொருள் ஒருதலைக் காதல் என்னும் ஒரே தலைப்பில், ஒரு குறுங்காவியமாக உருப்பெற்று ஒளிர்கின்றது. ஒன்பது புறநானூற்றுப் பாடல்களையும், அகத் துறைச் செய்திகளையும் கொண்ட நூல்களான 'நற்றிணைப்' பாடல்கள் மூன்று, அகநானூற்றுப் பாடல்கள் ஐந்து, 'குறுந்தொகைப்' பாடல்கள் ஒன்று, ஆகிய ஒன்பதையும் வைத்துக்கொண்டு, எழில் குலுங்கும் குறுங்காவியம் ஒன்றை கற்பனை செய்து விட்டிருக்கும் ஆசிரியரின் அருங்கலைத்திறன் பெரிதும் போற்றத்தக்கதாகும்.

இந்நூலின் ஆசிரியர் ஒரு கவின் கலைஞராக மட்டும் அல்லாமல், இன் கவிஞராகவும் இலங்குகின்ற இருசிறப்புடையவர்கள். எனவே, தமது கலைநலத்தைக் கவிநலம் மிளிரும் இனிய தமிழ்க் கவிதையாக மலர வைக்கும் மாண்பு பூண்டவர்கள். 'மூதறிஞராகவும்' அவர்கள் விளங்குவதால் அறிவு முதிர்ந்த முறையில், பண்பு

பொலியும் பல செய்திகளைக் கவிதை உருவில் வடித்தளிக்கும் வளமை மிகுந்தவர்களாகின்றார்கள்.

'டாக்டர்' என்னும் அயல் மொழிச் சொல்லின் பொருள்: ஆசிரியர் - 'அறியாமையைப் போக்குகின்றவர்' - 'அறிஞர்' ஆகும். வெறும் 'அறிஞர்' மட்டுமல்லர். ஐயம் ஏற்பட்டால் தெளிவுபடுத்துகிறவர், குறை கூறினால் அதனைக் களைகின்ற திறல் மிக்க அறிஞர்களாகின்றவரே 'டாக்டர்'. எனவே, அச்சொல்லுக்கு 'மூதறிஞர்' என்னும் தமிழ்ச் சொல்லே பொருத்தமானதாகும். 'முனைவர்' 'பண்டாரகர்' என்னும் சொற்களைக் காட்டிலும், 'மூதறிஞர்' என்னும் சொல்லையே நான் பயன்படுத்தி வருகிறேன்.

கலைஞரின் இக்கவிதைகளைப் படித்து நான் நுகர்ந்த தமிழ் ஓசை நயம், பொருள்நயம், சொல் நயத்தை மற்றோரும் நுகரும் வண்ணம், இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளது. தமிழ்மொழி தெரியாதவரும், தமிழ் ஓசை அளிக்கும் செவி இன்பத்தை நுகர லாம். பலவகை பழநறுக்கும், நறுமணப்பொருளும், தேனோடு கலந்து இனிக்கும் தெவிட்டாத கனிக்கலவையே இந்நூல்.

இங்ஙனம்

கி. இராமலிங்கம்

பதிப்புரை

''சங்கத் தமிழ்'' என்ற இந்த அரிய படைப்பு எங்களுக்கு மன மகிழ்வைத் தருகின்ற ஓர் உயரிய வெளியீடு! இலக்கியம், கலை, வரலாறு, வளர்ந்து வரும் அறிவியல், சட்டம் மற்றும் சமயம் ஆகிய துறைகளில் தலைசிறந்த படைப்புகளைப் புத்தகமாக வெளியிடுவது எங்களது குறிக்கோள்.

கலைஞரின் இலக்கியப் படைப்பான ''சங்கத் தமிழ்'' என்ற இந்த நூலை நாங்கள் வெளியிடுவது எங்களது நிறுவனத்திற்குப் பெருமை சேர்ப்பது. இந்த நூல் ஒரு நிரந்தரமான செல்வம் என்பதை உணர்ந்து - இந்நூல் எல்லாவகையிலும் சிறப்பாக இருக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன், எங்களது முயற்சிகளை ஒன்று குவித்து இப்புத்தகத்தை வெளியிடுகின்றோம்.

இந்த வெளியீட்டை நாங்கள் கொண்டு வர இதன் பதிப் புரிமையை எங்களுக்கு வழங்கிய கலைக்கனிப் பதிப்பகத்தாருக்கு நன்றி தெரிவிக்கிறோம். வண்ணப் படங்களை வரைந்து நூலுக்குப் பெருமை சேர்த்த ஓவியர்கள் கோபுலு - ஜெயராஜ் - மாருதி உமாபதி – மருது –ஆகியோருக்கு நன்றி.

தலைப்புகளைச் சித்திர வடிவில் அமைத்த அமுதோன் - கலை ஞரின் வண்ணப்படத்தை எடுத்துக் கொடுத்த சுபா சுந்தரம் - எழுத்துக்களை நவீன முறையில் ஒளி அச்சுக்கோர்வையில் அமைத் துத் தந்த ''காந்தளகம்'' - இந்நூலை வெளியிட எல்லா உதவி களையும் செய்த ''குங்குமம்'' துணை ஆசிரியர் பாவைசந்திரன் மற்றும் குங்குமம் பதிப்பகத்தார் - நூலை சிறப்பான முறையில் அச்சிட்ட சிவகாசி சீனிவாஸ் பைன் ஆர்ட்ஸ் ஆகிய அனைவருக் கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இந்த நூல் இலக்கிய ஆர்வமுள்ள தமிழ் மக்கள் கைகளிலே தவழும்போது, எங்களுக்குள்ள மகிழ்வு யாவருக்கும் உண்டு என் பதை எங்களால் உணர முடிகிறது! வணக்கம்!

சென்னை - 83 ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்
1-7-87

சங்கத் தமிழ்

மலர்மாரி பொழிகின்றனன்!

சங்கப்புலவர்கள் பாடிய தமிழை
குங்குமம் இதழில் நூறுகிழமை

எளிய நடையில் எழுதிட முனைந்து
என்னுலியன்ற பணியினை முடித்தேன்.

கடல் குளித்து முத்தெடுக்கும் போதும்,
கனிகள் வெட்டிப் பொன் குவிக்கும்போதும்,

களிப்பு துள்ளும் உள்ளத்தைப் போலே - இந்தக்
கலைஞனது உள்ளமுமே துள்ளுவது உண்மை!

கருவூலப்பொருள்கூட அள்ள அள்ளக் குறையும்; - சங்கக்
கவிப்பெரியோர்கள் கற்பனையோ அகழ்கின்ற ஊற்றுக நிறையும்!

பழம்புலவர்பெருமக்கள்; தமிழர் வீரம், காதல்,
பண்பாடு போற்றுகின்ற வாழ்க்கை நெறிமுறைகள்;

பாட்டாலே தொகுத்தளித்து; நம்மைப் பிற
நாட்டாரும் போற்றுகின்ற செயல் புரிந்தார்!

ஏடுகளாய் எழுத்துக்களாய் வாழ்கின்ற - அந்தப்
பீடுநிறைப் பெரியோர்க்கு வணக்கம் சொல்லி;

காடுகளில் மலைச்சோலைகளில் கபிலப்புலவன்
கண்டறிந்து குறிஞ்சிப்பாட்டில் கோடிட்டுக்காட்டியுள்ள;

மலரையெல்லாம் பறித்தெடுத்து என் மனம் பறித்த
மாத்தமிழ்ச் சுவடிகள் மேல் மாரியெனப் பொழிந்திடுவேன்!

இதோ; கபிலர் காட்டும் மலர்கள் காண்க:

*

* ‘‘... ... ... வள் இதழ்
ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங்கொடு வேரி, தேமா, மணிச்சிகை


கலைஞர்

உரிதுநாறு அவிழ்தொத்து உந்தூழ், கூவிளம்,
எரிபுரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான்பூங் குடசம்,
எருவை, செருவிளை, மணிப்பூங் கருவிளை,
பயினி, வானி, பல் இணர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல் இணர்க்காயா,
விரிமலர் ஆவிரை, வேரல், சூரல்,
குறீஇப்பூளை, குறுநறுங்கண்ணி,
குருகிலை, மருதம், விரி பூங்கோங்கம்,
போங்கம், திலகம், தேங் கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடிகமழ் கலிமா,
தில்லை, பாலை, கல் இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமா ரோடம்,
வாழை, வள்ளி, நீள்நறுநெய்தல்,
தாழை, தளவம், முள்தாட்தாமரை,
ஞாழல், மௌவல், நறுந்தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங்குரலி,
கோடல், கைதை, கொங்கு முதிர் நறுவழை,
காஞ்சி, மணிக்குலைக் கள்கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல்பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்கு இணர்க்கொன்றை,
அரும்பு, அமர்ஆத்தி, நெடுங்கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழாஅய், சுடர்ப்பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறும் புன்னகம்,
பாரம், பீரம், பைங்குருக்கத்தி,
ஆரம், காழ்வை, கடி இரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மா இருங்குருந்தும், வேங்கையும், பிறவும்''

*

(பத்துப்பாட்டு (குறிஞ்சிப்பாட்டு)
(61 முதல் 95 முடிய)
(பாடியவர் : கபிலர்)

பத்துப்பாட்டாம் குறிஞ்சிப் பாட்டில் - மலர்களைப்
பட்டியல் போடும் பாங்கே; பாவையர்

சரம் தொடுத்ததுபோல் அமைந்திட்டதம்மா; இந்தச்
சங்கத்தமிழின் பெருமையைச் சாற்றுதல் எளிதோ?

*

யாதும் ஊரே; யாவரும் கேளிர்!

மூன்று கூறுக ஆவதற்கு முன்பிருந்த
முகவைப் பெரு மாவட்டத்தில் மூதறிஞர் பண்டிதமணி
கதிரேசன் செட்டியார் பிறந்தார் எனக் கேள்வியுற்றுக்
களிப்புடனே மகிபாலன்பட்டிக்குச் சென்றிருந்தபோது
பூங்குன்றமெனப் பழையநாள் இலக்கியமாம்
புறநானூற்றுக் குறிப்பில் இருந்த ஊரின் பெயர்தான்
மகிபாலன்பட்டியாக
மாறிற்றென்று, பெரும்புலவர்
மாணிக்கனார் உரைக்கக் கேட்டு
மகிழ்ச்சியிலே திளைத்துப் போனேன்.

கணியன் பூங்குன்றனார் எனும் அவ்வூர்க் கவிஞன்
கற்குகையொன்றில் செதுக்கியுள்ள கவிதையினைக்
காண வாரீர் என அழைத்திடவே; சென்று கண்டேன்! - அந்தப்
பழம்புலவன் கரங்கொண்டு செதுக்கியதோ - அன்றி
பார்புகழும் அப்பாட்டைப் பின்வந்தோர் செதுக்கியதோ?
யார் செயலாய் இருந்திடினும் அப்பாட்டில்
''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனும்
அறைகூவல்தனை அற்றைநாளில் ஒரு தமிழன்
நிறைகுடமாய்த் திகழும் தன் நெஞ்சத்தைத் திறந்துகாட்டி
விரிகடல்சூழ் உலக முழுதும் நம் ஊரே என்றும்
விழியும் ஒளியும் போல் மக்கள் எலாம் நம் உறவே என்றும் - புதிய
வெளிச்சத்தால் பொல்லாத இருள் கிழித்து
வேற்றுமையின் வேரறுத்துப் புரட்சி செய்தான்!

பூத்தமிழில் வண்டாகப் புணர்ந்து கலந்து—இந்தப்
பூமிக்கே பொதுக்கவிதைக் கனியொன்றைத் தந்த கவிஞன்
பூங்குன்றந்தனில் பிறந்த புலவன் கணியன்தான் என்கின்றபோது

புல்லரித்துப் பூரித்துப் போகுதம்மா; நம் எண்சாண் உடம்பு!
அந்நாளில் புலவரெல்லாம் அகிலத்தை ஆளுகின்ற


அரசர்களின் அவைக்களத்தில் அரிய தமிழ்க் கவிகள்பாடி
ஆனையென்றும் -சேனையென்றும் ஆயிரம் பொற்கிழிகள் என்றும்
மானியங்கள் மற்றும் பல பரிசில் என்றும் மலைமலையாய்ப்
பெற்றிடுவர்!

இந்நாளில் சில புலவர்போல் வாழ்வார்க்கு வாழ்த்துரைத்து
இன்னலுற்று அவர் தாழ்வாராயின் அக்கணமே சிறகடித்து
அற்றகுளத்துப் பறவைபோல அடுத்தகுளம் பார்க்கின்ற
இயல்புடையார் அப்போதும் சிலர் இருந்திடத்தான் செய்தார்கள்!
கணியூர்ப் பூங்குன்றனே; அவர்கண்டு கவலைமிகக் கொண்டதனால்
அணிமணிகள் தமிழில் செய்து அரசர்க்கும் வள்ளல்கட்கும்
பூட்டி மகிழ்வதிலே ஆர்வமொரு கடுகளவும் காட்டாமல்
இருந்திடவே;
நீட்டி முழக்கிச் சிலபேர்; ''அரசை அணுகிப் பரிசு பெறப்
பாடல்களை இயற்றிடுக!'' எனக் கேட்டபோது—கணியன்;
பக்குவமாய் விடையளித்து அவர் விருப்பமதைத் தட்டிக்
கழித்தான்!

''நாடு பற்றிப் பாடுகின்றீர்—நன்று! நன்று!
நாடாளும் மன்னர் பற்றிப் பாடுகின்றீர்—அதுவும் நன்று!
நாடுதனை மீட்பதற்கும் புதிதாகப் பறிப்பதற்கும்
கேடுகளைச் சுமந்து விழுப்புண்கள் ஏந்துகின்ற
பீடுநடை வீரர் பற்றிப் பாடுகின்றீர் - மிகவும் நன்று!
ஏடுகொள்ளா இலக்கியங்கள் காதலையும் களம்புகுவோர்
காதையையும்
எடுத்தியம்பும் காரணத்தால் என்வழியைத் தனிவழியாய்
ஆக்கிக்கொண்டு

எல்லா ஊரும் எமது ஊரே
எல்லா மனிதரும் எமது உறவே - என
எழுதத் தொடங்குகின்றேன்'' என்றான்!

நற்றிணையில் வருகின்ற காதல் பாட்டொன்றைக் கூடக்
கற்றறிவாளன் கணியன் பூங்குன்றன் எழுதுங்கால்
''மருந்துக்கு உதவுகின்ற மரத்தின் பட்டைகளை மட்டுமன்றி -
அந்த
மரத்தையே வேரோடு பிடுங்குவதோ?'' எனக்கேட்டு,
பயன்படுவன எதனையும் பாதுகாக்க வேண்டுமெனப்
பாங்காக அறிவுரையைப் பகருகின்றான் உலகிற்கு!
''ஒரே உலகம்'' எனும் கொள்கைதனை - மனிதரெலாம்
''ஒரே குலம்'' எனும் தத்துவத்தைப் புவியில்;
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு



முன் தோன்றிய மூத்த குடிப் பிறந்த தமிழ்க்
கணியன் பூங்குன்றன், கவிதை நடைச்
சொல்லூன்றி நிலைநாட்டுகின்றான்!

விதிப்பயனே எல்லாம் என்றுரைத்துச் சோர்ந்து
கதியற்றுக் கன்னத்தில் கைவைப்போர்தனைப் பார்த்து;
''நன்மைக்கும் தீமைக்கும் காரணங்கள்
நமது செயல்களேயன்றி பிறரல்ல'' என்று
நயம்பட உரைக்கின்றான் அந்த நற்றமிழ்ப் புலவன்!

அம்மட்டோ?

வேதனைகள் விரைந்து தொடர்வதும் - அவை
விலகித் தொலைந்து போவதும் கூட
நாம் ஏற்றிடும் செயல்களால் என்றே
நன்கு கணித்து நவில்கின்றான் கணியன்!
''பிறந்த உயிர்கள் இந்த மண்ணில்
இறந்து மறைதல் புதிதுமல்ல;
இன்பமொன்றுக்காகவே வாழ்க்கை என்பதும்
துன்பம் வந்திடின் வாழ்வை வெறுப்பதும்
உறுதி கொண்ட மாந்தர்தம்
உளத்திற்கேற்ற உயரிய செயலுமல்ல!
ஆற்றெடு போகும் தெப்பம் போல்
ஆடியும் அசைந்தும் அமைதி கண்டும்
ஆருயிர்ப் பயணம் அவனியில் நடக்கும்! எனவே
ஆன்றோர் காட்டிய அரிய வினைகளைத் தொடர்க!
செழிப்பில் திளைத்தோர்க்கு சிரம் தாழ்த்தலுமில்லை;
சிறியோர் எனப்படுவோரை இகழ்ந்துரைத்தலுமில்லை!''

இவ்வாறு;

உலக ஒற்றுமை, ஒரு குலக் கொள்கை,
உயிரின் தன்மை, உயரிய வினைகள் - வாழ்வில்
உற்ற துன்பமும் உவகையின்பமும் ஒன்றெனக் கருதுதல்,
உயர்ந்துள்ள செல்வர்க்குப் பணியாமை - வீணில்
உழன்றிடும் சிறியோரை இகழாமை; எனப் பல
வண்ணமிகு மலர்கள் கொண்டு - உயர்
எண்ணங்களைத் தொடுத்தளிக்கும் பெரும்
உள்ளம் காணுகின்றோம் இந்தக் கவிதையினில்; புது
வெள்ளம் போல் இக்கருத்து பரவட்டும் காசினியில்!
ஆனால் ஒன்று;

ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய் ஆவதென்பதும்
உறவுகொண்டே மனித குலம் ஒன்றே எனத் திகழ்வதும்

உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன் கூட
தனது ஊரை மறவாமல் பூங்குன்றமென இணைத்தே
கணியன் பூங்குன்றன் எனும்
கவிஞனுய் உலவியதைக் கவனமுடன்
எண்ணிப் பார்த்தால் - அந்த மாமனிதனையும்
மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான் உண்மையன்றோ?

*

* **‘‘ யாதும் ஊரே; யாவரும் கேளிர்;**
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னது என்றலும் இலமே; ‘மின்னெடு
வானம் தண்துளி தலைஇ, ஆருது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம்’ என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.’’

*

(புறநானூறு - பாடல் : 192
பாடியவர் : கணியன் பூங்குன்றன்)

பொருள் விளக்கம் :

கேளிர் = உறவினர். புதுவதன்று = புதியதல்ல.
முனிவின் = வெறுப்பின் காரணமாக.
புணை = தெப்பம். திறவோர் = ஆன்றோர்.
இலம் = இல்லாமை. (இல்லையென்ற பொருளில் இங்கு வரும்)

*

மானங்காத்த மறவன்!

மயிர் நீப்பின் வாழாத கவரிமான் போல்
மானம் வரின் உயிர்நீப்பர் எனும் குறளுக்கு;

தயிர் கடைந்தால் தலைகாட்டும் வெண்ணெய் போன்று
தமிழ்ச்சங்க காலத்து வீரன் வாழ்வே உண்மைச் சான்று.

தவழ்ந்து வரும் தன் மகவை
முத்தமிடுவதற்கும் குனிந்திடாமல்

தலைக்குமேலே தூக்கச் சொல்லிக் கொஞ்சுகின்ற
தன்மானத் தமிழ்ச்சிங்கம் அவன்!

தாமரை மொட்டிரண்டை ஏந்தி வரும்
தன் பட்டத்து ராணியையும்

நெளியாமல் நிமிர்ந்து நின்றே
நெஞ்சகத்தில் அணைத்துக் கொள்வான்.


நிலம் நோக்கும் வழக்கமின்றி
நேர்ப் பார்வை செலுத்தித்தான்

நிலவு முகத்தரசி
நெற்றியிலே இதழ் பதிப்பான்.

படுத்திருக்கும்போதும் பஞ்சணையில்
விஞ்குறிபோல் வளைய மாட்டான் - வில்லில்
தொடுத்திருக்கும் கணையைப்போல்
கால்நீட்டித் துயில் கொள்வான்!

''வளையாத முதுகெலும்பு பெற்றவனே?
வணக்கம் எனும் பொருள்
விளையாத வயற்காடோ அவன் இதயம்?''என வியந்து,
வாய் பிளந்து மூக்கின்மேல் விரல் வைத்து - அவனை
வாழ்த்தியவர் பலருண்டு!

''இரும்பொறை'' மரபில் வந்த இணையிலா வீரனவன்.
இரும்பொத்த கணையமரம் போல கால் படைத்த சேரனவன்;
- அதனாலே



சேரமான் கணைக்கால் இரும்பொறை யென்னும்
செந்தமிழ்ப் பெயருடன் செங்கோல் ஏந்தினான்.

தொண்டித் துறைமுகம் அவன் ஆட்சித் தலைநகர் - அதனை
''டிண்டிஸ்'' என்று யவனர்கள் அழைத்தனர்!

மூவன் என்னும் முடியுடை வேந்தனை வீழ்த்தி - அவன்
முகவாய் நொறுக்கிப் பற்களைப் பெயர்த்து - தனது

கோட்டை வாயிற் கதவின் பெரிய
பூட்டின் மீது பொருத்தி வைத்தான் என்று

''களவழி நாற்பது'' பாடிய பொய்கையார் எனும்புலவர்
- அவனது

களப்புகழ் பலபடக் கூறிக் களித்திடுவாரே!

தமிழரிடை ஒற்றுமை என்பது அத்திப்பூ - ஆடிப்பிறை
- அதனாலே

தமக்கிடையே போர் தொடுத்து தமிழ் இனம் பிளவுபட்ட சேதி
கூறும்

வரலாற்று ஏடுகளின் வரிகளாக ஆகிவிட்டார் - தமிழர்
வாளாற்றல் காட்டுதற்கு வரிந்து கட்டி இனத்துக்குள்
இரண்டுபட்டார்!

செங்கணான் எனும் சோழன்,
செருமுனையில் சிறுத்தை போன்றான்!
எங்கணும் வெற்றி கண்டு
புகழ்வானில் பறக்க விட்டான் புலிக் கொடியை!

அது கேட்டுச் சேரமன்னன்
ஆர்த்தெழுந்தான்!
அணி தேர்ப்புரவி ஆட்பெரும்படை
அவன் ஆணை கேட்டுப் பின்தொடர,

''மங்குமோ எந்தன் வீரம்?
என் மாவலித் தோளின் முன்னே
தங்குமோ சோழன் பெற்ற வெற்றி''யென்று
கணைக்கால் இரும்பொறை கர்ச்சித்து
கங்குல் கிழித்தெழும் ஒளியாக எதிர்ப்பட்டான்!

முரசுகள் போலே மத்தகம் படைத்த
முரட்டு யானைகள் மோதிடவே
அரசுத் தேர்களின் அச்சாணி கழன்று
ஆயிரம் சுக்கல்கள் ஆயினவே!

குளத்து நீரில் செத்து மிதக்கும்
குறுங்கெண்டை மீன் போலே
குதிரைகள் குளம்படி
குருதிச் சேற்றில் அழுந்தி பதிந்தனவே!

கட்கம் ஏந்திய காலாட் படையினில்
காயம் ஒருசிலர் முதுகில் பட்டிடவே
வெட்கம் துரத்த - அவர்கள்
வீழ்ந்து மடிந்தனரே!

உறுதி முழக்கமும் குருதிப் புனலும்
இறுதிப் பயணமும் எங்கும் நிறைந்த களம்!
பொருதிடும் இருவரில் வெல்வது யாரென
அறுதியிட முடியாமல் அமைந்த களம்!

ஆளுக்கொரு மின்னலை எடுத்து
வாளுக்குப் பதிலாக வீசினரோ - எனச்

சோழன் சுழற்றும் வாள்பட்டுச்
சூரர் தலைகள் ஆயிரம் உருளும்!

சேரன் வீசும் வாளின் பயனுய்
செக்கர் வான்போல் சிவந்தது நிலமும்!

ஈட்டியின் பாய்ச்சல் கண்டு
இமை கொட்டியவன் கோழை எனும்

இலக்கணத்தை இருவருமே
இதயத்தில் பதித்தவர்தான் என்றாலும்

சேற்றில் சிக்கிய களிறெனவே - இறுதியில்
சேரமான் இரும்பொறை சிக்கிவிட்டான்!

ஆற்றல் முழுதும் காட்டி நின்றான்;
ஆயினும் சோழன் முன்னே அவன் தோற்று நின்றான்!

திருப்போர்ப் புறமெனும் சமர்க் களத்தில்
திண்தோள் சேரன் தோற்றவுடன் -

அடடா; அவனைச் சோழமன்னன்
குடவாயிற்கோட்டச் சிறைதனில் அடைத்தான்.

உறைவிட்டெழுந்த உடைவாள் பட்டு
உயிர்விட்டுப் போரில் புகழ் சேர்க்க முடியாமல்

சிறைப்பட்டு வாழும் நிலை வந்ததே என்று
சிந்தை அணு ஒவ்வொன்றும் நோக வாடினான் சேரன்.

தாகம் ஒருநாள் அவன் நாவை உலர்த்த - சிறைக்
காவல் வீரனை அருகே அழைத்து -

தண்ணீர் விரைவில் கொணர்க என்றான் - சற்றுத்
தாமதமாகக் குவளையில் தண்ணீர்

கொண்டு வந்து கொடுத்ததினாலே - நெருப்பை
மொண்டு தகித்தது சேரனின் நெஞ்சம்!

பண்டு வாழ்ந்த குலப் பெருமையெலாம்
துண்டுபட்டுப் போனதெனத் துவண்டுவிட்டான்!

ஏடொன்று எழுதிவைத்து
எதிர்காலத் தமிழகமே - அதனைப்
பாடென்று விட்டுச் சென்றான்!

''பிள்ளையொன்று இறந்து பிறப்பினும் - சதைப்
பிண்டமொன்று பிறந்து தொலைக்கினும்

மூப்பு கொண்டு மடிந்திடினும்
முடிவிலொரு நோய் கண்டு முடிந்திடினும்

போரில் கலந்து விழுப்புண்பெற்று - மானமிகு
வீரர் என மாண்டிடாத பழி துடைப்பதற்காக

வாள் கொண்டு உடலில் கீறி -
வான்புகழ்; வாழ்வில் சேர்த்தபின்பே

உடலடக்கம் செய்திடும் மானமரபே
அடலேறுகள் மலிந்திடும் தமிழர் மரபு!

அந்தப்

பண்பாட்டு மரபு வழி வந்துதித்த நானே - மனப்
புண்பட்டு பகையரசின் சிறைப்பட்டு நாய்போல

தண்ணீர்க்கும் காத்திருக்கலானேன் - இனி
உண்ணீர் என்று பன்னீர் தந்து உபசரித்தபோதும்

தகுதியன்று இனி உயிர்வாழ்தல் - அதனாலே
தமிழ்த்தாயே! என் மானங்காக்க

உன் மடிதனிலே விழுகின்றேன்;
தாங்கிக் கொள்க!''

இப்படி

ஏழடிப் புறப்பாடல் ஒன்றை எழுதிவிட்டு - சிங்க
ஏறுபோல் சேரமன்னன் பெயரைப் புகழில் நட்டான்!

எப்படிப்பட்டோர் இருந்தார் மறைந்தார் என்பது - அவரவர்
எச்சத்தாற் காணப்படும் என்பதற்கொப்ப

சேரமான் கணைக்கால் இரும்பொறை
வீரவாளினை ஓலையாய்க் கொண்டு

தீட்டிய புறப்பாடலை
நீட்டுகின்றேன் உம்மிடையே -

படித்துப்பாரீர்! - உணர்ச்சியால்
துடித்துப் போவீர்!

*

*** ''குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,
ஆள்அன்று என்று வாளின் தப்பார்;
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்,
மதுகை இன்றி, வயிற்றுத் தீத்தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ, இவ் உலகத்தானே.''**

*

**(புறநானூறு : பாடல்: 74
பாடியவர் : சேரமான் கணைக்கால் இரும்பொறை)**

பொருள் விளக்கம் :

ஊன்தடி = சதைப்பிண்டம்.
ஆள்அன்று என்று வாளின் தப்பார் = ஆளல்ல என்று
கருதாமல் வாளால் வெட்டிடத் தவறமாட்டார்.
ஞமலி = நாய். கேளல் கேளிர் = பகைவர்.
மதுகை = மனவலிமை

*




தெளிர் என்றுல் கொழுந்தன்றே!
தடம் என்றுல் வழியன்றே!
அஃதேபோல்
தலைவன் என்று துணைவனையும்
தலைவி என்று துணையையும் - பழந்
தமிழ் நூல்கள் குறிப்பது வழக்கமன்றே!

களவு வழியில் தலைவன் தலைவியின் இன்பக்
காதல் அரும்பிடும் போதெல்லாம் - தக்க
உளவுகள் கூறிஅதனை மலர்ந்திடச் செய்வர்
உயிர்த் தோழனும் தோழியும் என்று;
உரைத்திடும் இலக்கியம் தமிழனுக்குண்டு - தலை
நரைத்திடு கிழவரும் நன்றுய் அதனைச் சுவைப்பதுமுண்டு!

ஐங்குறு நூறு எனும்
பைந்தமிழ்ப்பனுவலில்
நெய்தல், மருதம், குறிஞ்சி, முல்லையிலும் - மழை
பெய்தல் பொய்த்த பாலையிலும் - பிணைந்த காதலர்
எய்திடும் இன்ப நிகழ்ச்சிகளை - மாலையில்
கொய்திடும் மலர்களென வழங்குவர் புலவர்!

ஓரம்போகியார் எனும் ஒரு கவிஞர்,
காரம்போகாக் கடுகெனத் தருவார் மருதப்பாடல்!
குறிஞ்சி நிலத்தில் கூவுகின்ற - காதல்
குயிலினத்தின் குன்று அன்பைக்
கவிக்கோமான் **கபிலர்** என்பார் - இப்

புவிக்கோர் விருந்தாய்ப் படைத்திடுவார்!
ஆயனூர் வாழும் முல்லை நிலத்தில்
ஆவிநிகர்க் காதலர் ஆடி மகிழ்வதை
பேயனூர் எனும் கவிக்கோ - தமிழர்
பெருமைக்கோர் சான்றுகப் பேசிடுவார்!



அம்மூவனார் எனும் புலவரோ
அலை தழுவும் நெய்தல் நிலத்தில் - காதல்
கலைபயில்வோர் களித்திடும் காட்சி
கவினுற வரைந்திடுவார்!

பாலை நிலத்திலும் - காதல்
பண்பாடிடும் பறவைகள் உண்டென்று - அவர்தம்
பிரிவின் வேதனை உரைத்திடுவார்;
பரிவுடனே **ஓதலாந்தையார்** எனும் புலவர்!

ஐந்து வகை நிலம் வாழும் ஆறறிவு மாந்தர்கள்,
ஆய்ந்து தெளியும் அறிவிலா ஊர்வன, நடப்பன, பறப்பன,
அடவிகள், அருவிகள், அழகுறு சோலைகள்,
அடுக்கடுக்காய் அமைந்த மலைத்தொடர்கள்,

அலைக்கரத்தால் தாலாட்டும் கடற்பரப்பு,
அங்கெல்லாம் உயிர் இனத்தின் வாழ்க்கை முறை,
அத்தனையும் உற்று நோக்கி - தமிழில்
முத்தனைய பாடல்கள் ஐநூறு தந்திட்டார்!
சத்துநிறை அகவாழ்வின் அமுத ஊற்றுக்களாம் - அவற்றுள்;
முதலில் ஒரு பாட்டுக்குள்
மூழ்கித் திளைத்திடுவோம்!

நெய்தல் நிலத்தில்

ஓலமிடும் கடலோரம்
கோலம் செய் பொன்மேனிக்
கோதையொருத்தி;
மணல் மேட்டில் சாய்ந்தவாறு - மேற்கின்
தணல் வண்ணம் பார்த்திருந்தாள்!

அணிமலர்ப் புன்னையின் அருகேயிருந்து - அவள்
பிணிதீர்க்கும் மருத்துவன் வந்து சேர்ந்தான்!

''வந்தீரோ மருத்துவரே'' எனக்குதித்து
''தந்திடுவீர் மருந்தென்று'' தலைசாய்த்தாள் அவன் தோளில்!

''காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய்க்கு
இருவரும்தான் ஆட்பட்டுத் தவிக்கின்றோம் - அதனாலே;
ஒருவருக்கொருவர் மருந்து உதவி தவிர்க்கலாம் நோய்,'' என்று
தழுவினன் தங்கச் சிலையை!
விரிந்து பரந்த கடற்கரை மெத்தையில்
விழுந்தனர், புரண்டனர், எழுந்தனர், மகிழ்ந்தனர்!

''விழியில் என்ன நீர்? கடல் மணல் பட்டதாலா கண்ணே?''
- என்று
மொழியில் ஒரு கொஞ்சல் கலந்து ஊதிட வந்தவனைத்
தடுத்துவிட்டு
''ஊதுகின்றீர் என் கண்ணில்; நன்றி! நன்றி! ஆனால் நான்
ஒதுகின்றேன் உமது காதில் பல நாளாய்!
அதைக் கேட்காமல் நீர் இருப்பதால்தான்;
அருவிபோல் நீர் என் விழியில் அறிக'' என்றாள்!

''களவியல் விடுத்திட வேண்டும்
கற்பியல் தொடங்கிடவேண்டும் - உன்
உளமது மகிழ உடனே நம் மணம்
உவகை பொங்கிட நடந்திட வேண்டும்
மதுவூறும் இதழ்ப்பூவே! மணியே! மானே!
இதுதானே உன் ஆவல்?'' எனக் கேட்டான்.

குனிந்து தலையசைத்தாள் 'ஆம்' என்று,
குங்குமமாய்க் கன்னம் சிவக்க நாணமுற்று;

கோடு கிழித்துக் கால் பெருவிரலால்
கோலம் போட்டாள் கொள்ளை இன்பம் நெஞ்சில் குவிய!

வீணையின் குடம்போல விம்மிப் புடைத்த அவள் பின்னழகை
விரகதாப உணர்வோடு தட்டிக் கொடுத்துத் தலைவனும்;
''வீணுக வருந்தாதே கண்ணே!
விண்ணூரும் சந்திரனின் சாட்சியாகச் சொல்வேன்;
விரைவில் உனைக் கரம் பிடித்து மணப்பேன்
விடுதுயரம்! இடையில் சில நாட்கள்;
இவ்வுலகின் துன்பப் பகுதியை - இருவருமே
எட்டிப்பாராமல் இன்பத்தில் கலந்திடுவோம்!
தலையில் ஒரு பலாக்கனி சுமந்து கயிற்றின்மேல்
நிலை தவறுமல் நடப்பதுதான் இல்வாழ்வு!
உலையில் இட்ட சோறுபோல் கொதித்தல் நலமா? - அமைதி
அலையில் ஆடும் படகுபோல் மிதத்தல் நலமா? - அதனாலே
கலையழகே! என் கலாபமே! கண்மணியே!
கணவன் மனைவி ஆவதற்குச் சற்றுக் காத்திருப்போம்!
அதுவரையில்
காதல் எல்லை எதுவென்று - அந்தக்
கடலின் ஆழம் கண்டறிவோம்!'' என்றுரைத்தான்.

அவளோ;
அன்பன் கரம்பட்டுச் சிலிர்த்துப்போய்,
என்புதோல் நரம்பனைத்தும் கூடேறி;

''மன்பதைக்கழகா! உந்தன் மனம்போல நடக்கட்டும்'' - என்று
தன்புலன் அத்தனையும் அவன் தாளடி சேர்த்து நின்றுள்!

சுருண்டு நெளிந்த அவள் கூந்தலைக் கோதியவாறு - அவனும்;
''சுகமே! சுவையே! பழச்சுளையே! பாலமுதே! - அதோ
இருண்டு கிடக்கும் மண்டபம் அழைக்குது! என்
இதயமே வா; உடல் இன்பத்தைப் பருகலாம்''என்றான்!

மருண்டது மானின் விழி அக்கணம் எனினும் - மறுகணம்
அவன்
உருண்டு திரண்ட தோளிலே, உரியவள் தொத்திக் கொண்டாள்!
நிலவின் ஒளிகூட நுழையாத
மண்டபத்தில் நுழைவதற்குள்
நில்லுங்கள் என்றோர் ஒலி! - அவர்களின்
நேரம் தெரியாமல் தடுத்தது பாபம்!

கோழியொன்று குஞ்சுதனை - வல்லூறு
கொல்லாமல் காப்பது போல்; அவளின்
தோழி வந்தாள்! தொடாதே அந்தத்
தோகையை என்று எதிர்நின்றுள்!

தேன் குடிக்கப் போகின்ற வண்டை - வீணே
ஏன் தடுக்கின்றாய்? என்று
விழியாலே கேட்டான் - ''இந்தப்
பழி மிகப் பொல்லாது'' என்றான்!

''குன்றெடுக்கும் நெடுந்தோள் கொண்டவனே! - பகையை
வென்றெடுக்கும் ஆற்றல் பெற்றவனே!
குறையொன்றும் காணவில்லை உமது அன்பில்!
நிறை நெஞ்ச வாழ்த்து உண்டு ஏற்றிடுக! - எனினும்;
மரபொன்று உண்டல்லவோ தமிழர்க்கு? - அதை நீவிர்
மறந்துவிடல் கண்டல்லவோ நினைவூட்டுகின்றேன்!

மணம் புரிந்து மனையறம் காணுமல் - கடற்கரை
மணல்மீதும் மண்டபத்துள்ளும் காதல் கீதம்
மறைவாக இசைத்து மகிழ்வதற்கு - இந்த
மகளைப் பெற்றோர் நீண்ட நாள் ஒப்பமாட்டார்!
இந்த ஊருக்குத் தலைவன்தானே நீர் -
வெந்த உளத்தோடு ஒரு சேதி சொல்கின்றேன் - கேட்டிடுக!

இந்தத் தொண்டித்துறையில்

உடல் வியர்க்க உழைப்பைச் சிந்தி உயிரைப் பணயம் வைத்து
கடல் மீது சென்று மீனவர் பிடித்த கொழுத்த மீனை
பறப்பதற்குச் சிறகில் பலமில்லா கொக்கொன்று
பறிப்பதற்குக் காத்திருக்கும் காட்சிதனைக் கண்டிலையோ

அதுபோல

பதுமைபோல் திகழ்கின்ற இத் தலைமகளை
வதுவை நீ புரிவதற்கு நாள் கழித்ததால்
முதுமை நிறைப் பெரியோர்கள் - கொக்கனையா
முந்திக்கொண்டு வருகின்றார் இவளை மணமுடிக்க!
இலவு காத்த கிளிபோலாக உனக்கு விருப்பமெனில்;
இன்னும் பலநாள் தள்ளிப்போடு மணவிழாவை!
இல்லையெனில் இன்றைக்கே - இந்த
முல்லையினை மணப்பதற்கு நாள் குறித்திடுக!''

தோழி இதைச் சொன்னவுடன் - திடுக்கிட்டு - அவன்
''ஆழிமுத்தை அணிவதற்கு அட்டியுண்டோ?
வாழிநீ தோழி! வாழி! வாழியவே! இனி
நாழிகை நேரம் பார்ப்பதற்கு எண்ணமில்லை;
வாளைமீனை; வட்டமிடும் கிழப்பறவைக்கு இரையாக்க
மாட்டேன்!
நாளையே திருமணம்; நடக்கட்டும் ஏற்பாடெ''ன்றான்!

உண்மையைச் சொல்லாமற் சொல்லி
உவமையால் விளக்கம் தந்த
வண்மை நிறை தோழியின் திறம் வியந்து
வளமிகு பாடல் **அம்மூவனார்** வழங்கினார்!
அது இது:-

*

*** ''சிறுநனி வரைந்தனை கொண்மோ பெருநீர்**
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுருகு இருக்கும்
துறைகெழு தொண்டி அன்னவிவள் நலனே!''

*

(ஐங்குறுநூறு : பாடல் : 180
பாடியவர் : அம்மூவனார்)

பொருள் விளக்கம் :

சிறுநனி வரைந்தனை கொண்மோ = மிகக் குறுகிய காலத்திற்குள் உனக்கு உரியதாக்கிக் கொள்க.
பெருநீர் = கடல். பறைதபு முதுகுருகு = பறக்க இயலாத கிழப்பறவை. வலைவர் = மீனவர்.
வல்சி = உணவு.


*

சமந்தவன் சுமந்த சோகம்!

பனிமுட்டை அடை காக்கும்
பசும்புல்லின் தரைமீது
மணித் தேர் அசைவது போல்
மாதொருத்தி நடந்து வந்தாள்
கனித் தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை மிக்காள்
காக்கைப் பாடினி பொன்முடியார்க்குத் தமிழில் அவள் அக்காள்
அதியமான் நெடுமானஞ்சி - வேள்பாரி வள்ளல் நாடன்
சேரமான் மாவெண் கோவன்,
கானப்பேர் தந்த வழுதி - மற்றும்
சோழனும் பெருநற்கிள்ளி
ஆகியோர் புகழைப்பாடித் தமிழுக்கு
அணி பல பூட்டி நின்ற

அறிவொளி ஒளவை நல்லாள்!
காலைக் கதிரவன் போல் கை சிவக்கக் கொடை வழங்கும்
காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!
ஓலை கொண்டொருவன் போர் என்று வந்துவிட்டால்
மாலை சூடுகின்ற வேளையென்றும் பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப் புறம் விடுத்து,
வாளைக் கூரேற்றி வான் நோக்கி நிமிர்கின்ற வீரமறவர்களின்
தாய்வீடு

பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதமென்று
நிலம் வகுத்து வாழ்கின்ற தமிழாரிடை
சோலைப் பூவினம் போல் தமிழ்க் கவிதை மலரவைத்தாள்.
தாயகத்துக் கற்புநிறை பிறழாத
காதல் சொன்னாள் - களம் சென்றூர் வீரம் சொன்னாள்.
களத்தில்,
சாதல் இன்னே வரட்டுமென்று சென்றுவிட்ட தலைமகனும்
சந்தனத்து கட்டை போல மணக்கட்டும் இலக்கியத்தில்
எனக் கூறிப்
பாதம்முதல் உச்சிவரை குளிர்கின்ற தாய்க்குலத்தை
எண்ணியெண்ணிப் பெருமை கொண்டாள், தன்
பூவடிகள் புல்மீது அழுந்தியதால் பனித்துளிகள் அழிந்துவிடும்.



போரடியில் நெல்மணி போல் பகைவர்களின் சிரம் வீழும்
அமர்க்களத்தில்!

இதை நினைத்து,
நடக்கின்றாள் ஔவையம்மை!
நாமணக்கும் தமிழம்மை! அறிவம்மை! அழகம்மை!

காலூன்றிப் பனியொற்றி வருகின்ற தாயின் முன்
கோலூன்றிப் பிறிதொரு தாய் வந்து நின்றாள்.

''அடி! தும்பை மலர் முடிதாங்கி!
துவண்டு விட்ட காலிரண்டும் வாழைத் தண்டாய்க்
குளிர்ந்து வரும் நேரத்தில் நீ ஏன் வந்தாய்?
விற்புருவம் என்றுன் ஆளன் அழைத்திட்ட காலம்போய்
வில்லுருவம் முதுகில் பெற்ற இள நங்காய்!
விழியிரண்டும் வேலென்றார் அன்று;
வழி இருண்டு போனதென்று கோல்கொண்டாய் இன்று!
தமிழ்நாட்டு முத்தெல்லாம் தீர்ந்ததென்று பல் கழற்றிப்
பிறநாட்டு வாணிபத்தைச் செய்தவளே!
எங்கெழுந்தாய்? ஏன் பதைப்பு?
என்ன வாட்டம்?'' எனக் கேட்டுக்
குறும்பு செய்தாள் ஔவையம்மை!

''வேலி போட முடியாது இளமைக்கென்று தெரிந்த பின்னும்
கேலி பேசும் உன் போக்கு புரியவில்லை''
என மறித்து அந்தத் தாய் பேசலானாள்:-

''புண்பட்ட என்னகத்தில் புலமைத் தாயே உந்தன் கேலி,
பண்பட்ட தமிழ் மருந்தாய்ப் பாய்வதை நான் உணருகின்றேன்.
கண்கெட்ட கிழவி எந்தன் கரம்தொட்டு வணங்கிச் சென்ற
காளையை நான் மறக்கவில்லை.
மண் முட்டி எழுந்து நிற்கும் மாங்கன்றின் தளிர்தான் மேனி.
பொன்கொட்டிக் கொடுத்தாலும் வளையாத மனவலிமை
புலிக்குட்டி விளையாடும் அவன் மடியில்!
அந்த மகன் ஆசைமகன் அணிவகுத்தான்,
சொந்த மண்ணின் நலங்காக்கப் பணிவகுத்தான்!''

முடிக்கவில்லை முதியவளும்;
பொறுக்கவில்லை ஔவைக்குக்
குறுக்கிட்டாள்.
''களம் சென்ற மகன் வீரம் புகழ்ந்து கூறிக்
கண்கலங்காத் தாய் வீரம் காட்டுதலே தமிழர் மரபு!
முதியவளே! மறவர் குல வழக்கிற்குப்
புதியவளாய் இருக்கின்றாய்! - வியக்கின்றேன்'' என்றாள்.

''முழுதும் கேள் பெருமாட்டி!
பழுதொன்றும் காணமாட்டாய் என் நிலையில்!
அழுதழுது என் விழிகள் வீங்கியதை மறுக்கவில்லை.
பொழுதெல்லாம் கவலையினுல் புலம்புவது பொய்யல்ல!
ஏனென்று தெரிந்து கொள்வாய்
நானென்றும் மறைக்கவில்லை!''

''சொல்'' என்றுள் ஒளவை
சொன்னுள் அவள்.
''கொற்றக் குடை சாயாத கொடித்தேர் மன்னர்
கற்றறிந்த பாவாணர் கடமைமிகு மாவீரர்
மற்றவர்க்கும் பெருந்தலைவர் அறிவாய் நன்று
அவர் படையில் இருக்கின்றேர் பல்லோர் வீரர்
ஆட்டுக்கடா அணிவகுத்துச் செல்வது போல்
அரசன் பின் நடப்பதற்குத் தயங்கமாட்டார்.
ஆயிரம் பேர் மன்னர்க்குப் பின்னுல் இருந்தும்
அவர் மட்டும் என் மகன்பால் அளவற்ற அன்புகொண்டார்.
போர்முனையில் ஓய்வெடுத்துக் கிடக்கும்போது
''தேறல்'' என்னும் உற்சாகச் சாறுதனைத் திறல்மறவர்
அருந்துதற்குத் திரண்டு நிற்பார்.
அப்போது மன்னரவர் என்மகனை அருகழைத்து
அனைவரினும் அதிகபானம் அளித்து மகிழ்வார்.
என் வாட்டம் இப்போது கேட்பாயம்மா!
என்புகழைத் தெப்பமாக்கி நரி மிதக்கும் போர்க்களத்தில்
தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!
அத்தலையில் ஒரு தலையாய் என்மகன் தலையும்
இருந்தாலன்றே இறைவனளித்த தேறலுக்கும் பெருமையுண்டு
மன்னன் அன்பை மிகையாய்ப் பெற்றுன்
மண்டையில் தேறலும் அதிகம் பெற்றுன்
மாண்டனன்போரில்; புகழ்
பூண்டனன் எனும் காட்சி
காண்டிடல் அரிதோ எனக் கலங்கினேன் அம்மா!

தவறு?''என்றுள்.
அந்தத் தாயாக நான் இல்லையே என்று
அகமிக நொந்தாள் ஒளவைப் பிராட்டி!

*

* ''வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னேர் அன்ன இளையர் இருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்

கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் அறுவை போர்ப்பித் திலதே.''

*

(புறநானூறு : பாடல் : 286
பாடியவர் : ஔவையார்)

பொருள் விளக்கம் :

வெள்யாட்டுச் செச்சை = வெள்ளாட்டுக் கிடாய்.
மண்டை = தேறல் எனும் மது
கால்கழி கட்டில் = காலில்லாத கட்டிலெனப்படும் பாடை.
தூவெள் அறுவை = (உடலை மூடுகின்ற) தூய வெள்ளைத் துணி.

*



தென்னை இளம்பாளைச் சிரிப்பழகி முன் எழிலைத்
தென்றலுடன் வம்பு செய்து மூடிக்கொண்டே
''அன்னை என்ன சொன்னாள்?'' என்று தோழியிடம்
அமுதூறும் வாய்திறந்து அவசரமாய்க் கேட்டாள்!

குறும்புக்காரத் தோழியவள் கோலவிழி காட்டி;
''குன்றையும் குடையாக்கும் திறமை எனக்குண்டு!
எறும்பு ஊரக் கல்லும் தேயுமன்றே? அதுபோல
என்பணியை முடித்துவிட்டேன் உன் அன்னையிடம்!''
- என்றாள்.

''எப்படித்தான் ஒப்பினாளோ என்தாய்?
இப்படி உட்கார்! அந்த இனிமைச் செய்தியைக்
கொஞ்சம் சொல்!'' என்று - அந்தக்
கோதை கெஞ்சினாள்! தோழியோ;

''நன்றி நீ எனக்கு ஆயிரம் சொல்ல வேண்டும்;
நான் பட்டபாட்டுக்கு வெகுமதியே நாட்டில் இல்லை!
குன்றிமணி அளவுகூடக் குறையில்லான் உன் காதலன் என்று
பன்றி ஒன்றின் செயலுடன் அவனை ஒப்பிட்டு உரைத்தவுடன்
கட்டிவெல்லம்போல் இனிக்கின்ற உவமை சொன்னாய்; இனி
அட்டியில்லை என்மகளை அவன் மணப்பதற்கு என்று கூறித்
தட்டிக் கொடுத்தாள் என் முதுகை! ஒரு
சட்டிப் பலகாரத்தை என்வாயிலும் திணித்துவிட்டாள்
உன்தாய்'' என்றாள்.

விளையாடுகின்றாயா தோழி? அவரைப் பிரிந்து;
வளை கழலுமளவுக்கு மெலிந்துவிட்ட என் கைகள் கண்டும்
விளையாடுகின்றாயா தோழி?
தளையிட்டுத் தடுக்கின்ற தாயின் நெஞ்சை
கனையற்ற நஞ்சையாக மாற்றல் விடுத்து;
அன்றில் பறவைகளாய் வாழ்வோமென்று அணைத்த
ஆண்சிங்கத்தைப்

பன்றியுடன் ஒப்பிட்டு என் ஆசைக்கனவுகளைக் கலைத்து
விட்டாயே; அடுக்குமா உனக்கு?

முழுங்குகின்ற முரசடித்துப் பகை முடக்கிப் போடுகின்ற
குறிஞ்சிநிலத்து இளங்களிறு போன்றவரை - பூமியில்
கிழங்கு தோண்டும் பன்றிக்கு ஒப்பிட்ட உன்வாயைக்
கிழிக்கவேண்டும்! கெடுத்துவிட்டாய் காரியத்தை! - என்
கிட்டநெருங்காதே! போய்விடு என்று - அவள் போட்ட
கூச்சலிலுல்,

கிறுகிறுத்துப்போன தோழி;
"பரபரப்பு அடையாதே! பதட்டத்தை அகற்றிவிடு! "
பன்றி என்றவுடன் பதறுவதால் பயனில்லை;
முழுதும்கேள் கதையை! முடிவில் என்னைத்
தொழுதுநீ போற்றிடுவாய்!
பழுதொன்றுமில்லை நான் சொல்லும் பன்றிக்கு!
உழுது, பயிர்காத்து அறுவடையும் செய்துவந்த எனைப் பார்த்து;
கழனிதனைக் கெடுத்து வந்த கலகி எனக்
கடுமையாகப் பேசிடுதல் முறையே அல்ல! உன்
காதல் நாற்றுக்கு கரையெடுத்து நீர் பாய்ச்சி - இன்று;
கதிர் சாயும் பக்குவத்தைக் கண்டு களிப்பவள் நான்!

அதனலே

''பண்பார்ந்த உன்தாய்க்கு நான் புகன்ற
பன்றிக் கதையைச் சற்றுப் பகுத்தறிவைத்
துணைக்கழைத்துச் செவிமடுத்துப் பின்னர் - உன்
தோழியினை எடைபோடு'' எனக்கூறித் தொடங்கினுள் கதையை!

''கதையென்று கருதாதே; நேரில் கண்டகாட்சி!
காடு சூழ் மலைமீது கடும் வேட்டையாடுதற்கு
நாய்களை முன் ஓடவிட்டு
நமது வேட்டுவர்கள் விரைந்தபோது;

பாய்ந்து பறந்து பன்றிக் கூட்டம்
பல்வேறு திசைகளிலே சிதறியோட
தாய்ப்பன்றியொன்று தன் குட்டிகளுடன்
தவியாய்த் தவித்துத் தலைதெறிக்கத் தடுமாறியது!
தன் துணைவிக்கும் குட்டிகட்கும் நேர்ந்தகதி
தாங்காமல் ஆண்பன்றி அவ்வேடர்களைத் தடுத்தெதிர்த்து,
தலைநிமிர்ந்து உறுமியது!
தாவித்தாண்டி சீறியது! சற்றுத்
தயங்கினுர்கள் வேடுவர்கள் என உணர்ந்து,
தளர்ந்து தொங்கும் மார்புடைய
தாய்ப்பன்றியையும் குட்டிகளையும் - ஆங்கு
தழைத்திருந்த புதரோரம் ஒளித்துவிட்டுத் தான்மட்டும்



ஆண்மையுடன் வழியில் ஒரு முடுக்கில் நின்று
அடுத்துவரும் வேட்டுவரை அடித்துவீழ்த்த
ஆயத்தமாய் அந்த ஆண்பன்றி;
எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆவேசத்தை - ஒரு
புதிர் போலக் கண்டவேடன் - புல்லரித்துப் போனான்!

போர் முகத்தில் படைவீரர் - எதிரியிடம்
புறங்காட்ட நேர்ந்த போதும்
தான்மட்டும் தலைதாழாச் சிங்கமாய் நின்று
வான்முட்டும் புகழைச் சேர்த்த - இந்த
மலைநாடன் போலன்றே - இப்பன்றி
மாவீரம் காட்டுதென்று மலைத்துப் போய்
மனத்துக்குள் பாராட்டிப் போற்றி - அது
வனத்துக்குள் நன்றுக வாழட்டுமென்று;
வேலெறிந்து கொல்ல விரும்பாமல் - அந்த
வேடன் வந்து சொன்ன கதையில்;
வீழ்வதற்கும் அஞ்சாமல் வெகுண்டெழுந்த பன்றியின்
உறுதியுடன்
வீரநெஞ்சம் படைத்திட்ட நம் தலைவனின் உறுதியையும்
ஒப்பிட்டான்!

எழுச்சியுடன் இதைநான் எடுத்துச் சொல்லி - உன்தலைவன்
எஃகு உள்ளம் எவருக்கு வருமென்று கேட்டவுடன்;
மகிழ்ச்சியுடன் உன் அன்னை; என்னை,
மார்புறத்தழுவி உச்சி மோந்து;
''நல்லவளடி நீ'' என்று நயந்துரைத்து
வல்லவன் ஒருவனைத்தான் என் மகளுக்குத் தேர்ந்தெடுத்தாய்
'வாழி நீ' என்று வாழ்த்தளித்தாள் - அப்போது
வந்து நின்றான் உனைக்கவர்ந்த மன்னன்! - அந்தப்
போர்மறவன் தோளில் சூடிய மாலையின் பூக்கள்
புதர்களில்பட்டு உதிர்ந்திடும் நிலையில்; உன்
இதழ்களில் ஊறும் தேனை நாடி - அவன்
இளைப்பாற வருகின்றான்!
இளையவளே நீ - அந்த
இனியவன் களைப்பை உடனே ஆற்றிடுக!
நன்றி உண்டா இல்லையா? நான்
பன்றி கதை சொன்னதால் பழிவாங்கமாட்டாயே!
வழி இதுதான் அவன் வருவதற்கு! இருவரும்
விழிமூடாதீர் விடியுமட்டும்!
நகருகின்றேன் நான்'' என்றாள்! தலைவி; தோழிக்கு,
நன்றிகூற நா அசைப்பதற்குள் ஓடிவிட்டாள்!

*

* ''நகைநீ கேளாய் - தோழி! அல்கல்
வயநாய் எறிந்து, வன்பறழ் தழீஇ
இளையர் எய்துதல் மடக்கிக் கிளையொடு
நான்முலைப் பிணவல் சொலியக் கான்ஒழிந்து
அரும்புழை முடுக்கர் ஆள்குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி
மடைசெலல் முன்பின்தன் படைசெலச் செல்லாது,
சுடுவழி விலக்கும் எம் பெருவிறல் போலும்' என
எய்யாது பெயரும் குன்றநாடன்
செறு அரில் துடக்கலின் பரீஇப் புரியவிழ்ந்து
ஏந்துகுவவு மொய்ம்பிற் பூச்சோர் மாலை
ஏற்று இமில் கயிற்றின் எழில்வந்து துயல்வர
இல் வந்து நின்றோற் கண்டனள் அன்னை
வல்லே என்முகம் நோக்கி
'நல்லமன்' என நகூஉப் பெயர்ந்தோளே!''

*

(அகநானூறு : பாடல் : 248
பாடியவர் : கபிலர்)

பொருள் விளக்கம் :

அல்கல் = நேற்று. வயநாய் = வலிமையுள்ள நாய்.
எறிந்து = எதிர்த்துத் துரத்தி. பறழ் = குட்டிகள்.
இளையர் = வேட்டுவர். நான்முலை = தளர்ந்த மார்பு.
பிணவல் = பெண்பன்றி. சொலிய = தப்பித்து ஓட.
அரும்புழை முடுக்கர் = அரியதாகவுள்ள முடுக்கான இடம்.
தறுகண் = அஞ்சாமை. மடைசெலல் = எதிர்த்துப் போரிடல்.
செறு அரில் = தழைத்துள்ள புதர்.
ஏந்து குவவு மொய்ம்பு = நிமிர்ந்து திரண்ட வலிமையான தோள்.

*

காக்கைக்கு நன்றி காட்ட...

போரில் கலந்திட பிரிந்து சென்றவன்
தோளில் தவழ்ந்திட வரவில்லை யென்று

வேரில் பழுத்த பலாப் போன்ற பாவை
விழிநீர் பெருக்கி வேதனை யுற்றாள்!

துன்பம் போக்கித் தலைவியைத் தேற்றிட
தோழியும் முனைந்தாள்! முடியவே இல்லை!

வீட்டினில் அமர்ந்து காகம் கரைந்தால்
விருந்து வருமெனும் நம்பிக்கை யொன்று

நாட்டினில் உண்டு அறிவீர் அன்றே!
நல்லவேளை; அப்படியொரு காகம் கரைந்திற்றுங்கே!

''கவலை விடுக கண்ணே; காகம் கரைந்ததாலே, - உன்
பவள இதழ் சுவைக்கப் பருவக் காளை பாய்ந்து வருவான்''
என்று

பகர்ந்தாள் தோழி; தலைவியின் துயரமும்
நகர்ந்தது சிறிதே!


திரும்பிய காதலன் மேனி தழுவிட
கரும்பின் சுவையை இருவரும் பருகினர்!

''பிரிந்திருந்த நாளெல்லாம் தலைவியின்
பெரும் இன்னல் தீர்ப்பதற்குத் துணையிருந்தாய் தோழி!

நீ வாழியவே; வாழி!'' என்றுரைத்த தலைவனிடம்;
நெடும் புருவத் தோழிப் பெண் கூறிடுவாள் -

''தாகத்தால் தவித்திட்ட தலைவிக்கு ஆறுதலைக்
காகம் தான் வழங்கிற்று! அதனாலே;

வள்ளல் நள்ளியின் வளநாட்டு ஆயர்
அள்ளி வழங்கும் நெய்யுடன்



தொண்டி மூதூர் நெல்லரிசிச் சோறு பிசைந்து
குண்டுப் பாத்திரம் ஏழில் நிறைத்துத் தரினும்

ஒளியழகுத் தலைவி துயர் போக்கிய காக்கைக்குத்
துளியளவே ஆகுமென்றுணர்க!'' என்றுள்.

ஏழு பாத்திரம் நெய்ச்சோறு தரினும்
இணையில்லை காகம் செய்த உதவிக்கு -

என்பது இதன் பொருளாம்; இதனை
எடுத்தோதுவது எழிலார் தமிழ்க் குறுந்தொகையாம்!

*

*** ''திண்டோர் நள்ளி கானத் தண்டர்**
பல்லா பயந்த நெய்யிற் றுண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றூழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.''

*

(குறுந்தொகை : பாடல் : 210
பாடியவர் : காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்)

பொருள் விளக்கம் :

நள்ளி = ஏழுவள்ளல்களில் ஒருவன். அண்டர் = ஆயர்.
பல்லா = பல பசுக்கள். தொண்டி = தொண்டியெனும் ஊர்.
எழுகலம் = ஏழு பாத்திரங்கள். கரைதல் = காக்கை கத்துதல்.
பலி = இரையாகத் தருதல்.

*

மாவீரன் கண்ட மலர்கள்

பூக்காட்டின் சிறப்பு குறித்துப்
பாராட்டு மொழியொன்று கூறுதற்கு - ஒரு
பொற்கொல்லன் முன்வந்தால்;
பொன்னிறப் பூக்கள் நிறை சோலையென்று
பொதுவாகக் கூறிவிட்டு
முத்துமாலை கோத்தது போல்
முல்லையரும்பு வரிசை என்பான்!
செம்பருத்திப் பூக்கள் கண்டால்
சிவப்புக்கல் தொங்கல் என்பான்!
மாணிக்கம் நிகர் பூக்கள் பல
மலர்த் தோட்டத்தின்
மகிமைதனை உயர்த்தல் காண்பீர் என்பான்!

இதனையே ஓர் உழவன் சிறப்பித்தால்
ஏர் இழுக்கும் மாடுகளின் வால்நுனி போல்
அல்லித் தண்டுகளின் மொட்டுக்கள்
அழகுற விளங்குகின்ற
அரியதோர் காட்சியென்பான்;
அங்கிருக்கும் தடாகத்தைச் சுட்டிக்காட்டி!
தும்பைப்பூ, மகிழமலர், நீலோற்பலமென
தூரிகை கொண்டு பற்பல நிறங்களைத்
திரைச்சீலையிலே அள்ளி அள்ளித்
தெளித்தது போல் அமைந்ததிந்தப் பூங்கா என்று,
ஓவியனுயின் அவன் நோக்கில்,
உவமையொன்று உரைத்திடுவான்!

ஒரு கவிஞனிடம் சிக்கிவிட்டால் மலர்க்கூட்டம்; அப்பப்பா!
ஒவ்வொன்றுய் எடுத்து வைத்து; மகளிர்
உடலின் அங்கமெல்லாம் ஒப்பிட்டுத் தீர்த்தால்தான்
உறக்கம் வரும் அவனுக்கு!
தாழை மலர் நிறமன்றே தளிர் மேனியென்பான்
தாமரைதான் முகம் என்பான்.
மல்லிகை, செண்பகம், சாமந்தி கொண்டு
மலர்ச் செண்டமைத்து - அதன் முனையில்

மனோரஞ்சிதத்தைக் கவிழ்த்து வைத்தது போல்
மார்பகம் கொண்ட மாதர்க்கரசி யென்பான்!
கையின் விரல்களது மென்மைக்கு
காந்தள் மலரை உவமை காட்டிடுவான்!
மகிழம்பூதான் அவள் தொப்புள் என்பான்;
மஞ்சத்தில் ஊடும்போது அனிச்சமலர் ஆவாள் என்பான்!
பஞ்சு மலர்ப் பாதமென்பான் - அந்த
வஞ்சிக்கு இடை, அத்திப்பூ என்பான்!

பாவு போட்டுத் தறி நெய்யும்
பாட்டாளியாம் நெசவாளி, பாராட்ட முற்பட்டால்;
பட்டுப்போல் இருக்குதம்மா பூவின் இதழ் என்றும்,
பளபளக்கும் சரிகைப் பூக்கள் கொண்ட முன்றானையால்
தளதளக்கும் தையலர் தம் அழகென்பான்!
ஏருழவன், பொற்கொல்லன்,
ஏற்றமிகு ஓவியன்,
இசைபட வாழும் கவிஞன்,
நெசவுதனைத் தொழிலாய்க் கொண்டோன்
இவரெல்லாம் இனிய கற்பனையால்,
இயற்கையீன்ற பூக்குழந்தைகளைத்
தமிழ்மொழியால் கொஞ்சுகின்றார்!
இதோ ஒரு வீரன் எதிரிகளைக் களம் கண்டு
இட்ட பணி முடித்து வெற்றியுடன் திரும்பி;
இல்லத்தில் காத்திருக்கும்
இனிய நறுந்தேனை
இடையறாது பருகுதற்கு
இடிக்குமுன் வெட்டுகின்ற மின்னலது வேகத்தில்
இரதத்தைச் செலுத்த ஆணையிடுகின்றான் பாகனுக்கு!
ஓடோடி வருகின்ற அவ்வீரன் - தன்
உள்ளத்தில் குடியிருக்கும்
உயிரனையாள் வாழ்கின்ற
ஊரின் சிறப்புதனை நினைத்து மகிழ்கின்றான்.
வாரி இறைத்தது போல் அவ்வூரின்
வழியெங்கும் பூத்துக் கிடக்கும்
வண்ண வண்ண மலர்கள் பற்றி - அவன்
எண்ணம் பறக்கிறது சிறகடித்து!

* இருமருங்கும் நிறைந்து மலர்ந்துள்ள
இலுப்பைப் பூக்கள் எதிர்வந்து;
வில்லேந்தி வெற்றி விளைக்கின்ற



வீரர்தம் தோள்களிலே
கூர் மழுங்காதிருக்க குப்பிகளிட்டு மூடிய
கூடுகளில் நிறைந்துள்ள அம்புகளின் நுனியைப் போல்
செப்புத்தகடனைய சிவந்த தளிருடனே
செழிப்பு தவழ அரும்பி நின்று
வண்டுகள் தேன்பருக வந்து கூடிக்
கிண்டிவிட்ட காரணத்தால் இதழ்கள் விரிந்து
காற்றலையால் தாக்குண்டு காம்பு கழன்று
கடுமையாய்ப் பெய்த ஆலங்கட்டி மழை போல
பவளமென சிவந்துயர்ந்த பாதையெங்கும்,
பரவிக் கிடக்கும் காட்சி கண்டால்; அது
களத்தில் - கை, கால், தலைகள் அறுபட்ட
காரணத்தால் வழிந்தோடும் குருதியிலே
கொழுப்புத் துகள்கள் ஆங்காங்கு
குவிந்து மிதப்பது போல் தோன்றுதம்மா!''
ஏர் உழவன், பொற்கொல்லன், நெசவாளி, ஓவியன்,
இயற்கைதனைப் பாடுகின்ற இளம் நெஞ்சக் கவிஞன்
இவரெல்லாம் மலர்கள் பற்றி செய்திட்ட கற்பனைக்கும்
இந்த மாவீரன்; இலுப்பைப்பூ சிதறியுள்ள
காட்சியினைக் காண்பதற்கும்;
இருக்கின்ற தனிச் சிறப்பென்ன; புரிகின்றதா?
இவன், இனிய காதலியை நாடி வரும்போது கூட
களத்தில் பெருகிய ரத்தமும் நிணமும்தான் - அகக்
கண்களின் முன்னே அரிய காட்சியாகி
அந்தச் சிந்தனையில் வருகின்றன் என்று - இந்த
அகப்பாட்டை இயற்றியுள்ள கல்லாடனார்,
மறைமுகமாய் அந்த ஊரின் பெருமை கூறுவார் போல்
மாவீரனின் மனோநிலையை வெளிக்காட்டும்
வித்தகத்தை என்னென்று புகழ்வதென
எனக்கொன்றும் புரியவில்லை! இப்படி
எத்தனையோ புதையல்கள் இருக்குதம்மா;
சங்கத் தமிழ் இலக்கியத்தில்!

*

* **''கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்**
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்புனை ஏய்ப்ப அரும்பிய விருப்பைச்
செப்பட ரன்ன செங்குழை அகந்தோறு,
இழுதின் அன்ன தீம்புழல் துய்வாய்

உழுதுகாண் துளைய வாகி, ஆர்கழல்பு
ஆலி வானிற் காலொடு பாறித்
துப்பின் அன்ன செங்கோட்டு இயவின்,
நெய்த்தோர் மீமிசை நிணத்தின் பரிக்கும்
மத்த நண்ணிய அங்குடிச் சீறூர்''

*

(அகநானூறு : பாடல் : 9
பாடியவர் : கல்லாடனார்)

பொருள் விளக்கம் :

புழுகு = அம்பின் நுனிக்குப்பி. இருப்பை = இலுப்பை மரம்.
செங்குழை = சிவந்த தளிர்.
உழுதுகாண் துளையவாகி = வண்டுகளால் கிண்டப்பட்டு இதழ் விரிந்து. காலொடு = காற்றால் தாக்கப்பட்டு.
ஆர் கழல்பு = காம்பினின்றும் கழன்று.
ஆலி வானிற் பாறி = ஆலங்கட்டி மழை போல் சிதறி.
துப்பு = பவளம். நெய்த்தோர் = இரத்தம்.
நிணத்தின் பரிக்கும் = கொழுப்புத் துகள் போல் மிகுதியாக விரவிக் கிடக்கும்.

*



அரசனது அத்தாணி மண்டபத்தில் அன்றொரு நாள்
ஆன்றவிந் தடங்கிய மேலோர் புலவர் அவை கூடிற்றும்!

பல்பொருள் குறித்து விவாதம் எழுவதும் முடிவதும்
பலமுறை நடக்கும்; அங்கே பைந்தமிழ் மணக்கும்.

இம்முறையோ அரியதோர் கேள்வி பிறந்தது அவையில்
இன்னுயிர்க்கிணை எதுவென்றும் என்புதோல் போர்த்த
உடலுக்கு

இணைதான் எதுவென்றும் இணையிலாப் புலவர் கூட்டம்
கணைகளாய்த் தொடுத்திட கருத்துக்கள் மோதின அக்களத்தில்

நெல்லும் நீரும் உயிராய் விளங்கிப் பல்லோர் உடலை வளர்த்து
நில்லா நெடுஞ்சுவர் உயிரையும் நிலைக்க வைத்திடுமென்றும்

நிலமாளும் வேந்தர்க்கும் அதுவே உயிராக விளங்குமென்றும்
நீருக்கும் நெல்லுக்குமுள்ள சிறப்பைச் செப்பினர் சிலபுலவர்

முரசு கட்டிலில் படுத்துறங்கி முடிமன்னன் கைகளாலே
அரசு மரியாதையாக வெண்சாமரம் வீசப்பெற்ற

மோசிகீரனர் எனும்புலவர் முற்றிய விவாதத்துக்கிடையே
மாசு மருவிலாக் கருத்தொன்றை வெளியிட்டார்!

''என்னருமைப் புலவர் பெருமக்காள்! இனிய
கன்னலெனத் தமிழ் வடித்துத் தருகின்ற பெரியீர்!

பொன்னின் நிறம் வாய்ந்த நெல்விளையும் கழனிகளில்
புனல்பாய்ந்து விதை முளைத்து, பயிரின் வேர் நனைத்து

உழவனது வியர்வையெலாம் அறுவடைக் குவியலாகி
உண்பதற்கு வெண்சோறு பொங்குதற்கும்;



உலையிலிட நீர் வேண்டும்; உண்மையது மறுக்கவில்லை!
உடல் வளர உயிர் வாழ நெல்லும் நீரும்
தேவையென்பதிலும் மாற்றமில்லை!

சிந்தனைக்கு ஒரு வாதம் வைக்கின்றேன்;
சிறிதளவும் நடுமுள் நடுங்காமல் தீர்ப்பளிப்பீர்!

நாடாளும் அரசொன்று இருக்கும்போது - அவ்வரசு;
கேடான செயல்களுக்கும் கீழான குணங்களுக்கும்
அடிமையாகி,

நீரும் நெல்லும் இல்லா நிலையில்
ஊரும் உலகும் தவித்திடும் வகையில்

சீரும் சிறப்பும் இல்லாச் ''செங்கோல்''
செலுத்திடும் கொடுமை படைத்திடுமாஞல்

உடலெங்கே? உயிரெங்கே? இவ்விரண்டும்
ஒன்றைவிட்டு ஒன்றகன்று பிணமாக மாறிவிடும்!

அதனலே;

மன்பதை ஆளும் ஆட்சியின் மாட்சியே - அந்த
மக்களுக்குயிராம்; அவர்கள் வாழும் மண்ணுக்கும்
உயிராம்!

வேற்படை விற்படையென விதவிதப்
படைகளிருப்பினும்
விழிப்புடன் வேந்தன் விரைந்து செயல்படல்
வேண்டுமன்றே?

வெளிநாட்டுப் பகைப்புலத்தை விரட்டுகின்ற வீரமுடன்
ஒளிநாடாய்த் தன்னுட்டை உருவாக்கி வைப்பதற்கு

தெளிவுள்ள ஆட்சித் திறன் தேவையன்றே?
சோம்பலினுல்
நெளிகின்ற போக்கிருந்தால்; நெல் எங்கே? நீர் எங்கே?

அறிவார்ந்த அரசொன்றே நாட்டுக்குயிராய்
அமைந்துவிடின்
அதன்பின்னர் நீர்வளமும் நிலவளமும் பிறவளமும்
நிறைந்து குலுங்கிவிடும் அறிவீர்!'' என்ருர்.

மோசிகீரனுர் மொழி கேட்டுப் புலவரெலாம் தமது வாதம்
தூசியென ஒப்புக்கொண்டு தோல்வியினை ஏற்றுக்கொண்டார்!

நெல்லும் உயிரன்றே! நீரும் உயிரன்றே! எனக்
கல்லில் செதுக்கிய எழுத்தாகப்

புறப்பாட்டு பூத்ததம்மா! அது என்றும்
புதுப்பாட்டாய்ப் பொலியும் அம்மா!

*

* ''நெல்லும் உயிர் அன்றே; நீரும்
உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனுல் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே.''

*

(புறநானூறு : பாடல் : 186
பாடியவர் : மோசிகீரனார்)

பொருள் விளக்கம் :

மன்னன் உயிர்த்தே = அரசை உயிராக உடையது.
மலர்தலை உலகம் = பரந்துகிடக்கும் நாடு.
வேன்மிகுதானை = வேற்படை மிகுதியாக உடைய சேனை.
மன்பதை = மக்கள் வாழுமிடம்.

*

ஊரின் பெருமை உணர்த்தினாள் ஒருத்தி!


வீராம்பட்டினமென்பது புதுவைக்கருகில்
விளங்கிடும் ஊராம் - புலவர் பிரான்
வீரைவெளியனார் தோன்றிய இடமென, இதனை
விளக்குவர் அறிஞர்!
தித்திக்கும் கவிதை தீட்டி அகத்துறையில் புகழ்பெற்ற
தித்தனார் எனும் கவிஞர் இவர் பெற்ற மகனேயாவார்.
திறன்மிக்க மகனை ஈன்ற வெளியனரும்
புறப்பாட்டில் ஒரு புதுமைதனைக் காட்சியாக்கி,
வேட்டுவர் இல்லத்துப் பெண்விளக்கின் மாண்புதனைக்
காட்டுகின்றார் கவிதை ஒளிக் காவியமாய்!

வேந்தனிடம் விடைபெற்றுக் களம் சென்ற தளபதி
வெற்றியினை மாலையாக்கிச் சூடிக்கொண்டு
விருதுபல பெற்று வீரக்கொடி விண்தவழ
வீடு திரும்பினன் என்ற செய்தி கேட்டு - அவனைப்
பாடிப் பரிசில் பெற பாணன் ஒருவன் சென்றபோது - அவன்
நாடி வந்த தளபதியின் நல்நெஞ்சக் கொடை இயல்பை
நற்றமிழில் பாடுகின்றார், வீரை வெளியனார்.

வெற்றி பெற்ற நாட்டுப் பொருள்களையும் - நமது
வேந்தர் வழங்கியுள்ள விருதுப் பொருள்களையும்
ஈந்து சிவந்திட இரு கரமும் கொண்டவன்தான்
பாய்ந்து பகைவீழ்த்தி வந்துள்ள வீரன் எனப் புகழ்ந்து - அன்பு
தோய்ந்த இதயமுடன் அள்ளித் தருவான் பரிசுகளை என்று,
ஆழ்ந்த அறிவுசால் வீரைவெளியனார், பாணர்க்கு அறிவித்து
மகிழ்ந்து,

அவ்வூரின்கண் அரும்பிமலர்கின்ற
அழகு மகளிர் பண்பு நலமும் பாடுகின்றார், கேளீர்!

முன்னைக் கொடியும் முசுண்டைக் கொடியும்
பின்னிப் படர்ந்து விரிந்து பரந்ததால்
பந்தல் என ஒன்று வேண்டாம் வெயில் மறைக்க என
பலாக்கனிகள் தொங்குகின்ற அடர் மர நிழலின் கீழே



வேடனொருவன் உறக்கத்தைத் தழுவிக்கொண்டு,
வேல்பிடித்த கரத்தைக்கூடத் தளர்த்திக் கிடந்தான்.
வேலுக்குப் பதிலாக அவனருகே படுத்துக்கொள்ள
சேலுக்கு இணையான விழிபடைத்த அவன் துணைவி,
விருப்பங்கொண்டு;
மெல்ல நடந்து இல்லத்துக்குள்ளிருந்து - அந்த
வெல்லப்பாகு இதழாள்; கொடிப்பந்தல்தனைக் கூர்ந்து
நோக்குகின்றாள்.

கலைப்புற்ற கணவனருகில் ஒரு மலர் போல ஒலியின்றி
உட்கார வேண்டுமென்றும்,
கண்களின் பசி தீர அவன் கட்டழகைப் பார்த்துக் களித்திட
வேண்டுமென்றும்,
தாமரை மொட்டிரண்டைச் சற்றுத் தாமதமாய் அவன்
தடந்தோளின் பக்கம் திருப்பினால் போதுமென்றும்,
அவசரப்பட்டு ஒரு முத்தம் அரும்பு மீசை உதட்டின்மேல்
அளித்துவிடின், அவன் விழித்துக்கொள்ள நேருமென்றும்,
ஆனகலை வேட்டையாடி அயர்ந்து தூங்கும்
ஆளனது ஓய்வு கலைத்தல் அவன் உடல் நலனுக்கு
ஆகாதென்றும்,
முழுத் தூக்கம் முடியட்டும்; பின்னர் காலைக்கதிர்
எழுமட்டும் முடியாமல் தொடரலாம் இன்பமென்றும்,
தொலைவில் நின்று அத்தோகை நல்லாள் -காற்றில்
அலைஅலையாய் எழுகின்ற கருங் கூந்தல் கோதி,
எண்ணமிட்டு நின்றிருந்தாள் - அவள்
வண்ணமிட்ட மார்பகமோ உயர்ந்துயர்ந்து உயிரை வாங்கித்
தணிந்து, பின்னும் உயர்ந்தெழுந்து மென்மேலும் அவள்
தணியாத தாபத்தை வெளிப்படுத்தும்!
துணிந்து சென்று அவன்மேல் வீழ்ந்துவிட்டால் - நல்ல
தூக்கத்தைக் கலைத்த குறை, அவள் மனதைக் குடையும்!

அதனாலே

அவனருகிற் சென்று அசையாமல் படுத்துக்கொண்டு
அயர்வு நீங்கி அவன் விழிப்புற்றுப் புரளும்போது;
அத்தான்' என அழகு விரல்களாலே முகம் தடவி
முத்தாக ஒரு முத்தம் கொடுப்பதென முடிவு கட்டி,
காட்டு வழியில் தேய்ந்து காய்த்துப்போன கால்களையும்
காய்ந்த சருகுகளின் மேல் பூப்போல ஓசையின்றி
ஊன்றி,
விழிமூடித் துயில் கொள்ளும் வேடனிடம்; தொப்புள்
சுழியின் எழில் மூடாமல் சுகந்தமிகு வசந்தமென
நடக்கலுற்றாள்!

அப்போது,

பலாக்கனிகள் குலுங்குகின்ற மரநிழலில்
படர்ந்திருக்கும் கொடிகள் நிறை இலைமறைவில்
படுத்திருக்கும் வேடனுக்கு மிக அருகாமையில்
தடுத்துரைத்த பெண்மான் ஒன்றைத் தழுவிக்கொண்டு
ஆண்மான் தந்த அருஞ்சுகத்தை, இழப்பதற்கும்
மனமின்றி, - அந்தப் பெண்மான்
வீண் முயற்சி எடுத்து மீண்டும் தடையொன்றும்
சொல்லாமல்,
இருமானும் இன்பத்தின் உச்சியிலே மிதந்து
தருநிழலில், தவமிருந்து வரம்பெற முனைவோர் போல
- தமைமறந்த நிலையுற்ற,
இயற்கையின் திருக்கூத்தை அந்த இல்லத்தரசி
இருவிழி கொட்டாமல் பார்த்தயர்ந்தாள்!

உடனே

அவளுக்கோர் அச்சம் உள்ளத்தில் வெளிச்சமிட
அப்பால் ஓர் அடிதனை எடுத்து வைக்கவும்
தயக்கமுற்றாள்!
பலாமரத்து இலைச்சருகுகளில்
படர்ந்துள்ள கொடியுதிர் மலர்களில் - தனது
பாதம் படுகின்ற சிறிய ஒலி கூட;
இமை மூடி இவ்வுலகை மறந்து துயில்கின்ற
இளமை மிகு வேடனையே எழுப்பிவிட்டால்,
ஆர்த்தெழுகின்ற அவன் தோற்றம் கண்டு - காதல்
போர்க்களத்து வெற்றிக்குப் போட்டியிடும்
ஆண்மானும் பெண்மானும் அடைய இருந்த
இன்பமெலாம்
ஊண் பொங்கும் நேரத்தில் உலைப்பானை கவிழ்ந்தது
போலாகி
ஓடி உயிர் காத்துக் கொண்டாலே போதுமென
இருமானும்
வாடிப் பிரிய நேரிடுமே எனவும் எண்ணினாள்;
அல்லது
வேடன் எழுந்தவுடன் அருகிருக்கும், தனது
வேலை எடுத்து வீசிவிட்டால் - காதல்
பாடந்தனைச் செயல் மூலம் பயிலுகின்ற ஈருயிரும்
கலவி நடுப்பாதையிலே பலியாக வேண்டுமே என்றும்
கவலை மிகக் கொண்டுவிட்டாள்!

இவையிரண்டு தீங்கினையும் தவிர்ப்பதற்குத் தக்க வழி
இங்கேயே நான் மறைந்து நிற்பதுதான்'' என்று
அசையாத சிலைபோல இருந்துவிட்டாள் - தெவிட்டாத
இசைபோல வீசும் தென்றல்; அவள் பண்பை
வாழ்த்திப் பாடிற்றுங்கே!
மானினத்தின் உணர்வுக்கு மதிப்பளித்துக் கருணைதனை
மழையாகப் பொழிகின்ற மாதரசு வாழ்கின்ற
இவ்வூரில்
மானிடராம் பாணர்க்குப் பரிசு இல்லை ஏன
மறுப்போர் உண்டோ?

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற
பழமொழியைப்
பாவை இவள்தான் மெய்ப்பிக்கின்றுள் என்று
பாணர்க்கு அவ்வூரின் பண்பாட்டை வீரவெளியனார்
எடுத்துக்காட்டி
பரிசுபெறச் சென்றிடுவீர் பகைமுடித்த தலைவனிடம்
எனக்கூற
விரைந்திட்டார் வேகமாகப் பாணர்; வீர
வெளியனுர்க்கு நன்றியினைக் குவித்தவாறு!

*

* ''முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலாத்தூங்கு நீழல்,
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப், பிறிதோர்
தீர்தொழில் தனிக்கலை திளைத்து விளையாட,
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் எழுதலும் அஞ்சிக், கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி, யாவதும்
இல்வழங்காமையின் .....
... ...
... ... பாண! தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்
அருகாது ஈயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே.''

*

(புறநானூறு : பாடல் : 320
பாடியவர் : வீரைவெளியனார்)

பொருள் விளக்கம் :

கைம்மான் = யானை. கனைதுயில் = மிக உறக்கம்.
பார்வை மடப்பிணை = விலங்கினமான இளம் பெண்மான்.
கலை = ஆண்மான். இல்வழங்காமையின் = இல்லத்தை விட்டு வெளியே நடமாடாமல் ஒருபுறம் ஒதுங்கி அமைதல்.
தங்காது = குறையாமல். வேந்துதரு விழுக்கூழ் = தனக்குப் பகை வேந்தர் கப்பமாகத் தந்ததும், தன் வேந்தர் தந்த பரிசுப் பொருளும்.

*

குறிப்பு : வீரைவெளியனார் தோன்றிய வீராம்பட்டினம் புதுவைக்கு அருகே உள்ளது என புறநானூறு உரை கண்ட அறிஞர் ஔவை துரைசாமிப் பிள்ளை கூறுகிறார்.



சலவும் கிள்ளை - குடும்பப்பாவை -
உலவும் தென்றல் - உதய தாரகை - அந்த

மலரை மணந்தான் ஒரு மருதத்தலைவன் - இந்த
உலகை மறந்தனர் இருவரும் இரவில்!

இலவம் பஞ்சுப் படுக்கைப் பள்ளியில் - கலைகள்
பலவும் கற்றூர், கற்றூர், நாளும் கற்றூர்!

கட்டிலில் கற்றது கைம்மண் அளவே - இன்னும்
கல்லாதன கடல்மண் அளவே - இதனைப்

பட்டுமேனிப் பத்தினிக்குரைத்து
பற்பல கோடி இன்பம் தந்தான்.

கொஞ்சிப் பிணைந்த குடும்பக் கொடியில்
பிஞ்சு போன்று ஒரு பிள்ளை உதித்தது.


மஞ்சம் சிலநாள் ஓய்வு பெற்றதால்
மணாளன் தவித்தான் தனிமைத் துயரில்!

மரத்தை வெட்டும் கோடரி போல - அவன்
மனத்தை வெட்டும் காமக்கிளர்ச்சி!

அறத்தை மறவா அவன் இல்லக்கிழத்தி,
சிறுத்தைப் புலியாய் மகனை வளர்க்க -

கனத்த தனங்களில் பெருகும் பாலை,
கருத்த காம்பின் வழியாய்க் கொடுத்தாள் - அதனை

நினைத்த போதெல்லாம் எச்சிலால் நனைத்து
இனித்த சுகத்தை இழந்த கணவன்;



தணலாய்க் காமம் தகித்தது கண்டு -
தாகம் தணிக்கப் பெரும் மோகம் கொண்டு;

பரத்தை ஒருத்தியின் படுக்கையில் விழுந்தான் - அவன்
கரத்தைப்பற்றி அவளும் காதலைப் பொழிந்தாள்.

காலை, மாலை, இரவு, பகல் என்ற கணக்கேயின்றி
காம லீலையில் கழிந்தன நாட்கள்!

மூலையில் அமர்ந்து வாடுகின்றாள் - அவன்துணைவி
பாலையில் வெண்ணெய்போல் உருகுகின்றாள்!

அவளிருக்கும் நிலைமைதனை அறிந்ததாலே
அவசரமாய்ப் புறப்பட்டான் தேர்ஏறி!

பாணன் ஒருவனைப் பக்குவப்படுத்தி
பாவையின் கோபம் தணிக்கச் சொன்னான்.

இசைப்பாணன் அவள் இல்லம் சென்றான்.
இங்கிதமாய் எவ்வளவோ எடுத்துரைத்தான்.

இல்லக்கிழத்தியோ இறவாச் சினமுடன்
இலைமறைகாய் என எதுவுமின்றி

எல்லா விபரமும் எடுத்தியம்பிப்
பொல்லாக் கணவனைப் புறக்கணிக்கின்றாள்.

பல்கண்ணனார் என்னும் புலவர்,
பாடிய சங்கப் பாடலில் இப்படிப்

பாணன் ஒருவனிடம் தனது நிலையைப்
பட்டவர்த்தனமாய்த் தலைவி சொன்னதாய்ச் சொன்னதை மாற்றி

கற்பனையொன்றைத் தீட்டிட முனைந்தேன்
கருப்பொருள் எதுவும் கெடாதவாறு!

பரத்தையின் இருளை விட்டகன்ற வீரன்,
பத்தினி விளக்கைப் பார்க்கத் துடித்தான்.

பாணனை அனுப்பினால் தூது பலிக்காமற் போகலாம்; அந்தப்
பயத்தால் திகைத்துப் பற்பல சிந்தனை செய்தான் - முடிவில்,

ஒரு பாணன் போல உருமாற்றங் கொண்டு
திருமகள் என்ற தன் தேவிமுன் சென்றான்.

''யார் நீ? யாது வேண்டும் உனக்கு?'' என்று
பார்வையொன்றால் அந்தப் பாவையும் கேட்டாள்.

"குலவிளக்கே! குங்குமச் சிமிழே! உனைக்
கொண்ட கணவன் அனுப்பினன் என்னை!

விலைமகளோடு போன துணைவன் வருவான் மீண்டும்! நீ;
நிலமகள் போலப் பொறுமையைப் பூண்டு,

வளைக்கரம் நீட்டி வரவேற்றிடுக என்று -
சுளைத்தமிழ்ப் பாட்டை யாழுடன் இசைத்தான்.

பொதுமகளை நாடி அவன் ஓடியதைப் பொறுத்திடுக!
புதுமனிதனுய்த் திரும்பி வருகின்றான்; அவனை

மன்னித்தேன் என்றுநீ உரைத்துவிட்டால் - உனை
அள்ளித்தேன் பருகுதற்குத் தயங்கமாட்டான்.''

இசை மீட்டி இவ்வாறு

பாணன் வேடத்தில் பரிந்துரைக்கும் சாகசத்தை
வாணன் எனும் தன் கணவன்தான் நடத்துகின்றான் எனத்
தெளிந்தாள்.

இசைப்பாணன் அல்ல அவன் எனத் தெரிந்தபின்னர்,
மணவாளன் முன்பேச என்ன அச்சம்! - அதனாலே

மனத்தில் உள்ள கொதிப்பை எல்லாம்
மாதரசு கொட்டித் தீர்த்தாள்.

''சீறியாழ் மீட்டுகின்ற பாணரே!
சீர்குலைந்த என் நிலையைப்பாரும்!

காய்ச்சுகின்ற நெய்யும்
கரும்புகையும் பட்டதாலும்,

கற்கண்டாம் என் பிள்ளைக்குக்
கண்ணிரைம் மைஎழுதி விட்டதாலும்

அழுக்குப் படிந்து ஆடையெலாம்
அழகற்றுப் போனதய்யா!

தேமதுரக் குழந்தையின் பசிதீரக் கொடுத்தபிறகும்கூட
தேமலழகுக் கொங்கையினில் சுரக்கின்ற பால்பெருகி,

தோகையென் தோள்மீதும் மார்பினிலும் வழிவதாலே - உம்
தோழருக்குப் பிடிக்காத முடைநாற்றம் வீசுதய்யா!

எனவே எனைவிடுத்து,

அணிமணிகள் ஒளிவழங்க
ஆடிப்பாடிக் களிப்பூட்டித் - தும்பைப்பூத்

துணிமணிகள் காற்றில் பறக்க
ஆள்மயக்கும் விழிகாட்டும்

வீலைமகளிர் வீதிக்கே - அவரை
விரைந்து திரும்பச் செய்திடுவீர் - இம்மனையின்

தலைமகனும் என் கணவர் உம்கையில்
தரும் பொன்னைக் கூலியெனப் பெற்றுக் குதித்திடுவீர்!''

இல்லாள் வெகுண்டெழுந்து இதைச் சொல்லி முடித்தவுடன்
பொல்லாச் செயல் புரிந்த துணைவனவன் நடுங்கிப் போய்;

''நில்லாது இனி என் உயிர் கண்ணே!'' என்று
நெடுமரமாய் அவள் தோளில் சாய்ந்தபடி,

அணிந்துவந்த பாணன் வேடம்
அரைநொடியில் கலைத்து விட்டான்.

துணிந்து சென்று தொகை வழங்கி இன்பம் பெற்று - இன்று
பணிந்து வந்து பாணன் உருவில் கெஞ்சுகின்ற

வாணன் மீது வஞ்சம் தீர்க்க வழியே இன்றி,
''வாழ்க'' என்று திருமகளும் தழுவிக் கொண்டாள்.

குழந்தையொன்று குறுகுறுவெனப் பார்ப்பதையும் மறந்து - உடல்கள்
அழுந்த அணைத்தனர் - அதைத் தொடர்ந்து அகல் விளக்கையும் அணைத்தனர்.

*

*** ''நெய்யும் குய்யும் ஆடி மையொடு**
மாசுபட் டன்றே கலிங்கமும்; தோளும்
திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்றப்
புதல்வற் புல்லிப் புனிறு நாறும்மே;
வாலிழை மகளிர் சேரித் தோன்றும்
தேரோற்கு ஒத்தனம் அல்லேம்; அதனால்
பொன்புரை நரம்பின் இன்குரல் சீறியாழ்
எழாஅல் வல்லை ஆயினும், தொழாஅல்;
கொண்டுசெல் பாண! - நின் தண்துறை ஊரனை
பாடுமனைப் பாடல்; கூடாது நீடுநிலைப்
புரவியும் பூண்நிலை முனிகுவ,
விரகுஇல மொழியல், யாம் வேட்டதில் வழியே.''

(நற்றிணை : பாடல் : 380; பாடியவர் : கூடலூர்ப் பல்கண்ணனார்)

*

பொருள் விளக்கம் :

குய் = புகை. கலிங்கம் = ஆடை. திதலை = தேமல்.
பிலிற்ற = சுரந்து பீச்சிட. புல்லிப் புனிறுநாறும் = (மகனை) அணைத்துப் பால் கொடுத்ததால் ஏற்படும் பால்வாடை.
வாலிழை = ஒளிவிடும் அணி.

ஒரு பொது மகளின் புலம்பல்!

வயலின் ஓரம் வரப்புகள் மீது
வளர்ந்து நிற்கும் மாமரக் கொப்பில்

உண்ணத் தெவிட்டா ஒட்டுமாங்கனிகள்
வண்ண மாதர்கள் பெருந்தனம் போல

காய்த்துக் குலுங்கி கடைசியில் அவைகள்
கயல்கள் ஆடும் கழனியின் பக்கம்

வாவியின் நீரில் வீளந்து துள்ளும்
வாளைமீன் வாய்வீழ் வளநாடிதுவே!

வலுவில் விழுந்த மாங்கனிதன்னை
வாளைமீன் விழுங்கி மகிழ்தல் இயல்பே!

அவ்வாறே,

வாணன் என்னும் இவ்வூர்த்தலைவன் - காம
பாணம் தைத்தது என்று; உள்ளம்

கருகி வந்தான்! கருணை செய்க என்றே - என்முன்
உருகி நின்றான்!

வாளைமீன் வாய்க்குள் மாம்பழமொன்று
வலிய விழுந்தால் சும்மா விடுமா?

காளை அவன்; என் மடியில் வீழ்ந்த
கதையும் இதுதான் தோழி!

பிறகென்ன; நான் அவனை
உறவென்று உரைத்தேனா? அல்லால்

வரிசை வைத்து வா என்று அழைத்தேனா? - விழி
வலையை வீசி வஞ்சித்துப் பிடித்தேனா? - என்

பொலிவைக் காட்டிப் பொடிபோட்டு இழுத்தேனா? ஒரு
புன்னகை வீசி அந்தப் ''புனிதனைக்'' கவிழ்த்தேனா?

வசைபாடி எனைத்தூற்றும்
வாணன் மனைவியிடம் கேள்! - இன்ப

இசைபாடிக் களிப்போம் என்று;
இரவலன் போல் கெஞ்சியது யார்?

வந்த வாணன் எனைநோக்கி
நொந்த மனத்துடன் சொன்னது என்ன?

''கட்டிலுக்குத் துணையாய் வாய்த்த மங்கை - பிள்ளைத்
தொட்டிலுக்கு முழுநேரக் காவல் ஆனாள்!

தொடர்ந்து பலநாட்கள் பட்டினியால் வாடி - இன்று
துணிந்து உனைத்தேடி இன்பம் பருகவந்தேன்!

கட்டியணைத்துக் காய்ச்சல் போக்கி - மார்புக்
கச்சை அவிழ்த்துக் காமநோய் தீர்த்திடு'' என்றான்.

ஒப்பினேன் நானும் - பொன்னல்
உப்பிய பையை உதறினன் என்மேல்!

பரத்தை நான் எனினும் உன்பால் பற்றுவைத்த பின்னர் - என்
தரத்தை உணர்வாய்; தாகம் தணிக முதலில் - என்றேன்!

தட்டிலே உள்ள சோற்றைப் பசியால் உண்ணப் பறந்து
கொட்டிக் கவிழ்த்த ஒரு குழந்தையைப் போலே

பரபரப்புணர்வுடன் பாய்ந்தான் என்மேல் - நான்
பயத்தால் நடுநடுங்கிப் போனேன் எனினும் - எனக்குப்

பழகிய கலைதான் என்ற துணிவில்
படுக்கைப் போட்டியில் சமமாய் நின்றேன்!

பலாச்சுளை - தேன்கதலி - தினைமா - என்று
பலநாள் இன்பம் பகிர்ந்து மகிழ்ந்தோம்!


திடீரென்று ஒருநாள்

தெவிட்டியதாலோ அல்லது அவன் தேவியாம் திருமகள்
தேடிஅலைகிறாள் என்ற செய்தி தெரிந்ததனாலோ;

தேர்ஏறிப் போன வாணன்,
திரும்பவே இல்லையடி!

பொருள் மட்டும் தரவில்லை; என்னைப் பொதுமகள் என்னும்
இருள் விரட்டும் ஒளிப்பிழம்பாய் அருகிருந்தான்.

உருள்கின்ற காலத்தின் கோலம் பார் -
சுருள்கின்ற கத்திபோல நாக்குச் சுழலும்



ஆடவனின் பாராட்டெல்லாம் - பஞ்சணையில்
கூடுகின்ற நேரத்தில்தான்!

அதன்பின்னர்ப் புதன் வருவேன்; வியாழன், வெள்ளி
வருவேன் என்று
அடுக்கடுக்காய் நாள்குறித்து 'சனி' காணுமற்போய் விடுவான்.

குறைசொல்லி அவனைநான் குமுறுவதால் பயனில்லை தோழி!
பறைமுழக்கி ஊர்கூட்டி என்மீது பழியுரைக்கும்

கல்நெஞ்சக்காரி இருக்கின்றாளே; அவன்துணைவி
கண்ணீரையே கயிறாய்த் திரித்து அவனைக்
கட்டிப்போடுகின்றாளாம்!

கண்ணாடி முன்நின்று ஒருவர்
கண்டபடி அங்கங்கள் அசைத்திட்டால்

கண்ணாடியில் தோன்றும் உருவும்
கச்சிதமாய் அவ்வாறே அசைத்திடுமே!

அதுபோலத்தான்

அவளோ கண்ணாடிக்குமுன் அசைகின்ற அம்மை!
அவனே அந்த அசைவுஅனைத்தையும் பிரதிபலிக்கும் பொம்மை!

காத்திருந்து இனி என்ன பயன்?
பூத்திருக்கும் முல்லை நான் - இதழ்

மதுவுண்டு செல்வதற்குப்
புதுவண்டு வராமலா இருந்து விடும்!

கலைமகளாய் மாற்றம் பெறக் கனவுகண்டேன்; ஆனால்
விலைமகளாகவே வாழ்க என்று

வாணன் வாழ்த்திவிட்டான்; அந்த
வீணன் வாழ்க நன்று!''

இவ்விதம் ஒரு காதல் பரத்தை
இதயத்துயர் எடுத்துச் சொல்லி

ஆருயிர்த் தோழியிடம் அலறிப் புலம்பியதை
ஆலங்குடி வங்கனார் எனும் புலவர்

தங்கத் தமிழ் உவமை கூறி
சங்கக் கவியாய்த் தருகிறார் இங்கே!

*

*** ''கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்**
பழன வாளை கதூஉம் ஊரன்

எம்இல் பெருமொழி கூறித், தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவைபோல,
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே!''

(குறுந்தொகை : பாடல் : 8; பாடியவர் : ஆலங்குடி வங்கனார்)

*

பொருள் விளக்கம் :

கழனிமா அத்து விளைந்து உகு தீம்பழம் = கழனியருகே உள்ள மாமரத்தில் பழுத்து விழுகின்ற இனிய பழம்.
பழனவாளை கதூஉம் = பக்கத்துப் பொய்கையில் உள்ள வாளைமீன் கவ்விக்கொள்ளும்.
ஆடிப்பாவை = கண்ணாடியில் தோன்றும் உருவம்.

*

புகழ்ந்தையார்

1

குளத்து மீனைக் கொடிதனில் நீந்தச் செய்து
களத்தினிலே வெற்றிகளைக் குவித்திட்ட பாண்டி நாட்டு
மக்களுக்கு

உளத்திலொரு வருத்தமுண்டு; அஃதென்னவெனில்
வளத்தைப் பெருக்காமல் வரி பெருக்கி வருமானம் பெருக்க
முனையும்

வாள் மீசைக்காரன் அறிவுடை நம்பிப் பாண்டியனின்
வளைந்திட்ட ஆட்சிக்கோலை நிமிர்த்திட
வேண்டுமென்பதேயாகும்!

நாட்டு நிலையை எடுத்துரைத்துப் பாண்டிமன்னன் திருந்திடவே
நீட்டோலை கொண்டு பலர் அவனைச் சந்திக்கச் சென்று கால்
வலித்துத் திரும்பிவிட்டார்!

ஆடலரங்கம், இசையரங்கம்; அத்தாணிமண்டபத்தில்! அரசியுடன்
ஊடலரங்கம், கூடலரங்கம்; அனிச்சமலர் மஞ்சத்தில்!

ஏடு கொள்ளா இன்பத்தில் திளைத்திடலே
நாடு காக்கும் முறையென்று; நாலைந்து பேர்வழிகள்

அரசுத்துறையோர் அமர்ந்து கொண்டு
அறிவுடைநம்பியினை அடுத்தடுத்துக் கெடுக்கலானார்!

அரசன் எதைச்சொன்னாலும் ஆமாம் என்று
அவசரமாய்த் தலையாட்டி; அடடா! அருமை அருமையென

பாராட்டிப் போற்றிப்புகழ்ந்து அவனை இன்பச்சேற்றில்
தேரோட்ட வைத்து ஆட்சியினை வசமாய்ச் சிக்கவைத்தார்!

அற்ற குளத்து அறுநீர்ப்பறவை போன்றார் - சில
உற்றார் உறவினரும் அதுதான் சமயமென்று; தாம்

கற்ற வித்தை அனைத்தும் காட்டி நாட்டோரை வஞ்சிக்கும்
குற்றங்கள் கணக்கின்றிப் பெருக்கலானார்!

சோலைவனப் பாண்டிநாடு சொந்த நலம் நாடுவோரால்
பாலைவனப் பூமியாகும் எனப்பயந்த சான்றோர் பலர்;



காலைக்கதிர் உதித்தெழுந்து காரிருளும் தொலைவதற்கே
கடமையாற்ற முனைந்திடுவீர் எனக் கவிஞர் ஒருவரிடம் வேண்டி
நின்றார்!

பிசிர் எனும் பாண்டுநாட்டுச் சிற்றூரில்
பிறந்திட்ட ஆந்தை எனும் பெயருடையார் அக்கவிஞர்!

பிசிராந்தையார் என்று பெருமைமிகு வரலாற்றேட்டில்
பீடுநடைபோட்டு நட்புக்கோர் இலக்கணமாய் வாய்த்தவராம்!

கோப்பெருஞ்சோழன் எனும் மன்னனை நேரில் பாராமலே
அவன்
மாப்புகழ் கேள்வியுற்றுத் தன்னையவனுக்கு நண்பராய் வரித்துக்
கொண்டவராம்!

சொந்தநாடாம் பாண்டிநாட்டில் சோர்வுற்று மக்கள் எலாம்
நொந்துமிக இன்னலுற்றுத் தள்ளாடும் நிலைமாற்றத்

தன்னால் முடியுமென நம்பிக்கை தெரிவித்துத் துணிந்து
மன்னரும் அறிவுடைநம்பியினைச் சந்திக்கப் புறப்பட்டார்!

பார்வேந்தனும்நம்பி; பாவாணர் பிசிராந்தை வரும் செய்தி
கேட்டு
பாவேந்தரை மனம் கோணச் செய்தல் பெருங்கேடாய்
முடியுமென அஞ்சி,

தமிழுக்கு மரியாதை செய்கின்ற பண்பாடு குன்றுத காரணத்தால்

தமிழ்க்கவியைத் தகுதியுடன் வரவேற்றுத் தலைதாழ்த்தி வணக்கம்
செய்தான்!

''செந்தமிழுக்கு நீ செய்கின்ற சிறப்புக்கு மகிழ்ச்சியெனினும்
செங்கோலைக் கொடுங்கோலாய் மாற்றுதல் நன்றே மன்னா?

பந்தங்கள், சொந்தங்கள் எனச் சொல்லிக்கொண்டு - தீப்
பந்தங்களாய்ச் சுடுகின்றார் உன்பக்கமிருப்போர்; நாட்டோரை!
நல்லோரை!

அரசனை அன்றுடம் இன்பப்பொழுது கழிக்கச் செய்துவிட்டு
அரசியலைத் தமதாக்கி விளையாடும் அரசுத்துறையோர் தம்மை;

அடையாளம் தெரிந்துகொளல் வேண்டும் வேந்தே! உன்
அழிவுதனைத் தடுத்திடவும் அதனினும் மேலாக

அழியாமல் என்றும் நமதுநாட்டு நற்பெயரைக் காத்திடவும்
அறிவுரை சில கூறிடவே வந்துள்ளேன்; ஏற்பாயோ?''
எனக்கேட்டு,

''காற்றடிக்கும் திசையினிலே கவிப்பாய் விரித்துப் படகோட்டி
போற்றிப் புகழ்ந்துகொண்டே தீங்குகளை மறைத்துச் சிலர்

போதுமான பரிசுகளைப் புவியாள்வோர்பால் பெற்றுச்செல்வர்!
- நானே; உன்பால்
வாதுசெய்து நின்னுட்சிதனை வகைப்படுத்த வந்துள்ளேன்;
சீறிடாதே!'' என்றுரைத்தார்.

''கல்லும் கசிந்துருகத் தமிழ்பாடும் கவியரசே!
அல்லும் பகலும் எனைச் சூழ்ந்திருப்போர்;

அறிவுரை எதுவும் கூறித் திருத்துவதற்குத் தகுதியின்றி
'ஆம்' என்றே அனைத்துக்கும் தலையசைத்துத் தரமிழந்து
போனார்!

செறிவுநிறைத் திறம் வாய்ந்த பெரியீர் நீவிர்; இந்தச்
செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் செம்மைகாக்க வந்துள்ளீர்!

அறிவுடைநம்பியென எனக்குப் பெயர்மட்டும் இருந்தென்ன
பயன்!

அரசுக்குத் தேவை; இயற்றலும் ஈட்டலும் காத்து
வகுத்தலுமன்றே?

இதனை மறந்து நடக்கின்ற ஆட்சிதனைக் கடிந்து
இடிப்பாரையில்லாத ஏமரா மன்னனாக இருந்துவிட்டேன்!

எடுத்துரைப்பீர்; என்ன செய்யவேண்டும் நான்? நீவிர்
தொடுத்துவைக்கும் அறிவுரையைத் தொழுதேற்றுச்
சூடிக்கொள்வேன்'' என்றான்.

''மன்னா கேள்! ஒரு மாவுக்குக் குறைந்த நிலமாயினும்
மகசூல் கண்டு நெல்லை அறுவடை செய்து வந்து; அதனைக்

கவளம் கவளமாக யானைக்கே தருவதாயினும்; நல்ல
கவனமுடன் செயல்பட்டால் அவ்வுணவு பலநாளைக்கு
ஆகிவரும்!

அஃதன்றி;

நிலத்துக்குள் நீயே சென்று மேய்ந்துகொள்க என
நீள் துதிக்கை யானைக்கு உரிமை தந்தால் - பெருங்

கழனியின் நெல்மணிகள் யானையின் வாய்க்கு மட்டுமன்றி
காலுக்கும் தலைநாணி; மிதிபட்டுக் கழனியே படுபாழாகும்!

இரை கொள்ளும் யானைக்கே இவ்விலக்கணம்
பொருந்துமென்றால்
இறை கொள்ளும் அரசுக்கும் இதுவே பொருத்தமன்றே?

தரையிலும் மீன் வாழுமென்று தண்ணீரை விட்டு நீ எடுக்கச்
சொன்னால்;
தடுத்துரைக்க வலுவின்றித் தலையாட்டும் பதுமைகளாய்;

அமைச்சர்களும், அரசுத்துறைப் பொறுப்பாளர்களும்
அமைந்துவிட்ட காரணத்தால் - அறிவில் நீ மெலிந்துவிட்டாய்
மன்னா!

தொடர்கதையாய் இக்கதையே நீண்டுவிட்டால் - துன்பம்
படர்கதையாகித் தொன்மைமிகு சீர்வாய்ந்த சங்கத்திருநாடு
தாழ்ந்துபோகும்!

மக்களை வாட்டி வருத்தி வாங்குகின்ற வரிப்பொருள்தான்
ஆட்சியின் குறியென்றால்
மதயானை புகுந்த வயல்போல யாருக்கும் நலமின்றி
மண்மேடாகும் நாடு! அறிக!'' என்றார்!

''விருந்தெனக் கவிபாடி எனை மேலும் கேளிக்கையில்
வீழ்த்துகின்ற பரிசில் கவிஞர் சிலர் போலன்றி - நீவிர்

மருந்தெனக் கவிதந்து என் மனம் மாற்றிப் போட்டுவிட்டீர்!
திருந்தினேன் இன்று முதல்; உமது திருவடிகள் அரண்மனையில்
பட்டதாலே!''

என்றான் மன்னன்;
வென்றார் புலவர்!

*

* ''காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,
மாநிறைவு இல்லதும், பன்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,

கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போலத்,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே!''

*

(புறநானூறு :பாடல் : 184
பாடியவர் : பிசிராந்தையார்)

பொருள் விளக்கம் :

காய்நெல் = காய்த்த நெல்.
மா = நிலத்தின் அளவுகளில் ஒருவகை. செறு = கழனி.
தமித்து = தனியாக. நந்தும் = தழைக்கும்.
மெல்லியன் கிழவனாகி = அறிவால் வேந்தன் மெலிந்து.
வரிசை அறியாக் கல்லென் சுற்றம் = தரமறியாமல் (அரசன்) விரும்புவதையே தாமும் கூறுகிற ஆரவாரமிகுந்த சுற்றத்தார்.
பரிவுதப = அன்புகெட.
பிண்டம் நச்சின் = பொருளை விரும்பினால். இறை = வரி.

*

பிசிராந்தையார்

2

பேசுமொழி தமிழ்மொழி என்றதாலும்; பேசியவர்
பிசிராந்தைப் பெருமகனர் என்றதாலும்

மாசு மருவின்றி இனி ஆட்சி நடக்குமென
மன்னன் உறுதிமொழி தந்ததோடு

தந்திட்ட மொழி தவருது காத்திடவும் செய்தான்
தரணியிலே தன்புகழ் பூத்திடவும் செய்தான்.

அறிவுடைநம்பிக்கோர் அறிவு விளக்காக அமைந்திட்ட
தெளிவுடைச் செந்தமிழ்ப் பேரொளியாம் பிசிராந்தை;

சோழநாட்டு வேந்தன் கோப்பெருஞ்சோழன்பால்
சொல்லாலே நெய்வதற்கு இயலாத அன்புதனைக்
கொண்டிருந்தார்

கவிபுனையும் ஆற்றல், கற்றுரைப் போற்றுகின்ற பாங்கு,
புவியெங்கும் மெச்சுகின்ற கொடைத் திறம்,

கண்ணிமை போல் நாட்டுக்குக் காவல்,
தண்ணிலவை மிஞ்சுகின்ற தகைசால் உள்ளம்;


கோப்பெருஞ்சோழனிடம் குடிகொண்ட இக்குணங்கள்
குளிர்புனல் இதயக் கவிஞரை ஈர்த்தது மிகவே!

பிறந்த இடமாம் பிசிர் எனும் ஊரில் - நிழல்
அடர்ந்த தோப்பில் நெறியுடைக் கவிஞர் ஒருநாள்;

ஆய்வுக்குரிய பல்பொருள் குறித்து - சிந்தனை
அசைபோட்டவாறு, ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது அன்னச் சேவல் ஒன்று இறக்கைகள் விரித்து
ஆகாயவெளியிற் பறந்து செல்வதைக் கண்டார் புலவர்!

ஆருயிர் நண்பன் சோழனைக்குறித்துப் பாடலொன்று;
யாத்திடும் ஆசை நிறைவேற வேண்டுமென்று,



அன்னச்சேவலே மையமாய் வைத்து - அழகுறப்பாடல்
கன்னல் தமிழில் கற்பனையூற்றாய் எழுதினர் புலவர்!

''அன்னச் சேவலே! அன்னச் சேவலே!'' என அழைத்து
இன்னலுற்றுள்ள தன் நெஞ்சைத் திறந்து காட்டி,

மன்னவன் பெருங்கோ கிள்ளியெனும் கோப்பெருஞ்சோழனை
இன்னமும் காணும் வாய்ப்பினைப் பெறவில்லையே யென்ற

மனப்புயல் ஒருபுறம், அடக்கிக்கொண்டு - அவன்
மாப்புகழ்பற்றி எடுத்துரைத்தார்!

கோக்காமல் முத்துக்கள் மாலையாவதில்லை - ஆனால்
பார்க்காமலே சோழனும் புலவரும் நட்பின் ஆரமாய்த் திகழ

தமிழே மணியாய் - தமிழ் உணர்வே இழையாய் ஆனதுவாம்!
தடந்தோள் சோழனின் கொடையும் அன்பும் பாட்டின் கருவாய்
அமைந்ததுவாம்!

''அன்னச்சேவலே! அன்னச்சேவலே! நீயோ
கன்னிக் குமரியின் முனையிலேயிருந்து

அயிரைமீனைக் கொத்திய அலகுடன் - வெகு
உயரம் விண்ணில் பறந்தவாறு,

பனிமலை நிறைந்த வடக்கு திசைக்குப்
பயணம் செய்கிறாய்; நின் பயணம் வெல்க!

கடக்கும் வழியில் என் கண்மணிச்சேவலே! - பகை
அடக்கும் சோழன் தலைநகர் உளது!

கோழியூர் எனப்படும் உறையூர் நகரே -எனது
கோப்பெருஞ்சோழனுக்குரிய தலைநகர்!

மேழிச்செல்வம் கோழைபடாது எனும் கொள்கையுடனே
மேன்மையாய் நாட்டைக் காக்கும் மன்னவன்!

வலக்கரம் வழங்குவது இடக்கரம் அறியாமல்
வழங்கிடும் தென்னவன்!

வழியில் நீயும் நின் பெடையுடன் சென்றால் - சோழன்
விழியில் அன்பின் ஒளியினைக் காண்பாய்!

இடையில் எவரும் தடுத்து நிறுத்தினால்
பெடையுடன் நீயும் திரும்பிடல் வேண்டாம்!

இறைவனும் சோழன் செவியில் விழுமாறு
உறையூர்க் காவலர்பால் உரக்கக் கூறிடு!

ஆந்தையார் எனும் புலவர் வாழ் பிசிர் எனும் ஊரைச்
சார்ந்தோர் நாங்கள் எனச் சாற்றுவாயாகில்;

அரசனே ஓடிவந்துமை வரவேற்று வாழ்த்தி
அணிமணி பலவும் நின் பேடைக் களிப்பான்!

ஏனெனில் அத்துணை நட்பு அவனுக்கென்னிடம் உண்டு
தேன் எனில் தெவிட்டிவிடும்; இதுவோ எம்
இருவரிடை என்றுமே தெவிட்டாத நட்பு.''

*

* ''அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை அளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்
மையல் மாலை யாம் கையறுபு இனையக்,
குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி,
வடமலைப் பெயர்குவை ஆயின், இடையது
சோழநன் னாட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக், குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்கு, எம்
பெருங்கோக்கிள்ளி கேட்க, 'இரும்பிசிர்
ஆந்தை அடியுறை' எனினே, மாண்ட நின்
இன்புறு பேடை அணியத், தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே - ''

*

(புறநானூறு : பாடல் : 67
பாடியவர் : பிசிராந்தையார்)

பொருள் விளக்கம் :

ஆடுகொள் வென்றி அடுபோர் = கொன்று குவிக்கும் போர்க் களத்தில் வெற்றிவாகை சூடுகிற.
கையறுபு இனைய = செயலற்று வருந்திட.
அயிரை = ஒருவகை மீன்.
குறும்பறை = பேடையெனப்படும் பெண்பறவை.
மாண்ட = மாட்சிமையுடைய.
நன்கலம் = அணிகலன்.

*

புசாந்தையார் 3

ஆந்தையார் சொற்கேட்டு அன்னச் சேவலார் - சோழ
வேந்தனிருக்குமிடம் சென்றுரோ இல்லையோ;

ஆருயிர் நண்பன் சிறப்பைச் செதுக்கிய மனநிறைவுடன்
அன்பு மனைவியிடம் புலவர் அதனைப் பாடிக்காட்டி மகிழ்ந்தார்!

''அன்னச் சேவல் கற்பனை மிக அருமை'' என்றுரைத்தவாறு
அன்னம் படைத்திட்டாள் துணைவி; அவருக்கும்
பேரக்குழந்தைகட்கும்!

''முல்லை வரிசை இரண்டிங்கே சிரிக்கின்ற காட்சி பாராய்''
என்றூர்!
வில்லையொத்த புருவம் விரித்து ''எங்கே?'' எனக் கேட்டாள்
துணைவி!

''பாவையுந்தன் பாலைச் சிரிப்போடு - இதோ
பச்சரிசிச் சோற்றின் சிரிப்பையுந்தான் முல்லையென்றேன்''
என்றூர்!


''பார்த்துப் பேசுங்கள் கொஞ்சம்; பக்கத்தில் பேரக்
குழந்தைகள்'' என்றுள்! ''நமது மகன்;
வார்த்தெடுத்த வைரச்சிலைகளுக்கு இம்மொழி புரிய வயது
போதாது!

வளர்ந்த மகன், மனைவியுடன் வயலுக்குச் சென்றுளான்
- அவர்கள்
வருவதற்கு நேரமாகும்; அஞ்சாதே!'' என்றூர்.

''வந்துவிடுவார் இப்போது கொஞ்சாதீர்'' என எச்சரித்தாள்!
- உடன்
வாய் மூடிக்கொண்டார் புலவர்; அவள் வடித்திட்ட சோற்றுலே!
- அது

போய்த் தொண்டையிலே அடைத்ததாலே
புரையேறிப் புலவர் தவித்தார்!

தையலோ தாவிப்பாய்ந்து கணவன் தலையிலே ஒரு
தட்டுத்தட்டிக்



கையினுல் நெஞ்சைத் தடவிக் கொடுத்தபோது தழுவினுர்;
நழுவி விட்டாள்!

கலகலவென ஒலிக்கின்ற சதங்கைபோலக் காதல் முதியோர்
களிப்பு மிகக் கொண்டவாறு சிரித்துவிட்டார்!

கரும்பின் அடிப்பாக இனிப்பைப்போல் மழலை கொட்டி
- பிஞ்சுக்
கைகளையே தட்டிக்கொண்டு பேரன் பேர்த்தி சிரிக்கலுற்ருர்!

மடையுடைத்தாற்போல் பொழிந்த மகிழ்ச்சிக்குத் திடுமென
தடைவிதித்தாற் போல் செவியில் விழுந்தது ஒரு செந்தழல்
செய்தி!

உறையூர் வேந்தன் கோப்பெருஞ்சோழனை எதிர்த்து - அவன்
உயிராய்ப் போற்றிய மைந்தர்கள் படை எடுத்தனர் என்றும்,

கிள்ளைமொழித் தமிழால் கவிபுனையும் சோழ மன்னவனே
பிள்ளைகளின் செயலால் பெருந்துயரில் ஆழ்ந்திட்டான் என்றும்

வெள்ளை மலர் உள்ளத்தான் வேறு வழியே இன்றி
வீரவாளைக் கரமேந்திக் களம் காண எழுந்திட்டான் என்றும்

தந்தைக்கும் மைந்தர்க்கும் மூண்டுவிட்ட போராட்டம் குறித்த
விந்தைச் செய்தியினைக் கேட்டுப் பிசிராந்தைப் புலவர்

சந்தையில் தொலைத்துவிட்ட பொருளாயிற்றே தமது மகிழ்ச்சி
எனக் கூறி
சிந்தை மிக நொந்து புறப்பட்டார் சோழநாடு!

''தமிழினத்தார் தன்மானம் மிக்குடையார் - பகைவர்க்குத்
தலைதாழ்த்தும் நிலை வந்தால் தயங்காமல் உயிர் துறப்பார்!

இமிழ் கடல் தாண்டியும் புகழ் மணம் பரப்பி - நல்ல
அகில், மிளகு, முத்து வாணிபம் புரிவார்!

இலக்கிய மேதைகள், இனிய நற்கவிஞர்கள்
இயற்கையைப் போற்றுவர், எழில் மாடம் அமைப்பர்!

இனத்தின் மேன்மை ஏட்டில் நாட்டுவர்
இறைமாட்சி தவருது இந்நிலமிசை ஆள்வர்!

கல்தோன்றி மண்தோன்ருப் பழங்காலத்தின்
முன்தோன்றி மூத்த குடிமக்களும் தமிழரே ஆவர்!

எல்லாம் சரிதான்; ஆனல் ஒன்று -
பொல்லா உட்பகைப் புயலில் சிக்கி

கொல்லாமற் கொல்லும் வேற்றுமையென்னும்
குழியினில் வீழ்ந்திடும் குணங்கொண்ட இனமும் தமிழினமே!''

இவ்வாறு எண்ணமிட்டு நடந்திட்ட பிசிராந்தை - சோணாட்டுத்
தகராறு குறித்துத் தகவலறிய நடுவழியில் முற்பட்டார்!

கோப்பெருஞ்சோழன் அமைத்திட்ட ஊர்ப் பொது
மன்றமொன்றில்
கூடியுள்ளனர் அவ்வூர்ச் சான்றோர் எனக் கேள்வியுற்று

வார்த்தையில் அடங்காப் பரபரப்புடனே இதயம் துடிக்கப்
போர்ப்புகை அணைந்ததா என்றறிய அங்கு சென்றார்.

பொத்தியார், பூதநாகனர், நத்தத்தனர் மற்றும்
புல்லாற்றூர் எயிற்றியனர் எனும் புலவர் பெருமக்கள்

மன்றத்திலிருந்து குதித்தோடி வந்து, பிசிராந்தையாரை
மார்புறத் தழுவி வருவீர் வருவீர் என வாழ்த்திக் களித்தனர்!

''அங்கம் பதறி அகம் பதறி வந்துள்ளேன் அய்யா
சிங்கத்துக்கும் அதன் குட்டிகட்கும் மூண்ட போர்

என்ன ஆயிற்று?'' என விஞக்குறியாய் நின்றார் புலவர்!
''ஏதொன்றும் தீங்காய் முடிந்திடவில்லை கேளீர்!''

இன்னலொன்று தோன்றிற்று அதனை இந்தப் பெருமகன்
மின்னலெனப் பாய்ந்து சென்று தடுத்துவிட்டார்

குஞ்சுகள் மிதிப்பதாலே கோழியும் பதைக்கலாமோ எனக்கேட்டு
கொஞ்சுதமிழ்க் கவிதையாலே கோப்பெருஞ்சோழனையே
குளிர்வித்துப்

போர் நிறுத்தம் செய்வதற்குக் காரணமான
புல்லாற்றூர் எயிற்றியனர் இவர்தான்'' என்று

பொத்தியார் அறிமுகம் செய்துவைத்தார்!
பூரிப்பால் பிசிராந்தை துள்ளலானார் - பின்னர்;

நாத் திறம் கொண்ட நற்புலவர் கூட்டமதில்
பாத் திறம் காட்டிப் பலரும் கருத்துக்கனி உதிர்த்திட்டார்.

ஒரு கவிஞர் பிசிராந்தையாரை நோக்கி ''புலவீர்!
கருமை நிறம் மாறுத தலைமுடியும் தாடியும்; உமக்கு

அகவை அறுபதுக்கு மேலாகியும் கூட அப்படியே
அணுக்கூட நரைக்காமல் இருப்பது எப்படியோ?''
எனக்கேட்டார்!

* ''விளக்குகிறேன் காரணத்தைக் கேட்பீர் அய்யா!
- குடும்ப
விளக்காக வாய்த்துள்ளார் மனைவி எனக்கு!

விளைவுதனைக் கழனியிலே பெருக்குகின்ற மகளே
ஒருசிறிதும்
வளைவுதனைக் கொள்கையாகக் கொள்ளாத காளை!

அளவறிந்து அவன் பெற்றான் இருபிள்ளை; இரண்டுமே
அறிவார்ந்த அழகு தமிழ் மழலைக்கிள்ளை!
வளமான நெஞ்சுக்குள் வாஞ்சை நிறைத்து - எனது
உளமறிந்து செயல்புரியும் ஊழியரும் உண்டெனக்கு!

சிலந்தி வலை நூலினும் மெல்லிய சிறு தவறுகூட
செங்கோலின் மீது படரக்கூடாதெனச் சூளுரைத்துச்

சீலமுடன் நடக்கின்ற ஆட்சியினைப் பெற்றுள்ள
சிறப்பும் உண்டு எந்நாட்டு மக்களுக்கு!

அடியேன் பிறந்த அழகுமிகு சிற்றூர் பிசிர் எனும்
பதியில்
ஆன்றோரும் சான்றோரும் பெரும்பாலும்
நிறைந்துள்ளார்!

இத்தனை பெருமையும் ஒருசேரப் பெற்ற மகிழ்வால்
முத்தனைய நிறங்காட்டி என் முடியினிலே நரைதிரை
எதுவும்

முற்றுகையிடுவதற்கு முனையவில்லை - முடியவில்லை!
கற்றறிவாளரே! கவலையில்லா வாழ்க்கையினுள்

கிடைத்திட்ட பலன் இது''வென்று பகன்றிட்ட
பாவலரின் இதயம்
உடைத்திட்ட செய்தியொன்று அப்போது வந்ததங்கே!

கிழக்குதித்த சூரியன்போல் நாடாண்ட சோழ மன்னன்;
தனக்குதித்த பிள்ளைகளின் எதிர்ப்பாலே மனமுடைந்து

வடக்கிருந்து உயிர் விடுவதற்குச் சென்றான் என்று
மடல்கத்தி போல ஓலையொன்றைக் கண்டார் கவிஞர்!

''இக்கணமே புறப்பட்டு இல்லம் சென்று விடைபெற்றுத்
திரும்புகின்றேன்.
இலக்கணமாய் நட்புக்கு வாழ்ந்த நாங்கள் இறப்புலகில்
பிரிவதில்லை!

வடக்கிருக்கச் சென்றுள்ள சோழனிடம் கூறிடுவீர்! - அவன்
அருகிருக்கப் பிசிராந்தை விரைவில் வருவானென்று!''

இதைச் சொல்லிப் புலவர்ஏறு இலையினின்றுதிர் பனிநீர்போல
இமை இரண்டில் விழிநீர் ததும்பப்

பதைப்புடனே பாண்டிநாடு பயணமானார்;
பாசமிகு மனைவிமக்கள் பேரன் பேர்த்தியிடம்
விடைபெறுவதற்கே!

*

*** ''யாண்டு பலவாக நரையில ஆகுதல்**
யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும்; அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.''

*

(புறநானூறு : பாடல் : 191
பாடியவர் : பிசிராந்தையார்)

பொருள் விளக்கம் :

யாண்டு = வயதைக் குறிக்கும் ஆண்டு.
மாண்ட = மாட்சிமையுள்ள.
நிரம்பினர் = அறிவு நிரம்ப உடையார். இளையர் = ஊழியர்.
அதன்தலை = அதற்கும் மேலாக.

*



வாழ்க்கைக்கு ஒரு முடிவுரை எழுதிட முனைவோர்
வடக்கு திசை நோக்கி உண்ணுநோன்பிருந்து உயிர் விடுவர்!

வடக்கிருத்தல் எனும் பழங்கால நிகழ்வை - தமிழர்
வரலாற்று இலக்கியம் ஒரு வழக்கென உரைக்கும்!

ஆண்டநாள் ஆண்ட செந்தமிழ்ச் சோழன் - மைந்தரால்
மூண்ட போரினையெண்ணி மூடுபனி நெஞ்சுகொண்டான்!

வடக்கிருந்து மாண்டிடவே மன்னன் விழைந்தான் என்றும்
- மன
வாட்டம் அறவே தீர அதுதான் மார்க்கமெனத் தேர்ந்தான்
என்றும்

தமிழகம் வாழ்புலவர் சிலர் கேள்வியுற்று - தங்களுயிர்
அமிழ்தல்ல என்றுரைத்து அவனோடு சென்றமர்ந்தார்!


வெல்லமெனக் கருதாமல் வேந்தன் பிரிவதற்குத் துணிந்த உயிர்
மெல்லக் கரைந்து மேனிமுற்றும் தளர்ந்தபோது - சிலர்;

கோப்பெருஞ்சோழப் பெருமகனை நோக்கி; ''மன்னர்மன்னே!
பாப்புனையும் பைந்தமிழ்ப் பேராசான் பிசிராந்தையார்,

காணுமலே அகம்கோணுத நட்புஉன்பால் கொண்டவர் என்பாய்
- உன்
வாணுளும் முடிவடையப் போகின்றதே; இன்னும் அவர்
வாராத காரணம்தான் என்ன?'' என்றூர்!

''அருகிருந்து உயிர்விடுவதாய்ச் சூளுரைத்துப் போனபோது
- திரும்ப
வருகின்றேன் என்றுரைத்த வார்த்தையிலே வாய்மையிலையோ!''
என்ற கேலியும் ஒலித்ததாங்கே!

சாவதற்குவந்த இடத்திலும் நண்பரது சான்றுண்மை குறித்துச்
சந்தேகம் எழுப்பியவர்பால் மன்னன் சீற்றம் கொண்டான்.



''கோல்கொண்டொருவன் கொலுவினிலே வீற்றிருக்கும்போது
கோடிசூரிய ஒளியை அவன் முகத்தினிலே காணுகிறேன்
என்றும்,

ஆல்போல் தழைத்து அருகுபோல் அவளுட்சி வேர் விடுக
என்றும்
பால்போல் தேன்போல் பருகத் தெவிட்டாப் பாராட்டு
வாழ்த்தெல்லாம் பொழிந்திடுவர்,

சூல்கொண்ட துன்பப்புயல் அவன் வாழ்வில் மேவிடுமாயின்
வேல்கொண்டே இதயத்தில் குத்திவிட்டு விலகியே ஓடிடுவர்!

கயவராய், கடையராய், காரிருள் அகம்படைத்த மனிதராய்க்
கருதி, அவர் நட்பைக் கால் தூசிக்கும் கீழாக ஒதுக்கிடலாம்!

குயவர் செய் மற்பாண்டமேனும் உடைந்தபின் சிறு பயன்
தருமெனலாம்!
குள்ளநரிக் குணம் கொண்டோர் நட்பாலே பெருந் தீமையே
கொடிகட்டிப் பறக்குமென்பேன்!

உள்ளமெலாம் சுயநலத்துச் சுரங்கமாக அமைந்ததாலே
பள்ளம் போய் வீழ்கின்ற தண்ணீர்போல் ஆகிவிடும் பலர்
நட்பு!

பாண்டிநாட்டுப் பழகுதமிழ்ச் சிற்றூராம் பிசிர் எனும் பதியில்
தோண்டியெடுத்திட்ட தங்கமாய்த் தோன்றிய ஆந்தையார்
நட்போ;

வாழுங்கால் வந்து தலைகாட்டி ஆடாவிடினும்
தாழுங்கால் தயங்காது ஓடிவந்து துணைநிற்கும் தூயநட்பு!

ஆன்றோரே! இதனை அறிவீர்!'' என்றே விடையிறுத்த மன்னன்;
ஆவிதனை அடுத்தொருநாள் விடுத்தே நடுகல்லாய்
ஆகிவிட்டான்!

தாமதமாய் வந்தார் எனினும் பிசிராந்தை; ஆங்கு
தமது நண்பரது பக்கத்தில் வடக்கிருந்து உயிர்நீத்த நிகழ்ச்சியினை;

கண்ணகனார் எனும் புலவர், கண்ணீரை மலராக்கி
கவிதையாம் கவின்மாலையொன்று தொடுத்து அந்த
நடுகற்களுக்கே சூட்டுகின்றார்!

''பொன்னும் முத்தும் பவளமும் மணியும்
ஒன்றுக்கொன்று தொலைவில் விளையினும் - அவற்றை
மின்னும் அணியாய்க் கோத்திடும்போது

பின்னிப் பிணைந்திடும் நெருக்கம் போலவே

மன்னன் சோழன் உறையூர் தனிலும்
மாகவியாம் பிசிராந்தை பாண்டிய மண்ணிலும்

பசும் பொன்னைப் போல் முத்தைப் போல்
பல கல் தொலைவினிலே தனித்தனி பிறந்தார் எனினும்,

அணியாக ஆனபின்பு அருகருகே இருக்கின்ற மணிகள் போல
- என்றும்
அணையாத நட்புக்கோர் விளக்கொளியாய் நடு கல்லாய்
அமைந்துவிட்டார்!

சான்றோர் என்றுமே சான்றோர் அருகிருப்பர்...
சான்றாண்மை இல்லாதார், வரலாற்றில் சருகாகி உதிர்ந்து
போவார்!''

கண்ணகனார் எழுதிவைத்த கவிதை ஏடு - சோழ
மன்னனுக்கும் பிசிராந்தைக் கவிஞருக்கு மட்டுமல்ல;

எண்ணமெலாம் தூய்மையாக நட்புக்கொள்வோர் அனைவருக்கும்
- தேன்
கிண்ணமாகும்! தெவிட்டாத தெள்ளமுதமாகுமன்றோ?

*

* ''தென்னம் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர்ஓம் புநனே;
செல்வக்காலை நிற்பினும்,
அல்லற்காலை நில்லலன் மன்னே.''

(புறநானூறு : பாடல் : 215
பாடியவர் : கோப்பெருஞ்சோழன்)

* ''பொன்னும், துகிரும், முத்தும், மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்,
இடைபடச் சேய ஆயினும், தொடைபுணர்ந்து,
அருவிலை நன்கலம் அமைக்கும்காலை,
ஒருவழித் தோன்றியாங்கு - என்றும் சான்றோர்
சான்றோர் பாலர்ஆப;
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.''

*

(புறநானூறு : பாடல் : 218
பாடியவர் : கண்ணகனார்)

பொருள் விளக்கம் :

தென்னம்பொருப்பன் = தென்திசைப் பொதிகைமலையையுடைய பாண்டியநாட்டு மன்னன்.
என் உயிர்ஓம் புநன் = என் உயிருக்குத் துணை நிற்கும் நண்பன்.
செல்வக்காலை = வாழும் காலத்து.
அல்லற்காலை = இன்னல் வந்த காலத்து.
நில்லலன் = நிற்காமல் வருவான்.

இடைபடச் சேயவாயினும் = ஒன்றுக்கொன்று இடையே தொலைவிலிருப்பினும்.
தொடைபுணர்ந்து = (அணியாக) கோக்கப்பட்டு.
அருவிலை நன்கலம் = அரியவிலையுடைய அணிகலன்.
பாலர்ஆப = பக்கத்தவர் ஆவர்.
சாலார் = சான்றோரல்லாதார்.

*

உலகக் களத்து இரும்பும் ஒரு துளி நீரும்!

சின்ன மருது, பெரிய மருது என சிவகெங்கைச் சீமை ஆண்டு;
சிவந்தமண்ணின் வரலாற்றில் செங்குருதி மலராய்ப் பூத்த
சிங்கநெஞ்ச மாவீரர் இருவருக்கும் சிலைகள் இருக்கின்ற,
காளையார்கோயிலுக்குப் பழங்காலத் தமிழகத்தில்;
'கானப்பேர்' என்று பெயர் உண்டு; இன்றும் அது,
மானப்போர் தொடுக்கின்ற மறவர்பூமி - அங்கு;
வேங்கை மார்பன் எனும் குறுநில வேல்வேந்தன்
ஓங்குபுகழ் கொண்ட அரண் ஒன்று அமைத்து - அதனை
வெற்றி கொள்ள யாரால் முடியுமென அறைகூவல்
விடுத்திருந்தான்.
அணுவைத் துளைத்து அதற்குள் நுழையவும் கூடும் - ஆனால் அந்த
அரணுக்குள் நுழைதல் இயலாதென்று
அடலேறு வீரரெல்லாம் திகைத்து நின்றார்!

அப்போது பாண்டி நாட்டை ஆண்ட மன்னன்
உக்கிரப்பெருவழுதி;

அரிமாதான் போர்க்களத்தில்!
ஆனைகளைத் தூக்கிப் பந்தாடும் பலமுடையான்!
அவன் வாளுக்குத் தப்பிப் பகைவர் உயிர் வாழ்தல் அரிதரிது!
ஆற்றல் பெருக்குடனே அறிவார்ந்த கலையுள்ளம் கொண்டதாலே;
அகநானூறு பாடல்களைத் தொகுத்தளித்துப் பெருமை பெற்றான்.
அணையாச் சுடர் விளக்காம் திருக்குறளின் நலம்பாடும்
அரங்கேற்றுவிழா அவன் முன்னிலையில்தான் நடந்ததென்பார்!
ஔவை ஒருநாள்; அவனும், சோழன் பெருநற்கிள்ளியும்
அவர்களுடன் சேரமான் மாரிவெண்கோவும் வீற்றிருந்த காட்சி
கண்டு,

அருந்தமிழ்க் கவியாரம் தொடுத்துச் சூட்டி,
அங்கு மூவேந்தர் ஒற்றுமைக்கு வாழ்த்துரைத்தாள்.

கயற்கொடி கொண்ட மன்னன் உக்கிரப்பெருவழுதி
கயல்விழி மங்கையொருத்திக்கும் காதலனும் - அந்தக்
காதற்கிழத்தியுடன் ஒருநாள் கட்டிலறைக் காவியம் படித்தபோது;

அவள்

கடைவிழியோரம் விஞக்குறியைத் தொங்கவிட்டு,
''கண்ணுளா! எனக்கோர் ஐயம் போக்கிடுக'' என்றுள்.

''என்ன கண்ணே; உனக்கு ஐயம்? அதோ நீந்துகின்ற
அன்னத்தின் தூவிபோல் மென்மை உனக்கு
எப்படி வந்ததென்று என்னைக் கேட்கின்றுயா? அல்லது
வண்டுகள் கொண்டுவந்து கொட்டர்மலே உன் வாயிதழில்
மொண்டு குடிக்கின்றேனே தேன்; அது
வந்தவிதம் தெரிந்துகொள்ள விரும்புகின்றுயா?

செந்தாமரையைப் பார்த்துச் செய்யப்பட்டது உன் முகமா?
அல்லது
செல்வமே! உன் முகம் பார்த்துத்தான் செந்தாமரை
உருவானதோ என்ற ஐயமா?

செண்டு இரண்டும் தாங்காமல் - குளத்தில்
கெண்டைக்குப் போட்ட தூண்டிலில் நெளிகின்ற புழுப்போல
நெளியும் இடை நிலைக்குமா? அல்லது
ஒளியுமிழும் உன் தந்தத்தொடைகள் அதனைத் தூக்கி நிறுத்துமா?

உன் மனத்தில்


விளைந்த ஐயமெல்லாம் இதுதானே?'' எனக்கேட்ட
வழுதியின்முன்;
வளைந்த கதிர்போல தலை நாணிக்கொண்டு அவள்;
''என்மீது கவிதையெழுதிப் பரிசுபெறக் கேள்வி எழுப்பவில்லை
நான்!

''எயில்''என்றுல் இன்பத்தமிழில் பொருள் என்ன?
சொல்லுங்கள்'' என்றுள்!

''அட, மடமயிலே! இது தெரியாதா?
அயலார் படை தடுக்க;
அரண்கட்டுகின்றுமே தலைநகரைச் சுற்றி -
அதற்குப் பெயர்தான் ''எயில்'' என்றுன் மன்னன்!

''எனக்கும் தெரியும் அது; ஆனலும் ஒன்று!
எவராலும் உடைக்க முடியாத ''எயில்'' ஒன்று இருக்கிறதாம்;
- அதனை

இவராலும் நெருங்கொணுது என ஒரு வேந்தன்,
இறுமாப்பு துள்ளப் பேசுவதை அறியீரோ?'' எனக்கேட்டு
''**இவராலும்**'' என்றபோது; வழுதியைச் சுட்டிக்காட்டிக்
கட்டிக்கொண்டாள்!



''காதுவழி எனக்கும் எட்டியது அச்செய்தி
கானப்பேர் எனும் நகரில் கட்டியதாம் அந்த அரண்! - நமது
அவைப்புலவர் ஐயூர் மூலங்கிழார் அதுகுறித்து
அரியதோர் வர்ணனையே செய்துள்ளார்!
அதை நான் உனக்குச் சொல்லுகின்றேன் கேள்;
அரண்களின் வரிசையில் அதற்கு முதலிடமே பொருந்தும்!
நிலத்தின் ஆழத்தையும் கடந்த நெடியதோர் அகழியும்,
நீலவானை நிமிர்ந்து தொடுகின்ற நிலையில் உயர்மதிலும்,
அவ்வானில்
நிறைந்து கிடக்கும் விண்மீன்கள் போன்று
விரைந்து செயலாற்றும் ஏவறை உச்சியும்,
கதிரவனின் ஒளிபுகவும் இடமின்றி மரம் செறிந்த காவற்காடும்,
கணக்கிலாச் சிறுசிறு துணை அரண்களும் சூழ்ந்ததே
களிறுகள் ஆயிரம் முட்டினும் அசைந்திடாத கானப்பேர் எயில்!

அதனை நம் புலவர்;

கவித் தமிழால் கூறக் கேட்டு நான் பலமுறையும்
களிப்புற்றிருக்கின்றேன்'' என்றான் மன்னன்!

''பாண்டியர்க்கு நெடுந்தூரம் இருக்கின்ற பகையெல்லாம்
தெரிகிறது;
கூண்டிலிட்ட புலிபோல எதிரிகளைக் கொண்டு வருகின்றீர்;
ஆயினும்

பக்கத்தில் கானப்பேர் எனும் நகரில் அரண் அமைத்து
படைகொண்டு எவராலும் நெருங்கமுடியாதென்று
உடைவாளை ஓங்கிக்கொண்டு
ஊர் அதிர ஒலிக்கின்றான், வேங்கைமார்பன்!
நமது வீரத்தை மறைமுகமாய்ப் பழித்தபின்னும்
நமக்கென்ன என்றிருத்தல் நாணத்தகும் செயலன்றே?
- என் இதய
ஆழத்தின் அடியிற் கிடந்த பலநாள்
ஐயத்தை இன்றிழுத்துப் போட்டுவிட்டேன்; மதங்கொண்ட
வேழத்தைக்கூட எதிர்த்து மத்தகத்தைப் பிளந்தெறியும்
மன்னருக்கு;
வேங்கைமார்பன் கட்டியுள்ள மதில் சுவரென்ன; விந்திய மலைத்
தொடரா? அவன்
தோண்டியுள்ள அகழியோர் ஆழக்கடலாயினும்; என்

பாண்டியர்க்குத் தாண்டும் தொலைவுதானே!

பின் எதற்காக

அறைகூவல் விடுக்கின்ற வேங்கைமார்பன்
ஆணவங்கண்டும் அடங்கிக் கிடக்கவேண்டும்?
அரசர் இந்த ஐயத்தைப் போக்கிடுக - அதன்பிறகு
சரசமாடிடலாம்'' என ஊடினாள்! - பாண்டியனே,
எட்டிச் செல்ல முயன்றவளைக்
கட்டியணைத்துக் கால்பின்னி நெய்தவாறு,
''காலைமலரட்டும் கானப்பேர் எயில் நோக்கிக்
காலாட் களிறு புரவியுடன் தேர்ப்படை புறப்படக்
கட்டளையிடுகின்றேன்; கவலையைவிடு! இப்போது தடுக்கின்ற
கையினை எடு'' என்றான் - எடுத்துவிட்டாள்!

கண்ணிமைக்கும் பொழுதுக்குள் ஊடல் பறந்தது -
கதிர்விரியும் நேரம் வரை கூடல் தொடர்ந்தது!

மறுநாள்

வாக்குறுதி தந்தவாறு பாண்டிமாதேவியின்
நோக்கு நிறைவேறக் கிளம்பியது படைவரிசை!
கானப்பேர்எயில் என்னும் காவல்நிறை அரணை மோதி,
கடுமைப்போர் நடத்திப்பின்னர் முற்றுகையை முடித்துவிட்டான்.

உக்கிரப்பெருவழுதியின் உறுதிமிகு தாக்குதலால்
உருக்குலைந்து போயிற்று வேங்கைமார்பன் கோட்டைக்காவல்!

நெற்றித் திலகமிட்டு வழியனுப்பிவைத்த அரசிக்கு,
வெற்றிச்சேதி சொல்வதற்குப் பாண்டிமன்னன் திரும்பிவந்தான்.
குத்துண்டு புண்பட்ட கோவேந்தன் மார்பகத்தில்
ஒத்தடங்கள் ஓய்வின்றிக் கொடுத்திட்டாள்; உடல் மேட்டால்!
ரத்தம் கசிந்துருகும் விழுப்புண்கள் எல்லாம் - அவள்
முத்தங்கள் பெற்று முழுமையாக ஆறினவே!

சிலநாள் சென்று

ஐயூர் மூலங்கிழார் பாண்டியன் அவைக்கு வந்தார்.
அரசே! மதியாத பகைவரெல்லாம் உமை மதித்துப் புகழ்கின்ற
பெருமை என்னே!
களம் சென்றுல் வெற்றியன்றி வேறொன்று அறியாத வேந்தே!
இன்றுமுதல் உம்மை;
''கானப்பேர்எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி'' என
காவியங்கள் பாடட்டும்! கவியரங்கம் புகழட்டும்!
கதிர் உள்ளளவும் அப்பெயரே நிலைக்கட்டும்,'' எனப்புகன்றார்.
''நன்றி புலவரே!'' எனப் பணிந்த வேந்தன்; அவரைப்பார்த்து
- இப்போரில்

குன்றிவிட்ட வேங்கைமார்பன், கோபக்கனல் உமிழ
கானப்பேர்எயிலை மீட்பதற்கு மீண்டும்
களம் அமைக்கப்போகின்றனை? எனக்கேட்டான்.
அதற்கு ஐயூர் மூலங்கிழார் சொன்ன பதில்
அரியதோர் உவமையினை அன்னைத்தமிழுக்கு வழங்கியது!

அஃதென்ன?

உலைத்தீயில் கொல்லன் காய்ச்சிடும் இரும்பில்
ஒரு துளி நீர் பட்டால் அந்நீரை மீட்டிடல் முடியுமா?

(அவ்வாறே)

உக்கிரப் பெருவழுதி வென்றுவிட்ட கானப்பேர்எயிலும்
உலைக்களத்து இரும்பு உறிஞ்சிய நீர்த்துளியாய் ஆனது என்று
உமது பெருமையைப் பேசி - வேங்கைமார்பன்
உளம் நொந்து நிற்கின்றனை'' என்றார்! - அந்தத்

தங்கப் புலவர் தந்த உவமை அழகுக்குத்
தக்க பரிசு என்ன தருவதென்று புரியாமல்
தவித்திருப்பான் பாண்டியன் என்கின்றேன் நான்;
தவறுண்டா என் கருத்தில்?
தமிழின் சுவை அறிந்தோரே! கூறிடுவீர்!

*

* **''புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்**
நிலவரை இறந்த குண்டுகண் அகழி,
வான்தோய் வன்ன புரிசை, விசும்பின்
மீன்பூத் தன்ன உருவ ஞாயில்,
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை,

அருங் குறும்பு உடுத்த கானப்பேர் எயில்,
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்புஉண் நீரினும், மீட்டற்கு அரிதுஎன,
வேங்கை மார்பன் இரங்க, வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்

பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே!
இகழுநர் இசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்க நின்வேலே!''

*

(புறநானூறு : பாடல் : 21
பாடியவர் : ஐயூர் மூலங்கிழார்)

பொருள் விளக்கம் :

புலவரை இறந்த = பாடுவோரின் அறிவின் எல்லையைக் கடந்த.
நிலவரை = பூமியின் ஆழம். புரிசை = மதில்.
ஞாயில் = கோட்டையின் உச்சியில் உள்ள ஏவறை.
மிளை = காவற்காடு. குறும்பு = சிறிய அரண். ஆடுகொள = வெற்றிகொள்ள.

*

முக்கத்தில் கண்ட நயம்!

வெல்லம்போல் பரத்தையின் உடலைச் சுவைத்து;
இல்லம் ஒன்றிருப்பதையும்; அங்கே தனக்காகக்

கள்ளமிலாப் பெண்டொருத்தி கண்ணீர் உகுத்துக்
கவலை மிகக் கொண்டிளைத்துத் தேய்வதையும்;

எண்ணிப்பார்த்திடவே இமைப்பொழுது நேரமின்றி
கண்ணிக்குள் அகப்பட்ட பறவைபோல் காளையவன்

கலவியின்பக் கலையனைத்தும் கண்டு கண்டு;
காமத்துப்பால் பருகிக்கிடந்தான் மொண்டு மொண்டு!

இன்பத்துப்பாலுக்கென இன்னும் சில குறள் எழுத
இனியொரு முறை வள்ளுவனும் பிறந்து வரவேண்டுமென;

இனிதினிதாய்ப் புதிது புதிதாய் இருவரும் புதையல் தோண்டி
எடுத்தனர்!

ஈருடல் ஒருடலாய் இணைந்து புரண்டனர்; இதழால் நனைந்து;
பிணைந்து உருண்டனர்!

தெவிட்டியதோ தேன்? அல்லால்; தெளிந்ததுவோ இதயவான்?
தேரேறிச் சென்றுவிட்டான் தன் தேவியினைத் தேற்றி வாழ!


இழந்துவிட்ட பொருளொன்று வலியவந்து;
இருகையில் ஏறிக்கொண்ட விந்தைபோல,

மறந்துவிட்டான் என்றிருந்த மணவாளன் மீண்டும்
திறந்துவிட்ட கூண்டுக்கிளிபோல திரும்பி வந்ததாலே;

பறந்துவிட்டதடி கவலையென்று தோழியின் தோள் பற்றிப்
பத்தினியாள் மகிழ்ச்சியினுல் விழுந்திடாமல் சாய்ந்து நின்றுள்!

தலைவியின் வீடு சேர்ந்த தலைவனை மீண்டும் காணத்
தவித்திட்ட பரத்தையோ; தந்திரமொன்று செய்தாள்!

தலைவியின் தோழியினை வீட்டுக்கழைத்துத்
தலைவனுடன் ஒட்டியுறவாடித் தான் வாழ்ந்தபோது;



நடந்த கதையொன்றைச் சொல்லி அந்த
நகைச்சுவைத் துணுக்காகத் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்!

''தோழி நீயொன்று அறிவாயா? தோகையெனது
தோள்தொத்திக் காளையவன் சுகித்திருந்தபோது;

கொக்கின் மூக்கைப்போல் நீண்டிருக்கும்
குளத்து ஆம்பல் மலர் குலுங்கும் ஊரான்;

கோபத்தில் ஒருநாள் கோதையென் மீது பாய்ந்து
கூந்தல்தனைப் பற்றியிழுத்ததோடமையாமல்;

கைவளையலையும் கழற்றுதற்கு முனைந்து;
கடுகடுத்த முகத்துடனே குதித்தோடி வந்தான்!

ஆத்திரம் கொள்ளாதே தலைவா! பொறுத்திடுக!
அமைதி நீ கொள்ளாவிடில்; இக்கணமே இச்செய்தியினை;

உன் அருமைமிகு மனைவிக்கு அறிவிப்பேன் என நான்
உரைத்ததுதான் தாமதம்; உடன் என்ன ஆனன் தலைவன்
என்று;

உன்னிடம் சொல்வதற்கே இயலாமல் நான்
ஒருத்தி மட்டும் தனியாகச் சிரிக்கின்றேன் ஓயாமல்!'' என்றாள்!

''அப்படியென்னதான் நடந்தது? அதை நானறியச்
செப்புக பெண்ணே''யென்றாள், செந்தாழம்பூத் தோழி!

''ஆநிரை கவர்வதற்கு வில்லேந்திப் போர்புரிந்து
ஆர்த்தெழுந்த பகைவர்களை வென்றுகாட்டி,

மானமுரசு கொட்டி வாழுகின்ற நமது மன்னன்
மலையமானின் அத்தாணி மண்டபத்தில்;

வேற்று நாட்டினின்றும் பரிசில்பெற வந்துள்ள - இசைக்
கூத்தர்கள் கொட்டுகின்ற மத்தளத்தில்

அவர்தம் கைவிரல்கள் பட்டு 'மார்ச்சனை' வைத்தபக்கம்
அதிர்வது போல் அவன் உடல் முழுதும் நடுங்கியது கண்டேன்''
என்றாள்!

இச் செய்தியினைத் தோழி சென்று அவன் இல்லத்தரசியின்
காதில் போட்டுவிட்டாள்;

''சிச்சீ! இவரும் ஒரு மனிதரா?'' என அவன் துணைவி
வெறுப்பாளென்றும்

காய்ச்சிய பால்மீண்டும் காராம் பசுவின் மடி புகுந்தது போல்;
கைவிட்டுச் சென்ற தலைவன்; துணைவியைக் கைவிட்டுத் தன்
கட்டிலறை நாடி ஓடி வருவான் என்றும்;

கணக்கிட்டுக் கொண்டிருந்தாள் அக்கலையழகி; அவள்
கனவு பலித்ததா இல்லையா என்பது பற்றி;

நற்றிணையில் பாடல் இயற்றிய பரணராம்
நற்கவிஞர் சொல்லவேயில்லை; பிறகு நமக்கேன் கவலை?

எனினும்;

''மனைவிக்கு உரைத்திடவா?'' எனக் கேட்டவுடன்
மத்தளத்தைக் கொட்டி முழக்குகையில் - அதன்

'மார்ச்சனை' வைத்த பக்கம் அதிர்வது போல்
மாவீரன் நடுக்கமுற்றான் என்பதில்தான் என்ன நயம்!

* என்ன நயம்!

* **''உள்ளுதொறும் நகுவேன் தோழி வள்ளுகிர்**
மாரிக்கொக்கின் கூரலகு அன்ன
குண்டுநீ ராம்பல் கண்துறை யூரன்
தேங்கம ழைம்பால் பற்றி யென் வயின்
வான்கோல் எல்வளை வெளவிய பூசல்
சினவிய முகத்துச் சினவாது சென்றுநின்
மனையோட்கு உரைப்பல் என்றலின் முனையூர்ப்
பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன் முந்தைப் போரிசைப்
புலம்பிரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ணுர் கண்ணின் அதிரும்
நன்னர் ஆளன் நடுங்கஞர் நிலையே.''

*

(நற்றிணை : பாடல் : 100
பாடியவர் : பரணர்)

பொருள் விளக்கம் :

வள்ளுகிர் மாரி = பெரிய நகம் கொண்ட பறவையினம்.
தேம் கமழ் ஐம்பால் = நெய் மணக்கும் கூந்தல்.
எல்வளை = ஒளியுடைய வளையல். ஒய்யும் = இழுத்து வரும்.
முந்தை = முன். புலம்பிரி = வேற்று நாட்டு. வயிரியர் = கூத்தர்.
மண் ஆர் கண் = மார்ச்சனை எனும் கரிய சாந்து வைத்த பக்கம்.

*



பகைவெல்லச் சென்றிருக்கும் கணவனது
பனைவைர நெஞ்சத்தின் வீரத்தை நினைத்தவாறு

பகல்முழுதும் குடும்பத்துப் பணிமுடித்துச் சற்றுப்
படுத்துறக்கம் கொள்வதற்குச் செல்லும் முன்னர்

பாசமுடன் மகனைக் கூவியழைத்துக் ''கண்ணு!
பாலமுதம் இதோ பருகிட வாடா;'' என்பேன்!

''வரமாட்டேன் போ'' என்று நிலாவெள்ளி ஒளியினிலே
வட்டமிட்டு விளையாட ஓடிடுவான் எதிர்வீட்டுப் பிள்ளையுடன்!

வந்துவிடும் எனக்குக் கோபம் — கோலொன்றை எடுத்தோங்கி
''வரமாட்டேன் என்று சொன்னாய்? இதோ வந்துவிட்டேன்''
எனத்

துரத்திடுவேன்; அடிக்கமாட்டேன்! ஆனாலும் என்
தூயமகன் அஞ்சி நடுங்கிப் பதுங்கிடுவான்!

கோலுக்கே இந்தப் பயம் கொள்கின்ற பிள்ளாய்; நீ — நாளை
வேலுக்குப் போர்முனையில் என்ன பதில் சொல்வாய்
என்பேன்!


இழுத்து வந்து செல்லமாய்க் கன்னம் கிள்ளிப்
பழுத்திருக்கும் கோவைக்கனியாம் அவன் இதழில்;

தேன்கலந்த பாலின் கிண்ணம் மெல்லக் கவிழ்த்து
தெம்பாக இருப்பதற்கு முழுவதையும் அருந்தென்பேன்!

அழகுதமிழ் மழலைச்செல்வன் அதனை மறுக்காமல்
அச்சத்தின் காரணமாய் அனைத்தும் பருகிடுவான்!

பிறைபோல இருந்த பிள்ளை முழுநிலவாக உருவெடுத்து
குறையில்லாத் தோற்றமுடன் குன்றம் போல் வளர்ந்து
விட்டான்!

தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக்களம் சென்ற என்னவரோ;



தமிழ் மண்ணின் பண்பாட்டுக் கேற்றவாறு
தட மார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நின்றுவிட்டார்!

நானும் கல்லாக மனத்தை ஆக்கிக்கொண்டு
வானதிரப் புவி வாழ்த்துகின்ற மானத்தை

ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குடிமகனைப் பிள்ளைதனை வளர்த்தேன்!

கட்டியணைத்துக் களித்த என் கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப்பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;

எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்கொடி யென்றும்,
எதிரிகளின் கோட்டையிலே நம் முரசு முழங்கட்டுமென்றும்,

உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, ''சென்றுவா மகனே'' என
அனுப்பி வைத்தேன்

அவனை;

கொடுவாளால் களிறுகளைக் கொன்றுபோட்டுக்
குன்றுகளைப் பந்தாடுதல் போல் அவற்றை உருட்டிவிட்டுப்

படுகளத்தில் விளையாடி வினை முடிக்கின்றான் என்றும்,
நெடுமரம் போல் பகைப்படை வீழ்கின்றதென்றும்,

அடுக்கடுக்காய்த் தித்திப்புச் செய்திகள் வந்திடவே
அடக்கவொண்ணா ஆவலுடன் அது காணக் களம் புகுந்தேன்!

ஐயத்திற் கிடமேயில்லை வெற்றி நமக்கேதான்...
ஆனால் ஒன்று; அங்கே என் மகனைத்தான் காணவில்லை!

குருதி மணம் கமழுகின்ற போர்க்களத்தில்
குமுத மலர் மொட்டுக்களாய் மூளைக்கும் தலைகள்!

வீழ்ந்துள்ள வீரர்தம் உடல்களோ கவிழ்ந்துவிட்ட படகுகளாம்!
வெட்டுண்ட கைகால்கள் வேலையின்றி மிதக்கின்ற
துடுப்புகளாம்!

சூழ்ந்துள்ள பிணக்குவியல் நடுவில் சென்றேன்.
ஆழ்ந்துள்ளேன் கவலையினால்; அருமை மகனே! நீ

போர்க்களத்துப் பிணமாகி வாழ்கின்றாயா? அன்றி
புறமுதுகிட்டோடிச் செத்துத் தொலைந்தாயா?'' எனக்கேட்டுத்
துடித்திட்டேன்!

''வாழ்கின்றேனம்மா வீரனுக!'' என்றொரு குரல்
தாழ்கின்ற என் தலையை நிமிர்த்திற்றுங்கே!

குரல் வந்த திசைநோக்கிப் பறந்துபோனேன்! - ''உள்ள
உரம் வாய்ந்த மகனே! நீ எங்கே?'' என்றேன்.

''இங்கே'' என்றான்; கண்டு கொண்டேன்! ''வலம்புரிச்
சங்கே!'' என்றவாறு தழுவிக்கொண்டேன்! கையில்;

தாங்கிப் போரிட்ட கேடயம் தரையில் கிடக்க; அதில்,
தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து கிடந்தான்!

''வெற்றியம்மா வெற்றி'' என்றான் — அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, ''என் நித்திலமே!

போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!'' என்றேன்!

''ஊடுருவியிருக்கின்றதே மார்பில் அம்பு — வலி
உனக்குத் தாங்காதே மகனே!'' என்றேன்; அழுதுவிட்டேன்!

''உண்மையா அம்மா? உன் கண்ணுல் கண்டு நீ எனக்கு;
உரைக்கும் வரை நான் உணரவில்லையம்மா!'' என்றான்!

உயிர்விட்டான் மடிமீது! போய்விட்டான்;
உயிரோடு எனைமட்டும் விட்டுவிட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது — நான்

ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனு; மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில்

தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரே! என் மகனே! நீ வாழ்க! என வாழ்த்துகின்றேன்!

*

*** ''பால்கொண்டு மடுப்பவும் உண்ணுன் ஆகலின்**
செருஅது ஒச்சிய சிறுகோல் அஞ்சி,
உயவொடு வருந்தும்மனனே! இனியே
புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனுன்,
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே!
உன்னிலன் என்னும் புண்ஒன்று அம்பு
மான் உளை அன்ன குடுமித்
தோல் மிசைக் கிடந்த புல் அண லோனே.''

*

(புறநானூறு பாடல் : 310
பாடியவர் : பொன்முடியார்)

பொருள் விளக்கம் :

மடுப்ப = உண்ணுமாறு செய்ய. செருஅது = செல்லமாகக் கோபித்து. உயவொடு = கவலையுடன். மனனே = மனமே. களிறட்டு ஆனன் = களிறுகளைக் கொன்றவனனன். உரவோர் = மூத்தோர் (தந்தை). உன்னி = கவனித்தல். மான் உளை அன்ன குடுமி = குதிரை மயிர் போன்ற அடர்த்தியான குடுமி. தோல் = கேடயம். புல் = புல்லிய. அணலோன் = தாடியுடையவன்.

*



இருவீணை, தலைகீழாய் இருத்தல் போன்று
இடைக்குக் கீழ் இன்பபோதை ஊட்டுகின்ற உருவத்தாள்!

இணையாகக் குலுங்குகின்ற இளநீரைக் கெட்டியாக
இறுக்கிப்போடும் கச்சையணிந்த கன்னிப் பருவத்தாள்!

கன்றுக் குட்டியொன்றைத் தாம்பில் பிணைத்து
என்றும்போல் இசைபாடிக் குதித்து மகிழ்ந்து,

குன்றுக்கு அருகேயுள்ள தோட்டத்தை நெருங்கிடவே;
குறுக்கிட்டான் எதிரே; குறுஞ்சிரிப்புக் காளையொருவன்!

ஆம்பற்கொடி போன்று அவள் கையில் பிடித்திருந்த
தாம்புக் கயிறுதனை ஒருகையால் பற்றிக்கொண்டு

''சாம்பல் நிறக் கன்றுக்குட்டி நலந்தானு? அதனை உயிராக
ஓம்புகின்ற என்னுயிரே; நீயும் நலந்தானு?'' எனக்கேட்டான்

துள்ளிப் பாய்ந்திட்டாள் அத்துடியிடையாள் - ''நீ
அள்ளிப்பருக நான் என்ன அருவி நீரா?

வழியில் போகும் என்னிடம் எதற்காக வீண்வம்பு? என்
விழியின் அனல்கண்டு விலகிப்போ; இல்லையேல்
என்மொழியும் கனலாகும்''

என எச்சரித்த இளமங்கைக்கு நேர்நின்று,
''ஏந்திழையே! எதற்காக நான் விலகிப்போகவேண்டும்?

பிடிக்க வருவோரைப் பின்காலால் உதைத்து; வாலால்
அடித்துப்
பிடிபடாமல் ஓடுகின்ற பெண்எருமைக் கன்றைப்போல்; எனை

இடித்துத் தள்ளிவிட்டு இங்கிருந்து நீ ஓடிவிடு! உரையாட
இஷ்டந்தான் உனக்கும்! ஊர்வாயை மூடமுடியாதே என
அஞ்சுகின்றாய்!

முதலில் உன் வாயை என் உதடுகளால் மூடட்டுமா? ஓகோ!
பதிலில்லை எனில் ஒப்புதலுக்கு அடையாளமோ?'' என்றான்.

''என்ன துணிவிருந்தால்; எனை வழிமடக்கி
இன்னல் விளைத்திடுவாய்? என் தாய்க்குச்

சேதி தெரிந்தால் இந்நேரம் ஓடிவந்து
வீதியிலே கன்றை வளைப்போர் மீது சினம்பொங்க

வேகமாய்ப் பாய்ந்து முட்டும் பசுவைப் போல்
விரட்டியடிப்பாள் உனை!'' என்றுள்; அவன் சிரித்தான்!

''உன் தாயே வரட்டும்; அல்லால் இந்த ஊரே வரட்டும்!
ஊராளும் உன் தந்தை கூட உருவிய வாளுடன் வரட்டும்!

யாருக்கும் நான் அஞ்சத்தேவையில்லை; இந்தச் சின்ன எழில்
தேருக்கு நான்தான் சாரதியென நீ சொல்லிவிட்டால்!''
என்றான்.

அவளோ; உடல் குலுக்கி, முகம் சுளித்து, அவனை நோக்கி
ஆர்ப்பாட்டம் பலபுரிந்து எதிர்ப்பு காட்டி

''அய்யா; நீ பெருமழை பொழியும்போதும் அறியாமல்
அசையாமல் நிற்கின்ற காளைமாடென ஆகிவிட்டாய்!

ஏட்டிக்குப் போட்டியாக ஏதேதோ சொல்லி
காட்டிவிட்டாய் உன்காதல் எண்ணத்தை!''

எனக்கடு மொழியுரைப்பவள்போல் நடித்தவாறு
''எள்ளளவும் வெட்கமின்றிப் போனவனே!'' என
இழித்துரைத்து

பட்டென்று பதிலாய்ப் படபடவெனப் பொறிந்தாள் எனினும்
பட்டுப்போல் மென்சொற்களாலே ஒன்று கேட்டாள்;

''நாளை நான் கறவைக் கலமுடனே பசுமேயும் இடத்துக்குச்
செல்லுகிறேன்
காளைநீ அப்போதும் அங்கேயும் வருவாயோ?'' என்பதுதான்
அக்கேள்வி!

புரிந்து கொண்டான் அவள் உள்ளம்; பின்னர்
பிரிந்து சென்றூர் புன்னகை புரிந்தவாறே!

*

* ''பாங்கு அரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம் எம்
தாம்பின் ஒருதலைபற்றினை, ஈங்கு எம்மை
முன்னை நின்றூங்கே விலக்கிய எல்லா! நீ
என்னையே முற்றுய்? விடு;

விடேஎன்; தொடீஇய செல்வார்த் துமித்து,
எதிர்மண்டும்
கடுவய நாகுபோல் நோக்கித், தொடுவாயில்
நீங்கிச், சினவுவாய் மற்று.



நீ நீங்கு; கன்று சேர்ந்தார்கண் கதஞற்றுச் சென்றுங்கு,
வன்கண்ணள் ஆய்வரல் ஒம்பு

யாய் வருக ஒன்றே; பிறர் வருக; மற்றுநின்
கோ வரினும் இங்கே வருக; தளரேன் யான்,
நீ அருளி நல்கப் பெறின்.

நின்னையான் சொல்லினவும் பேணாய்; நினனைஇக்
கனபெயல் ஏற்றின் தலைசாய்த்து, எனையதூஉம்

மாறு எதிர்கூறி, மயக்கப் படுகுவாய்!-
கலத்தொடு யாஞ் செல்வுழி நாடிப், புலத்தும்
வருவையால் - நாணிலி! நீ'

*

(கலித்தொகை : பாடல் : 116
(முல்லைக் கலி)
பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்)

பொருள் விளக்கம் :

பாங்கு = அருகில். பாட்டங்கால் = தோட்டத்தினில்.
முற்றாய் = தடுத்திடாதே. தொடீஇய = தொட்டிட.
துமித்து = கெடுத்து. மண்டும் = விரைந்தோடும். கடு = மிகவும்.
வயம் = வலிமை. நாகு = பெண் எருமை.
கதஞற்றுஆ = கோபங் கொண்ட தாய்ப்பசு.
கனபெயல்ஏறு = மிகுதியான மழை பெய்யும்போதும் நிற்கும் காளை.

*



தென்புலத்துக் கடலோரம் தீமை விளைவித்தோரை;
வென்றடக்கிய வீரவாளுக்குடையோன்

வடபுலத்து வடுகமன்னர் படையொடுக்கி
வாகை மாலைதனைத் தோளில் சுமந்தோன்

இளஞ்சேட் சென்னியெனும் பெயருக்குரியோன்
வளமிகு சோழமன்னன் திறன்மிகு வலிமையினை

ஊன்பொதிப் பசுங்குடையார் எனும் ஒரு புலவர்
மீன்துள்ளும் அருவிநடைத் தமிழால் தந்தார்!

நெய்தலங்கானல் சோழன் எனும் பிறந்த ஊர்ப் பெருமையுடன்
நெடிய புகழ் செருப்பாழியும் பாழூளூரும் வென்ற சோழன்
எனும் அடைமொழியும்,

இரு கருத்துக்கு இடமேயின்றி; இற்றைப்புலவர்கள்
இளஞ்சேட் சென்னியினையே குறிக்குமென்பர்!

புறப்பாடல் தமிழ்ப்புலவர் இயற்றும்போதே
புராணக் காதைகளும் புழக்கத்தில் உண்டு போலும்!

அதனுலே அற்புதமாய் உவமையொன்றை
அரும்புலவர் பசுங்குடையார் அன்றைக்கே எழுதியுள்ளார்.

அரசிருக்கை கொண்டிருந்தபோது சோழனிடம்
பரிசில் வேண்டிப் பாவலர் ''பாட்டாடை'' போர்த்த;

''பாட்டாடை''க்குப் பதிலாக ''பட்டாடை'' போர்த்திப்
பார்வேந்தன் பல்வகை அணிமணி பரிசாய்த் தந்தான்!

மன்னர் குலத்தோர் மட்டுமே அணிகின்ற முத்துவடம்
மரகத மணிமாலை மாணிக்க வளையற் குவியல்,

இன்னபிற நகைகளையும் இளஞ்சேட் சென்னி
புன்னகை மிளிரப் பொழிந்தான் புலவரிடம்!

உள்ளமெல்லாம் உவகையால் நிறைந்து பொங்க
கள்ளமில்லாத் தன்சுற்றத்தார்க்கு வாரிவழங்க

கடுவேகப் பயணம்செய்து உற்றூர் கைவழியக்
களிப்புடனே அளித்திட்டார் கவிஞர்பிரான்!

காணுத அணிமணிகள் கண்டதாலே; சுற்றத்தார்
கண்டபடி அவற்றை எடுத்துக் கழுத்துக்குரியவற்றைக்

கைகளிலும்; கைகளுக்குரியவற்றை அவசரமாய்க்
கழுத்தினிலும் மாற்றிமாற்றி மாட்டிக்கொண்டு;

கணையாழி விரலுக்குரியதெனப் புரியாமல்
காதணியிதுவென்று பூட்டிக்கொண்டார்!

அதுகண்டு;

ஊன்பொதிப் பசுங்குடையார் உரக்கச் சிரித்தார் - அந்த
உறவினரின் செயலுக்கு உவமையொன்றும் கண்டார் அங்கே!

இராமனது மனைவியாம் சீதைதனை இராவணனும்
இலங்கை வேந்தன் சிறையெடுத்துச் சென்றபோது;

வழியெல்லாம் அவள் கழற்றி எறிந்திட்ட அணிமணியை
வானரங்கள் எடுத்து வந்து அணியும் வகை அறியாமல்

இடைக்கென உரியதை மந்திகள் தம் கழுத்துக்கும்
எழில் கழுத்துக்குரியதைக் காலுக்கும் தொடைக்குமாக

அணிந்தலைந்து திரிந்ததாகக் கற்பனை உண்டன்றே?
அக்காட்சியினை உவமையாக்கிப் புலவர்ஏறு; அவர்தம்

உற்றூர் உறவினரின் செயல்பாட்டைத் தமிழ்
கற்றூர் களிக்கும் வண்ணம் தீட்டியுள்ளார்.

வளமிகு சொற்செல்வராம் அப்புலவர்;
இளஞ்சேட் சென்னியினை இன்னொரு பாட்டில்


புகழ்ந்திடும் விதமோ பொழில் மலர் அமுதமாம்;
போற்றிடும் பாங்கோ பொதிகைமலைத் தென்றலாம்!

அது; இதோ!

''வழிபடுவோர்க் கெல்லாம் விழிகாக்கும் இமையானாய்!
பழிகூறிப் பிறரை வீழ்த்த உன்பால் வருவோரை

இழிதகையோர் எனஎண்ணி உடன் ஒதுக்கி
இடமில்லை இங்கென்று விரட்டுகின்ற விவேகியானாய்!

குற்றம் கண்ட இடத்து அதனைச் செய்தோர் யாராயினும்
கொற்றம் சாயாது காத்திடக் கடுந்தண்டனை கொடுத்திடுவாய்!



நீதியும் நெறியும் சாயா நேர்மையே உன்னுட்சியென
வீதியில் முரசம் விதிமுறைப்படி ஒலிக்குமே!

பிழையினை உணர்ந்தோர் திருந்திப்பணிந்திடின் - அன்பு
இழையிலே கோத்த அருளினை வழங்குவாய்!

வரும் விருந்தினர் போற்றி - அவர்தம்
வாழ்த்தினைப் பெற்றிடும் பொற்புடை அரசியின்

மாங்கனி மேனி, பட்டால் மட்டுமே மயங்குமேயன்றி;
மாற்றூர் கணைகள் ஆயிரம் வரினும் மயங்கா மார்புடை மறவன்
நீயே!''

இவ்வாறு

ஊன்பொதிப் பசுங்குடையார் கவிப்பெருக்கில்
உவமையோ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்!

உறுபகைக்கு அஞ்சாத சோழ வேந்தனது
உரமான மார்பு குறித்த மாண்போ; நம் நெஞ்சை அள்ளும்!

*

* ''தென்பரதவர் மிடல் சாய
வடவடுகர் வாள் ஒட்டிய
... ...
... ...
... ...
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்,
விரல்செறி மரபின செவித்தொடக் குநரும்,
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்,
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்,
மிடற்றமை மரபின அரைக்குயாக் குநரும்,
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தொகை 'அரக்கன்' வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தாஅங்கு
அருஅ அருநகை இனிதுபெற் றிகுமே
இருங்கிளைத் தலைமை எய்தி
அரும்படர் எவ்வம் உழந்ததன் தலையே''

(புறநானூறு : பாடல் : 378)

* ''வழிபடுவோரை வல்லறி தீயே!
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே;
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்பநாடி அத்தக ஒறுத்தி
வந்து, அடிபொருந்தி, முந்தைநிற்பின்,
தண்டமும் தணிதி, பண்டையிற் பெரிதே;
அமிழ்துஅட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய, சிலைத்தார் மார்ப!
... ...
... ...

*

(புறநானூறு : பாடல் 10)

குறிப்பு : இரண்டு பாடல்களும் ''**ஊன்பொழிப் பசுங்குடையார்**'' எனும் புலவரால் பாடப் பெற்றவையாகும்.

பொருள் விளக்கம் :


(பாடல் 378)

மிடல் = வலிமை. இலம்பாடு = வறுமை. இரும்பேர் = உறவினர்.
செறிமரபின = அணியத்தகுந்தவற்றை.
தொடக்குநர் = அணிந்தனர்.
அரைக்கமை = இடைக்கு உரியவற்றை. மிடற்று = கழுத்தில்.
மதர்அணி = அழகியநகை. இழை = அணி.
அரூஅ அருநகை = நீங்காத அரிய மகிழ்ச்சி.

(பாடல் 10)

வல் அறிதி = விரைவில் அறிவாய்.
ஒப்பநாடி = அறநெறிக்கேற்ப ஆய்ந்து.
அத்தக ஒறுத்தி = அதற்கேற்ற தண்டனை தந்து.
மலைத்தல் = மயங்கி மாறுபடல். மள்ளர் = வீரர்.

*



பழத்துக்குள் சிறையிருக்கும் விதையைப்போல்
பருவப்பாவையினை வீட்டுக்குள் பாதுகாத்தாள் அன்னை; அந்தக்

கிழத்துக்குக் காதுகுத்தி; மெல்ல, அருகிருக்கும்
குளத்துக்குச் செல்வதாகக் குமரிப்பெண் கூறிவிட்டு,

அடக்கத்தின் உருப்போல நடந்து காட்டி; அன்னை முகம்
மறைந்தவுடன்

அங்குள்ள மலையருவி தேங்குகின்ற குளம் தேடி ஓடிடுவாள்!

களத்துக்கு வருகின்ற கேடயத்தை முத்தமிடக்
காத்திருக்கும் வீரன் கை வாள் போலக்

காளையவன் காத்திருப்பான் கண்மணியின் வரவு நோக்கி!
தோளைத் தழுவுகின்ற மாலையாக அவளும் தொத்திக்
கொள்வாள்!

''களவொழுக்கம் தீதாகும்; அன்னைக்கும் அலர்தூற்றும்
ஊரார்க்கும்;

காதில் பட்டவுடன் கடும் எதிர்ப்பு மூண்டுவிடும் - அதனாலே

அளவோடு இருக்கட்டு''மென்று அவள்தோழி அடிக்கடி
குறுக்கிட்டு


ஆயிரம் முறை தடுத்திட்டாள்; அவள் அதனைக் கேட்டாலல்தானே!

அன்றொருநாள் அருவிக்குளம் போவதாக அன்னைகாதில் பூ
சுற்றிவிட்டு

குன்றேரம் முகிலிரண்டு ஒன்றுனதுபோல் ஆகிவிட்டார்
அவளும், அவனும்!

''பொறிகிளர் ஆகம் புல்லத் தோள் சேர்பு'' எனப்
புலவர் வழுதியார் எழுத்தில் பொறித்தது போல;

அழகிய மார்புகள் இரண்டும் அழுந்தத் தழுவி மகிழ்ந்து
பழச்சுவை முத்தம் பத்து, நூறு, ஆயிரமெனப் பகிர்ந்து
கொண்டனர்!



அடுத்தநாள் காலை அடுக்களைப்பக்கம் அன்னையிருந்தனள்
எடுத்தும் கொடுத்தும் இட்டபணிகளைச் செய்ய மகளும்
சென்றனள்!

ஆரத்தழுவி அருவியோரம் நடந்ததொரு நிகழ்ச்சியால்
அரிவையின் தோளில் வீசிய நறுமணமுணர்ந்து,

அவளையே சுற்றிப் பறந்தன வண்டுகள்!
அன்னையும் அதனைப் புரிந்து கொண்டனள்!

''என்னடி பெண்ணே; சொல்லடி எனக்கு
உன்னடி தவறி எவன் மீது வீழ்ந்தனை?'' என்றாள்!

வண்டுகள் மொய்த்தலால் காதற்கள்வனின் செயலைக்
கண்டு கொண்டனளே அன்னையென்று; பூச்

செண்டுகள் இரண்டையும் துகிலால் மறைத்தாள்,
மண்டிய பற்குறி நகக்குறி தெரியாதிருக்க!

வாய்மூடி ஆட்டம் காட்டாதே மகளே; உனையீன்றுப்
பாதுகாக்கும்
தாய்தான் கேட்கின்றேன், நடந்ததைச் சொல் என்றாள்!
தணலானாள்!

இனி அவளைத் தப்புவிக்க ஏற்றதொரு பொய்தான் தேவையென
இனியவளாம் அவள்தோழி வெடுக்கெனப் பாய்ந்து வந்து;

''அன்னையே கேள் நீ; அறியாமல் அவள்மீது பழிதூற்றுகின்றாய்
அடுப்பினிலே சந்தன விறகுகளை வைத்து எரிப்பதாலே

அடுக்களைக்குள் அந்தமணம் பரவியெங்கும் படர்ந்துளது
அடுக்கடுக்காய் வண்டுகளும் அதனால்தான் பறக்குதம்மா!

அஃதன்றி அன்னை நீ ஐயுறுதல் போலே; நீ பெற்ற
அருமை மகள் ஆடவர் எவரையுமே ஏறெடுத்துப் பார்த்ததில்லை!

ஆணையிட்டுக்கூட நான் சொல்வேன்; அது தேவையில்லை
எனக் கருதுகின்றேன்! இந்த
வீணையினை மீட்டுதற்கு உன் விழி மூலம் இசைவுதனைப்
பெறுவதன்றி; இவளைக்

காதலிக்கும் திருமகன் இவள்மீது மறந்தும்கூட
கைகளையே வைப்பதற்கும் ஒப்பமாட்டாள்; இது உண்மை''
என்றாள்!

தாயாரும் நம்பிவிட்டாள்; அடுப்பின் நெருப்புத்
தணலாலே சந்தன விறகுதான் மணக்குதென்றும்

தங்க மகள் தவமிருன்றும் செய்யமாட்டாள் என்றும்
அங்கமெலாம் பூரிக்க அவள் உச்சிமோந்து முத்தமிட்டாள்!

இப்படி வீட்டுக்குள் நடந்த கதையினையே - தலைவியின்
சொற்படி தோழிசென்று தலைவனுக்குரைத்து நின்றாள்.

''மூங்கில் நிறை பாறைமிகு பாதைகளில்
வேங்கைகளின் நடமாட்டம் கண்டும் பதறுமல்;

ஓங்குபுகழ் நாடனே! நீ ஒவ்வொருநாளும் வந்து
ஏங்குகின்ற தலைவியுயர் துடைக்கின்றாய்; நன்று!

ஆங்கவளோ அன்னையிடம் படும்பாடு நீ அறிந்திலையோ?
பாங்கிநான் ஒருகேள்வி கேட்கின்றேன் பதறிடாதே!

திருமணநாள் குறிப்பதாக தினந்தோறும் கூறுகின்றாய்;
தேன் என்று சொல்லிவிட்டால் இனித்தா விடும்?

தேர்ந்திடுவீர் ஒருநாளை; இருவருமே வாழ்வில் துணையாக
சேர்ந்திடுவீர் பெற்றோர் உற்றாரின் வாழ்த்தோடு!

இல்லையெனில் இந்த மலைநாட்டு மாவீரன்பால்
இல்லையென்றாகிவிடும் வாய்மை! வாய்வீரம் மட்டும்தான்
மிஞ்சும்!'' என்றாள்.

''முல்லையிடம் கூறிவிடு; பெண் கேட்க நாளை என் பெற்றோர்
வந்திடுவர்!
கொல்லை வழிச் சந்திப்பு எனும் தொல்லைக்கே இனி
இடமில்லை!'' என்று சொல்லி;

நடந்திட்டான் மலைநாடன்; அவன் சொன்னதுபோல்
நடந்திருக்கும் திருமணமும்!

*

* ''ஓங்குமலை நாட ஒழிகநின் வாய்மை
காம்புதலை மணந்த கல்லதர்ச் சிறுநெறி
உறுபகை பேணாது இரவில் வந்திவள்
பொறிகிளர் ஆகம் புல்லத் தோள் சேர்பு
அறுகாற் பறவை அளவில மொய்த்தலிற்
கண்கோ ளாக நோக்கிப் பண்டும்
இனையை யோவென வினவினள் யாயே
அதனெதிர் சொல்லாளாகி அல்லாந்து
என்முக நோக்கி யாளே அன்னாய்
யாங்குணர்ந் துய்குவள் கொல்லென மடுத்த

சாந்தம் ஞெகிழி காட்டி
ஈங்கா கினவால் என்றிசின் யானே.''

*

(நற்றிணை : பாடல் : 55
பாடியவர் : பாண்டியன் பெருவழுதி)

பொருள் விளக்கம் :

காம்புதலை மணந்த = மூங்கில்கள் நெருங்கிய.
கல்அதர்ச் சிறுநெறி = கற்பாறை மிகுந்த சிறியவழி.
உறுபகை = (இந்த இடத்தில் வேங்கையின் பகையெனப் பொருள்படும்).
பொறி = அழகிய தேமல்.
ஆகம் = மார்பு.
அறுகாற்பறவை = வண்டு.
கண்கோளாக நோக்கி = கொல்வது போலப் பார்த்து.
இனையையோ = இன்ன காரணமோ.
அல்லாந்து = வருந்தி.
சாந்தம் = சந்தனம்.
ஞெகிழி = எரியும் விறகு.

*

வலவன் ஏவா வான ஊர்தி!

விஞ்ஞானம் வளர்ந்ததாலே விண்ணூர்ந்து; இற்றைநாளில்
வியத்தகு புதுமைகளை விளைக்கின்றார் அறிவுடையார்! -
முற்றிலும்

அஞ்ஞானம் நிறைந்த காலமல்ல பழங்காலம்;
அன்றைக்கும் வானத்துக் கோள்களை ஆராய்ந்து

காலமாறுதலைக் கணக்கிட்டு, கோள்களின் சுழற்சிக்
கோலமதைத் தீட்டிக்காட்டி; குமிழ் மின்னல் சிரிப்புக்

கொட்டுகின்ற விண்மீன்கள்; தாங்களிருக்குமிடம்
விட்டுப் பெயர்கின்ற நிலையறிந்து நாழிபார்த்துக் கூறி;

கதிரவனைச் சந்திரனைப் பூமியின் நிழல் சூழ்ந்து - நம்
கண்ணுக்கு ஒருநாள் மறைக்கின்ற ''கிரகணம்'' வருகின்ற

நாளைக்கூட நமது முன்னோர் வானநூல் இயற்றித்தந்து
வேளைதவறுமல் விரித்துரைத்தார் எனல் வேடிக்கையல்ல!

ஒளிபெற்று வாழ்ந்த நாமோ; திடுமென இருட்டில் வீழ்ந்தோம்!
வெளிநாட்டு விஞ்ஞான வளமோ; விரிந்தது வான் முகட்டில்!

தேய்ந்து வளரும் திங்களை நாம் தெய்வமென்றோம்
தினம் வந்து கடமையாற்றும் சூரியனை தேவனென்றோம்

ஓய்ந்திருக்கும் வேளையிலே உப்பில்லாக் கற்பனையில்
சாய்ந்து சயனித்துக் கிடந்தோமன்றி - முன்னோர்

ஆய்ந்தறிந்து வகுத்திட்ட வானநூற் புதுமைகளை; வறட்சியினால்
காய்ந்த பயிர் ஆக்கிவிட்டு மடமைக் கதைகளிலே
மாய்ந்துபோனோம்!

இலக்கியத் தமிழ் இன்பம் பருகுதற்கு முற்பட்டு
இனிய சங்கப் பாடல் ஒன்றில் கண்புதைத்தபோது;

இதயத்தைப் பூரிப்பால் நனைக்கின்ற ஒரு செய்தி! அதனை
எடுத்தெழுதி உம்மையெலாம், ''நான் பெற்ற இன்பம்;

பெருக நீவிர்!'' என உவகையுடன் அழைக்கின்றேன்.
பெருமை மிகு தமிழகத்தின் பழஞ்சிறப்பு காண வாரீர்!

முடியுடைச் சோழன் நலங்கிள்ளியின் கீர்த்திபாடும்
முதுகண்ணன் சாத்தனார் எனும் உறையூர்ப்புலவர்;

வளர்தலும், தேய்தலும், பிறத்தலும், இறத்தலும்
வாடிக்கையாய்க் கொண்டதிவ் வுலகமென்றும்,

வருந்தி வந்தோர்க்கு வழங்கிடும் வள்ளலாய்
வாழ்வதே மண்ணுலும் அரசுக்கு மாண்பென்றும்

போற்றுதற்கிடையே பொன்மொழி புகன்று
ஊற்றுப் பெருக்காய் உதவிடுக வறியோர்க்கென்றார்!

மற்றும்

வழிவழியாக இவ்வையகம் தனிலே
வாழ்ந்து மறைந்தோர்; எண்ணிலடங்கார்!

சேற்றில் முளைத்திடும் செந்தாமரையின்
செழிப்புறு இதழ்கள் பலவே ஆயினும்

வேற்றுமை காண இயலா அளவில்
விளங்கும் எழிலைக் காணுதல் எளிது!

சாற்றுவேன் ஒன்று, சரியெனத் தோன்றியதை; இந்த
செகத்தினில் உதித்தோர் பலரில் சிலரே - உண்மைப்

புலவர் பாடிடும் புகழுக்குரியோர் - மற்றும்
பலரோ தாமரையிலை எனப் பொலிவிழந்து போயினர்!


இதழின் அழகுக்கும் இலையின் பயனிலாத் தன்மைக்கும்
இப்படியோர் உவமையைப் பொருத்திய புலவர்;

பாவலர் ஏத்திடும் பாராட்டுக்குரிய மன்னர் - இந்தப்
பாரில் எய்திடும் புகழின் உயர்வைக் காட்டுவார்; கவிதையில்!

அதாவது,

வலவன் எனும் ஓட்டுபவன் இல்லாமலே
வானில் பறந்திடும் ஊர்தியில் செல்லும்

வாய்ப்பினை எய்திடும் வகை கிடைத்தோர்க்கு;
வாழ்வின் உயர்வு - அந்த வானின் உயர்வாம்!



வைரமென ஒளிபொழியும் இப்புறப்பாட்டில்;
''வலவன் ஏவா வான ஊர்தி'' என வருதலாலே

வலவன் ஏவுகின்ற வான ஊர்தியும் அக்காலம்
வழக்கத்தில் இருந்ததெனக் கொள்ளலாம் அன்றே?

ஆதியிலே அறிவியலில் அக்கறை காட்டியதால்; வான
வீதியிலே வலவரென்போர் ஊர்தியினைச் செலுத்தியிருக்கவும்
கூடும்!

பாதியிலே படையெடுத்த பத்தாம்பசலி எண்ணத்தினால்
பகுத்தறிவுக்கு வேலையின்றிப் பாழ்பட்டுப் போனதம்மா இந்த
நாடு!

பாவாணர் முதுகண்ணன் சாத்தனார்; சோழனைப்
பாராட்டி எடுத்து வைத்த அறிவுரையில் - என்

பார்வையினை இந்தச் செய்தி ஈர்த்ததினால் - நீவிரும்
படித்தாய்ந்து உரைத்திடுக எனப் படைத்திட்டேன்;
பிழையெனில் திருத்திடுவீர்! ஏற்றுக்கொள்வேன்!

*

*** ''சேற்றுவளர் தாமரை பயந்த, ஒண் கேழ்,**
நூற்றிதழ் அலரின் நிறைகண் டன்ன,
வேற்றுமை இல்லா விழுத்தினைப் பிறந்து,
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை,
உரையும் பாட்டும் உடையோர் சிலரே;
மரைஇலை போல மாய்ந்திசினோர் பலரே;
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப, என்ப, தம் செய்வினை முடித்து' எனக்
கேட்பல்; எந்தை! சேட்சென்னி! நலங்கிள்ளி!
தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,
மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்,
அறியா தோரையும், அறியக் காட்டித்,
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து
வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி,
அருள வல்லை ஆகுமதி; அருளிலர்
கொடா அமை வல்லர் ஆகுக;
கெடாஅத் துப்பின்நின் பகைஎதிர்ந் தோரே.''

*

(புறநானூறு : பாடல் : 27
பாடியவர் : உறையூர் முதுகண்ணன் சாத்தனார்)

பொருள் விளக்கம் :

பயந்த = பூத்த. ஒண்கேழ் = ஒளிபொருந்திய நிறம்.
விழுத்திணை = உயர்குடி. மரையிலை = தாமரையிலை.
விசும்பு = ஆகாயம். வலவன் = செலுத்துபவன், ஓட்டுபவன், பாகன். திங்கள் புத்தேள் திரிதரும் உலகம் = திங்களெனும் புதுமை இயங்குகின்ற உலகம்.

*




தோழி :

என்னடி நேற்று விடியுமட்டும் வளையல் சத்தம்?
எத்தனை கொடுத்தான்? நூறு, ஆயிரமா; நீ பெற்ற முத்தம்?
இமை மூட முடியாமல் நான் பட்டபாடு கொஞ்சமா?
இடி முழக்கம் எழுப்பியதே; அதுவும் ஒரு மஞ்சமா?
சத்தம் போடாதவொரு கட்டில் வாங்க உன் வீட்டில் என்ன
பஞ்சமா?
சத்தியமாய்ச் சொல்லடி தலைவி; என்மீது உனக்கேதும்
வஞ்சமா?
திண்ணையில் ஒருத்தி படுத்திருக்கிறுள் என்பதும் தெரியாதா?
திருமணமாகாத பருவமங்கை அவள் என்பதும் புரியாதா?
ஒரு நாள் மட்டுமே இந்த உலகம் இருக்குமெனக் கணக்கிட்டு
இன்பத்
திருநாள் முழுவதையும் நடத்தி முடித்துவிட்டீர்; வாழ்க! வாழ்க!

இருந்தாலும் என்னுயிர்ப்பாவாய் ஒன்று கேட்பாயா? - இரவு,
விருந்துண்ட மகிழ்ச்சியிலே எனக்கும் சிறிது செவி
கொடுப்பாயா?

மாம்பழம் இனிக்குதென்று மரத்தோடு பிடுங்கலாமா?
மலர் மணம் இனிமையென்று கொடியோடு பெயர்க்கலாமா?
அள்ளிப் பருகி நீரைத் தாகம் தணித்தலன்றி - ஆற்றின்
வெள்ளத்தோடு வீழ்ந்தழுந்தி அறிவுடையோர் மிதப்பதுண்டோ?

''இன்பத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்?'' - என்று என்னை
எடுத்தெறிந்து பேசாமல் எதுவும் அளவு மீறினால் எழுகின்ற
துன்பத்தைப் பற்றித் தொலைநோக்கில் சிந்தித்திடுக!
தோழியுங்கள் இருவர் நன்மைக்கே சொல்லுகின்றுள்; எனக்
கொண்டிடுக!



இரும்பினுல் வார்த்ததல்ல மாந்தர் மேனி; எனவே
கரும்புதான் காம இன்பம் எனினும் அதனை;
விரும்பும்போதெல்லாம் கண்டபடி சுவைத்துத் தினைத்தால்
துரும்பு போல் இளைத்துப் போகும் ஆண் பெண் வடிவிரண்டும்
வளைந்து கூனி!
உடற்கூறு வல்லுநர் என் பாட்டியம்மை; அவள் பிறர்க்கு
உரைக்கின்ற வாழ்க்கை முறையை ஒளிந்திருந்து தினமும் கேட்டு
நான்;
உணர்ந்துகொண்ட உண்மையைத்தான் - என்
உற்ற தோழியாம் தலைவி உனக்குச் சொன்னேன்!

ஆறு திங்களுக்கு மேலாக உனை விடுத்து அகலாமல் - உன்
ஆளன் அருகில்தானே இருக்கின்றான்;
அப்படியென்னடி வந்தது நேற்று மட்டும் தோழி?
உங்களிருவரையும்
அணைபோட்டுத் தடுக்கத்தான் அவசரமாய்க் கூவியதோ கோழி?

தலைவி :

கூவியது நிச்சயமாய்க் கோழியல்ல என்பதை - என்
ஆவிநிகர்க் கண்ணுளன் நன்றுகப் புரிந்துகொண்டு
''குரல் மாற்றி உன் தோழிதான் இப்படிக்
குறும்புத்தனம் செய்கின்றாள்'' எனக் கூறிவிட்டான்! அந்தத்
திறல் மறவன் பிடிக்குள்ளே சிக்கிவிட்டால்
குறள் பாட்டின் ஈரடிபோல் இணைந்துதான் கிடக்கத் தோன்றும்!
அதுவும்;
அறம் பொருள் இரண்டும் கடந்த இன்பத்துப்பால் என்னும்
போது; அவனைப்
புறம் தள்ளி பிரிந்து வரல் எனக்கு ஆகின்ற காரியமா?
காலம் இன்னும் இருக்குதடி கண்மணியே, கதிர்மலர; -
எனக் கூறிக்
கோலம் வரைந்தான் விரல் நுனியால் என் உச்சி முதல்
உள்ளங்கால் வரையில்!

விரல்பட்டால் யாழின் நரம்பு இசையோடுதானே துடிக்கும் -
அவன்
கரம் பட்டுச் சுகஉலகச் சுற்றுலாவில் பறந்தேன்! -
இதுவரையில்;
காணுத இன்பத்தில் எனைநானே மறந்தேன்!
காலைக்கதிர் உதித்தபிறகுதானடி - அந்தக்
கள்வனின் செயலுக்கெல்லாம் காரணத்தை அறிந்தேன்!

இமை நான்கை இதழ்போலக் கவ்விக் கொண்டு - அவனளித்த
சுவை முத்தம் அத்தனையும் தேனூறிய கற்கண்டு!

இடை வளைத்துக் கொடிபோல அவன் தோள்மீது சுற்றிக்
கொண்டான்.
''இனி அணுப்பொழுதும் எனைப்பிரியாதே'' என அவனை
நான் பற்றிக் கொண்டேன்!

தோழி :

போதுமடி; பொற்கொடியே! எனக்கும் நீ
போதை ஏற்றிவிடாதே! பிரிந்தென்னைப்
பொருள் தேடப் போயுள்ள காதலன் வரும்வரையில்
பொறுத்திருக்கும் என் மனத்தை
வறுத்தெடுத்துத் தொலைக்காதே; எனை
வாடவிட்டு வேடிக்கை பார்க்காதே!

தலைவி :

களிப்பிலாடும் கானமயிலாகி - எதையும்
ஒளிப்பின்றி உன்பால் உரைத்து விட்டேனடி
கண்ணயர்ந்து நீ இரவெல்லாம் தூங்காததை - அவனோடு
விண்ணுயர்ந்து பறந்ததாலே நான் உணர முடியவில்லை!
தலைவியென்றும் தோழியென்றும் தகுதி பிரித்து நாம்
பழகவில்லை!
அலைகடல் போல் பரந்ததன்றே நமது நட்பு; அதனாலே
மன்னித்திடுக!
விடியும்வரை நேற்றிரவு மட்டும் இன்ப விளையாட்டு ஏனென்று
வினவினையே; அதற்கு நானுந்தான்
விடை கிடைக்காமல் வியப்புற்றேன் எனினும்
விருந்து வலிய வலிய வரும்போது வீணில்
அருந்தாமல் தட்டிக்கழிக்க மனமின்றி
இரவுக்கு வாழ்த்துச் சொல்லி - இடைவிடா
உறவுக்கு எனையளித்துச் சுகம் கண்டேன்.
கிழக்கினில் சூரியன் எழுந்தபின் தானே;
வழக்குக்கு மாறுக இரவு நடந்த கதைக்கு;
விளக்கத்தைப் புரிந்து கொண்டேன் — மனக்
கலக்கத்தால் தவித்து நின்றேன்!

தோழி :

புதிர் போட்டுக்கொண்டே இருக்கின்றாய் தலைவி;
கதிர் வந்தபின்னர் கவலை ஏன் உனக்கு?
எதிர் நின்று இரவெல்லாம் ஈடுகொடுத்த நீ; இப்போது
அதிர்கின்ற அளவுக்குக் கண்ட காரணம்தான் என்ன?

தலைவி :

அதோ பாரடி ; அவனை!
வேல் முனையைத் துடைத்துக் கூரேற்றியவாறு

வீரர்களை அழைத்து விரைவுபடுத்துகின்றான்!
மயிற்பீலி சூட்டி மணியும் அணிவித்து
மலையொத்த தோளிரண்டைக் குலுக்கிக்கொண்டே
ஆடவர்க்கிடையே ஓர் அடலேறு போல
கேடயத்தைத் தாங்கி எனை நோக்கி வருகின்றான்!
இச்சையில்லை உயிர்மீது என்ற துணிவுடனே
கச்சை கட்டிக் கவசம் பூண்ட அந்தக் காளையினைக் காண்க!
இரவெல்லாம் துயில் கொள்ளாத உன் கண்ணுல் பாரடி!
இனி எந்தன் கண்களுக்குத் தூக்கமுண்டோ கூறடி!
பரந்து பட்ட தீயினுல் காடழியப்
பாலையாய் மாறிவிட்ட நிலங்கடந்து
இறந்துபடினும் இந்நாடு காப்போம் எனும் உறுதியுடன்
உற்றுரைத்
துறந்து செல்லும் படை வீரர் பல்லாயிரத்தோர்

நடந்து செல்கின்றார்; போர்க்களம் நாடி! அவனும்
விரைந்து வருகின்றான் விடைகேட்க எனைத் தேடி!
புரிந்ததா உனக்கு இப்போது - இரவு அவன்;
புரிந்திட்ட செயலுக்கெல்லாம் பொருள் விளக்கம்?
இன்பவெள்ளத்தில் மிதந்ததாக எனைக்கடிந்து
எரிந்து விழுந்தாயே; எனைப் பார் தோழி!

இமையிரண்டில் வெள்ளம் கரைபுரண்டு - என்
இருவிழியின் பாவைகளும் மறைந்துருண்டு
இரவு கண்ட இன்பமெலாம் செலவுக்கணக்காகி;
வரவுக்கணக்கில் துன்பம்; தொகை தொகையாய்
இப்போதே வரப்போகும் காட்சியினைப்பார்!
தப்பாது நடந்ததடி நான் கணித்த குறிப்பு!

நாடகத்தை நன்றாக நடத்தியுள்ளான் விடியுமட்டும்; என்
ஆடகப் பொன்மேனியினை ஆரத்தழுவி அமுதமூட்டியபின்
இடர்விளைத்துப் பிரிந்து சென்று என் நெஞ்சத்தைப்
பிழிந்தெடுக்க
சுடர் முகம் தூக்கியவன்; சூழ்ந்து வரும் பகை எதிர்க்கக்
கிளம்பிவிட்டான்!

படை நடத்தப்போகின்றேன் கண்ணே
பகைவர்களின் சூழ்ச்சியினைச் சுக்குநூறாய்
உடைத்தெறிந்து வாகைசூடி
உனைவந்து காணுகின்றேன் பெண்ணே;
விடைகொடுப்பாய் மானே என்பான்!
அவன் பேச்சென்னவோ தேனுகத்தான் சொட்டும்;
ஆனல் என் இதயத்தில் அது தேளாகவன்றோ கொட்டும்!

*

* ''பரந்துபடு கூர்எரி கானம் நைப்ப
மரந்தீயுற்ற மகிழ்தலை அம் காட்டு
ஒதுக்கு அரும் வெஞ்சுரம் இறந்தனர் மற்றவர்
குறிப்பின் கண்டிசின் யானே நெறிப்பட
வேலும் இலங்குஇலை துடைப்பப் பலகையும்
பீலி சூட்டி மணிஅணி பவ்வே
பண்டினும் நனிபல அளிப்ப இனியே
வந்தன்று போலும் தோழி நொந்து நொந்து
எழுது எழில் உன் கண்பாவை
அழிதரு வெள்ளம் நீந்தும் நாளே''

*

(நற்றிணை : பாடல் 177
பாடியவர் : (பெயர் தெரியவில்லை)

பொருள் விளக்கம் :

கூர்எரி = மிகுந்த தீ. கானம் = காடு. நைப்ப = அழிந்துபட. ஒதுக்கு அரும் வெஞ்சுரம் = ஒதுங்குதற்கு நிழலுமில்லாத வெம்மையான நிலப்பகுதி. இறந்தனர் = சென்றனர். பலகை = கேடகம் அல்லது கேடயம். பண்டினும் நனிபல அளிப்ப = முன் போலன்றி என்னிடம் அளவிலா அன்புகாட்டி.

*

இளையோன் எதற்கும் இளையோன்!

கலகலவெனக் காலில் ஒலித்த
சதங்கையைக் கழற்றி; வீரக்
கழலினை அணிந்த இளங்கன்று அவன்!
பின்னிச் சடையிட்ட நீள்குடுமி கலைந்து
மின்னிடும் வாளேந்தி நிற்கின்ற சிறுவன் அவன்!
மெல்லிய கரங்களில் எழில் வளையல் நீக்கி
வில்லினைத் தோளில் தாங்கிய இளைஞன் அவன்!
ஐம்படைத் தாலியினை இன்னும் மார்பில் பூண்ட
அறியாப் பருவத்தினன் அவன்!

பாண்டிய மரபில் வந்த அந்தப் பாலகனே
பலமுண்டு பகையழிக்கத் தன் தோளுக்கென்று
படை நடத்தத் தலைமை ஏற்றான்;
பார் அதிர முரசொலித்தான்!
கடும் எதிர்ப்பின் தலை மிதிக்கப் புறப்பட்டுக்
களம் சென்று வெல்வேன் என்று சூளுரைத்தான்!
நெடுஞ்செழியன் என்கின்ற பெயருடையான்;
நிமிர்ந்த தலை வளையாத புகழுடையான்!
உடைவாள் ஓங்கி உறுமுகின்ற அச்சிங்கக் குட்டிதனை
இடைக்குன்றூர் கிழார் எனும் புலவர், இவ்வாறு
பலபடப் பாராட்டி வாழ்த்துப் பாடி
பால்மணமும் மாறுத பச்சிளம்பசலை என்றார்.
அந்தப் பாண்டிய இளவலைப் பாடி மகிழ்ந்த
செந்தமிழ்ப் பாவலர் பல்லோர் ஆவர்!

குன்றூர் கிழார் மற்றும் குறுங்கோழியூர்க் கிழார்,
குடபுலவியனார், கல்லாடனார் - மதுரைக்
கணக்காயனார் மகன் நக்கீரனார் - அவன்
கொலுமண்டபத்துப் புலவர் ஏறு
மதுரைக் காஞ்சி பாடிய
மருதனார் என்னும் மாங்குடிக் கிழார்;
இத்தனைச் சான்றோர் தமிழ்க்கவி கேட்டு



பத்தரை மாற்றுப் பசும்பொன் பாண்டியன்
சித்திரத் தமிழால் கவிதை யாத்திடும்
சிறப்பினைப் பெற்று செருக்களம் புகுந்தவன்!

வயதில் இளையோன் பாண்டியன் என்று,
வலியோர் ஐந்து வேளிர் துணையுடன்;
சேர சோழ முடிமன்னர் இருவர்,
போரில் குதித்து ஓலை அனுப்பினர்!
வேளிர் வேந்தர் ஐவர் படையும்
வில், புலி பொறித்த கொடியுடை மன்னர்
இருவர் படையும் இணைந்து மோதிட;
எழுவரை எதிர்க்க இயலுமோ என்று
இளஞன் பாண்டியன் கலங்கவே இல்லை!

''ஒடுங்கி அடங்கிடுக! அல்லால்; உயிர்
ஒழிந்து போக நேரிடும்!'' என்ற
ஓலை கண்டு உரக்கச் சிரித்தான்!
ஒளிந்திடும் மரபல்ல போருக்கென்றான்!

''இளவயது எனக்கென்று ஏளனம் புரிகின்றீர்
எதிர்ப்போர் வயதும் படையும் என் முன்னே
எப்பாடு படப் போகின்றதென்று
இக்கணமே தெரிவிக்கின்றேன்!
ஓலை கொண்டு வந்தவனே! உடன்
ஓடு நீ; உன் ஏழு மன்னரிடம்! வீர
வேலை, கரம் ஏந்திவிட்டான்; இந்த
விடலையாம் செழியன் என்று நான்
விடை தந்ததாக அறிவித்திடுக!'' என்றான்!
''தலையாலங்கானத்துப் போர்க்களம் புகத்
தயாராகட்டும் தென்பாண்டிப் படை'' என்றான்!

அப்போது,

மாங்குடி மருதனர் இடைமறித்து; ''பாண்டி
மன்னர் குலக் கொழுந்தே! இந்தப் பாவலன்,
மறுப்பதாக எண்ண வேண்டாம்....
மாற்றார் வலிமையினைக் காணும்போது
தோற்றோம் இறுதியில் நாம் என்றே முடிவு வரும்!
எச்சரித்தல் என் கடமையென்ற காரணத்தால்,
இனியும் சிந்தித்துப் போர்தவிர்த்தல் நலமாகும்'' என்றார்!

மீன்கொடிப் பாண்டியனே; மாங்குடி
மருதனர் மொழி கேட்டு, அவர் முன் சென்று;
' மான்குட்டி போல் இருக்கின்றேன், அதனாலே

மாற்றூர் எனும் புலிப்போத்தின் வாய்க்குள்ளே
இரையாக மாறிப்போவேன் என்று
இரங்கலுரை இப்போதே ஆற்றுகின்றீர்.
அச்சம் தவிர்த்திடுக அய்யனே! இறந்தபின்னர்
எச்சமெனத் தமிழன் விட்டுச் செல்வது மானமொன்றே!
அந்த மானத்தைப் பகைவர் காலடியில் பூவாக்கிப்
போட்டுவிட்டு,
சொந்த வாழ்க்கைதனை சுகமாக ஆக்கிக் கொள்வோன்
சோற்றூலடித்த பிண்டமாவான் - நூல் அறுந்தக்
காற்றூடிப் பட்டமாவான்!

தமிழுக்குத் தலைவணங்கும் நெடுஞ்செழியன் நான்;
தகவிலார்க்குத் தலைவணங்க ஒப்பமாட்டேன்!
எழுவரென்ன எழுபது கோடிப் பேர்
எட்டுத் திசையும் முரசு கொட்டி,
எதிர்க்க வரினும் என்னை - இந்த
இளையோன் எதற்கும் இளையான் என்ற
இலக்கியத்தைப் படைக்கின்றேன் போர்க்களத்தில்!

பாண்டியத்துப் பெருமண்ணில், வெறும்
ஆண்டிகளோ வாழ்கின்றூர்? இல்லை! இல்லை!
குலமாதா பாண்டித்தாய்; கோழைகளைக்
குழந்தைகளாய்ப் பெற்றெடுக்கவில்லை! இந்த
நிலமகளின் பெருமைக்கு மேலும் பெருமை,
நெடுஞ்செழிய இளைஞனவன் சேர்ப்பான் என்று
நம்பிடுவீர்; நாட்டோரே! நல்லோரே!'' என முழக்கி;
''நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்'' எனும்
நரம்பெலாம் வீரம் மீட்டும் புறப்பாட்டை
நாடாளும் இளமன்னன் இயற்றலானான்!

அப்பாட்டில்

* அணிதேர்ப் புரவியும் ஆனைகளுடனே
ஆட்பெரும்படையும் மிகக் கொண்டதால், நம்மை;
இழித்தும் பழித்தும் ஏளனம் செய்தும்
இளையோன் என்றும் சிறுமொழி கூறிய
எதிரிகள் எழுவரின் இடுப்பை ஒடித்து
தலையாலங்கானப் போரில் வென்று - அவர் தம்
அலைகடற் படையை அறவே அழித்து
நிலைகுலைந்த பகைவரை முரசொடு பிடித்து
மலையென நிமிர்ந்து நிற்பேன் கண்டீர்!
எழுவரிடம் எதிர் நிற்க முடியாமல் நான்

விழுவதானநிலையொன்று தோன்றுமாயின்
குடிமக்கள் நலம் பேணுக்
கொடுங்கோல் மன்னன் எனக்
குவலயம் எனைத் தூற்றட்டும்!

தோல்வி என்னைத் தழுவுமாயின்
தொழுதேத்தி எனை நாடி
இல்லையென்று இரப்போர்க்கு
எதுவும் வழங்காத பாவியென
வையம் இகழுமளவுக்கு
வறுமை வந்தென்னை வருத்தட்டும்!

வெற்றி மாலை என் தோளை வெறுத்துவிட்டால்
உற்றூர் அனைய எளியோரின் துயர்போக்க
உதவிட முடியா நிலை எனை வந்தடையட்டும்!
மாற்றூர் கை ஓங்கி நிற்க - நம்
மறவர் படை தாழ்ந்து விட்டால்,
மாங்குடி மருதனூர் தலைமை தாங்க
மாங்குயிலோசைத் தமிழ் மொழியில்
பாப்புனையும் பாவாணர் அனைவருமே
பாண்டியத்தை இனிப்பாடுவது சிறப்பல்ல என்று இந்த
நெடுஞ்செழியப் பாண்டியனை நீங்கி
நெடுந்தொலைவு சென்றிடட்டும்!''

இவ்வண்ணம் சூளுரைத்த பாண்டி மன்னன்
செவ்வண்ணம் கண்ணில் தேக்கி - படைக்குத்
தலைமையேற்றுச் சென்றிட்டான்;
தலையாலங்கானப் போர்முனை நோக்கி!

*

சூளுரைக் கவிதையைப் பாண்டியன்
சுளைத் தமிழில் வடித்தபோதும்;
சுற்றத்தார் அனைய எளியோர் காத்தல்,
கொற்றவர்க்குரிய கொடையளித்தல்,
பற்றுக் கொளல் குடிமக்கள்பால்,
கற்றறிந்த புலவர் கூட்டம், நாடு போற்றிக்
கவிபுனைதல் - இந்நான்கும்,
உயிரே போல் கருதி வாழ்ந்த
உயர்தனிப் பண்பாட்டையன்றே
உறுதியாக உரைக்கின்றன்!

இதையெண்ணி மகிழும் காலை - நம்
இதயம்; தமிழ் உணர்வால் மலரும் சோலை!

*

* ''நகுதக் கனரே. நாடுமீக் கூறுநர்;
இளையவன் இவன் என உளையக் கூறிப்,
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும், தேரும், மாவும்,
படைஅமை மறவரும், உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்குஅகப் படேஎன் ஆயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணது
கொடியன்எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக, என் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே''


*


(புறநானூறு : பாடல் : 72
பாடியவர் : தலையாலங்கானத்துச் செருவென்ற
பாண்டியன் நெடுஞ்செழியன்)

பொருள் விளக்கம் :

நகுதக்கனர் = சிரிக்கத் தக்கவர்.
மீக்கூறுதல் = அதிகமாகப் புகழ்தல்.
உளையக் கூறி = வெறுத்து வருந்துமாறு சொல்லி.
பாவடிப் பணைத்தாள் நெடுநல் யானை = பரந்த அடியும் பெரிய காலுங் கொண்ட உயர்ந்த யானை.
உறுதுப்பு அஞ்சாது = என் மிகுந்த வலிமைக்கு அஞ்சிடாமல்.
வரைக என் நிலவரை = என் நாட்டை விட்டு நீங்குக.
புரப்போர் புன்கண் கூர = சுற்றத்தார் போல் பாதுகாக்கப்பட வேண்டியவர்களின் துயரம் மிகுந்திட.

*





'குக்கூ!' என்றது கோழி!

தும்பை மலர்; மாரியெனப் பொழிவதுபோல்
துறவிகளின் வெண்தாடி, தரையளவு நீண்டதுபோல்
தூய நல்லருவி வழிந்தோடும் சுனையொன்றில்
தோகையவள் நீராடித் துள்ளியோடி
துகில் நனைந்த காரணத்தால்
கட்டழகு உடல் முழுதும்
கண்ணுடிப் பெட்டிக்குள் இருப்பதுபோல்
காட்சி தந்தாள்; அவ்வேளை;
கண்டயர்ந்தான் ஒரு காளை!

''மலர்ந்த தாமரைப் பூக்கள் இரண்டு
மார்பினில் தலைகீழாய்க் கவிழ்ந்ததுவோ? அவற்றின்
தண்டுகள், அடிவரை வெட்டுண்டு
வண்டுகள் போலக் குந்தியதோ? - கருங்
காம்பிரண்டு கொண்டுருண்ட கனிகுலுங்க
கவர்ச்சிக்கோர் கொடுமுடியாய் நிற்கின்றாளே!
சிலந்திவலை இழையெடுத்து நெய்திட்ட சேலை எழில்
சிந்த அவளுடுத்தி எறிகின்றாள் விழிவேலை!
வாழைத் தண்டெடுத்து வடிவமைத்த தொடையினிலே
தாழை மலர் நிறமெடுத்துத் தடவியது யாரோ?
சந்தன வண்ணத்து மெழுகு கொண்டு - இந்தச்
சுந்தரச் சிற்பத்தைப் படைத்திட்ட இயற்கைக்கு,
கோடிப்பொன் பரிசாகக் கொட்டிக் கொடுத்தாலும் அப்பரிசு;
மூடித்திறக்கும் அவள் இமையிரண்டின் அழகுக்கு ஈடாமோ?''

ஆடிப் போனான் காதல் வேட்கையினால் அவ்விளைஞன் -
அவளோ,
ஓடிப்போனாள்; ஒளிந்தொருவன் தன்னையே பார்த்தல் கண்டு!
விண்மீன் வானத்தில் வீழ்கின்ற வேகத்தைக் கண்டுள்ளான்;
தண்ணிலவு, தடால் எனப் பாய்ந்து மறைகின்ற காட்சியினைக்
குன்றருவிப் பக்கமுள்ள பாறையின் பின்னிருந்து
இன்றவன் கண்டான் நேரில்!
உயிரையும் நினைவையும் அங்கு விடுத்துத் தன்
உடலை மட்டும் ஏற்றிக்கொண்டான் தேரில்!

*

மறுநாளும் அவன் வந்தான் அருவியோரம்;
மறதியினுல் விட்டுச் சென்ற தன்னுயிரைத் தேடி!
உயிர் மட்டுமா கிடைத்ததங்கே - அந்த
உயிர் போன்ருள் தரிசனமும் கிட்டியது!
முதல்நாள் அனுபவத்தால் அந்த அழகு ரோஜா, தோழியெனும்
முள்ஒன்றைப் பாதுகாப்புக்கு அழைத்து வந்திருந்தாள்!
பக்கத்தில் காவலாக நிற்கின்ற தோழிதனைப்
பார்த்த வீரன் முதலில் பயந்தான் எனினும்
பக்குவமாய் அந்தப் பாங்கி மூலம்
பாவையினைப் பெறலாமெனக் கணக்கிட்டான்.

*

தோழி வாழும் இடமறிந்து
கோழி கூவுதற்குமுன் அவள் வீடு சென்ருன்.

''எதற்காக வந்தீர்?'' எனச் சற்று
இடக்காகத் தோழி கேட்க; ''யாரும்
பறிக்காத மலராம் உன் தலைவிதனை
மறுக்காமல் அவள் பெற்ருேர் எனக்களிக்க
உன் துணையை வேண்டி வந்தேன்
ஊண் உறக்கமின்றி அலைகின்றேன்'' என்ருன்.

''தாய்தந்தை விருப்பம் பின்னர் - முதலில்
தளிர்க்கொடியாம் என் தலைவி விரும்பவில்லை உம்மை!
தடம்பார்த்து நீர் திரும்பிச் செல்வதுதான் நன்மை! - வேறு
இடம்பார்த்துக் கொள்வீர், காதல் வலைவீச!'' என்ருள்.

''ஏன் என்னை வெறுக்கின்ருள் என்று
கூன்பிறையை நெற்றியாகக் கொண்டவளைக் கேட்டறிய
நான் சற்று அவளருகே செல்வதற்கு அனுமதிப்பாய் தோழி!
மான் விழுங்கும் புலியல்ல நான்! நீ வாழியவே வாழி!''
என்ருன் அவன்.

''தனித்தொரு பெண் நீராடுமிடத்தில் குறும்பு செய்தல்
தக்கதோர் பண்பாடன்று - இது தலைவியின் கருத்து'' என்ருள்.

''பனித்துளியில் குளிக்கின்ற பூ ஒன்றைப் பார்ப்பது போல்
பார்த்து விட்டேன்
இனித் தவறு செய்யமாட்டேன் இரக்கம் கொள்ளச் சொல்க!''
என்ருன்.

''என்னடி பேச்சு அவரோடு?'' எனச் சீறிப்
பொன்னடி சிவப்பேறப் பூமேல் நடந்து
சின்ன இடை மின்னல் ஒளிப்பாவை;
மன்னர் மகள் போல மமதையுடன் சென்றுவிட்டாள்!

கன்னியொருத்தியின் கடுமொழியும்
காதல் வயப்பட்ட காளையர்க்குக்
கற்கண்டாய் இனிக்குமன்றே? - ''என்
ஆவிதனைத் திருகிக்கொண்டு போகின்றாள்;
பாவியெனக்காக உருகி அருள்பாலிக்கச் செய்'' என்றான்!

''தலைவியொரு முடிவெடுத்தால்
தலைபோக நேரிடினும் மாற்றமாட்டாள் - உமது
தவம் பலிக்குமா - பார்ப்போம்'' என்று
தாவிப் பாய்ந்தோடித் தலைவியுடன் சேர்ந்துகொண்டாள்!

*

அந்திமாலை வருமட்டும் அங்கேயே தனியாக நின்றான்;
அதன்பின்னர் தோழி இல்லம் நாடிச் சென்றான்.

''கொய்யாப்பழம் தின்ன வரும் அணிலே கேள்!
மெய்யாகத்தான் கூறுகின்றேன், என் தலைவி மெய்தீண்டல்
முயற்கொம்பே!'' என முடிவுரைத்தாள்!

கயல்நிகர்த்த விழியாளின் காலைத்தான் பிடிக்கவில்லை அவன்;
''தோழிப்பெண்ணே! தொல்புவியின் இன்பமெலாம்
தொகுத்தளித்தாலும் தொடமாட்டேன்!
ஆழிசூழ் உலகனைத்தும் ஆள்க என
அனுமதித்தாலும் ஏற்கமாட்டேன்!
இனி அவளில்லா வாழ்வெனக்கு,
இலுப்பைப்பூ! எட்டிக்காய்! அறிக!'' என்றான்.

''காலையென்றும் மாலையென்றும்
காரிருள் என்றும் கடும்பகல் என்றும்
பாராமல் எனை வருத்திப்
'பாங்கி விடுதூது' நடத்தப் பார்க்கின்றீர்!
வேறுமக்கு வேலையேதும் கிடையாதோ? இறுதியாகக்
கூறுகின்றேன், போய்விடுக!'' என்றாள்.

அதற்கு அவன்;

(1) காலையும் பகலும் கதிர்சாய் மாலையும்
கண்ணுறங்கும் இரவும் கருக்கல் வேளையும்
காதலர்க்குப் பகுத்துணர முடியுமாயின்
அக்காதல் போலிக் காதல் என்பேன்!
அதனால்தான் பொழுதுபற்றிக் கவலையின்றி
அவளை எண்ணி அலைகின்றேன்.
அடைவதற்கு வழியில்லையென்றால்,
பனைமடலால் செய்திட்ட
பரியொன்றில் ஏறிக்கொண்டு

மடலூர்வேன் மங்கைக்காக! - அந்த
மாபழிதான் அவள் தலையில் வீழும்!
பாவம், இந்த இளைஞனது காதலைத்தான்
பாவிமகள் புறக்கணித்தல் பெருந்தீது என
பார்ப்பவர்கள் பதைத்துப்போய்
பறைசாற்றி வசை பொழிவர் - அந்த
ஊர் தூற்றல் அவளுக்கு வேண்டாமெனில் நான்
உயிர் துறத்தல் ஒன்றே உயர் வழியாகும்'' என்றான்.

சாதலுக்கும் துணிந்த காதல் கொண்டவன்பால் இனி
மோதல் கூடாதென முடிவெடுத்து முறுவலித்தாள்!
தலைவியிடம் அவன் தூய காதல் கூறித்
தலையசைத்துச் சம்மதிக்க வைத்தாள்!
பிறகென்ன? பெரியோர்கள் முன்னிலையில்
பெற்றூர் உற்றூர் மகிழ்ந்திடவே
நிறைவேறிற்று மணவிழா நிகழ்ச்சியெலாம்!

கற்றூர்கள் இன்பத்துப் பாடம்,
கட்டிலறைப் பள்ளியிலே - பின்னர்
கற்பிக்கத் தயாரானார்,
அற்புதக் கலைகள் எல்லாம்;
ஒருவருக்கொருவர் உயிராகி; உறவாடி!

*

இடையிலோர் நாள் இராப்பொழுதெல்லாம்
இன்பத்தில் மிதந்து ஆழ்ந்தவளைக்
காலையிலே தோழி கண்டு
''கடந்துபோன இரவு; கனிச்சாறு? தேன்பாகா?'' என்றாள்!

கன்னத்தில், கழுத்தில் பற்குறியும் - நகச்
சின்னத்தை அதற்குக்கீழும் மறைப்பதற்கு
முயன்றவாறு நாணத்தால் தலைவி முகம் சிவக்க,
முன்னிரவு நடந்த கதை முழுக்கதையும் சொல்லாமல்,

(2) ''வேதனையைக் கேளடி தோழி!
விடியாமலிருக்கும் பொழுதென்று எண்ணி
விளையாடிக் கொண்டிருந்தோம்!
விடிந்ததென்று கோழி ''குக்கூ'' என்றவுடன்
தோள் தோயக் கிடந்த காதலனைப் பிரிக்க
வாள் போல வைகறையும் வந்ததடி!'' என்றாள்.

இவ்வாறு

கண்கலங்க உரைத்திட்ட தலைவிதனைத் தேற்றி
''காதல் எனில் கசக்குதென வெறுத்திட்டாய் அன்று;

காலைப்பொழுது கண்டு கடுங்கோபம் கொள்கின்றாய் இன்று!
வசை பாடாதே வைகறையை! இன்ப
இசை பாட மீண்டும் இரவு வரும்'' என்றாள் தோழி!
''அருவிக்குச் செல்லலாமா குளிக்க?'' என்றாள் தலைவி!
''அங்கு நான் எதற்கு? அவர் இருப்பார் உனக்குத் துணைக்கு''
என்றாள் தோழி!

*

(1) காலையும், பகலும் கையறு மாலையும்,
ஊர்துஞ்சு யாமமும், விடியலும், இன்றுஇப்
பொழுதுஇடை தெரியின், பொய்யே காமம்;
மாவென மடலொடு மறுகில் தோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே;
வாழ்தலும் பழியே - பிரிபுதலை வரினே!

(குறுந்தொகை : பாடல் : 32
பாடியவர் : அள்ளூர் நன்முல்லையார்)

(2) குக்கூ என்றது கோழி; அதன்எதிர்
துட்கென் றன்றுஎன் தூய நெஞ்சம் -
தோள்தோய் காதலர் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தென்றூல் எனவே!

(குறுந்தொகை : பாடல் : 157
பாடியவர் : அள்ளூர் நன்முல்லையார்)

பொருள் விளக்கம் :

(1) ஊர்துஞ்சுயாம = ஊர் உறங்குகிற இரவுப்பொழுது.
பொழுதிடை தெரியின் = பொழுதுகளின் தன்மை தெரியுமானால்.
மா = பரி அல்லது குதிரை. மடல் = பனைமடல்.
மறுகில் = தெருவில்.

(2) துட்கென்று = அதிர்ச்சியால் திடுக்குற்று.
தோள்தோய் = தோளைத் தழுவிக்கிடத்தல்.
வைகறை = விடியற்காலை.

*

கவிஞர்கள் தொடர்ந்த பண்ணீரும் வடித்த கண்ணீரும்!

உறை விட்டெழுந்தது வாள் என்றுல்,
ஒரு பகைப்புலம் ஒழிந்தது பார் என்று
உறையூரில் ஆண்ட மன்னன் - தமிழ்
உலகு புகழ் சோழ மன்னன்!

வளமுற்ற பொன்னி நிலப் பெருவேந்தன் - கண்ணில்
குளமுற்றிருவர் வந்துவிட்டால் உளமுருகி வரவேற்று
அளவற்ற பொற்குவியல் கொடையாய் வழங்கிடுவோன்
குளமுற்றம் எனும் ஊரில் இயற்கை எய்தியதால்
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என
வாழும் வரலாற்று இலக்கியத்தில் நிலைத்திருப்போன்!

புறநானூறுக் கருவூலத்தில் இவன் பெருமைதனைப் பாடுகின்ற
புகழ்க் கவிதை பல உண்டு! பாடிய புலவர்களும் பலராவர்!

''பசுவின் காம்பை அறுத்திடும் பாவிகட்கும்
பாவையின் கருவை மிதித்துச் சிதைத்தோர்க்கும்
பாசமிகு பெற்றோரை வதைத்தோர்க்கும் மன்னிப்பு
உண்டெனினும்



பார்முழுதும் தலைகீழாய்த் திசைமாறிக் கவிழ்ந்தாலும்
பாதகராம் நன்றியினைக் கொன்றோர் வாழ்வு
பாழ்பட்டே நாசமாகு''மென்று - அவன்பால்
பரிசுபெற்ற ஆலத்தூர்கிழார் எனும் பாவாணர்,
பரிவுடனே நன்றிகூறி நல்வாழ்த்துச் சொன்னார்.

கருவூரைக் கிள்ளி மன்னன் முற்றுகையிட்டபோது,
''காவல் மரங்கள் சாய்கின்ற ஒலி கேட்டு;
அரண்மனைக்குள் ஒளிந்துகொண்டு அஞ்சி நடுங்கும்
ஆண்மையற்ற கோழையினை வெற்றிகொளல் பெருமையாமோ?''
என -

கிள்ளிவளவன் முன் சென்று அந்த ஆலத்தூர்கிழார்
அள்ளிப் பொழிந்த அறிவுரைப் பாடல் கேட்டு
துள்ளி வந்த படையுடனே திரும்பிச் சென்றான் -



கொள்ளி மீது வீழ்ந்த புழு மீண்டது போல் மீண்டான் கருவூர் மன்னன்!

ஆலத்தூர் கிழாரை யடுத்து அரிய பாடலொன்று
ஆவூர் மூலங்கிழார் அவன் மீது பாடியுள்ளார்.
''ஆற்றல்மிகு அடலேறே! அரசர்க்கரசே!
அனல் பறக்கும்; நீ சினங் கொண்டால்!
அருள்கொண்டு நீ பார்த்தாலோ அவ்விடத்தே,
சுடர்ப் பொன்மணிகள் ஒளி உமிழும்!
கோடைக் கதிரவனைக் குளிராக்கிக் காட்டிடவும்,
குளிர்நிலவை தணலைப் போல் சூடாக்கித் தந்திடவும்,
கொற்றவனே உன்னால்தான் முடியும்'' என்று
நற்றமிழால் போற்றியுள்ளார் அப்புலவர்!
''காலனும் காலம் பார்ப்பான், உயிர் மொண்டு செல்ல;
- சோழர் குலக்

காவலனே! நீயோ; களத்தில் பகைவர் உயிரை
நினைத்தவுடன் ஒரு கணத்தில் போக்குகின்றாய்!'' - என்று
வினை முடிக்கும் அவன் வீரத்தை வியந்துரைக்கும்
கோவூர்கிழார்;
''விறகு வெட்டச் சென்றவர்க்குக் காட்டில் பொன்
கிடைத்தாற்போல்
வேந்தன் கிள்ளியிடம் வந்தோர்க்கெல்லாம் பரிசுப் போருள்
கிட்டும்'' என்று கூறுகின்றார்.

''தாய்ப்புலி; தன் குட்டிதனைக் காப்பது போல்
தமிழ்க்குலம் காக்கின்ற வேந்தன் நீதான்!
கரும்பிடைத் தேனும், கடைமடை வாளை மீனும்,
கன்னியர் பறித்து வரும் செங்கழுநீர்ப் பூவும்,
கழனியில் உழுவோர் கண்டெடுத்த ஆமைகளும்
காவிரியின் நீர்ப் பெருக்கால்
திரும்பிய பக்கமெலாம் நெல்மணியும்
திகழ்சோழ வளநாட்டை ஆளுகின்ற கோவே!'' என்று
இடைக்காடனார் எனும் புலவர்;
ஏற்றிப் புகழுகின்றார்; கிள்ளிவளவனையே!

''வெயிலுக்கு மறைக்கின்ற குடையல்ல; வேந்தே -
உந்தன் குடை; அது,
வேதனைப்படாமல் குடிகளுக்கு நல்லாட்சி தருகின்ற
வெண்கொற்றக் குடையாகும்.
வெள்ளப் பாழ் வறட்சியினால் பாதிக்கப்பட்டாலும்

உள்ளம் தளராமல் உழைக்கின்றார் வேளாண் குடியினர்
போர்முனையில் உன் வீரர் தீட்டுகின்ற வெற்றியெலாம்
ஏர்முனையின் துணையின்றி நடவாது என்பதாலே;
மழவர் குலம் வாழ வைக்க
உழவர் குலம் போற்றி வாழ்க!'' என்று
வெள்ளக்குடி நாகனார் எனும் புலவர்
வேந்தனுக்கு அறிவுரையும் வாழ்த்தும் சொன்னார்!

''ஆடுகின்ற மங்கையரின் இடையைப் போல்
நாடு முற்றும் வறட்சியினல் மெலிந்த போதும்
கருணை மழை பொழிந்து எமைக் காக்கும்
காவிரிசூழ் வளநாடன் கிள்ளிவளவன்'' என
நல்லிறையனார் எனும் புலவர்
நயமிகு உவமையுடன் போற்றுகின்றார்!

''இயற்கையின் சீற்றத்தால் இவ்வுலகே அழிய நேரிடினும்
எதற்கு நாம் அஞ்ச வேண்டும் கிள்ளிமன்னன் இருக்கையிலே''
என்று

எண்ணற்ற புகழ் முத்துக் கவியாரம் தொடுத்தார்;
எருக்காட்டூர்ப் புலவர் தாயங் கண்ணனார்! .....அவர்
தஞ்சைக் குளிக்கரைக்கு அருகில் வாழ்ந்த
தமிழ்ப் புலவரேறு என கூறிடுவர் ஆய்வாளர்!

இவ்வாறு,

ஆவூர் மூலங்கிழார், ஆலத்தூர்கிழார்,
ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார்,
நல்லிறையனாருடன், மாறோக்கத்து நப்பசலையார்,
எருக்காட்டூரார், இடைக்காடனார்,
வெள்ளக்குடி நாகனார், கோவூர்கிழாரெனப்
புலிகள் எல்லாம் சூழ்ந்துகொண்டு சிங்கத்தைப் புகழ
புகழ்பெற்ற அச்சிங்கம் புள்ளிமான் ஒன்றைத் தேடிச்சென்று
புறப்பாட்டால் வாழ்த்துரைத்து வணங்கிய கதை போல
சிறுகுடி யெனும் சோழ நாட்டுச் சிற்றூரில்
தருநிழல் போல ஒரு நண்பன் உண்டு கிள்ளிக்கு! அப்
பெருங்குடிக் கிழவன் பண்ணன் நிலத்தில்
அறுவடையாகும் நெல்மணி யாவும் வறியோர்க்கு
அளித்தனன் நன்கொடையாக என
அறிந்ததும் கிள்ளி அகமிக மகிழ்ந்து ஆங்கு சென்றான்.
அவனுக்குப் ''பசிப்பிணி மருத்துவன்'' என்று பட்டமும்
ஈந்தான்!

''வான் போலக் கொடை வழங்கும் பண்ணனே - நீ
யான் வாழும் நாளும் சேர்த்து வாழியவே!'' என்று
புறப்பாடல் ஒன்றெழுதி அவன் கையில் கொடுத்துப்
புறப்பட்டான்; தலைநகராம் உறையூரை நோக்கி!

மாற்றூர் எப்படை கொண்டுவரினும்; இவனிடம்
தோற்றூர் என்றே வீரவரலாற்றைத் தீட்டிய வளவன்;
ஆவின் பாலொத்த அருள்வடியும் முகத்தழகன்,
சாவின் பிடிதனிலே ஒரு நாள் சாய்ந்து விட்டான்...
செய்தி கேட்டு செவிப்பறை கிழிந்தது போல்
செந்தமிழ்ப் புலவர் கூட்டம் சிந்தியது கண்ணீர் அருவி!

''இறந்தோரைப் புதைப்பதற்குத் தாழிதனைச் செய்வதிலே
சிறந்தோரைக் கேட்கின்றேன்; எம்மன்னன்
கிள்ளியினை வைத்துப் புதைக்கின்ற தாழி யெனில்
கீழ்த்திசை மேற்றிசை வானத்தை வளைத்து வைத்து
நிலவுலக முழுவதையும் குயவர் ஆழியாக அமைத்து
நிமிர்ந்து நிற்கும் மேருமலையை மண்திரளாய்க் கொண்டன்றே
தாழி செய்தல் வேண்டும்!
பூத உடல் புதைப்பதெனில் பொருந்தும் உம் தாழி - கிள்ளியின்
புகழ் உடலை வைப்பதற்கு இந்தப் பூதலமே ஏற்ற தாழி''
- என்று
சோகமுடன் ஐயூர் முடவனூர் இரங்கற்பா எழுதும்போதும்
சோழனது கீர்த்திக்கு எல்லையில்லை என்று கண்டார்!

''நன்றியில்லா கூற்றுவனே! எத்தனைப் பகைவர்களைப் போரில்
கொன்று தந்தான்; நீ தின்று கொழுத்தாய்!
இன்று நீ அவனையே தீர்த்து விட்டாய் -
இனி யார் உனக்கு இருக்கின்றார் தீனி போட?'' என்று
ஆடுதுறை மாசாத்தனார்; அவன், களத்தில்
நீடுபுகழ் பெற்ற கதை சொல்லிக் கண்ணீர் விட்டார்!

மாறேற்கத்துக் கவியரசி நப்பசலை எனும் பெருமாட்டி
மாமன்னன் மறைவுற்ற செய்தியினை நம்பவில்லை.
குளமுற்றம் அரண்மனைக்குப் பறந்து போனார் - அங்கே
களம்பட்ட யானை போலக் காவிரிநாடன் கிடந்தான்;
காயமேதும் உடலில் இன்றி!

உளம் பதறி நப்பசலை கேட்கின்றார்;
உண்மைதானே நான் காணும் காட்சி?
உரைத்திடுவீர்; உறையூர் மன்னர்தம்
உயிர் பறிக்கும் ஆற்றல் சாவுக்கு உண்டா சொல்வீர்!

பின் எப்படித்தான் நடந்ததிந்தச் செயல்?
என் மனதில் பட்டதை நான் இயம்புகின்றேன் - கேளீர்!
என்றூர்.

* பொன் ஒளி சேர் மாலை யணிந்து
மின்னொளி யாய் வாள் வீசி
மண் மீது மாற்றூர் படை அழிக்கும்
திண் தேர் வளவனை யாரும் வெல்லுதல் அரிதே!
வளவன் உயிர் கொண்ட சாவு; நெஞ்சில்
வஞ்சப் பகை கொண்டோ; அன்றி நேர்நின்று தன்
வலிமை காட்டிப் போர் புரிந்தோ - அன்றி
வரிந்து கட்டி அவன் உடல் தீண்டி வலைத்துப்
போட்டோ
வென்று விட்டதாய் நான் எண்ணவில்லை; அவனைக்
கொன்று செல்ல வந்த சாவு; ஒலைச் சுவடியுடன் ஒரு
புலவரைப் போல் வேடமிட்டு கை தொழுது அவன்
உயிரைப்
புதிய பரிசாகக் கேட்டுப் பெற்றிருக்கும் - அல்லால்
அவன் உயிரை எடுப்பதற்கு
எவனுக்கும் உடலில் உரமே இல்லை!

இவ்விதம்,

அப்பழுக்கற்ற அன்பின் பெருக்கத்தால்
நப்பசலைப் பெருமாட்டி பாடியதும் உண்மைதானே!
செப்பரிய திறமுடைய செம்பியனும் கிள்ளியின்
ஒப்பரிய புகழ்மணக்கும் தமிழர் நாட்டின்
பெருமை யெலாம் காப்பதற்கு முன்வராமல்
பேய்க் காற்றில் ஒடிந்து விழும் மரமாக இனப்பெருமை
ஆகலாமோ? உணர்ந்து சொல்வீர்!

*

* ''செற்றன்று ஆயினும், செயிர்த்தன்று ஆயினும்,
உற்றன்று ஆயினும், உய்வின்று மாதோ;
பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி,
இரந்தன்று ஆகல் வேண்டும் - பொலந்தார்
மண்டமர் கடக்கும் தானைத்
திண்தேர் வளவற் கொண்ட கூற்றே.''

*

(புறநானூறு : பாடல் : 226
பாடியவர் : மாரோக்கத்து நப்பசலையார்)

குறிப்பு : பயன்படுத்தப்பட்ட புறநானூறு பாடல்களின் எண்கள் :

34, 36, 38, 41, 70, 42, 35, 393, 397, 173, 228, 227

பொருள் விளக்கம் :

செற்றன்று ஆயினும் = மனத்தில் சினங்கொண்டாவது. செயிர்த்தன்று ஆயினும் = வெளிப்பட நின்று போர்க்குரல் கொடுத்தாவது. உற்றன்று ஆயினும் = உற்று நின்று கைகலந்து மெய் தீண்டியாவது. உய்வு அன்று = பிழைக்க இயலாது. பொலந்தார் = பொன்மாலை. மண்டமர் = போருக்குப் பெருகி வந்த படை. கூற்று = சாவு.

*



''பால் நிலவு பாலையிலே காய்வது போல்
பருவக் கிளிநான் பயனற்றுப் போய்விடவோ?

வேல் தூக்கி விண்ணதிர வீசுகின்ற கண்ணுளா - சற்று
விழிதூக்கி என்நிலையை நோக்கிடுக!

கண்ணெல்லாம் குளமாக நிற்கின்றேன் - ஒரு
பெண்ணென்றுல் பேய்கூட இரங்குமாமே!

என்னதான் எனக்கு விடை அளிக்கின்றாய்? - அன்றுனக்கு
கன்னலாகச் சுவைத்தநான் இன்று கசந்ததுதான் - ஏன்;
சொல்வாய்!''

சேல் நிகர்த்த விழியிரண்டைக் கெஞ்சவிட்டு - அவன்
கால் பிடித்துக்கொண்டவாறு கதறியழுத

நூலிடைப் பெண்ணுளைத் தழுவி எடுத்து - அவள்
ஆலிலை வயிற்றினிலே தடவிக் கொடுத்து

''அடி பேதாய்; கலங்காதே - ஆருயிரே! அணிரதமே!
நொடிப்போதும் உனைப்பிரிவதற்கு முடியாதென்னுல்!

இடி இடித்தாற்போல் உன் பெற்றோர் கூச்சலிட்டு
தடை விதிக்கின்றாரே நம் உறவுக்கு - அதனுல்தான்

தயங்குகின்றேன் தளிர்க்கொடியே! தங்கமே!
மயங்குகின்றேன் என் செய்வது என்றறியாமல்!''

காதலன் சொற்கேட்டுக் காரிகையும் - அவனைக்
கட்டிப்பிடித்து மார்பகத்தால் முட்டித்தழுவி; - ''என் இதழ்த்
தேன் கேட்டுத் தருவதற்குள் எடுத்துக்கொள்வாயே; என்
அன்பே!

ஏன் கேட்க வேண்டும் இனி என் பெற்றோரை?

ஆலையிற் கரும்பென அகப்பட்ட சிறை விடுத்து,
பாலைவெளியில் உன்னுடு பறந்திடுவேன்'' என மொழிந்தாள்.

நாளைப் பயணமெனக் காளை நவின்றவுடன் - அவன்
தோளை வளைத்துத் தொத்திக்கொண்டு - புறப்பட்டாள்.

செய்தி அறிந்து செந்தீ மிதித்தார்கள் பெற்றோர்கள்!
செவிலித்தாய் கிளம்பிட்டாள் அந்தச் சித்திரத்தைத் தேடுதற்கு!

முல்லையும் குறிஞ்சியும் திரிந்த நிலம்
தொல்லைகள் குவிந்த பாலை நிலம் - அதனை

வில்லையொத்த புருவத்தினளும் - கருங்
கல்லையொத்த உருவத்தினனும்

கடந்திருக்க வேண்டுமெனக் கருதியதால்
கடுகி நடந்தாள் கவலையுடன் செவிலித்தாய்.

அங்கே,

தோளில் தாங்கும் தண்டுகளில்
தொங்குகின்ற உறிகளுடன்

தூய நெஞ்சப் பெரியோர்கள்
தொலையாப் பயணம் நடத்துகின்றார்.

இறை நினைவகலா இரவலோர் அவரை
இடை வழிமறித்து செவிலி நின்றாள்.

''அந்தணர் எனப்படும் அறநெறியாளரே! இந்தச்
செந்தழற் பாலையில் எம் செல்வத்திருமகள்;

கன்றெனத் துள்ளும் கட்டழகு இளைஞனுடன்
அன்றில் புள்ளெனச் சென்றது கண்டீரோ?

களவியல் வாழ்க்கை நடத்திக் களித்தனர் - இன்றோ
உலகியல் அனைத்தும் துய்க்கத் துணிந்தனர்.

வளமிகு நெஞ்சப் பெரியீர்! நல்லீர்!
வழியினில் அவர்களைக் கண்டீரோ சொல்வீர்!''


ஆவல் பீறிடக் கேட்ட அவளிடம் - ''உமது
காவல் மீறியக் கன்னியைக் கண்டோம் அம்மா!

சேவல் நிகர்த்த செந்தமிழ் வீரனை - அந்தச்
செந்தாமரை அழகி சேர்ந்தது சிறப்பே!

சென்றவரை உளமார வாழ்த்தி அனுப்பாமல் - நீயும்
குன்று, மலை ஏறிவந்து தேடுதல் வியப்பே!

ஒன்று கேள்!

மலையிடைப் பிறந்த சந்தனமெனினும் - அது
மணத்தை அளிப்பது, பூசி மகிழ்பவர்க்கன்றோ!



மலைக்குத்தான் அது என்றுமே உரிமையெனில் - அதன்
மணத்திற்குத்தான் மதிப்பேது தாயே!

முத்து பிறப்பது கடலில் எனினும் - அதன்
புத்தொளி சிறப்பது அணிவோர் உடலில்!

ஆழ்கடலுக்கே அஃது உரிமை எனில்
அந்தக் கடலுக்கும் முத்துக்கும் பெருமைதான் என்னே?

இசை பிறப்பது யாழிலே எனினும் - அதனை
இசைத்திடும்போதே இன்பம் பொங்கிடும்!

யாழுக்கு மட்டுமே இசை உரிமையெனில்
யாழுக்கு அதனால் விளையும் பயன்தான் யாது?

பெற்றோர்க்குத்தான் பெண் உரிமையெனில்
கற்றறிந்தவளே! ஒன்றறிந்திடுக!

மணந்திடாத சந்தனம் போல்
அணிந்திடாத முத்தைப் போல்

இசைத்திடாத யாழைப் போல்
இருந்திடவோ உமது பெண்ணும்?

எனவே;

கருத்தொருமித்த காதலனுடன்
கற்புடை மங்கை வாழ்ந்திடவே - நீ

இதய வாழ்த்தை ஒலித்துவிட்டு
இக்கணமே திரும்பிடுக!''

வாய்மை நிறை வழிப்போக்கர் சொற்கேட்டு
தாய்மை உளம் மிகத் தெளிந்ததாலே

கோலமகள் தேர்ந்தெடுத்த இல்வாழ்க்கை
சோலைமலராய்ச் செழித்திடுக என வாழ்த்திவிட்டு

பாலை நிலப் பயணம்செய் பெரியோர்க்கும்
பண்புடனே நன்றிகூறி வணங்கிச் சென்றாள்.

இதனைப்
பாலைக்கலியில்

பெருங்கடுங்கோ எனும் பாவலர்
பழச்சாறுத் தமிழில் தரும் பாங்கினைக் காண்க:-

*

* ''எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடை நீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்,

நெறிப்படச் சுவல் அசைஇ, வேறு ஓரா நெஞ்சத்துக்
குறிப்பு ஏவல் செயல்மாலைக், கொளைநடை அந்தணீர்!
வெவ்விடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர்; இவ்விடை
என்மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும்,
தம்முள்ளே புணர்ந்த தாம்அறி புணர்ச்சியர்;
அன்னர் இருவரைக் காணிரோ?'' - பெரும!
'காணேம் அல்லேம்; கண்டனம், கடத்திடை
ஆணெழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய
மாண்இழை மடவரல் தாயிர் நீர் போறிர்;
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம்
என்செய்யும்?
நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை,
நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை,
யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம்
என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
எனவாங்கு,
இறந்த கற்பினுட்கு எவ்வம் படரன்மின்;
சிறந்தானே வழிபடீஇச் சென்றனள்;
அறந்தலை பிரியா ஆறும் மற்று அதுவே.''

*

(கலித்தொகை : பாலைக்கலி–பாடல் : 8
பாடியவர் : பெருங்கடுங்கோ)

பொருள் விளக்கம் :

சுவல் = தோள். கொளை = கொள்கை. வெவ்விடை = கடும் பாலை நிலப்பகுதிகள். முன்னிய = செல்ல வேண்டி வந்த. படுப்பவர் = பூசிக் கொள்பவர். முரல்பவர் = பாடுபவர். இறந்த = உயர்ந்த. எவ்வம் = வருத்தம்.

*

பதிலே நெருப்பாக உமிழ்ந்த பாவாணர்!

வாள் தூங்கும் உறையைப் போல் மீசையுள்ள
வேள் ஆய் அண்டிரன் எனும் குறுநில வேந்தன்
பொதிய மலைப்பகுதி ஆய்குடியைத் தலைநகராய்க் கொண்டு
போரென்று வருவோரை எலியாக்கி விரட்டுகின்ற
புலியாவான்!

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், குட்டுவன் கீரனார்,
துறையூர் ஓடைக்கிழார், பரணர், காரிக்கண்ணனார்,
உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் என்றெல்லாம்
ஒரு புலவர் கூட்டமே இவன் புகழ் பாடிப் போற்றிற்று
எனினும்
உடனிருந்து அவன் உளமுணர்ந்து உவகை பொங்கத்
திடங் கொண்ட அவன் கைகளாலே தினந்தோறும்
அள்ளிக் கொடுத்த வள்ளல் தன்மையினைப்
புள்ளி மயிலின் இறகெடுத்துக் குழந்தையின் பூங்குழலில்
செருகியது போல்
புறப்பாட்டாய் எழுதியெடுத்து தமிழ் முடியில் சொருகியவர்
புலவர் பிரான் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
ஒருவர்தானே!

ஆய் அண்டிரன் மலை வளம் குறித்து ஏணிச்சேரி
முடமோசியார்
அரியதோர் நிகழ்ச்சியினை அழகுறப் பாடுதல் காண்போம்.
மலையோரம் ஊர்ப் பொதுவிடத்தில் இரவலர் கட்டியிருந்த
மத்தளத்தை
மந்தியொன்று பலாக்கனியென மயங்கித் தட்டிப்பார்க்க
மரத்தின் கிளைகளில் வாழ் அன்னச் சேவல்;



மருண்டு போய்ச் சிறகடித்து ஒலியெழுப்பிப் பறக்கின்ற;
புகை போலும் முகில் தவழும் பொதிய மலை நோக்கி
நகை முகத்து ஆரணங்குகள் ஆடச் செல்வரேயன்றி
படை யெடுத்துப் பகைநாட்டார்; அண்டிரனைச் சூழ்வதற்குத்
தலை வைத்தும் படுக்க மாட்டார் அவன் ஆளுகின்ற
மலையிருக்கும் திக்கு நோக்கி!

கொங்கரை எதிர்த்து அவர் கொடும் பகை அழித்துக்
குடமலைக் கடற்கரை வரையில் விரட்டிய வீரனவன்!

ஏணிச்சேரியார் இயற்றிய பாடலில் - அவன் ஆண்ட நிலத்தின்
எழிலையும் காணலாம்; எதிரிகள் பட்ட பாட்டையும் காணலாம்!
தோற்றோடிய பகைவராம் கொங்கர் புறங்காட்டி
மேற்றிசைக் கடலோர மலைகளிலே ஒளிந்தபோது
எறிந்துவிட்டுப் போன வேல்களின் தொகையையும் மிஞ்சுமாம்;
பரிசிலர்க்கு ஆய் அண்டிரன் பரிந்தளித்த யானைகளின் தொகை!

வியப்புற்ற, தமிழ் வித்தகராம் ஏணிச்சேரியார் கேட்கின்றார்;
வேந்தே! உனது நாட்டு யானைகள் மட்டும் ஒரு தடவைக்குப்
பத்து கன்று போடுமோ என்று!

பாடி வந்த பாணர்க்கும், பாவலர்க்கும், பரிசிலர்க்கும்
பரிசளிக்க எப்படித்தான் இருந்ததோ அத்தனை யானையென
அதிசயத்தால் மெய்மறந்து கவிதை தீட்டி
ஆய் அண்டிரனைப் புகழ்ந்த பாவேந்தர் முடமோசியார்;
நாட்டு வளம் பாடுவதில் நற்புலமை நாவலராய்த் திகழ்ந்தார்
எனினும்

காட்டு வளம் காண்பதற்கு ஒரு நாள் சென்றாராம்!
வழி நெடுக அவர் கண்ட காட்சி; அவர்
விழிகளையே அவர் நம்ப முடியாமற் செய்ததுவாம்!
கூட்டங் கூட்டமாய் யானைகள் பெரிதும் சிறிதும்
வாட்டமின்றி வளர்ந்தோங்கிய மரங்களின் நிழலில்
நூற்றுக்கணக்கில் நின்றதைப் பார்த்து
ஆற்றுப் பெருக்கென அருந்தமிழ்க் கவிதை யாத்தார் ஆங்கே!

பாடுவோர்தான் ஆய் அண்டிரனை நாடிப்
பரிசாகப் பன்னூறு யானைகளைப் பெற்றிடுவர்; இந்தக்
காடுகளும் ஒருவேளை; கவிதை கற்றுப் பரிசு பெற
நீடுபுகழ் ஆய் அண்டிரனைத் தேடி வந்து - இந்தக்
களிறுகளைப் பரிசாகப் பெற்று வந்து, நல்ல
குளிர் தருக்கள் நிழல் தனிலே குவித்து வைத்தனவோ?

கவிநயம், கவின் தமிழ் நயம் கற்கண்டாம் - அதிலும்
புவியாளும் ஆய் அண்டிரனைப் புகழ்கின்ற பொருள் நயம்
புதிய மணப் பூச்செண்டாம்!

பனி சூழ் மலையாம் இமயம் வடதிசையில் நிற்கும்போது,
கனி சூழ் மலையாம் ஆய்குடி தென்திசையில் நில்லாதாயின்
கீழ் மேலாகி இப்பெரும் உலகம் தலை சாய்ந்து
பாழ்பட்டுப் போகுமென முடமோசியார் பாடுகின்றார் எனின்;
அது, ஆய் அண்டிரனின் கொடைச் சிறப்பை எண்ணி
மதுவுண்ட வண்டு போல் மாக்கவிஞர் ஆனதிலுல்தானே!

வள்ளலுக் கெல்லாம் வள்ளலாய்த் திகழ்ந்தவனும்
வான்மழை யொத்தவனுமான வேள் ஆய் அண்டிரன் குறித்து
உள்ளத்தில் அழுக்கு கொண்ட ஒரு சிலரோ - புகழ்
உயரத்தில் வீற்றிருந்த ஆய்குடி வேந்தன் தன்னை
பள்ளத்தில் உருட்டுவதாய்க் கருதிக்கொண்டு - அவன்
அள்ளித் தருவதெல்லாம் ஆதாயம் எதிர்பார்த்துத்தான் என்றும்
இப்பிறப்பில் செய்யும் உதவியெலாம் மறுபிறப்பில் உதவுமென்ற

தன்னலத்தின் அடிப்படையில்தான் தருகின்றான்
கொடையென்றும்
நாக்கிருக்கும் காரணத்தால் நாலு பேர் பத்து பேர் கூடி
நோக்கம் கற்பித்தார் ஆய் அண்டிரனின்
அரவணைக்கும் போக்கிற்கு!

இதுகேட்டுச் சினம் மிகக் கொண்ட முடமோசியார்,
இழிதகை நோக்கம் கற்பித்தல் தீதென உரைத்து;
இம்மையிற் செய்வது மறுமைக்கு ஆகுமெனும்
அறவிலை வணிகனல்ல ஆய் அண்டிரன் என்று,
திட்டவட்டமாய்த் தீட்டினார் பாடல் ஒன்று!

கொட்டிக் கொடுக்கும் பொருளை விலையாக்கி
தட்டிப் பறித்திடலாம் மறுமையில் அறத்தையென்று
தரந் தாழ்ந்த சிந்தை அணுவளவும் கொள்ளாத
வேள் ஆய் அண்டிரனை வெறுப்பின் விளைவாலே
தேள் போலக் கொட்ட நினையாதீர்!
பயன் கருதி பரிசிலர்க்கும் இரவலர்க்கும்
பசும்பொன்னும் அணியும் மணியும் யானைகளும்
பரிசாகத் தருகின்ற எத்தனல்ல எமது மன்னனென்று
பதிலை நெருப்பாக உமிழ்ந்த பாவாணர் முடமோசியார்
வாழ்க! வாழ்க!

*

(புறநானூறுத் தொகுப்பில் ''உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்''எனும் புலவர், பொதியமலையோரத்து ஆய்குடி ஆண்ட ''வேள் ஆய் அண்டிரன்'' என்னும் குறுநில மன்னனைக் குறித்து இயற்றிய பாடல்கள் : புறநானூறு - 128, 130, 131, 132, 134 ஆகியவற்றை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது இது.)

*

* ''மன்றப் பலவின் மாச்சினை மந்தி
இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் தெண்கண் கனிசெத்து, அடிப்பின்
அன்னச் சேவல் மாறு எழுந்து ஆலும்
கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
ஆடுமகள் குறுகின் அல்லது,
பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே''

(புறநானூறு : பாடல் : 128)

* ''விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய், நின்னுட்டு
இளம்பிடி ஒருதூல் பத்து ஈனும்மோ?
நின்னும் நின் மலையும் பாடி வருநர்க்கு
இன்முகம் கரவாது உவந்து நீ அளித்த
அண்ணல் யானை எண்ணின், கொங்கர்க்
குடகடல் ஓட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே!''

(புறநானூறு : பாடல் : 130)

* ''மழைக் கணஞ்சேக்கும் மாமலைக் கிழவன்
வாழைப் பூங்கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறு மிகவுடைய இக் கவின்பெறு காடே!''

(புறநானூறு : பாடல் 131)

* ''. . . . . .
. . . . . .
வடதிசை யதுவே வான்தோய் இமயம்
தென்திசை ஆஅய்குடி இன்றுயின்
பிறழ்வது மன்னே, இம்மலர்தலை உலகே.''

(புறநானூறு : பாடல் : 132)

* ‘‘‘இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்’ எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே.’’

(புறநானூறு : பாடல் : 134)

பொருள் விளக்கம் :

பலவின் மாச்சினை மந்தி = பலாமரத்துக் கிளையில் இருக்கும் மந்தி. இரவலர் நாற்றிய = பரிசு வாங்க வந்தோர் தூக்கிக் கட்டிவைத்த. விசிகூடு முழவு = பிணிப்பு பொருந்திய மத்தளம். கனிசெத்து = பலாப்பழமெனக் கருதி. குறுகின் = அணுகினால். தலைப்பெயர்த்திட்ட = தம்மிடமிருந்து விடப்பட்ட. ஆங்குப்பட்டன்று அவன் கைவண்மை = அச்செய்கையின் பாற்பட்டதன்று அவனது ஈகைத்தன்மை.

*

காடையோ கண்முன்வந்த கணவன்!


கல்லொன்று நெற்றிப்பொட்டில் பட்டதுபோல்
'நில்' என்று நேரிழையாள் எதிர்நின்று
சொல் ஒன்றுல் தாக்கியதால் திடுக்கிட்டுப்போய்
வில்லம்பு விழியாளே; ஏனிந்த வெறுப்பென்று கேட்டான்!

தோட்டத்து முல்லை; அவன் தேர்த்தட்டு மார்பில் படர்வதற்குத் தவித்திருக்க;
வாட்டத்தின் உருவமாக அவளை மாற்றிப் பரத்தையர் இல்லம் ஏகி
கொஞ்சு மொழிக் கோலவிழிக் கோகிலங்கள் கற்பித்த கலையனைத்தும் அவர்தம்
பஞ்சணையில் படர்ந்தன்றே பயின்று வருகின்றான்.

நீருக்குள்ளிருந்த தாமரைக் கொடியெடுத்துக்
கோடை வெயில் தகிக்கின்ற பாறையின்மேல் படுக்கவைத்தால்
துள்ளி மகிழ்ந்து ஆடுமோ; அன்றித் துவண்டு வீழ்ந்து வாடுமோ?

நெருப்புப்பூ எடுத்துக் குடும்ப மெழுகுவத்திக்குச் சூட்டிவிட்டு
நித்த நித்தம் அவள் செத்துருகிச் சீர்குலையும்போது;
மறுப்புக்கே இடமின்றி மஞ்சத்து விருந்தளித்த பரத்தையரின்
சிரிப்புப் பூ அழகு கண்டு நன்றுகச் சிக்கிக்கொண்டான்!
காலை முதல் மாலை வரை மனைபுதுக்கி, உணவு சமைத்து, உடை துவைத்துக்
கண்மணியாம் மழலைதனைக் கல்வி பயில்வதற்கனுப்புகின்ற பணி முடித்துக்
கால் கடுக்கக் காத்திருந்து கண்பூத்துப் போகுமட்டும்
கணவனது வருகைக்காகக் காத்திருப்பாள் இங்கே!

அவனை;
பலரிதழ் பட்டுப் பவளம் போல் சிவந்திருக்கும் பரத்தையர் இதழை,
மலரிதழ் இதுதான் என்று மாறி மாறிச் சுவைத்திருப்பான்!



அலர் தூற்றும் ஊர் என்றும் கவலைப்படாமல்
புலர் பொழுதும் போம்பொழுதும் தெரியாமல் அவளைப்
புசித்திருப்பான்!

இல்லத்துக்கிளியோ சோகக் கூண்டினிலே - தன்
இறைவன் இன்னும் வரவில்லையே என ஏங்கிக் கிடக்கும்;
வெல்லத்தைப் பேச்சில் கலக்கும் பரத்தையரின் தூண்டிலிலே
சிக்கி

விருந்துண்ட மயக்கத்தில் அவன் தூங்கிக் கிடப்பான்!
பாலும் தெளிதேனும் கூடத் தெவிட்டுமென்பான்; ஆனால்
அந்தப்
பரத்தையரின் பட்டு மேனிக் கட்டவிழா மொட்டுகளைத்
தெவிட்டாத தேமாங்கனி யென்பான்!

கன்னல் கசக்கும் என்பான்; கணிகையரின்
கன்னம்தான் கனியிடையேறிய சுளையென்பான்!
இன்னலுற்றே இல்லத்தில் குலமங்கையவள் விழிநீர்
பெருக்கும்போது; அவன்
மின்னல் கீற்றே எனப் பரத்தையரின் மெல்லிடை வீணையினை
மீட்டி மகிழ்வான்!

வாயிற்புறம் வந்து வந்து வருகின்றானா என
வாழவந்த பத்தினிப் பெண் பார்த்துப் போவாள்; அந்நேரம்
அவனோ-

வாடகைப் பத்தினியின் வாயில் உள்ள தாம்பூலத்தைத்
தன் வாய்க்கு மாற்றச் சொல்லித் தவமிருப்பான்!
எல்லையொன்றைக் கடந்துவிட்டால் - அது
எதுவாயினும் கசந்துவிடும்!
அஃதேபோல் அமுதம் என அவன் கருதி
''இஃதே என் பிறவிப் பயன்'' எனக் கொண்டிருந்த
பரத்தையரின் பாசம் நேசமெல்லாம் - தன்
கரத்தினிலே காசுள்ளவரையில்தான் எனக் கண்டவுடன்;
மரங்கொத்திப் பறவைகளை விட்டகன்று;
மாங்குயில் கூவும் தனது மனைநோக்கித் திரும்பி வந்தான்!

வந்தான் கணவன் எனத் தெரிந்தவுடன்
நொந்த உள்ளம் ஒரு நொடியில் வேலாக மாற
இந்த வழி; தவறி வந்தாயோ எனக் கேலி பேசிச்
சொந்தமென்ன இனி வந்ததென ''நில்'' என்றாள்; சுடுசொல்
வீசிவிட்டாள்!

பசுப்போலச் சாந்தமிகு பத்தினியாள்
பாயும் புலி போலத் தோன்றியதால்

பதைத்தான், திகைத்தான்;
பக்குவமாய் அவளை வயப்படுத்தப்
பாகுமொழி மிக உதிர்த்தான்!

கற்பனையில் மிதக்கின்றாய் கண்மணியே; அதனால்தான்
கண்ணில் கனல் அள்ளிப் பொழிகின்றாய்! - நான்
ஆணைக இருப்பதாலே ஆயிரம் ஐயம் உனக்கு
வீணைகத் தேவையில்லை; இத்தனை நாளும் நான்
காடைப் பறவைகளின் சண்டைக் காட்சிகளைத்தான் கண்டு
வந்தேன் எனக்
கற்கண்டுப் பொடி தூவி அவளைக் கவிழ்க்கப் பார்த்தான்.

ஆனால் அவளோ;

செந்தணலை இறைப்பது போல் சிரிப்பினூடே
சினத்தைக் கொட்டி ஏளனமாய்;

காடைப் பறவைகளின் சண்டைதனை நீ
கண்டுவந்த விதமெல்லாம் கேள்வியுற்றேன்.
ஆடை களைந்த அப்பறவைகள் உன்னை
ஆரத்தழுவி அணைத்துப் போர் நடத்துதற்கு;
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றெனவே உன்
மெய்த்தோழன் பாணன்; யாழ்கூட இசைத்திருப்பானே!
அய்யோ பாவம்; காடைகளின் சண்டையினால்
ஆறுத புண்களன்றோ உன் அங்கமெலாம் காணுகின்றேன்!
புதுப் புதுக் காடைகள் உன்மீது மோதி
போர் புரிந்த காரணத்தால் திரண்டுருண்ட நின்
தோள்களெல்லாம்; உலராத காயங்களைத்
தூக்கிச் சுமப்பதையும் தோகை நான் காணுகின்றேன்!
வென்றிடுக என வேண்டினாலும்
வெல்லாது அப்பறவையுடன்
நெடுநேரம் பஞ்சணைப் போர் புரிந்ததாலே
நின் முகத்திலுள்ள நினைவுச் சின்னமெல்லாம்
நிலவின் முகத்தில் பரவிய களங்கம் போல்
நிலைத்துவிட்ட காட்சியினைக் காணுகின்றேன்!

இப்படி

வெடித்துக் கிளம்பிய வார்த்தைகள் கேட்டு; அவன்
வடித்துச் சொன்ன பொய்யுரை விடுத்து,
அன்பே; அத்தனை உண்மையும் நீ எப்படியோ தெரிந்து
கொண்டாய்;

அறியாமல் செய்த குற்றத்தை மறந்திடுக பெண்ணே!
அருள் பாலித்து என்னை ஏற்றிடுக கண்ணே - என
அவளடி தொழாக் குறையாய் அழுது புலம்பினன்.

அவளோ;

அணுவளவும் கோபத்தைக் குறைத்துக் கொள்ளாமல்
அருள் செய்வதற்கு நான் யார் அய்யா? அன்பு பொங்கிட நீ
அருள் செய்து பின்னர் அருளாது கைவிட்ட
அழகுமிகு காடைகள் எல்லாம் - நீ மீண்டும்
அருள்வதற்கு வருவாய் எனக் காத்திருக்கும்.
அவற்றைக் கைவிடாமல் அங்கேயே செல்க என்றுள்;
அவளும் உடன் உள்ளே சென்று விட்டாள்,
அவன் பாவம்; அங்கே சிலையாக நின்றுவிட்டான்!

*

* நில்ஆங்கு; நில்ஆங்கு; இவர்தரல் - எல்லா! நீ
நாறுஇருங் கூந்தலார் இல்செல்வாய், இவ்வழி,
மாறு மயங்கினை போறிநீ! வந்தாங்கே
மாறு, இனி நின்னுங்கே நின், சேவடி சிவப்பச்
செறிந்து ஒளிர் வெண்பல்லாய்! யாம்வேறு இயைந்த
குறும் பூழ்ப்போர் கண்டேம்; அனைத்தல்லது, யாதும்
அடுத்ததோ இல்லை, நீ வேறு ஓர்ப்பது.
குறும் பூழ்ப்போர் கண்டமை கேட்டேன், நீ என்றும்
புதுவன நகை வளம்பாடிக், காலிற்
பிரியாக் கவிகைப் புலையன் தன் யாழின்
இகுத்த செவிசாய்த்து, இனிஇனிப் பட்டன
ஈகைப்போர் கண்டாயும் போறி; மெய்எண்ணின்,
தபுத்த புலர்வில புண்.

. . . . . .
. . . . . .
. . . . . .
. . . . . .

நல்லாய்! பொய்யெல்லாம் ஏற்றித், தவறு தலைப்பெய்து,
கையொடு கண்டாய், பிழைத்தேன்; அருள் இனி,
அருளகம் யாம்; யாரேம்; எல்லா! தெருள
அளித்து நீ பண்ணிய பூழெல்லாம் - இன்னும்
விளித்து, நின் பாணனை டாடி, அளித்தி

விடலை நீ நீத்தலின், நோய் பெரிது ஏய்க்கும்;
நடலைப்பட்டு, எல்லா நின் பூழ்.

*

(கலித்தொகை : பாடல் 95
(மருதக்கலி) எண் : 30
பாடியவர் : மருதன் இளநாகனார்.)

பொருள் விளக்கம் :

மாறு = திரும்பிப் போ.
குறும்பூழ் = காடை அல்லது காஞ்சி கோழி.
தபுத்த புலர்வில = ஈரம் உலராத!

*



அணிலின் வால் போல மீசை கொண்ட மன்னவன்
அதியமான் நெடுமான் அஞ்சி யெனும் தென்னவன்
ஆதிநாளில் தமிழ் மண்ணில் முதன் முதலாய்
அருங் கரும்பைக் கொண்டுவந்து விளைச்சல் செய்தார்
அதன் இனிப்பைத் தமிழில் கண்ட அவனின் முன்னோர்
அதியர் குடிப்பிறந்ததாலே அதியமான் ஆனான்.
தகடூரைத் தலைநகராய்க் கொண்டு - அந்தத்
தமிழ்ரில் தலைநிமிர்ந்து ஆண்டான்.
திண்தோளில் வலிமைதனைத் தேக்கிக்
கண் அசைவில் பகைப்புலத்தைப் போக்கி
மண்மீது புகழ் நிலைக்க மார்பில்
புண் ஏந்தி வீழ்வதையே விரும்பி
அஞ்சியெனப் பெயர் பூண்ட போதும்
அஞ்சாத வரிப்புலியாய் மானமுடன் வாழ்ந்தான்
அவ்வையாம் கவியரசி அவனுக்காக
அணிமணிகள் தமிழால் செய்து
அகமாரப் பூட்டி மகிழ்ந்தாள் - அவன்
அறம் வியந்து திறம் புகழ்ந்தாள்.
''களம் புக எண்ணுகின்ற பகைவர் அறிக - எம்
உளம் நிறை வீரன் ஒருவன் இருக்கின்றனய்யா!
ஒரு நாளில் எட்டுத்தேர் செய்கின்ற தச்சன்
ஒரு திங்கள் உழைத்தமைத்த ஒரு தேர்க்காலுக்கொப்ப
உடல்வலிவும் உரமும் பெற்றோன்
அடலேறு அதியமான்; தெளிக!'' என்றே,
அவ்வை பாடிய செய்யுள் இஃதே:-

''களம்புக ஒம்புமின் தெவ்விர் போர் எதிர்ந்து
எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே''

அவ்வீரன் அதியமான் ஒரு நாட் காலை
அடவியிற் சென்று அலைந்து திரிந்து



விலங்குகள் மீது வேல்களைப் பொழிந்து
வேட்டையை நிகழ்த்தி விரைந்து திரும்பினான்
வழியில் மலையிடைப் பிளவொன்று கண்டு
விழியினைச் செலுத்தி வியப்பாய் நோக்கினான்
தனிமையிலே நெல்லி மரமொன்றுயர்ந்து
தன் கிளையினில் சிறு இலைகளுக்கிடையே
கனியொன்றே யொன்றைத் தாங்கி நின்றது.
இனிப்பாக இருக்குமென்றும் அதனையுண்டால்
இறப்பேதும் அணுகாதென்றும் இஃதுண்மையென்றும்
தலைப்பாகைத் துறவியொருவர் புதுமையாகப் புகன்றவுடன்
இமைப் போதும் தயங்காமல் அக்கனியைப் பறித்துக்
கொண்டான்

தனைக் காக்க மன்னவனும் அக்கனியை உண்பான் என்று,
தகடூர் வீரரெல்லாம் எண்ணிக் கொண்டு
தடந்தோள் உயர்ந்திடவே தலைவன் பின் நடைபோட்டார்.
மாளிகைக்கு வந்தவுடன் நெடுமானஞ்சி
மாணிக்கத் தமிழ்பாடும் அவ்வையை அழைக்கலுற்றான்.
''மன்னவனே ஏன் அழைத்தாய் எனத் தெரியும்;
மாற்றானும் தொண்டைமானிடம் எனைத் தூதாக
அனுப்பத்தானே?''

என்று கேட்ட அவ்வை அம்மை
சென்று வரத் தயார்தான் என்றாள் - தூதில்
வென்று வருவதற்கு முன்னே - இதைத்
தின்று சுவைத்திடுக என வேண்டி,
நெல்லிக்கனியை நீட்டினான் வேந்தன் - நிலவில்
அல்லி மலர்வது போல் முகமலர்ந்தாள் அவ்வை!
சுவையான கனிதான் என்று சுவைத்துப் பார்த்து; அரசு
அவைக் கவியான அவ்வை சொன்னாள்.
''அருமையாய்க் கிடைத்திட்ட இக்கனியுண்டால்
ஆயுள் நீளுமென்று அடவியில் துறவி சொன்னார்
அடியேனின் உயிர் அதிக நாள் இருந்தென்ன பயன்?
அவ்வையின் ஆயுள் வளர்ந்தால் தமிழ் வளரும்
தகடூரின் பெயர் உள்ளளவும் நான் வாழ்வேன்
தமிழ் உள்ளளவும் வாழ்க அவ்வையே'' என்றான்.
உண்மையை முன்கூட்டி உரைத்திட்டால்
உண்ணாமல் மறுத்திடுவாள் அவ்வையென்று
தான் வாழக் கருதாமல் தமிழ்த்தாய் வாழத்
தகடூரான் தந்தகனி நெல்லிக்கனி;
அதியமான் தமிழ் ஆர்வம் போற்றி
அவ்வை தந்த நன்றிக்கனி; இந்த செய்யுட்கனி!

''வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னர்
களம்படக் கடந்த கழல் தொடி தடக்கை
ஆர்கலி நறவின், அதியர் கோமான்
போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி!
பால் புரை பிறை நுதல் பொலிந்தசென்னி
நீலமணி மிடற்று ஒருவன்போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறுயிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே''

(புறநானூறு - பாடல் 87, 91-அவ்வையார்)

பொருள் விளக்கம் :


தெவ்விர் = பகைவீர். பொருநன் = வீரன். வைகல் = ஒரு நாள். வலித்த = செய்யப்பட்ட. வலம்படுவாய் வாள் = வெற்றிதரத் தவறுத வாள். ஒன்னர் = பகைவர். ஆர்கலிநறவு = ஆரவாரம் செய்கின்ற மது.



பத்துப் பத்தாகப் பாவாணர்கள் வடித்த
பாடல்களின் தொகுப்பாம்
''பதிற்றுப் பத்து'' எனும்
பழமுதிர் சோலையில்,
காலமெனும் கள்வன் புகுந்து
கைவரிசை காட்டியதால்
இரு பத்துக்கள் குறைந்து;
எட்டு பத்துக்களே மிஞ்சியதாம்! அந்த
எண்பது பாடல்கள் இயம்புவதென்னவாம்?
உண்பதும் உறங்குவதுமே வாழ்க்கையல்ல;
புண்படும் போர் முனை போந்து,
வெற்றி அல்லது வீர மரணமெனப்
புகழ்பட நிற்பதே வாழ்க்கையாகும்!
இல்லார்க்கும் - தமிழில் வல்ல
நல்லார்க்கும்; இல்லையெனாது
எடுத்துச் செல்வீர் என,
ஈவதே வாழ்க்கையாகும்!
துணையாக வந்து கொஞ்சி,
தோளில் தொத்திய கிளியுடனே
இணைபிரியாக் காதலுடன்
இல்லறம் போற்றுவதே வாழ்க்கையாகும்!

இவ்வாறு

செந்தமிழர் திருநாட்டுப் பெருமை சொல்லி,
சேரர், சோழர், பாண்டியர் - அவரனைய
தீரார் மிகு தமிழ்க் குலத்தார்தம்
செப்பரிய வீரம் பாடும் இலக்கியங்கள்;
ஒப்பற்ற நம் மண்ணின் சொத்து - அவற்றிலோர்
ஒளியுமிழும் முத்துத்தான் பதிற்றுப் பத்து!



சேர மன்னர் திறம் போற்றும்
வீர வரலாற்றுப் பேழையிது!
தொலைவிலிருந்து நுகர்ந்தாலும்
தூய தமிழ் மணக்கும் தாழையிது!

இதில்,

ஒன்பதாம் பத்தென்னும் மலர்க் கொத்து;
ஓங்கு புகழ்ப் ''பெருங்குன்றூர்க் கிழார்'' எனும்
ஒலி முரசக் கவியரசர் கட்டியது - அதன்
உயர்மணத்தில், உயிர்த்தமிழின் உணர்வைக் காண்போம்!

''குட்டுவன் இரும்பொறை'' யென்பானுக்கும் - அவன்
கோப்பெருந்தேவி ''அந்துவஞ் செள்ளை''க்கும்
மட்டில்லாப் புகழ் விளக்கொன்று
மகளாகப் பிறந்த தம்மா!

''இளஞ்சேரல் இரும்பொறை'' எனப் பெயர்
இட்டு அழைத்தனர்! இன்ப மகிழ்வில் திளைத்தனர்!
அவளே;
வலிமையினைத் தோளில் ஏந்தி
வாய்மையினை நெஞ்சில் ஏந்தி
வஞ்சி மூதூர்க் கொடியினைக் கையில் ஏந்தி
வஞ்சினங்கள் பலவற்றை நிறைவேற்றி முடித்தான்!
'விச்சிக்கோன்' என்பானின் மலைநாட்டை வீழ்த்திப் பின்
விற்கொடியின் நிழல் நின்று பழையன்மாறனையும் சோழனையும்
தோற்கடித்தான்!

போர்க்களத்தில் புலிப் போத்தாய் - சிங்க ஏறுய் -
புயல் காற்றுய்ச் சீறுகின்றான் சேரன்;
பூப்பந்தாய் எதிரிகளின் தலைகளையே; இரு
கரங் கொண்டு விளையாடும் அவன் நெஞ்ச
உரங் கண்டு பெருங் குன்றூரார் பெரிதும் வியந்து
பாசறை யொன்றில் அவனைச் சந்தித்தார்!
மாசறு பொன்னும் அவன் மனையாள்
மன்னன் பிரிவால் மனமிக நொந்து
இன்னலுறும் செய்தியினைச் சொன்னார்!

''இருவாட்சியும் செண்பகமும் சூடி - முகத்தில்
திருஆட்சி புரிகின்ற ஆய மகளிர் முன்னே
தருநிழலின்றித் தவிக்கின்ற மான்போல் - உன்
பருவமயில் படுகின்ற துயரால்; மேனியில்
படர்கின்ற பசலை நிறம் மறைத்து
சுடர்கின்ற பொன்னொளி போல் திகழும் - அவள்

அடர்புருவ நெற்றியினைப் பற்றி
இடர்தீர்ப்பாய் மன்னவனே'' என்றார்!

''போர் முனை விட்டகன்று சேரமாதேவியினை
மார்புறத் தழுவிமகிழ; நின்
தேர் இன்றே புறப்படுதற்குப்
புரவிகளைப் பூட்டிடுக'' என்றார்!
''நகை முகத்தழகியாம் நின்துணையை
நாடி நீ நகர்வதாலே - இங்குள்ள
பகை முகத்தில் எல்லாம் எல்லையில்லாப்
பரவசத்தைக் காணலாமே!
இளஞ்சேரல் இரும்பொறையின்
கள முரசின் ஓசையின்றி
சில நாட்களேனும் - தம்
செவிப்பறைகள் ஓய்வு பெறுமே எனச்
செப்பிடுவர் - அதனாலே நீ
வஞ்சி மூதூர் சென்று, உன்
வஞ்சியினைக் கண்டுவர - ஒருசேர
ஒப்பிடுவர்!'' எனச் சொன்னார்!

''ஆங்குநீ அரசியுடன் இருக்கும் நேரம்தான்
ஈங்குள்ள பகையரசர்க்குத்
தூங்கும் நேரம் என்பதாலே - அருள்கூர்ந்து
தூங்கவிடு அவர்களைச் சற்று!'' என்றுரைத்தார்.

சேரனும், புலவர் உரை கேட்டுச்
செருமுனையில் சிதறியோடும் எதிரிகட்குச்
சிறிதளவு ஓய்வு தரச் சிரமசைத்தான்!
ஆவிதனை இவன்பால் விடுத்துக்
காவியுகு நீருடனே கலங்குகின்ற
தேவியின் தாபம் தீர்க்கப் புறப்பட்டான்!
மாவீரர் அனைவருமே அவன் ஆணை கேட்டுத்
தாவியோடித் தழுவிக் கொண்டார் தங்கள்
தங்கம் நிகர் காதலியர் தளிருடலை!

''தமிழ்ப் புலவர் வாழ்க'' என்று அனைவருமே
இமிழ்கடல் அலையென முழங்கலுற்றார்!
சேரமா தேவியுடன் ஒன்றிப்போய் - ''இரவு
நேரமா அதற்குள்ளே கழிந்த''தென்று
வீரமா மன்னன் இளஞ்சேரல் வியந்தெழுந்து
ஆரம் புரளும் அழகி மார்பில்
ஆயிரம் முத்தங்கள் பதித்தபோது - அவளும்

பாயிரம் பாடி வாழ்த்துகின்றுள் புலவரையே!
அவரால் தானே அவனும் வந்தான்
அதனுல் அவர்க்கே வாழ்த்து என்றுள்!
ஆளன் முகத்தில் முகம் பதித்து - அவன்
தோளை விரலால் மீட்டியசைத்து
''அன்பே ஒரு வரம் வேண்டு''மென்றுள்.

''என்பு தோல் கிழித்து எதிரியை விரட்டும்
களத்திற்கினி மேல் போகாமல்
காரிகை உன்னருகே இருத்தல் வேண்டுமெனும்
அந்த வரம் தவிர - கண்ணே; நீ -
எந்த வரம் கேட்டாலும் தருவேன்'' என்றுன்!

''இந்த ஒரு நாள் என்னுயிர் பிழைக்க நீவிர்
வந்தது எதனுல் என்பதை நினைத்தேன்
பெருங்குன்றூர்க் கிழார் இல்லையேல் - இன்று
அருந்தேனுய் இனித்த இன்பம் கிட்டாதன்றே?
அதனுலே அவர் மகிழ அட்டியின்றி
அள்ளி வழங்கிடுக அவர்க்குப் பரிசை!'' என்றுள்.

''இன்பமே! இதோ உனக்கோர் பரிசெ''ன்று - அவள்
இதழோடு இதழ் பதித்து; விடுவித்துக்கொண்டு
அத்தாணி மண்டபத்திலமர்ந்து
அழைத்து வரச் சொன்னன் புலவர் கிழாரை!
வந்தவுடன் அவரை வணங்கி நின்று
வழங்குகின்றேன் பரிசிலாகப் பெற்றுக் கொள்க;
முப்பத்து ஈராயிரம் பொற்காசென்று
முறுவலுடன் மொழிந்திட்டான் - உடன் பொழிந்திட்டான்!
அவர் அறிந்து கொடுத்தது இப்பரிசென்றுல் - அவர்
அறியாமலே கொடுத்தது பல ஊரும் மனைகளுமாம்!

அதுகண்ட புலவர்;

''வெட்டுண்ட உடல்கள் வீழ்ந்தும் சாய்ந்தும்
கொட்டிய குருதியால் போர்க்களம் முழுதும்
புலால் நாற்றமெடுக்க;
பொல்லாப் பகையை நொறுக்கும் கையில்
வெற்றி வேல் கொண்டு - விரைந்து செலுத்தும்
கொடித்தேர் மீதமர்ந்து கொடும்பகை தீர்க்க மட்டும்
படித்தான் சேரன் என்றிருந்தேன் - இல்லை! இல்லை!
படையெடுத்துப் பகைப்புலத்தின்மீது செல்லும் ஆர்வம்
போலே

கொடை கொடுத்துப் புலவர்தமை அரவணைக்கும்
ஆர்வமுள்ளான்!

ஓடக்கோலுக்கும் எட்டாத ஆழமிகு நீரினிலே
ஓடிக் குதித்தாடும் மகளிர் தம் காதணிகள்
கழன்று வீழ்ந்து கைதவறிப் போனலும் - மேலிருந்து
காண்போர்க்குத் தெளிவாகத் தெரியு மளவு
சந்தன மரங்கள்தமைச் சுமந்து கொண்டு
சலசல வெனப் பாய்ந்து வரும்
நீலமலைவானியாற்று தெள்ளிய நீரை விடக்
கோலமிகு சேரனது குளிர்ந்த உள்ளம்; இனிது என்பேன்!''

என்று பாடி ஏற்றிப் புகழ்ந்தார் - சேரனும்
சென்று வருகின்றேன் மீண்டும் செருக்களமென்று
விடைபெற்றுக் கிளம்பி விட்டான்! அவன்
படைமுரசின் ஒலிகேட்டுப் பகைவர்களோ மீண்டும்
பதைக்கலுற்றார்!

*

* ''உறலுறு குருதிச் செருக்களம் புலவக்
கொன்றமர்க் கடந்த வெந்திறல் தடக்கை
வென்வேற் பொறையன் என்றலின் வெருவர
வெப்புடை ஆடுஉச் செத்தனென் மன்யான்;
நல்லிசை நிலைஇய நனந்தலை உலகத்து
இல்லோர் புன்கண் தீர நல்கும்
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
பாடுநர் புரவலன் ஆடுடை அண்ணல்
கழைநிலை பெருக் குட்டத் தாயினும்
புனல்பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்
சாந்துவரு வானி நீரினும்
தீந்தன் சாயலன் மன்ற தானே!''
(வெந்திறல் தடக்கை)

*

(''பதிற்றுப் பத்து'' ஒன்பதாம் பத்து.
பாடியவர் : பெருங்குன்றூர்க் கிழார்)

பொருள் விளக்கம் :

உறல் உறு = நிலத்திலே ஊறுகிற அளவுக்கு.
புலவ = புலால் நாற்றம் நாற. வென்வேல் = வெற்றிவேல்.
பொறையன் = சேரன். வெப்புடை ஆடூஉ = கொடுமை நிறைந்த ஆண்மகன். செத்தனென்மன் = முன்பு கருதியிருந்தது இப்போது இல்லை என்று ஆயிற்று. கழை = ஓடக்கோல். குட்டம் = ஆழம்.
சாந்துவரு வானி நீர் = சந்தன மரங்கள் மிதந்து வரும் வானியாற்று நீர். தீந்தண் சாயலன் = தெளிந்த குளிர்ந்த மென்மையுடையவன்.

குறிப்பு: வானியாறு ''பவானி''யாறு எனவும் அறியப்படுகிறது.

*

தலைகேட்டான் தம்பி!

கரும்பெடுத்துத் தமிழ் பிழிந்து - மலரில்
சுரும்பெடுத்து வருகின்ற தேன் கலந்து
அரும்பெடுத்துச் சிரிக்கின்ற மகளிர் கூட்டம்,
''எறும்பெடுத்துச் செல்கின்ற உணவு கூட
எம்மன்னன் குமண வள்ளல் தந்த''தென்று
எழுச்சி நடை போடுகின்ற கொங்குநாடு.

தமிழ் பாடும் புலவரெல்லாம், குமணன்
புகழ்பாடி வந்திடுவார் -
இமிழ் கடலின் அலைபோலச் சொல் முழங்கும்.
அமிழ்தமெனும் தமிழ்மொழியின் பண் முழங்கும்.
கமழ்கின்ற கவிதை மலர்த் தோட்டம் - அன்பு
தவழ்கின்ற நெஞ்சத்தின் கூட்டம்.

முத்திரைத் தமிழால் கவிதை யாத்திடும் புலவர் - பெருஞ்
சித்திரனார் என்றொருவர் - பேரறிஞர்
பத்தரை மாற்றுத் தங்கம்போல் பத்தினி -
புத்திரச் செல்வம் - புலவரையீன்ற வயிறு - அவர்
இத்தரையில் கண்ட சுகம் வறுமையே என்று
மெத்த இளைத்திட்டார் - நித்த நித்தம் பட்டினியால்!
பூப்போல வாடி வதங்கிடுவாள் துணைவி;
புழுப்போலச் சுருண்டு படுத்திடுவாள் அன்னை;
பூனைபோலப் பானை உருட்டிடுவான் பசியாலே பிள்ளை;
கைபிசைந்து நின்றிருந்த கவிஞருக்குக் கொடையாலே
கை சிவந்த குமண வள்ளல் நினைவுவரக், கிளம்பிவிட்டார்!

''பாரிக்கும் காரிக்கும் பின்னர் கொடை வழங்க
யாரிருப்பார் என நினைத்த நினைப்பறுத்து,
வாரிக்கொள் நான் வழங்குகின்ற செல்வத்தை!
மாரிக்குப் பெயர்தான் குமணனென்று மார்தட்டும்
கொங்கு மன்னு!
கோரிக்கை யொன்றுமக்கு! என் குடும்பம் வாழ்வதற்குப்
பொன் வேண்டும்''

எனக் கேட்டார்! அள்ளித் தந்தான்! ''நான்
வருகின்ற பாதையிலே வாழ்கின்றான் வெளிமான் என்று
- அவன்
தருகின்ற பொருள் வாங்க நடந்து சென்றேன்; அந்தோ மன்னா!
அவனிறந்து ஆண்டொன்று ஆனதாலே - அவன் தம்பி
இளவெளிமான் இருக்கின்றான் - கொடை வழங்க
மறுக்கின்றான்.


கொடிய பதில் உரைக்கின்றான்.
வளங் கொட்டும் முதிரமலை ஆள்கின்ற காவலனே!
தரங் கெட்ட இளவெளிமான் தருக்கடக்க
ஆனை ஒன்று தரவேண்டும் - அதனை அவன்றன்
காவல் மரத்தில் கட்டி வைத்துக்
கடையனவன் தலைகுனியச் செய்ய வேண்டும்; தருவீர்'' என்றார்.
தந்து விட்டான்.

வீர வெளிமானுக்கொரு தம்பி இளவெளிமான் போல்
வேந்தன் குமணனுக்குமுண்டு; இளங்குமணன் அவன் பேர்.

''அணிமணிகள் ஆனை சேனை அரண்மனைகள் அத்தனையும்;
அள்ளி அள்ளிக்
கவிமணிகள் வாழ்வதற்கே தந்து விட்டால்...
துணிமணியும் இல்லாத ஆண்டி மடம் ஆகிவிடும் நமது நாடு -
இனியுமிதை அனுமதிக்க முடியாதண்ணா!
இப்போதே பிரித்திடுக என் பாகம்'' என்றான்.

''கனிகள் உதிர் முதிரமலைத் தருக்கள் கண்டேன் - செங்
காய்கள் உதிர் தம்பியுந்தன் வாயுங் கண்டேன்!
அணிமணிகள் எவை வேண்டும் உனக்கு? அரண்மனையில் எது
வேண்டும்?
ஆனையென்ன, சேனையென்ன? அனைத்தையுமே எடுத்துக் கொள்!
அண்ணனுக்குத் தம்பியென்ற அன்பை மட்டும் கொடுத்துவிடு''
எனச் சொல்லி
அழுதுவிட்டான் குமண வள்ளல்...தம்பி நெஞ்சில்
விழுது விட்டு வளர்கின்ற பகை உணர்வோ அடங்கவில்லை!
பழுதுபட்டு போய்விட்ட உள்ளங் கொண்டோன் - ''வானில்
உழுது விட்டுப் போன செங்கதிரோன் திரும்புமுன்னே
- என் நாட்டைத்
தொழுது விட்டுக் காடேகு'' என ஆணையிட்டான்; குமணன்
சென்று விட்டான்!

மானினமும் தேன்சிட்டும் மயில் குயில் மாடப்புறுவும்
மனித இனம் காட்டுகின்ற அன்பைவிடத் தூய அன்பை



மன்னனிடம் காட்டியதால் மகிழ்ந்திருந்தான் - காட்டில்
கன்னல் மொழித் தமிழ் வழங்கப் புலவரில்லை; நீங்கா
இன்னல் அஃதொன்றே - வேறில்லை!

கொழுந்து விட்ட துரோகத்தின் விளைவாகக்
கவர்ந்து விட்டான் செங்கோலைத் தன் கையில் - தம்பி!
மகிழ்ந்தானா அந்த மட்டில்? மனத்தில்
அழுந்திவிட்ட பகையுணர்வைக் கிளறிவிட்டார் கொடிய நண்பர்.

''பொறுத்திருந்தேன் இதுநாள் மட்டும் - என்மேல்
போர்தொடுக்க முனைந்து விட்டான் அண்ணன்.
தடுத்திடாதீர்; தம்பியென்னை; அண்ணன் தலை
அறுத்தெடுத்து வருபவர்க்குப் பத்தாயிரம் பொன் பரிசே!''
என்றான்.

''தலை யறுப்பதோ? என்ன
குலை யறுக்கும் செய்தி இது!
அலை யடிக்கும் கடல்வெல்லும் பரந்த உள்ளம் - தமிழ்க்
கலை வடிக்கும் புலவர்க்கெல்லாம் கொடை நீரூற்று;
முதிரமலை கரைந்து விடும் - முடிமன்னன் தலைகொய்தால் - எம்
உதிரமெலாம் உறைந்து விடும்'' எனச் சொல்லிக்
காரி உமிழ்ந்தனர் காவலன் காட்டிய பொற்கிழியை!

கோத்திடும் தமிழ்மலர் கொற்றவன் தோளில்
சேர்த்திடும் நினைவுடன் புலவர் வந்தார் -
சாத்தனார் அவர் பெயர் - குமணன்
காட்டினில் இருப்பதை அறிந்து கவன்றார்
பாலையில் சோலையைக் கண்டது போலும்
மாலையில் தென்றலை மணந்தது போலும்
காலையில் கவிஞரைக் கண்டான் குமணன்,
ஓலையில் தமிழை உண்டான் மிகவே!

''அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்!
இந்தநாள் வந்து நீ, நொந்தெனை அடைந்தாய்.
தலைதனைக் கொண்டு போய்த் தம்பிகைக் கொடுத்து
விலைதனைப் பெற்றுன் வறுமை நோய் களையே!''
என்றான் குமணன் எடுத்தான் வாளை!

தடுத்தார் புலவர் விடுத்தார் அடவி!
''அடுத்தார் பேச்சால் அழிந்த தம்பி
எங்கே?'' என்றார் தொடுத்தார் கணைகள்!

''தம்பியுடையான் படைக்கஞ்சான் என்றிருந்தான் அண்ணன்
நம்பியவன் கழுத்தறுத்தாய்; தலையறுத்துத் தருபவர்க்குப்
பொன்பரிசு தருவதாக வாக்களித்தாய்; அவன்
தலையறுத்த வாள் இதுதான்
தந்திடுவாய் பரிசை'' என்றூர். அண்ணனின்
வாள் கண்டான்; வாள்முனையில் செங்குருதி தனைக் கண்டான்.
''வீழ்ந்தாயோ அண்ணா!'' என்று வீறிட்டு அலறிவிட்டான்,
விஷஉள்ளம் - வெறி உள்ளம் - அண்ணன் உயிர்தந்த
செய்தியாலே
வெடிவைத்த மலைபோலச் சிதறிற்று!
வெள்ளையுள்ளம் தம்பியுள்ளம் வாய்விட்டுக் கதறிற்று!

''ஆவி தர நேரிடினும் அருந்தமிழ்க்கே தருவேனென்று
காவியுடைக் குமணனவன் கானகத்தில் உரைத்திட்ட
பொன்மொழியைப்
பாவி நீ புரிந்திட்ட பாதகத்தால் யான் கற்றேன்,
தாவி நீ ஓடிச் சென்று அன்னவனின் தாள்பணிந்தால்
தமையன் உயிரல்ல; தமிழுக்கே உயிர் வந்து விடும்!
தயங்காமல் வந்து விடு; தடவிப்பார் வாள்முனையை
இரத்தமல்ல; செவ்வண்ணம்'' என்றுரைத்தார்.

ஏன் நிற்பான் இளங்குமணன்?
தேன் விற்பார் தமைச் சுற்றும் ஈக்கள் போல்
வான் தமிழால் கவிதை பின்னும் புலவர் கூட்டம்
வட்டமிடும் குமண மன்னன் காலடியில்
வணங்கி வீழ்ந்தான் - வள்ளல் தழுவிக் கொண்டான்!
தமிழ்ச் சாத்தனுக்குத் தலையைக் கொடையாய்த் தரச்
சம்மதித்தோன்;

தம்பிக்கும் ஒரு மன்னிப்பைக் கொடையாய்த் தந்தான்.
தம்பி, குடையைத் தந்தான்
தனக்கினி வேண்டாமென்று; அதனை அண்ணன்
தமிழுக் கீந்தான்!

(புறநானூறு பாடல்கள் : 158, 159, 162
பாடியவர் : பெருஞ்சித்திரனார்)

*

* ''.....
**'பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என்
நாடுஇழந் ததனினும் நனிஇன் னது' என
வாள்தந் தனனே, தலைஎனக்கு ஈயத்**

தன்னிற் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்;
ஆடுமலி உவகையோடு வருவல்,
ஓடாப் பூட்கைநிற் கிழமையோன் கண்டே.''

*

(புறநானூறு : பாடல் : 165
பாடியவர் : பெருந்தலைச்சாத்தனார்)

பொருள் விளக்கம் :

பரிசிலன் = பரிசுபெறும் புலவர்.
ஆடுமலி உவகை = வெற்றிகரமான மகிழ்ச்சி.
ஓடாப்பூட்கை நின் கிழமையோன் = புறங்கொடாத உறுதியுடைய உன் தமையன்.

*



''நட்சத்திரங்கள் முகம்பார்த்து மினுக்கிக் கொள்ள
நாளெல்லாம் தேடித் தொங்கவிட்ட நிலவென்னும்
கண்ணுடியில்,
நம்மிருவர் முகம் பார்க்க முடியாதெனினும்; கண்ணே!
நான் உன் முகத்தை நிலவாகவே பார்க்கின்றேன்!
மெய்யாகவே நிலவைப்போல் இருக்கவேண்டுமென்றுதான் - நீ
மைகொண்டு கண்ணெழுதி, கன்னத்தில் புள்ளியொன்றும்
கருநிறத்தில் வைத்துக் கொண்டாய்!
தேங்காய்க் கீற்று போன்ற பிறை காட்டு எனக் கேட்டால்
பாங்காய் உன் முகத்தை என் முகத்தில் பதித்துப் பைங்கிளியே!
நேர்வகுடுக்குக் கீழுள்ள உன் நெற்றியினைக் காட்டிடுவாய்!
நேரிழையே! நீ எனக்கு விளக்கவேண்டும்;
நிலவைக் கறுப்பாக்கும் 'அமாவாசை' ஒன்று வருமே!
நீ அதற்கு விதிவிலக்கா? என நான் கேட்டபோது
என் மடிமீது முகமுழுதும் புதைத்துக்கொண்டு,
உன் கருங்கூந்தல் மட்டுமே நான் காணப் படுத்துக் கொண்டாய்!
அதனை நான் அமாவாசையென எண்ணிக்கொள்ள
வேண்டுமென;
அழகோவியமே! நீ உன் விரல் கொண்டு சுட்டிக்காட்ட,
கார்குழலை நான் கோதிக்கொண்டே
கண்மணியே உன் உச்சிமீது முத்தமீந்தேன்!
பாம்பு; நிலவை விழுங்குகின்ற பழம் புராணக் கதையொன்றை
ஆம்பற் கொடியிடையாளே! நம்புவதற்கில்லை யென்றேன்;
- நீயோ,
மறுத்துரைத்து வாதிட்டு, ''இதோ, இந்த நிலவின் கன்னத்தை
அறுத்தெடுக்காமல் வாய்க்குள் விழுங்குகின்ற உமது செயலுக்கு
என்ன பெயராம்?'' எனக்கேட்டு,


''பழம் புராணப் பாம்பு விழுங்கும் கதை பொய் எனினும்;

பழம் போல எனை விழுங்கி விழுங்கி விடுவிக்கும் இந்தப்
பள்ளியறைக் கதை மெய்தானே' என்றாய்!
உன் கவிதை நடைப் பேச்சில் மயக்கமுற்று
ஒரு நூறு முத்தங்கள் உடனே தந்தேன்! நீயும் திருப்பித் தந்தாய்!
அதையெல்லாம் மறந்துவிட்டு; உனைப் பிரிந்து
அயலூரில் நெடுநாள் தங்கிவிட்டேன் என்று
ஆருயிரே; அகம் நொந்து நீ ஊடுவது நியாயம்தானா?
ஊடல் புரிவதிலும் ஓர் அழகைத்தான் காணுகின்றேன்.
பாடல் பிறப்பதற்கு இசை கூட்டல் வேண்டுமன்றே!
அதுபோலக்
கூடல் விழா தொடங்குதற்கு,
ஊடல்தான் கொடியேற்றி வைக்க வேண்டும்!

அதனாலே உன் ஊடல் கண்டு உவகை மிகக் கொள்கின்றேன்!
ஆனாலும் அளவுக்கு மீறிவிட்டால் அமுதமும்
நஞ்சாகிவிடுமன்றே!
தொட்டால் நெருங்காமல் நீ எட்டி விலகும்போது
தொலைவிருந்து உன் முழு எழிலைப் பருகுகின்றேன்!
மொட்டாய்க் குவிந்து நிற்கும் மார்பகத்து ஆடையினை நான்
நகர்த்த - அது
கட்டோடு பிடிக்காமல் இழுத்துப் போர்த்தி - வாய்
மொழியால் ''விடுங்கள்'' என்று நீ வெடுக்கென்றுரைத்தாலும்
- உன்
விழி மட்டும் ரகசியமாய் ஓர் உடன்பாட்டுக்கு வருதல் கண்டு;
இதயம்,
பொழிகின்ற இன்ப மழைச் சுகத்தை நான் என்னென்று
சொல்வேன்!
வழிகின்ற தேனருவிப் பக்கம் போவோம் வா! - வீணாய்க்
கழிகின்றதே பொழுது எனை; நம் வரவுக்காகக்
காத்திருக்கும் மலர் மெத்தையினைப் பார்!
கோத்திருக்கும் முத்தாரப் பல்வரிசைப் பேழையின்
மூடியினைப் புன்சிரிப்புத் திறவுகோலால் திறந்துவிட்டு
ஊடியது போதுமென என் தோளில் ஊஞ்சல் ஆடிடுக!
வாடியதோ என் வண்ணத் தமிழ்க்கிளியின் நெஞ்சம்?
தேடியதோ? தேடிப்பின்னர் திகைத்ததோ? ஒருவேளைத்
திரும்ப வருவேனே, மாட்டேனே என்று
இரும்படிக்கும் உலைவீழ்ந்த புழுவாகத் துடித்ததோ?''

இவ்வாறு

பிரிந்திருந்த காதலனின் வரவு பார்த்து - மனம்
வருந்தி வீழ்ந்த பெண்மான் ஒன்று - அவன்



வந்தபின்னும் ஊடலுற்றுச் சினந்தபோது, அவளைத் தன்
வசமாக்க வாரியிறைத்திட்டான் வர்ணனைப் பூமாரி!

அவளோ;

இன்னும் ஏனவன் பேசிக்கொண்டு நிற்கின்றான் -
இழுத்தணைத்துப் பசும்புல் தரையில் படுக்கவைத்து
கன்னம் சிவக்க, கனியுதடு மெல்ல வீங்க - முன்போல்
கணக்கென்ன நூறு? முன்னூறு நானூறு முத்தங்கள்
கொடுத்திட்டால்
கசக்குதென்று கழுத்தைப் பிடித்துத் தள்ளியா விடுவேன்?
கட்டியணைக்கவே அவன் கரம் தாவாதோ தன்மீதென்று,
தணலைப் போல் கொதிக்கின்ற காதல்தனை
தன் நெஞ்சுக்குள் அடைத்து வைத்துத் தத்தளித்தாள்!

''அன்றென்னை அமளியிற் கிடத்தி
அன்றிலடி நாமிருவர் அரைநொடியும்
பிரிவதில்லை! ஆணையடி அன்பே என்று
விரிவுரைகள் ஆற்றினீரே - என்ன பயன்?
விடிந்தால் ஒரு திங்கள் முடிந்துவிடும் - இவள்
மடிந்தால் மடியட்டுமென்றுதானே கவலையற்று
மறுநாளே வருவதாய்ச் சொன்ன சொல்லை மறந்து போனீர்!
மறப்பது ஆடவர்க்கு இயற்கையெனக் கூறிவிடும்! நானும்; உயிர்
துறப்பதும் மகளிர்க்கு எளிதேயென்று காட்டுகின்றேன்.''

இவ்விதம்

சொற்களுக்குச் சோக இசை சேர்த்து - அந்தச்
சொர்ணத்தின் வார்ப்படம் சுளையிதழ்கள் மூடுமுன்பே,
ஓடிவந்து கட்டிக் கொண்டான்! ''நான்
தேடிநின்ற தெள்ளமுதே!'' என அவளும் ஒட்டிக் கொண்டாள்!
வானூர்ந்த நிலவழகி; முகில் கொண்டு முகம் மறைத்தாள்
வெட்கத்தாலே!
மானென்று நாணமுற்று புதர் மறைவில் ஒதுங்கிற்றுங்கே!
கிள்ளைகளும், புறுக்களும் இணை இணையாய்க்
கிளைகளில் இருந்தெழுந்து ''சிறிதேனும் இந்தப்
பிள்ளைகட்கு வெட்கமிலையோ! இத்தனைபேர் நம் மத்தியிலே
வெள்ளை மலர்ப் படுக்கையிலே காம விளையாட்டா? சீச்சீ!''
எனக்கூறிப் பறந்தனவே!

ஊடலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு - இன்பக்
கூடல் முடித்து எழுந்தபோது - ''இனியொருமுறை
'வாடல்' என்பது வாழ்க்கையில் வாராதே'' என்று
ஆடல் தீர்ந்து தோகை மூடிய மயில் கேட்டாள்!

அவன், அவளைப் பார்த்து;

* "உயிரே! ஒன்று கேள்! உன்னையும் என்னையும்
உலகில் பிரிக்கின்ற சக்தி எதுவுமில்லை!
உனைப்பெற்ற தாய் யார் என்றே
எனையீன்ற தாய் யார் என்றே
உன் தந்தைக்கும் என் தந்தைக்கும்
உறவுமுறை என்னவென்றே
இருவர் நாம் எவ்வழியில் வந்தோர் என்றே
அறிந்திட விருமபாமலே அறிமுகமானேம்!
எங்கிருந்தோ வந்தாள் என உன்னை நானும்,
எங்கிருந்தோ வந்தான் என என்னை நீயும்
ஏற்றுக்கொண்டோம்! இதயத்தில்;
ஏற்றிக்கொண்டோம்! இனியவளே!
செம்மண் நிலத்தில் மழை பொழிந்தால் - அந்த
நிலத்தொடு கலந்த நீரில்
சிவப்பு வண்ணத்தைப் பிரிக்க முடியாதன்றே!
அஃதேபோல் நமது
நெஞ்சங்கள் இரண்டும் இணைந்துவிட்டன!
எனவே பிரிவு எனும் நினைப்பை
இக்கணமே அகற்றிவிடு!''

இந்தக் குறுந்தொகைப் பாடலை
இளங்குமரன் எளிமையாக்கிச் சொன்னவுடன்
மங்கைநல்லாள், மீண்டும் நிலமானாள் - அவன்
மழையானான்!

*

* ''யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்!
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே''

*

(குறுந்தொகை : பாடல் : 40
பாடியவர் : செம்புலப் பெயனீரார்)

பொருள் விளக்கம் :

யாய் = தாய். ஞாய் = தாய்.
எந்தையும் நுந்தையும் = என் தந்தையும், உன் தந்தையும்.
செம்புலம் = செம்மண் நிலம். பெயல்நீர் = மழை.

*




நெடுங்கிள்ளி யென்கின்ற உறையூர்ச் சோழன் — தன்
பெரும்படைக்குக் களத்தீனி வேண்டுமென்று கூறி,
பூம்புகார்ச் சோழன் நலங்கிள்ளிதனே எதிர்த்துப்
போர்முரசு கொட்டுக என்றான்; புலியெனச் சீறி!

* ''இருக்கின்ற ஆட்சிஎல்லே போதாதென்று;
தருக்கு மிகக் கொண்டு படையெடுத்து வந்து
இருமருங்கும் தமிழர்களின் இரத்தம் கொட்ட
எதற்காக இப்படியோர் நாடு பிடிக்கும் ஆசை?
என்னிடமே நேரில் வந்து, தலைவணங்கித் தாழ்ந்து
இந்நாட்டைப் பரிசிலாக வேண்டிநின்றால் — என்
இன்னுயிரும் கொடுப்பேனே எடுத்துக்கொள் என்று!
எளிதாக உள்ள இந்த வழிதனையே விடுத்து
எலியாக முயலாக எமையெண்ணி இகழ்ந்து
எதிர்நின்று போர்புரிய என்ன நெஞ்சழுத்தம்?
நெடுங்கிள்ளி உணர்வதற்கு ஒன்றுரைப்பேன்; கேளீர்!
என்
கொடுவாளின் முனையின் முன்னால் விளையாடல்
நன்றல்ல சொல்வீர்!''

இவ்வாறு

நலங்கிள்ளி உரைத்த மொழிகேட்டு நல்லதோர்
நகைச்சுவைத் துணுக்கு இதுதான் என்று சிரித்துத் தன்
பலங்கொண்ட மட்டும் பகையெதிர்க்கக் கிளம்பி,
படையுடனே வந்துவிட்டான் நெடுங்கிள்ளி முழங்கி!
போர்கண்டு கலங்கிடாத பூம்புகார்ச் சோழன்;
தார்புனைந்த நெஞ்சகத்தை நிமிர்த்தி நின்று

* ''புலியொன்று தூங்கும்போது அதனை இடருகின்ற
புவியிருண்ட குருடன் போல நெடுங்கிள்ளி
வீழ்ந்திடுவான்.



ஓங்கி உயர்ந்த யானைக் கூட்டக் காலடியில்
மூங்கில் இளம்புதர்கள் படும் பாட்டைப் போல்
வீங்கிய தோளுடைய என் வீரர் முன்னே — பூமி
தாங்கிடும் வண்ணம் அவன் வீழ்ந்திடானுயின்;
உள்ளத்தால் காதலின்றி உடலால் இன்பமூட்டும்
கள்ளியராம் பொதுமகளிர் பலரைத் தழுவி
வாடி வதங்கித் துவளுகின்ற இழிநிலை; நான் மார்பில்
சூடியிருக்கும் மாலைக்கு வாய்க்கட்டும்!'' என்றான்.

இந்தச் சூளுரையால் சோழன் விளக்கும் செய்தி;
இழிதகை விலைமகளை உயர்ந்தோர் நாடார் என்பதாம்!
நலங்கிள்ளிச் சோழன், தன் கோட்டை விட்டெழுந்தான்;
நெடுங்கிள்ளிச் சோழன், களம் பட்டழிந்தான்!
— அதனால்
காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி யென்று அவனைக்
கவிஞர்கள் குறித்துப் பாடிக் காட்டினர்!
நெடுங்கிள்ளி நலங்கிள்ளி இருவருமே
உடன்பிறந்தார் என்கின்ற ஓர் ஆய்வும் உண்டு!
படைமுகத்தில் குறுக்கிட்டுக் கோவூர்கிழார் தடுத்தும்கூட
பயனற்றுப் போயிற்று; பண்பார்ந்த கவிஞர் சொல்
செவியேறவில்லை!

அதனாலே
உறையூருக்கும் மன்னனாகி நலங்கிள்ளி;
குறையில்லா செங்கோல் கொண்டு ஆட்சி செய்தான்.
அப்போது ஒருநாள் அத்தாணி மண்டபத்தில்
அரசுபுரிதல் எளிதல்ல என ஆன்றோரிடை வாதம் வளர்ந்திட,
அறிவு நலன் - புலமை நலன் கொண்ட வேந்தன்;
அன்றிருந்த அரசு முறை பற்றிக் கருத்தறிவித்த
ஆற்றல் கண்டு அவைச்சான்றோர் அவனைப்
போற்றிப் புகழ்ந்து ஏற்றி மகிழ்ந்தனர்!

* ''முடி புனைந்த முத்தோர் மறைந்து; அவர்
வழித்தோன்றல் முடியேந்தி நாடாளும் வாய்ப்புப்
பெறின்
அவர்தம் இயல்புக்கேற்ப ஆட்சியின் தன்மை
அமைந்திடும் என்பேன்!
குடிகளைக் கசக்கிப் பிழிந்து
வரிகளைக் குவித்து ஆள்பவர்க்கு
ஊக்கமில்லாக் காரணத்தால்
தூக்க முடியாப் பளுவாகும் ஆட்சிப் பொறுப்பு!

அஃதன்றி எதற்கும் அஞ்சாது நின்று
பகை மிரட்டல் என்பதற்குப் பணியாமல்
கேடின்றி நாடு காத்திடும் அரசுகளே
ஏடு புகழும் மறவாதீர்!

வற்றிய குளத்தில் காய்ந்துலர்ந்த
முற்றிய நெட்டித் தக்கையென
கையிலொரு அன்னச் சிறகு போல்
கனம் சிறிதுமின்றி எளிதாகத்தானிருக்கும் அந்த
ஆட்சி!''

இவ்வாறு
ஆட்சியின் இருவகைத் தன்மை கூறிய
மாட்சியை அறிஞர்கள் வியந்தனர்!
அரசன் நலங்கிள்ளியை வாழ்த்தினர்!
அவனேர் புலவனுங்கூட; அதனால் அவன்
அமுதமொழியாம் அன்னைத் தமிழ் மொழியையும்
ஆண்டு வாழ்ந்தான்!

*

* மெல்ல வந்து, என் நல்லடி பொருந்தி,
ஈயென இரக்குவர் ஆயின், சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்;
இன்னுயிர் ஆயினும் கொடுக்குவென், இந்நிலத்து;
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றுது, என்

உள்ளம் எள்ளிய மடவோன், தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல,
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே; மைந்துடைக்
கழைதின் யானைக் கால்அகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலன்று, சென்று அவண்

வருந்தப் பொரேஎன் ஆயின், பொருந்திய
தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக, என் தாரே!

* 'மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்,
பால்தர வந்த பழவிறல் தாயம்
எய்தினம் ஆயின், எய்தினம் சிறப்பு' எனக்
குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறின்அது சிறந்தன்று மன்னே!

மண்டுஅமர்ப் பரிக்கும் மதனுடை நோன்தாள்
விழுமியோன் பெறுகுவன் ஆயின், தாழ்நீர்
அறுகய மருங்கின் சிறுகோல் வெண்கிடை
என் றூழ் வாடுவறல் போல, நன்றும்
நொய்தால் அம்ம தானே — மையற்று

விசும்புஉற ஓங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே.''

*

(புறநானூறு பாடல் : 73, 75
பாடியவர் : சோழன் நலங்கிள்ளி)

பொருள் விளக்கம் :

மடவோன் = அறிவற்றவன். துஞ்சுபுலி = தூங்கும் புலி.
சிதடன் = குருடன். கழை = மூங்கில். மைந்துடை = வலிமை உடைய. வன்றிணி = பலமும் திண்மையும் உடைய.
ஒல்லா முயக்கு = அன்பிலா புணர்ச்சி.

பால்தர வந்த பழவிறல் தாயம் = விதிமுறைப்படி வந்த (வாரிசு) அரசுரிமை. கூரில் ஆண்மை = ஆண்மை மிகக் கொண்டிராத. மண்டுஅமர் = பெரும்போர்.
மதன் = மன எழுச்சி. பரிக்கும் = (எதிர்நின்று) தாங்கிடும்.
அறுகயம் = வற்றிய குளம். கிடை = நெட்டி.
நொய்து = எளிதானது.



மீன் சின்னக் கொடி பறந்த பாண்டி நாட்டில்
தேன் கிண்ணத் திருவாதவூரில் கபிலர் பிறந்தார்.
வான் போலக் கொடை வழங்கும் பாரி மீது
மான் கொம்பின் உறுதி போல நட்புக் கொண்டார்.
மலைக்கிருக்கும் அழகெல்லாம் மாரியாலே - பறம்பு
மலைக்கிருக்கும் அழகெனிலோ மன்னன் பாரியாலே - அங்கு
பலாச்
சுளைக்கிருக்கும் சுவை கூட அவனளித்த கொடையெனலாம்.
கிளைக்கிருக்கும் மதிப்பு கூடத் தன் பொருளின்பால் வைக்காத
பாரிவள்ளல்.
வெடித்திருக்கும் வெண்முல்லை தழுவுதற்குக் கொம்பின்றித்
தவித்தபோது - அந்தக்
கொடிக்கிருக்கும் வீடாக இழையணித்தேர் ஈந்த அண்ணல்!
கதைகளிலே படித்திருப்போம் கலகம் செய் நாரதனும்
கந்தவேள் முன்சென்று ''நின் காதலுக்கேற்ற - நங்கை,
வள்ளி என்பேன்; வடிவழகி, வட்ட நிலா
அள்ளி உண்பாய் பார்த்து விட்டால்'' என்றவுடன் முருகனுமே
துள்ளியோடித் தோகையினை அடைந்திடவே
புள்ளிமயில் மீதேறிப் புயலாக அலைந்தானும்.

ஈங்கோர் கற்பனை கேளீர்!

நெடுந்தொலைவு பயணம் செய்தும் நேரிழையைக் காணுமல்
பறம்புமலைப் பக்கம் வந்து பாட்டி ஒருத்தியிடம்
அரும்பு மீசை முருகனுமே வள்ளி எங்கே எனக் கேட்க
பாட்டியோ, ''மலைமீது ஏறிடுக, கண்டிடலாம்'' என்று
நீட்டி முழக்கி நடந்திட்டாள், நெடுவழியில்!
ஈட்டியின் வேகமென ஏறினன் மலைமீது
''வள்ளி எங்கே? வள்ளி எங்கே?'' எனக் கேட்ட
வடிவேலனிடம், ''வந்திடுக! கண்டிடுக!'' எனக்
காட்டினர் அங்குள்ளோர்; மலையெல்லாம் வள்ளிக்கிழங்கு!

கிழங்களின் குறும்புதான் என்னே... உண்ணும்
கிழங்கினை வள்ளியென்றே உரைத்து நமை
ஏய்த்தாளே பாட்டியென்று — முருகன்
ஏமாந்து பறந்து விட்டான்.
குன்றமெலாம் தேனடையின் அருவியோடி வழிந்திருக்கும்
கொடி வள்ளிக் கிழங்குகளோ அதில் குளித்து நனைந்திருக்கும்.
பன்றி வயிற்றில் பால் குடிக்க மோதுகின்ற குட்டிகள் போல்
பலாக் காய்கள் அடிமரத்து வேர்களிலே சூழ்ந்திருக்கும்.
உழுவாரின்றியே விளைகின்ற பாரியின் மலையில்
எழுவானத்து மீன்களை யொத்த எண்ணற்ற சுனைகளாம்!
பழகு தமிழில் சொன்னேன் நான் - கபிலர்
பழைய தமிழில் சொல்வது கேட்போம்:-


*

*** ''உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே**
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே;
இரண்டே, தீஞ்சுனைப் பலவின் பழம் - ஊழ்க்கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின், மீது அழிந்து
தினை நெடுங்குன்றம் தேன் சொரியும்மே;
வான்கண் அற்று அவன்மலையே வானத்து
மீன் கண் அற்று அதன் சுனையே; ஆங்கு...''

*

(புறநானூறு : பாடல் : 109
பாடியவர் : கபிலர்)

மலைவளமும் மனவளமும் மிகப் பெற்ற பாரிமன்னன்
கலைஉளமும் பெற்றதாலே கபிலர்க்கு உயிரே ஆனான்.
மதி இரண்டாய்ப் பிரிந்து வந்து பிறந்தது போல் பாரிவள்ளல்,
அதியழகுச் சிலையிரண்டைப் பெண்களாய்ப் பெற்றான்.
பதியாவோம் அவர்க்கென்று பல மன்னர் பெண்கேட்டுக்
கிடைக்காமல்
படைகொண்டு பறம்புமலைத் தாக்கித் தோற்றார் - தேன்
அடை உடைந்து கிளம்பிவிட்ட ஈக்களே போல் - மூவேந்தர்
தடை தகர்த்துப் பாரி உயிர் போக்குதற்குப் பறம்புமலை
வளைத்து விட்டார்.
நடை அமைதி காட்டிக் கபிலர் பிரான் அவர் முன்னே
சென்று, நின்று,
''வீர மரபில் உதித்தோரே! வெகுண்டெழுந்து வெஞ்சமரில்
குதித்தோரே!
சேர, சோழ, பாண்டியர்காள்!
முத்தமிழ் முழங்கிடும் முரசுகள் அதிர்ந்திடும்



முந்நூறு ஊர் கொண்ட பாரி நாட்டை;
முற்றுகையால் வென்றெடுத்துச் செல்வதற்கு முடியாதும்மால்!
பற்றுக என் சொல்லே!
பாடி ஆடி நாடி வந்து பாரியிடம் பரிசு கேட்ட
பரிசிலர்க்கு அனைத்தையுமே பகிர்ந்தளித்து விட்டான் மன்னன்.
பறம்புமலை, பாரிமன்னன், கபிலன் நான் மட்டுந்தான்
பாக்கியிருக்கின்றோம் அறிந்திடுக!
தோள்வலியால் பாரி நாடு பறித்திடவே
தொடர்ந்திடுவீர் போர் எனிலோ - உம்
தோள் மீது தோல்விக் கிளி தொத்திக் கொள்ளும்!
வாள் வீரன் வேள்பாரி வலியறிவீர்
நாள் நூறு கழிந்திடினும் பறம்புமலை, பணிந்திடாது!
'எவ்வி'யெனும் குடிப்பிறந்த எம் கோவை
எவ்விதம் நீர் வென்றிடலாம் தெரிவிக்கின்றேன்.
முற்றுகை தளர்த்தி, முடிவினை நிறுத்தி - கோட்டையை
முட்டுதல் ஒழித்து, மூவரும் சென்று
படையினை விடுத்துப் பாரியின் முன்னே
பரிசிலர் போலப் பாடியும் ஆடியும்
கொடையாய் அவனையே பெற்றுச் செல்க!'' என்றார் கபிலர்

இவ்வாறு
ஒரு முனையில் நின்று - கபிலர்
செருமுனையில் ஒலித்த
சங்கத் தமிழ், இஃதே:

*

*** ''கடந்து அடு தானை மூவிரும் கூடி**
உடன்றனிர் ஆயினும், பறம்பு கொளற்கு அரிதே.
முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நல்நாடு;
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்.
யாமும் பாரியும் உளமே;
குன்றும் உண்டு; நீர் பாடினிர் செலினே.''

*

(புறநானூறு : பாடல் 110
பாடியவர் : கபிலர்)

நன்னெஞ்சப் புலவர் சொல் மறுத்துவிட்டு
முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லையென
மூவரசர் முழக்கமிட்டார்.
வன்னெஞ்சர் பின்னித்தந்த சூழ்ச்சி வலையால்
வள்ளல் பாரியின் உயிரை மாய்த்து விட்டார்.

புகழ்மலையின் உச்சியிலே கொடி போட்டுப்
புவியாண்ட பாரியின் மகளிர்க்கு
வாழ்வில் விளக்கேற்றி வைப்பதற்கே
ஆழ்கவலை உளத்தேந்தி அலைந்திட்டார் - கபில மேலோன்.
முடிவாகப் பாரிமகள் இருவரையும் - தமிழ்க்
குடிமகளாம் அவ்வையிடம் ஒப்படைத்து
இனி என்வேலை முடிந்ததென்றும் - பாரியின்றித்
தனிமரமாய் வாழ்வது இயலாதென்றும்
அடக்கவொணாப் பிரிவுத் துயர் அடக்குதற்கு
வடக்கிருந்து உயிர் விட்டார் கபிலர் பிரான்!
நடப்புலகில் நட்புக்குப் பொருள் புரியா
கடைமனத்துக் கயவருண்டு!
கதிர் உலாவும் வான் மேவி உயர்ந்து நிற்கும் நிலைவுக்
கம்பமன்றே, கபிலர் - பாரி இருவர் நட்பு!

பொருள் விளக்கம் :

வெதிரி = மூங்கில். ஓரி பாய்தல் = தேனடை முதிர்ந்த நிலையில் ஏற்படும் நிறம். கடந்தடுதானை = எதிர் நின்று கொல்லும் படை. உடன்றனிராயினும் = போரிட்டாலும். பாடினிர் செலின் = பாடுநராய் வருக.

பிறந்த வீடும் புகுந்த வீடும்!

இமயத்தில் சேரன் எடுத்த கல்லில் — ஒரு சிலையை
ஏற்றமிகு கண்ணகிக்குச் செதுக்கிவிட்டு; மேலும்

எஞ்சியதில் இவன் மேனிதனைச் செதுக்கினரோ
எனும் விதத்தில் அமைந்த கை, கால், தோள்கள்! அந்தக்

கற்பரசி சிலைமீது சொறிந்த மலர்களிலே சிறந்த மலரின்
கவின் இதழ்களால் ஆனதுதான் அவளின் கன்னம்; அவர்கள்

இருவருமே ஒருவருக்கொருவர் தெவிட்டாத தேனின் கிண்ணம்!
இனி

இணைபிரியாதிருப்பதென இதயத்தில் பதித்துவிட்டார் காதல்
சின்னம்!

முற்றுமலிருக்கும்போதே அவர்தம் எண்ணத்தை முறித்துவிட
வேண்டுமென்று

பெற்றோர்கள் திட்டமிட்டார் - உற்றார் உறவினரைக் கூட்டி
விட்டார்!

''ஏழடுக்கு மாளிகையின் மேலடுக்கில் இருப்பவள் எமது மகள்;
அவனை

எழிலுடையான் ஐயமில்லை; ஆனாலும் ஏழையன்றோ!

முத்துமணிக் குத்துவிளக்கை மாளிகை முற்றத்தில் வைப்பதன்றி
முட்டக்கூரையில்லா வீட்டுத் திண்ணையிலே வைப்பாருண்டோ?


இரும்பனைய உடலுடைய அடலேறு! மறுக்கவில்லை —
ஆனாலும்,

துரும்பளவுப் பொன்சரடுசெய்து; நாங்கள் பெற்ற

கரும்பனைய திருமகளின் கழுத்தினிலே கட்டுதற்குக்
கடுகளவும் செல்வமில்லா கடைந்தெடுத்த வறியனன்றோ?

நெஞ்சுறுதியிலே நிகரற்ற வீரனவன்! அட்டியில்லை! அதற்காக;
நெருப்பின் பீடத்திலோர் மெழுகுப்பதுமையினை

வைப்பாருண்டோ?



வஞ்சியெங்கள் குலமகளை வாஞ்சைமிகு வடிவழகை -
அன்றுடம்
கஞ்சிக்குப் பாடுபடும் குடும்பத்தில் கண்ணீரில் மிதக்கவிட
ஒப்பமாட்டோம்!

அடி தோழி; இங்கேவா! அழகுமயில், சோலையிலே
இருக்கின்றாள்!
முடிவிதுதான் பெற்றோரும் உற்றாரும் எடுத்ததென அவளிடத்தே
கூறிவிடு!''

என்றுரைத்த செல்வச் செருக்குப் பெற்றோரின் ஆணைதனைச்
சென்றுரைத்து மனம் மாற்றக் கிளம்பிவிட்டாள் அவள் தோழி!

மலர்கூடித் தென்றலிசையில் மகிழ்ந்தாடும் வனந்தனிலே
அலர் தூற்றல் பற்றிக் கவலையின்றி வீற்றிருந்த அணங்கின்பால்

முகம் கோணிக்கொண்டு தோழி; முழுக் கதையும் கூறிவிட்டாள்!
தலைவிக்கு;
அகம் நெருப்பாய்த் தகித்திடவே சூளுரைத்துப் பதில்
சொன்னாள்!

''இரவெல்லாம் பெய்த பெருமழையில் வயல் ஈரங்கண்டு
உரமேறிய பனைமரத்து நுகத்தடியைக் கொண்டு

ஆனைகளை ஏரில் பூட்டி ஆழமாய் உழுதுழுது
பானைகளில் அள்ளிவந்த வெள்ளிவிதை விதைத்துப்

பொன்னையே விளைச்சலாக என் பெற்றோர் குவித்திடினும்
என்னையொருவர்க்கு நானே தந்தபின்னர்;

வெள்ளியென்ன பொன்என்ன வைரமணி மாடமென்ன
கூடமென்ன
துள்ளியோடும் அருவிநிறைத் தோட்டமென்ன துரவென்ன;

வேண்டேன் எதுவும் நான் இந்தப் பிறந்தகத்தில்
தீண்டேன் ஒரு பொருளும் என்னிரு கரத்தாலே!

கோடிப் பொன் கொண்டுவருவேன் என்றெண்ணிக்
கொடியென்னைப் படரவிட அவரும் தோள் தந்தாரில்லை!

செங்கேழ்வரகின் பசுங்கதிர் கொய்து காத்து
செங்குன்றந்தனிலே நன்கு உலர்த்தி எடுத்து

ஊடுபதர் போக்கி, உதவினோர்க்குத் தவறாது உதவி
காடுதனில் வீழுகின்ற விறகுகளைப் பொறுக்கி வந்து -

உப்பின்றி வெந்த குப்பைக்கீரையுடன்;
உண்ணும் தட்டும் இரவலாய்ப் பெற்று - வரகுச்சோறு

ஒன்றுவிட்டு ஒருநாள் தின்று கிடக்கவும்;
உடுத்துதற்கு மாற்றுத்துணியுமின்றி -

கிழிந்த சேலையே அணிந்திடக் கிடைக்கவும்
இழிந்ததோர் நிலையே எனக்கு வந்திடுமாயினும்;

அழிந்திடாது எமது காதல் என்றுரைத்திடுக தோழி;
ஆளனிருக்குமிடமே எனக்கு அரண்மனை எனக் கூறிடுக ஓடி!

பிறந்த வீட்டில் செல்வப்பெருக்கம் இருக்கலாம் - எனினும்
புகுந்த வீட்டுக் கூழ்தான் அமுதமென விளக்கிடுக தோழி!

கணவனென ஒருத்தி வரித்தவருடன் வாழ்வதுதான்
கற்புநெறி வாழ்வென்றும் கண்ணியமிகு வாழ்வென்றும்

கணமும் இங்கு நின்றிடாமல் என் பெற்றோரிடம் சென்று
கழறிடுக தோழி! காற்றெனவே கிளம்பிடுக தோழி!

என்றவுடன்;

''இதற்குமேல் இங்கு எனக்கென்ன வேலை!'' என்று
இறகு கட்டாமலே பறந்து போனாள் தோழி!

மகள் சொன்ன பதிலுரையில் தவறொன்றுமில்லையதனால்;
மறுப்பொன்றும் கூறாமல் பெற்றோரும் மணநாளைக்
குறித்துவிட்டார்!

*

*** ''இராமழை பெய்த ஈர ஈரத்துள்**
பனைநுகங் கொண்டு யானையேர் பூட்டி
வெள்ளி விரைத்துப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வே
செங்கேழ் வரகுப் பசுங்கதிர் கொய்து
கன்று காத்துக் குன்றில் உணக்கி
ஊடுபதர் போக்கிமுன் உதவினோர்க் குதவிக்
காடுகழி இந்தனம் பாடுபார்த் தெடுத்துக்
குப்பைக் கீரை உப்பின்றி வெந்ததை
இரவல் தாலம் பரிவுடன் வாங்கிச்
சோறது கொண்டு பீறல் அடைத்தே
ஒன்றுவிட் டொருநாள் தின்று கிடப்பினும்
நன்றே தோழிநம் கணவன் வாழ்வே.''

*

பொருள் விளக்கம் :

நுகம் = நுகத்தடி. ஈண்டிய = செல்வ மிகுந்த.
உணக்கி = காயவைத்து. இந்தனம் = விறகு. பாடு = விழுதல்.
தாலம் = உண்கலம். பரிவு = வருத்தம். பீறல் = சேலைக்கிழிவு.

குறிப்பு : சங்க இலக்கியத் தொகுப்புக்களில் இணைக்கப்படாமல் விடுபட்டுப்போன பாடல் இதுவென்றும்; தமிழறிஞர் தேவநேயப்பாவாணர் தேடியெடுத்துத் தந்ததென்றும்; இந்தப் பாடலை என்னிடம் மதுரை யாதவர் கல்லூரி முதல்வர் முனைவர் தமிழ்க்குடிமகன் தந்து ''சங்கத்தமிழ்'' எழுதிடச் சொன்னார். அவருக்கு என் நன்றி. - மு.க.

*

காவிரிநாடன் கரிகாலன்!

காவிரியாம் குமரிப் பெண்ணின் நுனிநாக்கைக்
கடலழகன் தன் அலைநாக்கால் தொட்டுத் தொட்டுச்
சுவைபார்த்துச் சுகம் பெற்றுக் குதித்தாடும்
பூவிரி சோலைப் பூம்புகார் மண்ணின் புகழ்மலிச் சோழன்

கரிகால் பெரும் பெயர் திருமாவளவன்
கருவில் தாயின் வயிற்றில் இருந்தபோதே
காலம்; அவன் தந்தையின் உயிரைப் பறித்துக் கொண்டதாம்!
கயவராம் அவன் தாயத்தார் சோழ பூமியைச் சுருட்டப்
பார்த்தார்!

வயிற்றில் துள்ளும் சிங்கக்குட்டியைப் பெற்று வளர்த்திட
வழியொன்று கண்டு சோழ மாதேவி, மாளிகை நீங்கி;
வைரநெஞ்சக் கிழவர் ஒருவரின் துணையைப் பெற்று
வஞ்சகர் காணு இடம் தேடி வாழ்ந்தனள் சிலநாள்!

நிறைமாதம் முடிவுற்று நிலவு நிகர்ப் பெண்ணரசி
பிறைமதி போல் பிள்ளையொன்றைப் பெற்றெடுத்தாள்
குறையிலாக் கொள்ளையழகுக் குழந்தைத் தங்கம்
உறையிடாக் கத்திபோல ஒளிவிட்ட தமிழச் சிங்கம்!

திருமாவளவன் எனத் திகழட்டும் அவன் பெயர் என்று
தெவிட்டாத முத்தங்கள் சூளையாய்த் தந்து — தன் கணவன்
உருவாக வந்துதித்த குலவிளக்கைத் தழுவி; மகனே நீ
உலகாளப் போவதுறுதியென வாழ்த்துரைத்தாள் அன்னை!

ஒளிந்திருந்த பேரரசி ஒரு மகனை ஈன்ற செய்தி
ஒதியமிலார் உள்ளத்துத் தாயத்தார் அறிந்திட்டார்! — அவனை
ஒழிப்பதன்றி வேறு பணி இல்லையெனத் திட்டமிட்டு
ஓநாய்கள் முயல் கவ்வச் சூழ்வதுபோல் வட்டமிட்டார்!

உறையூர் அருகே சிற்றூர் ஒன்றில்; தங்களின்
உறுபகை வளர்வதை மோப்பம் கண்டு ஓடினர் ஆங்கே!

ஒரு நொடியில் வளவனையும் அவன் வாஞ்சைமிகு
அன்னையையும்
தருநிழலாய் இருந்திட்ட கிழவனையும் தீர்த்துக் கட்டத் தீயிட்டார்
வீட்டுக்கே!

வீரப்பால் குடித்துத் தொட்டிலிலே விழி மூடித் தூங்கும்
பிள்ளை
வெற்றிவேல் பிடித்துப் பகைவர்களை வீழ்த்துவதை
எண்ணியெண்ணி
விழிமூடிச் சற்றயர்ந்து உறங்கினுள் கிள்ளை; அப்போது
வெறி கொண்டோர் இட்ட தீ வான்முட்ட எழுந்ததுவாம்!

கண்ணே என்றலறிக் கயல்விழி பிதுங்க - தமிழ்
மண்ணின் வழித்தோன்றல் உறங்கும் தொட்டிலிலே
கணப்பொழுதும் தயங்காமல் கைநீட்டிப் பாய்ந்திட்டாள்...
கடுவேகம் காட்டி ஓர் ஈட்டி வந்ததை நெஞ்சிலேந்தி
சாய்ந்திட்டாள்!...

வாழ்வதற்கு இடந்தந்த வயதான கிழப் பெரியோன்; சோழ மண்


தாழ்வதற்கு இடமளிக்க மாட்டேன் எனச் சூளுரைத்து;
வாரியெடுத்துத் திருமாவளவனை வாகாய்த் தோளில் போட்டு
வாள் சுழற்றிப் பகை எதிர்த்து வாகை சூடிக் குழந்தையுடன்
தப்பிவிட்டான்!

கிழ வேங்கைப் போன திசை கிழக்கா மேற்கா எனத் திகைத்து
கிட்டியதை விட்டு விட்டோமே என்ற கவலையுடன்
கீழ்மைக் குணத் தாயத்தார் நாடு காடெல்லாம் - அந்தக்
கிழவனிருக்குமிடம் அறிவதற்கு ஆளம்பு விடுத்திட்டார்!

தணலில் தங்கமாய் தாய் ஆனபோதிலும் - இவனைத்
தமிழர் தங்கமாய் ஆளாக்க வேண்டுமென்று
தள்ளாத வயதிலும் அந்த இனமானப் பெருங்கிழவன்;
தளராத உறுதி பூண்டு தடந்தோள் குலுக்கிக் கொண்டான்!

நெருப்பிடை நீந்தித் திருமாவளவனைத் தூக்கி
வெறுப்புறு பகைவர் சிலர் உயிரையும் போக்கி
பொறுப்புடை பணியினைக் கிழவன் ஆற்றியபோது - தீப்
பொறித் துகள் பட்டுக் குழந்தை வளவன் கால் சற்றுக்
கருகியதாம்!

கருகிய காலின் கறுப்புத் தழும்பும் - கிழவன்
கண்ணுக்கோர் அழகாய்த் தோன்றியதால்



திருமாவளவன் கரிகால் பெருவளத்தான் என்று
திருத்தி அமைத்தான் சோழப்பிள்ளையின் பெயரை!

வழிவழி வந்த தோன்றல் வளர்கின்றான் என்று கேட்டு
விழிதனில் கனலை மறைத்து மொழிதனில் தேனைக் குழைத்து
வஞ்சகத் தாயத்தார் வரந்தரு முனிவர் போலே
நெஞ்சாரப் பொய்யுரைத்து நேர் எதிர் வந்து நின்றார்.

''பட்டத்து யானையிது நரியைப் போல் பதுங்கி இங்கே
பாட்டனே! உந்தன் பொறுப்பில் பலநாள் இருத்தல் தீது
பரம்பொருள் அருளைப் பெற்று பகர்கின்றோம் பயமே
வேண்டாம்
படையேதும் தேவையில்லை; எம்பால் பக்தி செலுத்தி,

நம்பியாம் கரிகால் வளவனை எம்மை
நம்பியே அனுப்பிடுக! அவன்
நாடாளும் நாளொன்றும் தொலைவில் இல்லை'' என
நயம்பட நடிக்கலானார் நச்சுமனத் தாயத்தார்!

வீரரையும் விவேகமிழக்கச் செய்யும் முனிவர் வேடம்! -
அதனாலே
விஷப்பேச்சில் ஒளிந்திருந்த விபரீதத் திட்டந்தன்னை
விளங்கிக்கொள்ள வழியின்றி முதுகிழவன்
விடைகொடுத்து அனுப்பி வைத்தான் வாழ்த்துக் கூறி!

கால் தொட்டு வணக்கம் செய்து கண்ணீரை மலராய்க் கொட்டி
கரிகாலன் விடைபெற்றுக் கிழவனிடம் முத்தம் பெற்று
காவியுடைக் கயவர்களாம் முனிவர்பின்னால்
கையில் வாள் பிடித்துத் தலை நிமிர்ந்து புறப்பட்டான்!

வழி நெடுகக் கடவுள் பற்றிப் பல கதைகள்
வகைவகையாய் உபதேச அறநெறிகள்; சோழ
வழித்தோன்றல் கரிகாலன், வன்மனத்தோர் உரையினிலே
வசமிழந்து போய்விட்டான் அவர் வலையினிலே
வீழ்ந்துவிட்டான்!

''கனைப்புற்றிருக்கின்றோம் அனைவருமே; அதனாலே
கரிகால் வளவ; சற்றுக் கண்ணயர்வோம்'' என்றவுடன்
களத்து மேடொன்றில் அவன் படுத்துறங்கிடவே - ஒரு
கணத்தில் அவனை மயக்கமுறச் செய்து கடத்திவிட்டார்!

மூலிகையின் மயக்கச் சோர்வு நீங்கியவன்
முனிவர்கள் எங்கே எனத் திகைத்துத் தேட;

''மூளி பெற்ற மகனே! உன்னை மூடியிருப்பது
சிறைச்சாலையடா
மூச்சு விடாதே இனி உனக்கு முடியில்லை; உன் முடிவே
இங்கேதான்!''

முழங்கிற்று இவ்வாறு தாயத்தார் கூட்டம் முனிவர் வேடம்
கலைத்து!

மூடிற்று சிறைக்கதவை; ஆடிற்று மகிழ்ச்சியினால்!
''முழுமதியும் முகில் கிழித்து வெளிவரும் என்பதறியா
மூடர்களே போய் வருக!'' என உள்ளுக்குள் முணுமுணுத்தான்
கரிகாலன்!

அடைபட்ட கரிகாலன் அணையுடைத்த வெள்ளம்போல்
சிறையுடைத்துத் தப்பியதை எவ்வாறு செப்புகிறார்
கடியலூர் உருத்திரங் கண்ணனார் எனும் கவிஞர் என்பதையும்
படித்தேனாய் அருந்திடலாம் பட்டினப்பாலையெனும்
பாட்டினிலே!

காட்டுக்குள் சுதந்திரமாய்த் திரிந்த புலி; இருப்புக்
கூட்டுக்குள் சிக்கிக்கொண்டது போல்
கோட்டைச் சிறைக்குள்ளே சிக்கிக்கொண்ட கரிகாலன் — ஒரு
ஆட்டைப்போல் அடங்கிக் கிடக்கவில்லை!

ஆழ்குழியில் விழுந்துவிட்ட யானையொன்று
அக்குழியைத் தந்தத்தால் மண்தள்ளித் தூர்த்துவிட்டு
அஞ்சாமல் வெளியேறித் தன் இணையைத் தேடிக்
கொஞ்சாமல் கொஞ்சுகின்ற காட்சியினைக் கவிஞர்;

கரிகாலன் சிறை மீண்ட நிகழ்ச்சிக்குக்
கச்சிதமாய் உவமையாக்கிக் காட்டுகின்றார்!
களிறுபோல் திறமையுடன் வெளிவந்த காளை
கல்நெஞ்சத் தாயத்தாரை நோக்கி ஓங்கினான் வாளை!

புகார் நகரில்; உறையூரில் பறக்கின்ற
புலிக் கொடிக்குச் சொந்தக்காரன்
கட்டிளங் காளைக் கரிகால் சோழன் தானென்று;
பட்டினப்பாலை பல கதை சொல்லும்!

காதலியைப் பிரிந்து காட்டுவழி செல்பவனை
கரிகாலன் வேலினும் கொடியது அவ்வழி என்பானும்!
காதலியின் தோளினைப் பற்றி கற்பனை செய்பவனை
கரிகாலன் செங்கோலினும் குளிர்ந்தது எனக் கூறுவானும்!

போர் மறவன் — புலிப்போத்து — தமிழ்ப் புவியாண்ட
பெருமகனும் கரிகால் பெருவளத்தான்
புகழ்பாடி வாழ்ந்திடுவோம் — இனமானம்
போற்றி யென்றும் வென்றிடுவோம்!

*

(1) "**. . . . . கூருகிர்க்**
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடு காழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதின் உணர நாடி நண்ணுர்
செறிவுடைத் திண்காப் பேறிவாள் கழித்து
உருகெழு தாயம் ஊழின் எய்தி..."

(2) "**. . . . . .**
திருமாவளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே."

*

(பட்டினப்பாலை - பாடியவர் :
கடியலூர் உருத்திரங்கண்ணனார்)

பொருள் விளக்கம் :

கூர் உகிர் = கூரிய நகம். குருளை = புலிக்குட்டி. பிறர்பிணி = பகைவரது கட்டுக்காவல். பீடுகாழ் = பெருமைக் குரிய மன உரம். குழிகொன்று = குழியைத் தூர்த்து. பிடி = பெண் யானை. நண்ணுர் = பகைவர். தாயம் ஊழின் எய்தி = தனது அரசுரிமையை முறையாகப் பெற்று. தாயத்தார் = சொத்துரிமை கொண்டாடுவோர். தெவ்வர் = பகைவர். ஒக்கிய = பாய்ச்சிய. வெய்ய = கடுமையானது.

*



மணம் புரிந்து இல்வாழ்வு நடத்துகின்ற - தன்
மனங்கவர்ந்த தலைவியினைக் காண்பதற்கு
மாலைப்பொழுதொன்றில் தோழியொருத்தி - அவள்
மனைநாடி ஆவல்மிக ஓடோடி வந்தாள்!

இல்லத்துக் கதவு கொஞ்சம் திறந்திருத்தல் கண்டு
மெல்லத் தன் கைகளாலே மேலும் சிறிது தள்ள; அங்கு
கண்ட காட்சியினால் கையது கொண்டு கண்ணது பொத்தி
காந்தள் விரல் இடுக்கால் கடைவிழி போக்கித் தலைகவிழ்ந்தாள்!

கூடத்தில் விரித்திருக்கும் பாய் ஒன்றில்
ஆடை திருத்தல் பற்றிக் கவலையின்றி - கோயில்
மாடத்துப் புறுப் போன்றுள் அவள் தலைவி படுத்திருக்க; அவள்
மேடிட்ட மார்பகத்தில் முகம் புதைத்துக் கணவன்;
குழந்தைபோல் குறும்புத்தனம் பல செய்ய - அதற்கு
உடந்தையாய் இருந்த தலைவி; உயிர்த்தோழி வருதல் கண்டு
இலந்தைப் பழ மேனியினைத் துகிலால் மூடித் திடுமென
எழுந்தனள் எனினும் அவளை அவன் விடவே இல்லை!

கட்டித் தழுவிக் காமதாகம் முழுமையாய்த் தணித்துக்கொள்ள
எட்டியவள் எழிலிடையைப் பற்றிக்கொண்டு - உடலில்
ஒட்டிக்கொண்டிருந்த மிச்சம்மீதி துணியினையும்
தொட்டிழுத்துத் துகிலுரியத் தொடங்கிவிட்டான்.

''விடுங்கள் என்னை''யென்று விழிமீன்கள் இரண்டும் துள்ள
கடுங்கோபமுற்றவள் போல அவன் கையைத் தள்ளி;
''தோழி; நீ எப்போது வந்தாய்!'' என்று தழுவிக்கொண்டாள்!
''வாழி; நீ பல்லாண்டு!'' என உரைத்தவாறு தோழியவள்;
''தலைவனுக்குத் தலைசாய்க்கத் தலையணையில்லாக் காரணத்தால்
தலைவியின் மார்பகத்தில் முகம் புதைத்துக் கிடந்தபோது
வந்துவிட்டேன்'' என்று வக்கணையாய்ப் பேசிக்கொண்டே
''குந்துதற்கு இங்கே அனுமதி உண்டா?'' என்றுள்.

அவசரமாய்

ஆடையுடுத்தி ஆணழகன் நிமிர்ந்து நின்று அவளைப் பார்த்து;
''கோடை வெயில் காமத்தைத் தாங்காமல் - குளிர்

ஓடையில் நான் குளித்தெழ முனைந்தபோது;
சாடை தெரிந்து ஒதுங்காமல் எங்கு வந்தாய்?'' என்று கேலி
செய்தான்!
குறும்பாகப் பேசுவதில் குமரருக்கு ஈடு கொடுக்கும்
கோதையாம் அத்தோழி; கொஞ்சமும் அஞ்சாமல் அவனை
நோக்கி.

''கரும்பனைய தலைவியைச் சந்திக்க முடியாமல்
கார்த்திகைப் பிறை காண்பதுபோல் என்றோ ஒருநாள்;
காணுகின்ற நிலையாலே பெருங் கவலை நீயுற்று
கன்னத்தில் கைவைத்து அமர்ந்திருந்த காட்சியினை
அன்று நாங்கள் பார்த்துப் பார்த்து பரிதாபமுற்று
அந்தோ பாபம் என அடிக்கடி பேசிக் கொண்டோம்!

ஆனால் இன்றோ

அயிரை மீன் அடர்ந்து நீந்தும் அழகுறு பொய்கையிலே,
ஆம்பல் மலர் பறிக்க இறங்கிடுவோர்
அப் பொய்கை நீரின் நடுவிலே நின்றுகொண்டு
'அப்பப்பா; தாகவிடாய் தாங்கவில்லை' என்பது போல்
அணுப்போதும் பிரியாமல் தலைவி அருகிருக்க
அவசரம் ஏன்; நேரம்—காலம்—தெரியாமல்'' எனக் கேட்டாள்..

''தாகம் தணிப்பதற்குத் தகுந்த நேரம் எதுவென்று; உன்
தலைவியிடம் குறித்துக் கூறிவிட்டுப் போ! — அதனையவள்
மனப்பாடம் செய்து வைத்தாலும் சரி — அல்லால்,
மண்சுவரில் எழுதி வைத்தாலும் சரி; சொல்லுக்குச்
சுவை கூட்டிப் பேசுகின்ற பாவாய்; ஒருண்மை நீ அறிக!
சொல்லிவிட்டு வருவதல்ல இன்ப உணர்வு'' என்றுரைத்தான்
தலைவன்.

''இன்று நீ தவிக்கின்ற தன்மையினைப் பார்க்குங்கால்
அன்று களவொழுக்கத்தில் தலைவிதனைக் காண முடியாமல் -
உனைக்
கொன்று குவித்த இன்ப உணர்வுத் தூண்டுதலை எப்படித்தான்
மென்று விழுங்கி வாழ்ந்தாயோ என எண்ணி
வருந்துகின்றேன்'' என உரைத்து;
அவன் பதிலுக்குக் காத்திராமல்
அந்தப் பைங்கிளியாள் பறந்தே விட்டாள்!

மூடாமல் இருந்த கதவுதனை மூடித் தாழிட்டு
பாடாமல் குறையிருந்த முழுப் பாட்டை முடிப்பதற்கு
முனைந்தான் தலைவன்!
இசையாமல் ஊடல் கொண்டாள் தலைவி எனினும் - பின்னர்



இசையாமல் என்ன செய்வாள்? இசையாகிவிட்டாள்!

*

* ''அயிரைபரந்த அம்தண் பழனத்து
ஏந்து எழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட்டாங்கு, இவள்
இடைமுலைக் கிடந்து, நடுங்கல் ஆனீர்;
தொழுது காண் பிறையின் தோன்றி, யாம் நுமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர்: நோகோ யானே''

*

(குறுந்தொகை-பாடல் : 178
பாடியவர் : நெடும்பல்லியத்தை (பெண்பாற்புலவர்)

பொருள் விளக்கம் :

தண் பழனம் = குளிர்ந்த பொய்கை. குறுநர் = பறிப்பவர்கள். நீர்வேட்டாங்கு = தாகவிடாய் கொண்டது போல. நடுங்கல் = (விரகதாப) தடுமாற்றம். தொழுது காண்பிறை = கார்த்திகைப் பிறை. அரியமாகிய காலை = காண்பதற்கரிய களவுக் காலம். பெரிய நோன்றனிர் = பெரும் துன்பத்தை அடைந்திருப்பாய். நோகோ யானே = (யான் நோகு) அதனை எண்ணி வருந்துகிறேன்.

*

போர்த்திசை நோக்கிய புலிப்போத்து!

விரைந்து வருவீர் வீரர்காள் எனவே
இரைந்தது முரசம்!

பறந்து வந்து படையினிற் குவிந்தனர்; உயிர்
துறந்து நாட்டைக் காத்திடும் மறவர்!
மறந்தும் இனிப் பிரிவதேயில்லை மலரே மணியே என்று
பிறந்தமேனியாய்ப் பிணைந்து கிடந்த காதலர் செவியைக்

கொட்டிய முரசின் சத்தம் தொட்டிட; காதலன்
விட்டுப் பிரிந்திடுவானே யென்று — அவனைக்
கெட்டியாய் அணைத்துக் கொண்டாள் கோதை!
முட்டிய மார்பகச் சுகத்தை ஒதுக்கி;
எழுந்தான் காளை! சிங்க ஏறென நிமிர்ந்து நோக்கி
எடுத்தான் வாளை!

பகைவர் உயிர் பறிக்கப் போகுமுன்னர் — இந்தப்
பாவை உயிர் பறித்துப் போகின்றீரே; நியாயந்தானு?

பாளைச் சிரிப்பெல்லாம் பயந்தோடிப் போக — அவன்
தாளைப் பற்றியவள் தழுதழுத்த குரலில் கேட்டாள்!

பூவிதழ்கள் பனித்துளியைத் தாங்காமல் பூமியிலே சிந்துவதைப்
போல்
பொன்னிமைகள் நீர்கொட்டத் துவண்டுவிட்ட தோகையினைத்
தழுவிக்கொண்டு
''உயிரும் உடலுமாய் ஒன்றுகி உறவு பூண்டோமெனினும்
உயிர் கொடுக்க வருக எனப் போர் முரசு ஒலித்துவிட்டால்
மண்ணைக் காத்து நமது மானம் காப்பதல்லால் - ஒரு
பெண்ணைக் காத்துக் கொண்டிருத்தல் சரியா; கண்ணே!
விண்ணைப் பார்த்துக்கொண்டே யிருந்திடுக; நமது
வெற்றிக்கொடி, உன்
கண்ணைப் பறிக்குமளவுக்கு உயர்ந்து பறப்பது கண்டு களித்திடுக!

களத்தில் நான்,

சாகாமல் இருந்தால் நம் சந்திப்பு மீண்டும் உண்டு; இல்லையேல்
- மனம்
நோகாமல் முத்தங்கள் என் சவத்திற்கு ஈந்து வீரத்தை
வாழ்த்திடுக'' என்றான்!
நீர்த்திரையால் மறைந்த விழி திறந்து பார்ப்பதற்குள்; அவன்
போர்த்திசை நோக்கிப் பாய்ந்துவிட்டான் புலிப்போத்தாய்!
கொடிகள் அலையெனக் காற்றில் அசைந்திடவே - வானில்
இடிகள் ஆயிரம் எனவே படைகள் முழங்கிடவே - வீரர்,
முடிகள் களத்தின் குருதியில் நனைந்து மிதந்திடவே - மறவர்
குடியினர் நடத்திய போர்முனை புகுந்தான் வீரன் அவனே!
எதிர்த்து வந்த பகைப்புலத்தார் தலைகளையே
அறுத்தெறிந்து முன்னேறும் வேளையிலே - ஒரு
களிற்றின் மீது கைவாள் வீசி வீழ்த்திப் பின்னர்;
கரத்தினிலே வாளுருவிப் பார்த்தபோது,
வளைந்தும் நெளிந்தும் அந்த வாள் இருத்தல் கண்டான்! -
அதன்
வளைவு போக்கிப் போரைத் தொடர்வதற்கு
வழியென்னவென்று திகைத்து நின்றான்!


நெளிந்த வாளை நிமிர்த்துதற்கு; அவன் நெஞ்சில்
விளைந்தது ஒரு தந்திரம் — அதனை
விரைந்து முடித்திட; உடனே
வீழ்ந்து கிடக்கும் யானையை அணுகினான்!

வீங்கிய மலையென வீழ்ந்திறந்த யானையின் மேல்நோக்கி
ஓங்கி உயர்ந்த இரு தந்தங்களிடையே; தன் கையினில்
தாங்கிய வாளையே நுழைத்து அழுத்தி அவ்வீரன் — பசும்
மூங்கில் ஒன்றை நிமிர்ப்பது போல் நிமிர்த்து விட்டான்!

மீண்டும் வாளேந்தி வருபவன் கையால் — இனியும்
மாண்டு மடிந்திடப் படைபலம் இல்லையென்று
மாற்றூர் மருண்டோடிப் பிழைத்துக் கொண்டார்;
''தோற்றாரோ அத்தான்; நமைப்பிரிக்க நினைத்தோர்!
தொலைந்தாரோ அத்தான்'' என்று —
தித்திப்பு முத்தம் தெவிட்டாமல் கொடுத்துத் திரும்பி வந்தவன்
தோளில்
தொத்திக் கொண்டாள்; இருவரும் ஒட்டிக்கொண்டார்;

*

*** ''வருகதில் வல்லே வருகதில் வல்லென**
வேந்துவிடு விழுத்தூது ஆங்காங்கு இசைப்ப



நூலரி மாலை சூடிக், காலின்,
தமியன் வந்த மூதிலாளன்,
அருஞ்சமம் தாங்கி முன்னின்று எறிந்த
ஒருகை இரும்பிணத்து எயிறு மிறையாகத்
திரிந்த வாய்வாள் திருத்தாத்
தனக்கு இரித்தானைப் பெயர்புறம் நகுமே.''

*

(புறநானூறு-பாடல் : 284
பாடியவர் : ஓரம்போகியார்)

பொருள் விளக்கம் :

வருகதில் வல் வருக = விரைந்தோடி வருக.
தமியன் வந்த மூதிலாளன் = தனியாக வந்த மறக்குடி மறவன்.
அருஞ்சமம் = பெரும் போர்.
ஒரு கை இரும்பிணத்து எயிறு = வெட்டி வீழ்த்தப்பட்ட களிறின் தந்தம். மிறையாகத் திரிந்த = வளைந்து கோணிய.
இரிந்தான் = அஞ்சி ஓடியவன். புறம் நகம் = புறங்கண்டு சிரிக்கும்.

*

இங்கே வேண்டாம்... தங்கை இருக்கின்றாள்!

வெள்ளரிக்காய் விதைபோலச் சிரிக்கும் பல்லழகும் - பூவின்
கள் இனிக்கும் விதம் போல மழலைச் சொல்லழகும் கொண்டு
வெண்மணற் பரப்பில் ஒரு செந்தமிழ்ச் செல்வி
கண் மலர் மூடிக் கைமலர் கொண்டு,
புன்னைக் காய்களைப் புதைத்து விளையாடி; அவற்றில்
ஒன்றை மறந்து ஆங்கு விட்டுச் சென்றிட - அது
கன்றாய் வளர்ந்து இள மரமாய்ச் செழித்தது!

நெய்யும் பாலும் அப்புன்னையின் வேரில்
பெய்து வளர்த்தாள் பேரழகுப் பதுமை!

அன்னை வளர்த்ததோ, அழகு மகளை! மகளோ;
புன்னை வளர்த்துப் பூரிப்பு கொண்டாள்.
ஒரு நாள் அன்னை; ஓவிய மகளை அன்புடன் நோக்கி;
''திருநாள் போலத் தினமும் புன்னையைச் சீராட்டும் புதல்வியே!
உன்னுடன் சேர்ந்து வளர்ந்து உயர்ந்து நிழல்தரு புன்னை;
உந்தன் இளைய உடன்பிறப்புப் போன்றதாம்!
உரைத்தேன் இதனை உவப்புடன்'' என்றாள்.

சுவைத்தேன் அருந்திய இன்பம் பெற்று,
செந்தமிழ்ச் செல்வி சிந்தை அணு ஒவ்வொன்றும்
சிலிர்த்திடக் குதித்து; அன்புப் புன்னையை ஆரத் தழுவி
''தங்கை இனிமேல் நீதான் எனக்கு — என்
தாயே இதனைச் சொன்னாள்'' என்றாள்! சொக்கி நின்றாள்!

மங்கை இவ்விதம் மலராய் விரிந்த முகத்துடன் நிற்க;
அங்கேயொரு கை அவள் கண்களைப் பொத்தித் திடுக்கிட
வைக்க

வலம்புரிச் சங்கம் இசையொலி எழுப்பும்
வளமிகு நெய்தல் நிலத்தின் தலைவனே;
குலக்கொடி இமைகளை மூடித் தழுவினன் என்று, அந்த
விளக்கொளி விழியாள் ஒரு விநாடியில் உணர்ந்தாள்!

''வந்தாயோ கண்ணு'' என்றுள்; ''வரவில்லையென
நொந்தாயோ கண்ணே'' என்றுன்!

தந்தானே முத்தங்கள் ஒன்றிரண்டு பத்து நூறுக - இரு
பந்தாடும் மார்பகத்தை; பாவை, அவன் மீது சாய்த்து,
''இங்கு வேறெதுவும் நடத்த வேண்டாம் அத்தான்; என்
தங்கையொருத்தி பார்த்துக்கொண்டிருக்கிறுள்'' - என்றுள்!

''எங்கு ஒளிந்துள்ளாள் உன் தங்கை? என்னேடி இது வியப்பு
எப்போது அவள் பிறந்தாள்?'' எனக் கேட்டான் தலைவன்!

புன்னையிளம் மரமிதனை நான் வளர்த்ததாலே;
என்னேடு சேர்ந்து வளர்ந்த இந்தப் புன்னையினை - என்
தங்கையைப் போல் நினைக்குமாறு - என்
தாய் எனக்குக் கூறியுள்ளாள்; அதனுலே,
தட்டாதீர் என் பேச்சை - தழுவாதீர் இங்கென்னை!
கட்டாணி முத்தேயென்று கற்கண்டுப் பொடி தூவாதீர்!
கன்னத்தைப் பழமாகச் சுவைப்பதற்கும் - இன்னும்
என்னத்தை நான் சொல்ல; அவை அனைத்துக்கும்
நான் வளர்த்த இத்தங்கையின் முன்னே - எனை
நாணம் வந்து தடுப்பதாலே,
வான் பொழியும் ஒளி மழையில் - இன்பத்
தேன் பொழியும் திருவிழா நாம் நடத்துதற்கு
வேறு மரநிழலொன்றைத் தேடிச் செல்லலா''மென
ஏறு போன்றுன் தோளைப்பற்றி
வீணையிசைப் பேச்சுக்காரி இழுத்துச் சென்றுள் - ''உன்
ஆணையதுவானுல் அட்டியுண்டோ எனக்கு?'' என்று
கொஞ்சிக் குலவியவள் கொடி இடை பற்றித் தன்
நெஞ்சகத்தில் அவள் முகத்தை அழுத்திக் கொண்டான்!

*

* ''வினையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
ஐநெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும்' என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே
அம்ம! நாணுதும், நும்மொடு நகையே
விருந்தின் பாணர் விளர்இசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்



துறைகெழு கொண்க! நீ நல்கின்,
இறைபடு நீழல் பிறவுமார் உளவே.''


*

(நற்றிணை பாடல் : 172
பாடியவர் : (பெயர் தெரியவில்லை)

பொருள் விளக்கம் :

ஆயம் = தோழியர் கூட்டம். காழ்முளை = முற்றிய விதை.
அகைய = விட்டுச் செல்ல. நுவ்வை = உன் தங்கை.
விளரிசை = மெல்லிசை. கடுப்ப = ஒப்ப.
கோடு = சங்கு. நரல் = ஒலி.

*



வாள் கொண்டான் கையில்; வள்ளல் தன்மை கொண்டான்
நெஞ்சில்!
வேள்பாரி யெனும் பெயர் கொண்டான் தமிழினத்து
வரலாற்றில்!

மூவேந்தர் ஒன்று கூடி அவன் பறம்புமலை சூழ்ந்து
முற்றுகையிட்டார் எனினும் அஞ்சாமல் நின்றுனன்றி
முழங்காலை மடித்துத் தொழுது போற்றித் தன்
முடிதனையே காத்துக்கொள்ள நினைத்தானில்லை!
பாரியெனும் மன்னவனைப் பகைவர் பலர்கூடி வென்றிடலாம்
எனினும்
வாரி வழங்குகின்ற அவன் வள்ளல் தன்மையினை வெல்வார்
யாருமிலர் என்பதாலே -
மாறி மாறிப் பல்லாண்டு சுழன்றபோதும்
மாறிடாத பெயராகப் பாரியின் பெயர் நிலைத்ததிங்கே!

அவனை, வென்றூர்! வீழ்த்தினூர்! கொன்றூர்! எனும்
அரசர் மூவர் பெயர் என்னவென அறிந்திடாது இவ்வையம்!
ஆனால் களம்பட்டு உயிர்விட்டான் எனினும் பாரியின் பெயர்
அழியாமல் மறையாமல் உயிரோடு உலவுதல் ஏன்?
மறவன் எனும் நிலை மட்டும் மன்பதையில் புகழ்
சேர்ப்பதில்லை!

மனிதனுகவும் வாழ்ந்திடல் வேண்டுமென்ற
அறநெறியை விட்டு அணுவளவும் பிறழாது - ஒருவன்
அளந்து வைக்கும் அடிகள் ஒவ்வொன்றும்தான்
வாழையடி வாழையென வருகின்ற சமுதாயத்து
வழித்தோன்றல்களின் பயணப்பாதையாகும்!

தேருக்கோர் அச்சாணி போல் - பறம்புமலைப்பக்கம் பல
ஊருக்கு மன்னவனுய்த் திகழ்ந்த பாரியினைப்
போருக்கு அழைத்துக் கொன்ற பின்னர்; அவன்
புதல்வியர் இருவரைக் கவர்ந்திட எண்ணிய வேந்தர் மூவரின்


கண்களை மறைத்துக் கபிலர் எனும் புலவர் பிரான் அந்தப்
பெண்களைத் தனது பொறுப்பில் காத்திடத் துணிந்து
முனைந்தார்.

நண்பர்க்கு நல்வாழ்வு வாய்த்தபோது அருகிருந்து
சுவைத்துவிட்டுத்
துன்பத்தால் துயருறும்போழ்து தொலைவில் ஓடுதல்
துரோகமென்பதை
எண்ணியும் பார்க்கா பிறவிகள் சிலபேர் —
புண்ணியவான்களாய் வேடம் புனையும் இப்புவியில்
தமிழாய்ந்த தமிழ் மகனும் கபிலர் பிரானை
அமிழ்தாக நினைத்து மகிழ்ந்து; அவர்
அருகிருக்கும் நேரமெல்லாம் குளிர்
தரு விரிக்கும் நிழலின் கீழ் இருப்பது போல் உணர்ந்த பாரி
சிறகொடிந்த பறவைகளாய் செல்வ மகளிர்தமை விடுத்துச்
செத்துவிட்ட செய்தி வந்தவுடன் கபிலப் புலவர் சில
நொடியில்
சிறகானூர் பாரிமகளிர் இருவர்க்கும் — அதனாலே மூவருமே
பறந்து போனார்.

பாரி பெற்ற முத்திரண்டைப் பத்திரமாய்ப் பாதுகாக்கப்
பரிவு காட்டும் மாந்தரிடம் ஒப்படைத்தார்; ஓரிரு நாள்!
ஒளிபடைத்த மணி யிரண்டும் ஒப்பற்ற அழகுப் பேழை.
உளிபடாச் சிலையைப் போல உருக்கொண்டு மணக்கும் தாழை.
மாரிக்கிடையே வானைக் கீறுகின்ற மின்னல் போல
பாரிக்கு மகளாய் வாய்த்தோர் விளங்கலானார்.

தங்கியிருந்த இல்லத்து மேல்தளத்தில் அமர்ந்தவாறு
பொங்கி வழியும் பால் பானை வாய் போலத் தோன்றுகின்ற
முழு நிலவின் ஒளி வெள்ளம் பாய்ந்து பரவுவதை - ஒரு
பழுதில்லா எழிலுடைய பாரி மகளிர் பார்த்தனர் விண்ணில்!
அழுதழுது முற்றிலும் வற்றியிருந்தனவாம் நீர்த்துளிகள்
கண்ணில்!
ஆனாலும் அவர் நெஞ்சில் வற்றுத தமிழ் ஊற்றுப் பெருகி
''அற்றைத் திங்கள் வெண்ணிலவில்'' என்ற பாட்டாய்
எழுந்ததுவாம், உளமுருகி!

''கடந்த திங்கள் இற்றை நாளில் கடைந்தெடுத்த வெண்ணெய்
போல்
எழுந்த நிலா வானில் திரிந்தபோது எங்களிருவருடன்
பழுத்த மரப் பாரியாம் எங்கள் தந்தை
சிரித்த முகத்துடனே அருகிருந்தார் —



இற்றைத் திங்கள் வெண்ணிலவில் எங்கள் தந்தையுமில்லை;
கொற்றவர் மூவர் எமது குன்றமும் வென்றதால்
தந்தையை இழந்து தாயகம் இழந்து
தவிக்கிறேம் இன்று தனிமையில் நின்று''...

பாரி மகளிர் பாடலைக் கேட்டு மனமிக நொந்து
பரிவுடன் அவர்தம் கூந்தலைக் கோதி
பாவலர் கபிலர்... ஆறுதல் சொன்னார்; உம்
காவலராகக் கணவர் வாய்ப்பர் என்று தேறுதல் சொன்னார்...

''திங்கள் ஒன்றுக்கு முன்னர் இருந்த குன்றமும் இல்லை
எங்கள் தந்தையும் இல்லை என் செய்க'' என
தங்கப் பதுமைகள் இரண்டும் — துயரத்
தணலில் வீழ்ந்து தத்தளித்த நிலையையும்
சங்கப்பாடலாய்த் தந்தனர் நமக்கு —
சோகப் பாடல் எனினும் — அதிலோர்
சுவையைக் கண்டோம்; சுவைத்தமிழ் உண்டோம் அன்றே?

*

*** ''அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!

*

(புறநானூறு : பாடல் : 112
பாடியவர் : பாரி மகளிர்)

பொருள் விளக்கம் :

அற்றைத் திங்கள் = கடந்த மாதம்! இற்றை = இன்றைய.

*

தாமரைப் பொய்கையில் (ஓ) தவழ்ந்தது நிலவு!

தண் புனல் வைகை தவழ்ந்திடும் மண்ணில்
பெண்குலக் கண்மணி பெருங்கோப் பெண்டு — விழுப்
புண்களே மார்பில் ஆரமாய் அணிந்த — தமிழ்ப்
பண்புடை வீரன் பூதப் பாண்டிய வேந்தனைக்
கொழுநனுய்க் கொண்டு குடும்ப விளக்காய்ப்
பழுதிலா மனையறப் பணிகளே ஏற்று
வழுவிலாப் புலமையும் பெற்றுத் திகழ்ந்தாள்!
எழுகதிர்தான் மன்னன்; முழுமதிதான் அவளேயாவாள்!
ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் எனும் பெயர் — கொடி
முல்லையாய்ப் படர்ந்து, தமிழ்க் கொல்லையே மணந்தது!

பொதியமலைத் திதியனையும் பொய்யாத மையலூர் மாவனையும்
புகழ்பூத்த ஆந்தையுடன் அந்துவன் சாத்தனையும் ஆதன்
இழிசையையும்
வெகுண்டெழுந்து வீரம் விளைக்கின்ற இயக்கன் எனும்
வேங்கை நிகர்த்ததொரு தீரனையும்,
நண்பர்களாய்ப் பெற்றிருந்த பூதப் பாண்டியனின்
வண்மையினைக் கேள்வியுற்று வையகமே போற்றியதாம்!
நம் தமிழர் குலப் பழக்கம் ஒன்றுண்டே; அதுதான்
நமக்குள்ளே அழுக்காறு! போராட்டம்! அதனாலே களத்தினிலே
சிவப்பாறு!

சேரரென்றும் சோழரென்றும் பாண்டிய மன்னரென்றும் அவர்
வீரரென்றும் வித்தகப் புலவரென்றும் விரித்துரைக்கும்
வரலாறு; அவர்கள்

சேர்ந்தொருநாள் வாழ்ந்ததாகச் சொல்லவில்லை;
சோர்ந்துபோகும் நமதுள்ளம்; இனி அதைச் சொல்லுவதால்
பயனுமில்லை!

பூதப்பாண்டியனின் புகழ் கேட்டுப் பொருமை யுற்றுப்
போர் முரசு ஒலிக்கலானார் சேர சோழ மன்னர் இருவர்!

''இருமன்னர் எதிர்ப்பதாலே அஞ்சுகின்றேன் மன்னு; —
அவர்பால்
பெரும்படைகள் உண்டென்று அறிவதாலே சற்று சிந்திப்பீர்
கண்ணு'' என

திருமலியும் முகமுடைய பெருங்கோப் பெண்டு
கருவிழிகள் நீர்மேல் மிதக்க அவனைத் தடுத்துப் பார்த்தாள்!

''என்னை என்ன செய்யச் சொல்கின்றாய் தேவி?
பொன்னை, பொருளை, இப்பூமியை, உன்னைக் காப்பதற்கு;
முழங்கால் வளைத்து முடித்தலையை, மாற்றூர் முன்
சாய்த்திடவோ; பின்
முகத்திலொரு மீசை எனக்கெதற்குச் செப்பிடுவாய்?
வாள் பிடித்துச் செத்து நெடும்புகழை ஏட்டில் நட்டலின்றி;
பிறர்
வால்பிடித்து வாழ்ந்து மறைந்தால் காரி உமிழுமே உலகம் நம்
கல்லறையில்!''

கனல் பறக்கச் சிங்க ஏறாய்ச் சிலிர்த்தவனின் தோள் சாய்ந்து;
''அனல் தணித்து உம்மை அடிமையாகச் சொல்லவில்லை
அத்தான் — இந்த
மணற்பரப்பில் ''மண்டியிடல்'' எனும் சொற்றொடரை
மனதரில் பதர்கூட எழுதிடத் தயங்கி நிற்பான்!
மாவீரர் நீங்கள் - மாற்றரைப் புறங்காணச் செய்யுங்கள் —
என்
மடிமீது தலைவைத்து விழுப்புண்களுக்கு மருந்து பெறத்
திரும்புங்கள்!
குவித்துக் கொண்டிருக்கும் உதடுகளும் இரு குன்றுகளும்
தவித்துக் கொண்டிருக்குமத்தான் ஒத்தடம் தந்திடவே!
தேனை, மானேயென்று என் தேகமெல்லாம் முத்தமீந்தவர்க்கு
நானே தருகின்றேன் போர்வாளை; புறப்படுங்கள், பொல்லாப்
பகை வெட்டிச் சாய்க்க!''
பெருங்கோப்பெண்டு வழங்கிய படைக்கலன் பெற்றுக்
கொண்டு,
அருந்தமிழ்ப் பாண்டியன் அவளை அணைத்துப் பருகினன்;
இதழ் மது; மொண்டு! மொண்டு!

''வாளுறை விட்டு எழுந்தது பாரீர்! வீரர்காள்! என்
சூளுரை யொன்றும் கேட்பீர்!
பறையொலித்துப் படையெடுத்து வரும்
பகைவர் கூட்டம் புறமுதுகிட்டுப் பறந்தோடப்



போர் புரிந்து வெற்றி காண்போம் — அன்றிப்
போர்முனையில் மாற்றூர் தோளில் வெற்றி மாலை
விழுந்ததெனில்;
பொன்னூர் மேனியாள் என்னுயிர்த் துணைவி
மின்னூர் இடையாள் இவளைப் பிரிவேன்!
அவைக்களத்தில் அறமறியாத் தீயோனை வைத்து
அநீதியிடை ஓர் அரசை நடத்திய கொடுங்கோலன் எனும்
பழியைக் கொள்வேன்!

சூழ்ந்திருந்து தோழமையால் எனை மகிழ்வித்த
ஆழ்ந்த நட்பாளர் அனைவரையும் இழந்திட்ட பாவியெனும்
பெயர் எடுப்பேன்!

மறுபிறவி என ஒன்றிருந்தால் — பெரும்
மாசு வந்து என்னைப் பற்றிக்கொள்ள;
தென்புலம் காத்த மன்னவன் என்ற நிலைமாறிக் கொடியோரின்
வன்புலம் காத்திடும் வஞ்சகனுய்ப் பிறந்திடுவேன்!''

இவ்வாறு,

வாளோங்கிச் சூளுரைத்துக் களம் புகுந்த பாண்டியர் படையின்
தோளோங்கிற்று; தோற்றோடி விட்டார் பகைவர் எனினும்,
கடுங் காயக் கூட்டம் களத்திற் பட்டதாலே
பெருங்கோப்பெண்டின் மடியிற் படுத்து;
கடைசியாக ஒரு முத்தம் தந்தும், பெற்றும் — நடு

கல்லில் பாண்டி மன்னன் எழுத்தாய் வாழ்ந்தான்!
''வானில்லை; நிலவு தவழ்வதற்கு — அதனாலே இனி
நானில்லை, அவரில்லா உலகில்'' என்று;

பூதப் பாண்டியன் தேவி புறப்பட்டாள் அவனைத் தொடர்ந்து!
''போகாதே தாயே!'' என்று புலம்பிற்றுப் பாண்டிய நாடு!
பாண்டியர்க்கு வழித்தோன்றல் இல்லாத காரணத்தால் —
நாட்டை
ஆண்டிடவே அவள் வாழவேண்டுமென்று இறைஞ்சி நின்றூர்!

அவளோ;

''பல்சான்றீரே! பல்சான்றீரே!''என விளித்துக்
''கல் மனங் கொண்டென்னை வாழச் சொல்லாதீர்!
என்றும் தீரா என் சோகம் நீக்கிட,
எரிதழல் வீழ்ந்து என்னுயிர் போக்கிட
இன்றே துணிந்தேன்! இஃது இனிதே எனக்கு!
அன்றிலாய் இருந்த வாழ்வே போனபின் — நான்

தணலில் குளிப்பதை நீவிர் தடுப்பது எதற்கு?
தடந்தோள் மன்னர் மாய்ந்த பின்னர் எனக்கு;
தாமரைப் பொய்கையும் — இந்தத்
தணல்நிறை குழியும் ஒன்றேயாகும்!''
என்ருள் தேவி; அந்தத் தீயினில் தாவி!

*

* ''மடங்கலின் சினனே . . . . . .
. . . . . .
. . . . . .
அவர்ப்புறம் காணேன் ஆயின் — சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக;
அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்,
திறன்இல் ஒருவனை நாட்டி, முறை திரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக; மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்
பொய்யா யாணர் மையற் கோமான்,
மாவனும், மன்எயில் ஆந்தையும், உரைசால்
அந்துவஞ் சாத்தனும், ஆதன் அழிசியும்,
வெஞ்சின இயக்கனும், உளப்படப் பிறரும்,
கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கி, யான் ஒன்ரே,
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலம் காவலின் ஓரீஇப், பிறர்
வன்புலங் காவலின் மாறி யான் பிறக்கே!''

*

(புறநானூறு-பாடல் : 71
பாடியவர் : பாண்டிய மன்னன் பூதப்பாண்டியன்)

*

* ''பல்சான்றீரே! பல்சான்றீரே!
. . . . . .
. . . . . .
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கு அரிது ஆகுக தில்ல; எமக்குஎம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள்இதழ் அவிழ்ந்த தாமரை
நள்இரும் பொய்கையும், தீயும் ஓரற்றே!''

*

(புறநானூறு - பாடல் : 246
பாடியவர் : பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு)

பொருள் விளக்கம் :

மெலிகோல் = கொடுங்கோல். இழுக்கியான் = இழந்தவனுவேன். ஓரீஇ = நீக்கி. வன்புலம் = வறண்ட நிலம். ஈமம் = விறகு அடுக்கிய சுடலைத் தீ. வள் = வளம். நள் = செறிந்த. ஒரற்று = ஒரே தன்மையானது.

*



காட்டில் பிறந்த கவிதை!

'கரவீரம்' என்பதோர் சோழ நாட்டுச் சிற்றூர் - அங்கு
களவீரம் காட்டுகின்ற போர்மறவன் ஒருவனுண்டு! - அவன்,
கடுந்தோளால் மோதுண்டு கடல்மணலாய்ப் பொடியானோர்
கணக்கற்றோர் என்பதாலே ''கடுந்தோள் கரவீரன்'' என்று
புலிக்கொடி பிடித்த சோழப்படையினர், அவனைப்
புகழ்ந்து போற்றி மகிழ்ந்து வாழ்த்தினர்!

போர்வாளின் முனையால் மட்டும் தன் பெயர் பொறித்தல்
போதாதென்று
பூப்போன்ற தமிழ் பறித்துக் கவிமாலை தொடுத்திடவும் ஆசை
கொண்டான்!
ஈட்டியின் கூர்மையினைத் தடவிக் கொண்டிருந்த வீரன்;
எழுத்துக்களை விதைத்து சொற்கள் எனும் பயிர் வளர்த்தான்
அழகு தமிழ்க் கவிநெல்மணிகளை ஓலைக்கழனியிலே
அறுவடை செய்வதற்கும் ஆயத்தமாகி விட்டான்.

இயற்கையின் வார்ப்படங்கள் ஒன்றன்பின் ஒன்றுக அவன்
முன்னே வந்து;
எமைப்பற்றிப் படைத்திடுக ஒரு பாடல் எனத் தவித்து
நின்றனவே!

நிலாப்பேடை நான் வானத்தில் இட்டுள்ள
நட்சத்திர முட்டைகளை எண்ணி எழுதென்று
ஒளிச்சிறகால் அவனைத் தழுவிக்கொண்டு
உயிரைத்தான் எடுத்தது விண்ணகத்து வட்ட மதி!

கிழக்குப் பூவாம் என்னை எழுதிட ஏன் தயக்கமென
வழக்கொன்று தொடுத்திட வந்துவிட்டது உதயக்கதிர்!

வெள்ளி உருக்கிக் குளிரூட்டி அருவியாய்ப் பொழியும்
புள்ளி மயில் உலாவும் மலைக்குன்றங்களோ -
துள்ளி அவன் முன்னே குதித்தோடிச் சூழ்ந்து,
அள்ளிப் பருகிடுக எமதழகை என்றனவாம்!

ஒரு பந்தை எடுத்து வீசி ஆடிடும்போது
இரு பந்து குலுங்கக் குறுநகையால் கொல்லுகின்ற
மங்கையர் கூட்டம்; ''எழுதுக எமது
மான்விழிச் சாயல்'' என மறியல் நடத்தியதாம்!

வண்ணக் கிளிகள் வந்தன; அவனைச் சுற்றி
வட்டமிட்டு வரைக பாடல் எமைப்பற்றி என்றன!
அன்னத்தின் கூட்டமொன்று ஓடையிலே படகாகி
சின்னக் கவிதை யொன்று எமைப்பற்றிப் பாடுக என
மிதந்ததே!

ஆயிரம் அழகுகளை அடுக்கிடும் இயற்கை; சிறப்புப்
பாயிரம் ஒன்றை விரும்பிக் கேட்டும் பயனிலை அவன்பால்!
காட்டுக்குள் சென்றான் - கற்பனை விரித்துப்
பாட்டுக்குக் கருப்பொருள் தேடிட முயன்றான்!

கன்னங் கருத்த மலையென எதிரே
களிறுகள் நின்று கம்பீரம் காட்டின!
கடைக்கண் பார்வையும் அதற்கெனச் செலவிட
'கடுந்தோள் கரவீரன்' எண்ணினான் இல்லை!


ஆர்த்தெழுந்த ஆண் சிங்கமொன்று
அடர்ந்த பிடரியைச் சிலிர்த்துக்கொண்டு
அட்டியேதும் உளதோ எனது பெருமிதத்தைக்
கட்டிவெல்லக் கவிதையாக ஆக்குதற்கு என்றதாம்!

உறைவிட்டெழுந்த வாள்போலக்
குகைவிட்டெழுந்த புலியொன்று
உன் கவிதைக்குச் சிறப்பளிக்க
என் கடுங்கோபம் போதாதோ என மடக்கியதாம்!

எமை எழுதென்று காலில் விழுந்த அழகையெலாம்
எழுதுதற்கு ஓலை எடுக்காத அக்கவிஞன்;
இறுதியிலே குரங்கின் இணையொன்றைக் கண்டு
உறுதி! உறுதி! என் கவிதை இவ்வுலகில்,
மறையாமல் வாழ்வது மிக உறுதியென
மார்தட்டிக்கொண்டு மலர்த்தமிழ்க் கவிதை யாத்தான்!

அழகு, அழகு, அழகு என
அங்கிங்கெனுதபடி எங்கெங்கும்
அழகுமகள் கொலுவீற்றிருக்கும் அவனியிலே
அலங்கோல முகங்கொண்ட குரங்கிரண்டு
அவன் சிந்தை கவர்ந்த விதம் எவ்வாறென
அறிவதற்கு நம் ஆவல் அலைமோதுவதால்

அவன் கண்ட காட்சியினை நாமும்கூட
அவன் யாத்த கவிதையினை விழியாய்க் கொண்டு
பார்த்து மகிழ்ந்திடுவோம் - பாச உணர்வுதனைப்
பாட்டில் தீட்ட அவன் தேர்ந்தெடுத்த



பாத்திரத்தின் சிறப்புதனைப்
போற்றி வியந்திடுவோம்!

* ஓங்கி வளர்ந்திருந்த மரமொன்றின் கிளையினிலே
ஒன்றிய அன்பால் உணர்வுகள் கலந்து
ஓர் இணைக் குரங்குகள் ஆணும் பெண்ணுமாய்;
உற்சாகம் மேலிட உட்கார்ந்திருந்தன!
அவைகள் ஈன்ற இளங்குட்டியொன்றும்
அன்னையின் மடியில் உறங்கிற்றுங்கே!
தந்தைக் குரங்கு தனது துணைக்கோர் முத்தம்
தந்த பின்னர் தாவிப் பாய்ந்தது வேறோர் கிளைக்கு!
தடம் பிறழ்ந்து தடுமாறி விட்டதாலே
'தடால்' என வீழ்ந்தது தரையின்மீது!
கணவன் குரங்கு வீழ்ந்த இடத்திற்குக்
கைக்குழந்தையுடன் கடுகி விரைந்தது தாய்க் குரங்கு!
மரக்கிளை விட்டு விழுந்த ஆணை;
மலைமுகடுதட்டி மண்டை பிளந்து
மரண மடிதனில் ஆழ்ந்து கிடந்தது.
மனம் எரிதழலாக மந்தி தவித்தது.
கனவிலும் தான் பிரியாக் கடுவனைப் பிரிந்து
கணமும் உயிர் வாழ்தல் இயலாதென்று
கண்ணீர் பெருக்கிக் கதறித் துடித்து
கைகளால் முகத்தில் அறைந்துகொண்டது!
பெற்ற குழந்தையோ காட்டில் வாழும் விதம்
கற்றிடவில்லை எனினும் என்ன; என்
உற்றார் உறவினர் அதனைப் பழக்குவர் எனவே
ஒப்படைப்பேன் உடனே அவரிடம் என ஓடி
உறுதுணையாய் இருப்பீர் என் மகவுக்கென
உரைத்தோர் முத்தம் குட்டிக் கீந்தது!

அதன்பின்னர்

மனைவியாய்த் தனையேற்று
மரக்கிளையில் மஞ்சம் கட்டி
மகவொன்றும் கையில் தந்த
மணவாளன் தனைப்பிரிந்து
துடிக்கின்ற வாழ்வுதனை விரும்பாத அவ்விலங்கு
துணைவனுடன் போய்ச்சேர முடிவுகட்டி
உச்சி மலைமீதொன்றில் வேகமாய் ஏறிச் சென்று
உருத்தெரியாமல் கீழ் வீழ்ந்து உயிர்தனை விட்டதம்மா!

அழகு கொழிக்கின்ற மாந்தரிடம்
அன்பின் நிழல் கூட இல்லாத நிலையும் உண்டு!

அழகென்றூல் என்ன வினை எனக் கேட்கும் குரங்கினத்தின் அன்புப் பெருக்கு கண்டு உருகிவிட்டான் அக்கவிஞன்!

*

* ''கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றென,
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்...
. . . . . .
. . . . . ''

*

(குறுந்தொகை : பாடல் : 69
பாடியவர் : கடுந்தோள் கரவீரன்)

பொருள் விளக்கம் :

கருங்கண் தாக்கலை பெரும் பிறிது உற்றென = கரிய விழியும் தாவும் தன்மையும் உடைய ஆண் குரங்கு மரணம் உற்றதென்று.
மந்தி = பெண்குரங்கு.
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி = வாழும் வகை கற்றிடாத வலிய குட்டியை சுற்றத்திடம் சேர்த்துவிட்டு.
ஓங்குவரை = உயர்ந்த மலை. செகுக்கும் = போக்கிக் கொள்ளும்.

*

* ''கரவீரம்'' - சோழநாட்டில் திருவாரூருக்கு அருகிலுள்ள ஊர் என்பதாக டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் குறிப்பு ஒன்று கூறுகிறது.



"கண்ணல்லவோ, கனியல்லவோ - எழுதாத
பண்ணல்லவோ - என் நெஞ்சம்,

விண்ணல்லவோ; அதில் நீ
வெண்ணிலவல்லவோ! என்றென்னே

அழைத்திட்ட போது, அவன் வடித்திட்ட வார்த்தைகளோ;
அருவி தவழ்ச் சோலை அழகு மலர்க் கூட்டம்!

மதுக்குடங்கள் அழுந்தட்டும் மார்பில் என்று - அவன்
மணிக்கரத்தால் குறும்பு செய்து,

புதுச் சுவையை இதழுக்கு அளித்தபோது,
புவி முழுதும் தலைகீழாய்ச் சுழலக் கண்டேன்.

உச்சி முதல் உள்ளங்கால் வரையில் உன்னை
'இச்' சென்ற ஒலியோடு உதட்டால் சுவைக்கத்

தடையொன்று இருக்கலாமா? அன்பே!
உடையென்று அதற்குப் பேரா? - உடன்

விடை கொடுத்து அனுப்பு'' என்றான் - அந்தப்
படை முகத்துப் பெருவீரன் பேச்சுக்குப்

பதில் பேச்சுப் பேசவில்லை நானும்! அதனால்
பஞ்சு பஞ்சாய்ப் போனதுவே மஞ்சம்!


'இகல்' என்றால் 'பகை' என்று பொருளாம்;
'பகல்' வந்தால் எமக்கு 'இகல்' தானே அன்று!

''அகல் விளக்கே! ஆருயிரே!
புகல்வதுகேள்; பூங்குயிலே!

போர்முனையில் வில், வேல், வாள் எனும்
ஏர்பூட்டி வெற்றி விளைச்சல் நடத்திவிட்டு

வாடைநாள் தொடங்கு முன்னர், வடிவழகே!
ஓடைமலர் உனைக்காண ஓடிவருகின்றேன்'' - என

நாள் குறித்து நான்மகிழ உறுதிமொழி
வாள் மீது ஆணையிட்டு அடித்துச் சொன்னார்.



''நாக்கு நுனியிரண்டும் பிணைந்து மீண்ட பின்னர்
வாக்குத் தவருதீர் அத்தான்'' என்று

கண்ணிரண்டின் கடை விழியும்;
மின்னுகின்ற துளிகளுடன் - அவனை

வழியனுப்பி வைத்த காட்சிக்கு; வான்பிறை போல்
வடுக்களாய் நிலைத்துவிட்ட அவன் நகக்குறி பற்குறியே சாட்சி!

சாட்சிகள் இத்தனை இருந்தென்ன;
சத்தியம் அத்தனை செய்தென்ன;

கோடையில் இளநீர் போன்றவளை
கூடிக் களித்திடக் கோமகனும்,

வாடைநாள் வந்தும் வரவில்லை - அவளோ
ஆடை நழுவிடப் புரளுகின்றாள்.

''பிரிந்திருக்க அவன் நாள் குறித்தபோதே,
பிடிவாதமாய் மறுத்துரைத்துத் தடுத்திருந்தால்;

காதல் நோயால்,

எரிந்திருக்கப் போவதில்லை இந்த மேனி - அது
தெரிந்திருக்க வேண்டாமோ அப்போதே என் கண்களுக்கு?''

இவ்வாறு,

தங்கச்சிலையாள் தன் கண்களைச் சினந்ததை
சங்கத் தமிழாய் இங்கே காண்போம்!

*

*** ''நாண்இல மன்ற எம்கண்ணே - நாள்நேர்பு**
சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்பு பொதி அவிழ
நுண்ணுறை அழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும், பிரிந்திசினோர்க்கு அழலே''

*

(குறுந்தொகை : பாடல் 35
பாடியவர் : கழார்க் கீரன் எயிற்றி)

''விழியிரண்டுக்கும் வெட்கமில்லை என்பேன்
விரல்விட்டு நாள் எண்ணி வரும் வேளை குறித்து - அவன்
விடை கேட்டபோது

சரியென்று ஒப்பிவிட்டு; இன்று - இமய
கிரி விட்டு வழிகின்ற நதிபோல அழுதென்ன பயன்?

குறித்த நாளுக்குள் வருவேன் என்றும் - குளிர்
வருத்தும் வேளையில் கூடியிருப்பேன் என்றும் - நீரில்

பதித்த வார்த்தைகள் நிற்காததாலே - பிரிவில்
கனத்தது நெஞ்சம் - தகித்தது காமம்!

கருக்கொண்ட பச்சைப்பாம்பின் உடல் போன்று - பருத்த
கணுக்கொண்ட கரும்பின் அரும்பு மடல் அவிழ

துகில் போல வானமங்கையின் மேலாடும்
முகில் கூட்ட மழைத்துளிகள் படைக்கின்ற

வாடையெனும் குளிர்காற்றுல் வாடுகின்றேன் - என்
ஆடையினை அகற்றிடினும், வெப்பம் மூளும்; - அவன்
அருகிருந்தால்!

அவ்வாறு

இல்லாமல் அவன் பிரிந்திருப்பதற்கு - என்
பொல்லாத கண்களே விடையளித்தன அன்று!

நில்லாத அருவிபோல அழுவதேனோ இன்று?
கல்லாத கண்களே! கவிழ்ந்திடுக நாணத்தால் பூமி நோக்கி!''

மொழியழகி - விழியழகி - முத்துநகைப் பேரழகி -
பொழிலழகை வெல்லுகின்ற புவியழகி;

அழுதழுது முகம் வீங்கியதால்
விழுதனைய நீர் இறங்கும் கன்னத்தில் கைவைத்துக்

''கண்களே! நாணம் கொள்க!'' எனக்
கடுமையாய்ச் சொல் உதிர்த்த நிகழ்ச்சிக்குக்

கவிதை வடித்திட்ட புலவர் நெஞ்சம்
கற்பனையின் ஊற்றன்றோ!

தென்தமிழின் மணம்பரப்பும் - இளந்
தென்றல் காற்றன்றோ!

பொருள் விளக்கம் :

நாண்இலமன்ற = நாணமில்லாதனவாயின. நாள் நேர்பு = குறித்த நாளில் வருவதாகக் கூறியதை ஒப்புதல்.
நுண்ணுறை அழிதுளி = முகிலில் இருந்து கரைந்து தூவுகின்ற மழைத்துளி. பிரிந்திசினோர்க்கு அழல் = பிரிந்து சென்ற தலைவன் பொருட்டு அழுதல். கனைத்த கரும்பு. = பருத்த கரும்பு.

வாலிங்கே-அவன் நாகேகெங்கே?

குடிசைதான்! ஒரு புறத்தில்
கூரிய வேல்வாள்
வரிசையாய் அமைத்திருக்கும் - வையத்தைப்
பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்
வடித்துவைத்த படைக்கலம்போல் மின்னும்; மிளிரும்!

புலியின் குகையினிலே அழகில்லை -
புதுமையல்ல!
கிலியும் மெய் சிலிர்ப்பும்
கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா
மானத்தின் உறைவிடம் -
மறவன் மாளிகை!
இல்லத்து வாயிலிலே
கிண்ணத்துச் சோற்றோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து
வயிற்றுக்குள் வழியனுப்பப்
பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப் போட்டாள்
பெருநரைக் கிழவி யொருத்தி.

ஓடி வந்தான் ஒரு வீரன்
''ஒரு சேதி பாட்டி!'' என்றான்.
ஆடி வந்த சிறுமி போல்
பெருமூச்சு வாங்குகின்றாய்
ஆண்மகனே நீ தம்பி!
மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும்; பின்,
பேச்சுக்குத் துவக்கம் செய் என்றாள் அந்தக்
கிண்டலுக்குப் பேர் போன
கிழட்டுத் தமிழச்சி!

வேடிக்கை நேரம் இதுவல்ல பாட்டி - உன்
வாடிக்கைக் கேலியை விட்டுவிடு
'மடிந்தான் உன் மகன் களத்தில்'
என்றான் - மனம்



ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி அக்கணமே!
''தாயம் ஆடுகையில் காய்களே
வெட்டுவதுண்டு - களமும் அதுதான்.
காயம் மார்பிலா? முதுகிலா?
கழறுவாய்'' என்றுள் - முதுகிலென்றுன்.
கிழவி துடித்தனள்; இதயம் வெடித்தனள்;
வாளை எடுத்தனள்;
முழவு ஒலித்த திக்கை நோக்கி
முடுக்கினுள் வேகம்!

''கோழைக்குப் பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர்
போர் வீரனும்! முன்பொருநாள்
பாய்ந்து வந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச்
சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணுளர்!
அவருக்குப் பிறந்தானு?
அடடா மானமெங்கே - குட்டிச்
சுவருக்கும் கீழாக வீழ்ந்து பட்டான்.

இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் - இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்
அதுவும் மானம் மானமென்றே முழக்கும்!
மாற்றூர்க்கு மண்டியிட்டு வாழுகின்ற
மானமற்ற வம்சமா நீ - ஏடா
மறத் தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்
மார்பு கொடுத்தேன்
மடிமேல் வளர்த்தேன் -

தின்று கொழுத்துத்
திமிர் பாய்ந்த தோள்களெங்கே?
தினவெடுக்கவில்லையா? அந்தோ! பகைவர்
வேலுக்கு வழி சொல்ல வகையற்ற
கோழையே - என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்!
என்று கதறினுள்
எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி.
சென்றங்கு செரு முனையில்
சிதறிக் கிடந்த
செந்தமிழ்க் காளைகளைப்
புரட்டிப் பார்த்தாள் - அங்கு
நந்தமிழ் நாட்டைக் காக்க

ஓடிற்று ரத்த வெள்ளம்!
பிணக் குவியலிலே பெருமூச்சு
வாங்க நடந்தாள்!
மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை - மகன்
பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு
எல்லையுண்டு - அவன்
இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!
இதைக் கண்டாள் - இதயங் குளிர்ந்தாள்!
''எதைக் கண்டாலும் இனிக்கவில்லை இல்லை
என் மகன் வீரனுய் இறந்தான்'' என்றாள்.
அறுத்தெறிய இருந்தேன்
அவன் குடித்த மார்பை - அடடா!
கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?
வாளிங்கே! அவன் நாக்கெங்கே?''

*

* ''நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
''மண்டமர்க் குடைந்தன னுயின் உண்டவென்
முலையறுத் திடுவென், யானெ''னச் சினைஇக்
கொண்ட வாளொடு படு பிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே ருகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.''

*

(புறநானூறு : பாடல் : 278
பாடியவர் : காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்)

பொருள் விளக்கம் :

நரம்பு எழுந்து உலறிய = நரம்புகள் தோன்றிட வற்றிய.
முளரிமருங்கின் முதியோள் = தாமரைபோல் ஒட்டிய வயிறுடைய கிழவி.
படையழிந்து மாறினன் = படைகண்டு அஞ்சிப் புறங்கொண்டு மாண்டான்.
மண்டமர் = களப்போர்.
சினைஇ = சினந்து.
சிதைந்து வேருகிய படுமகன் = விழுப்புண் பெற்றுக் கிடக்கும் மகன்.

*

குறளுக்குக்கோர் கூனியுண்டு!

குதிகாலைத் தொடுகின்ற கூந்தல் கொண்ட
குமரிப் பெண் ஒருத்திக்கும்
அதிகாலைச் சூரியன் போல் ஒளிவீசும்
ஆணழகன் ஒருவனுக்கும்
காதல் முடிச்சொன்றைக் கச்சிதமாய்ப் போட்டு
கவியரசர், புவிமீது கவிதைகளைப் பொழிந்திடுவர்!

அன்னநடை, மின்னலிடைப் பூம்பாவை
அரும்பு மீசை, இரும்புத்தோள் இளங்காளை
கன்னல் நிகர் இதழ் பதித்துக் கட்டிலிலே
கலைபயிலும் காட்சியென்ன காணீர் எனக்
கற்பனையை மடையுடைத்த வெள்ளமாக்கிக்
கவிப்புலவர் காதற்கதை மொழிந்திடுவர்!


தங்கத்தை உருக்கி வார்த்த தகத்தகாய நங்கை அவளும்
சிங்கத்தின் பீடுநடை கற்றுலவும் நம்பி அவனும்
பொங்குற்ற காதலினுல் ஓருயிராய் ஆகும் நிலையை
சங்கத்துக் காலந்தொட்டு சாற்றுகின்றார் தமிழ்ப் புலவர்!

இதற்கெல்லாம் மாறுக இளநாகனர் எனும் புலவர்,
இரு உருவங்களை இழுத்து நம் எதிரே நிறுத்தி
அழகென்றால் என்ன விலை? அது எங்கே விற்கும்?
அளந்து கொடுப்பார்களா? அல்லது நிறுத்துத் தருவார்களா?
எனக் கேட்கும் அவ்விருவர் இதயத்தில்
எழுந்த காதல்தனை விவரிக்கின்றார்!

குறளன் எனிலோ குள்ளன் என்றும்
கூனி எனிலோ மேனிவளைந்தவள் என்றும்
கோயில் எனிலோ மன்னன் மாளிகை என்றும்
கூறுவர் பொருளைத் தமிழில் அறிவீர்!

கோயிலொன்றில் கூனியும் குறளனும்
கொடுத்த பணிகள் முடித்துவிட்டு
அவரவர் இல்லம் திரும்பும் பொருட்டு
அரண்மனை வாயிலைக் கடந்து நடந்தனர்!

கூனியைக் கண்ட குறளன் நெஞ்சில்
கொழுந்துவிட்டு எரிந்தது காதல்! அதனை



அணைக்கத் தவித்த ஆழாக்கு மனிதன்; கூனியின்
அருகே நெருங்கிட நினைத்தான்!

கோலமிகு புருக்கள் மட்டுமே காதல் கொள்ளுமா?
கொஞ்சு மொழிக் கிளிகளுக்கே இன்பம் சொந்தமா?
கோட்டான்கள் கூட உடலுறவு கொண்டு - தங்கள்
குலம் பெருக்கி வாழ்கின்ற வையமன்றே இஃது!

அதனாலே,

குறளன் மனத்தில் கூனியின் நினைவும்
கூனியின் மனத்தில் குறளன் நினைவும்
கூடுகட்டி வாழ்ந்தன என்பது - இந்தக்
குவலயத்துக்கோர் அதிசயமல்ல!

குரங்கினமும் கோவேறு கழுதையினமும்
கொஞ்சி மகிழும் இன்ப பூமியிலே
குறளனும் கூனியுமட்டும் - உடலின்பம்
கொள்வதற்குத் தடை ஏதும் உளதோ?

உடலால் குள்ளமாயிருப்பதாலே - அவன்
உள்ளமும் வெறும் பள்ளமாய் இருந்திடுமோ!
வளைந்தவளாயிருக்கலாம் கூனி - நெஞ்சிற் காதல்,
நிறைந்தவளாயிருப்பதென்ன தீதா?

இதையெல்லாம் சிந்தித்துத்தானோ என்னவோ
இளநாகனாராம் இனிய சங்கப்புலவர்;
எடுத்தார் ஓலையினை - எழுதி
முடித்தார் ''கூனி - குறளன்'' காதல் உரையினை!

இதோ அது :-

குறளன் :-

கரைதனில் நிற்கின்ற மரத்தின் நிழல் - நீரின்
அலைதனில் வீழ்ந்து நெளிவது போல
தரைதனை நோக்கும் கூனுடல் கொண்டவளே!
தட்டாதே என் சொல்லை! சற்றே நின்றிடுக!

கூனி :-

'ஆண்டலைப்புள்' எனும் மனிதத் தலை கொண்ட
அதிசயக் கோழி ஈன்ற அற்புதக் குஞ்சே!
ஆள் பிடித்தால் பிடி ஒன்றிருக்கும் குறளன் உனக்கு;
அழகியென்னை நெருங்குதற்குத் தகுதியுண்டோ?

குறளன் :

கொழு பூட்டிய கலப்பையைப் போல்
கூன் விழுந்தும் மேலெழுந்தும் திகழ்கின்ற
பழுதற்ற உன்னழகு மயக்குதடி என்னை!
ஏன் மௌனம் காட்டுகின்றாய்? உன்
எண்ணத்தைக் கூறிவிடு! அல்லால்
எனை நீயே கொன்று விடு!

கூனி :-

கலப்பையைப் போலிருக்கின்றேனா? - என்ன
காலம் பார்த்தாயா - என்னை நீ கேலி செய்ய?
தூக்கி நிறுத்திய
சூதாடும் சதுரங்கப் பலகை உயரம் இருக்கின்ற நீயா
வாதாடுவது என்னுடைய அழகு பற்றி?
ஆண்பிள்ளை நீ அறிந்திருக்க வேண்டாமா; ஓர்
ஆரணங்கைக் கூடலுக்கு அழைக்கும் விதம் இதுதானா?
காளை நீ திமிர் கொண்டு விட்டதாலே
வேளை நேரம் கூடப் பார்க்கத் தேவையில்லை
என்கின்றாயா?

குறளன் :

உரித்த கொக்கு போல் உடலழகு கொண்டவளே!
உனை மார்புறத் தழுவினாலோ உன் கூனல்
நெஞ்சில் குத்தும்!
இச்சையுடன் பின்புறமாய்த் தழுவிடிலோ
'கிச்சு கிச்சு' மூட்டுமடி உன் முதுகுக் கூனல்!
பரவாயில்லையெனில் ஒன்று செய்வோம்;
பக்கம் பக்கம் நின்று பசியாறத் தழுவிக் கொள்வோம்!

கூனி :-

அரை மனிதன் நீ என்பதறியாமல் - என்ன
உரை நிகழ்த்தி விட்டாய் என்னிடத்தில்!
மரம் தழுவும் கொடி போல எனைத் தழுவப் பலர்
வரம் கேட்டு வருவது தெரியாமல்
என்ன குறை என்னிடத்தில் கண்டுவிட்டாய் - அதனால்
இன்னல் தரும் வார்த்தைகளைக் கூறிவிட்டாய்!
ஆமையொன்று எழுந்து நிற்பது போல்
ஆகாயமளாவ உயர்ந்து நிற்பவனே...
ஆகாகா!... காமன் போல் நடை வேறா? நல்ல
அழகுதான் போ போ!...

குறளன் :

இனி உன்னை இகழ மாட்டேன்...
இழிமொழிகள் உதிர்க்க மாட்டேன் - இதை
ஆணையிட்டுச் சொல்கின்றேன்; ஆருயிரே!
அரண்மனைக்குள் வந்திடுக; நாமிருவர்
தழுவிடவே தகுந்த இடம் பார்த்துள்ளேன்; என
தங்க மயிலே! தயங்காமல் வந்திடுக!

கூனி :-

நானும் உன்னை இனி ஏளனம் புரியமாட்டேன்...
தேனும் பாலும் போலத் தழுவி மகிழ்வோம் அன்பே!
அரண்மனையாம் அரசனது கோயிலுக்குள்
அணைத்து நாம் இன்பமுற்றால் - அதைக் காண்போர்;
பேய்களிரண்டு கட்டிப் புரண்டு
பிணைந்து கலவி செய்வதாகப் பேசிடுவர்!
அதனாலே
அடுத்திருக்கும் சோலைக்குள் போய்விடுவோம்.
அங்கு நாமிருவர்; ஓலைநறுக்கினை எழுதிச் சுருளாக்கி
கெட்டியாய் அரக்கு முத்திரையிட்டாற்போல்
ஒட்டிக் கிடப்போம் வந்திடுக!
கூனியின் அழைப்பு கேட்டுக்
குறளன் என்ன ஆனான்?
குதித்தோடி அவளைத் தூக்கிக் கொண்டான்!
கொத்து மலர்ச் சோலைக்குள்
கொள்ளை இன்பம் மொண்டுவிட்டார்!
''குறளன்-கூனி'' என்பதெல்லாம் உடலில்தான்!
குலவி மகிழும் உள்ளமிரண்டுக்குள்
குள்ளமில்லை - நல்ல உயரம்!
கூனல் இல்லை - வானம் பார்த்த நோக்கு!

*

*** ''என் நோற்றனை கொல்லோ? -**
நீருள் நிழல் போல் நுடங்கிய மென்சாயல்
. . . . . .
. . . . . .
. . . . . .
துகள் தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடு காப்பு யாத்து விட்டாங்கு''

*

(கலித்தொகை : பாடல் : 94
பாடியவர் : மருதன் இளநாகனார்)

(குறிப்பு : உரையாடல் போன்ற முழுப்பாடலும்
43 வரிகள் கொண்டு அமைந்ததாகும்)

குப்பைக் கோழியார்!

காவலுக்கு நிற்கின்ற வீரனைப் போல்
கழுத்துயர்த்திக் கம்பீரம் காட்டுகின்ற
சேவலுக்குச் சினமூட்டிக் களத்திலிறக்கி - ஊரார்;
சிரித்து மகிழ்ந்து சேவல் போர் கண்டிடுவர்.

சிற்றூர் முதல் பேரூர் நகரங்கள் வரை - இந்தச்
சேவற் சண்டை காணும் வழக்கம், இன்று நேற்றல்ல;
கற்றோர் ஏத்தும் கலியும் அகமும் புறமும் பிறந்த
கடைச் சங்க காலத்துக்கு முன்பே தொடக்கம்!

ஆதாரங்களில் ஒன்று அழகு குறுந்தொகையிலுண்டு — அது;
அகத்துறைப் பாடலொன்றில் காணும் அடிக் கரும்பின் துண்டு!
பாதார விந்தம் வரை பருவத்தின் எழில் கொழிக்கும் பாவை;
படையெடுத்த காதல் நோயால் படுந்துயரம் பாரீர்!

''அன்றந்த முல்லைப் புதரிடையே ஆணழகன்; இரு
குன்றம் போல் தோளுடையான்; அரிமா நடை பயின்றான்!
சென்றங்குச் சேர்ந்து தழுவ முடியாமல் எனைக்
கொன்றிங்குச் சிறைப்படுத்திப் போட்டாளே; தாய்!

கண்களால் கண்டவுடன் என் கண்ணுக்கு மணியானான்!
''கண்மணீ!'' என்றழைத்துக் கட்டித் தழுவிடவே
கருணை மனம் கொண்டு அவன்தான் வந்திருக்கலாகாதோ? — என்
கவலையெனும் நெருப்பாறு அவன் கைபட்டால்
நீர்வீழ்ச்சியாகாதோ?

என் செய்வேன்; என் நோய் தீர்க்கும் மருந்தாக அவனிருக்க
எதை நினைத்து நான் அழுவேன்? காதலெனும்
வன்செயலால் கடுந்தொல்லைக் காளானேன்!
மென்காற்றும் என்னுள்ளம் புயலாக மாறியதே!

யார் தந்தும் வந்ததில்லை இத்துயரம் எனக்கு - இதனை
யார் வந்தும் தடுத்தென்னை வாழவிடப் போவதில்லை!

தானுக வந்து தவிக்கவிடும் இத்துயரம்; அதுவே
தானுகப் போவதன்றி வேறு தடம் தெரியவில்லை!

சேவலைத் தயாரித்து சண்டைக்கு விடுவோர்
ஆவலாய் அதனை ஒன்றோடொன்று மோதவிடுவர்!
ஏவியவரே பின்னர் சண்டையை விலக்கி;
தாவிடும் சேவல்கள் தணற்சினம் தணிப்பர்!

தூண்டி விட்டுப் போர்புரியச் செய்திடவும் - எல்லை
தாண்டுமிடம் இரண்டு சேவல் விலக்கிடவும்
இடையிலே ஆட்கள் சிலர் இருப்பதுபோல்
மடை திறந்த என் துயரம் தீர்ப்பதற்கு யார் உளர்?

குப்பையிலே மேய்கின்ற கோழிகட்குள் போர் மூளும்!
கொக்கரித்து ஒன்றையொன்று கொத்திக்கொள்ளும்!
அந்தக் கோழிகளைத் தூண்டிவிட்டோர் யாருமில்லை; அங்கே
வந்துவிட்ட சண்டைதனை விலக்கிடவும் நாதியில்லை!

அதுபோல
''காதலால் துடித்திடுக'' என்றென்னை எவருமே தூண்டவில்லை; அக்
காதற் கனலென்னைத் தகிக்கும்போதும் யாரும் வந்து
தணிக்கவில்லை!
குப்பைக் கோழிகள் தமக்குள்ளே சண்டையிட்டுக்
கொத்திக்கொண்டு தாமே அழிவது போல்

அனுமதியின்றி என்னிதயம் புகுந்து
அணுஅணுவாய் எனைச் சீர்குலைக்கும்
அடங்காக் காதல் நோய் அகற்றி எந்தன்
அழிவைத் தடுத்திட எவருமிலையே'' என்று புலம்பினள்!

அந்தக்
குமரிப் பெண்ணின் குமுறும் நெஞ்சுக்குக்
குப்பைக் கோழிச் சண்டையினை உவமையாக்கிய
குறுந்தொகைப் புலவரின் பெயர் தெரியாக் காரணத்தால்
''குப்பைக் கோழியார்'' என்றே அவரை அழைத்தனர்!

இப்படித் தமிழ் நிலத்தில் இனிய சுவை
இலக்கியங்கள் படைத்தோர் பெயர்கள் சில
எப்படியோ மறைந்தும் ஒழிந்தும் போயினுங் கூட
தப்பியதே தமிழ் இலக்கியம் பல எனக் களித்திடுவோம்!
களிப்பில் கூத்திடுவோம்

*



* ''கண்தர வந்த காம ஒளிஎரி
என்புஉற நலியினும், அவரொடு பேணிச்
சென்று, நாம் முயங்கற்கு அருங்காட் சியமே
வந்துஅஞர் கூளதலை அவர்ஆற் றலரே;
உய்த்தனர் விடாஅர் பிரித்துஇடை கூளயார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல,
விளிவாங்கு விளியின் அல்லது,
கூளவோர் இலையான் உற்ற நோயே.''

*

(குறுந்தொகை பாடல் : 305
பாடியவர் : குப்பைக்கோழியார்)

பொருள் விளக்கம் :

காம ஒள்எரி = காமமெனும் ஒளிபொருந்திய தீ.
முயங்கல் = அளவளாவுதல். அருங்காட்சியம் = காண்பதற்கு முடியாதவளானேன். வந்துஅஞர் கூளதல் = நாமிருக்குமிடம் அவர் வந்து துயரம் கூளவது. விளிவாங்கு விளியின் அல்லது = தானே அழிந்துபோதலன்றி.


*


பஞ்சணையில் அரசி; பாசறையில் மன்னன்!

அகமென்றும் புறமென்றும் வாழ்க்கையினை
அழகாக வகுத்துக்கொண்டு
அன்றுதொட்டு வாழ்ந்து வருகின்ற இனம்
அருமைமிகு நம் தமிழ் இனம்தான் என்று
ஆயிரங்காலத்துப் பயிராக நமக்கு வாய்த்த
ஆன்றோர் செய் இலக்கியங்கள் சான்று கூறும்!

அதற்குப் பற்பல எடுத்துக்காட்டுகள் உண்டெனினும்,
ஆரம் போல் கோத்தளித்தார் நக்கீரனார்;
பத்துப் பாட்டுள் - ஒரு
முத்துப் பாட்டாய்த் திகழ்கின்ற
''நெடுநல்வாடை'' எனும் தமிழ் அமுதம்! அது;
நெடுஞ்செழிய பாண்டியனின் வீரம் சொல்லி,
நீண்ட நாள் அவன் பிரிவால் ஏங்குகின்ற
நேரிழையாள் கோப்பெருந்தேவி மனம்;
நெருப்பாகச் சுடுகின்ற நிகழ்வைக் கூறி,
அகம், புறம் எனும் வாழ்க்கை
அந்நாள் தமிழகத்தில்
இகம், பரம் என்ற கூற்றுக்கே
எதிரிடையாய் இருந்த நிலை
எடுத்தியம்பும் நூலாகும்!

தலையாலங்கானத்துப் போர்க்களத்தில்
தனிமையில் ஓர் இளைஞன் சிக்கினன் என்று
தவறுகக் கணக்கிட்ட ஏழு மன்னர்
தடந்தோள் புழுதிபடத் தோற்றே போனார்!
அதன் பின்னர் நெடுஞ்செழியன்
அன்றிலென வாழ்வோமென்று





அழகு மணிப்புறுவொன்றை
அரசியென ஏற்றுக்கொண்டான்....

இளவயதில் போர்முனையில்
எழுவர்படை வீசிய வேல்வாள் பட்ட
விழுப்புண்கள் ஆறிப்போய்
வடுக்களாய் மாறிப்போயிருப்பினும் - அவை;
பாண்டியன் மார்பகத்தில் - தங்கப்
பதக்கம் போல் மின்னுவதாய்
எண்ணிக்கொண்டு எழிலரசி;
எண்ணுமலே கொடுத்திட்டாள் முத்தம்; நித்தம்!

மணமுடித்து மஞ்சத்தில்
மனங்கவர் அஞ்சுகத்தை
கணநேரம் பிரியாமல் இரவெல்லாம்
கட்டிய கட்டுக் குலையாமல் இருப்பதற்கு
காலம் இடம் தரவில்லை....போர்க்
களங்களின் அழைப்போ பெரும் தொல்லை!

தலையாலங்கானப் போருக்குப் பின்னும் - அவன்
தலைமையேற்று வென்றிட்டான்;
''வேள் எவ்வி''யெனும் மன்னவனின் மிழலைக் கோட்டம்!
வாள்வீரர் முத்துவேளிர்க்குரிய

முடியினைப் பறித்து - அவர்தம்
முத்துக் கூற்றமும் கவர்ந்திட்டான்!

''சேரமான் யானைக்கட்சேய் இரும்பொறை'' என்னும்
வீரமா மன்னன் படையழித்து, அவனைச்
சிறைதனில் அடைத்துப் போட்டு விட்டான்!

இவ்வாறு
மலைமலையாய் வெற்றி மாலை குவித்திடவே
அலைஅலையாய்ப் படைகொண்டு ஆர்ப்பரித்துக் கிளம்பியதால்
குலைகுலையாய்ப் பழமிருந்தும் உண்ண முடியாமல்
நிலைகுலைந்து துடிக்கின்ற பறவையைப் போல்
பாண்டிமாதேவியவள் பதைத்திட்டாள்.....
பகல் இரவுப் பொழுதுகளை நகர்த்த முடியாமல் கண்ணீர்
வடித்திட்டாள்!

வாடையெனில் குளிர் காற்று தாக்குமன்றே!
ஆடை போர்த்தாவிடினும் ஆண்மகனின் மேனி போர்த்தி
ஆரணங்கும்; ஆரணங்கின் மேனி போர்த்தி
ஆடவனும்; அக்குளிர் காற்றை வெல்வாரன்றே!

இங்கென்ன நிலையென்றுல் பாண்டி மன்னன்
பொங்குற்றே சென்றுவிட்டான் போர்முனைக்கு!
வீரம் விளைக்கின்ற வெம்மையிலே வாடைக்காற்றின்
வீண்மிரட்டல் பலிக்கவில்லை வேந்தனிடம்!

ஆனல் அரசியின் நிலையோ; அந்தோ! பரிதாபம்!
பாட்டுப் புலவர் நக்கீரனுர் பாடுகின்றுர்;
வாடைக் காற்றின் குளிர் தாங்க மாட்டாமல்
வீட்டுக் கோழிகள் படும் பாட்டைப் பாரீர் என்று!
பெட்டையும் சேவலும் பெருவெளியில் திரிந்து
இட்டமுடன் இரைதேடித் தின்று மகிழ்ந்து
இன்பமாய்க் கழித்த நாளெல்லாம் சென்று; இன்று
இரவெது பகலெது எனத் தெரியாது திகைத்து
அடைத்திருக்கும் பலகைக் கூண்டுகளுக்குள்ளே
அடுத்தடுத்துக் கடுக்கும் கால்களை மாறி மாறி வைக்குமாம்!

இவ்வண்ணம்

கொல்லுகின்ற வாடையிலே - நெஞ்சில்
துள்ளுகின்ற காதலுடன்
புள்ளிமயில் புரளுகின்றுள்; படுக்கையிலே! - யாரும்
வெல்லவொண்ணு தமிழ் எடுத்து - ''நெடு
நல் வாடை'' தீட்டுகின்றுர் நக்கீரனுர்!

கொடுமுடியன்ன உயர்ந்த கோபுரம் - அதில்
கொடிகளோ வானவில்லென வண்ணங் காட்டும்!
திண்ணிய நீலமணி நிறம்படர்ந்த தூண்களிலே
வெள்ளியைத்தான் வெண்சாந்தாய்ப் பூசினரோ?
செம்பினுல் படைத்திட்ட மதில் சுவரோ எனும் படி
செப்பரிய வலிவுடனே அமைத்திட்ட
செழியனது அரண்மனையைச்
செந்தமிழால் சித்தரிக்கும் நக்கீரர்;
சிந்தையெலாம் அவன் நினைவால் துவளுகின்ற
செம்பருத்தி இதழ்ப் பெண்ணுள் பாண்டிராணி;
படுத்திருக்கும் மஞ்சத்தைப்
பாட்டாலே காட்டுகின்றுர் பார்த்திடுவீர்!

முரசுபோல் கால்கள் கொண்ட
முரட்டுப் போர் யானையொன்று
முற்றுக நாற்பது வயது சென்று
போர்த்தொழில் புரியுங்கால் இறந்துவிட - அதன்
கூர்த் தந்தம் இரண்டெடுத்து கோலச்
சீர் தந்து அழகூட்டி அமைத்த கட்டில் - அதில்,

சூல் கொண்ட மகளிர் கொங்கை
பால் கொண்டு வீங்கியது போல்
நாற்புறமும் திரண்டுருண்ட
நல்லழகுக் கலசங்களாம்!
முத்து மணிமாலைத் தொங்கல்களாம்!
முல்லை மல்லிகை மலர் ஓவியமாம்!
அரிமா வேட்டையினைச் சித்தரிக்கும்
அரிய கலை நுட்பம் திகழ்கின்ற போர்வையுடன்,
அன்னத்தின் இறகெடுத்து செய்திட்ட
அணை, தலையணை, சாயணை அனைத்தும் கொண்ட பஞ்சணை!
ஆனால் அங்கு;
''அணை'' என்று சொல்லத்தான் அவனில்லை; அதனாலே
அணையுடைத்துப் பெருகிற்று அரசியாரின் துன்ப வெள்ளம்!
அடி வருடினர் செவிலியர்கள்
''அம்மையே உறங்குக'' எனக் கூறி!

''அடி போடி வேலையில்லை உங்களுக்கு'' - என
அலறினாள் அரசியவள் மிகச் சீறி!

அங்கிருந்த வானவெளிச் சித்திரத்தில்
அருகருகே சந்திரனும் ரோகிணியும்
அகலாமல் இருத்தல் கண்டு
அப்படி நான் நற்பேறு பெற்றேனில்லை
இப்படி ஏன் நலிகின்றேன் வீணேயென்று;
நீள் இமைகளிலே எட்டிப் பார்க்கும்
நீர்த்துளியை விரல் கொண்டே அவள்
வழிந்தெறிந்தாள் எனினும்; கவலைதனை
அழித்தெழுத முடியாமல் அல்லற்பட்டாள்!

இவ்விதம்,

மதுரையின் மாளிகையில் அரசியார்
மது சுமந்து வண்டுக்கெனக் காத்திருக்கும்
மலர்க்கொடியாய்த் தவிக்கும்போது;
நெடுஞ்செழிய பாண்டியனின் நிலை என்ன?
''நெடுநல் வாடை''யிலே காணவாரீர்!

காதலொன்றும் பாண்டியனின்
கடமை உணர்வுக்குத் தடையாயில்லை!
கோப்பெருந்தேவியின் நினைவாலே - அவன்
கொண்ட குறிக்கோள் தவறவில்லை!
வாடைக்காற்று அவன் பாசறைக்கும் வந்ததுண்டு! அதனாலே
அவன்;
வாளேந்தும் போர் முகத்தை மறந்துவிட்டு,

வளையலேந்தும் கரம் நாடி ஓடவில்லை!

இங்கு;
பாண்டியன் நள்ளிரவில் புறப்பட்டான்; எதற்காக?
பஞ்சணையில் பரதவிக்கும் பத்தினியைப் பார்ப்பதற்கா?
இல்லை! இல்லை!

குன்றும் நடுங்குகின்ற கூதிர்காலத்தில்
வடக்கிருந்து வீசுகின்ற குளிர் காற்றுல்
தெற்கு நோக்கிச் சுடர் சாயும் தீவட்டி எனினும்
வடக்கிலோர் பாசறையில் இருக்கும் மன்னன்
வாஞ்சைமிகு பாண்டிமாதேவிக்காகத் தெற்குத் திசை
திரும்பவில்லை!

வாடிக்கைப் பணியினை ஆற்றுதற்கு
வாளேந்தும் மறவர் சுடரேந்தி சூழ்ந்து வர
இடத்தோளில் இருந்து நழுவி விழும் மேலாடைதனை
இடப்புறக் கையால் தூக்கி அணைத்தவாறு,
வலியதோர் வாள்வீரன் தோளில் - தன்
வலக்கையினைத் தோழமையுடன் போட்டுக்கொண்டு,
மழைத்துளிகள் வீழ்கின்ற நள்ளிரவில்
மாவீரர் பலர், காயமுற்றுப் படுத்திருக்கும்
பகுதியெலாம் சென்று பார்த்தான் - அவரைப்
பரிவுடனே நலம் கேட்டு நன்றி கூறி அரவணைத்தான்!
பகல் போரில் பகைவர்களின் படையழித்து விரட்டும்போது
பழுதுபட்ட கால், கை, உடல்களுடன் படுகின்ற துயரமெலாம்
பறந்தனவாம்; தம் தலைவன் பனிப்பார்வை பட்டதாலே!
காதலனைத் தேடிப் பேரரசி கலங்குகின்றுள்; அவளை,
கடமையினை ஆற்றுதற்குக் கால்கடுக்கச் சுற்றுகின்றுன்;
பாசறையை!

அகமென்றும் புறமென்றும் வாழ்க்கையினை
அழகாக வகுத்துக்கொண்டு
அன்று தொட்டு வாழ்ந்து வரும் இனம்
அருமைமிகு நம் தமிழ் இனம்தான் என்பதற்கு
ஆதாரம் வேண்டுமெனில்
அடடாவோ! ''நெடுநல்வாடை'' ஒன்று போதாதா?

(தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைச் சிறப்பித்து சங்கப்புலவர் நக்கீரர் இயற்றிய ''நெடுநல்வாடை'' எனும் இலக்கியத்தை அடிப்படையாகக்கொண்டு எளிய நடையில் எழுதப்பட்டது, இது!)

பழி தீர்த்துப் பகை முடித்தாள்!

துள்ளி வரும் வேல் கொண்டும் - ஆவேசத்தை
அள்ளி வரும் வாள் கொண்டும்
பள்ளி செல்லாப் பருவத்து இளங்கொழுந்தும்
கிள்ளி எறிவேன் பகையை என்று
கிளர்ந்தெழுந்த காலம் அது - தமிழர்க்குத்
தங்கமென வாய்த்த காலம் - புலவர் பலர்
சங்கம் வளர்த்த காலம்! வீரர்
பொங்கும் புலியெனப் போர்க்களம் சென்றனர்
மங்கல மங்கையர் அவரை வாழ்த்தியே நின்றனர்.

காற்றடிக்கும் போதும் - அதில்
தமிழ் வீரம் வந்து மோதும்! கடலின்
அலை உயர்ந்து கிளம்பும் - அதில் தமிழன்
நிலை உயர்ந்து விளங்கும்!
அகிலின் புகை மணக்கும் - அதிலும்
தமிழின் புகழ் மணக்கும்!
முகிலிடை எழில் மதி தோன்றும் - அதில்
முத்தமிழ்க் காவிய நிதி தோன்றும்!
அவனிபுகழ் பெருநிலத்தை ஆண்டிருந்த
அசோக மன்னன் கூட தன்
ஆட்சிக்கு உட்படா தோர்
ஆற்றல் மிகு தென்புலத்தார் என்று சொன்ன;
தென்னகத்துத் திண்தோள் இனத்தாரில்
தீரம் நிறை கோசர் எனும் ஒரு பிரிவு!

வீரம் விளைக்கின்ற திறன் படைத்தோர்.
தூய்மை சேர் வாய்மைக்குப் பேர் பெற்றோர்.
துளுநாடு நீங்கிக் கீழ்க் கடல் வரையில்
அலைந்து திரிந்த போக்கினை நிறுத்தி
''நியமம்'' ''செல்லூர்''ப் பகுதியிலே நிலைத்ததாய் வரலாறு!

*

* ''செல்லூர்க் குணை அது
பெருங்கடல் முழக்கிற்றுகி, யாணர்

இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம்''

*

அகநானூறு இலக்கியம் அறிவிக்கும் செய்தி இது.
'அன்னி'யென்றும் 'மிஞிலி'யென்றும் அகப்பாட்டு;
அடலேறுத் தமிழ் வீரர் இருவரை அறிமுகம் செய்யும்.
இருவீரர் பெயர் இணைத்து இளையவள் ஒரு தமிழ் மகள்
புருவத்தை விழியைப் போர்க் கருவியாக்கிக் காளையரை
வீழ்த்துகின்ற

பருவத்தாள் எனினும், பண்புடைய திருக்குமரி!
தழுவத்தான் பலர் துடித்தார் - கோசர் சிலர் அவர்
தந்தையிடம் பெண் கேட்டார். மறுத்துவிட்டார்.
'அன்னிமிஞிலி' எனும் அழகு நங்கை
அமர்க்களத்தில் உயிர்நீத்த அன்னி யெனும் வீரன்போல்
அனல் உமிழும் கற்புடையாள்!
'ஆய் எயினன்' எனும் வீரனை வென்று வீழ்த்தி
நன்னனது ஊரினையும் தனதாக்கிக் கொண்ட
'மிஞிலி' எனும் வீரனைப் போல் உறுதி மிக்காள்!
''நிலவுச் சித்திரம் போல் - நீரில்
உலவு நீள்விழிக் கெண்டை போல்
குலவிடும் கிள்ளைப் பெண்ணுள் - நற்
கலவிக்கு ஏற்ற கண்ணுள் - ''

என நினைத்து இளித்து வந்த சில கோசர்களை
என்ன நினைத்தாய் என் மகளை எனக்கேட்டு
கன்னலடா என் செல்வி அதைக் கடுங்குரங்கின்
கையில் தரச் சம்மதியேன்! அவள்
எண்ணமெலாம் அழுந்தூரான் மீது அறியீரோ?
திதியன் எனும் அவ்வூர்க் காவலனே அவளுக்கும் காவலனும்!
அடுத்தொருமுறை வருவது கூடாது - நான்
எடுத்துச் சொன்னதைப் புரிந்து கொண்டு நடந்திடுக உடனே
என்றூர்!

வாய்மை நிறைக் கோசரிலும் வன்னெஞ்சம் கொண்டோர் சிலர்
வாழ்ந்திட்டார் என்பதுதான் வரலாறு! அவர்
வகுத்திட்டார் ஒரு திட்டம் வஞ்சியினைக் கைப்பற்ற!
பயற்றம் பயிர் விளையும் பாங்கான நிலங்கள் பல
நியமத்தில் நிலைத்திட்ட கோசர்க்கு உரிமைச் சொத்து!
பசுவொன்றே அன்னி மிஞிலியின் அன்பான குடும்பச் சொத்து!



பயங்கரத் திட்டத்தால் அப்பசுவை விரட்டியடித்துத் - தங்கள்
பயற்றம் பயிர்க்காட்டில் மேயவிட்டார் சில கோசர்!
பசித்திருந்த பசுவுக்குப் பயிர்க்காட்டு மேய்ச்சலென்றுல்
பாய்ந்து சென்று தின்னுமல் பயந்து கொண்டா ஓடிவிடும்?
பாட்டாளி வர்க்கத்தின் உழைப்பையெல்லாம்
கூட்டாகச் சேர்த்துத் தின்று உப்புகின்ற
கொடும் ஆதிக்க வர்க்கத்தின் தொப்பையைப் போல்
இனியில்லை இடமென்ற அளவுக்கு உப்பியது அந்தப்
பசுவின் வயிறு!

கனியில்லை என்று சொன்ன கிழவனது
கண்ணில்லை என ஆக்கிவிட்டால் - பின்னர்
துணையில்லை தோகைக்கு! எல்லோரும் அந்த
இணையில்லாப் பேரழகைப் பகிர்ந்து கொள்வோம்
இப்படித் திட்டமிட்ட இழி குணத்தார்;
செப்படி வித்தை காட்டிச் செயல்புரிந்தார்.
அன்னி மிஞிலியின் அப்பனைக் கூண்டிலேற்றி
அன்றந்தப் பயற்றங்காட்டில் பசுமேய்ந்த கதையைச் சொன்னர்
ஊர்மன்றக் கோசர்களும் உண்மை என்ன உரைப்பீர் என்றூர்!

கார்கொண்ட வானம் போல் முகம் கறுத்து அக்கிழவர்;
''யார் கண்டது என் பசு மேய்ந்ததை? என நான்
கேட்கமாட்டேன்;
பார் எதிர்ப்பினும் பொய் சொல்லாப் பரம்பரை நான்
பயற்றம் பயிரை என் பசு மேய்ந்தது உண்மையே!'' என்றூர்.
குற்றத்தை ஒத்துக் கொண்டான் - அதனால்
குத்திப் பெயர்த்திடுக அவன் கண்ணையென்று
கோசர்களின் மன்றத்தில் தீர்ப்புச் சொன்னர்.
அடுத்த கணம் அன்னி மிஞிலியின் தந்தையை இழுத்துச்
சென்றூர்
பழுத்த கிழம் - பாவம்; அவர் கண் இரண்டும் பெயர்த்துச்
சென்றூர்;

''பார்வையினை இழந்தீரோ அப்பா நீங்கள்!
பழிவாங்காமல் விட மாட்டேன் பாவிகளை''யென்று
போர் முரச ஒலியெழுப்பி மகள் அழுதாள்!

''கண்ணை அழித்துவிட்டு உன்னைக் களவாட
எண்ணிவிட்டார்! கற்பெனும் வாளேந்திய என்
பெண்ணை நெருங்கிட எவனுக்குத் துணிவுண்டு?''
தந்தை பேசி முடிப்பதற்குள்
தணலில் நின்றவள் பதில் சொன்னாள்.

''உயிர் போன்ற தந்தையினைக் குருடாக ஆக்கியவர்தம்
உயிர் போகுமட்டும் - நான்
உண்கலத்தில் உண்ண மாட்டேன்.
உடை மாற்றம் செய்ய மாட்டேன்.
பழிவாங்கித் தீரும்வரை பசி தூக்கம் எதுவுமில்லை!
பகை முடிப்பேன்! பார்வையிழந்த தந்தைக்குப்
பலி கொடுப்பேன் எதிரிகளை!''

அன்னி மிஞிலியின் சூளுரை - அடுத்த நாளே
அழுந்தூர்த் திதியனுக்கு எட்டியது.
கன்னியவளுக்கு உற்ற துயர் கேள்விப்பட்டுக்
கவலை கொண்டான் - அவளைக் காணத் துடித்தான்.
செவியில் செய்தி நுழைந்ததைத் தொடர்ந்து
செந்தீப் பிழம்பென தன்னெதிர் நின்ற ''அன்னி''யைக்
கண்டான்.

''கண்ணுக் கினியவளே! கருத்துக்கு ஏற்றவளே! உன் இதயப்
புண்ணுக்கு மருந்திட வகையறியேன் வழியறியேன்'' என்று
நொந்தான்.

''குதிரைப் படையுண்டு உன் கோட்டையில் மன்னா!
குன்றனையத் தோளுண்டு உனக்கு என் கண்ணா!
அன்னி மிஞிலியாம் என்னை நீ காதலிப்பது உண்மையெனில்
அட்டியின்றிப் புறப்படுக போருக்குக் கோசர் மீது!
அந்தகராய் ஆக்கிவிட்டார் தந்தையினை - அந்த
அநியாயக்காரர்களை வீழ்த்த வேண்டும்.
கண்குத்திப் பாம்புகளைத் துண்டாடும் கீரியென்று
திண்தோள் திதியனைத் தேடி வந்தேன்'' என உரைத்தாள்.

''வாளுறை விட்டு எழுந்தது பார்! என்
சூளுரை யொன்றும் அறிக அன்பே!
உன் தந்தையாம் - என் மாமனுக்கு ஊனம் விளைத்தோர்
உயிர் போக்கித் திரும்பிய பிறகே
உனைத் தீண்டும் என் கரங்கள்;''

ஆர்ப்பரித்தான் அழுந்தூரான்!
போர்ப்படை கிளம்பிற்று!
பொல்லாக் கோசர் உடல் நொறுங்கிற்று -
நில்லா நெடுஞ்சுவர் போல் வீழ்ந்திறந்தார்.
விரும்பிய வாறு சூளுரை முடித்தாள்
திரும்பிய திதியனின் தோளில் சாய்ந்தாள்!
அரும்பிய காதல் அன்றே மலர்ந்தது!
அகநூல் பாடல் இதற்கு அடிப்படையானது.

*

* ''முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கிப்,
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்,
இடுமுறை நிரம்பி, ஆகுவினைக் கலித்துப்,
பாசிலை அமன்ற பயறுஆ புக்கென,
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து, அருளாது,
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்,
கலத்தும் உண்ணுள், வாலிதும் உடாஅள்,
சினத்தின் கொண்ட படிவம் மாறுள்,
மறம்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,
செருஇயல் நல்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்உயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய
அன்னி மிஞிலி.''

*

(அகநானூறு : பாடல் : 262
பாடியவர் : பரணர்)

பொருள் விளக்கம் :

முதைபடு பசுங்காடு = பழைமையான பசுமையுள்ள காடு.
அரில்பவர் மயக்கி = பின்னிக் கிடக்கும் கொடிகளை அழித்து.
பகடு பல பூண்ட = எருது பூட்டிய. இடுமுறை = எருவிடுதல்.
பாசிலை அமன்ற பயறுஆ புக்கு = பச்சைப் பயற்றங் கொடியில் பசு மேய்ந்திட. நவைத்த = கொடுமை புரிந்த.
வாலிது = தூய உடை.

*

நாடு வாழவும் நனிவு தீரவும்...

காஞ்சியினை ஆண்டமன்னன் தொண்டைமான் இளந்திரையன்;
கவிதைபுனையும் ஆற்றலுடன் கடமையுணர்வு மிகவுடையோன்!

கடல்வழிவந்தவர் இக்காவலனின் முன்னோர் எனக் கதையுண்டு!
காதலில் தோய்ந்த சோழன்கிள்ளியும் நாகமகள் பீலிவளையும்;

பெற்றெடுத்த பிள்ளைக்கனியமுதாம் இளந்திரையன்
பிழைத்தெழுந்தான் கலம் மூழ்கிக் கடலில் என்றும் - அந்த

மாவீரனே காஞ்சியினைத் தலைநகராய்க்கொண்டு
தொண்டைநாட்டு
மகுடம் புனைந்தானென்றும் ''மணிமேகலை'' இலக்கியம் கூறும்!

தொண்டைக்கொடியொன்று பற்றிக் கடலோரம் சேர்ந்ததனால்
தொண்டைமான் என்கின்ற அடைமொழி சார்ந்ததென்றும்;

திரையென்றால் அலையன்றோ; அத்திரைமீது மிதந்துவந்து
தரையாளும் இளம் மன்னனைய் வாய்த்ததாலே,

இளந்திரையன் எனும் சிறப்புப் பெயர் பெற்றானென்றும்
இனியதமிழ்க் காப்பியமாம் மணிமேகலை; மேலும் இயம்பும்!

இறையனார் அகப்பொருள் உரையுள் நக்கீரனார்
''இளந்திரையம்' எனும் நூல் இவன் இயற்றியது என்பார்!

அதியமான் நெடுமானஞ்சிக்காகத் தூதாக வந்து
ஔவை வாதாடியதும் இத்தொண்டைமானிடம்தான் என்பர்!

நன்னூலுக்கு உரைகண்ட மயிலைநாதர்;
நல்லூராம் ''திரையனதூர்'' இவன்பேரால் அமைந்ததென்பார்!

நற்றிணையில் மூன்றுபாடல் இளந்திரையனின்
கற்றறி நெஞ்சக் கற்பனைக்கு எடுத்துக்காட்டாம்!

நாடாளும் மன்னர் பலர் இவன்பால் நட்புக்கொண்டு
நாடியிவன் மாளிகைக்கு விருந்தாக வந்திடுவர்; இவனை

அவரையெல்லாம் வரவேற்று அவர்க்கு வேண்டுவன
வழங்கி -,
அரசுதனை நடத்துகின்ற அறவழி பலவும் அன்பாய்
விளக்கிடுவான்!

அவ்வாறு ஒருமுறை அவன் தந்த அரசியல் அறிவுரைதான்;
சவ்வாது மணங்கமழும் சங்கப்பாட்டாய் சாகாது
வாழுதென்பேன்!

''வண்டிக்காலாம் உருளையையும் - அதன் அச்சுத்
தண்டில்; பாரையும் கோத்தமைத்துப் புவியில்

செல்லும் வழி தெளிந்து செம்மை நெறி உணர்ந்து
ஒல்லும் வகையெல்லாம் ஒழுங்கான பாதையிலே

செலுத்திடும் வண்டியைப்போல் செங்கோலும்
சிறப்பெய்தி மாண்பு தரும்; செழுமை வரும்!

அல்லால்;

வண்டியைச் செலுத்துகின்ற மனிதன் - அதனைக்
கண்டவழி செலுத்தினாலோ ஆரக்கால் பதியும்
- ஆழ்பகைச் சேற்றினிலே!

மனம் போன போக்கெல்லாம் மண்ணாள்வோர்
சென்று
குணம் கெட்டுத் திரிவரேல் குட்டிச்சுவராகும் நாடு!

நலிவுற்ற மக்கள் - வலிவற்ற ஆட்சி; நாள்தோறும்
பொலிவற்றுப்போகும் தொழில்கள் எனப்
புதைந்துவிடும்; எல்லாமே!''

இளந்திரையத் தொண்டைமான் மன்னன் அன்றைக்கு
எடுத்தாண்ட உவமையது என்றைக்கும் பொருந்துமன்றே?

வளமிகு நாடு கண்டு மக்கள் வாழ்விலே புதுமை செய்ய
உளமது பக்குவப்படுதல் வேண்டும்; அந்த உண்மையை
உரைக்கும் பாடல் இஃதே!

*

* ''கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்,
ஊறு இன்றுகி ஆறு இனிது படுமே;
உய்த்தல் தேற்றான் ஆயின், வைகலும்,
பகைக் கூழ் அள்ளற்பட்டு,
மிகப்பல தீநோய் தலைத்தலைத் தருமே.''

*



(புறநானூறு : பாடல் : 185
பாடியவர் : தொண்டைமான் இளந்திரையன்)

பொருள் விளக்கம் :

கால்பார் = வண்டிச் சக்கரமும் பாரும்.
சாகாடு = வண்டி. உகைப்போன் மாணின் = செலுத்துவோன் செம்மையாக இருப்பின். ஆறு = வழியானது.
உய்த்தல் தேற்றான் = செலுத்தும் வகை அறியாதவன்.
பகைக்கூழ் அள்ளல் = ஆழ்ந்த பகைச் சேறு.
வைகல் = நாள்தோறும். தலைத்தலை = மென்மேலும்.

*

அன்றைக்கே ஒரு கண்ணகி!

சிலப்பதிகாரமெனும் செந்தமிழ்க் காப்பியத்தை
சேர இளவல் இளங்கோவடிகள் எழுதிடும் முன்பே;

செவிவழிக் கதையாய்ப் பழங்காலத்தில் பரவி;
சிறப்புற்றுலவிய கண்ணகியின் கதைக்கு,

சங்கத்தமிழில் சில புலவர்கள் படைத்துள
செய்யுள் மலர்களே தக்க சான்றும்!

மலைத்தோள் படைத்தவனும், மாளாது அள்ளி வழங்குவானும்
மயிலுக்குப் பொன்னுடை பரிசாகத் தந்தவனும்

பேரறிவுப் பெருமக்கள் பாராட்டிப் புகழ்ந்துரைத்த
'பேகன்' எனும் பெயர்படைத்த மன்னவனும்! அவன்,

'கண்ணகி' என்கின்ற கட்டழகுப் பெட்டகத்தைக்
கற்பின் திருவுருவை - கண்ணியத்துக் களஞ்சியத்தைக்

கரம்பிடித்து இல்வாழ்வில் களிப்புற்றிருந்து பின்னர்
மரம் விட்டு மரம் தாவும் குரங்குமனம் கொண்டுவிட்டான்!

பிற்றைநாளில் 'பழனி'யென்று ஆகிவிட்ட ஊர்தான்
அற்றைநாளில் 'பொதினி' என அழைக்கப்பட்டு; ஆங்கே

ஆவியர் குடியிற்பிறந்த குறுநில மன்னர் பலரில்
காவியத்தில் ஏறும் தலைவனுகும் பேறு பெற்றவன்தான்

வையாவிக் கோப்பெரும் பேகன் எனும்
வள்ளலாவான்; பகைவர்க்கு வளையாத வீரனுவான்!

வளமிகு பகுதியிலும் வீணுய்ப் பொழிந்து வழிந்து
களர்நிலப் பகுதியிலும் பெருகிப் பெய்திடும்

மழையின் தன்மைபோல் பாகுபாடின்றிக் கொடையளிக்கும்
மனங்கொண்ட மன்னன் பேகனைக் குறித்து,

1.

''கொடைமடம் படுத வல்லது
படைமடம் படான்'' என்று

பரணராம் பெரும்புலவர்
பாடிமகிழ்ந்தார் பார்புகழ் பெருமை!

இல்லாதார்க்கு மட்டுமன்றி இருப்போர்க்கும்
இனிய பரிசில் பல வழங்குவான் என்பதால்;

கொடைமடம் படுதல் என அதனைக் குறைத்துக் கூறினும்
படைமடம் படாமல் பகைவர் தகுதியறிந்து போரிடுவான்
என்று;

தடைபடாத் தமிழருவித் தமிழால் பரணர்
கொடைமகன் சிறப்பைக் குன்றம் ஏற்றினர்!

வல்லூறை எதிர்த்து வண்ணக்கிளி வென்றதுபோல்
நல்லூர்ப் பரத்தையெனும் ஒருத்தி பேகனை வீழ்த்திவிட்டாள்!

விழியிரண்டைக் கணைகளாக்கி அவன் நெஞ்சில் தாக்கி;
மொழியினிலே தேன்கலந்து தன் மடியடிமை ஆக்கி;

பன்னீரால் குளிப்பாட்டிப் பக்கத்தில் கிடத்திவைத்தாள்;
கண்ணகியோ,
கண்ணீரால் நனைந்திட்டாள்; கவலையே ஒரு வடிவானாள்!

மாளிகையின் நல்விளக்கு மதிப்பற்றுக் கிடக்கும் நிலை
மன்னவனை நினைத்தழுது ஒளிமங்கிப்போன நிலை

எடுத்துரைத்துக் கபிலர் எனும் தமிழ்க் கிழவர்;
தடுத்துரைத்தார் - பரத்தையின் தழுவல் விடுத்து;

விரைந்திடுக கண்ணகியாள் வீட்டுக்கென்று
வரைந்தளித்தார் சங்கப்பாடல் ஒன்று!

2.

''இன்னது இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்வாள்'' - அந்தப்
பொன்மானின் துயர்துடைக்கப் புறப்படுக மன்னா; என்றார்!


3.

''அருளா யாகலோ கொடிதே'' என்று அவளுக்காக
அன்பு காட்டாவிடில் அது மிகக்கொடிது என்றார் பரணர்!

அரிசில் கிழார் எனும் கவிஞரோ அவனைப் பார்த்து;
பரிசில் பெற வந்தாராயினும் அதனை விடுத்து,

கலாபத்தின் தோகையெனும் கண்ணகியின் கூந்தலிலே
கமழ் மணப் புகையேற்றி களிப்பு துள்ள; அவள்,

கழுத்தினிலே மாலையூடிக் கலந்து மகிழ - ஒரு
கணத்தினிலே புரவிகளைத் தேரில் பூட்டிடுக என்றார்!



4.

''கலிமயிற் கலாவங் கால் குவித்தன்ன
ஒலிமென் கூந்தல் கமழ் புகை கொளீ இத்

தண் கமழ் கோதை பூனைய
வண்பரி நெடுந்தேர் பூண்க நின் மாவே''

அரிசில் கிழாரை அடுத்து பெருங்குன்றூர் கிழார் எனும் அன்னைத் தமிழ் ஈன்ற அரும்புலவர் ஒருவர்;

''ஆவியர் கோவே! உன் ஆருயிர்க் கண்ணகியின்
அல்லல்போக்கி அகமலர முகமலர அவளை அழைத்து;

வாழ்க்கை அளித்திட உடன் முன்வருவாயாஞல் - நீ
வழங்கும் பெரிய பரிசில் எமக்கு அதுவேயாகும்;

5.

''அதுமனெம் பரிசில் ஆவியர்கோவே'' என்று,
அவன்முன் நின்று கருணைகேட்டார் கண்ணகிக்காக!

புலவர்கள் உரைத்த மொழியால் தனது பொல்லாங்குணர்ந்து
பூட்டினன் தேரினை! பறந்தான் புயலாய்!

புதுவாழ்வு மீண்டும் பூத்தது என்று
மதுமலர்மங்கை, தென்றலாய் மாறினள்!

குறிப்பு : **1, 2, 3, 4, 5 - புறநானூறுப் பாடல்களில் உள்ளவை.**
(முறையே - பரணர், கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் - ஆகிய நால்வர் பாடியவை) பாடல்கள் - 142, 143, 144, 146, 147)

*





மேகத்தைப் பிழிந்து நீரெடுத்து - மலைகளின்
தாகத்தைத் தீர்க்கின்ற குளிர்காற்று;

மெல்ல நடைபயிலும் மேன்மைமிகு தகடூர் நாட்டில்
வெல்லத் தமிழ் சுவைக்கும் அதியமான் நெடுமானஞ்சி வேந்தன்;

அத்தாணிமண்டபத்தில் வழக்கம்போல் ஆன்றோர் சான்றோர்
கொத்தான மீசைகொண்ட தளபதிகள் அமைச்சர் பெருமக்கள்,

அமர்ந்திருந்து நாட்டுவளம் பெருக்க அரிய கருத்துரைகள்
அள்ளிப்பொழிந்தபோது; அகமகிழ்ந்து பாராட்டிப் புகழ்ந்தேத்தி

அதியமான் நெடுமான் மன்னன் அனைவரையும்
வாழ்த்திநின்றான்!

அதுகண்டு ஔவைப்பிராட்டியார் ஆனந்தக்கண்ணீர் ததும்ப;

முடிமன்னன் முகம்பார்த்து முறுவலித்துக் கவிதையொன்றை
முல்லைப்பூச்சரம்போலத் தொடுத்தெடுத்து என்றும் அழியாத

முத்தாரமாய்ப் பதியவைத்தாள் புறப்பாட்டில்! அந்தச்
சத்தான செய்யுள் தரும் உவமைநயம் உணர்ந்துமகிழ்க!

பற்றும் பாசமும் பரிவும் கொண்டு தன்னைச்
சுற்றியிருப்போர் யாவரேயாயினும் அவர்பால்

அதியமான் காட்டும் அன்பும் பண்பும், அத்துடன்
எளிமையாய்ப் பழகிடும் இனிமைத்தன்மையும் - ஒரு

தலைவனுக்குரிய தகுதியாமன்றோ! இந்தத்
தமிழ்நிலம் பெற்ற பெருமையாமன்றோ!

நினைத்துப் பார்த்தாள் நெடுமானஞ்சியின் இனிய இயல்பை; தேனில்
நனைத்துக் கோத்தாள் தமிழ்க்கனிகளைக் கவிதையாய்!

''இமைபோலும் இந்த நாடு காக்கும் காவல் அரணே!
எமையறிந்து எளிமையுடன் பழகும் தலைவா!

உனையெண்ணும் போதெனக்கு நான் கண்ட
யானையொன்றின் நினைவே மிகும்!
உவமையாக அதன் செயலை ஒப்பிடுதலே
உனக்குத்தகும்!

நீர்த்துறையில் இளைஞர்கூட்டம் நிறைந்து நின்று
- தனது
நீண்ட தந்தத்தைக் கழுவிக் குளிப்பாட்டும் போழ்து;
பிஞ்சுப்பிள்ளைகளின் விளையாட்டுப் பொருள்போல
- அவர்கள்
அஞ்சுவதற்கெதுவுமின்றி எளிதாய்த்தோன்றும் அந்த
யானை!

அதன் எளிய தன்மைபோல எமை அணுகிப் பழகும்
நீயும்;
மதம் கொண்டால் அந்த யானை, மருண்டெழுந்து
கிளம்புதல் போல்

மாற்றூரின் படைகண்டால் மண்ணதிர விண்ணதிரப்
புயற்
காற்றுக மாறிடுவாய்! பகையொழிக்கச் சீறிடுவாய்!


இளஞ்சிறுருடன் நீர்த்துறையில் நிற்கின்ற யானைபோல
எம்மனோர் மனம் மகிழ எளியவனுய் நீ திகழ்ந்திடினும்;

எதிரிகளின் முன்னுல் நீ கனல் கக்கி நிமிர்ந்து நின்று
- நோக்குங்கால்;
அதிரடிகள் எடுத்து வைக்கும் மதயானை போலன்றே
விளங்குகின்றுய்!''

**அனுபவத்தில் ஒளவை கண்ட யானையின் செயலிரண்டினையும்
அதியமான் மன்னனுக்குப் பொருத்திப் பாடியதின் அழகே
அழகு!**

*

* **''ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழா அலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல**



இனியை, பெரும, எமக்கே; மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னுய், பெரும, நின் ஒன்னு தோர்க்கே!''

*

(புறநானூறு : பாடல் : 94
பாடியவர் : ஔவையார்)

பொருள் விளக்கம் :

குறுமாக்கள் = இளம்பிள்ளைகள். கோடு = தந்தம்.
கழாஅலின் = கழுவுதல் காரணமாக.
கடாஅம் = யானைக்குப் பிடிக்கும் மதம். துன் = நெருக்கம்.
ஒன்னுதோர் = பகைவர்.

*

இரு கிலுப்பை வழங்கும் சிறு கிறுப்பு!

தடையின்றிக் கொடை வழங்கும் சேர சோழ பாண்டியரை
கடையேழு வள்ளல்களைக் குறுநில மன்னவனும்;

நல்லியக்கோடனுடன் ஒப்பிட்டுக்காட்டிப் பத்துப்பாட்டில்
நத்தத்தனார் பாடியதே சிறுபாணாற்றுப் படையாகும்!

பண்டொருநாள் ஓய்மாநாடெனப் பரந்த நிலந்தான்
திண்டிவனம் பகுதியாய்த் திரிந்ததெனத் தெளிவார் அறிஞர்!

இடைக்கழி நாட்டிற் பிறந்தார் இந்தப்புலவர் - இதனை
இன்றைய சென்னைக்கருகேயுள்ள நல்லூர் என்றும் நவில்வர்!

மாவிலங்கை, கிடங்கில், எயிற்பட்டினம், வேலூர், ஆமூர்
மாத்தமிழன் நல்லியக்கோடன் ஆட்சியிலே மணம் பரப்பியதை;

பாவலராம் நத்தத்தனார் விளக்கிடும் பாங்கே தனிச் சிறப்பாம்!
அந்த
நாவலரின் கற்பனையில் விளைந்திட்ட
சிறுபாணாற்றுப்படையினிலே;

உவமைகள் ஓடிவந்து கொஞ்சும் - ஊரின் வர்ணனையோ
ஒன்றையொன்று மிஞ்சும்!

உப்பு வணிகர் ஓட்டி வருகின்ற வண்டிகளைத் தொடர்ந்து;
புலவர்,
ஒப்புவமை காட்டித் தீட்டியுள்ள ஓரிருவரிகளிலே விழிபதிந்தால்
- நமது

மொழி அருமை தெரியும் - முன்னோர் பெருமையெலாம்
புரியும்! உலகில்
மூத்த குடிப்பிறந்தோர் தமிழர் என்ற வரலாறு விரியும்!

கொற்கைக் கடற்கரை நோக்கி விற்பனைக்கு உப்பு வாங்க;
கூட்டமாய் வண்டிகட்டி வருகின்றார் வணிக மக்கள்!

வலிய எருதுகள் பூட்டிய அந்த வண்டிகளுடன் முந்தி
வந்தவையோ அவர்கள் பிள்ளைபோல் வளர்த்த மந்திகளாம்!

கடற்கரையில் ஒதுங்கியுள்ள கிளிஞ்சல்களைக் காட்சியாக்கி
கற்பனைச் செழுமையாலே கவிஞர் மலையுச்சி ஏறிநின்று
பாடுகின்றார்!

வாளின் வாய்போலும் கூர்மைகொள் வாயுடைக்
கிளிஞ்சல்களாம் - அவற்றின்
வயிற்றுக்குள் முத்துக்களை இடுகின்றராம் மழலைகளும்
அங்குவந்த மந்திகளும்!

கொற்கை முத்துக்களன்றே; அதனாலே அவற்றுக்குப்
பாவையரின்
பற்களையே ஒப்புவமை ஆக்குகின்றார் புலவர்!

''நல்கூர் நுசுப்பு'' என மெலிந்திட்ட இடை எழிலுடனே,
மென்தோளும் முதுகும் சற்று மறையும் வண்ணம்;

ஐந்தாக வகுத்துப் பின்னி அசைகின்ற கூந்தல் கொண்ட
அழகுமிகு உப்புவாணிபப் பெண்கள் பெற்ற பிள்ளைகள்
ஆங்கே;

கிளிஞ்சல்களில் முத்துக்களை இட்டுக் குலுக்கி மந்திகளுடன்;
கிலுகிலுப்பை ஆட்டுவதாய்க்கூறிக் கவி இதயக்
கற்பனைக்கேயொரு


விறுவிறுப்பை உண்டாக்கி; இலக்கியம் சுவைப்போரை எல்லாம்
இன்பக்
கிறுகிறுப்பில் ஆழ்த்திவிட்ட நத்தத்தனார் திறம்போற்றி
மகிழ்வோம்!

*

* ''நோன்பகட்டு உமணர் ஒழுகையோடு வந்த
மகாஅர் அன்ன மந்தி, மடவோர்
நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள், புறம் மறைக்கும் நல்கூர் நுசுப்பின்
உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும் ....''

*

(சிறுபாணாற்றுப்படை : (55 முதல் 61 முடிய)
பாடியவர் : நல்லூர் நத்தத்தனார்)



பொருள் விளக்கம் :

நோன்பகட்டு உமணர் = வலிமையான எருதுகளுடன் வருகின்ற உப்பு வணிகர். ஒழுகை = வண்டி.
மகாஅர்அன்ன = பிள்ளைகளைப் போன்ற. நகாஅர் = பல்.
நளிநீர் முத்தம் = செறிந்த நீரோட்டமுள்ள முத்து.
எருந்து = கிளிஞ்சல். நல்கூர் நுசுப்பு = மெலிந்த இடை.
உளர் இயல் ஐம்பால் = அசையும் தன்மையுடைய ஐந்துவகைப் பின்னல் கூந்தல். உமட்டியர் = உப்பு வணிகப் பெண்டிர்.

*

இனம் காட்டும் இயற்கைக் காட்சி!

இனியதோர் காதற்கதையினையே கூறவந்த அம்மூவனுர்
இனம், இனத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ளாவிடில்

இன்னல்கள் ஆயிரம் எப்படியெல்லாம் விளையுமென்று
கன்னற் சுவையூறும் நற்றிணையில் கடற்கரைக் காட்சியொன்றைக்
காட்டுகின்றுர்

பொங்கியெழுந்து மோதுகின்ற அலைப்படைகள்
பொருதிப்பொருதி
சங்கொதுங்கும் கடற்கரையின் மணற்பரப்பில்;

நாவல் மரத்துக் கனியொன்று உதிர்ந்து உருளக்கண்டு
ஆவலுடன் அதுவும் தன் இனந்தான் எனத்தவருகக் கருதியதால்;

மண்டியதாம் அந்தக் கனியைச் சுற்றிச் சுற்றி
வண்டினங்கள்! என்னே மடமை? அப்போது;

நண்டொன்று நல்லபழம் கிடைத்ததென்று விரைந்தோடி
வண்டொன்றைக் காலில் பற்றிக்கொண்டதுவாம்!


இனமறியாக் குற்றத்தால் இடுக்கண்ணில் சிக்கிக்கொண்டு
மனம்பதறி அவ்வண்டு மாண்டுபோகும் நிலையைக்கண்டு;

மொய்த்திருந்த வண்டுக் கூட்டம் மேலெழுந்து பறந்தவாறு
முகம்வாடி அகம்நொந்து ஓசையிட்டுப் பூசல் புரிந்ததுவாம்!

வண்டென்று தெரியாமல், நாவல் பழமொன்று கிடைத்ததென
நண்டும் மிக மகிழ்ந்து அதனைக் கவ்விக்கொண்டே விரைந்த
நேரம்;

இனம் கண்டு கொள்ளாமல் நாவல் கனியை நெருங்கி
இக்கட்டில் மாட்டியதால் இன்னுயிரை இழக்கின்றேன் - என்றே

பாவம்; பளபளக்கும் அந்த வண்டு பதறிற்றுங்கே!
யாரும் துணைக்கில்லா அந்தவேளை; மின்னலென



உதவியொன்று நாரை உருவில் வந்ததம்மா - வண்டின்
உயிர்காக்கும் தோழன் போல் வந்த பறவையின் வாய்க்கு;

இரையாகித் தொலையவேண்டுமே என்றஞ்சி அந்த நண்டு
விரைவாக ஓடுதற்கு வண்டுதனை காலை விடுத்தெறிந்துவிட்டு,

வளைதேடி ஒரு நொடியில் கண்டுபிடித்துத் துள்ளி
ஒளிந்தேகி மறைந்ததனால் நண்டும் உயிர் பிழைத்துக்
கொண்டதுவாம்!

நல்லவேளை; நாரைமட்டும் தக்க சமயத்தில் வராதிருந்தால்
நாவல் பழத்தைத் தன்னினம் எனத் தடுமாறி ஏமாந்த வண்டின்

நாள் முடிந்து போயிருக்கும்! ''நண்டின் பிடியினின்று விடுபட்டு
நமது இனத்தோழன் மீண்டான்!'' என்று ஒலிகூட்டி; உற்சாக
விழா நடத்தியதாம் வண்டுக்கூட்டம்!

''இனம், இனத்தைத்தான் தெளிந்து தெரிதல் வேண்டும்;
அல்லால்,
மனம் நோகும் வகையில் தொல்லைவந்து துளைத்துவிடும்'' என;

காதலரின் பிரிவுத்துயர் உருக்கமுடன் உரைக்கும்போதும்
கவிஞர்பிரான் அம்மூவனார் கவின்மிகு இயற்கைக் காட்சியுடன்

கலந்தளிக்கும் அறிவுரையை கற்பனையால் பெருக்கிப் பார்த்து
களிப்பொருபுறம் கொண்டேனையினும்; கண்கள் மட்டும்
- ஏனோ கலங்கினவே!

*

*** ''பொங்கு திரை பொருத வார்மணல் அடைகரைப்**
புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி, பழம் செத்துப்
பல்கால் அலவன் கொண்ட கோட்டு அசாந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்தி விடுக்கும்.''

*

(நற்றிணை : பாடல் : 35.
பாடியவர் : அம்மூவனார்)

பொருள் விளக்கம் :

கிளைசெத்து = தமது இனமெனக் கருதி. அலவன் = நண்டு.
இமிர் = ஒலி. அசாந்து = தளர்ந்து. பூசல் = போர்.
இரைதேர் = இரை தேடுகின்ற.

*



''பித்துப் பிடித்தவள் போல் இருக்கின்றாள் — நான்
பெற்றெடுத்த பொற்கொடியாள் — ஊன்றிவிட்ட
வித்துப் போல் விழியிரண்டும் அசைவற்றுப் பார்க்கின்றாள்;
வேலனே அழைத்து வந்து வெறி தணிக்க விரைவாய் தோழி!''

தலைவியினை ஈன்ற முதுபெருந்தாயொருத்தி — தோழியின்
தாடையைப் பிடித்து தயைபுரிக என்றுரைத்தாள்!
தமிழகத்தில் அந்நாளிலேயே வெறியென்னும் மருள் ஒன்று;
தாய்க்குலத்தின் நம்பிக்கையாயிருந்தமைக்கு இது சான்று!

வேலர் என்போர் அந்நாளில் வெறியாடிக் குறிசொல்வோர்;
அவர்
விரட்டிடுவார் மருள் நோயை என்று தாய்மார்கள் செல்வர்!
காலமிக வேகமாக ஒளிபெற்றும் கருத்தை மட்டும்
இருட்டாக்கும்
கண்மூடி வழக்கமின்னும் நம் தாயகத்தில் மறையவில்லை.

அன்னையின் வேண்டுகோளை அன்னநடைத் தலைவிக்குரைத்து;
''அழைத்து வரட்டுமா அந்த வேலனே'' எனக்கேட்க; அவளோ
''அய்யகோ! வேண்டாமடி; அவன் வந்தால் ஒருவேளை - என்
அக நோய் இன்னதென அன்னைக்குத் தெரிய வைத்திடுவான்'';
எனத்தடுத்தாள்!

ஆயினும் அழகின் தாய் விடுவதாயில்லை —
மாயமென்ன மகளுக்குற்றதென மனமுடைந்தாள்!
''பாயில் படுப்பதில்லை — பாலும் குடிப்பதில்லை - என்றன்
பாவைக்கு வந்த துயர் எனக்கொன்றும் புரியவில்லை!

நள்ளிரவில் நான் விழித்துப் பார்க்கும் போதும்
புள்ளிமயில் புரளுகின்றாள் உறக்கமின்றி!



வெள்ளி முளைப்பதற்கு முன்பாகக் கண்மலர்ந்து
துள்ளியோடும் மானுக இருந்த மகள்;

பறித்துப் போட்ட அல்லித் தண்டுபோல் துவண்டு
பாழும் தரையினிலே கிடக்கின்றாள்! உடலே
முறித்துப் போட்டதுபோல் நெளிகின்றாள், வளைகின்றாள்!
முற்றிவிட்டதடி மருள் என்னும் வெறி நோய் அவளுக்கு

அதனாலே;

தட்டாதே என் சொல்லே! தாவிச் சென்றிடுக வேலனிடம்
தலைவி துயர் தீர்ப்பதற்கு தெய்வத்தின் முன் வெறியாட
தாய் நான் அழைப்பதாக வேண்டிக்கொண்டு — அவள்
நோய் நீக்க வேலனை ஒரு நொடியில் இழுத்து வருக'' என்றாள்.

''வேலன் வந்து என்ன சொல்வான்? விழியிரண்டை
விண்ணோக்கி மேயவிட்டு — வெடி முழக்க ஒலியெழுப்பி
வீணான ஆரவாரம் ஏராளமாய்ச் செய்து; துரும்பைத்
தூணாக ஆக்கித் தெய்வத்தின்சேட்டையெனச் செப்பிடுவான்!''

தோழியிதைத் தலைவியிடம் விளக்கிக் கூறி—;
''மேழிபட்டு மேலே வரும் அடிமண்ணைப் போல் —
காமமெனும்
ஊழித்தீ வாட்டுகின்ற உண்மை ஒருநாள் வந்தே தீரும்!
அதனாலே
கோழிச் சிறகுக்குள் குஞ்சைப்போல் ஒளிக்காதே காதற்
களவியலை!

வெறியாடி நோய் தீர்க்கும் வேலனும் பூசாரி தேவையில்லை;
நெறியோடு மணம்புரிய விழைகின்ற வீரனொருவன் மீது
குறியாக இருக்கின்றாய் நீ என்ற இரகசியத்தை
அறியாது புலம்புகின்ற அன்னைக்கு உணர்த்திடுவோம்!

மையுண்ட ஆய்மலர்க்கண் பசலை நிறம் படர
மனம் கவர் சேய்மலை நாடன் செய்த நோய் இதுவென்று
கைவளையல் எல்லாமே கழன்று விழுவதற்கு முன்பு
கண்டிப்பாய் அன்னையிடம் சொல்லிவிடல் நன்று'' என்றாள்!

தயங்கித் தயங்கித் தோழி போகாமல் நிற்பதையும்
மயங்கி மயங்கித் தலைவி பேசாமல் குனிவதையும்
தாய்ப்பறவை சரியாகப் புரிந்துகொண்டு - இனித்
தடையாக இருக்கமாட்டேனென்று தலையசைத்துப் பறந்ததுவே!

*

* ''அறியாமையின் 'வெறி' யென மயங்கி
அன்னையும் அருந்துய ருழந்தனள்; அதனால்
எய்யாது விடுதலோ கொடிதே — நிரையிதழ்
ஆய்மலர் உண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே!

*

(ஐங்குறுநூறு — (குறிஞ்சி) 242
பாடியவர் : கபிலர்)

பொருள் விளக்கம் :

வெறியென = தெய்வம் வருத்தியதென. உழந்தனள் = வருந்தக் கலங்கினாள். எய்யாதுவிடுதல் = அறியாமல் விட்டுவிடல்.
ஆய்மலர் = தேர்ந்தெடுத்த சிறந்த மலர்.
சேய்மலை = அண்மையில் உள்ள மலை.

*

ஓல்லையூரில் முல்லையோ?

முல்லைக்கூட்டம் பந்தலிட்டு மணக்கும் மூதூராம்
ஒல்லையூர் என்னும் புதுக்கோட்டை ஒலியமங்கலம்

கிழார் என்ற பெருமகனுக்குப் பிறந்த திருமகனும்
கீர்த்திமிகு ''பெருஞ்சாத்தன்'' பெயருடைய மாவீரன்;

பாண்டியர்க்கும் சோழர்க்கும் நடக்கின்ற போரில் எல்லாம்
படைதிரட்டிப் பாண்டியர்க்கே வெற்றிகளைக் குவித்திடுவான்!

குன்றெடுக்கும் நெடுந்தோளும் கொடை பொழியும் கையும்
கொண்டுலவும் வல்லவனை - நல்ல வள்ளல்தனை;

செந்தமிழால் மாலைகட்டிப் புகழ்ந்துரைத்தார்;
நந்தமிழ்நாட்டுச் சான்றோரும், ஆன்றோரும்!

கொடியிற் புலி அசையும் சோழனது, **குடவாயிற் பிறந்த**
கீரத்தனர்,
தொடித்தலை விழுத்தண்டினர்; இவ்விரு புலவர்கள்!

நொடியிற் பகையொழிக்கும் இவன் வீரத்தையும்,
மிடிமை அகற்றும் இவன் ஈகை இதயத்தையும்;


நாடே புகழ்தல் கேட்டு மனமிக மகிழ்ந்தனர் - அவன்
நட்பை நாடிப்பெற்று நண்பர்களாய்த் திகழ்ந்தனர்!

பாண்டியன் பக்கம் நின்று சோழனை எதிர்த்தாலும் - அவன்
பண்பு நலங்கண்டு பாராட்டத் தவறுதவர் கீரத்தனர்!

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்ற
மனம் படைத்த பெருந்தகைப் பேரறிஞர் போலும் அப்புலவர்!

மாவீரன் பெருஞ்சாத்தன் நோய்வாய்ப்பட்டொரு நாள்
மரணத்தின் மடிதனிலே துயில்கொள்ளப் போனான் என்று

மலைபிளந்து வருகின்ற வேல் போல ஒரு செய்தி
மாத்தமிழர் நாடெங்கும் பரவிற்றுங்கே!



அரண் போன்றான் வீழ்ந்தான் என்ற அதிர்ச்சியினால் தாக்குண்டு
அலை உயர்ந்தெழும்புகின்ற கடல் போலக் கொந்தளித்தார்
புலவர்!

குடவாயில் ஊர்நோக்கிச் செல்கின்ற வழியினிலே
கொடைவீரன் பெருஞ்சாத்தன் நாட்டுக்குள் நுழைந்தார்!

ஒல்லையூர்ப் பகுதி எல்லையிலே கால்பட்டதுமே - அங்கு
முல்லை மணம் கமழ்ந்தெங்கும் படர்ந்துள்ள கொடிகள் மீது
- அவர் கண் பட்டதுவாம்!

''இடிமுழுங்கி எதிரிகளை வெற்றிகொள்ளும் சாத்தன் மறைந்த
பின்னர்
கொடிமுல்லைக்கென்ன அவசரமோ பூத்துக்குலுங்க?'' என்று;

புயல்தாக்கிச் சீரழிந்த பூந்தோட்ட உளத்தினராய்
புலவர்பிரான் புலம்பலுற்றார்; பூத்திருக்கும் முல்லைநோக்கி!

''இளையவராம் வீரர் உனை எடுத்துச் சூடார் - எழில்
வளையணிந்த மங்கையரும் உன்பக்கம் வாரார்!

பரிசில் பெறப்பாடும் பாணனும் பாடினியும் கூடப்
பறித்தெடுத்து உன்னை யாழ்மீது அணிந்திடார்!

வீரன் சாத்தனை இழந்துவிட்டுத் துயர்மிகுந்து;
விழிநீர் பெருக்கி, ஊரே அழுதிடும்போழ்து;

ஒல்லையூர் நாட்டில் ஒருக்கணமும் சிந்திக்காமல்
முல்லையே நீ மலர்ந்தது ஏனோ; இரக்கமின்றி?''

இவ்வாறு புலவர் குடவாயிற் கீரத்தனார் -
இரங்கலுரைக்கும் செய்யுள் ஒன்றை இயற்றியதால்;

மறைந்திட்ட சாத்தன் எனும் ஆற்றலாளன்,
நிறைந்திருந்தான் மக்களது நெஞ்சத்தில்;

என்ற உண்மை எல்லார்க்கும் தெரிந்ததம்மா; எனவே
நன்றென்று வாழ்த்திடுவோம் நம்தமிழர் பண்பாடு!

*

* ''இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்
நல்யாழ் மடுப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்; பாடினி அணியாள்!
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த

வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே?''

*

(புறநானூறு : பாடல் : 242
பாடியவர் : குடவாயில் கீரத்தனார்)

பொருள் விளக்கம் :

ஆடவர்க் கடந்த = வீரர்களை வென்ற. வல்வேல் = வலிமையான வேல். பின்றை = பிறகு. மிடிமை = வறுமை.

*



மறுபிறப்பு மாந்தர்க்கு உண்டென நம்பிய
மங்கையொருத்தியின் காதல் நினைவினை;

மழைத் தமிழ்ப்புலவர் அம்மூவனார் என்பார்
மாம்பழக் கதுப்பென வழங்கினர் அன்று!

நற்றிணை நானூறு தொகுப்பில் ஒரு பாடலில்
கற்பினை அணியாய்ப் பூண்டவோர் அழகி;

காதலன் வருகைக்குக் கடுந்தவம் இருந்து
காதல் வெப்பத்தால் கண்ணீரில் குளித்தாள்!

''வருவதாய்ச் சொன்ன நாளும் முடிந்தது; வந்து
தருவதாய்ச் சொன்ன இன்பமும் தொலைந்தது!

மூங்கிலைப் போல் தோளென்று முத்தங்கள் தந்தார் - அது
ஏங்குதல் காணுமல் அவர் எங்கு சென்றார்?

மூடுகின்ற இமைகளுக்கு வேலையின்றி விழியிரண்டும்
காடு நோக்கி வழிபார்த்துக் கதிகலங்கிக் காத்திருக்கும்!

சேதி அறிந்து இந்தச் செந்தாமரை மொட்டுதனைச்
சேர்த்தணைத்துச் சுகம் அளிக்க வாராரோ?

அறிவும் என்னைக் கைவிட்டு அடியோடு விலகியது;
அந்திமாலைப் பொழுதுவர காதல் நோயோ பெருகியது!

அவரின்றி அணுப்பொழுதும் வாழ்வதிலோர் பயனில்லை;
சுவரின்றி இருக்கின்ற கூரைக்கு வீடென்று பெயருண்டோ?

விரலுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு இசைபொழிய
வீணைக்கென்று வேறொரு வழிதான் இனி ஏது?

இழுத்து, விட இருக்கின்ற மூச்சுப்பைகள்
இரண்டில் ஒன்றை இழந்தாலோ கவலையில்லை!



இதயத்தில் சரிபாதி வெட்டுண்டு பிரிந்து போனால்
இறப்பதுதான் உயிர் இயற்கை!

இதயம்போல் இருந்தோம் நாங்கள்; அவரோ
உதயக் கதிர்! மேற்றிசையில் மறைந்து போனார்!

இருளகற்றி என்வாழ்வில் ஒளிப்பந்தல் வேய்வதற்கு
அருள் சுரந்து அவர் மீண்டும் எழாததுதான் ஏனோ?

மறப்பதற்கு முடியாது என்னால் - அதனால்
இறப்பதற்குத் துணிந்துவிட்டேன்! உயிர்

துறப்பதற்கு முன்னால் ஓர் அச்சம்! மறு
பிறப்பு உண்டென்று கூறுகின்றார்; சரி!

எப்பிறப்பு எடுத்தென்ன பயன் எனக்கு?
எனை அவருக்கென ஒப்படைத்துவிட்டேன்; எனவே

அப்பிறப்பும் அவரை மறக்காமல் வாழ்கின்ற
இப் பெண்பிறப்பே வாய்த்திடுமா? என எண்ணி;

நோவதாலே வலிமையில்லை நலிகின்றேன்;
சாவதற்கும் அஞ்சுவதால் மெலிகின்றேன்!''

என்று தலைமகள் தவித்த நிகழ்ச்சியை
நின்று நிலைக்கும் நற்றிணைப் பாடலில்,

அம்மூவனார் தொகுத்தளித்தார் - அதனைத்தமிழ்
அமுதமென அருந்திக் களித்திடுவோம் நாமே!

*

* **''தோளும் அழியும் நாளும் சென்றென**
நீளிடை அத்தம் நோக்கி வாளற்றுக்
கண்ணும் காட்சி தெளவின என்நீத்து
அறிவு மயங்கிப் பிறிதா கின்றே
நோயும் பெருகும் மாலையும் வந்தன்று
யாங்கா குவென்கொல் யானே ஈங்கோ
சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்புப்பிறி தாகுவது ஆயின்
மறக்குவேன் கொல், என் காதலன் எனவே!''


*

(நற்றிணை : பாடல் : 397
பாடியவர் : அம்மூவனார்)

பொருள் விளக்கம் :

அத்தம் = காடு அல்லது பாலை. வாள் = ஒளி.
தெளவுதல் = கெடுதல். என்நீத்து = எனைவிட்டு விலகி.
பிறிது = வேறு. மறக்குவேன் கொல் = மறந்துவிடுவேனோ?

*



மந்த மாருதத் தாலாட்டில் உறங்குதற்கு
மாட மாளிகை கட்டி வாழ்கின்ற பெரியீர்!
பணம் பணம் பணமென்று பாட்டாளியின் வியர்வையிலே
தினம் தினம் குளியல் நடத்திக் குவிக்கின்றீர் செல்வத்தை!
பிணம் தின்னும் கழுகு போல நீவிர்;
பெருக்க வைக்கின்றீர் உமது வயிற்றை!

இருள் சூழ்ந்த வாழ்க்கையிலே ஏழைகளைத் தள்ளிவிட்டு
பொருள் தேடி அலைகின்றீர்; போதுமென்ற மனமின்றி!

வாழ்வில் வளம் பெருக்கல் ஒன்றையே குறிக்கோளாய்க்
கொண்டோரே;
வார்த்தையொன்று கேட்கின்றேன் பதில் சொல்வீர்!
மாணிக்கப் பொரியலும் மரகதக் கூட்டுமா இலையிலிட்டு
உண்கின்றீர்?

வைரத்தால் வறுவல் செய்து வைடூர்ய அவியலுடன்
முத்துப் பவளமெனும் மணிகளிஞல் செய்திட்ட அரிசியையா
குத்தி உலையிலிட்டுக் குடற்பையை நிரப்புகின்றீர்?
என்றதொரு கருத்தமைந்த கேள்வியினைக்
குன்றமெனச் செல்வம் குவிக்கின்ற மனிதரிடம்;
மன்றமேறி அறிஞர் அண்ணு கேட்டார் — அதனை
மறவாமல் என்றும் நாம் கேட்கின்றோம்!

பொதுமை மணம் கமழவேண்டும் என்று;
புவியில் நாம் முழங்குகின்றோம் இன்று!
புதுமையல்ல இம் முழக்கம்; புலவர் பிரான் நக்கீரர்;
புறப்பாடலொன்றில் பொதுமை முரசம் ஆர்க்கின்றார்; கேளீர்

தெண் கடல் சூழ் தரணி முழுவதுமே - தன்
வெண்கொற்றக் குடையின்கீழ் வரவேண்டுமெனத்
தனியுரிமை நிலைநாட்டத் துடிக்கின்ற வேந்தனுக்கும்,
கனி சுவைக்கக் கல் எறிந்து வீழ்த்துதல் போல்
காடகத்தில் விலங்குகளை வேட்டையாட

கண்ணுறக்கமின்றிப் பகலிரவு பாராமல் அலைகின்ற
கல்வியறிவற்ற முரட்டு மனிதனுக்கும்,
மானம் காத்திட அவர்தம் உடலுக்குக்
கீழும் மேலும் இரு உடைதான் வேண்டும்! - அவரை
மயக்கத்தில் ஆழ்த்தாமல் பசி நீக்கக்
கூழோ பொங்கலோ உண்டு களிக்க
ஆழிசூழ் இவ்வுலகில் அவரவர்க்கும் ஒரு
நாழித் தானியம் மட்டும் போதுமன்றே?

இப்படி

உண்பது நாழி; உடுப்பவை இரண்டேயெனும்
உண்மைதனை உணர்ந்த பின்னும்,
வறுமையில் பலர் வாட; வளமிகு செல்வப்
பெருமையில் சிலர் ஆடல் நீதிதானே?


உலகிற் பிறந்தோர் அனைவருக்கும்;
உடல், உள்ளத் தேவையெல்லாம்
ஒன்றுக இருக்கும்போது - இதனை
நன்றுகச் சிந்திக்காமல்
வெள்ளம் போல் பொருள் எதற்கு ஒருவன் சேர்த்தல்
வேண்டும்?
பள்ளம் போல் வாழ்வினிலே பலர் எதற்குச் சாதல் வேண்டும்?

தனக்கே எலாம் எனும் தனியுடைமை தகர்த்துத்
தரித்திரத்தை விரட்டுவதற்குத் தக்க வழி காண
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பொதுமைக் கொள்கையினை
வகுத்தளித்து வையத்தில் இன்பம் காண்பதுதான் வாழ்வெடுத்த
பயனுகும்!

தொகுத்தளித்தார் இக்கருத்தை நக்கீரர்; அதனைத்
தொடர்ந்தளித்து வருகின்றார் தொல்புவியில் நல்லோரெல்லாம்!

*

* ''தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;



செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே.''

*

(புறநானூறு : பாடல் 189
பாடியவர் : நக்கீரனார்)

பொருள் விளக்கம் :

தெண்கடல் வளாகம் = தெளிந்த கடல் நீர் சூழ்ந்த உலகம்.
ஒருமையோர் = தனியுரிமை வேண்டுபவர்.
துஞ்சான் = தூங்காதவன். கடுமா = விரைந்தோடக்கூடிய விலங்கினம். துய்ப்பேமெனின் = யாமே அனுபவிப்போம் எனின். தப்புந பலவே = பல தவறுகளுக்கிடமாகும்.
நாழி = தானிய அளவை.

*

பரிபாடல் - பண்மலர்ப் பூங்கா!

ஓங்கு பரிபாடல் என
ஒலிக்கின்ற சங்க நூலின்
காலத்தைக் கணக்கிட்ட ஆய்வறிஞர்
கடைச் சங்கக் காலமென்பார் - அதன்
காரணத்தை அறிவதற்குக் கடுமுயற்சி தேவையில்லை!

வடமொழி ஏடுகளில்
இடம் பிடித்த இதிகாச புராணமெல்லாம் - தமிழர்களின்
மரபென்றும் கலையென்றும்
மாண்புமிகு பண்பாட்டுச் செல்வமென்றும்
பரிபாடல் வரிகளிலே மெல்ல மெல்ல
பழத்தில் நுழை ஊசியென நுழைந்து
பக்குவமாய் ஊடுருவிப்
பழந்தமிழ் இலக்கியம் போல் காட்டிக்கொள்ளும்!

ஆயினும் ஒன்று சொல்வேன்!
ஆழ்கடல் முத்தெடுத்துக் கோத்திட்ட ஆரம்போல்,
ஒன்பான் மணிகளையும் ஒருசேரப் பதித்துவைத்து
ஒளிவீசும் பதக்கம்போல்,
அழகு தமிழ்ச் சொற்களை அடுக்கிவைத்து
அற்புதம்தான் புரிந்துள்ளார் அந்நாள் புலவர்!

''பசும்பிடி இளமுகிழ் நெகிழ்ந்தவாய் ஆம்பல்
கைபோற் பூத்த கமழ் குலைக்காந்தள்'' என்று
மலைவளச் சிறப்பை உயர்த்திடும்
மலர்கள் குறித்துப் பாடல்கள் பல உண்டு; பரிபாடல் தொகுப்பில்!

''மல்லிகை மௌவல் மணங்கமழ் சண்பகம்
அல்லி கழுநீர் அரவிந்தம் ஆம்பல்
குல்லை வகுளம் குருக்கத்தி பாதிரி
நல்லினர் நாகம் நறவஞ் சுரபுன்னை
எல்லாம் கமழும் இருசார் கரை'' - என
சொல்லும் பாடல் வையை நதியினைப் பற்றி!

கரையின்றிப் பெருகியோடும்
காட்டாறு குறித்துப் பாடும்போதோ
''ஆடலறியா அரிவை போலவும்
ஊடலறியா உவகையள் போலவும்''
ஓடிடும் நதியென உவமை கூறிடும்!

எனவே,

ஓங்கு பரிபாடல் எனும்
உயர்தனிப் பொற்சுரங்கம் தன்னில்
புராணமெனும் மண்ணின் துகளும் கொட்டும்.
பொன்னும் தமிழ்ப் பண்ணின் சுவையும் சொட்டும்.

கரை மோதி வருகின்ற வையை வெள்ளம்
கடுவேகம் காட்டி வருகின்ற ஒலியைக் கேட்டு
கண்கசக்கித் திடுக்கிட்டு விழித்தவர்கள் - இந்த
மண்மீது இருப்பதையே மறந்துவிட்டு
தேரிற் பூட்டும் குதிரைகளை வண்டியில் பூட்டி அது
தெரியாமல் மீண்டும் தேரிற் பூட்டுவர் எருதுகளை!

இப்படித்

திகைத்துத் தடுமாறி ஆடியோரைப் பரிபாடல்;
''திண்தேர்ப்புரவி வங்கம் பூட்டவும்
வங்கப் பாண்டியில் திண்தேர் ஊரவும்'' என்று
தித்திக்கும் தமிழில் தீட்டிக் காட்டும்!

போராடப் போகின்ற வீரர் படைச் சிறப்பு பார்த்தலுத்துப்
போயிருந்தால்
நீராடப் போகின்ற பெண்கள் நடையழகு காணலாமா?
பரிபாடலாம் ஒரு பலகணி வழியாக - அந்த
அரிவையர்தம் அழகெல்லாம் பருகலாமா?

அன்ன நடை - மிகச்
சின்ன இடை - சுவைக்
கன்னல் மொழி - உடல்
மின்னல் ஒளி!
கட்டுக்குலையாப்
பட்டுமேனியில் - வாழை
மொட்டிரண்டு
முளைத்துக் கொண்டு
ஆடவர் இதயம்
தொட்டிழுத்துத்
துளைத்துப் போடும்!

''ஆயிதழ் உண்கண் அலர் முகத் தாமரை
தாள் தாமரை தோள் தமனியக் கயமலர்



தம்கைப் பதுமம் கொங்கைக் கயமுகை
செவ்வாய் ஆம்பல் செல்நீர்த் தாமரை'' எனப்
போற்றிப் புகழ்கின்ற பரிபாடல் - அந்தப்
பொற்கொடியார் அங்கம் ஒவ்வொன்றும் மலர் என்றே பாடும்!

மலர்ந்த தாமரையாம் மங்கையின் மதிமுகம்!
மலராத் தாமரை மொக்காம் அவளின் மார்பகம்!
கைமட்டுமல்ல; அந்தக் காரிகையின்
கால்கூடத் தாமரையாம்!

கவிஞன் எழுத்தின்
கற்பனைப் பெருக்கை - ஒரு
கதை போல் இங்கே
காணலாம் வாரீர்!

நீரணி மாடத் தருகே
காலணியாம் சிலம்பு கொஞ்ச
நேரிழையர் கூட்டமொன்று
நீராடிக் களிப்பதற்கு நெருங்கிற்றுங்கே!

நிலவொளி போல் வெண்மை உடை ஒருத்திக்கு
நீலவான நிறமுள்ள உடையோ மற்றொருத்திக்கு
பச்சை வண்ண ஆடை நெகிழ ஒரு பாவை
பவள வண்ணச் சேலையுடன் பிறிதோர் பூவை!
பாடிப் பாடிப் பாய்புனல் ஆடினர்
ஆடியாடி அகமிகத் துள்ளினர்.

அப்போது

* வையைப் புனலில் வழக்கமாய் நீராட்டும்
வாலிப யானையுடன் ஒரு பாகன் வந்திட்டான்.
வந்த யானையின் கண்ணில் பட்டது மடப்பிடியொன்று!
வாய்ப்பை எண்ணி மகிழ்ந்த களிறு
வாயைப் பிளந்து அந்தப் பெண்யானையைப் பார்த்து,
வழியை மறந்து தனியே நின்றது!
பாகன் பலமாய்க் குத்தி நகர்த்தியும்
யானை அசைந்திட மறுத்தே விட்டது.
காதல் கொண்ட களிற்றைக் கண்டு
கன்னி யானையும் காதை அசைத்தது!
கண்ணெடு கண்ணினை நோக்கிய பின்னர்
காதல் வாய்மொழி எதற்கெனக் கருதி
களிறும் நடந்தது மெதுவாக - அதன்
காதலி யானையும் மெல்லத் தொடர்ந்தது!
நிலை மறந்து காம மயக்கத்தில் சிக்குண்ட பெண்யானை
கண்ணில்,

நீரணி மாடத்து வேங்கையின் ஓவியம் ஒன்று
பட்டிடவே
உண்மை வேங்கை போல் ஓவியத்திறன்
அமைந்ததாலும்
உளத்தில் பெண் யானைக்கும் இன்ப மயக்கம்
இருந்ததாலும்
உயிர் வேங்கைதான் உடன் பாய்ந்து வந்து - தன்
உயிர் குடிக்கப் போகுதென்று அஞ்சியோடி
நீராடிக் கொண்டிருந்த பெண்களையும் கலங்கச் செய்து,
அவர்கள்
நிர்வாணக் கோலத்தில் நீருக்குள்ளிருந்து துள்ளி
நிலைகுலைய எழுந்தோட முயன்று பின்னர் நிலையறிந்து
நாணமுற்று நீருக்குள் சிதறலானார்!

காதலி யானைக்கு விளைந்த துன்பம் யாதோ என்று
களிற்று யானை முழக்கம் செய்து துதிக்கை தூக்கி
போருக்கு வாள் தூக்கிப் புறப்பட்ட தளபதி போல்
யாருக்கும் அடங்காமல் பிளிறிற்றங்கே!
பெரும்பாடுபட்டுப் பாகன் அங்குசத்தால் அடக்கப்
பார்த்து - அது
வெறும் பாடாய்ப் போனதினால் வேறு வழியின்றி
- அதன்
அருங்காதல் நிறைவேற்றப் பெண்யானையினை
அருகழைத்துக் கொண்டு வந்து அமைதி செய்து
விரிசல் கண்ட மரக்கலத்தின் பகுதியொன்றை
விரைவாகப் பிசின் வைத்துப் பழுது பார்த்த
மாலுமியின் திறமைக்கீடாய் - அந்த
மாவுத்தன் யானைகளின் அமளிதனை அடக்கிவிட்டு
மகளிர் கூட்ட நடுக்கத்தையும் போக்கினான் என்று
மாகவிஞர் ''கரும்பிள்ளைப் பூதனார்'', பரிபாடலிலே
கூறுகின்றார்.
''மருத்துவன் நல்லச்சுதனார்'' என்பவர்தான் - இந்த
மாம்பழப் பாடலுக்கு பாலையாழ்ப்பண் வகுத்துப்
பாடிய பாவலராம்!

*

* **''ஆங்க, அணிநிலை மாடத்து அணிநின்ற பாங்காம்**
மடப்பிடி கண்டு வயக்கரி மாலுற்று
நடத்த நடவாது நிற்ப; மடப்பிடி
அன்னம் அனையாரோ டாயா நடைக்கரிமேல்
செல்மனம் மாலுறுப்பச் சென்றெழின் மாடத்துக்

கைபுனை விளர்வேங்கை காணிய வெருவுற்று
மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புறச்
செய்தொழில் கொள்ளாது மதிசெத்துச் சிதைதரக்
கங்கை மதமாக் கொடுந்தோட்டி கைந்நீவி
நீங்கும் பதத்தால் உருமுப் பெயர்த்தந்து
வாங்கி முயங்கி வயப்பிடி கால்கோத்துச்
சிறந்தார் நடுக்கம் சிறந்தார் கலையல்
இதையும் கயிறும் பிணையும் இரியச்
சிதையும் கலத்தைப் பயினுல் திருத்தும்
திசையறி நீகானும் போன்ம்''

*

(பரிபாடல் : பாடல் : 10
பாடியவர் : கரும்பிள்ளைப் பூதனார்
பண் வகுத்தவர் : மருத்துவன் நல்லச்சுதனார்)

பொருள் விளக்கம் :

பசும்பிடி = பசுமையான இலை. இளமுகிழ் = இளம் அரும்பு.
மெளவல் = முல்லை. கழுநீர் = நீலோற்பலமலர்.
அரவிந்தம் = தாமரை. குல்லை = வெட்சி; துளசி.
வகுளம் = மகிழம்பூ. நறவம் = நறுமணம். வங்கம் = வண்டி.
பாண்டி = எருது. உண்கண் = மை எழுதிய கண்.
ஆயிதழ் = அழகிய இதழ். தமனியம் = பொன்.
மாலுற்று = காதல்கொண்டு. சிதைதர = சிதறிடுதல்.
தோட்டி = அங்குசம். இதை = கப்பலின் பாய்.
இரிய = பழுதுபட. பயின் = ஒட்டப்பயன்படும் பிசின்.
நீகான் = மாலுமி. மடப்பிடி = பெண்யானை.
வயக்கரி = ஆண்யானை.

*



தும்பை மலர் எடுத்துச் சரம் தொடுத்துத்
தொங்க விட்ட நீர்வீழ்ச்சித் தாடி!

கம்பஞ் சோறுண்ணும் பழக்கத்தால் கடுகளவும்
கட்டுக் குலையாத நெடுநல் மேனி!

அம்பின் முனையும் தோற்றுவிடும்படியாக
அழகான கூர் விழிகள்!

அதோ வருகின்றார், அமுதத் தமிழ்மொழியே
அரும்புலவர் உருவெடுத்து வருவது போல்!

மோசுகீரனர் என்பது அவர் பெயர்; அவருடல் தழுவி
வீசுகின்ற தென்றல் கூடத் தமிழாய் மணக்கும்;

மூவேந்தராம் சேர சோழ பாண்டியர்க்கு — இந்தப்
பாவேந்தர் மீது தனி மதிப்பே உண்டென்பர்!

முடியேறியிருக்கும் மும்மன்னர் தலையினிலே — தமிழ்க்
குடியேறியிருக்கும் வரலாறு பல உண்டு இலக்கியத்தில்!

தமிழ் காக்கும் மூவரில் ஒருவன்
தகடூர் எறிந்த சேரமான் இரும்பொறையாம்!

பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்துப் பாடி - அவனைப்
பாராட்டி மகிழ்வித்த செயலுக்காக — அவன்
ஆண்டிருந்த நில முழுதும் கொடையாக
அரிசில் கிழார் எனும் புலவருக்குப் பரிசெனவே அறிவித்து
அதனைப் பெற அவர் மறுத்திடவே அவரையே தனக்கு
அறவுரை கூறும் அமைச்சராக ஆக்கிக்கொண்டான்!

செந்தமிழ்பால் வைத்திருந்த பாசத்தாலே
செங்கோல் பிடித்திருந்த அவன் கையில்
சிலவேளை எழுதுகோலும் ஏறிக்கொண்டு
சிறப்புமிகு இலக்கியங்கள் படைத்ததுவாம்!

முதுகவிஞர் மோசுகீரனர்; மலர்க்குடத்தில்
மதுவருந்த வருகின்ற வண்டே போல்
மதிமன்னன் சேரமானைச் சந்திக்க
அதி தொலைவு நடந்து வந்து,
அரசனது மாளிகையை அடைந்து விட்டார்.

அயர்வுடனே மன்னன் உறங்குவது கேள்வியுற்று
அவனைக் காண அரண்மனையில் காத்திருந்தார்.
அவருக்கும் ஓய்வு கொள்ள வேண்டுமென்றோர் உணர்வு;
அதனுலே சுற்றுமுற்றும் பார்க்கலானார்
ஆங்கோர் இடம் படுப்பதற்குக் கிடைக்குமா என்று!

வீர முரசம் வைக்கின்ற கட்டிலொன்று
வெண்மலர்கள் நிறைந்தவாறு இருக்கக் கண்டார்!
குருதி வழியும் போர் முகத்தில்
கொட்டுகின்ற முரசு வைக்கும்
கட்டிலென்று அறியாத புலவர் ஏறு
கண்ணுறங்க வசதியெனப் படுத்துக்கொண்டார்!

வெற்றிகொள் முரசு வீற்றிருக்கும் கட்டில்மீது
வேறெவரும் படுப்பதெனில் பெருங்குற்றமென
வேந்தர்கள் வெகுண்டெழுந்து தலைதனையே
வெட்டி வீழ்த்தும் காலம் அது!

நீராட்டி எடுத்து வர வீரர் சிலர் - அந்தப்
போராட்டக் கள முரசை அகற்றியதால்
விபரம் தெரியா வித்தகப்புலவர் - அதில்
விழிகளை மூடி உறங்கலுற்றார்!

வெகு தொலைவு நடந்த களைப்பில்
வியர்வை முத்து உடலில் விளைய
மிகு உறக்கம் கொண்டு விட்டார்;
மெய் மறந்து குறட்டை விட்டார்!

மயில் அனைத்து மஞ்சத்தில் கிடந்த மன்னன்,
துயில் கலைந்து எழுந்து விட்டான்!

மாளிகையின் முன்புறத்தில் உலவுதற்கு
மாமன்னன் வந்தபோது வியப்புற்று
முரசு கட்டிலருகே விரைந்தான் - ஆங்கு
மோசுகீரனார் உறங்குதல் கண்டான்!

''வாள் எடுத்து வந்திடவோ அரசே?''யென்று
ஆள் ஒருவன் வணங்கி நின்றான்...

போர் முரசம் வைக்கின்ற கட்டில் மீது
யார் ஒருவர் படுத்தாலும் அவரைத்
துண்டித்து உயிர் பறித்தல் - ஒரு
கண்டிப்பு ஆணையென இருப்பதாலே
மண்டியிட்ட வீரன், மன்னனது கண்ணசைவை
மரியாதையுடனே எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்!



அரசனின் விழிகள் நெருப்பைப் பொழியும்;
அவனது மொழியில் ஆத்திரம் வழியும்;
என்றந்த வீரன் நினைத்ததற்கு மாறுக
''எடுத்துவா விசிறியை!'' என்றான் வேந்தன்!

காவலனெடிக் கொண்டுவந்த கவரியினைக்
கைகளில் ஏந்திக் கவிஞர் மீது
கனிவுடன் வீசிப் பணிவிடை புரிந்தான்
நனிமிகு புகழுடன் நாடாண்ட வேந்தன்!

களைப்பு நீங்கிப் புலவர் எழுகின்ற வரையில்
கவரி வீசுதலை மன்னன் நிறுத்திடவில்லை...
நெடுநேரம் கழிந்தபின்னர் எழுந்த புலவர்;
திடுமெனக் குதித்தார், கட்டிலில் இருந்து!
''மன்னவனே என்ன இது?'' எனத் துடித்தார்! — ''இந்தச்
சின்னவன் பெற்ற பேறு'' என்றான், சேரன்!

''அரசு ஆணையை அறிவேன் எனினும்
முரசு கட்டிலென அறியாது படுத்தேன்.
ஆவி போக்கிடும் தண்டனையிருந்தும் — எனைக்
கூவியெழுப்பிக் கொல்லுதல் விடுத்து
கொற்றவனே தன் கையால் எனக்குக்
குளிர் சாமரம் வீசுகின்ற காட்சி என்னே?'' என்றயர்ந்தார்
புலவர்!

''தமிழுக்குத் தொண்டு செய்தால் - அந்தத்
தமிழ் உள்ளளவும் வாழ்வோம் என்ற
தன்னலத்தால்; தமிழேவடிவாக
என்னகத்தே வந்துள்ள தங்களுக்கு
நான் செய்த தொண்டு இஃதெ''ன்றான் சேரன்!
தேன் பெய்த பழச்சாறுய்ப் பாட்டொன்றைப் பரிசாய்த்தந்தார்
புலவர்!

*

* **''மாசற விசித்த வார்புஉறு வள்பின்**
மைபடு மருங்குல் பொலிய, மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி, மணித்தார்,
பொலங்குழை உழிஞையொடு, பொலியச் சூட்டிக்,
குருதி வேட்கை உருகெழு முரசம்

மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத், தெறுவர,

இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூவும் சாலும், நற் றமிழ் முழுது அறிதல்;

அதனெடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடை முழுவுத்தோள் ஒச்சித், தண்ணென
வீசி யோயே, வியலிடம் கமழ,
இவண்இசை உடையோர்க்கு அல்லது, அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை


விளங்கக் கேட்ட மாறுகொல்,
வலம்படு குருசில், நீ ஈங்குஇது செயலே?

*

(புறநானூறு பாடல் : 50
பாடியவர் : மோசுகீரனார்)

பொருள் விளக்கம் :

விசித்த = வலித்துப்பிணைத்த. வார்புறுவள்பின் = வாரப்பட்ட வாரையுடைய. மைபடுமருங்குல் = கருமரத்தால் செய்த உறுதி வாய்ந்த முரசின் பகுதி. மஞ்ஞை = மயில். மண்ணி வாரா அளவை = நீராடி வருவதன் முன்னே. மென்பூஞ்சேக்கை = மெல்லிய பூக்களையுடைய கட்டில். தெறு = வெகுளல். இருபாற்படுக்கும் = இரு கூறுகப் பிளக்கும். மதனுடை = வலிமை வாய்ந்த. தண்ணென வீசியோய் = சாமரங்கொண்டு குளிர வீசினாய். வலம்படு குருசில் = வெற்றியுடைய தலைவனே.



''தமிழ்மண்ணின் மானம் காத்துப் பெருமை சேர்க்கக் கனல்
உமிழ்கின்ற கண்களுடன் களம் புகுந்தார் அவரும்!

கனக விசயர்களின் தலை நொறுங்கக் கல்லேற்றிக்
கண்ணகிக்குச் சிலை வடிப்பேன் வஞ்சியிலே என்று,

கடுஞ்சபதம் மேற்கொண்டு வடபுலமே சென்று
கொடுஞ்சொல் கயவர்களைப் புறங்கண்டு வென்று

செங்குட்டுவ மாமன்னன் வெற்றிக் கீர்த்தியினை
அங்குற்ற இமயத்து நெற்றியிலே வில்லாகப் பொறிக்கப்

பொங்குற்ற சிங்கமாகப் போருக்குப் போனார் என் தங்கம்
இங்குற்ற பெண் எனக்குப் பூரிக்குதங்கம் - எனினும்;

சங்கொத்த என் கழுத்தை வளைத்துப் - பனையின்
நுங்கொத்த உதடுகளால் என் கன்னத்தில் முத்தம் பதித்து;

''கண்ணே நீ கலங்காதே கனகவிசயர்களை வென்றவுடன் - சேர
மன்னருடன் புறப்பட்டு விரைந்தோடி வந்துன் மடியினிலே
வீழ்வேன்!

புண்களையே போரில் அணிகளாய்ப் பெற்ற என் மார்பில்
- உன்

பூவிதழை ஒத்தியெடுத்துக் காயம் ஆற்றிடுவாய்!

விடை கொடு விழியாலே மொழியாலே;'' என்று - சேரரின்
படை வீரர்களில் ஒருவராய் அவர் பயணப்பட்டபோது;

அணுப்பொழுதும் பிரிந்திருக்க மாட்டேன் என்றுரைத்து
என்நெஞ்சம்



அடம் பிடித்து அப்போதே அவரை நிழலாகத் தொடர்ந்ததம்மா!

உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் வீணைமீட்டி - என்
கச்சவிழ்த்துக் களிநடம்புரியக் கட்டிய மணாளன்தான்
வரவில்லை; அதனாலே,

கட்டிலுக்குத் துன்பமில்லை - என் கண்களுக்கும் தூக்கமில்லை!
வட்டிலிலே நாழிக்கணக்கு பார்க்கும் வேலையையும்
விட்டுவிட்டேன்!

தொட்டிழுத்தென்னை இன்பத்தேனில் தோய்ப்பவரைக்
கிட்டிகட்டி இழுத்துவரும் என்நெஞ்சம் என்றிருந்தேன்!

தான் மட்டும் தனித்துவரக் கூடாதென்று - என்நெஞ்சம்
தலைவனுடன் சேர்ந்து வர எண்ணித் தங்கிவிட்டதோ; அன்றி

அன்பிலாதார் அவர் என்று கண்டு, கவலை மிகக்கொண்டு
தெம்பின்றி மெதுவாக எனைநோக்கி வருகின்றதோ?

ஒருவேளை எனைநாடி வந்து எனை உற்றுப்பார்த்து;
பசலைபாய்ந்து
உடல் இளைத்துத் துரும்பான என் உருமாற்றத்தாலே;

அடையாளம் தெரியாமல்; ''இவள் யாரோ ஒருத்தி'' என்றும்
''அயலாள் இவள்'' என்றும் திரும்பிப்போய் எனைத்தேடி
அலைகின்றதோ? நானறியேன்!''

வண்டுகள் மொய்த்துக் கிளறிய நறுமணத்தை
- மென்காற்று
மொண்டெடுத்துக் கொணர்ந்திங்கே வீசி
மகிழ்வித்தபோது

வளையல் நெகிழ்ந்துவிழப் பிரிந்துபோன கணவன்;
மானமறவன்
வரவில்லையின்னும் என்ற வாட்டத்தோடும் - அவனோடு

தொடர்ந்திட்ட தனது அன்பு நெஞ்சம் கூடச் சோகம்
படர்ந்திட்ட அவளுக்கு ஆறுதல் அளிக்கவில்லையெனும்
ஏக்கத்தோடும்,

'நற்றிணை'யில் ஒரு நங்கை வெளியிட்ட பிரிவுத்துயரை

விற்றொழில் வேந்தன் செங்குட்டுவன் படையெடுப்புக்
காதையுடன்

இணைத்தளித்தேன்! இன்புற்றேன்! நான் சுவைத்த இந்த
இனிப்புத்தமிழ்ப் பழக் குலையை எளிய நடையில்
உமக்கும் தந்தேன்!

*

* ''குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந்து ஈயக்
கண்களி பெறூஉம் கவின்பெறு காலை
எல்வளை ஞெகிழ்த்தோற்கு அல்லல் உறீஇச்
சென்ற நெஞ்சம் செய்வினைக்கு அசாவா
ஒருங்குவரல் நசையொடு வருந்தும் கொல்லோ?
அருளான் ஆதலின், அழிந்திவண் வந்து,
தொன்னலன் இழந்தஎன் பொன்நிறம் நோக்கி,
'ஏதிலாட்டி இவள்' எனப்
போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே?''

*

(நற்றிணை : பாடல் : 56
பாடியவர் : இளம் பெருவழுதி)

பொருள் விளக்கம் :

குரவு = குராமரம். சிறுநனை நறுவீ = சிறிய அரும்பு முதிர்ந்த நறிய மலர். வளி = தென்றல்காற்று. எல்வளை = ஒளிமிக்க வளையல். அல்லல் உறீஇயர் சென்ற = துன்பமுற்று அவர்பால் சென்ற. உசாஆய் = துணையாயிருந்து. நசை = விருப்பம். தொன்னலன் = பழைய நலன் (எழில்). ஏதிலாட்டி = அயலாள்.

*

கள் உண்ட கடுவன்!


கடுவன் என்றுல் ஆண்குரங்காம்;
மந்தி எனிலோ பெண்குரங்காம்!
கடுவன் ஒருநாள், கற்பாறைச் சுனையருகே
கள்ள மதுவருந்திக் கண்ணுறங்கும்போது,
கபிலர்; அவ்வழி வந்தவர் கண்ணில் பட்டதாம்!

''ஆண்குரங்கா? மதுவருந்தியா? அதுவும்
அரசின் அனுமதியில்லாத் திருட்டு மதுவா?
இக்கணமே அதனை இழுத்துச் சென்று
இடுக சிறையில்!'' எனச் சீறுகின்ற
சட்டம் எதனையும் அரசு இயற்றி - அதனைத் தன்
இட்டம் போல் வளைத்துக் கொள்ளும் காலமல்ல அது!

இருப்பினும் கபிலருக்கோர் ஆசை;
இக் கடுவன் எங்கிருந்து திருடியது மதுவை
என அறிவதற்கு ஆவலுற்றார்!
எழுப்பிக் கடுவனையே கேட்டுவிடலாமா என
எண்ணினர் எனினும் அஃதியலவில்லை!
ஏனெனில் அப்பொல்லாக் கடுவன்;
எண்ணிறந்த நாட்கள் அங்கே
பொன்னிற மலர்கள் உதிர்ந்துதிர்ந்து
கண்கவர் வண்ணம் உயர்ந்திருந்த
கவினுறு பூ மெத்தை யொன்றில்
உலகம் ஒன்றிருப்பதையே மறந்துவிட்டு
உடல் கிடத்தி மயங்கிப்போய் உறங்கியதாம்!

சலசலக்கும் அருவியோரம் மலைமீது
சந்தன மரக் கிளைகளிலே கடுவனும் மந்தியும்
'சடுகுடு' ஆட்டம் போட்டுப் பின்னர்
சங்கமித்தல் கண்டுள்ளார் - இன்றோ;
மந்தியும் கடுவனும் தாவிக் கொஞ்சி
அந்தி சாயும் நேரத்தில் போடும் ஆட்டம்
மறந்தது ஏனென்று வியந்து பார்த்தார்!

காலை முதல் கடுவனும் மந்தியும்
காடெல்லாம் காதல் புரிந்தலைந்து



மாலையிலே களைப்பு போக்க
மந்தியைத் தனிவிடுத்துக் கடுவன் மட்டும்
மயக்கத்தில் ஓய்வு கொள்ள
மருந்தொன்றைத் தேடிப்பிடித்து
மலைமீது குவிந்திருந்த மலர்மிசையில்
மல்லாந்து தூங்கியதாய்க் கருதிக் கொண்டார்!

மந்திக்குக் கடுவன் மதுவருந்தும் சேதி தெரிந்தால்
நிந்தித்துத் தன்னருகே அதனை நெருங்காதே எனத் தடுக்கும்!
அறிவுரைகள் கூறி அறவழி தவறுமல் நடப்பதற்கு
அடிக்கடி வற்புறுத்தி அதனுலே ஊடல் கொள்ளுகின்ற
மனைவிக்கு அஞ்சுகின்ற கணவனுக இருந்ததாலே
மந்திக்குத் தெரியாமல் கடுவன் மதுவருந்திக் கிடந்ததங்கே!

கடுவன் மதிமயங்கிக் கிடந்திட்ட காரணத்தைக்
கபிலர் கற்பனையால் ஊகித்தார் எனினும்,
காரூரும் வானம் சுழல்வது போலும்
நீரூரும் நில முழுதும் பறப்பது போலும்
தேரூர்ந்து வருகின்ற தென்றலென வந்து - நினைவின்
வேரூர்ந்து தடுமாறச் செய்கின்ற 'தேறல்' தனை
கடுவனுக்குக் காய்ச்சிக் கொடுத்துக்
காசினியை மறக்கச் செய்ததுதான் யாரோ - இந்தக்
கடும் போதை ஏறுதற்குப் பயன்பட்டக்
கனிவகை, மரப்பட்டை எதுவோ எனக் கபிலர் திகைத்தார்!

கால் வலிக்க நின்று கடுவனின் ஆராய்ச்சியிலே
கனத்த சிந்தனையை ஓடவிட்ட காரணத்தால்,
கபிலருக்குச் சற்றே தாகம் எடுக்க;
அருவியின் நீரையள்ளிக் கையளவு
அருந்தித் தன் நாவை நனைத்தபோது;
புரியாமல் கிடந்த புதிருக்குப்
புலவர் விடை கண்டாரம்மா!

சுனைநீரில் சிறிதளவே பருகினர் எனினும் - அச்
சுவைநீரோ அவர் நாடி நரம்பெல்லாம் ''சுதி''யேற்றி
மயக்கமெனும் ''சொர்க்க''த்தின்
மாளிகைக்கதவு வரை இழுத்தேகிற்று!
பெரும்பாடுபட்டுத் தன்னை விடுவித்துக்கொண்டு,
அரும்பாடல் ஒன்றியற்றி அகப்பாடல் தொகுப்பில் சேர்த்தார்!

குறிஞ்சி நாட்டுக் கொற்றவன் ஒருவனின்
கோலஞ்செய் மலைவளத்துச் சிறப்பைக் குறிக்கின்ற

அமிழ்தான அச் செய்யுள் சங்ககாலக் கடுந்
தமிழ்தான் எனினும் - அதன் கரும்பனைய
இனிமையினை உணர்வதற்காக - இதோ
எளிமையாக்கித் தருகின்றேன்:

''பல்வேறு விலங்கினங்கள்
பசியாற எலாம் கொடுக்கும்
நல் வளமிகக் குலுங்கும்
மலைநாட்டுப் பெருமகனே!
பாறையில் ஊற்றெடுக்கும் சுனையில்
பளபளவென வளர்ந்தோங்கி நின்று
வழுவழுவெனச் செழித்து இலைவிரிந்த
வாழைமரக் குலைகளில் இருந்து
உதிர்ந்தோடி உருண்டு நைந்த பழங்களும்,
தமையுண்டார் பிற கனியுண்ணுர் எனுமளவு
சுவைகொண்ட பலாச்சுளையின் தீஞ்சாறும்
கலந்திணைந்து, நீரில் தோய்ந்து, ஊறி மிதந்து
கதிர் ஒளி படுகின்ற வெம்மையாலே
''ஊழ்படு தேறல்'' என உவகை பொங்கிட
உரைத்துக் குதித்திடும் வண்ணம்
எதிர்பாராமல் இயற்கையாகவே
இன்ப மயக்கம் தருகின்ற
கள்ளாக மாறித் ததும்ப - அதனைக்
கடுவனென்று வெறும் நீர் எனக் கருதிக் குடித்து
கண்சுற்றி, மெய்மறந்து - அம்மலையில்
மிளகுக் கொடி படர்ந்துயர்ந்த
மிக மணக்கும் சந்தன மரமேற முடியாமல்
வாசமிகு மலர் குவிந்த தரைமேட்டில்
வசதியாகப் படுத்துறங்கும் காட்சி என்னே!''

இவ்வாறு

கபிலர் மலை நாட்டுச் செழுமையினை
கவிதை வரிகளாலே காட்டுகின்ருர்! - நானும் அதைக்
கதையொன்ருய் உருவமைத்துக்
களிப்புடனே உம் கரத்தில் நீட்டுகின்றேன்; சுவைத்திடுக!

*

*** ''கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை**
ஊழுறு தீங்கனி, உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடு, ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை, விளைந்த தேறல்

அறியாது உண்ட, கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது,
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்
குறியா இன்பம், எளிதின், நின் மலைப்
பல்வேறு விலங்கும், எய்தும் நாட!''

*

(அகநானூறு : பாடல் : 2
(களிற்றியானை நிரை)
பாடியவர் : கபிலர்)

பொருள் விளக்கம் :

கோழிலை = செழித்த இலை. கோள்முதிர் = காய்ப்பு மிகுந்த.
ஊழ்உறு = தானாக உதிர்ந்த.
ஊழ்படு தேறல் = தானாகவே உருவாகிய ''தேறல்'' எனும் மது.
கறிவளர் சாந்தம் = மிளகுக்கொடி படர்ந்த சந்தன மரம்.
நறுவீ அடுக்கம் = நறுமணமிக்க மலர் அடுக்கு.
குறியா இன்பம் = எதிர்பாராமல் இயற்கையாகவே கிடைக்கும் இன்பம்.

*



உளங்கவர் கலைக் காஞ்சியினைத் தலைநகராய்க் கொண்டு
உயர்ந்தோர் புகழ்த் தொண்டைமான் இளந்திரையன்
ஆண்டபோது;

அரும்பாரத் தமிழில் கடியலூர் உருத்திரங் கண்ணனார்
பெரும்பாணாற்றுப்படை நூலை அவனுக்குப் படைத்து
மகிழ்ந்தார்!

கரிகால்வளவன் மீது பட்டினப்பாலை பாடியதால் - அதற்குப்
பரிசிலாகப் பதினாறு நூறாயிரம் பொன்பெற்றவர் இவரேதான்!

பத்துப்பாட்டில் இடம்பெறும் இவ்விரு பாடல் தொகுப்புகளும்
பழந்தமிழர் பண்பாடு வாழ்க்கைமுறை அனைத்தும் சொல்லி -
மனத்தை

ஆற்றுப்படுத்தி வழிகாட்டி இன்னார்பால் சென்றால் - நீவிர்
போற்றத்தகும் பரிசில்பெற்று இன்பம்பெறலாம் என்றுரைத்து;

ஊற்றுப்பெருக்கனைய உலகூட்டும் நல்லோரை வல்லோரை -
அவர்
வீற்றிருந்து வாழ்கின்ற ஆள்கின்ற நிலப்பகுதிப் பெருவளத்தை;
- கனிச்

சாற்றுத் தமிழ்க் கவியாலே பாடிக் காணிக்கையாக்குதலே
ஆற்றுப்படை என ஆகுமென்பார் ஆன்றோர், சான்றோர்!

கடியலூர் உருத்திரங் கண்ணனாரின் பெரும்பாணாற்றுப்
படையோ
காஞ்சிநகராண்ட கலைக்காவலன் தொண்டைமானின்
ஊர்ச்சிறப்பும்,

மிடியிலார் ஆடவர்; மெல்லியலாரும் அவ்வாறே எனும்
பெருஞ் சிறப்பும்,
குடிப்பெருமை கூறுகின்ற தமிழ்க்குலச்சிறப்பும் கொண்டதோர்
புதையலாகும்!

ஆயமகள் ஒருத்தி ஆதவனுக்கு முன்னெழுந்து - மனையில்
அழகுறவே அலுவல்களை அயர்வின்றி ஆற்றும் பாங்கும்;

அதன்பின்னர் குடும்பத்தை நடத்தும் நலமும் - இல்லந்தேடி
அன்புடனே நாடி வரும் விருந்தினரை வரவேற்று வணங்கும் பண்பும்;

அஃதன்றி அரிய உழைப்பாலே கிடைத்திடும் ஆதாயப் பொருள்கொண்டு
அணிமணிகள் வாங்கிப் பூட்டிக்கொள்ள ஆசை கொண்டலையாமல் கையில்

எஞ்சி நிற்கும் பொருள்தன்னைப் பொன்னுக்கிப் போட விரும்பாமல்
எருமைகள் பசுக்கள் என மேலும் ஏராளம் வாங்கிக் குவித்து;

பால், மோர், தயிர், வெண்ணெய், நெய் என வாணிபத்தைப்
பல்கிப் பெருக்கிடும் பழக்கமும் உண்டாம் பழையநாள் தமிழகத்தில் என்று;

கடியலூர் உருத்திரங் கண்ணனார் கருத்தாக விளக்கிச் சொல்லி நமக்கு,
கணக்காக வளர்ச்சித் திட்டங்களுக்கான வழிகாட்டி இருக்கின்றார்!

இதோ; அது:

''பாணர்காள்! பாணர்காள்! நான் பகர்வது கேண்மின்; இவ்வூரில்,
பாவையொருத்தி விடியற்பறவை எழுவதற்கு முன்பே;

பகலவன் ஒளிக்கரம் படாமலே எழுந்துகொள்வாள்!
பவளம் போல் சிவந்த உதட்டுக்காரி; பார்ப்பதற்குப் படு கவர்ச்சிக்காரி!

பண்புநலன் பரந்திருக்கும் முகமும், பரிவுடனே விருந்தோம்பும் அகமும்
மண்பெருமை காக்கின்ற மாண்பும் கொண்ட மங்கையவள்!

குடைக்காளான் போல் குவிந்து விரிந்துள்ள மத்து கொண்டு
குமுறும் புலியோசையெழுமாறு கயிற்றுரல் கடைந்து;

தயிரை மோராக்கி வெண்ணெயினை நெய்யாய் மாற்றி
தலையினிலே சும்மாடு கட்டித் தூக்கிவைத்துக்கொண்டு;



மூங்கிலனைய தோளும் சிறு குழை அசையும் செவியும்
விளங்க
''மோரோ மோர்!'' என்று தெருவில் விற்றுச் சேர்ந்த
பொருளில்

உணவுக்கான நெல்லும் பிறவும் சந்தையில் வாங்கி
உற்றூர் களிக்க அவள் விருந்து வைப்பாள்!

வெண்ணெயும் நெய்யும் விற்ற விலைக்கு - அவளோ;
பொன்னையும் மணியையும் விரும்பி வாங்காமல்,

செய்தொழில் சிறப்புற்றோங்கிட மேலும்
சில எருமைகள் பசுக்கள் அவற்றின் கன்றுகள்
வாங்குவாள்!

அவள் மனை நாடி அருமைப் பாணர்காள்; நீவிர்
செல்வீராயின்;
அட்டியின்றி அவள் சமைத்துப் போடும் பசிய
தினைச்சோறு;

நண்டுகளின் வயிற்றில் உள்ள குஞ்சுகள்போல்
தோன்றும் - அவள்
மொண்டு ஊற்றும் பாலுடனே அதனைப் பருகலாம்''
என்றூர்!

காளானின் குடைபோலக் குவிந்த மத்துகொண்டு
கடைகின்றுளாம் கட்டித்தயிரை! கவிஞர் கூறுகின்றூர்!

கடையும்போது கயிற்றுல் எழுகின்ற ஒலியோ - ஒரு
காட்டில் உறுமுகின்ற புலிபோல முழங்கிடுமாம்!

பாணர்க்கு விருந்திடப் பாலுடன் கலந்துதரும் தினையோ
பார்ப்பதற்கு நண்டுவயிற்றுச் சினைக்குஞ்சுகள்போல்
தோன்றிடுமாம்!

உருத்திரங் கண்ணனூர் கற்பனைக்கும் தமிழுக்கும்
ஒருகோடி வாழ்த்துக் கூறினும் அது போதாதன்றே?

*

* ''நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகை அன்ன கூம்பு முகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்

சிறுகுழை துயல் வரும் காதிற் பணைத்தோட்
குறுநெறிக்கொண்ட கூந்தலாய் மகள்
அளவிலை உணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்''

*

(பெரும்பாணாற்றுப்படை:
(155 முதல் 168 முடிய)
பாடியவர்: கடியலூர் உருத்திரங்கண்ணனார்)

*

பொருள் விளக்கம் :

ஆம்பி = குடைக்காளான். பூஞ்சுமட்டு = மெல்லிய சும்மாடு.
குழிசி = பானை. அளை = தயிர், மோர். கிளை = சுற்றம்.
அருத்தி = உண்ணச்செய்து. நல்லான் = நல்ல பசு.
நாகு = கன்று. ஞெண்டு = நண்டு. பார்ப்பு = குஞ்சு.
மூரல் = சோறு.

*

பாலைப் பாடிய சேரன்!




தென்பெண்ணை ஆற்றின் கரையில் ஆண்ட
திருமுடிக்காரியெனும் திருக்கோவலூர் மலையமானை
தன்னுட்சியின்கீழ் அகப்படுத்தத் திட்டமிட்டு
தகடூரான் அதியமான் அதில் வென்றும் விட்டான்.
தப்பிச்சென்ற திருமுடிக்காரி மன்னன்;
தஞ்சமெனக் கருவூர்ச் சேரனைச் சேர்ந்தான்!

காரிக்குக் கைகொடுக்கச் சேரனும் முன்வந்தான்!
களத்தினிலே அதியமான் நெடுமானுக்குத் துணையாக;
பாண்டிய சோழர்கள் அனுப்பி வைத்த நால்வகைப்
படைகள் பாய்ந்தோடி வந்தும் பயனேதுமில்லை!
தகடூர்த் தலைநகரைக் காக்க முடியாமற் போனாலும் போகட்டும்;
தன்மானம் காத்தத் தமிழனாவேன் என்று அதியமான் களத்தில்
உயிர்விட்டான்!

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை யெனத்
தமிழர் வரலாற்றில் கருவூர்ச் சேரன் இடம் பெற்றான்!
தடந்தோள் கொண்டு எதிரிகளைத் தகர்ப்பதன்றித்
தமிழ்த்தோள் கொடுத்து சங்க இலக்கியத்தைத் தூக்கியும்
உயர்த்தினான்!

வாளேந்திப் போரிட்ட நேரம் போக மீதி நேரம் - எழுதும்
கோலேந்தி அவன் வடித்த கவிதைகளோ ஏராளம்!
முத்துமணிக் கவிதைகள் முப்பதுக்கு மேல் - அவன்
கரம்பட்டுக் கலித்தொகையில் ஒளி உமிழும்!
'பாலைக்கலி' பாடியதால் அப்பெருஞ்சேரல் இரும்பொறையை
''பாலை பாடிய பெருங் கடுங்கோ'' எனவும் பாராட்டி
அழைத்திடுவர்!

பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்துத் தலைவனாகப்
பாவாணர் அரிசில்கிழார் அவனை வைத்தார்!
நாமணக்க அவன் பாடிய கவிதைகள்
நற்றிணையில் நல்ல குறுந்தொகையில் - காதல்
பூமணக்கும் அகநானூறில் நிறைய உண்டு!
புகழ்மணக்கும் சேரமன்னன்; அருமைத்
தமிழ்நிலத்தை மட்டுமல்ல; அழியாத்
தமிழ்வளமும் சேர்த்து ஆண்டான்!



அரிசில்கிழார், மோசுகீரனார்,
இளவெயினி, பொன்முடியார் என
அவனைப் பாடியோர் பட்டியல் நீளும் எனினும்
அவனே ஓர் இலக்கியப் புலவனாய் எழுந்து நின்றான்!

கடத்தற்கரிய காவல் அரண் பல கடந்தும்
களிற்றுயானைப் படைகளை அழித்தும்
வேற்படை, விற்படை, தேர்ப்படை எதுவாயினும் - அவன்முன்
தோற்பது உறுதியென வீரம் விளைத்தும்,
வெற்றிக் கொடியினைக் கருவூர்க் கோட்டையின்
நெற்றி முகப்பில் பறக்கவிட்டவன் - தன்
ஒருவன் திறத்தால் கிடைத்த புகழ் இதுவெனக்
கருவம் கொள்ளும் பழக்கமற்றவன்!

ஒருமுறை,

படையெடுப்பொன்றில் பல வீரரை இழந்து
தடையுடைத்துத் தனது கொடியினை எடுத்து
பகைவர் அரண்மனை வாயிலில் ஏற்றி
பட்டத்து யானையில் கருவூர் திரும்பினான்!
வழியிலோர் கிழவர், விழிதனை விரித்து
அழிவில் பகையைத் தள்ளித் திரும்பும்
முடியுடை மன்னன் சேரனை வாழ்த்தி
இடிமுரசறைவோர் பக்கம் நடந்து,
''இறந்தோர் போக எஞ்சியிருப்போரில்
என் மகனும் உளனோ?'' என்றே கேட்டார்!

பாலைபாடிய பெருங்கடுங்கோ என்றும் - வெற்றி
வேலை ஏந்திய பெருஞ்சேரல் இரும்பொறை என்றும்
இலக்கியத்தில் இடம் பெற்ற இனமான வேந்தன் - யானை விட்டு
இறங்கி வந்து கிழவரின் இருகரம் பற்றிக் கொண்டான்!
''இனியவரே! முதியவரே! இளம்பிறை போல் உடல்
வளைந்தவரே!
என்ன வேண்டும் உமக்''கென்று வினவிடவே; அக்கிழவர்,
''பொங்குற்ற கடல்போலப் போருக்கு வந்த மகன்
எங்குற்றான் என அறியலாமோ?'' எனக் கேட்டார்!

''பூமிதனில் குறைவாழ்வு வாழ்வதற்கு விரும்பிடாமல் -
நான் எழுதிய
புறப்பாட்டுக்குள் நிறைவாழ்வு வாழ்வதற்குப் புகுந்துவிட்டான்''
என்று,
இருவிழியும் ஊற்றெடுக்கச் சேர மன்னன் சேதி சொல்லி
நரைமுதிர்ப் பெரியவரின் முகம்பார்க்க நடுங்கி நின்றான்!

''நான் பெற்ற பயனையடைந்தேன் வேந்தே; நன்று! நன்று!
தேன் சொட்டும் தமிழில் என் மகனைக் குளிப்பாட்டி - இந்த
வையம் இருக்கு மட்டும் அவன் புகழ் விளங்க - நீர்
வடித்தெடுத்த புறப்பாடல் கேட்பின்; அவனை
வளர்த்த கைகளுக்குப் பொன் கடகம் பூட்டினற்போல்
- இன்னும்
வாழுகின்ற நான், உம்மை வாழ்த்திடுவேன்'' என்றார்.

''எஃகு உளம் கொண்ட எனது வீரன்
எதிர் வரும் படையை வெற்றிகொள்ள
இன்னுயிர் தரவும் சிறு தயக்கமின்றி
ஈட்டிகள் வேல் வாள் அனைத்தையும் தாங்கி
இரு கூரும் நெஞ்சம் பிளந்திட
எண்ணற்ற கணைகள் மொய்த்த உடலுடன்
வீழ்ந்தபிறகும்
முன்னும் பின்னும் சூழ்ந்த பகைவர் - என்
கன்னல் நிகர்த்தானின் உயிரைப் போக்கினர்!
படைக்கலன் தடுக்கும் அவன் கேடயம்தனையும்
உடைத்த பகைவர்; பஞ்சு பஞ்சாய் - அவன்
தசைகளைச் சிதைத்துப் போர்க்களத்
திசையெலாம் பரப்பினர்!
எங்குளான் அவன் எனக் கேட்டீர் ஐயா!
இங்கவன் விளைத்த வீரச்செயலால் - இந்தப்
புவிதனில் வாழ்வதை விடுத்துப்
புலவர்தம் நாவினில் வாழ்ந்திடச் சென்றுளான்
அறிக'' என்றான்.

புகழ்வானில் சிறகடித்துப் பறக்கின்றான் மகன் என்று
புவியாளும் வேந்தன் புறப்பாடல் முழக்கக் கேட்டு
புன்னகை மின்னிட நன்றி சொன்னார்; கிழவர்
புதுநடை, புலிநடை போட்டு நடந்தார்!

*

* ''எஃகு உளம் கழிய இருநில மருங்கின்
அருங்கடன் இறுத்த பெருஞ்செ யாளனை,
யாண்டுள னே?வென, வினவுதி ஆயின்,
. . . . . .
வருபடை தாங்கிக் கிளர்தார் அகலம்
அருங்கடன் இறுமார் வயவர் எறிய,
உடம்பும் தோன்றே உயிர்கெட் டன்றே,
மலையுநர் மடங்கி மாறுஎதிர் கழியத்
. . . . . .

அலகை போகிச் சிதைந்து வேறு ஆகிய
பலகை அல்லது, களத்துஒழி யாதே;
சேண்விளங்கு நல்லிசை நிறீஇ,
நாநவில் புலவர் வாய் உளானே.''

*

(புறநானூறு : பாடல் : 282
பாடியவர் : பாலைபாடிய பெருங்கடுங்கோ)

பொருள் விளக்கம் :

அருங்கடன் இறுத்த பெருஞ் செயாளன் = அரிய கடமையினை ஆற்றிய செயல்மறவன்.
கிளர்தார் அகலம் = கிளர்ந்தெழும் மாலையணிந்த மார்பு.
அருங்கடன் இறுமார் வயவர் = தம் அரிய கடனுற்ற வந்த பகைவர். மலையுநர் = போரிடுவோர். மடங்கி = திரும்பத் தாக்கி.
அலகை போகிச் சிதைந்து வேறுகிய பலகை = காக்கும் நிலை தவறிச் சிதைந்து தூளாகிய கேடயம். சேண் = நெடுங்காலம்.

*



உரலுக்குள் நெல்மணிகள் உலக்கைபட்டு
உமிவேறு அரிசிவேருய்ப் பிரிவது போல்
உறவுதனை விரும்பாமல் உறுமுகின்ற எதிரிகளின்
உடல்வேறு தலைவேருய் ஆக்குகின்ற வீரனவன்!

கூரிய வேல்முனையால் வைத்த குறி தவருமல்
கொடும் பகைவர் குடல்கிழித்துத் தோரணம் கட்டுகின்ற
வீரியம் மிகக் கொண்ட வேந்தர் பெருந்தகையாம்
ஆரியப் படைகடந்த நெடுஞ்செழிய பாண்டியனவன்!
செந்தமிழைச் சிந்தையிலே குடிவைத்த காரணத்தால்
சீரிய நற்புலமை பெற்ற செழியர்குல வேந்தனவன்!

ஆராயாது தீர்ப்பளித்த அவசரத்தால்; கண்ணகியவனைத்
''தேரா மன்ஞ'' எனத் தூற்றியதாய்க் கதையும் உண்டு!
நீதி இறந்ததென உணர்ந்தவுடன், தன்னுயிரை - அந்த
நீதிக்கே வழங்கி அதனை நடமாட விட்டானென்று;
இந்த நெடுஞ்செழிய பாண்டியனைத்தான் - சேர
இளங்கோவின் சிலம்பு புகழுமெனச் செப்பிடுவர்!

இம்மன்னன் வாழ்ந்தபோது பாண்டிநாட்டில்
இயற்கைவளம் நிறைவாகக் கொழித்ததங்கே!
செழிப்பு மேலும் நிலையாகக் குலுங்குதற்கு ஏற்றவாறு
செயல்முறைகள், திட்டங்கள் இயற்றி ஆண்டான்!

தென்பாண்டிக் கடல்முத்தும் தேனருவி மலையழகும்,
பொன்மாடக் கூடங்களும், பொலிவு தவழ் சோலைகளும்,
வளைந்தோடும் ஆற்றோரம் அமைந்துள்ள கழனிகளில்
விளைந்து சாய்ந்து காற்றில் சதிராடும் கதிர்களுமே;
நெடுஞ்செழியன் உளத்துக்கு முழுநிறைவைத் தரவில்லை!
நீள்வையம் பெறுகின்ற வளத்திலெலாம் சிறந்த வளம்;
நிற்காமல் ஊற்றெடுக்கும் கல்வி வளம் ஒன்றேதான்
எனக்கண்டு,

கற்காதோர் வாழும் நாட்டில் பிற வளமெல்லாம் பாழே
என்றான்!

பாசி படராமல் இதயத்தைப் பளிங்காக்கும் கல்வியினை
ஆசிரியப் பெருமக்கள் ஊட்டுகின்றார்; அதனாலே
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் - அக்
கற்றறிவாளரைக் காத்திடல் வேண்டுமெனத்
தொடங்குகின்ற புறப்பாடல் ஒன்றைத் தமிழன்னை - கழுத்தில்
தொங்கவிட்டழகு பார்க்க மாலையாகத் தொடுத்திட்டான்!

தோகையாம் கோப்பெருந்தேவியவள்; அவன்
தோள் தழுவிக் கொஞ்சி சில கேள்விகளைக் கேட்டறிந்தாள்!
''உற்றுழி உதவுதல் எனில் என்னவாம்; மன்னவா?'' இது
முதல் கேள்வி!

''ஊறுபாடு ஒன்று ஆசிரியர்க்கு நேருமெனில்
உடன் சென்று துணை நிற்க வேண்டு''மென்றான்
நெடுஞ்செழியன்!


''உறுபொருள் கொடுத்தல் எனில் யாது பொருளோ?'' எனக்
கேட்டாள்!
''ஊதியம் ஆசிரியர்க்கு மிகுதியாய் அளித்திட வேண்டும்''
என்றான், அந்த நெடுஞ்செழியன்!

''உற்றுழி உதவி, உறுபொருள் கொடுப்பதுடன்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!'' என்றான்.

''அதற்கென்ன பொருள்'' என்று; அரசியார் பொருள்
அறிந்திருந்தும் அவன் வாயால் கேட்க ஆவலுற்றாள்!

''வண்ணமயிலே! பிற்றை நிலை எனில் பிற்பட்ட நிலையென்றும்
வழிபாட்டு நிலையென்றும் பொருள்கள் உண்டெனினும்;
பெருந்துயரமெனும் பிற்பட்ட நிலை எய்திட்டபோதுகூட
திருமுகம் சிறிதும் சுளிக்காமல் கற்றல் நன்றென்பதாலேதான்
இனிதான அறிவுதனைப் பெற விழைவோர்
முனியாது கற்க வேண்டுமென எழுதியுள்ளேன்'' என்றான்.

புன்னகையை நெளியவிட்டு அவன் முகத்தில் முகம் புதைத்து
மின்னெளிக் கன்னமிரண்டும் சிவப்பேறப் பூரித்துப்போய்;
''இன்னுமொரு ஐயப்பாடு மன்னவனே;
அன்னையொருத்திக்குப் பிறந்த பிள்ளைகளில்,
கல்வி கற்ற பிள்ளை - கல்லாப் பிள்ளை இவையிரண்டும்
அவளுக்கு



கண்கள் இரண்டைப்போல்தானே?'' எனக் கேட்டாள்!

''பிறந்தார்கள் இருவர், ஒரு தாய் வயிற்றில் என்றாலும்
சிறந்தோனுய்த் தாய் எண்ணிச் சிந்தை குளிர்வதெல்லாம்
அறம், திறம் உணர்த்துகின்ற கல்வி நீரோடையிலே
அன்றலர்ந்த மலராக இருக்கின்ற அறிவார்ந்த மகனேத்தான்!''
என்று கூறிக்கொண்டே மன்னன் எழிலரசிமேல் சாய்ந்து
எண்ணத்தை ஓடவிட்டு மேலும் எழுதினுன் ஓலையிலே!

''தாய்க்கு மட்டுமல்ல இந்த நிலை
தரணியாளும் அரசுக்கும் பொருந்தும்!
முன்வினைக்கு மதிப்பளிக்க வேண்டி,
மூடனுயிருந்தாலும் பரவாயில்லையென்று;
வீட்டுக்கு மூத்தோனை அழைத்து அறிவுரைகள் கேளாமல்;
நாட்டுக்கு நலம் பயக்கும் செயல்கள் குறித்து -
இளையவனுய் இருப்பினும், கல்வி கேள்வியில் யார்க்கும்
இளையாதவனுய்த் திகழ்பவனையே அரசும் அழைத்துப் பேசும்!
நாலுவகை மனிதர்களும் வாழுகின்ற நமது நாட்டில்
மேல்நிலை வாழ்வோரெல்லாம் மேலோர் அல்லர் - அன்றிக்
கீழ்நிலை வாழ்வோர் கீழோருமல்லர்! - ஒரு
சூழ்நிலையாலே வந்தது இந்தத் தீவினையெனினும்,
கீழிருப்போன் கல்வி கேள்வியிற் சிறந்தோனுயின்
மேலிருப்போன், அவன்கீழ் இருப்பவனே ஆவான்!''
இதை எழுதி அரசியிடம் படித்தான் மன்னன்.....அவளோ;
இதழ்பொருத்தி அவன் இதழை ஈரமாக்கி;
''எழுதுகோல் பிடித்த விரல் எங்கே?'' என்று
இழுத்து வைத்துக் கண்களிலே ஒத்திக்கொண்டாள்!
அகத்துறையின் சுகத் தென்றல் மணம் நுகர்ந்து ஆடினுன் மன்னவன்!
புறத்துறைக்குப் புதையல் போல கல்வியின் பெருமைதனைப்
பாடினுன் அந்தத் தென்னவன்!

*

* **''உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்**
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்,
'மூத்தோன் வருக' என்னது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே''

*

(புறநானூறு : பாடல் : 183
பாடியவர் : ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியப் பாண்டியன்)

பொருள் விளக்கம் :

உற்றுழி = துன்பம் நேர்ந்தபோது.
உறுபொருள் = மிகுதியான பொருள்.
பிற்றைநிலை = பிற்பட்ட நிலை அல்லது வழிபாட்டு நிலை.
முனியாது = வெறுப்புக் கொள்ளாமல்.
திரியும் = வேறுபடும்.
அவன்கட்படுமே = அவனுக்கு அடங்கியிருக்க நேரிடும்.

*

தமிழ் நெஞ்சங்கள் போற்றிய தலையாலங்கானத்தான்!


சேரனும் , சோழனும், எழினியும், திதியனும்
இருங்கோ வேண்மான் எனும் ஐவருடன்
பொருநனும், மற்றும் எருமையூரனும் இணைந்த
போர்முனையில் எழுவர்படையை மோதிடவே,
இளங்காளை நெடுஞ்செழியன் புறப்பட்டான்
களங்கண்டான், வென்றிட்டான் என்றும் - பகைவர்
முரசு கவர்ந்து முடித்திட்ட சூளுரையால்
அரசர்க்கரசனுய் ஆனன் என்றும்,
அகமகிழ்ந்து கூறுகின்ற செய்தி ஒன்றை
அகநானூறில் பாடுகின்றூர் அரும்புலவர் **நக்கீரர்!**

''கதிரவனும் நிலவும் சேர்ந்து மண்மீது வீழ்ந்தாற்போல்
களம் பட்டார் சேர சோழ மாமன்னர்'' என்று
புலவர் **கல்லாடனூர்**, புறப்பாடல் ஒன்றின் மூலம்
பலமிக்க பாண்டிய இளவல்தனைப் போற்றுகின்றூர்!

''ஒருவரோடு ஒருவர் போரிடுதலும் - அந்த
இருவரில் ஒருவர் வீழ்தலும் இயற்கை!
எழுவரை ஒருவன் மடக்கி அடக்கிடப்
பழுதறப் போர்புரிந்தான் என்பதும்
எழுவரும் தோற்றூர்
இவன் ஒருவனே வென்றூன் என்பதும்
இவ்வுலகிலோர் புதுமை என்பேன்'' என்று,
இடைக்குன்றூர்க்கிழார் எனும் புலவர்,
எழுத்தில் வடித்தார் பாண்டிய இளவலின் வெற்றியை!

தமிழ் மன்னர்களே தங்களுக்குள் முட்டி மோதியதைத்
தாங்கொணாக் கவலையுடன் **குடபுலவியனூர்** எனும் புலவர்,
''தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானம்'' என்றூர்!

தடந்தோள் பாண்டியனே இறுதியில் வென்றூன் - எனவே
தழுவிடத் துடித்தார் அவனை உடனே!
வேட்டுவர்கள் புலி பிடிக்கும் பொறியைப் போல்
விரிந்து பரந்த செழியனின் வீர மார்பை
விரைந்து சென்று தழுவிட விரும்புகின்றேன் என



வித்தாரத் தமிழ் முழக்கும் அப்புலவர்; அவனது
முத்தார மார்பைத் தழுவிக் கொண்டார்!

தலையாலங்கானத்துப் போர்க்களத்தை - அத்
தமிழ்ப் புலவர் வர்ணிக்கும் விதம் பாரீர்!

கடும்பகை எதிர்த்துக் கணைகள் பறந்திட
திடுமெனச் சாய்ந்தன எதிரியின் யானைகள்!
வீழ்ந்த யானையின் துதிக்கையை அதன் வாயுடன்
வீர மறவர் வாளால் வெட்டிட; அவை துண்டாகிக்
களத்தினில் பரவிக் கிடந்திட்ட காட்சி;
கழனியோரத்துக் கலப்பைகள் போல் விளங்கிற்றுமே!
படைத்தலைவர் பல்லோர் மாண்டு மடிந்திட - அவர்
பக்கத்தே தம்புதல்வர் மரணமெய்திக் கிடந்தது கண்டு,
நெற்றித் தோலும் சுருங்கிய மூதாட்டியர் பலர்
சுற்றி நின்று அழுது புலம்பினர் எனினும்
வெற்றி இதனினும் வேறொன்று உளதோ என
வீர மைந்தரைப் பெற்றதற்குப் பெருமையுமுற்றனர்!

நெடுஞ்செழிய பாண்டியனின் அவைக்களத்துப்
பெரும்புலவர் **மாங்குடி மருதனார்** என்பவரோ;
கடும் போரிட்டுக் களவாகை சூடி வரும்
காளையாம் பாண்டியனின் திறம் வியந்து
களிப்புற்றார் எனினும் - அவன்
களம் காணும் ஆசையிலே சுழல்வது கண்டு
சலிப்புற்றார்!
மாவீரன் பாண்டியனின்
போர்த்தாகம் குறைக்க
''மதுரைக் காஞ்சி'' யெனும் நூல் செய்தார் - அந்த
மாங்குடி மருதனார் பாடிய புறப்பாட்டில்;

''கடலைக் கிழித்துச் செல்லும் மரக்கலம் போல்
களத்தில் ஊடுருவும் யானைப்படையின் பின்னே
வேல்கொண்ட வீரர் அறுத்தெடுத்த
கோல் கொண்ட மன்னர்தம் தலையை அடுப்பாக்கி
குருதிநீர் பொங்குகின்ற உலையில் - போரில்
கொலையுண்டோர் தசையினைக் கொதிக்க வைத்து
தோள்களாம் துடுப்பு கொண்டு துழாவிய உணவால் - கள
வேள்வி நடத்துகின்ற பாண்டியனே!'' என்று,
பலபடப் பாராட்டிவிட்டு - அவனது
பகைவரையும் புகழ்கின்றார்!

மாற்றார் எனும் பெயர் பெற்று - உன்னிடம்
தோற்றார் எனினும்,

விழுப்புண் பெற்று வீழ்ந்ததாலே;
வீரர் உலகில் என்றும் அவர் வாழ்கின்றாரே! என
எதிர்த்தோர்க்கும் ஏற்றம் தந்து
உதிர்த்தார் கவி முத்துக்களை!

''வேந்தன் இனிப் போர் விடுத்து
வாள்வீரர் வாழ்த்த வாழ்க!'' என்றார்!
''வள்ளலாய் நின்று இல்லாதார்க்கு வாழ்வளித்திடுக!'' என்றார்!
''வளையல் அணி மகளிர் தரும் தேறல் உண்டு;
வாழ்வெலாம் இன்பமும் அமைதியும் கொண்டு,
வையம் போற்றிடத் திகழ்க!'' என்றார்!
''ஒழுக்கம் காப்பவரே உயர்ந்து வாழ்வோர் என்றும்,
அஃதிலார்;
உலகில் வாழ்வோர் எனப்படார் - என்றும்
அறிக!'' என்றார்!

தமிழ்ப் புலவர் கூட்டம் புகழ,
தமிழ் எழுத்து ஒவ்வொன்றும் போற்ற,
தலையாலங்கானத்தான் வாழ்ந்தான்!

மருதனார் இயற்றித் தந்த
''மதுரைக்காஞ்சி'' பெற்று - அந்த
மாமன்னன் வாழ்ந்தான்!
''நெடுநல்வாடை'' தனை நக்கீரர் பாடி வழங்க
நெடுஞ்செழிய இளவல் நெடிதுநாள் வாழ்ந்து
நீள்புகழைத் தமிழ் நிலத்தில் நட்டானே!

குறிப்பு:

அகநானூறு - பாடல்	36 - நக்கீரர் பாடியது.
புறநானூறு - பாடல்	25 - கல்லாடனார் பாடியது.
புறநானூறு - பாடல்	76 - இடைக்குன்றூர்க் கிழார் பாடியது.
புறநானூறு - பாடல்	19 - குடபுலவியனார் பாடியது.
புறநானூறு - பாடல்கள்	24,26 - மாங்குடி மருதனார் பாடியது.

(இப்புலவர் பெருமக்கள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறித்து இயற்றிய பாடல்களில் அடங்கியுள்ள கருத்துத் தொகுப்பே இது.)

*



காவிரி தந்த தமிழகத்துப் புதுமணலில்
களம் அமைத்துச் சேர சோழ பாண்டி மன்னர்
கோபுரத்துக் கலசத்தில்
யார் கொடிதான் பறப்பதென்று,
போர்தொடுத்துக் கொண்டிருந்த காலமது!
அந்நாளில் ஓர் களத்தில்,
தாய்நாடு காக்கத் தாவிப் பாய்ந்து செத்தார்
தந்தை என்ற சேதிகேட்டுத்
தணல்வீழ் மெழுகானாள் தமிழகத்துக் கிளியொருத்தி!

அனல் போலும் கண்ணுடனே, அயலூர் சென்றிருந்த
அவள் கணவனும் வந்திட்டான்!
புனல் போக்கும் விழியாலே அவள் போர்ச்செய்தி தந்திட்டாள்!
''தந்தை களம்பட்ட செய்திக்கோ தவித்தாய்'' என்றான்.
''இல்லை அன்பே!
முல்லைசூழ் இந்நாட்டுப் படையிலோர் வீரர் குறைந்திட்டால்,
நல்ல உடையிலோர் கிழிசல் வந்தது போலன்றோ? இனித்
தடையின்றி நுழைவரே பகைவர் என எண்ணினேன்;
அடைபட்ட கண்ணீர், அணை உடைத்ததத்தான்'' என்றாள்.
அவன்,
குகைவிட்டுக் கிளம்பும் ஒரு புலியென,
பகைவிட்டுக் கிளம்பும் எரிமலையென,
பகைவெட்டிச் சாய்க்கும் வாளெடுத்தான்;
சூளுரைத்தான்; சுடர்முகம் தூக்கினான்;
''சுக்குநூறுதான் சூழ்ந்துவரும், பகை!'' என்றான்,
''நாடு மீட்காமல், வீடு திரும்பேன்'' என்றான்!



நங்கையோ,
நகைமுழக்கம் செய்து ''நடந்திடுக கண்ணே'' என்றாள்!
''திரும்பி வருவேனே இல்லையோ
எதற்கும் இப்போது ஒரு முத்தம்
இந்தா - திரும்பு'' என்றான்!
கொடுத்தான் - பின் தொடுத்தான்
பகைவர் மீது பாணம்!

*

போர்! போர்! போர்! என
முழங்கிற்று முரச ஒலி!
பார்! பார்! பார்; அந்தப் பைங்கிளியின்
உரிமையாளன் - பகைவர் மீது பாய்ந்து
கொல்லும் வீரம் பார்! - என்று
பட்டாளத்துத் தோழரெல்லாம் வியந்துரைத்தார்! அந்தக்
கட்டாணி முத்தாளும் கண்வழியே சிரித்திட்டாள்,
களத்தினிலே அத்தானுக்கு
அடுக்கடுக்காய்க் குவிந்து வரும் வெற்றிகளைக் கேட்டுவிட்டு!

*

கோட்டைகள்விடுபட்டன! எதிரியின் குதிரைக்கால்கள்
உடைபட்டன!
வேழப்படை முறிபட்டது! வேல்கள் பொடிபட்டன!
எம் கொற்றவன் படைகள் கொட்டும் பேரிகை
கோடையிடியெனக் கேட்குது! கேட்குது! எனக்
குதித்திட்டாள் - புதுப்பண் அமைத்திட்டாள்!

*

வீரர்கள் வந்தனர் - வெற்றி உன் கணவனுக்கே என்றனர்!
வேந்தனின் தூதுவர் வந்தனர்! வாழ்த்துக்கள் வழங்கினர்!
வீட்டோரத்துத் தோழிகள் வந்தனர் - வெற்றி
நீட்டோலை வாசித்து மகிழ்ந்தனர்! அந்த அழகி,
ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள் - அப்போது,
ஏனந்த மனிதன் வந்தானே?
இழவுச் சேதி சொல்வதற்கு! -
''என்னருமைப் பெண்பாவாய்!
கண்ணல்ல - கலங்காதே!
களச்சேதி, கடைசிச் சேதி கேள்'' என்றான் -
அந்தோ!
மாவிலைத் தோரணங்கட்டி, மணவிழா மேடைதன்னில்
வாழ்விலே ஒன்றானோம் என்று சொன்ன கண்ணாளன் -
மார்பிலே வேல்தாங்கி நல்ல

சாவிலே வீழ்ந்துவிட்டான் -
ஆவிதான் போனபின்னும் உயிர்வாழும் ஆரணங்கு
அச்சடித்த தமிழ்ப்பதுமை -
கூவி அழுதாள் - கொத்தான மலர்
இந்தக் குடும்பம்!
அதைக் கொத்தாமல் கொத்திவிட்ட
கொடும்சாவைப் பழித்தாள் - இழித்துரைத்தாள்!
இனி என்ன மிச்சம்! என்றும்,
கனி அழுகிப் போனதென்றும்
கதறி அழுதாள்!
பனிவெல்லும் விழிகாட்டி,
பனைவெல்ல மொழி உரைத்து,
பள்ளியறைக் கவிபாடும் நாளெல்லாம்
மண்தானே? இனிஇது தூங்காத
கண்தானே? என அழுதாள்! அத்தான் பிணம்
கிடக்கும் களம்நோக்கித் தொழுதாள்!

*

சோகத்தால் வீழ்ந்துவிட்ட அவள்காதில், வெற்றி
வேகத்தால் பகைவர் தட்டும் போர் முரசம்
பட்டதுதான் தாமதம்!
கெட்டதுதான் கெட்டது என்குடி - முழுவதுமே
பட்டொழிந்து போகட்டும் என எழுந்தாள்!
மட்டில்லாப் புகழ்கொண்ட நாட்டுக்கே அன்றி
வீட்டுக்கோ வாழ்வேன் என்றாள் -
வட்டிலினுல் நாழி பார்க்கும் விதங்கண்ட தமிழ்நாட்டு மாதரசு,
தொட்டிலிலே இட்டுத் தான் வளர்த்த தூயசெல்வன்
அட்டியின்றிக் கல்விகற்க, ஆலமரத்தடி

ஆசானிடம் சென்றிருக்கும் நினைவு கொண்டாள்!
அங்கு சென்றாள் - ''அம்மா'' எனப் பாய்ந்தான்,
அழகுமிழும் மழலைமொழி அன்புத் தங்கம்!
''அப்பா, தாத்தா, ஊர் திரும்பினரோ?'' என்றான் -
''திரும்பி வந்து சாவூர் சென்று விட்டார் -
கரும்பே - நீயும் வா'' என்றழைத்தாள்.
''என்ன வாங்கி வந்தார்?'' என்றான்!
''மானம்! மானம்! அழியாத மான'' மென்றாள் -
''மகனே! அதைச் சுவைக்க நீயும் வருக!'' என்றாள்
வந்துவிட்டான் - குலக்கொழுந்து!
குடும்ப விளக்கு எரிந்து கொண்டே, கூறுகின்றாள் -

''எதிரிகளின் படையெடுப்பால் - நம் குடும்பம் தழை
உதிர்த்துவிட்ட மரமாகப் போனதடா தம்பீ!
கவலையில்லை -
களம் சென்றார்; மாண்டார்!

ஆனாலும் இந்த,
நிலம் உள்ளவரையில் 'மானங்காத்தார்' என்ற பெயர்பூண்டார்!
என் மகனே! நீயும் தோளில்
பலம் உள்ளவரையில் பகையைச் சாடு!
பரணி பாடு! இது உன்
தாய்த் திருநாடு! - உடனே ஓடு!'' எனத்,
தாவி அணைத்துத் தளிர்மகன் தன்னைச்
சீவிமுடித்துச் சிங்காரித்து, ரத்தக்
காவிபடிந்த வாள்கொடுத்துச்

''சென்று வா மகனே, செருமுனை நோக்கி!''
என வாழ்த்திவிட்ட திருவிடத்துக்
காட்சிதனைப் - போற்றிப் பாடாதார் உண்டோ!
திருமகளே! இந்தப் பூவுலகில்?.....

*

* **''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே**
முதின் மகளிர் ஆதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்தும் வெளிதுவிரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே.''

*

(புறநானூறு : பாடல் : 279
பாடியவர் : ஒக்கூர் மாசாத்தியார்)

பொருள் விளக்கம் :

தன்ஐ = தந்தை. நெல் உற்ற செரு = நேற்று நடந்த போர்.
வெளிதுவிரித்து = வெள்ளாடை அணிவித்து.
பாறுமயிர் = பரட்டை முடி.

*



சொத்து சுகம் வாழ்வுச் சுவையனைத்தும் தமக்கென்று
சொல்வார்தமைச் சுயநலத்துப் பெருச்சாளியென்று
கத்து கடல் போல முழங்குகின்ற பாட்டாளி வர்க்கத்தார்;
களம் அமைத்து வளமனைத்தும் பொதுவென நிலைநாட்டக்
கண்களிலே கனல் வழியக் கயமைதனைச் சுட்டெரித்துக்
கரங்களிலே கொடிபிடித்துப் போர்முரசம் கொட்டுகின்றார்
- அந்தக்
குமுறும் எரிமலை மனிதரைக் கண்டு குளிருதடா நெஞ்சம்;
குறுநகை உதட்டில் மின்ன திரும்பிப் பார்க்கின்றேன்
கொஞ்சம்!

அடடா!

வியக்கின்றேன்; மெய்சிலிர்க்கின்றேன்,
விழிவிரித்துப் புறநானூற்று இலக்கியத்தைப்
படிக்கின்றேன்; பழைய நாள் தமிழகத்தில் நமைப்போலத்
துடிக்கின்ற உளத்தோடு ஒரு புலவர்;
தனியுடைமையாளர்களின் ஆதிக்கம் தகர்ப்பதற்கும்
இனியொரு வாழ்வு தமக்குண்டோ என்றேங்கி;
தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்து வீழ்ந்து போகின்ற
தரித்திரர்கள் கூட்டத்தின் கொடும் வறுமைச்
சரித்திரத்தை மாற்றி அமைப்பதற்கும்;
சங்கப் பாடலொன்றைத் தந்துள்ளார்!

பக்குடுக்கை நன்கணியார் என்பது அவர் பெயராம்-
பையொன்றை உடையாகப் பகுத்துடுத்தார் என்பதாலே
பாராட்டிப் போற்றிப் பலரும் தந்த அடைமொழிதான்
''பக்குடுக்கை''யெனப் பகன்றிடுவர் சான்றோர்!
பையாம் அந்த உடுக்கையினையும்; அவர்
பாங்குடனே நன்கு அணியார் என்ற காரணத்தால்,
பக்குடுக்கை நன்கணியார் என்று
பார்த்தவர்கள் பட்டம் சூட்டியிருக்கவும் கூடும்!

எளிய உடை, எளிய தோற்றம், எளிய வாழ்வு;- இவற்றுடனே,
ஏற்றத் தாழ்வற்ற நிலை இந்த மானிட சாதியிலே

என்றைக்கு மலருமென்ற கவலையுடன் - அவர்
அன்றைக்கே பாடிவைத்தார் என்பதுதான் பெருஞ்சிறப்பு!

மணமுழவு ஒலித்தது கேட்டார் ஒரு மனையில்;
மற்றோர் இல்லில் மரணப்பறை ஓசையையும் கேட்டுவிட்டு,
மனமொடிந்தார்!


மண்மீது வாழ்வதும் சாவதும்
மனிதர்க்கு இயல்புதான் எனினும்;
இவர்கண்ட நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுக்கும்
இருவேறு காரணங்கள் இருப்பதுணர்ந்தார்!

மணமுரசம் செவிபிளக்க
மா, பலா, வாழையெல்லாம்
மங்கல விழாப் பந்தலிலே நிறைந்திருக்க
மணித்தேரில் மணமக்கள் பவனிவர
மலைபோலப் புலால் உணவும் மதுக்குடமும்
மாடமாளிகையில் விருந்தினர்க்கு எதிர் இருக்க
எலும்பும் தோலுமன்றி எள்ளளவு சதையுமிலா
ஏழையர்கள் கூட்டமொன்று வீதியிலே
எச்சில் இலைகள் எல்லாம் மிச்சம் மீதியுடன்
எப்போது வெளியில் வந்து விழுமென்று
பசிக்கலைப்பால் மெய் சோர்ந்து பாதிக் கண்மூடி தவமிருக்கும்
காட்சிதனைப்
பார்க்கின்றார், பக்குடுக்கை நன்கணியார்!

பனித்துளிகள் அவர் விழிப் பூவில் எட்டிப் பார்க்க
பக்கத்தில் மற்றோர் பரிதாபக்கதை நடந்ததையும் கேள்வியுற்று
அங்கு சென்றார்!

பாவையொருத்தி; பொற்சிலைபோல் அழகுடைய பூங்கொடியாள்
சாவை அழைப்பதல்லால் வேறு வழியின்றித் தன் சரித்திரத்தை
முடித்துக் கொண்டாள்!
இளமையிற் கொண்ட காதல் இனிது நிறைவேறுமல் அவளின்
வறுமை நிலை வெறுத்துவிட்டுப் பெண் வேண்டாமென
மணமகனைப்
பெற்றவர்கள் திருமணத்தை நிறுத்திவிட்டார் என்பதாலே;
குற்றமிலாக் குலவிளக்கு, கொடுஞ்சாவின் மடிதனிலே வீழ்ந்து
விட்டாள்!

பூக்காட்டுப் பைங்கிளியின் வீட்டோரம்; புலவர்பிரான்
சாக்காட்டுப் பறைகேட்டுப் புலம்பிவிட்டார்; அந்தப்
புலம்பல்தான் புரட்சிக் கருத்தாக வெளிப்பட்டு
புறநானூற்றுப் பாடலாக புத்தொளி காட்டுதிங்கே!



மலரணி பூண்டு மகிழ்ந்து புணர்ந்திடும் காதலர் ஒருபுறம்;
மலைவீழ் அருவிக்கண்ணீர் உகுத்து மாண்டு மடிந்திடும் மகளிர்
ஒருபுறம் -

இன்ப வாழ்வனைத்தும் ஒரு சாரார்க்கென்றும்
துன்பம் ஒரு பிரிவினர்க்குத் தொடர் நிழல் என்றும் - மனிதப்
பண்பிலாதவர்கள் படைத்த இலக்கணம்; இந்த
மண்ணுலகில் பெருங் கொடுமையன்றே?
இதனை மாற்றியமைத்து இவ்வுலகைப் பொதுவாக்கி
எல்லார்க்கும் எல்லாமென்ற குறிக்கோள் எய்திடவே
இனிய பணிகள் இன்றே தொடங்கிட
எழுக நல்லோர்; என்னூர் புலவர்!

நாம் நல்லோராயின் நன்கணியார் முன்னே
''ஆம்'' என்றுரைத்து அவர் சொல்லைச் செயலாக்கிடுவோம்!
நாடு சிறக்க இந்த நானிலம் சிறக்கத் தனியுடைமையெனும்
கேடு களைவோம்; மேடு பள்ளமில்லா மேதினி சமைப்போம்!

*

* **ஓரில் நெய்தல் கறங்க, ஓர்இல்**
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்,
புணர்ந்தோர் பூவணி அணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற, அப் பண்பிலாளன்!
இன்னது அம்ம, இவ்வுலகம்;
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே.

*

(புறநானூறு : பாடல் 194
பாடியவர் : பக்குடுக்கை நன்கணியார்)


பொருள் விளக்கம் :

பக்கு = பை. நெய்தல் = சாக்காட்டுப்பறை.
கறங்க = ஒலிக்க. ஈர்ந்தண் முழவு = இனிய ஒலியுடைய முரசம். பாணி = ஒலி. பைதல் உண்கண் = துன்பத்தை வெளிப்படுத்தும் மையெழுதிய கண். பனிவார்பு உறைப்ப = நீர் பொழிந்து விளங்க.

குறிப்பு :

இப்புறநானூறுப் பாடலுக்கு விளக்கவுரை எழுதிய அறிஞர் பெருமகனார் ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

''பக்குடுக்கை நன்கணியார் காலத்தே நாட்டில் வாழ்ந்த வேந்தர்கட்கும் ஏனைச் செல்வர்கட்கும் உலக வாழ்வில் பெரு விருப்பந் தோன்றி, ''மெய்வலி யுடையார்க்கே இவ்வுலகம் உரியது; உலகத்திற் பிறந்தாரனைவர்க்கும் பொதுவென்பது பொருந்தாது'' என்றும், ''அவ்வலியைக் கெடாது பேணிக் கொள்ளற்குச் செல்வம் இன்றியமையாமையின், செல்வந் தேடுவது வலிவுடையார்க்கேற்ப''தென்றும் கருதி, அவற்றிற் கேற்ப நாளும் போரும் பொருளீட்டமுமே நினைந்தொழுகப் பண்ணிற்று. இதன் விளைவாக நாட்டில் இன்ப வாழ்வுக் கிடனில்லையாயிற்று. இதனைக் கண்டார் நம் பக்குடுக்கை நன்கணியார். ''இவ்வுலகம் இனிதன்று; ஒரு மனையில் சாப் பறை முழங்க, ஒரு மனையில் மணப்பறை முழங்குகிறது. ஒருத்தி பூவணியாமற் பொற்புற்று விளங்க, ஒருத்தி கணவனைப் பிரிந்து கண்கலங்கி நிற்கிறாள். இவ்வாறமையுமாறு இவ்வுல கினைப் படைத்தவன் பண்பு அறிந்தொழுகும் பாடில்லாத வனேயாவன். இவ்வுலகின் இத்தன்மையை அறிந்தவன் இத னிடையே கிடந்து உழல வேண்டுமென்பதன்று. இதனிற் சிறந்த இன்ப உலகத்து இன்ப வாழ்வு காண்டலே வேண்டி யவனுவான் என இப்பாட்டால் வற்புறுத்தலானர்.''



இளைப்பாறச் சிறுநிழலின்றி ஏங்கித்தவித்த தவளையொன்று
எடுப்பாகப் படமெடுத்து வெயில் தாங்காமல் வாலூன்றி -
நின்றிருந்த

பாம்பின் நிழலுக்குக் கீழே; அது தன் பகையின் நிழலென்றே
அறியாமல்;
பதுங்கிக்கொண்டு மூச்சுவிட்ட பயங்கரக் கோடையென;

வடமொழிப்புலவன் காளிதாசன் வர்ணித்தானே - அத்தகு
வறட்சிப்புயலின் கொடுமை வீசிய கோடையது!

இன்நிழல் இல்லாது வருந்திய தன் பெண்மானுக்குத்
தன்நிழலையே தந்து, தான் மட்டும் வெயிலில் நின்றது -
ஆண்மான் என;

கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையில் பெருங்கடுங்கோ;
கடும் பாலை வெப்பத்தைப் பாடினானே அந்தக் கோடையது!

ஆடிக்களித்த கண்ணுளானின் பிரிவுத்துயரால்; கண்மணியாள்
வாடி வடித்த கண்ணீரும் வற்றிப்போய் விழியிரண்டும் -
வறண்டதுபோல்;


கூடிக்குவிந்து முகில் கொட்டுகின்ற மழையின்றிக் காய்ந்து;
குன்றம்போல் உயர்ந்த கரைகொண்ட குளங்கள் எல்லாம் -
வெறுந்தரையாகும்!

தேடிவந்து இரைதேடி மகிழ்ந்திருந்த பறவையினம்; -
இனிவேறிடத்தை
நாடிச் சிறகடித்துப் பறப்பதுதான் நலமாம் என்று;

திட்டமிட்டுப் புறப்பட்டுத் திசைமாறிச் சுழன்று,
வட்டமிட்டு வளமுள்ள குளமெங்கே என்றலையும்!

நீர்தேங்கிக் கழனிமண்ணும் பண்படாத காரணத்தால்
ஏர்தூங்கும்; உழுவதற்கும் பயிரிடுவதற்கும் பயன்படாமல்!

பார் முழுதும் பஞ்சமோபஞ்சம் என்ற சொல்,
கூர் அம்பாக நெஞ்சில் குத்துகின்ற வேளையிலே;



வானம், திடுமெனக் கறுத்து, வந்தது மழையெனில்;
வந்த மழையும் வானமே கிழிந்தது போல் பொழிந்ததெனில்;

வயல் காய்ந்த காரணத்தால் வாடிய உழவனுக்கும்,
வளம் அழிந்த காரணத்தால் வருந்தியழுத மக்களுக்கும்;

கயல் துள்ளும் இனிமேலே குளங்களிலே என்று
களிப்புற்றுக் குடமெடுத்து நீர் எடுக்கப் போகின்ற மகளிருக்கும்;

எத்துணை மகிழ்ச்சி ஏற்படுமோ என் தலைவி;
அத்துணை மகிழ்ச்சியுனக்கு ஏற்படப் போகுதென்றுள் தோழி!

''ஏனடி?'' என்று ஏந்திழை தோழியின் தவடையைத்
தடவினாள்!

''தேனடி நான் சொல்லப்போகும் சேதி உனக்கு;

கேளடி தலைவி; உனை மணக்கத் தலைவன்; ஏறிய
தேரடி அதோ விரைந்து வருகின்ற'' தென்றாள்!

*

* ''. . . . . .
. . . . . .
நாடு வறம்கூர, நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய பைதுஅறு காலை
குன்று கண்டன்ன கோட்ட, யாவையும்
சென்று சேக்கல்லாப் புள்ள, உள்இவ்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறை,
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுள் பெய்தந் தற்றே - சேண்இடை
ஓங்கித் தோன்றும் உயர்வரை
வான்தோய் வெற்பன் வந்த மாறே!''

*

(அகநானூறு - பாடல் - 42 (களிற்றியானை நிரை)
பாடியவர்: கபிலர்)

*

பொருள் விளக்கம் :

வறம் = பஞ்சம். நாஞ்சில் = ஏர்கலப்பை.
பைது = பசுமைமிகு வளம். கோட்டம் = குளம்.
சேக்கல் = தங்குதல். வீசி = உதவிபுரிந்து.
வந்தமாறு = மணம்புரிய வருகின்றார்.

*

பொய்யாகிப் போகாதோ?

வெற்றிகளை விளைத்திட்ட வேளிர் குலத் தலைவனவன்
பற்றுக்கொண்ட பாவலர்க்குப் பரிசில்களை வழங்கிடுவோன்

''எவ்வி'' யெனும் பெயர்படைத்து எத்திக்கும்
ஏற்றிப் போற்றுகின்ற புகழ் பெற்றுன்!

கவ்வி உலகுதனைக் கறுப்பாக்கும் இரவின்
கடுமை குறைந்து காலையிளம் பொழுது தொடங்குகின்ற

வேளையிலே ஒருசெய்தி விடுபட்ட கணைபோல வந்து
''வெள்ளெருக்கிலையார்''எனும் வித்தகப்புலவர் செவிதனில்
புகுந்ததம்மா!

என்ன செய்தியது? என்ன செய்தியது? நீடூர் ஆண்ட
மன்னவனும் 'எவ்வி' மாண்டனன் போர்முனையில் என்ற,

பொல்லாச் செய்தியது! பொல்லாச் செய்தியது! ''அது
பொய்யாகிப் போதல் கூடாதோ'' எனப் புலம்புகின்ற

புலவர் பிரான்; அந்தப் பொய்யும் எப்படிப்
பொய்யாகப் போகவேண்டுமென்கின்றார்; புரிகிறதா?


களிறுகளைக் கவிஞர்கட்குப் பரிசாகத் தருகின்ற
களமஞ்சா மாவீரன் ''அகுதி''யென ஒருவனிருந்தான்.

ஒருவருமே அவனை வெல்ல உலகில் பிறக்கவில்லையென்றும் -
போர்க்
கருவியொன்று அவன் வசத்தே உண்டென்றும் - அதனைப்

''பொன்புனைதிகிரி''யெனப் புகல்வர் என்றும்;
பொருதிட வருவோர் எவரும் அதன்முன் புறமுதுகிடுவர்
என்றும்;

எங்கணும் ஒரு பேச்சு இருந்திட்ட காரணத்தால்
சிங்கமும்; சுண்டெலிபோல் அடங்கிற்றும் அவன் பேர் கேட்டு!

அவனைப் பகைப்பதற்குத் தயங்கிக்கொண்டு அயலார்
அஞ்சி நடுங்கியிருந்த காலமும் மாறி; ''அமர்க்களத்தில்,



அரிமாவாம் அகுதியெனும் படைத்தலைவன் போரிட்டு
அழிந்துபட்டான்'' என்ற உண்மை தெரிந்தவுடன்;

''பொற்றிகிரி''யென்ற பொன்னிலான சக்கரப்படைக்கருவி
பற்றி

பூனைந்திட்ட கருத்தெல்லாம் பொய்யாகப் போயிற்றென்பார்!

அப்பொய்போல ஆகிவிடக் கூடாதோ - ''எமது
அன்புக்குரியோன் எவ்வி; புண்பட்டுப் போரில் மாண்டான்''

என்ற செய்தி எனப் புலம்பிக்கேட்டு புலவர் ஏறு;
கன்றொன்று பசுவிழந்த நிலைபெற்றுக் கலங்கி நின்றார்!

*

*** ''பொய்யாகியரோ! பொய்யா கியரோ!**
பாவடி யானை பரிசிலர்க்கு அருகாச்
சீர்கெழு நோன்றாள் அகுதை கண் தோன்றிய
பொன்புனை திகிரியின் பொய்யாகியரோ!
இரும்பாண் ஒக்கல் தலைவன், பெரும்பூண்
போர் அடுதானை, எவ்வி மார்பின்
எஃகு உறு விழுப்புண் பல என
வைகுறு விடியல், இயம்பிய குரலே.''

*

(புறநானூறு - பாடல் - 233
பாடியவர்: வெள்ளெருக்கிலையார்)

*

பொருள் விளக்கம் :


இரும்பாண் ஒக்கல் தலைவன் = பெரும்பாணர்கள் சுற்றத்திற்குத் தலைவன். எஃகுறு = வேல் தைத்த. வைகுறு = விடியற்காலை.

*

சான்று கூறும் சரித்திர வரிகள்!

ஈராயிரம் ஆண்டின் முன்னே
ஊரார் எல்லாம் ஒன்று கூடி
வழிகாட்டும் குழுக்கள் ஐந்தை
வாக்களித்துத் தேர்ந்தெடுத்தார்.

முடியாட்சிக் கொடிகட்டிப் பறந்தபோதும்
குடியாட்சி; சிற்றூர் பேரூர்களில்



குடவோலை முறையினுலே - நன்கு
நடைபெற்று, நற்பணி ஆற்றிற்றென்று,
மக்களாட்சி மாண்புதனை - புலவர்
மருதன் இளநாகனார் விரித்துரைக்கும்
அழகுதனைச் சுவைத்திடலாம்;
அகத்துறைப் பாடலிலே!
பிரிவுத் துயர்
பேதையின் புலம்பல்
அலர் தூற்றல்
மடல் ஊர்தல்
பசலை படர்தல்
பரத்தையின் வீடு சென்ற தலைவன்;
பாணனைக் கெஞ்சிக் கேட்டு-தன்
பத்தினியின் சினம் தணிக்கத் தூது விடல்
பாங்கனிடம், காதல் துயர் உரைத்தல்
பாசமிகு தோழியிடம், கண்ட கனு
பாதியிலே கலைந்த கதை கூறிக்
கண்ணீரைக் காதலியர் கடலாய்ப் பெருக்கல்
உண்ணுமல் உறங்காமல் கிடந்துழல்தல்

இரவுக் குறியிடத்து ஏங்கித் தவித்து
இன்னும் வரக்காணேனே என



இடையொடியச் சேவல் வரவுக்காக - அழகுப்
பெடையொன்று தவமிருத்தல்
இவையும் இன்னபிற இன்பத்துப்பால்
வகையும் இணைந்திருக்கும் அகத்துறையில்
இடையிடையே புறக்காட்சியாம் போர்க்காட்சி,
படைவீரர்தம் மனைமாட்சி, பகைவீழ்ச்சி
தலைதூக்கிப் பழந்தமிழர் வரலாற்றுத்
தன்மான முரசொலிக்கும்; தமிழர்
பண்பாட்டைத் தொகுத்தளிக்கும்!

இல்லக்கிளிதனைப் பிரிந்து செல்ல
மெல்ல இதழ் திறந்து விடை கேட்ட ஆளனிடம்
''செல்லாமை உண்டென்றால் எனக்குச் சொல்
அல்லால் நீ சென்றுதான் வருவாய் என்றால்
அப்போது நீ வரும் வேளை யாரிங்கே - உடலில்
ஆவி தாங்கியிருப்பாரோ அவரிடம் சொல்லிச் செல்'' என்று
அழுதழுது வீங்கிவிட்ட அவள் இமை இரண்டைத்
தடையரணைக் கருதித் தத்தளித்துத் தயங்கிச் சோர்ந்து
தையல்தனைப் பிரிந்து பொருளீட்டச் செல்லாமல் நின்றுவிட்ட
தனவணிகர் குடும்பத்துச் செல்வனொருவன்;
தான் கடந்து செலஇருந்த தடங் குறித்துத்
தனக்குள்ளே எண்ணிப் பார்த்த காட்சிதனைத்
தமிழாளும் புலவர்ஏறு மருதன் இளநாகனார்;
தாயகத்துப் பழைய வரலாற்றுப் பொன்னேடாய்த்
தருகின்றார்!

பாவைதனைப் பிரிந்து பொருளீட்ட - அவன்
பயணம் நடத்திட வேண்டிய வழியோ பெரும் பாலையாம்!
இடியுமிழ்ந்து வானம் ஆங்கே - ஒரு
துளி மழையும் வழங்காததாலே
குடி பெயர்ந்து மக்கள், கும்பியை நிரப்புதற்கு

கும்பல் கும்பலாய் ஓடிவிட;
கொதிக்கின்ற சுடுநிலத்தில் - வீரம்
கொப்பளிக்கும் படுகளத்தில்
பகைநாட்டுப் படையிரண்டு மோதிக்கொண்டு
தொகை தொகையாய் வீரர் பிணம் சிதறிக் கிடக்கும்.
அவர்தம் கச்சையினை விலக்கிக் கழுகும் பருந்தும்
அவற்றின் இச்சையெலாம் தீர வயிறுகளைக் கொத்தி
குடலை உருவியெடுத்துத் தம் குடலுக்கு இரையாக்கிக்
கொள்கின்ற கொடுமையினைப் பார்க்கும்போழ்து
உருவி எடுக்கின்ற வீரர் குடலுக்கு உவமையாக

ஊராட்சிக் குழு தேர்வுதனைப் புலவர்பிரான்
ஒப்பிட்டு உரைப்பதுதான் என்னே பொருத்தம்!

உலகிற்குத் தமிழர் நாட்டுப் பழஞ்சேதியொன்றை - இந்த
உவமையினுல் விளக்கும் நேர்த்தி அருமையினும்
அருமையன்றே!
ஊர்மக்கள் பொது மன்றில் ஒரு சேரக் கூடி நின்று
யார் யார் குழுவுக்கு உறுப்பினராய் வேண்டுமென்று
கயிறு கட்டிய குடமொன்றில் - தத்தம்
கருத்துக்களை ஓலைகளில் எழுதி வாக்களித்து,
முத்திரையிட்ட குடங்களையே, நடுவர் - மிகப்
பத்திரமாக வைத்திடுவர்; பின்னர்
ஆவணக் களரியர் எனும் அலுவலர் வந்து
அகற்றிடுவர் முத்திரையை - அதன்பின்
ஒவ்வோர் ஓலையாய்க் குடமிருந்து இழுத்து;
உறுப்பினர் தேர்வில் வென்றோர் யாரென
ஊரார் மத்தியில் எண்ணி அறிவிப்பர் - அக்குழு
ஊர்நலம் பேணிடப் பல உரிமைகள் கொண்டதுவாம்!

மருதன் இளநாகனர் இந்த மாண்புறு மரபினைத்தான்
மன்பதையின் எதிர்காலத் தலைமுறையார் உணர்வதற்கு,
சான்று கூறும் சரித்திர வரிகளாகத்
தோன்றுமாறு படைத்திட்டார்; சங்க இலக்கியத்தில்!

கழுகும் பருந்தும் களத்தில் மாண்ட
காளையின் உடலில் குடலை உருவுதல்;
கடமையாற்றும் ஊர்நலக் குழுவுக்குக்
குடத்தில் இட்ட வாக்குச்சீட்டாம் பனை ஓலைகளை,
கையை நுழைத்து உருவி எடுப்பது போல்
கண்முன் தெரிவதாய்க் கவிஞர் உரைக்கின்றார்!

அகப்பாட்டு ஒன்றுதான் எனினும் - இதில்
அகப்பட்ட செய்திதான், எத்தனை! எத்தனை!

கயல்விழியாள் கண்ணீரை நினைத்துப் பார்த்துக் கணவன்,
அயலூர் செல்வதையே நிறுத்திவிட்ட காதல் செய்தி!

விரோதிகளை வீழ்த்துகின்ற சேரமானின் தளபதியாம்
விரும்பிக் கள் பருகும் வீரனும் ''பிட்டன்'' என்பானின்
வேல்முனைபோல் என் விலா நோகச் செய்யும் - இவள்
விழிநீர் என்று வேதனையைக் கொட்டுகின்ற
வணிக இளைஞன் வாய்மொழி கொண்டே
அணிகலன் தமிழர்க்கு வீரமே என விளக்கும் அடுத்தொரு
செய்தி!

குறிஞ்சி முல்லையெனும் நிலங்களின் பகுதியே
திரிந்து பாலையாகும் மழையின்றி எனப் பிறிதோர் செய்தி!

பறவைகட்கு இரையாக உடல் அளித்துச் சாக நேரினும்;
பகை எதிர்க்கும் மானமொன்றே மறக்குல மகிமை எனப்
பறைசாற்றும் மற்றோர் செய்தி!

மன்னர்களின் ஆட்சியிலும் சிற்றூர் பேரூர் எலாம்
மக்களாட்சித் தத்துவத்தின் தொட்டிலாகத் திகழ்ந்ததென்று
மாத்தமிழர் பழங்காலப் பெருமை கூறி - நம்
மரபுவழிச் சிறப்புதனைச் சொல்லுவதோ; அனைத்தையும்
வெல்லுகின்ற அதி அற்புதச் செய்தி!
இத்தனைச் செய்தியுடன் இப்பாடல் தரும்
புத்தொளியால் பொங்குகின்ற பூரிப்புக்கோர் அளவுமுண்டோ?
நம்
இலக்கியச் செல்வத்துக்கோர் நிகராக நிற்பதற்கு
இவ்வுலகில் இனியுமோர் மொழிக்கு ஆற்றல்தான்
வாய்ப்பதுண்டோ?

*

* "".....
.....

இடிஉமிழ் வானம் நீங்கி யாங்கணும்
குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்
கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்,
பொறிகண்டு அழிக்கும் ஆவணமாக்களின்
உயிர் திறம் பெயர, நல்அமர்க் கடந்த,
தறுக ணாளர் குடந்தாஇத் தெறுவரச்
செஞ்செவி எருவை, அஞ்சுவர இருக்கும்
கல்அதர்க் கவலை போகின், சீறூர்ப்
புல்அரை இத்திப் புகர்படு நீழல்
எல்வளி அலைக்கும் இருள்கூர் மாலை,
வானவன் மறவன், வணங்குவில் தடக்கை
ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்
பொருந்தா மன்னர் அருஞ்சமத்து உயர்த்த
திருந்து இலை எஃகம் போன
அருந்துயர் தரும், இவள் பனிவார் கண்ணே!''

*

(அகநானூறு : பாடல் 77
பாடியவர் : மருதன் இளநாகனார்)

பொருள் விளக்கம் :

சுட்டுடை முதுபாழ் = சுட்டிக்காட்டக்கூடிய பழைய பாழ்நிலமான பாலை நிலம். கயிறு பிணிக் குழிசி = கயிற்றால் பிணிக்கப்பட்ட குடம். பொறி = முத்திரை.
ஆவணமாக்கள் = ஆவணக் களாரியர் எனும் அலுவலர்.
செஞ்செவி எருவை = சிறந்த செவிகளையுடைய கழுகு.
குடந்தாஅ இகுக்கும் = குடலை உருவி இழுக்கும்.
கல் அதர் கவலை = கற்கள் நிறைந்த வழிப்பாதை.
இத்திப் புகர்படு நீழல் = இத்தி மரத்தின் புள்ளிகள் பொருந்திய நிழல். வானவன் மறவன் = சேர மன்னன் தளபதி.
ஆஞ நறவு = கெடாத கள். எஃகம் = வேல்.
பனிவார்கண் = நீர் பொழியும் விழி.

*

பரிசப்பணம் வேண்டாம்... பரிசுப்பொருள் இதோ!

''முலை விலை'' என்று சொன்னால் சற்று முகம் சுளீப்பீர்!
முத்தமிழ் அகராதியில் அதற்குப் ''பரிசப்பணம்'' என்று
பொருள்!

முல்லை மலர்ப்பெண்ணை மருமகளாய்க் கொள்வதற்கு;
மூத்த தமிழ்க்குடிமக்கள் தருகின்ற தொகையைத்தான் -
பரிசப்பணம் என்பர்!

அக்கால வழக்கில் அதனை 'முலைவிலை' எனப் புகன்றார்
எனில்;
இக்காலத் தமிழர்க்கு அது விரசமாய்த் தோன்றுந்தான்!

மணப்பெண் இவள்தான் இவனுக்கென்று உறுதியாகத்
தேர்ந்தவுடன்,
பணமுடிப்புடன் பரிசம் போட்டு மணமகள் வீட்டாரிடம் -
பரிவுடன் வழங்கவேண்டும்!


கலித்தொகையில் முல்லைக்கலியில் ஒரு தகப்பன்; தன்
கட்டழகுப் பூங்கொடியைப் பரிசப் பணமின்றித் தருவதற்குத்

தயார் என்று தோள்தட்டி அறிவிக்கின்றனும்; அதனைத்
தமிழ்ப்புலவர் சோழன் நல்லுருத்திரனர் என்பார்;

சுவைபடச் சொல்லுவதைப் படிக்கும்போழ்து - பலாச்
சுளையினை வெல்லுகின்ற தித்திப்பை உணர்வோம் நாம்!

குத்திக் குடல் கிழித்துக் கொலை புரியும் கொடிய
கொம்புடைய காளைதனை அடக்குதற்குக் காளையவன்;

எத்தகைய உணர்வோடு ஈடுபட வேண்டுமென
முத்தனைய பெண்ணைப்பெற்ற அத்தந்தை கூறுகின்றான் கேளீர்!



''கொஞ்சி மகிழும் குமரியின் கொங்கையினை அவள்
காதலன்;
வஞ்சியே என வாரித் தழுவுதல்போல் - சிறிதும்
அஞ்சிடாமல் காளையின் கொம்பிடையே
தாவிடுவானேல்;
அட்டியில்லை அவனுக்கு என்பெண்ணைத் தருவதற்கு!
பரிசப்பணமென்று ஒரு காசு, தூசும் தேவையில்லை;
பரிசாக என்மகளை அடைவதற்கு அவனேதான்
தகுதியாவான்!''

கொம்பிரண்டைக் கண்டு குன்றுமல் குமையாமல்; - காதலியின்
இரு
கொங்கையிடைப் பாய்கின்ற இன்ப உணர்வுடனே -
விளைப்பதுதான் வீரமென்பதற்குக்

கல்லின்மேல் செதுக்கியுள்ள சான்றுக இன்றைக்கும்
கலித்தொகையின் முல்லைக்கலிப் பாடல்;

திகழ்கின்ற காட்சியினைக் காணுகின்றோம்! ஒரு தமிழனின்
திண்தோள் பகைவர்முன் சற்றுச் சாய்ந்திடிலோ - மிகமிக
நாணுகின்றோம்!

*

*** ''விலைவேண்டார் எம்மினத்து ஆயர் மகளிர்**
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்.....''

*

(கலித்தொகை - (முல்லைக்கலி) பாடல்: 3
பாடியவர்: சோழன் நல்லுருத்திரனார்)

*

பொருள் விளக்கம் :

கொலையேறு = கொலைவெறிகொண்ட காளைமாடு.
கோடு = கொம்பு.

*

உறவுடன் இணைந்து உயர்ந்து வாழ்க!

இயற்பெயர் தெரியாப்புலவர் எண்ணற்றோர் - சங்க
இலக்கியத்தில் செய்யுள் வடிவத்தில் வாழுகின்றார்!

இவர்களில் ஒருவர்க்கு ''ஓரேர் உழவர்'' எனப்பெயருண்டு!
இனிய காதலியை அடைவதற்குத் தவித்தோடும் தலைவனது;

இதயத்துடிப்பைக் குறுந்தொகைப் பாட்டொன்றில்
இவர் உவமை காட்டிக் கூறும் விதம் மிக அருமை!

நன்செய் புன்செய் நிலம் நல்ல மழைபெய்து நிறைந்த சமயம்
நாலைந்து ஏர்கொண்டு உழுது பயிர்நடுதற்கு இயலாமல்

ஓரேர் மட்டுமே உடையதோர் உழவன், கைபிசைந்து
உளம் துடித்துத் துவளுதல்போல்;

சீரார் காதலியை உடன் காண முடியாமல்
சிந்தை கலங்கி நின்றனும் அத்தலைவன்!

ஓரேர் உழவனை உவமைப்பொருளாக ஆக்கியதால்,
''ஓரேருழவர்'' என்றே இப்புலவர் பெயர் பெற்றார்!


உற்றார் உறவினர் பெற்றோர் எனத் தூயதமிழ்
கற்ற புலவருக்குச் சொந்தம் மிகவுண்டு!

நெடுநாளாய் இதயத்தில் ஒரு சுமை; அவரைக்
கடுமையாய் அழுத்தியதால் கவலை கொண்டார்!

''இன்பதுன்பம் மாறி மாறி வருகின்ற
இவ்வாழ்க்கையிலே
என்ன கண்டோம்? எதற்காக இந்த வாழ்வு?

அதோ! தோலையுரித்து மேல் கீழாய்ப் போட்டதுபோல்
அணுவளவு மாற்றமின்றிக் காட்சிதரும் களர்நிலத்தில்

வேடன் கை அம்புக்குச் சிக்காமல் விரைந்தோடி



வேகமாய் மறைந்து தப்பிவிட்ட தனியொரு
மானைப்பார்த்தால்

நானும் அதுபோலத் தனித்து வாழ்ந்து; வாழ்வின்
நலிவு பொலிவு என இரண்டும் மோதி நசுங்காமல்

தனிமரமாய்ச் சொந்தபந்தமின்றி
விடுவித்துக்கொண்டால்
இனிமையெனும் அமைதி சூழும்! இதயக்கனம் நீங்கும்!''

இவ்வாறு சிந்தித்து முடிவுக்கு வருவதற்குள் - புலவர்
இமையிரண்டும் நீர்துளிர்க்க எண்ணிப்பார்த்தார்;

''எனைநம்பி இருக்கின்றார் சுற்றத்தார் இல்லத்தார்
- அவரைத்
தனிவிடுத்து நான் மட்டும் தப்பிவிடல் நியாயமல்ல!

காலைப்பிணைத்து நிற்கும் உறவுடைய இக்கூட்டத்தை
நூலைக் கத்தரித்தல் போல் அறுத்துவிடல்
இயலாதென்று

கூடிவாழ்வதே ஏற்புடைய கொள்கை''யெனத் தமிழில்
பாடி மகிழ்ந்தார்; அதனைத் தேடியெடுத்துத்
தொகுத்தோர் வாழ்க; வாழ்கவே!

*

* **''அதள் எறிந்த தன்ன நெடுவெண் களரின்**
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல,
ஓடி உய்தலும் கூடும்மன்;
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே.''

*

(புறநானூறு : பாடல் : 193
பாடியவர் : ஒரேருழவர்)

பொருள் விளக்கம் :

அதள் = தோல். எறிந்தன்ன = மேல் கீழாய்ப் புரட்டி வைத்தது போல. நெடுவெண் களர் = நெடிய வெளிய களர் நிலம்.
ஆட்டும் புல்வாய் = துரத்தப்படும் கலைமான்.
ஒக்கல் வாழ்க்கை = சுற்றத்தோடு கூடி வாழுதல்.
தட்கும் = பிணைத்துத் தடுக்கும்.

*

கண்கண்ட சாட்சி உண்டோ ழி

''மணக்க மணக்க மலருது முல்லே - என்னே
மணந்ததாகச் சொன்னவர் இன்னும் வரவில்லே!

மணற்பரப்பில் செடிகொடி மறைவில் அவரென்மடியில்;
கணப்பொழுதும் அகலாதிரு கண்ணு என; நானவர் பிடியில்!

அணைத்து மகிழ்ந்து அளவிலா அன்பினைப் பொழிந்து; ஈருடல்
இணைத்துக் கிடந்து; இமையென அவரும் விழியென நானும்;

விளக்கிட முடியா இன்ப விருந்தினை அருந்தி;
விந்தைகள் ஆயிரம் புரிந்ததை மறந்து -

வேதனைத் தீயில் எனைக் கருக்கிடும் தலைவன் - இனியும்
சோதனை செய்தல் ஆகுமோ தோழி!

ஒருயிராய் நாங்களாகி உலகத்தை மறந்ததும் பொய்யா?
ஆருயிரே; உனைமணந்தேன் என அவர் உறுதியளித்ததும்
பொய்யா?


''உறுதி வழங்கியமைக்கு உண்டோ சாட்சியம்?
உரைத்திடுக!'' என நீ வினவுகின்றாய் தோழி - அங்கே

எனை அணைத்திருந்த அவரேதான் சாட்சி; அவர்
பனை வைரத்தோளில் நான் முகம் பதித்திருந்தபோது;

தினைத்தாள்போல் கால் கொண்ட நாரையொன்று -
தீனியாகக் கிடைக்காதோ ஆரைமீன் என்று;

ஓடுகின்ற நீரை உற்றுப்பார்த்தபடி நின்றதடி!
ஒருக்கால் அது எம்மைப் பார்த்திருந்தால் தவிர;

களவு மணம்புரிந்த மாட்சிக்கு, இல்லையடி;
கண்கண்ட மற்றோர் சாட்சி!''



என அழுதாள் தலைவி; தோழியின் கரம்பிடித்து
''என்னுயிரை விரைவில் அழைத்துவா!'' எனத்தொழுதாள்.

*

* ''யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங்கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே.''

*

(குறுந்தொகை : பாடல் : 25
பாடியவர் : கபிலர்)

பொருள் விளக்கம் :

ஒழுகுநீர் = ஓடும்நீர். ஆரல் = ஒருவகை மீன்.
தினைத்தாளன்ன சிறுபசுங் கால = தினையின் அடித் தண்டு போன்ற சிறிய பசுமையான கால் கொண்ட. குருகு = நாரை.
மணந்த ஞான்றே = களவு மணம் புரிந்தபோது.

*



தலையாலங்கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியன்,
தலைவணங்கான் பகைவர்க்கு; தலைதருவான் தமிழுக்கு!

வெற்றிபெற்றுப் போரில் வாகைசூடவில்லையெனில்;
கற்றறிவாளர் மாங்குடிமருதன் தலைமையில் சூழ்ந்த;

புலவர் பெருங்கூட்டம் பாடாதொழிக நான் ஆளுகின்ற
நிலவரையென்றே சூளுரைத்த தமிழ்மகன்; வீரத்திருமகன்!

'மதுரைக் காஞ்சி'யெனும் தமிழர் மாண்புகூறும் நூலொன்றை
மாங்குடி மருதனார் அவனுக்கென யாத்தளித்தார் என்றுரல்;
அஃது -

எட்டுத்திக்கும் அவன் வெற்றிமுரசுகொட்டி - மீனக்கொடி
கட்டிவாழ்ந்தான் என்ற வரலாற்றின் எடுத்துக்காட்டன்றே?

புறமுதுகிட்டுப் பகைவரை ஓடச்செய்யும்
போர்க்களம் புகுதலே புகழீட்டித் தருகின்ற வழியென்று;

எப்போதும் வாள்தூக்கி எதிரிகளை மோதிக்கொன்று;
தப்பாது வெற்றிமாலை குவித்துக் கொண்டு;

ஒப்பாரும் மிக்காரும் இல்லையெனப் பாண்டி மன்னன்
உயர்ந்து நின்றான் எனினும்; புலவர் பிரான் மருதனார்;

மறத்துறையில் வேந்தன் பொழுதெலாம் கழிப்பதையே மாற்றி,
அறத்துறையில் செயல்கள் பல தொய்வின்றி ஆற்றிட
வேண்டுமென்று;

மதுரைக் காஞ்சியினைப் பாடலுற்றார்; அந்தத் தேன்
மதுரக் காஞ்சியிலே ஓர்உவமை இரு காட்சி ஆடவிட்டார்!

மதம் பிடித்த யானையொன்று கட்டுத்தறியொடித்துக் காலால்
வதம் செய்தே பரிக்கோல்காரனைக் கொன்று; பாகனையும்
வீசியெறிந்து;

கம்பத்தை விடுத்துக் கரிய பாறையொன்று, உருண்டு
கண்மண் தெரியாமல் அனைத்தையுமே அழிப்பதுபோல்
செயல்படுமாம்!

மதயானையின் செய்கைக்கு உவமையாகப் பெரும்புலவர்;
மாங்குடி மருதனர் காட்டுகின்ற மற்றுமொரு காட்சியினை
இங்கு காண்போம்!

'பனை'யெனும் ஒருவகைப் பெரிய மீனினமும்,
பல்வகைச் சங்கினமும் உலவி, மேயும் கடலினிலே;

மரக்கலமொன்றில் கொடிய சூறைக்காற்று -
திடுக்கெனத் தாக்கி வலிய கயிற்றினை அறுத்து;

பாய்மரம் கிழித்து அதனை அடியுடன் முறித்து;
பலமிகு நங்கூரக் கல்லையும் பெயர்த்து வீழ்த்தித்தனது

பயங்கர மூச்சால் படுநாசம் விளைப்பதுபோல்
பதைத்துக் குதிக்குமாம் பாகனை மீறி யானையின் மதமும்!

சங்கின் ஒலிகள் முன்னும் பின்னும் முழங்கிடும்போது,
பொங்கும் மதத்தால் சுழலும் யானையாய்ச் சீறுமாம், சூறையும்!

ஓர் உவமை இரு காட்சி என ஒப்பிட்டுக் கூறுகின்ற
கற்பனையின் அருமை;
ஓங்குபுகழ் மாங்குடி மருதனரின் தமிழாய்ந்த திறமைக்கோர்
பெருமை!

*

*** ''பனை மீன் வழங்கும் வளைமேய் பரப்பின்**
வீங்குபிணி நோன்கயி றரீஇ யிதைபுடையூக்
கூம்புதல் முருங்க எற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெஞ்சுழிப் பட்ட நாவாய் போல
இருதலைப் பணில மார்ப்பஞ் சினஞ் சிறந்து
கோலார்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணது காழ்சாய்த்துக்
கந்து நீத் துழிதருங் கடாஅ யானையும்.....''

*

(பத்துப்பாட்டு - மதுரைக்காஞ்சி)
(375 முதல் 383 முடிய)
(பாடியவர்: மாங்குடி மருதனர்)

*



பொருள் விளக்கம் :

பனைமீன் = ஒரு வகைப் பெரிய மீன். வளை = சங்கு.
வீங்குபிணி = இறுகிய பிணைப்பு. நோன்கயிறு அரீஇ = வலிய கயிற்றை அறுத்து. கல்பொருது = நங்கூரக்கல்லுடன் மோதி.
நாவாய் = மரக்கலம். பணிலம் = சங்கு.
கோலோர் = பரிக்கோல்காரன். மேலோர் = யானைப்பாகர்.
வன்றொடர் = காலில் கட்டிய சங்கிலி. காழ் = கட்டுத்தறி.
கந்துநீத்து = கம்பத்தை விட்டகன்று.
உழிதரும் கடாஅ யானை = சுழலும் மதங்கொண்ட யானை.

*

உச்சிக்குச் சென்ற நொச்சி!

உற்றூர் உறவினர் பெற்றோர் அறியாமல்
விற்புருவ மங்கையாள் வேல்பிடித்த வீரனுடன்;

பொற்றுமரைக் குளத்தருகே எழிற்பொழிலிடையே;
கற்பாள் களவு இன்பம் களிப்போடு - பின்னர்;

களம் காணச் சென்ற அந்த வீரன் இன்னும் - அக்
காதலியைக் காணத் திரும்பி வரவில்லை என்பதாலே,

கனவு பல கண்டு கண்ணீர் மிகப் பெருக்கிக்கொண்டு
நினைவு சிதறி நிற்கும் நிலைபார்த்து நெஞ்சு நெகிழ்ந்து;

வீணைமொழியாளை வெறிபிடித்து வாட்டுதென்று
வெறியாட்டு நடத்திவைத்து முருகக் கடவுளையே வழிபடுவர்!

அறியாப்பெண் அவள் என்று பெற்றோர்கள்; அவள்மனம்
அறியாத காரணத்தால் வெறியாட்டு நடத்துவதை;

கவிச்சரமாய்த் தொகுத்தளித்த கவிப்பெருமாட்டி
காமக்காணியாரை வெறிபாடிய காமக்காணியார் என
அழைப்பர்!

களம்பட்ட காளையொருவனைப் புகழ்ந்தேத்தி அந்தக்
காமக்காணியார் பாடிய புறப்பாடல் ஒன்றுண்டு!

போருக்குச் சென்ற புலிப்போத்து நிகர் வீரன் - தன்
மாருக்குள் புகுந்த ஈட்டியுடன் மாண்டு கிடந்தான்.

கச்சணிந்து, கவசம்பூண்டு, கட்கமேந்திச் சென்றபோது
நொச்சிமாலைச் சின்னத்தையும் அணிந்து சென்றிருந்தான்.

அமர்க்களத்தில் அடுக்கடுக்காய் வீழ்ந்துள்ள பிணங்கள் தின்ன,
அகன்ற வாய்ப் பருந்துகளும் வட்டமிட்டுச் சூழ்ந்தபோது;

அவன் அணிந்திருந்த நொச்சிமாலை, குருதியில் நனைந்ததாலே;
அதனையும் குடல் என்று கருதிப் பருந்து தூக்கிக்கொண்டு;

ஆகாயத்தில் பறந்திட்ட காட்சியினைக் கண்டபோது;
அஞ்சாநெஞ்சுடை வீரன் அணிந்திட்ட காரணத்தால் அன்றே



துச்சமென உயிரைக் கருதிப் போரில் வீழ்ந்தவனின்
நொச்சி மாலைக்கும் இத்துணை உயர்வு கிடைத்ததென்று;

மெச்சிப் புகழ்ந்து பாடி - அதைப்படிக்கும் நமக்கெல்லாம்;
உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரு வீர உணர்வை

ஊட்டுகின்றார் கவிஞர்! இதனை;
உள்ளத்தில் பதிய வைப்போம்!
உலகறியப் போற்றி நிற்போம்!

*

*** "..... இனியே**
வெருவரு குருதியோடு மயங்கி, உருவு கரந்து,
ஒறுவாய்ப் பட்ட தெரியல் ஊன் செத்துப்
பருந்துகொண்டு உகப்பயாம் கண்டனம்
மறம்புகல் மைந்தன் மலைந்த மாறே;"

*

(புறநானூறு - பாடல் - 271
பாடியவர்: வெறிபாடிய காமக்காணியார்)

*

பொருள் விளக்கம் :

இனியே = இப்பொழுதோ. உருவுகரந்து = உருமாறி.
ஒறு = சிதைந்த. தெரியல் = நொச்சிமாலை.
ஊன்செத்து = ஊனென்று நினைத்து.
உகப்ப = உயரக் கொண்டுபோக.
மலைந்தமாறு = அணிந்திருந்ததால்.


*

பாறையில் உருகுது பசு வெண்ணெய்!

''அன்புள்ளம் கொண்டவனே! அருமை மிகு நண்பனே!
என்புருக வாடுகின்றேன் நான் என்று
புன்முறுவல் பூத்தபடி நீ என்னைத்
துன்புறுத்தும் நோய்தன்னை அறியாமல்
இடித்துரைத்து ஏகடியம் புரிகின்றாய்!
வெடித்து மணம் கமழுகின்ற முல்லைப் பூ
அடுக்கி வைத்த பல்வரிசைப் பைந்தொடியால்
துடித்துப் போய்த் துவளுகின்றேன் தோழா''; என்று
தோள் மீது கை போட்டுக் கேலி செய்த
'தூயன்' எனும் நண்பனிடம் தொகுத்துரைத்தான்
வாள் கொண்டு வையத்தைக் கலக்குகின்ற
''வணங்காமுடி'' யென்ற பெருவீரன்!

''வண்டு முத்தமிடுகின்ற மலர்க்காட்டில்;
வன விலங்கு கூடியாடும் மலைமுகட்டில் -
நண்டுகளும் பிணைந்திருக்கும் கடற்கரையில்
நாலு கை நாலு கால் இடம் மாற்றி நல்லிதழ்த்தேன்
மொண்டு குடிக்கின்ற காதலர்கள் இன்பமாய்க்
கூடுவதும் ஊடுவதும் பின்னர் பிரிவுத் துன்பத்தால்
வாடுவதும் இயற்கை தானே! பிரிந்தபின் கூடி
ஆடுவதும் பாடுவதும் உண்டு தானே! இதற்கேன்
இரும்படிக்கும் உலையருகில் தவிக்கின்ற
எறும்பு போல் இதயத்தை நடுங்க விடுகின்றாய்?
அமைதி பெறு!'' என்றுரைத்த நண்பனது கரம்பிடித்து
அருவியினைக் கண்ணில் பொழிந்தவாறு; அவனுரைத்தான்!

''ஆருயிர்த் தோழா கேள்! அவளும் நானும்
அமுதும் தேனும் என்றுரைக்க மாட்டேன்;
அளவுமீறின் அதுவும் தெவிட்டிவிடும் என்பதாலே!
அந்தத் தெவிட்டாத இன்பத்திற்கோர் உவமை
எந்த மொழியில் தேடினும் கிடைக்கா தென்பேன்!...
மரத்திலேறிச் சிறுவன் ஒருவன் கிளையில் தாவி
மாங்கனியைப் பறித்தான் பார்த்தேன்; என்
கரத்தில் தந்த மாங்கனியை; தந்த மரமே
திரும்ப எடுத்துச் சென்றது ஏனோ? ஏங்குகின்றேன்!



மானைப் போல் ஒரு சிறுமி குளத்தில் - கெண்டை
மீனைப் பிடித்து ஓடினுள் வீட்டுக்கு; உற்று நோக்கி நின்றேன்
என்னிதழில் சிக்கிய சேல் கெண்டை யிரண்டும்
எனை விடுத்துத் தாமரைக் குளத்தில் பாய்ந்தது ஏனோ?
பதைக்கின்றேன்!''

வருந்தி யழும் வணங்காமுடி வீரனது மனம்
திருந்துவது கடினமென்று உணர்ந்தாலும்
தூயன்; தொடர்ந்துரைத்தான் அறிவுரைகள்!

''மாய மகள் அல்ல அவள் மறைந்துவிட!
மறந்திடாதே; மாயமென ஒன்றுமில்லை!
மனிதகுல மணிவிளக்கு; உன்னை நாடி வரப்போகும்
மனை விளக்கு! மங்கையர் தம் குலவிளக்கு!
உறவினர் தம் ஊருக்குச் சென்றுள்ள செய்தி
உனக்கு அவள் சொல்லி அனுப்பியிருந்தும்
கடலாழத்தில் வீழ்ந்து விட்ட காசு போல் - நும் காதல்
காணுமற் போயிற்றென்று கதறுவானேன்?
வெட்டுக்கிளிக் கூட்டம் போல் பறந்து வரும்
வேல்களையும் கணைகளையும் களத்தினிலே - கைகளாலே
தட்டிவிடும் வீரமிகு தளபதி நீ இவ்வாறு
பட்டுப்போன மரம் போலப் பயனற்று நிற்பதுவோ?
நன்றல்ல இஃது! கவலை விடுக! புயலினூடே
நடுக் கடல் படகாக ஆடவிடாதே நெஞ்சத்தை!''

வாஞ்சை மிகு தோழனது ஆறுதல் வார்த்தை மழை;
வண்ண மயிலைப் பிரிந்திருக்கும் வணங்காமுடியின்
காதல் அக்கினி மலையை ஈரமாக்கி அணைக்கவில்லை!
காதல் நெருப்பில் மெழுகாகி உருகலானான்!
குமுறும் அவன் காதல் உள்ளம் படும்பாட்டைக்
குறுந்தொகையில் வெள்ளிவீதியார் எனும் பெண்புலவர்
உவமை யொன்றால் விளக்குகின்றார் - தமிழின்
பெருமை கருதி வியக்கின்றோம் நாம்!
இன்று பிரிந்தவள் நாளை வருவாள் என்று
இடித்துரைத்துத் தேற்றிய நண்பனிடம்
குன்றத் தோளுடையான் கூறிய உவமையை
வென்றிட வேறோர் உவமையும் உளதோ?

* ''அறிவுரை நல்கிடும் அன்பு நண்பனே!
அவ்வுரை என்னுடலை உருகாமல்
தடுத்திடும் தன்மை கொண்டதாயின்
தயங்காமல் ஏற்றிடுவேன்!

அவ்வாறு எனைக் காத்திடும் வலிமை
அவ்வுரைக்கு உளதாயின் நன்றென்பேன்!
கதிரோனின் வெப்பம் தகிக்கும்
கடும்பாறை யொன்றில்
கையில்லாத முடவனும் - பேச
வாயில்லாத ஊமையுமான ஒருவன்
உருகிக் கொண்டிருக்கும் பசு வெண்ணெய்தனைக்
காப்பாற்ற முடியாத நிலையில்
பாறையில் பாழாகும் வெண்ணெயினைப்
பாதுகாக்க வாரீர் எனக் கூவவும் முடியாமல்
பாய்ந்து சென்று எடுத்தேகிப்
பத்திரப்படுத்தவும் இயலாமல்
கண்கொண்டு பார்க்கும் காவலனுக மட்டும்
நின்று கொண்டிருக்கும் பரிதாபத்தைப் போல்
நீயும்; காதல் பிரிவால் உருகிக் கொண்டிருக்கும்
- எனக்கு
நீண்ட அறிவுரைகளை நீட்டி முழக்குகின்றாய்!''

வில்லேருழவன் - வீரர் திலகம் - வணங்காமுடியோன்
விரகதாபத்தால் வெந்திடும் இதயத்தில் இனியும்
வேல் எறிதல் போல் அறிவுரை கூடாதென்றுணர்ந்து
விடை பெற்றுப் போய்விட்டான் தூயன் எனும் தோழன்!

*

*** ''இடிக்கும் கேளிர்! நும்குறை ஆகம்**
நிறுக்கல் ஆற்றிலே நன்றுமற் றில்ல;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று, இந்நோய்; நோன்று கொளற்கு அரிதே''

*

(குறுந்தொகை : பாடல் : 58
பாடியவர் : வெள்ளிவீதியார்)

பொருள் விளக்கம் :

நுங்குறை = உமது அறிவுரை. ஆகம் = உடல்.
நிறுக்கல் = நிறுத்துதல். வெவ்வறை மருங்கு = வெப்பம் நிறைந்த பாறை. கையில் ஊமன் = கையில்லாத ஒரு ஊமையன்.
உணங்கல் = உருகியழிதல். நோன்றுகொளல் = பொறுத்துக் கொள்ளுதல்.

*

தினைக் கதிரும் துதிக்கையும்!

பட்டால் நெய்திட்ட எழில் மேனிப் பாவை
எட்டாத உயரப் பரண் ஏறிச் சென்று

தினைப்புனம் காக்கும் செய்தியை அறிந்து
பனைமரத்தோளான் பறந்தானங்கு!

தொட்டால் சுவைக்கும் தும்பைப்பூ மங்கை - இரு
மொட்டால் அவனை உலுக்கியே நின்றுள்!

கவண் எறிந்து அவள் பறவைகள் துரத்திடும் அழகை
கண்கொட்டாது பார்த்தவன் அயர்ந்து நின்றுன்!

கயல்விழி அவனைக் கண்டுகொள்ளாமல் - தினைக்
கதிர்களைக் காப்பதில் கருத்தாயிருந்தாள்!

எத்தனையோ எண்ணிவந்தான் தலைவன்
முத்தனையாள் முகம்கொடுத்துப் பேசவில்லை - கரும்புச்

சத்தனைய இதழ் மட்டும் சுவைத்துப் போக
பக்தனைப் போல் வந்து நின்றுன்; பயனே இல்லை!


பறவையோட்டும் பெண்ணின் தோழியும் ஆங்கே,
பக்கத்தில் வந்துநின்று பக்குவமாய் அவனிடம்

''உறவை வளர்க்க விரும்பி வருகின்ற தலைவா! ஞாயிறு
மறைவுக்குப்பின் வந்தால் அவளை சந்திக்கலாம்'' என்றுள்.

எண்ணியவுடனே அவள் தளிருடல் தழுவிட இயலாமல்
திண்ணியனும் தலைவன்; தினைக்கதிர் போல் தலைசாய்ந்தான்!

குறிஞ்சிப்பாட்டெழுதிய கபிலர் எனும் கவிஞர்பிரான்
குனிந்திருக்கும் தினைக்கதிருக்கும் ஓர் உவமை சொல்வார்!

நெல்கொள் நெடிய மூங்கில் உச்சிதனை வளைத்து;
நெரித்து அதனைத் தின்பதற்கு முயன்று முடியாத யானை;



மேல்நோக்கிய துதிக்கையினை இறக்கித் தனது
பால்போலும் முத்துப்போலும் வெளுத்த தந்தத்தின்மேல்;

தொங்கவிட்டுக் கொண்டிருந்ததுபோல்
தோன்றிற்றும் சாய்ந்து முற்றிய தினைக்கதிர்! அந்தக்

காட்சியினை நினைவூட்டுவதைப் போலத்தான்
காதல்கொண்ட தலைவன் காதலியைக் கண்டவுடன்;

கட்டித் தழுவிக் கணக்கின்றி முத்தம் கொடுத்தும் பறித்தும்
களிப்பில் மிதக்கவந்து; அது நடவாத கவலையினால் - தினைக்

கதிர்போலத் தலைசாய்ந்தான் என்றும் - அக்கதிரோ;
களிறின் துதிக்கைபோல வளைந்து சாய்ந்ததென்றும்,

கபிலர்பிரான் செய்துள்ள கற்பனையில்தான் என்ன இன்பம்!
காலத்தை வெல்லுகின்ற தமிழுக்கே உரித்தான தனி இன்பம்!

*

*** ''நெற்கொள் நெடுவெதிர்க் கணந்த யானை**
முத்தார் மருப்பின் இறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோட் சிறுதினைப் படுபுள் ஒப்பி,,
ஏற்பட வருதியர் ... ...''

*

(பத்துப்பாட்டு
(குறிஞ்சிப்பாட்டில் 35 வது வரி முதல் 39 வது முடிய)
பாடியவர் : கபிலர்)

பொருள் விளக்கம் :

நெற்கொள் = நெல்லைத் தன்னிடம் கொண்ட.
நெடுவெதிர் = நீண்டுயர்ந்த மூங்கில். அணந்த = மேல்நோக்கி.
மருப்பு = தந்தம். இறங்கு கை கடுப்ப = இறக்கிப்போட்டு
வளைந்த துதிக்கை. துய் = மென்மை. புனிறுதீர் = பிஞ்சுத்
தன்மை நீங்கிய. குரல் = கதிர். படு = மிகுந்த. புள் = பறவை.
ஒப்பி = ஓட்டி. எல் = ஞாயிறு. பட = மறைய.
வருதியர் = வரக்கூறுதல்.

*



நிறைவுக்கிடையே ஒரு குறையும் உளதே!

இசைப்பாடல்
இராகம் : கரகரப்பிரியா
தாளம் : திசிரஆதி

(எடுப்பு)

மாடங்கள் கூடங்கள் இருந்தும் - அதில்
மந்தமாருதம் மணம் வீசித் தவழ்ந்தும்
மனதுக்கோர் நிம்மதியில்லை;
மகிழ்ந்து கூத்தாட வழியும் இல்லை!

(மனதுக்கோர்)

(தொகுப்பு-1)

மாஞ்சோலை பூஞ்சோலை இருந்தும் - அங்கே
மானினம் மயிலினம் மேய்ந்து திரிந்தும்
மனதுக்கோர் நிம்மதியில்லை;
மகிழ்ந்து கூத்தாட வழியும் இல்லை!

(தொகுப்பு-2)


மாணிக்கம் முத்து பவளங்கள் இருந்தும்
மரகதம் பச்சை மணியெல்லாம் குவிந்தும்
மனதுக்கோர் நிம்மதியில்லை;
மகிழ்ந்து கூத்தாட வழியும் இல்லை!

(தொகுப்பு-3)

மஞ்சத்தில் மல்லிகை பரப்பி இருந்தும்
மருக்கொழுந்து புனுகு சந்தனம் மணந்தும்
மனதுக்கோர் நிம்மதியில்லை;
மகிழ்ந்து கூத்தாட வழியும் இல்லை!

(தொகுப்பு - 4)

மலைபோல செல்வம் வளர்ந்திருந்தும் - எங்கள்
மாளிகைத் தாழ்வாரம் விருந்தால் நிறைந்தும்
மனதுக்கோர் நிம்மதியில்லை;
மகிழ்ந்து கூத்தாட வழியும் இல்லை!



(முடிப்பு)

குறுகுறுவென நடந்து வந்தும்
குறும்புகள் செய்து கொஞ்சி மகிழ்ந்தும்
இருகை நீட்டி இட்டும் தொட்டும்
கிறுகிறுவென சுற்றியும் பற்றியும்
இதழால் கவ்வியும் இழுத்தும் கடித்தும்
இளம் விரல்களால் துழாவியும் பிடித்தும்
நெய்யுடைச் சோற்றை நெடுக இறைத்தும்
கையது கொட்டி களுக்கெனச் சிரித்தும்
மடிதனில் ஆடி முடிதலை அவிழ்த்தும்
மாதுலைக் கனியில் முகத்தினைப் புதைத்தும்
மங்கையென்னைத் தாயென்று அழைத்திட
மகவொன்று கருவில் அரும்பிடும் வரையில்
மனதுக்கோர் நிம்மதியில்லை;
மகிழ்ந்து கூத்தாட வழியும் இல்லை!

*

*** ''படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்**
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே''


*

(புறநானூறு பாடல் : 188
பாடியவர் : பாண்டியன் அறிவுடை நம்பி)

பொருள் விளக்கம் :

படைப்பு = செல்வம். படைத்து = உருவாக்கி.
உடைபெரும் செல்வர் = உடைமைமிக்க செல்வத்தையுடையவர்.
இடைப்பட = அதற்கிடையே. துழந்தும் = துழாவியும்.
அடிசில் = சோறு. விதிர்த்தல் = இறைத்தல்.
பயக்குறை = இன்பமெனும் இன்றியமையாப் பொருள்.

*



இசைப்பாடல் :
இராகம் : கல்யாணி
தாளம் : ஆதி.

(எடுப்பு)

மணப்பதற்கு மறுப்பெதற்குச் சொன்னாள்?
மடலேறி வந்து மாமன்றத்தில் கேட்கவா? எனை;
மணப்பதற்கு மறுப்பெதற்குச் சொன்னாள்? நான்;
மடலேறி வந்து மாமன்றத்தில் கேட்கவா?

(மணப்பதற்கு)

(தொடுப்பு - 1)

நெஞ்சார்ந்த காதலுடன் நெடுந்தொலைவு தேடி,
நீர்சூழ்ந்த பள்ளங்களில் விழுந்தெழுந்து ஓடி,
பஞ்சாய்க் கோரைகளைப் பறித்தெடுத்து வந்தேன்!
பாவையொன்று அவளைப்போல் நான் செய்து தந்தேன்!

(மணப்பதற்கு)

(தொடுப்பு - 2)


மூங்கிலனைய தோளும் முழுநிலவு முகமும்
முல்லையினுல் பல்லும் முத்துதிர்க்கும் சொல்லும்
பாங்கியுந்தன் தலைவியாம் எந்தன் காதலியைப் போல்
பாவையினைப் படைத்த விதம் சொல்லுகிறேன் கேள்!

(மணப்பதற்கு)

(தொடுப்பு - 3)

பருவமயில் அருகமர்ந்து அவள் மேனியெழில் படித்தேன்
உருவமொன்று அவளைப்போல் செய்துடனே முடித்தேன்
பாவையவள் பெயரையே நாளெல்லாம் துதித்தேன்
படமாக உள்ளத்தில் அவளைத்தான் பதித்தேன்.

(மணப்பதற்கு)



(தொடுப்பு - 4)

மங்கையவள் மடிமீது சாய்ந்ததுதான் பொய்யா?
மலரணையில் இன்பத்தில் தோய்ந்ததுதான் பொய்யா? —
அவள்;
மார்பகத்தில் நான் தொய்யில் எழுதியதுதான் பொய்யா?
மற்றவர்க்குத் தெரியாமல் நடந்ததெல்லாம் பொய்யா?
(மணப்பதற்கு)

(முடிப்பு)

அடலேறு நான் மடலேறி வருவேன் அவள்
உடலோடு உறவாடியது அனைத்தையும் சொல்வேன்
உலகத்தை ஈடாகத் தருகின்றார் எனினும்
உளத்தினிலே இருப்பவளை இழப்பதற்குத் துணியேன்!
செங்கோன்மை நியாயத்தைக் கூறட்டும் — அந்தச்
செந்தமிழாள் எனக்கென்றே ஆகட்டும்!
(மணப்பதற்கு)

*

*** ''பணைத்தோட் குறுமகள் பாவை தை இயும்**
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும், மற்று இவள்
உருத்து எழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்,
முறையுடை அரசன் செங்கோல் அவையத்து
யான்தற் கடவின் யாங்குஆ வதுகொல்?
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானே — இவ் அழுங்கல் ஊரே!''


*

(குறுந்தொகை பாடல் : 276
பாடியவர் : கோழிக்கொற்றன்)

பொருள் விளக்கம் :

மடலேறுதல் = காதல். தலைவியை அடைதல் வேண்டிப் பனை மடலினால் ஆன குதிரையில் காதல் தலைவன் ஏறி ஊர்தல்.
பஞ்சாய்க் கோரை = ஒரு வகையான கோரைப்புல்.
தொய்யில் = மகளிர் தனங்களில் சந்தனக் குழம்பால் எழுதுகிற கோலம். பணை = மூங்கில். தை இயும் = செய்து தந்தும்.
யான்தற் கடவின் = நான் அவளைக் கேட்டால்.
பாவை = பதுமை, பெண்.

*



(ஏற்ற இசையில் பாடுக)

(எடுப்பு)

பல்லியின் சொல்லுக்கு நிச்சயம் பலனுண்டு — இதைப்
பகுத்தறிவாளர் மறுப்பார் எனினும்
பல்லியின் சொல்லுக்கு நிச்சயம் பலனுண்டு!

(தொடுப்பு) (1)

எல்லையற்ற கவலை இனியென் தலைவிக்கு எதற்காக?
தொல்லையை நீக்கிடத் துணைவர் வருவார் விரைவாக! - இந்தத்
தோழியை நினைத்து வாழ்த்திடுவாய் அதற்காக!
ஆழிபோல் இன்பம் காத்திருக்குதுனக்காக!

(பல்லியின் சொல்லுக்கு)

(தொடுப்பு) (2)

பாடுபட்டுப் பொருள் தேடப் பயணம் தொடர்ந்து
காடு; பட்டுப்போன கொடும் பாலையில் நடந்து
கூடுவிட்டுப்போன ஆவிபோல — உன்னை
வாடவிட்டுப் போனவர்; வந்திடுவார் இன்னே!

(பல்லியின் சொல்லுக்கு)

(தொடுப்பு) (3)

மூடநம்பிக்கையில் உனை மூழ்கடிக்க — நான்
நாடகம் ஆடுவதாய் நினைக்காதே! உன்
எழில் நிலா முகத்தை; இமையுடைத்துப்
பொழிகின்ற கண்ணீரால் நனைக்காதே!

(பல்லியின் சொல்லுக்கு)

(தொடுப்பு) (4)

பாலையில் கள்ளிக்காடுகள் பல உண்டாம் — ஆங்கு
பல்லிகள் பல துள்ளி ஓடுதல் உண்டாம் — அதில்
ஆணென்று பெண்ணைக் கூடிடக் கொண்டதாம் ஆசை!



அதற்காகவே அது எழுப்பியதாம் காதல் ஓசை!
(பல்லியின் சொல்லுக்கு)

(தொகையறு)

விரல் நகத்தால் அம்பின் கூர்மையை நெருடி
வேடனொருவன் அதைச் சரிபார்க்கும் வேளை
எழுந்திடும் ''டிக் டிக்'' ஓசையைப் போலே — காதில்
விழுந்திடும் அந்தப் பல்லியின் ஓசை; அதைக்
கேட்டதும் உன் தலைவர்க்குப் பிறந்திடும் ஆசை; இந்த
வீணையை
மீட்டிட வந்தேனென்று முறுக்குவார் இளமீசை!
(பல்லியின் சொல்லுக்கு)

*

*** ''உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்**
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளியம் காடு இறந் தோரே''

*

(குறுந்தொகை பாடல் : 16
பாடியவர் : பாலைபாடிய பெருங்கடுங்கோ)

பொருள் விளக்கம் :

உள்ளார் கொல்லோ = நினைக்காதிருப்பாரா?
பொன்புனை = இரும்பாலான. பகழி = அம்பு. செப்பம்
கொண்மார் = சரிசெய்யும் பொருட்டு. உகிர்நுதி = நகத்து நுனி.
பயிர் = ஒலிக்குறிப்பு. காடு இறந்தோர் = காட்டைக் கடந்தோர்.

*



இசைப்பாடல் :
இராகம் : சங்கராபரணம்
தாளம் : திசிரஆதி

(எடுப்பு)

''செந்தமிழே என் செல்வமே உயிரே கேளாய்
சிந்தை கலங்கி விழியினே வீசாதே வாளாய்
இன்று போய் நாளை வருகிறேன் கலங்காதே வீணாய்''
என்று சொன்னவர் ஏன் வரவில்லை இத்தனை நாளாய்?

(செந்தமிழே)

(தொடுப்பு 1)

கண்களில் புத்தொளி பிறக்கும் அவர் வந்திருந்தால்
கவலைகள் நொடியினில் பறக்கும் அதைத் தந்திருந்தால்
எண்ணிலா இன்பங்கள் பூக்களாய் மணக்கும்;
எழுதாக் காவியப் பாக்களாய் முழக்கும்!

(செந்தமிழே)

(முடிப்பு 1)


அன்பே என்பார்; இதயம் குளிரும்!
அள்ளி உண்பார்; உதயம் மலரும்!
ஆவி நிகர்த்தவர் அருகில் இருந்தால் எனக்கு மருந்தாவார்;
தாவி அணைத்திடும்போது அவர்க்கு நான் விருந்தாவேன்!

(செந்தமிழே)

(முடிப்பு 2)

பசலையெனும் பாழும் நோய் படர்ந்தால்
பாவை நான் படும் பாடு; கடும் புயலில்
பஞ்சுதான் படுமோ? எனக்கு
என்றுதான் கவலை விடுமோ?

(செந்தமிழே)



(தொகையரு)

தாகமெடுத்துப் பருகிடக் கேணியின் நீரைக் கைகளால்
மொண்டு குடித்திட முனைந்திடும்போது
வேகமாய்ப் பாசி விலகியே செல்லும்; பின்னர்
விரைந்து மீண்டும் கூடியே கொள்ளும்!
அதுபோல் அவர் அருகிருக்கும்போது அகன்றிடும் பசலை!
அவர் சற்றுப் பிரிந்தவுடன் - படர்ந்தே தழுவிடும் உடலை!
(செந்தமிழே)

*

* **''ஊர்உண் கேணி உண்டுறைத் தொக்க**
பாசி அற்றே பசலை — காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி,
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே''

*

(குறுந்தொகை : பாடல் 399
பாடியவர் : பரணர்)

பொருள் விளக்கம் :

தொடுவுழித் தொடுவுழி = தீண்டுந்தோறும்
விடுவுழி விடுவுழி = பிரியுந் தோறும்
பாசி அற்று = பாசியைப் போன்றது.

*

ஒருத்தி மட்டும் உறங்கவில்லை!

இசைப்பாடல்
இராகம் : அரி காம்போதி
தாளம் : திசிரம் ஆதி

(எடுப்பு)

ஊர் உறங்கும் வேளையிலே - நான்
ஒருத்தி மட்டும் உறங்கவில்லை!
உண்ணக் கொடுத்த பழச்சுளைகள்
உதட்டைத் தாண்டி இறங்கவில்லை!

(தொடுப்பு -1)


கதிர் உறங்கும்! கருமுகில் மெத்தையிலே
கண்ணயர்ந்து நிலவுகூட சற்றுறங்கும்!
காசினியில் உயிரினங்கள் அனைத்தும் உறங்கும்,
மாசில் வீணையும் என்விரல் படாது வீட்டில் உறங்கும்!
ஊர் உறங்கும் வேளையிலே - நான்
ஒருத்தி மட்டும் உறங்கவில்லை!

(தொடுப்பு -2)

அன்றில் பறவையினம் புன்னை மரத்தில் உறங்கும்
அலைமோதிச் சிதறி அரும்பிய நீர்ப்பரப்பும்
ஆழ்கடலோரம் உறங்கும்!
சென்றுன் எனைப் பிரிந்தென்று சிந்தை மிக நோகும்
செந்தாமரை இமைகள் மூடமுடியாமல் போகும்!
ஊர் உறங்கும் வேளையிலே - நான்
ஒருத்தி மட்டும் உறங்கவில்லை!

(முடிப்பு)

வரம்பொன்று வேண்டுமடி காதலுக்கென்றார்
வராமலா போய்விடுவான் உன் தலைவனென்றார்.
'சுள்' என்று என்மீது சுற்றத்தார் காய்ந்து விழுந்தார்.
நள்ளிரவில் அவர்கள்கூட நன்றாகத்தான் உறங்குகின்றார்!
ஊர் உறங்கும் வேளையிலே - நான்
ஒருத்தி மட்டும் உறங்கவில்லை!



உண்ணக் கொடுத்த பழச்சுளைகள்
உதட்டைத் தாண்டி இறங்கவில்லை!

*

குறுந்தொகைப் பாடல்கள்

* ''அதுகொல், தோழி! காமநோயே
வதி குருகு உறங்கும் இன்நிழற்புன்னை,
உடை திரைத் திவலை அரும்பும் தீநீர்,
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல் இதழ் உண்கண் பாடுஒல் லாவே?''

*

(பாடியவர் : நரிவெரூஉத் தலையார்
பாடல் : 5)

* ''நள்ளென் றற்றே யாமம்; சொல் அவிந்து
இனிது அடங்கினரே, மாக்கள், முனிவு இன்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர் யான் துஞ்சா தேனே''

*

(பாடியவர் : பதுமனார்
பாடல் : 6)

பொருள் விளக்கம் :

வதி = தங்கியுள்ள: குருகு = அன்றில் பறவை.
உடை திரைத் திவலை அரும்பும் தீநீர் = அலைகளால் உடைந்து, சிதறிய நீர்த்துளிகளால் அரும்பிய இனிய நீர்ப்பரப்பு.
மெல்லம் புலம்பன் = நெய்தல் நிலத் தலைவன்.
பாடுஒல்லா = தூக்கமில்லாமையாயின.
நள்ளென் றற்றே யாமம் = 'நள்' எனும் ஓசையுடைய நடு இரவு.
சொல் அவிந்து இனிது அடங்கினர் மாக்கள் = புறங்கூறிச் சுற்றியிருந்த மனிதர்களும் இனிதாக உறங்கினர்.
முனிவின்று = வெறுப்புச் சொற்களை விடுத்து.
ஓர்யான் மன்ற = நான் ஒருத்தி மட்டுமே.

*



(இசைப்பாடல்
தாளம் - ஆதி
இராகம் - மிசிரபீலு)

- (எடுப்பு) -

நெஞ்சம் இனிக்கிறது - உன்பால்
தஞ்சம் புகத் துடிக்கிறது!

வெஞ்சமரில் வெல்லும் உன் தடந்தோள் கண்டு
அஞ்சுவர் பகைவர்; எனப் பெரும் புலவர்,
கொஞ்சுதமிழில் உன் கொற்றம் வாழ்த்துதல் கேட்டு
மிஞ்சுது காதல்; அதனால்
நெஞ்சம் இனிக்கிறது - உன்பால்
தஞ்சம் புகத் துடிக்கிறது!


- (தொடுப்பு) -

வஞ்சி எனக்கோர் வரம் தரவேண்டுமென
கெஞ்சியுன்னைக் கேட்கின்றேன் - என்பால்
எஞ்சியுள்ளது உயிர் ஒன்றுதான்; எனினும்
வஞ்சமின்றி வழங்கிடுவேன் உனக்காகக் கண்ணே! - உன்
மஞ்சத்து மயிலாக எனை ஆக்கிடுக மணிவண்ணே!
அதை நினைத்தாலே - கனவில் வந்து நீ எனை
அணைத்தாலே;

நெஞ்சம் இனிக்கிறது - உன்பால்
தஞ்சம் புகத் துடிக்கிறது!

- (முடிப்பு) -

மலைச்சாரல் காட்டோரம் ஒரு நாள் - மனம்
மயக்குகின்ற மாலை நேரம் சென்றேன்.
குலையாகப் பழம் தொங்குகின்ற மரத்தின்



கிளையொன்றில் பெருந் தேன்கூடு கண்டேன்.
கிட்டாதோ தேன் துளிகள் என்று
முற்றுக முடமான ஒருவன்
அடிமரத்தின் வேரின் மேல் அமர்ந்து
அகங்கையில் தேன் சொட்டுமென்று
ஆவலாய் முகம் வைத்துக்கொண்டு
அந்தோ; வெறுங்கையைச் சுவைத்துக் கொண்டிருந்தான்!
அவன் நிலைதான் என் நிலையோ கண்ணே?
'ஆம்' என்று நீ சொல்லிவிட்டால் பெண் நான்
அந்த முடவன் போல் செயல்படத்தான் வேண்டும்; உன்
அருகில் வரமுடியாமல் ஏங்கத்தான் வேண்டும்!
எட்டாத பழமெனினும்
எனக்கு நீ கிட்டிடுவாய் என்று - தவம்
கட்டாயம் இருக்கத்தான் வேண்டும்; உன்
கரம்தனில் ஒருநாள் தவழத்தான் வேண்டும்!
அதை நினைத்தாலே-கனவில் வந்து நீ எனை
அணைத்தாலே;

நெஞ்சம் இனிக்கிறது - உன்பால்
தஞ்சம் புகத் துடிக்கிறது!

செய் தவம் பலிக்கவில்லை யெனில் - என்
சிந்தை கவர்ந்திட்ட சிங்கம் நீ; என்
மெய் தழுவிக் கிடக்கின்ற கற்பனையில்
மிதந்திடுவேன்; அதை எண்ணி மகிழும்போது என்

நெஞ்சம் இனிக்கிறது - உன்பால்
தஞ்சம் புகத் துடிக்கிறது!

*

* **''குறுந்தாட் கூதளி ஆடிய நெடுவரைப்**
பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்,
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழ்இருந்து,
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவார் ஆயினும்,
பல்கால் காண்டலும், உள்ளத்துக்கு இனிதே!''


*

(குறுந்தொகை - பாடல் : 60
பாடியவர் : பரணர்)

பொருள் விளக்கம் :

குறுந்தாள் இருக்கை முடவன் = குறுகிய கால்கள் கொண்டு நடக்கவும் நிற்கவும் முடியாமல் ஓரிடத்திலேயே இருக்கின்ற முடவன். கூதளி ஆடிய நெடுவரை = கூதளங் கொடி யாடு கின்ற மலைப்பகுதியில். உட்கைச் சிறுகுடை கோலிக்கீழ் இருந்து = உள்ளங்கையை உண்கலம் போலக் குவித்துக்கொண்டு. சுட்டுபு நக்கியாங்கு = (தேனடையைச்) சுட்டிக்காட்டியவாறே வெறுங்கையைச் சுவைப்பது போல. நல்கார் = விரும்பாதார். நயவார் = அன்பு செலுத்திடார். பல்கால் காண்டல் = பல முறையும் காண்பது.

*



இசைப்பாடல்
இராகம் : பீம்ப்ளாஸ்
தாளம் : திஸிரஆதி

(எடுப்பு)

மணித்தேரில் சென்ற அவள் மகன் இன்னும் திரும்பவில்லை
மாற்றூரை விரட்டாமல் திரும்பிவர அவன் விரும்பவில்லை
அதனால்தான் ஆயிரம் பேர் அவ்வூர் வீரர் வந்த பின்னும்
அவர் இல்லமெல்லாம் ஆரவாரம் எழுந்த பின்னும்
மணித்தேரில் சென்ற அவள் மகன் இன்னும் திரும்பவில்லை.

(தொடுப்பு 1)

விழுப்புண்பட்ட வீரர் பலர் இல்லம் வந்தனர்
வேம்பின் இலை கொண்டு புண்களை ஆற்றிட
வீட்டு முகப்பில் கொப்புகளைக் கொணர்ந்து
வேல்விழித் துணைவியர் செருகி வைத்தனர்.

மணித்தேரில் சென்ற அவள் மகன் இன்னும் திரும்பவில்லை
மாற்றூரை விரட்டாமல் திரும்பி வர அவன் விரும்பவில்லை.


(தொடுப்பு 2)

காயமுற்றோர்க்கு ஆறுதலாய்க் காஞ்சிப் பண்பாடினர்
கடுகை நெய்யிட்டுப் புகைத்துக் காற்றிலே கலந்தனர்.
'கல்' என்ற ஒலியுடனே மனைகள் தோறும்
களம் சென்று திரும்பியோரின் களைப்பினைப் போக்கினர்.

மணித்தேரில் சென்ற அவள் மகன் இன்னும் திரும்பவில்லை
மாற்றூரை விரட்டாமல் திரும்பி வர அவன் விரும்பவில்லை.

(தொடுப்பு 3)

கொடுத்த பணி முடித்திடாமல் வருதல் - அவன்
கொண்ட கொள்கை குன்ற வைக்கும் என்பதால்
கிடைத்தவரை வெற்றியென எண்ணி - அப்
படைத்தலைவன் நிறைவு கொள்ளவில்லை!



பாசமிகு அன்னையினைப் பார்ப்பதற்கு
பறந்தோடி வருகின்ற நினைவும் வரவில்லை!
மற்றவர்கள் வந்துவிட்டார் - அவர் மனையில்
உற்றவர்கள் மனமகிழ்வு பெற்று விட்டார்!

மணித்தேரில் சென்ற அவள் மகன் இன்னும் திரும்பவில்லை
மாற்றுரை விரட்டாமல் திரும்பி வர அவன் விரும்பவில்லை.

(தொகையறு)

தமிழகத்துத் தாய்க் குலத்து வீர மங்கை
தன் புதல்வன் காலந் தாழ்ந்து வருவதற்குக் கலங்கிடாமல்
தடந்தோளால் பகை சாய்த்த பின்பே - என்
தங்கமகன், தாய் முகத்தைக் காண்பதற்கு வருவான் என்றுள்!
அதனால்தான் ஆயிரம் பேர் அவ்வூர் வீரர் வந்த பின்னும்
அவர் இல்லமெல்லாம் ஆரவாரம் எழுந்த பின்னும்

மணித்தேரில் சென்ற அவள் மகன் இன்னும் திரும்பவில்லை
மாற்றுரை விரட்டாமல் திரும்பி வர அவன் விரும்பவில்லை.

*

*** ''வேம்புசினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்**
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையும் கல்லென் றவ்வே
வெந்து உடன்று எறிவான் கொல்லோ
நெடிதுவந் தன்றுல் நெடுந்தகை தேரே!''

*

(புறநானூறு : பாடல் : 296
பாடியவர் : வெள்ளைமாறனார்)

பொருள் விளக்கம் :

வேம்புசினை = வேப்பந்தழையடர்ந்த கிளை. ஐயவி = கடுகு.
வெந்து உடன்று எறிவான் = கொதித்துச் சினந்து பகை
வேந்தரை வீழ்த்துவான். நெடிது = தாமதமாக.

*



இசைப்பாடல்
இராகம் : செஞ்சுருட்டி
தாளம் : திசிர ஆதி

(எடுப்பு)

ஆயமகன் குழலூதினன்; அந்த
ஆயமகள் குழைந்தாடினள்!

ஏறுதழுவி வெற்றி கொண்டால் - அவனை
ஏற்றுக்கொள்வேன் என்றுரைத்தாள்!
வீறுகொண்டே காளைமீது பாய்ந்துவிட்டான் - பெரு
வெற்றி கண்டே அவள்மீது சாய்ந்துவிட்டான்!

ஆயமகன் குழலூதினன்; அந்த
ஆயமகள் குழைந்தாடினள்!

(தொடுப்பு)

முட்ட வரும் காளையின் கொம்பு கண்டு அஞ்சுவோனை
மொட்டழகு முல்லைநில மங்கையவள்
இப்பிறப்பில் மட்டுமல்ல; பின்னுமோர்
பிறப்பு உண்டென்று சொன்னால்
அப்பிறப்பிலும் அண்டவிடேன் என்றுரைப்பாள்!
அவள் வழி வந்தவளாம் அழகு நிறை பொற்சிலையாம்!
புலியெனத் தாவிய காளையை அடக்கி - அதனை
எலியென விரட்டியே எழுந்தவனை - 'என்
சிங்கமே!' என்றோடித் தழுவிக் கொண்டாள் - என்
தங்கமே என அவளை வாரியெடுத்து.....

ஆயமகன் குழலூதினன்; அந்த
ஆயமகள் குழைந்தாடினள்!

(முடிப்பு)

சீறிவந்த காளையின் கொம்பிரண்டால்
கீறிய காயங்களில் மருந்திடவே - தன்னை
மீறிய காதலினால் இதழ் குவித்தாள்; ஆகா
ஆறியதே காயம் ஒரு நொடியில் எனக்கண்டு,

ஆயமகன் குழலூதினன்; அந்த
ஆயமகள் குழைந்தாடினள்!

வெட்டுண்ட புண்களிலே மேலுடல் அழுந்த
வேது கொண்டு ஒற்றினுள் - அன்பில்
கட்டுண்டு வலி மறந்து; நான் எங்கும்
காணுத சுகம் இதுவென்று வாழ்த்தியே...
ஆயமகன் குழலூதினுன்; அந்த
ஆயமகள் குழைந்தாடினுள்!

(தொகையரு)

''காற்றுகப் பறந்துவிடும் உயிரை
காளையின் கொம்புக்கு அஞ்சி
காப்பதற்கு ஓடுகின்ற மனிதர்,
மாலையிடும் அளவுக்கு
மலிவாகப் போனதுவோ
ஆயமகள் தோள்கள்?'' என்று
அறைகூவல் விடுக்கின்ற பெண்கள்;
அந்தநாள் தமிழகத்தின் கண்கள்!
அவர் வழிவந்தவளாம் அழகு தவழ் ஓவியமாம்;
யானைக்கும் பணியாத காளையொன்றை
பூனையென ஆக்கிய வீரனையே
அணைக்கத் துடிக்குது கைகள் என்றுள்; அவளை
அணைத்துக் குலவி மகிழ்ந்தவாறு...
ஆயமகன் குழலூதினுன்; அந்த
ஆயமகள் குழைந்தாடினுள்!

*

(106)

* ''கடாஅக் களிற்றினும் கண்ணஞ்சா ஏற்றை
விடாஅது நீ கொள்குவை, ஆயின், படாஅகை
ஈன்றன ஆயமகள் தோள்.....''

(103)


* ''கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே, ஆயமகள்.....''

* ''வளியா அறியா உயிர் காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினுர் தோய்தற்கு
எளியவோ ஆயமகள் தோள்?.....''

(106)

* ''முல்லைவேதின் ஒற்றி முயங்கிப் பொதிவேம்
கொல்லேறு சாடிய புண்ணை.....''

*



(கலித்தொகை : முல்லைக்கலி
(101, 103, 106 ஆகிய பாடல்களிலிருந்து)
பாடியவர் : நல்லுத்திரனார்)

பொருள் விளக்கம் :

கடாஅக் களிறு = வெறிகொண்ட ஆண் யானை.
கண்ணஞ்சா = பயந்து நடுங்காத. படாஅகை = வெற்றிக்கொடி.
கொல்லேற்றுக் கோடு = கொல்லவரும் காளையின் கொம்பு.
வளி = காற்று. நளிவாய் மருப்பு = நெருங்கி அமைந்த கொம்பு.
தோய்தல் = அணைதல்.
முயங்கிப் பொதிவேம் = கட்டித் தழுவுவோம்.

*



(இசைப்பாடல் - சிந்து பைரவி
தாளம் - ஆதி)

(எடுப்பு)

சொல்வேன் கேளடி தோழி - சுவை
வெல்லம் போல் ஒரு சேதி!

அரும்பு மீசை வளர்ந்த காளை - அவன்
குறும்பு செய்வான் பல வேளை!

(சொல்வேன் கேளடி தோழி...)

(தொடுப்பு)

வீதியில் மணல் வீடு அமைப்போம் - அங்கு
விளையாட்டாய்க் காய்கறிகள் சமைப்போம்;
பாதியில் வந்து கலைத்திடுவான் - நாம்
பதறிடுவோம் அவன் சிரித்திடுவான்!

(சொல்வேன் கேளடி தோழி...)

மல்லிகை முல்லை கூந்தலில் வைப்பேன் - அவன்
மாயமாய் வந்து அவைகளைப் பறிப்பான்!
பந்துகள் கொண்டு ஆடி மகிழ்வோம்; - அவன்
வந்தது தெரியாமல் திருடியே மறைவான்!

(சொல்வேன் கேளடி தோழி...)

வாயிற் புறந்தனிலே ஒருநாள் வந்து நின்றான்
வாய் உலர்ந்து போனதென்று ''தண்ணீர்'' என்றான்.
தாயும் எனை அருகழைத்து ''மகளே'' என்றாள்!
தங்கக் கலம் எடுத்து தண்ணீர் மொண்டு
தவிக்கின்ற பிள்ளையாண்டான்
தாகவிடாய் தணியென்று ஆணையிட்டாள் தோழி!

(சொல்வேன் கேளடி தோழி...)

விருப்பமிருந்ததடி எனக்கும் - எனினும்
வெளியிற் காட்டாமல் நீர் கொண்டு சென்றேன்!

வீட்டு முகப்பினிலே நின்றிருந்தான் தோழி! - நான்
நீட்டிய கைதனைப் பிடித்து விட்டானடி தோழி!
நடுங்கிப் போய்விட்டேனடி நானும் தோழி;
நாலு பேர் கண்டுவிட்டால் என்னுகும் தோழி!
(சொல்வேன் கேளடி தோழி...)

(தொகையறு)


''அம்மா!'' என்று எனை அறியாமல் அலறிவிட்டேன் தோழி!
அவளும் வந்து விட்டாள் அரை நொடியில் தோழி!
அதற்குள்ளே சமாளித்துக் கொண்டேனடி தோழி!
''அவருக்கு விக்கல் வந்ததம்மா'' என்றேனடி தோழி!
'அய்யோ பாவம்' என அம்மாவும் ஓடிவந்து தோழி;
அவன் முதுகுப்புறம் வழித்துவிடத் தொடங்கிவிட்டாள் தோழி!
(சொல்வேன் கேளடி தோழி...)

(முடிப்பு)

பின்புறமாய்த் தாய் நின்ற காரணத்தால் தோழி;
என்னுள்ளம் கொண்ட காதல் அறிந்து கொண்டான் தோழி!
கண்களாலே திருமணத்தைப் பேசிவிட்டுத் தோழி;
கள்வன்மகன் நகைக்கூட்டம் செய்திட்டான் தோழி!
அவன் வாழியவே; வாழி!

*

* ''சுடர்த் தொடீஇ! கேளாய் - தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லீரே!
உண்ணுநீர் வேட்டேன்' என வந்தாற்கு, அன்னை
'அடர்பொன் சிரகத்தால் வாக்கிச் சுடர் இழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா' என்றுள்; என, 'யானும்
தன்னை அறியாது சென்றேன்' மற்று என்னை
வளைமுன்கை பற்றி நலியத், தெருமந்திட்டு,
'அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்!' என்றேனை,
அன்னை அலறிப் படர்தரத், தன்னை யான்,
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனை, அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ; மற்று என்னைக்



கடைக்கணுல் கொல்வான்போல் நோக்கி,
நகைக்கூட்டம்
செய்தான், அக் கள்வன் மகன்!''

*

(கலித்தொகை : பாடல் : 51
பாடியவர் : கபிலர்)

பொருள் விளக்கம் :

சிற்றில் = மணல் வீடு.
அடைச்சிய கோதை = கூந்தலில் வைத்த பூ.
பரிந்து = பறித்து.
சிறுபட்டி = கட்டுக்கடங்காக் காளைப்பருவத்தினன்.
சிரகம் = நீர் அருந்தும் கலம். வாக்கி = வார்த்தல்.
தெருமருந்திட்டு = மிரண்டுபோய். நீவ = வழித்துவிட.
நகைக்கூட்டம் = இன்பப் புன்னகை புரிதல்.

*



(இசைப்பாடல்)
இராகம் : சிந்து பைரவி
தாளம் : ஆதி

(எடுப்பு)

என் இருவிழி மழைதனைக் காணுதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

போர்வாளேந்தி என் மகன் பொன்முடி;
புல்லரை வீழ்த்தி உயிர் துறந்தான்;
என் இருவிழி மழைதனைக் காணுதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

(தொடுப்பு 1)

மார்பில் விழுப்புண் பெற்று மகன் - இந்த
மண்ணை மீட்டதால் வாழ்த்துகிறேன்; அவன் என்
மடியில் தவழ்ந்து வளர்ந்ததை எண்ணி
மனம் வாடுகிறேன்! மனம் வாடுகிறேன்!

(எடுப்பு)

என் இருவிழி மழைதனைக் காணுதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

(தொகையரு)

துள்ளிவரும் பகையின் - தலைகளைக்
கிள்ளிவரும் வீரனைத்தான்
பிள்ளையாய்ப் பெற்றிருந்தேன்;
பெருமகிழ்ச்சி கொண்டிருந்தேன்!
'களம் சென்று வருகின்றேன் அம்மா' என்று;
கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தான் அன்று!
கட்டித்தழுவி என் வீரக்களஞ்சியத்தை
தட்டிக் கொடுத்து 'வென்று வா மகனே' என்றேன்

வெட்டி வருவான் பகையை என வழிபார்த்து நின்றிருந்தேன்
கொட்டிக் கிழங்குகளை மிதிப்பது போல் கொடும் பகைவர்
உடல் மிதித்த மகன்;
குன்றமொன்று சாய்ந்ததுபோல் சாய்ந்துவிட்டான்;
குன்றுப்புகழ் கொண்டு இந்தக் குல வரலாற்றில்
குடியேறிவிட்டான்

(எடுப்பு)

என் இருவிழி மழைதனைக் காணுதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

(தொடுப்பு 2)


மானம்; என் மகன் கேட்ட தாலாட்டு;
மரணம் அவன் ஆடிய விளையாட்டு!
பால் குடிக்கும் குழந்தையாய் இருந்தபோதே
வேல் பிடிக்கும் வித்தையினைக் கற்றுத் தந்தேன்
ஆல் விட்ட விழுது போல் தந்தைக்கு மகனுகி - ஆட்டு
வால் போலக் குட்டை மனம் கொண்ட பகை; நம்
கோல் பறிக்கக் கூடாதென்று கொந்தளித்து; அவர்,
தோல் உரித்துத் துரத்திவிட்டுப் போரில் மாளுகிறுன்; பெரும்
புகழை ஆளுகிறுன்!

(எடுப்பு)

என் இருவிழி மழைதனைக் காணுதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

(தொகையறு)

கொக்கின் சிறகாய் நரைத்துவிட்ட என் கூந்தல் தடவி; உன்
பொக்கை வாய் திறந்து வாழ்த்தம்மா எனக் கேட்ட வடிவழகன்;
பொருதடக்கை வாளிங்கே; போருக்கு வந்த பகை எங்கே?
எனப்
பொங்கும் கடலாய் ஆர்ப்பரித்தான்!
'போய் வா மகனே' என்றுரைத்தேன்;
போனுன், வரவில்லை - என் செய்வேன்?
புகழ்மலையின் உச்சியிலே கொடி போட்டான் என்று
புன்னகையோ மின்னலிடும் என் முகத்தில்!
விழிகளிலே ஒளிவீசும் மகிழ்ச்சியுடன்
பொழிகின்ற கண்ணீரோ;
ஓங்கி வளர்ந்துயர்ந்த
மூங்கில் மரங்களிலே
தேங்கி வடிகின்ற மழைத்துளியை வென்றிடுமாம்!



(எடுப்பு)

என் இருவிழி மழைதனைக் காணுதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

(முடிப்பு)

காதலுக்குத் தடை சொல்லக் கூடாதென்று - ஒரு
கட்டழகுப் பெட்டகத்தைத் துணை சேர்க்க; அவன்
கருத்துக்கு ஏற்றதொரு கன்னியிளமானை
களம் சென்று திரும்பியபின் மணமுடிக்கக் காத்திருந்தேன்;
அவனோ
களிறுகளைப் பந்தாடிப் புரவிகளைப் பஞ்சாக்கிக்
கயவர்களின் வாள்முனையை நெஞ்சில் தாங்கி
காதலியைத் தவிக்கவிட்டு
காலத்தை நகர்த்துகின்ற இந்தக் கிழவியையும்
கண்ணீரில் மிதக்க விட்டு
கடமையினை முடித்து விட்டான்...
களிப்பொரு பக்கம் - கண்ணில் நீர் ஒரு பக்கம்
களப்புகழ் பெற்ற மகனை வாழ்த்துகின்றேன்!
கருவில் சுமந்த தாயல்லவோ; அதனால் வாடுகின்றேன்!

(எடுப்பு)

என் இருவிழி மழைதனைக் காணுதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

*

*** ''மீன்உண் கொக்கின் தூவி அன்ன**
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.''


*

(புறநானூறு : பாடல் : 277
பாடியவர் : பூங்கண் உத்திரையார்)

பொருள் விளக்கம் :

வால்நரை = வெண்மையாக நரைத்த.
நோன்கழை = வலிய மூங்கில்.
துயல் = அசையும். வெதிரம் = மூங்கில் மரம் நிறைந்த ஒரு மலை.
தூங்கிய சிதர் = தேங்கிய மழைத்துளி.

*



(இசைப்பாடல்)
இராகம் : சண்முகப்பிரியா
தாளம் : ஆதி

(எடுப்பு)

பொருள் திரட்டப் பிரிந்தவர்; என்பால்
அருளற்றுப் போனரோ தோழி?
இருள் மூடிப் போகாமல் வாழ்வில்
இன்ப விளக்கேற்ற எப்போது வருவாரோ தோழி?

(தொடுப்பு 1)

கார் காலம் தலைகாட்டத் தொடங்கு முன்னர்
நேரிழையே நான் வருவேன் என்று
நெற்றியிலே முத்தமிட்டு நெருங்கிப் பின்னர்
தேர் ஏறிச் சென்றவர் ஏன் இன்னும் வரவில்லை?

(எடுப்பு)

பொருள் திரட்டப் பிரிந்தவர்; என்பால்
அருளற்றுப் போனரோ தோழி?
இருள் மூடிப் போகாமல் வாழ்வில்
இன்ப விளக்கேற்ற எப்போது வருவாரோ தோழி?

(தொடுப்பு 2)

வளமை கொழிக்க வாழ்வதற்குப் பொருள் தேவையென்று
வாணிபத்தை நடத்துதற்கு எனைப் பிரிந்து போனவர்க்கு
இளமை துடிக்க இங்கொருத்தி ஏங்குகின்ற நிலைமை - அவர்
இதயத்தில் இரக்கத்தை ஏற்படுத்தாமை; என்ன புதுமை!
என்ன புதுமை!

(எடுப்பு)

பொருள் திரட்டப் பிரிந்தவர்; என்பால்
அருளற்றுப் போனரோ தோழி?
இருள் மூடிப் போகாமல் வாழ்வில்
இன்ப விளக்கேற்ற எப்போது வருவாரோ தோழி?

(தொடுப்பு 3)

பசலை நிறம் படர்ந்து விடும் என் உடல் முழுதும் எனச்சொல்லி
பசுஞ் சோலைப் பூமெத்தை மீது அவர் கரம் பிடித்து நான்
அழுதும்
பயனில்லை என்பதனை உணரும்போது; தீயிட்ட
பஞ்சாகப் போகுதடி நெஞ்சம்!
பரிவு காட்டும் இயல்பு மட்டும் இருந்தாலே கொஞ்சம்;
பிரிவுத் துயரால் தகித்திடுமோ இந்த மலர் மஞ்சம்?

(எடுப்பு)

பொருள் திரட்டப் பிரிந்தவர்; என்பால்
அருளற்றுப் போனரோ தோழி?
இருள் மூடிப் போகாமல் வாழ்வில்
இன்ப விளக்கேற்ற எப்போது வருவாரோ தோழி?

(முடிப்பு)

வானை நோக்கி வளர்கின்ற வரகின் கதிரை - ஆண்
மானின் கூட்டம் மேய்கின்ற அழகைப் பார் தோழி; அருகில்
பூனை சிரிப்பது போல் முல்லை அரும்பின் கூட்டம்
பூவை எனை மாய்க்குதடி அவர் வரவில்லையெனும் வாட்டம்!
பூத்திட்ட முல்லையிலே அமர்ந்து தேன் மொண்டு,
கூத்திட்டுக் களிக்குது பார் அழகான வண்டு!
காத்திருப்பாள் மகரந்தப் பூங்கொடி என்று
கவலை தீர்க்க அவர் ஓடி வருவாரோ இன்று?

(எடுப்பு)

பொருள் திரட்டப் பிரிந்தவர்; என்பால்
அருளற்றுப் போனரோ தோழி?
இருள் மூடிப் போகாமல் வாழ்வில்
இன்ப விளக்கேற்ற எப்போது வருவாரோ தோழி?

*

*** ''பழமழைக் கலித்த புதுப்புன வரகின்**
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை,
வெருகுசிரித் தன்ன, பசுவீ மென்பிணிக்
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்



வண்டுதூழ் மாலையும் வாரார்;
கண்டிசின் - தோழி! - பொருட்பிரிந் தோரே.''

*

(குறுந்தொகை : பாடல் : 220
பாடியவர் : ஒக்கூர் மாசாத்தியார்
(பெண்பாற் புலவர்)

பொருள் விளக்கம் :

பழமழைக் கலித்த = பெய்த மழையினால் தழைத்த.
இரலை = ஆண்மான். இருவி = கதிர் கொய்த வரகின் தாள்.
வெருகு = காட்டுப் பூனை.
பசுவீ மென்பிணிக் குறுமுகை = முல்லைப் பூவின் மெல்லிய மொட்டுக் கொண்ட சிறிய அரும்பு. புறவு = முல்லை நிலம்.
கண்டிசின் தோழி = தோழியே இதனைக் கருதிப் பார்ப்பாயாக.

*

ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒருதலைக்

ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒருத

ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல்

ஒருதலைக் காதல் ஒருதலைக் காத

ஒருதலைக் காதல் ஒரு

ஒருதலைக் காதல் ஒருதலைக்

ஒருதல



ருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒரு தல் ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல்

ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒருதலைக் காதல் ஒருதலைக்



கற்கண்டுத் தமிழில் கவிதைகள் வடிக்கும்
நற்கண்ணை என்றொரு பெண்பாற் புலவர்,
இகம், பரம் என்று பாடல் இயற்றிக் கொண்டிராமல்
அகம், புறம், நற்றிணை எனும் சங்கத் தொகுப்பில்
கனகமணிகளாய்ப் பதித்திட்ட பாடல்கள் ஆறு - அவை
காதற்கனிகளைப் பிழிந்திட்டக் கவிதையின் சாறு!


அந்த ஆறு பாடலுடன்,

காவற்பெண்டு எனும் மறக்குலத் தாயொருத்தி
களம் சென்ற மகனைப்பற்றி வினவிய கன்னியிடம்,
புலியிருந்த குகையிதோ எனப்பூரிப்பு பொங்கக்கூறி,
புறப்பாட்டு ஒன்றைப் போர்ப்பாட்டாய் இசைத்ததையும்,
அந்தத்தாய்தான் பெருநற்கிள்ளி யெனும் சோழப்பெருமகனைச்
சொந்தத்தாய்போல வளர்த்த செவிலித்தாய் என்பதையும்,
கிள்ளியின் அழகு, ஆற்றலில் மயங்கி - நற்கண்ணை; அவனை
அள்ளிப் பருகுதல்போல் கனவுலகில் மிதந்ததையும்,
பெருநற்கிள்ளியின் பேராண்மையினை - கவிப்
பெருமான் சாத்தந்தையார், பீடுநடைபோடும்
புறப்பாட்டாய்த் தீட்டிப்
புகழ்மாலை சூட்டியதையும் - சற்று
ஆழமாய்ச் சென்று ஆய்ந்து நான் படித்ததாலே
ஆலுக்கு விழுதெனவே ஒரு கற்பனை தோன்றிற்றெனக்கு!

நற்கண்ணைக்கு நற்கிள்ளிமீது தாவியெழுந்த காதல்,
பொற்கிண்ணத்துப் பாலாய்ப் பொங்கித் தரையில் வழிந்த
கதையை,
''ஒருதலைக் காதல்'' எனும் சிறு தொடரோவியமாய்க்
குறுங்காதல் காவியமாய்ப் படைக்கின்றேன்; படித்துச்
சுவைத்திடுக!

*

பச்சைப் பட்டாடை உடுத்திக் கச்சையுடன்
பரதமாடும் பருவமயில்போல - கழனியிலே
பயிர்கள் ஆடும் வளமிகு சோழநாட்டின்
பழங்காலத் தலைநகராம் உறையூரின்கண்
வீரைவேண்மாண்வெளியன் தித்தன் என்பான்
வெண்கொற்றக் குடையின்கீழ் வீற்றிருந்து,



தாரை வார்த்தபடியிருந்தான்; அரசின் பெருஞ்செல்வத்தைத்
தபோதனர் நடத்துகின்ற வேள்விக்கும் யாகத்திற்கும்!
''தமிழ்மரபுக்கு இது ஏற்றதல்ல,'' என்று அவன் மகன்
தடுத்து நின்று அதனைத் தொடர்ந்து எதிர்த்தும் வந்தான்.

சோழவேந்தன் தித்தனே; தன்மகன் பெருநற்கிள்ளி
சொல்லுகின்ற கருத்தையெல்லாம் புறக்கணித்து
அறியாக்குழந்தை; நோய் போக்கும் கசப்பு மருந்தின் அருமை
தெரியாமல்

அதனை அருந்திட மறுத்துத் தட்டுதல்போல நற்கிள்ளியளித்த
நல்லுரை எதனையும் ஏற்றிட மறுத்து,
நாட்டின் செல்வம் வாரியே இறைத்தான்.

''அரசு கருவூலத்தை நிரப்புவது குடிமக்கள் வேலை! அவர்
வாழ்வைத்
தரிசு நிலமாக்கி இதயத்தில் சொருகுவதோ வேலை?
கொற்றவர்க்கு அழகு குடிதழுவிக் கோலோச்சல்;
கொள்கை அற்றவர் செயலோ நல்ல குறிக்கோளுக்குக்
கொள்ளிவைத்தல்!
பாலும் தேனும் பசுநெய்யும் குடம் குடமாய்த் தீயிலூற்றிப்
பலியாக ஆடு, மாடு, குதிரையெலாம் வெட்டி வீழ்த்தி,
அவிர்ப்பாகம் பெறுவதற்கு யாககுண்டங்கள் வளர்த்துத்
தவமிருத்தல்
'அன்பே கடவுள்' எனும் தத்துவத்தின் அடிபீடம் ஆட்டுகின்ற
செயலன்றே?''

எனக் கேட்டுத் தடுத்தான் கிள்ளி!

''நாடாளும் மன்னன் நான் எனை எதிர்த்து என்மகன் நீயே
நாத்தழும்பேறி நாத்திகம் பேசுவதோ? உன்
நாவை அறுத்து நாய் நரிகளுக்கிடுமுன்
நடந்திடுக நாட்டை விட்டு;'' என ஆணையிட்டான் தித்தன்!

''இன்றே பிரிகின்றேன் எனைப்பெற்ற உறையூரை; ஆனால்
மன்னை;
ஒன்றே தெய்வமென்றும் அதற்கு உயிர்ப்பலி வேண்டாமென்றும்
நான் கூறியதை நாத்திக மென்கின்றீர் - நீரோ;
வான்மீது தொங்குவதாய்க் கூறுகின்ற சொர்க்கம் காண
வையகத்தை நரகமாக்கி வதைக்கின்றீர் உயிர்களையே!
பித்தனையும் தெளிவிக்கக் கூடும்; ஆனால் என் தந்தையாம்
தித்தனை இனித் திருத்தல் இயலாதென்ற முடிவோடு
போகின்றேன்'' என்று
பொற்கோவாம் பெருநற்கிள்ளி உறையூர்விட்டு

முக்காவல்நாட்டு ஆமூர் சென்றான்! அக்கணமே
சொற்கோவாம் சாத்தந்தையெனும் புலவர் பிரானும்
சோழன் முன்
நிற்காமல் கிள்ளியினைப் பின்தொடர்ந்தார்.

அரசிளங்குமரனே கொண்ட கொள்கைக்காக அரியாசனம்
துறந்த பின்னர்,
அவைப்புலவர் பதவியது அற்பமென எட்டித்தள்ளி,
தமிழ்க்குலத்தின் மானம், வீரம், பண்பாடு, மரபு
தாழாது காப்பதற்குச் சூளுரைத்துக் கிள்ளியின் அருகிருந்தார்.

*

முக்காவல் நாட்டு ஆமூரில் ஒருநாள்
முரட்டு மல்லன் ஒருவன் தோள்தட்டி ஓடிவந்து,
''என்னை வென்றிடுவார் யாருண்டு இவ்வூரில்?''
என முழக்கி அறைகூவல் விடுத்ததோடு - தன்முன்னே
நிற்கமுடியாமல் அவ்வூரார் தோற்றுவிட்டால்
முக்காவல் நாடு முழுமையும் தனக்குரிமை ஆகு''மென்றான்!

நாட்டுடைத் தலைவன் அதுகேட்டுப் போர்நடை போட்டு
முன்வந்து - அந்தக்
காட்டெருமை மனிதனை மற்போரில் வீழ்த்தமுயன்று தோற்று
விட்டான்!

''ஆமூர் இனிமேல் வெற்றிபெற்ற தனக்குத்தான் உரிமையென்று
ஆகா! ஊகு!''என்று கத்திய மல்லன் முன்னே,
விண்ணில் நட்சத்திரமொன்று வீழ்கின்ற வேகத்தில்
மண்ணில் ஓங்கி உதைத்தவாறு குதித்து;
''மல்லனே; நில்லடா!'' என மார்தட்டிக்கொண்டு
மறவர்குல மாவீரனொருவன் அந்த மனிதமிருகத்தின்மேல்
பாய்ந்தான்!

யார் அது? யார் அது? என ஆமூர் அதிர்ந்தது!
பார் அது; உறையூர் தித்தன் மகன் பெருநற்கிள்ளியென்று
கையொலி செய்தது ஒரு கூட்டம்! என்ன ஆகுமோ என,
கண்கலங்க நின்றது மற்றோர் கூட்டம்!

ஆமூர் தலைவனுக்கே கிட்டாத வெற்றி,
அகவையிற் குறைந்த இளைஞனுக்குக் கிட்டுமோ என்று
மூக்கின்மேல் விரல் வைத்து
முக்காவல் நாட்டுமக்கள் திகைத்து நின்றார்!

''ஊதினால் துரும்பெனப் பறந்திடுவாய்;
உனக்கு இத்தனை ஆணவமா?'' என்று
மோதினான் முரட்டு மல்லன் கிள்ளியின்மேல்!

சண்டமாருதச் சுழற்சிபோல் நடந்திட்ட மற்போர் நிகழ்ச்சியை
சாத்தந்தையார் வழங்கிய பாடலெனும் பலகணிமூலம்
சற்றுத் தொலைவிருந்து காண்போம் நாம்!
மல்லன் மீது துள்ளிப்பாய்ந்த நற்கிள்ளி
ஒரு காலை மார்புக்குமேல் மடித்து
மற்றொரு காலால் மாற்றனின் தாக்குதல் தடுத்து,
முரடனது முதுகின்கண் இறுகப் பிணைத்து; பசியால்
மூங்கிலைத்தின்ன முயலும் யானை;
அதனை வளைத்தும் முறித்தும் மிதிப்பது போல
மல்லனின் தலையும் காலும் மோதியும் முறித்தும்
மண்படத்தரையில் வீழ்த்தி மாண்டிடச் செய்த சோழமகனை
''போரவைக் கோப்பெரு நற்கிள்ளி'' எனப்
புகழ் விருது வழங்கி வாழ்த்திய புலவர்,
புதல்வனது வீரத்தைக் காண்பதற்கு - உறையூர்ப்
புவியாளும் தித்தன் வந்திலையே என மனமிக நொந்தார்.

நற்கிள்ளி போர் புரிந்த வேகத்தை
சொற்சுவை நனி சொட்டச் சொட்ட
உயர்தமிழ்க் கவிஞர் சாத்தந்தை,
உவமைகூறி விளக்குகின்றார்; இதோ:-

*

*** ''சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்**
பட்டமாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ;
ஊர்கொளவந்த பொருநனெடு,
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே!''

*

(புறநானூறு : பாடல் : 82
பாடியவர் : சாத்தந்தையார்)

இதற்கு உற்ற பொருள் நான் கற்ற தமிழில் அளிக்கின்றேன்.
இந்த உவமை நயத்தின் இனிமையை நீவிர் உணர்ந்திடுவீரே!

''கட்டில் பின்னும் கடைநிலைப் பாட்டாளியொருவன்
- அதனை
விற்றுப் பிழைக்கத் திருவிழா தொடங்குமுன்
விரைந்தோடிட வேண்டும் - அவ்வேளையில்
கட்டிய மனையாள் பேற்று வலியால் பெரிதும்
துடிப்பதாய்ச்
சேதி வந்து செவியினைத் துளைத்திட; தன்

செயல் முடித்துப் புறப்பட அவன் படபடக்க - வான
வீதியில் கதிரோன் மேற்கே வீழ்ந்து கனமழைக்கான
அறிகுறியும் கண்டிடவே
கட்டில் பின்னும் அவன் கையூசி எத்தனைக்
கடுமையாய் விரைந்து வாரைச் செலுத்துமோ - அந்த
ஊசியினும் வேகமாய்ப் போரை முடித்து - எதிரியைத்
தூசியென வீசிவிட்டான் வீரன் கிள்ளி!

இவ்வாறு

முத்தமிழ் வித்தகரின் பாமாலைக்கும்
முக்காவல் நாட்டுமக்கள் பூமாலைக்கும்
தலைவணங்கி நன்றியினை; நற்கிள்ளி தெரிவித்தபோது,
கலைவண்ண மங்கையொருத்தி ஆங்கே - காதல்
அலைபாயும் நெஞ்சுடனே தோழியிடம்; - அன்பால் அவனை
விலைகொள்ள முடியுமோ என்று விழியால் கேட்டாள்!
நிலைகொள்ள முடியாமல் தவித்திட்ட அம்மங்கை;
மலைமுகடு ஏறியிறங்கப் பெருமூச்செறிந்திட்ட
நற்கண்ணையெனும் நங்கை!

பொருள் விளக்கம் :

சாறு = விழா. தலைக்கொண்டன = தொடங்கி விட்டன.
ஈற்று உற்றென = பிள்ளை பெறுங்காலம் உற்றனள்.
பட்டமாரி = மழை. ஞான்ற ஞாயிறு = கதிர் மறையும் வேளை.
நிணக்கும் = பிணைக்கும். போழ்தூண்டு ஊசி = தோலால் ஆகிய வாரைக் கோக்கும் ஊசி.

*



பெருங்கோழிநாய்கன் எனும் பெருவணிகன்
பெற்றெடுத்த தமிழ்க் கொடிதான் நற்கண்ணை
வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும் சோழ நாட்டார்,
கடல் கடந்தும் வாணிபம் பெருக்கியதால்
காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தில்
நீரின் வந்த நெடுவேக குதிரைகளும்,
காலின் வந்த கருமிளகு மூட்டைகளும்,
வடமலையில் பிறந்திட்ட மணிக்குலமும் மின்னும் பொன்னும்,


குடமலையில் பிறந்திட்ட நறுமணச் சந்தனமும் அரும்புகை
அகிலும்,

தென்கடல் முத்தும், குணகடல் பவளமும்,
கங்கையின் விளைவும், காவிரியின் பயனும்,
ஈழநாட்டு உணவும், கடாரத்துப் பொருளும்,
இன்னபிறவும் இறக்குமதி, ஏற்றுமதியெனக் குவிந்து
தென்னகச் சீர்மை உயர்த்துதல் கண்டு,
கடியலூர் உருத்திரங்கண்ணனர் எனும் புலவர்
கரிகால் சோழனின் காலத்து வளமையெலாம்
''பட்டினப்பாலை''யாம் பழந்தமிழ்ச் சுவடியில்
பதியவைத்துப் பாரோர் போற்ற வைத்தார்! - அந்தப்
பெருமைசேர் வணிகர் வழிவழி வந்தவனுய்
பெருங்கோழிநாய்கன் ஆமூரில் விளங்கினன், அன்று!

வணிகர் திலகம் வார்த்தெடுத்த வைரச்சிலை,
வடிவழகி நற்கண்ணை கிளிமழலைப் பேச்சுக்காரி!
ஒளியுமிழும் கண்களுக்கு உலகமே அடிமையாகும்!
களிநடன மயிலசைவு; இடையில், நடையில்!

அழகிருக்குமிடத்தில் அறிவொளியும் இணைந்துவிட்டால்
அருவியிலாயிரம் தேன்குடம் உடைந்து கலந்ததுபோல்;
அமிழ்தம்! அமிழ்தம்! அமிழ்தமன்றே? - அவ்வாறே
கமழ்ந்தாள் நற்கண்ணை; தமிழ் அமிழ்தக் கவியாக!

ஏடெடுத்து மலர்க்கரத்தில் எழுத்தாணி பிடித்து
மாடெதிர்த்துக் கொம்புதனை முறித்தது போல்



ஆமூர் மல்லனையே வெற்றிகண்டு வீழ்த்திவிட்ட
ஆணழகன் நற்கிள்ளி வீரத்தைப் பாட்டாக எழுதி வைத்தாள்.

எழுதியதை,

எடுத்தெடுத்துப் படித்துப் பார்த்தாள்
ஏனோ; அவளே நாணமுற்றுப் பின்னர்
எடுக்காமல் படுத்துப் பார்த்தாள் - தூக்கம்
பிடிக்காமல் எழுந்தமர்ந்து; எழுதியதை மீண்டும் மார்பகத்தில்
அணைத்துப் பார்த்தாள்!

''கடிக்காமல் இனிக்கின்ற கரும்பும் உண்டோ? - ஆனால்
காணுமல் சுவைக்கின்ற காதல் உண்டே! அதற்குத்
தேடாமல் கிடைக்கின்ற சான்றாக நானே இன்று
மூடாத விழிகளுடன் புரள்கின்றேன்'' என்று
தன்னைத்தானே நொந்துகொண்டு
தளிர்க்கொடியாள் தவித்தபோது;

''பொன்னைத்தான் தொலைத்துவிட்ட
வறியோன் போலத் துடிப்பது ஏன்?
உன்னைத்தான் கேட்கின்றேன் தோகையே'' என்று
உயிர்த்தோழி **பொற்கொடி** அருகில் வந்தாள்.

''துடிப்பது ஏனென்று புரியவில்லையா? நான்
படிப்பதைக் கேள் என்று எழுதிய ஏடெடுத்தாள்.
எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் இருவிழியால் முத்தமிட்டு
இதயத்தின் எதிரொலியைத் தோழிக்கு விளக்கிச் சொன்னாள்.

*

*** ''என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்,**
என்னைக்கு நாடு இஃது அன்மையானும்,
ஆடு ஆடு என்ப ஒருசாரோரே;
ஆடன்று என்ப ஒரு சாரோரே;
நல்ல, பல்லோர் இருநன் மொழியே;
அஞ்சிலம்பு ஒலிப்ப ஓடி, எம் இல்,
முழா அரைப் போந்தை பொருந்தி நின்று,
யான் கண்டனன் அவன் ஆடாகுதலே''

*

(புறநானூறு : பாடல் : 85
பாடியவர் : நற்கண்ணையார்
பாடப்பட்டோன் : சோழன் போரவைக்கோ பெருநற்கிள்ளி)

''சுடுங்காதல் நெருப்பாலே சுவைப்பண்டம் சமைத்து

கடுந்தமிழ்ச் சொல்லாலே இப்பாடல் இயற்றியுள்ளேன்.
இனியவளே! என் தோழி பொற்கொடியே!
இதன் கருத்தை எளிய நடையில் கூறுகின்றேன், கேள்!
உளங்கவர்ந்த என்னுயிர்த் தலைவனுக்கு
ஊரும் இதுவல்ல; நாடும் இதுவல்ல - அதனாலே
ஒரு சாரார் அவன் தோளில் வெற்றிக்கிளி தொத்துமென்றும்,
மறுசாரார் மல்லனுக்கே வெற்றி - இந்த மறவனுக்கு
இல்லையென்றும்,
இரு கருத்தை உதிர்த்தார் எனினும்
இருவருமே இவனைத்தான் நினைத்திருந்தார்
என்பதிலே என் மனதுக்கோர் மகிழ்ச்சி தோன்றி

அன்பனது வெற்றி உறுதி உறுதியென்று
சிலம்பொலிக்க ஓடிச்சென்ற நான் - உளம்
சிலிர்க்கப் போர் முடிவை எதிர்நோக்கி - என்
மனையின்கண் வளர்ந்துயர்ந்த
பனைமரத்தின் மறைவில் நின்று
நினைவனைத்தும் அவன்மீது பாயவிட்டு,
எனைக்கவர்ந்தோன் இறுதியிலே வென்றுவிட்ட காட்சி
கண்டேன்.''

இப்படிப்

பாட்டும், பாட்டுக்குப் பொருளுமுரைத்து
வாட்டும் காதல் நிறைவேற வழியொன்று சொல்லென்று
வரம் கேட்டுத் தோழியிடம் தவமிருந்த நற்கண்ணைக்
கரம் பிடித்துத் தோழி சொன்னாள்;

''செந்தாமரை மலரே! நீ தேடும் செங்கதிரோன்;
செக்கர்வானத்தில் நெடுந்தொலைவில் இருப்பதாக
எண்ணிடாதே!

முந்தாநாள் முரட்டு மல்லனை வீழ்த்திய மழவன்
முதுபுலவர் சாத்தந்தைப் பெருமானுடன் - இங்கிருந்து
மூன்று வீடு தள்ளித்தான் இருக்கின்றான்.
வந்தால் நீ என்னோடு; காட்டுகின்றேன்'' என்றாள்.

''தடாகம் நோக்கி வானம் தானாக வந்துவிட்டால்
தாமரைக்குச் சூரியன் கைக்கெட்டும் தொலைவுதான் - எனினும்,
அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு எனும் பெண்ணியல்பு
எச்சரிக்கை செய்து என் கையைத் தடுக்குதடி!
வலுவில் சென்று நான்; அவன்
வலையில் விழுந்த கதை உளறிவிட்டால்

வாய்விட்டுச் சிரித்து அவன்
வந்தவழிபோ என்று உரைப்பானேல்,
காய்க்காமல் கனியாமல் என் காதற்பூ;
காலை அரும்பி அப்போதே காய்ந்த மலர் ஆகாதோ?
கதிரை, நிலவைக் கண்டதுண்டு என் கண்கள்
கடலை, வானை, மலையை, முகிலை,
மயிலை, புருவை, கிளியை, குயிலை,
சிங்கம், புலியை, சிறுத்தையை, மானை,
இயற்கையின் எழிலை, இன்பப் பொழிலை,
செயற்கைச் சிலையை, சிறப்புறுகலையை
கண்டன எனினும் என் கண்கள்
கணத்தில் மீண்டு முகத்தில் அமைந்தன!
இன்றென் நிலைமை என்ன தெரியுமா? - அந்த
இனியனைக் கண்ட கண்கள் இன்னும்
என்னிடம் வந்து சேரவே இல்லை!
உன்னிடம் சொன்னேன் இந்த உண்மையினை''

என்றுரைத்த,

நற்கண்ணைக்கு வந்துள்ள நோயை எந்த
நாட்டு மருத்துவரும் போக்க முடியாதென்று
பொற்கொடியாம் அவள் தோழி - இச்செய்தியினைப்
போட்டுடைக்க நினைத்தாள் பெருங்கோழிநாய்கனிடம்!

அப்போது,

''மகளே; நற்கண்ணை!'' என்றழைத்தவாறு
மாநாய்கன் மனை புகுந்தான்!
''மகிழ்வு தரும் தகவல் ஒன்று கேளம்மா!
மல்லனை வென்றிட்ட பெருநற்கிள்ளியினை,
நாளை பகல் விருந்துக்கு வருகவென்று

நம் வீட்டுக்கு அழைத்துள்ளேன்!
சாத்தந்தைப் புலவரது சம்மதம் பெற்று, அவனும்
சரியென்று ஒப்புக் கொண்டான்'' என்றுரைத்தார்.

மணிமலர்ப்பாத சின்னவிரல் சிலிர்க்கத் தொடங்கி
மாங்கனிகள் இரண்டும் மென்மேலும் புடைத்தெழுந்து
மங்கைநல்லாள் மேனியெலாம் புல்லரித்து
மருதாணிச் சிவப்பாகக் கன்னங்கள் மாறித் தோன்ற
மான்குட்டி தோற்கின்ற துள்ளலுடன் நற்கண்ணை;
மயக்கம் வராமலே தோழியின் மடியில் சாய்ந்தாள்!

பொருள் விளக்கம் :

என்னைக்கு = என் தலைவருக்கு.
அன்மையானும் = இல்லாவிடினும். ஆடு = வெற்றி.
போந்தை = பனைமரம். குடமலை = மேற்குமலை.
குணகடல் = கீழ்த்திசைக்கடல்.


*



தோழி பொற்கொடியைத் தூது விடுத்துக் காதல்
தொடர்கதையைத் தொடங்கலாம் என்றிருந்த
நற்கண்ணைக்குத் தேடிச்சென்ற செல்வம், அவளை
நாடி வந்தது போல் நற்செய்தி வந்ததெனினும்,
தந்தை சொன்ன மற்றோர் செய்தி; அவள்
சிந்தையில் பெருங் குழப்பத்தை மூட்டியது!

பகைநாட்டு வேந்தொருவன் ஆமூரைக் கைப்பற்ற முதலில்
பசுமந்தை மடக்குதற்குப் படையோடு வருகின்றனென்றும்,
அப்பகையை விரட்டுதற்கு ஆமூர்த் தலைவன்;
ஆற்றலாளன் கிள்ளியினைத் தளபதியாய்
அனுப்பிவைக்கத் திட்டமிட்டு வேண்டினன் என்றும்,
கால்நடையைக் கவர்கின்ற பகை எதிர்த்து நடத்துகின்ற
களப்போராம் ''கரந்தை'' எனும் போருக்குக் கிள்ளி -
நாளை மாலை முரசறைந்து புறப்படுவான் என்றும்,
நற்கண்ணை வீட்டுக்கு விருந்துண்ண அதற்கிடையே
வருவானென்றும்,
பெருங்கோழிநாய்கன் முழுக்கதையும் முடித்தபின்தான்
பெருமூச்சைப் புறந்தள்ளி உயிர்மூச்சு வரப்பெற்று;
நாவை அசைக்காமல் பாவை நற்கண்ணை,
நெஞ்சுக்குள் தந்தைக்கு வாழ்த்துச் சொன்னாள்!

*
தானுண்டு தன் வேலையுண்டு என
இராப்பொழுதும் பகல் பொழுதும்
தாரணியில் இயற்கையிட்ட கடமையினை
இடையறாது செய்து வந்தபோதிலும்
தங்கள் தங்கள் நிலைக்கேற்பக் காதலர்கள்
இரவு பகல் இரண்டினையும் ஏசுவதும்
ஏற்றிப் போற்றுவதும் இயல்பேயன்றோ!
மேனியிரண்டும் ஒன்றுகி மேதினியை மறந்திருக்கும்போது
ஏனிந்த இரவுக்கு அதற்குள்ளே முயலோட்டமென
மிகச் சினந்து குதிப்பாரும் உண்டு!



பகல் எல்லாம் உள்ளத்தை வதைக்கின்ற தாபத்தை
படுக்கையிலே ஒரு கைபார்ப்போமெனச் சூளுரைப்போர்;
அந்திமாலை வந்துவிடின் அகம் குளிர்ந்து,
மந்திப் பகல் தொலைந்ததென்னும் மகிழ்ச்சியிலே - காதல்
சந்திப்புக்குத் தோதாக வருகின்ற இரவுக்கு வாழ்த்துரைப்பர்!

இங்கு நற்கண்ணை நாயகியின் நிலையே வேறு!
நுங்கு நிகர் நெடுங்கண்கள் விழித்தவாறு,

இரவெல்லாம் படுக்கையிலே உறக்கமின்றி
நிமிர்ந்தும், சாய்ந்தும், புரண்டும், எழுந்தும்
நினைவெல்லாம் கிள்ளியாக நிலைகுலைந்தாள்!

அதற்குள் இரவு முடிந்ததோ என்று
அணைப்புக்குள் கிடப்பவர்கள் அதிர்வதுண்டு!
ஆனால் இவளோ; ஏனிந்த ''ஆமூர் இரவு'' மட்டும்
ஆமைபோல் நத்தை போல் நகர்கின்றதென அலட்டிக்
கொண்டாள்!

''ஆருயிராம் என் கிள்ளியினை வரவேற்கும் வாய்ப்புதனை;
அதிகாலைக் கதிர் விரைவில் எழுந்தாலன்றே பெறமுடியும்!
இவ்வூர்ச் சேவலுக்கென்ன இருமலா? சளியா? காய்ச்சலா?
இல்லையெனில் தொண்டையில்தான் அடைப்பேதும் உண்டா?
இன்னும் ஏன் ஊர்ச்சேவல் விடியலுக்குக் கூவவில்லை?
இச் சோம்பேறிகள் கூவாவிடில் வைகறைதான் விழித்திடாதோ?
தோழி எங்கே போய்விட்டாள்? அவளிருந்தால்
கோழி போலக் கூவச் சொல்லிச் சூரியனை எழுப்பலாமே!''

மின்னல் கொடி மங்கை நற்கண்ணை மிக வருந்திப்
பின்னல் சடை அவிழ்ப்பாள்; பின் முடிவாள்!
என்ன நேர்ந்தது இந்தக் கிழக்கு மலருக்கு?
ஏன் இன்னும் மலரவில்லையென ஒடிவாள்!

''தெள்ளமுதே! திருமகளே! தேடற்கரிய ஓவியமே!
நள்ளிரவில் நீ மட்டும் தூங்காமல் துவளுவது ஏன்?''

கள்ளமிலா நெஞ்சத்துத் தாய், அவள் அருகே வந்து
வெள்ளம்போல் அன்புதனைப் பொழிந்து கேட்டாள்!

''முள்ளொன்று காலில் தைத்தால் எளிதாக எடுத்திடலாம்
அம்மா! அந்த
முள்ளே நம் நெஞ்சில் தைத்துவிட்டால் எடுப்பதென்ன
எளிதான செயலா தாயே?''

''உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்றாய் மகளே!
எனக்குச்

''சுள்''என்று கோபம் வருவதற்குள் உண்மையைச்
சொல்லிவிடு'' என்றாள்!

''அன்னாய்! கேள்! அரிய பாடல் ஒன்றெழுதி
நன்னாளாம் நாளை விருந்துக்கு வருகின்ற கிள்ளியிடம்
பரிசாகத் தருவதற்குத் திட்டமிட்டுப்
பறக்கின்றேன் கற்பனை வானில் சிறகடித்து!'' என்று
பக்குவமாய்ப் பொய் கூறித் தாயை அனுப்பிவிட்டு
படுக்கைத் தலையணையில் மார்பழுத்திப் படுத்துக்கொண்டாள்!

கற்பனையெதுவும் கருத்தரிக்காக் காரணத்தால்
கவிதையெழுதக் கண்ணுறக்கமின்றித்
தவிப்பதாகத் தாயிடத்தில் பொய்யுரைத்துத்
தப்பித்தாள் என்றாலும் நற்கண்ணை;
தன்னிலையைச் சூசகமாய் விளக்குதற்குப்
பொன்மணியாய்க் கவிதையொன்றை ஓலையிலே தீட்டி,
மார்புக் கச்சைக்குள் மறைத்து வைத்து,
மறுநாள் கிள்ளி வந்தவுடன் தருவதற்குத்
தயாராய்த்தான் காத்திருந்தாள் - அதை அறியாத்

தாயார்தான் தன் மகளின் பேச்சை நம்பித்
தலைசாய்த்தாள் கூடத்தில்! பாவம்; மகளின்
நிலை அறியா வெகுளி அன்னை!

*

இரவென்னும் இமைப் பேழையினைத் திறந்துகொண்டு
வெள்ளை விழிப்பகல்; மெல்ல எட்டிப்பார்த்தவுடன்,

குறித்த நேரம் தவறாமல் ஊர்ச் சேவல் கூவியது!
குணதிசையில் உதயசூரியனும் மேவியது!

*

அலைகடலோடும் வணிகன் இல்லத்து அடுக்களையில்
அய்ந்தாறு பணியாட்கள் கூடி அமளிதுமளியாய் ஆடி ஓடினர்!
இலைகள் எல்லாம் தலைவாழையாய் இருக்கட்டுமென்றாள்
அன்னை!

குலைகுலையாய்க் கனிவகைகள் குவியட்டுமென்றார் தந்தை!
கொத்துக் கறியை நெய் சொட்டச் சொட்ட வதக்குக என்றாள்
தோழி!

கோழிச் சப்பையில் மிளகுக்குழம்பிட்டு, நாமணக்கச் செய்திடுக
என்றாள் நற்கண்ணை!

சீரகச் சம்பா அரிசியை உலையிலிடுமுன்
நீருடன் பாலையும் சரிபாதி கலந்திடுக என்றாள் அன்னை!
கட்டித் தயிரைக் கையிலெடுத்தால் வெண்ணெய்
உருண்டைபோல் இருக்க வேண்டுமென்றார் தந்தை!

அப்பமுடன் ஆட்டுக்கால் எலும்புச் சாறூற்றி
ஊறவைத்து உருசியினைப் பெருக்கிடுக என்றுரைத்தாள்
நற்கண்ணை!
''உப்பு மட்டும் போடுதற்கு மறந்திடாதீர்!
உப்பில்லாப் பண்டமும் ஒருதலைக்காதலும் குப்பையிலே!''
எனச் சொன்னாள் தோழி!

திடுக்கிட்டாள் நற்கண்ணை!

தெப்பமென இன்பத் திருக்குளத்தில் மிதந்திட்ட நிலைமாறி
அப்படியே சோர்ந்து போனாள், அமங்கலச் சொல் கேட்டவுடன்!
''தப்பு! தப்பு! பெண்ணே!'' என்று தோழி
தாடையிலே போட்டுக்கொண்டும், தணியவில்லை
அவள் கோபம்!

*

அழைக்கப்பட்டோர் எல்லாம் விருந்துக்கு வந்தபோது
அன்புடனே வரவேற்று, அமரவைத்துப்
பெருங்கோழிநாய்கன்; தன் துணைவி பெருந்தேவிநாச்சியையும்
பெற்ற மகள் நற்கண்ணையுடன் உற்ற தோழி
பொற்கொடியினையும்
ஆமூர்த்தலைவனுக்கும் அடலேறு நற்கிள்ளிக்கும்
அவர்களுடன் வந்திருந்த பெரும்புலவர் சாத்தந்தைக்கும்
அறிமுகம் செய்துவைத்துப் புன்முறுவல் பூத்தபோது;
பெருமாட்டியொருத்தியினைப் பெருநற்கிள்ளி
பெருமை பொங்கச் சுட்டிக்காட்டி,
''இவர்கள் யார் தெரியுமா உங்களுக்கு? - நான்,
இளமையிலே தாயிழந்த குறைதீர்த்து - என்
இன்னுயிர் காத்து இவ்வண்ணம் வளர்த்து விட்ட

கன்னித் தமிழ்க் கவியரசி **காவற்பெண்டு** இவர்தான்'' என்றான்.
கரங்குவித்து ஒருவருக்கொருவர் வணக்கம் செய்து,
கனிந்த அன்பைப் பரிமாறிக்கொண்டு,
விருந்தருந்தி முடித்தவுடன் விழியிமைகள் படபடக்க;
வேங்கைநிகர்க் கிள்ளியிடம் விரைந்து வந்தாள் நற்கண்ணை!

''இங்கு வந்து எம் இல்லமும் உள்ளமும் நீவிர்
இன்புறச் செய்தமைக்கு இதயத்து நன்றியினை
ஓலையில் ஒரு பாட்டாக ஆக்கியுள்ளேன்;
ஓய்விருக்கும்போது படித்தால் போதும்!'' என்றாள்.

பெற்றோர்கள், மற்றோர்கள் முன்னிலையில்
படித்து விடுவாளே என நடுங்கி
முற்றுகத் தனைமறந்து நற்கண்ணை நின்றபோது;

''கொற்றவனே! கொடும்பகைவர் ஆமூர் நோக்கி
குதிரைப்படைகளுடன் வருகின்றார்'' என்று
கட்கம் ஏந்திய காவலன் ஒருவன்
காற்றெனக் கடிது ஓடிவந்தான்!

''படை வகுக்கப் பாசறைக்குப் போகின்றேன்
விடை கொடுப்பீர்'' என வணங்கி,
புலிப்போத்து நடைபயிலும் நற்கிள்ளி,
புயல் போலப் பாய்ந்திட்டான் புரவிமீது!
ஆமூர்ப் பாசறைக்குள் சென்றவுடன் படைகளை
அணிஅணியாய்க் கிளம்புதற்கு ஆணையிட்டான்!
அதற்கிடையே நற்கண்ணை தந்திட்டக் கவிதையினை,
அவசரமாய்ப் படிப்பதற்கும் முனைந்திட்டான்.

அந்த ஓலை இதுதான்:-

* **''என்ஐ புற்கையுண்டும் பெருந்தோ ளன்னே**
யாமே புறஞ்சிறை இருந்தும் பொன்னன் னம்மே,
போரெதிர்ந்து என்ஐ போர்க்களம் புகினே!
கல்லென் பேரூர் விழவுடை ஆங்கண்,
ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்கு
உமணர் வெரூஉம் துறையன் னன்னே!''

*

(புறநானூறு : பாடல் : 84
பாடியவர் : நற்கண்ணையார்
பாடப்பட்டோன் : சோழன் போரவைக்கோ பெருநற்கிள்ளி)

படித்துப் பார்த்தான் நற்கிள்ளி; அப்பாட்டை
வடித்துப் பார்த்தான் எளிய நடைக் கவிதைவரியாக!

அது; இதோ :-

''ஏற்றமிகு உறையூர் நாடிழந்த என்தலைவன்;
எளிய உணவருந்தி வாழ்கின்றனெனினும்,
எதிரிகள் அஞ்சியோடும் வலிய தோளுடையான்!
என் மனையோ அவன் வாழுமிடத்திற்கு அருகிருந்தும்
என்ன பயன்? என்
மென்தோளில் அவன் மேனிபடுவதற்கு வழியில்லை!
அந்நாளை எதிர்பார்த்து என்னுடல் மிக வாடிப்
பொன்போலும் பசலை நிறம் படர்ந்ததுவே!
ஒப்பில்லா என் தலைவன் போருக்குச் சென்றுளோ;
உப்பு வணிகர்களைப் பயந்தோட வைக்கின்றோமெனத்
தற்பெருமையாய்ப் பேரூர்ப் போர் விழாவில்

தருக்கித் திரியும் வீரர்கள் சிலர்;
தம் வலியைத் தாமே இழப்பது போல்
என் தலைவன் முன்னே வீரர்கள் வருந்திடுவர் அன்றே?
எதிர்த்தரப்பு வீரர்களை வருத்துதல் போல்
என்னையும் என் தலைவன் வருத்துதல் நன்றே?''

இவ்வாறு;

நற்கண்ணை எழுதித்தந்த பாடலிலே
நயம் மட்டும் காணவில்லை நற்கிள்ளி! அவள்
சொற்கண்டு சொக்கிவிட்டால் சிக்கிக்கொள்வோமென்று
பயமுறுத்தி நெஞ்சத்தை அடக்கிவைத்தான்!
''போர்வாளைத்தான் நான் காதலிக்கின்றேன்;
பூவிதழை அல்ல! அல்ல! அல்லவே அல்ல!''
என்றேங்கி உயர்த்திப் பிடித்தான் வாளை - ஒரு
குன்றேறி நின்று வீரர்களை அழைத்திட்டான் - அந்தக் காளை!

பொருள் விளக்கம் :

என்ஐ = என் தலைவன். புற்கை = எளிய உணவு.
புறஞ்சிறை = அருகில் உள்ள இடம்.
பொன்னன் னம்மே = பொன்னிறமாய்ப் பசலை படர்ந்ததே.
ஏமுற்றுக் கழிந்த மள்ளர் = தமது வலிவைத் தாமே புகழ்ந்து இறுமாப்புற்று வலிவை இழந்திடும் வீரர்கள். உமணர் = உப்பு வியாபாரம் செய்வோர்.

*



ஆமூர்ப் பெருமக்காள்; ஆர்த்தெழுவீர் போருக்கு!
அதிரட்டும் முக்காவல் நாட்டுக் கோட்டை முரசங்கள்!

நாப்பறை கொட்டி நம்மண் மீது காலூன்றும் பகையைப்
போர்ப்பறை கொட்டிப் புழுதி மேடாக்கிடுவோம்!

கருவாகி உருவானர் ஒரு பெண் வயிற்றில்;
கல்லறை வடிவானர் இந்த மண் வயிற்றில்!

நிறைவான வாழ்வு எனல் நூருண்டு வாழ்வதல்ல!
குறைவான வயதில் மாய்ந்திடினும்; அஃதோர்

குறிக்கோளுக்காக எனில் - அதனைவிட
நிறைவான வாழ்வெதுவும் மானமுள்ளோர்க்கில்லை!

மணிமகுடம், மாணிக்கச் சிம்மாசனம், மஞ்சம், கொஞ்சல்,
பணிபுரியப் பன்னூறு ஆளும், தேளும் கைகட்டிநின்று
- கெஞ்சல்!

இவையனைத்தும் பெறல் எளிது இவ்வையகத்தில்!
இளித்தும், நெளித்தும், ஏற்றியும் போற்றியும்,

இங்கிதம் அறியாதவனை இணையிலா ஏந்தலென்றும்
இன்சொல் பயிலானை நன்னெறி ஆசான் என்றும்,

பண்பாடு மறுப்போனை, பார்புகழ் மேதை யென்றும்
பழிவாங்கும் குணத்தோனை, பரந்தமனச் சான்றோன் என்றும்

நாயினும் கீழாய்ப் பிறரை மதிப்பவனைத்
தாயினும் சாலச் சிறந்தோன் என்றும்,

கல்லா மூடனைக் கற்றறி பெரியோய் என்றும்,
பொல்லாக் கயவனைப் புவிக்கோர் நல்லாய் என்றும்,

இல்லாச் சிறப்பெலாம் எழுதியும் பேசியும்
எல்லாம் பெறுவது எளிதே இவ்வையகத்தில்! - ஆனால்;

மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு
மரணம் தழுவினும் களத்தினில் சிரித்து,

மார்பினில் விழுப்புண் தாங்கியே வீழ்ந்து,
மாப்புகழ் எய்திடல் மாணப்பெரிதே!

குலமகள் ஒருத்தியைப் புணர்ந்து குலாவிக்
கொள்ளை இன்பம் பெறுவதைக் காட்டிலும் - நம்

நிலமகள்; பகைவர்க்கு அடிமையாகாமல்
தடுத்திடும் போரில் நம்முயிர் தந்து - அவள்

நெடுமடிதனிலே நீள்துயில் கொள்ளலே
நீடித்த இன்பம், நிலைத்திட வழியாம்!

இமிழ் கடலின் அலைபோல எழுந்தும் வீழ்ந்தும்,
தமிழ் இனத்தின் வரலாறு தடுமாறிப் போகாமல்;

கமழ்சோலை மணம்போல காசினியில் பரவுதற்கு
அமிழ்தான உயிர்க் கொள்கை மானமொன்றே!
அக்கொள்கையினை யாரிடமோ அடமானம் வைத்துவிட்டு
அணிமணிகள், அரண்மனைகள் தக்கவைக்கும் மனிதர்களைத்

''தக்கை மனிதர்'' என்போம்!
தமிழரென ஒப்பமாட்டோம்!
எனவே,


கார்காலத்து மழைத்தூறல் எனக் கணைகள் வந்து தைத்திடினும்,
கழனி மடைகளிலே துள்ளுகின்ற கெண்டைமீன்களென வேல்கள்
வந்து பாய்ந்திடினும்,

முகபடாம் பூண்டு சினந்தோடி வரும் யானைகளின்
முரட்டுத் தந்தங்கள் குத்திக் கிழித்திடினும்

மங்கையொருத்தியின் இதழையும் வெல்லும்,
மரணத்தின் தழுவல் என்று; போர்ச்

சங்கை எடுத்து முழங்கிடுக! - களத்தில் நும்
பங்கைச் செலுத்திட முன்வருக!''
இவ்வாறு,
வாழை மரங்களையும்
வைரம் பாய்ந்த தேக்குகளாக்கி
கோழைகட்கும் முதுகெலும்பு வழங்குகின்ற உரையை
சோழன் நற்கிள்ளிச் சொல்லி முடித்தவுடன்

புழுக்கள் கூடப் புலியாக உருவெடுத்துப் பகை
அழுக்கைப் போக்குதற்குப் படைஎடுத்த காட்சி என்னே!



ஆமூர் வீதியிலே,
அணிவகுத்துச் செல்கின்ற படை நடுவே
மணிமுடியாய் நற்கிள்ளி, தலைமையேற்க
அவன் தேர் அருகே சாத்தந்தை ஒரு தேரில் வீற்றிருக்க
நமனேயஞ்சாப் படை திரண்டு வருதல் கண்டு
நற்கண்ணை, பொற்கொடியின் தோள்மீது முகம் புதைத்து,
உளம்புகுந்தோன் திருவுருவைக் கண்ட களிப்பும்,,
களம்புகுந்திடுகின்றான் அவன் என்ற தவிப்பும்,
அகத்தில் தோன்றி ஆட்டிப் படைத்திட
முகத்தில் மலர்ச்சி காட்டிட முயன்று;
''நலமுடனே திரும்புக நம் நாட்டுப்படைகள்'', என்று
குலக்கொடியாள் கண் கலங்க வாழ்த்தி நின்றாள்!

''அதோபார்! சாத்தந்தை''யென்று குதித்து
அவள் தோழி பொற்கொடி அருகிலோர் தேரினைக்
காட்டியதுதான் தாமதம்; கண்ணிமைப்போதில்
காற்றையும் தோற்கடித்துப் பாய்ந்து பறந்து
கவிஞரின் தேர்முன்னே போய் நற்கண்ணை நின்றாள்!
கன்னியுள்ளம் புரிந்துகொண்ட புலவர்பிரான் இறங்கி வந்து;
''கவிப்பாவாய்! உனக்குக் கவலையேதும் தேவையில்லை

பகை எதிர்த்து வெற்றி வாகை சூடிக்கொண்டு
நகை முழக்கி வந்திடுவான் நற்கிள்ளி!'' என்றுரைத்தார்!

''உண்மையில் வெற்றி உறுதி என்கின்றீரா? என்
உயிரையே உம்முடன் அனுப்புகிறேன்'' என்றாள்!

''ஒரு சொல்லில் உன் இதயத்தில் நீ
உருவாக்கி வைத்துள்ள சிற்பத்தைக் காட்டிவிட்டாய்''
என்றார் புலவர்!

நாணத்தால் குனிந்த தலை நிமிராமல் நற்கண்ணை;
''நம்நாட்டு வெற்றிக்கு உங்கள் வாழ்த்துத் தேவை'', என்றாள்!

''நாட்டோரின் வெற்றிக்கு மட்டுமல்ல; நற்கிள்ளியிடம் நீ
கொடுத்த
பாட்டோலை வெற்றிக்கும் பாடுபடுவேன்'', என்றார்!

கைமலரை, அவர் கால்மலரில் வைத்துத் தொழுது,
''கரந்தைப் போர் வெல்க!'' என்றாள்!

அதிலென்ன ஐயமென்று சாத்தந்தை
அப்போதே கவிதை யாத்தார்!

*

* ''ஆர்ப்பு எழு கடலினும் பெரிது; அவன் களிறே
கார்ப்பெயல் உருமின் முழங்கல் ஆனவே;
யார்கொல் அளியர் தாமே ஆர்; நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைப்பட்டோரே?''

*

(புறநானூறு : பாடல் : 81
பாடியவர் : சாத்தந்தையார்
பாடப்பட்டோன் : சோழன் போரவைக்கோ பெருநற்கிள்ளி)

புலவர் பெருமானின் உறுதிமிகு பாடல் கேட்டுப்
புன்னகையைத் தவழவிட்டாள் அந்தப் பூங்கொடியாள்!

அப்போது,

''படை முகத்தில் பாட்டென்ன பாவலரே?'' என்று - இள
நகையை முகத்தில் தேக்கி இளவல் கிள்ளி வந்தவுடன் - ''இந்த
முல்லைக்கொடி; போரினுல் உனக்குத் தொல்லை வருமோ
எனக் கலங்குகிறுள்'' என்றூர்!
''தொல்லை ஒரு வேளை வந்தாலும் வரலாம் - அதனுல்
ஓடிவிடலாம் என்ற அறிவுரையா?'' என்றூன்!

நற்கிள்ளியின் கேலியும் கோபமும் கண்டு
நற்கண்ணை, படபடத்துப் போனுள் எனினும்;
நயமாய்ச் சொன்னுள் -

''ஏறு தழுவி வென்றவர்க்கு மாலை சூடும் தமிழ்நிலத்தில்
- போரில்
ஓடி நழுவுகின்ற ஆடவரை ஒரு பெண்ணும் ஏற்கமாட்டாள்!''

அதற்கு வெடுக்கென்று பதில் சொல்ல விரைந்தான் கிள்ளி!
அதற்குள், ''விளையாட்டு போதும்!'' என்று புலவர்பிரான்
தடுத்துவிட்டு,

''நற்கிள்ளி வீரம்பற்றி நானறிய மாட்டேனு? - இதோ;
நற்கண்ணைக்கு நான் சொன்ன பாடலின் பொருளைக்கேள்!''
என்றூர்!

''ஆத்திமாலை சூடியுள்ள சோழ இளவல்
அணிவகுத்து நடத்துகின்ற போர்ப்படையோ;
ஆர்த்தெழுந்து கிளப்புகின்ற ஒலியாலே,

அலைகடல் ஏழினையும் வெல்லுமாம்! அவன்
களிறுகள் களத்திலிடு முழக்கமோ எனில்

கார்கால இடியோசைதான்! இந்நிலையில்
அவன் கையினில் பகைவர் சிக்கிவிடின்?
அந்தோ; அந்தப் பரிதாபத்துக்குரியோர் யாரோ?''

புலவரின் புகழ்ச்சியுரை பிடிக்காமல் அவன் தலைகுனிந்தான்! பூரிப்புப் பெருமிதத்தால் நற்கண்ணை தலைநிமிர்ந்தாள்!

அதற்குள் ஒரு குரல் :-

''என்னடி மகளே இது! எங்கு வந்தாய் - இங்கே?
இரும்படிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை?''

பொன்னகை ரதம் போலப் பெருந்தேவித் தாய் தோன்றி, அவள் புன்னகை மறையத் திட்டி வீட்டுக்குள் இழுத்துப் போனாள்!

பொருள் விளக்கம் :

கார்ப்பெயல் உருமின் = மழைகால இடி முழக்கம்.
நார்ச் செறியத் தொடுத்த ஆர்கண்ணி = நார் கொண்டு தொடுக்கப்பட்ட ஆத்திமாலை. அளியர் = பரிதாபத்திற்குரியவர் கவிகை மள்ளன் = கொடையாளியான வீரன்.

*



"நானும் சிலநாளாய்ப் பார்க்கின்றேன் உன்னை!
'தேனும் கசந்ததடி' எனும் நிலையில் இருக்கின்றாய் பெண்ணே!

பருவத்தின் கோளாறெனக் கண்டும் காணுதிருந்தால் ஒரு
துருவத்தில் நின்று நீ, மறுதுருவத்தைத் தொடுகின்ற முயற்சியிலே

இளங்கன்று பயமறியாதென்பது போல் ஈடுபடல் தீதாகும்
- அதனை,

இப்போதே தடுத்துவிடல் ஒரு தாயின் கடமையாகும்!

உச்சிமலை மீதுள்ள குறிஞ்சி மலர் பறிப்பதற்கு
ஊனமுற்றுக் கால்நொண்டும் பெண்ணொருத்தி முனையலாமா?

உருள்பெருந்தேரின் கலசத்தில் ஒளிர்கின்ற கொடி அசைய,
உறையூரின் சோழமகன் போர்முனைக்குச் செல்லும்போது; நீ

ஓடிச்சென்று வழிமறித்து உரையாடல் நிகழ்த்தியதை
ஊர்கண்டால் என்ன சொல்லும்?

பேர்கொண்ட பெருவணிகன் குடும்பத்துக்கோர் இழுக்குவரின்
நேர் நின்று உற்றூர் முன் பேசுதற்கு உன் தந்தை
நாணவேண்டும்!

வாணிபக் குடியினர் நாம் - அவனை வையம் ஆளப் பிறந்த
குலம்!

ஏணிகள் அடுக்கடுக்காய் வைத்தாலும் எட்டாத காதலுக்கு,

ஏங்கித் தவிக்காதே, ஏந்திழையே! என் மகளே!
வீங்கிக் கிடக்குது உன் விழியிரண்டும் விரால் மீனைப்!

தூங்கித் தொலைத்திடுக; முன்போல சேல்கெண்டை ஆகிவிடும்!"
ஆத்திரத்தைக் காட்டியும் அரவணைப்பைக் கொட்டியும்

அறிவுரை புகன்ற அன்னை, அவளை விட்டகன்றபின்னே
"அவனை மறப்பதெனில் என் ஆவியைத் துறக்க வேண்டும்"
என்றலறி,


அணைத்துக் கொண்டாள் நற்கண்ணை; பொற்கொடியை!
''மறப்பதா? ஆவிதுறப்பதா? என்பதை நாம்
மறுபடி யோசிக்கலாம்; முதலில்
அல்லதை விடுத்து நல்லதையே சிந்திப்போம்!
புல்லர்தம் படையுடன் பொருதிடும் கிள்ளியைப்
பொழுதெல்லாம் நீ எண்ணியெண்ணி - கன்னத்தில்
உழுதிடும் அளவுக்குப் பெருக்குகின்றாய் கண்ணீர்!
தடுக்கின்றாள் அன்னையென்று துடிக்கின்றாய்,
ஒடிக்கின்றாள் உன் மனத்தையென்று நினைக்காதே!
ஓடுகின்ற கோயில் தேர்களுக்குப்
போடுகின்ற முட்டுக்கட்டையெல்லாம் - தேரை
ஓடாமல் செய்வதற்கா? இல்லை, இல்லை! தெருவில்
ஒழுங்காகச் செல்வதற்கே!
பாய்ந்தோடும் குதிரையின் கடிவாளம் இழுத்தலும் தளர்த்தலும்,
பயணம் சரியாய் நடந்திட வேண்டுமென்பதற்கல்லால்,
ஓய்ந்து ஓரிடம் வீழ்ந்து கிடப்பதற்கோ?

ஆய்ந்துபார் ஆரணங்கே!
காய்ந்து சினந்து கடிந்துகொண்டாலும் அன்னை,
தேய்ந்திடுநிலவாய் நின்காதல் ஆகாதிருக்கவே எச்சரிக்கின்றாள்
உன்னை!

வளர்பிறையாய் உம் காதல் வளர்ந்து
குளிர்நிலவாய் அமுதமழை பொழிந்தால்
குலமகளே! உமை வாழ்த்தாமல்
உன் தாயின் மனமென்ன;
நிலமகழ்ந்து எடுத்திட்ட
இரும்பாகப் போமோ?

கருவுற்ற காலத்தில் அவள் நாவினைக்
கசப்பாக்கித் தொல்லை தந்தபோது
திருவுற்ற அந்தத் தாய்
புளிப்பாலே கசப்பு போக்கி - உன்
புன்னகை காணத் தவமிருந்தாள்!
ஆலின் இலைபோன்ற அவள் அழகு வயிற்றை - ஒரு
சாலின் வடிவாக்கி நீ அலங்கோலம் தந்தபோதும்,

உன் கோலம் காண்பதற்கே - அவள்
உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாள்!
மணிவயிற்றுக்குள்ளிருந்து நீ
மாறி மாறி உதைத்தபோதும்,



வலிபொறுத்துக் கொண்டபடி
அணியென்ன பூட்டலாம் அந்தக் காலுக்கென்று
ஆயிரம் சிந்தனை செய்திருந்தாள்!

ஊதையில் துரும்பெனத் தாயுடல் அலைக்கழித்து
உலகில் நீ பிறந்துருண்டு அழுதபோது - இன்ப
போதையில் துன்பமெலாம் மறந்திருந்தாள்! இன்றவள், உன்
பாதையில் பாடம் சொல்லல் ஒரு பாபமா?
பூவைத்துப் பொட்டிட்டு முத்தமாரி பெய்தபோது - நீ,
பூவையாய் ஆவது எப்போதென்று ஆண்டெண்ணிக் கிடந்த
அன்னை;

கோவையாய்ச் சிவந்த உன் இதழைக் கிளியொன்று
கொத்துமென்று தெரியாத பேதையா என்ன?
ஆற்றில் இறங்கிக் குளிக்கத் தடைகூறவில்லை அன்னை!
ஆழம் தெரிந்து இறங்கென்று கூறுகின்றுள் அவ்வளவே!
அதற்குள் நீ அவன் வருமட்டும் வழிபார்த்துக் காத்திருந்து
அல்லும் பகலும் உறக்கமின்றி வாடிவதங்கி,
உடலைக் கெடுத்துக் கொள்கின்றேன் என்றுள்;
உனை உயிராக நினைக்கின்ற பெற்றோர்கள் ஒப்புவரோ?
உன் தோழி கெஞ்சுகின்றேன்; உடனே கேள்!
உறங்கி எழு! உற்சாகமாய் இரு!
உறையூர் எங்கும் ஓடிவிடாது - உன்
அறையூரில் அடங்கத்தான் போகிறது!'' என்றுரைத்துச்
சிரித்தாள் தோழி!

''உறங்காமல் இருக்கவில்லை நான்!
உறங்கித்தான் விழித்துக் கொண்டேன் - சற்று
சிணுங்காமல் கேள் என் கதையை!
கண்மூடித் துயில் கொள்ளும் நேரம்,
கனவில் என்னை நெருடுவதும் அவன் நினைவே!

*

* ''ஊர்நடுவே உயர்ந்து நிற்கும் மாமரத்தில்
முட்களைப் போல் பற்கள் கொண்ட வெளவால்
ஊஞ்சலாடி ஒரு கிளையில் தலைகீழாய்த் தூங்கி
அழிசியெனும் ஆர்க்காட்டுச் சோழவேந்தனது
அடர்த்திமிகு காட்டகத்து நெல்லிக்கனியின்
இளம்புளிப்புச் சுவையை நுகர்வதாக,
இனிய கனவொன்று கண்டது போல்;
கன்னியென்னையும் கனவொன்று மெய்மறக்கச்
செய்ததடி!

காலமெல்லாம் அக்கனவில் திளைத்திருந்தால்
காதலரிருவர் கட்டுண்டு மகிழ்ந்திருப்போம்!
கண்கள் செய்த தவருலே விழித்துக் கொண்டேன்;
கலைந்ததடி இன்பமெலாம் கதிர்பட்ட பனிபோலே!''

*

இவ்வாறு,

பொற்கொடிக்குத் தான் கண்ட கனவை
நற்கண்ணை எடுத்துரைத்துத் துவண்டபோது,
போர்முரசின் வெற்றிஒலி - விண்ணைப்
பொடிசெய்யும் விதத்தினிலே எழுந்ததுகாண்

''வெற்றி யாருக்கு? யாருக்கு?'' என்று நற்கண்ணை
வீதிக்குப் பறந்து வந்தாள்!

*

*** ''உள்ளூர் மாஅத்த முள்எயிற்று வாவல்**
ஓங்கல் அம்சினைத் தூங்குதுயில் பொழுதின்
வெல்போர்ச் சோழர் அழிசிஅம் பெருங்காட்டு
நெல்லிஅம் புளிச்சுவைக் கனவி யாஅங்கு
அதுகழிந்தன்றே தோழி .....''

*

(நற்றிணை : பாடல் : 87
பாடியவர் : நற்கண்ணையார்)

பொருள் விளக்கம் :

முள்எயிற்றுவாவல் = முள்போன்ற பற்களையுடைய வெளவால். மாஅத்த ஓங்கல் அம்சினை = மாமரத்தின் உயர்ந்த அழகிய கிளை. தூங்குதுயில் = தொங்கிக் கொண்டு உறங்குதல்.

*



உறுபகையின் நெடுவாலை ஒட்ட அறுத்து,
இருகிழமை நடந்த போரில் வெற்றிகுவித்து
முக்காவல் நாட்டு மண்ணின் முரசதிர,
எக்காள முழக்கம் எட்டுத்திசை ஒலிக்க,
வருகின்றான் தித்தன் மகன் என்று வாழ்த்தி
தருகின்றார் வரவேற்பு ஆமூர் மக்கள்!

மணலில்லை வீதிகளில்; மலர்களேதான்!
முகிலில்லை விண்வெளியில்; கொடிகளேதான்!
வீட்டுக்குள் இருந்திட்ட மாந்தரெல்லாம்
நாட்டுக்கு வெற்றி தேடித்தந்தவனைக் காண்பதற்கு,
காட்டுக்குள் பெய்திட்ட மழைநீராய் ஓடிவந்தார்!


கூட்டுக்குள் கிடக்குமோ நற்கண்ணைக் கிளி மட்டும்?
''வெற்றி யாருக்கு?'' என விரைந்தோடி வந்தவளை,
''வேறு யாருக்குக் கிட்டும்?'' எனத் தழுவிக் கொண்டு,
சுற்றிச் சுழன்றாடுகின்றாள் பொற்கொடியாள்! அந்தச்
சுந்தரியோ மகிழ்ச்சியெனும் சுமைதாங்க முடியாமல்
தள்ளாடுகின்றாள்!

போரிகையின் ஒலிக்கேற்பப் பீடுநடை போட்டு
பெருமிதமாய் நிமிர்ந்துவரும் வெண்புரவிமீது
தூரிகை கொண்டெழுதா வீர ஓவியமாய்ப்
பெருநற்கிள்ளி அமர்ந்திருந்தான்!

களம் புகுந்து ஓய்வின்றிப் போர்புரிந்த காரணத்தால்
முகம், மழிக்க நேரமில்லை போலும் - அதனாலே
கருநிறமுடி கொஞ்சம் நாற்றுவிட்டுக்
குறுந்தாடி போலத் தோற்றமளித்திடினும் - அதுவும்

நற்கண்ணை நயனங்களில் புதிய போதையூட்டி
நாடி நரம்பெல்லாம் காதல் இசை மீட்டியது!

ஆமூர் வீதிகளின் இருமருங்கும் வாயிலோரம்
ஆடவர் பெண்டிர் அகலவிழித் திறந்துகொண்டு



கச்சைகட்டிக் களம் சென்ற தம் வீட்டுச் செல்வங்களில்
மிச்சம்மீதி, யார் வருவாரென எதிர்பார்த்து நின்றிருந்தார்!

வாள் ஓங்கிப் பிடித்தவாறு வரும் வீரன் - தாய்தந்தை
தாள் வணங்கித் தன்னுயிர்ப் பேடைதனைத் தழுவிக்கொள்வான்!
மற்றோர் போர்வீரன் களத்தில் மறைந்த செய்தியினை
மாலையொன்றை வாளுக்கிட்டுத் தந்து,
மறைமுகமாய் வீட்டார்க்கு உரைப்பர்;
மகனையிழந்த தாய்தந்தை ஆயினும்
மங்கலமிழந்த மனைவியே ஆயினும்
மனப்புயல் அடக்கிக்கொண்டு
மண்புகழ் ஓங்கிற்றென்பார் - அவர்
கண்மட்டும் சோகம் காட்டும் - நெஞ்சம்
புண்பட்டுப் போவான் கிள்ளி!

ஓரிடத்தில்,
தந்தை தனக்கென ஒடித்துவந்த யானையின்
தந்தங்கள் கண்டு மழலைகள் குதிக்கும்!
பிறிதோரிடத்தில்,
தந்தை ஏன் வரவில்லை அம்மா என்று
தளிர்நடைப் பிள்ளைகள் கொதிக்கும்!

குதிரை மீதமர்ந்தவாறு கிள்ளி அவற்றை
குமுறுகின்ற உள்ளமுடன் பார்ப்பான் - ''நாட்டைக்
கொலைக்காடாய் ஆக்குகின்ற போர் ஒன்று தேவைதானு?''
என்று
குற்றத்தால் குறுகுறுக்கும் தன் நெஞ்சத்தைக் கேட்பான்!

''மாற்றூர்; அமைதியெனும் கொள்கையினைக்
கோழைத்தனமெனக் கூறும்வரை
மாற்றமுடியுமோ மானமிகு வீரர்களின் போர்க்குணத்தை?
போர்வாளைப் பகையாளி ஓங்கும்போது - நாம்மட்டும்
பூப்பறித்துக் கொண்டிருந்தால்;
வீரமெனும் சுடுநெருப்பு;
ஈரம்பட்ட கரிதானே?''
உறுத்துதலால் உருகிவிட்ட கிள்ளியின் நெஞ்சில்
உடனடிக் கேள்விகளாய் இவை பிறக்கும்!

''நிறுத்தலாமே போரை'' என்ற நியாயவாதம்
நில்லாமலே ஓர் நொடியில் பறக்கும்!
''போர்வாளைத்தான் காதலிக்கின்றேன் - எனையீன்ற தமிழ்ப்
பூமியைத்தான் நேசிக்கின்றேன் - எதிரியின்
கூர்வாள் ஒன்று என் மார்பைக் கீறிக்

கொட்டுகின்ற ரத்தம்தான் மணம் வீசுகின்ற சந்தனமாம்!
வீரர்களைக் களத்தில் இறக்கிவிட்டு
வேடிக்கை பார்க்கும் வீணனல்ல!
வெங்கொடுமைச் சாக்காட்டுப் போர்க்களத்தை நான்
விளையாடும் பூக்காடாய் ஆக்கிக் கொண்டேன்!
சிங்கமெனச் செருமுனையில் சீறுகின்ற படையிலோர்
அங்கம் நான்! அவர்களில் ஒருவன் நான்!
களம்பட்டு மாண்ட வீரர்களைத் தொழுதிடுவேன் - அந்தக்
கடமை வீரர் வகுத்தவழிதான் எனக்குமென்று, பகைவர் உடல்
வாளால் உழுதிடுவேன்!''

இவ்வாறு,

உள்ளத்தில் உறுதிமொழி எடுத்துக் கொண்டு
வெள்ளம் போல் திரண்டமக்கள் வாழ்த்தொலிக்குக் கையசைத்து
முக்காவல் நாடுபெற்ற வெற்றியினைக் கொண்டாடும்
முத்துமண்டபத்துள் நுழைந்திட்டான்!

ஆமூர்த்தலைவன் அவனை ஆரத்தழுவி வரவேற்று
''அஞ்சா நெஞ்சினனே! நீ பொற்காலம் படைப்பாய்ச்
சோழநாட்டில்!'' என்றான்.

சாத்தந்தைப்புலவர் அருகில் வந்து உச்சிமோந்து,
''சரித்திரத்தின் வைர எழுத்தாய் ஒளிவிடுவாய்'' என்றார்!
பின்னர், சுற்றுமுற்றும் பார்த்த புலவர்;
''இன்னும் எங்கே காணவில்லை நற்கண்ணையை?'' என்றார்!

ஆயிரத்தில் ஒருத்தியாக அரங்கின் கோடியிலே
அமர்ந்திருந்தாள் நற்கண்ணை, தன் தோழியுடன்!

''அவளை எதற்காகத் தேடுகின்றீர் புலவரய்யா?
அதைக் கொஞ்சம் சொல்லுங்கள் முதலில்'' என்றாள்;
குவளை மலராம் நற்கண்ணைக்கு அன்னையென வாய்த்திட்ட
பெருந்தேவி!

''எதற்காகப் புலவர் அழைப்பார் என்று நானறிவேன்
குதர்க்கமாய் நீ எதுவும் கேட்டுக் குழப்பாதே'' என்று,
பெருங்கோழிநாய்கன் குறுக்கிட்டுத் தடுத்து
பெருந்தேவி நாச்சியாரைக் கையமர்த்தி வாயடைக்கச் செய்தான்!

''நற்கண்ணை, நல்ல தமிழ்க் கவியரசி என்பதால்
நற்கிள்ளி பெற்ற வெற்றியினைப் பாராட்டி
அற்புதமாய்ப் பாடல் ஒன்று வழங்கிடுவாள் என்றே, - அன்பு
தழைத்திட்ட உள்ளத்தால் - அவளை
அழைத்திட்டேன்'' என்றார் புலவர்!

''வெட்கம் இன்னும் எதற்காகப் பெண்ணே!
கட்கம் ஏந்திய காளையின் முன்னே,
கயல்விழியே; நீ நின்று புகழ்ப்பாட்டு உரைத்திட்டால்,
காலத்தை வென்று நிற்கும் புறப்பாட்டாய் அது, அமையும்
கண்ணே!

தயங்காமல் சென்றிடுக, அவை நடுவே! உன் பாடல் கேட்டு;
மயங்காமல் போகமாட்டான் உன் மனங்கவர்ந்தோன்'' எனத்
துணிவுரை தந்த தோழியின் செவியில்
தோகை நற்கண்ணே உதிர்த்த சொற்கள் - அந்தப்
பொற்கொடி புகன்றதுபோல்
புறப்பாட்டாய் ஆனது உண்மை!

1. ''கண்ணுக்கிடும் மை போன்ற கறுத்த குறுந்தாடியுடன்
காலில் வீரக்கழல் அணிந்த இளங்காளையினைக் கண்டு
கைவளைகள் தானே கழன்று எனைக் காட்டிக்கொடுக்குமென
கன்னியெனைப் பெற்ற என் தாய்க்காக அஞ்சுகின்றேன்!
கடும்பகை வெல்லும் கிள்ளியின் தோள் தழுவுதற்கு
கனிமரம் கண்ட கிள்ளைபோல் தவிக்கின்றேன் - எனினும்,
கற்றறிந்தோர் குழுமியுள்ள அவையினை எண்ணினால், இந்த
நற்கண்ணையினை நாணம் வந்து தடுக்குதடி!''

தோழி குறுக்கிட்டு,
''ஆதியிலே இருந்திருக்க வேண்டுமிந்த அறிவெல்லாம்! -
இப்போது
பாதிப்பனை ஏறியபின் அஞ்சுவதால் என்ன பயன்?
மீதிமரம் ஏறினால்தான் நுங்கெடுத்துச் சுவைக்கலாம்!
பீதிகொண்டு இறங்காதே! பின்னர் பித்து கொண்டு திரியாதே!''
தோழியின் சொற்கேட்டு நற்கண்ணைத்
துணிவுடனே எழுந்து வந்து - அவையோரைத்
தொழுது நின்றாள்!

ஆழியின் முத்துப் போல் தமிழ் எடுத்து
ஆமூர்த் தலைவனுக்கு வணக்கம் சொல்லி,

அறிஞர் பெருந்தகை சாத்தந்தையின்
அடிதொட்டு வாழ்த்துப் பெற்று,

அயலாரை வென்று வந்த உறையூர் இளவரசைக்
கயலாடும் விழியாலே கண்டு களித்து;

அவன் அஞ்சா நெஞ்சுக்கோர் எடுத்துக்காட்டை;
அவள், அவனை நினைத்தேங்கும் அகத்துறைப்பாட்டை;

வெற்றி விழா காண வந்தோர் வியந்து போற்ற
நெற்றியினைச் சுருக்கிக் கொண்டு, தாய் மட்டும் விழித்துப்
பார்க்கப் பாடுகின்றாள்!

2. வலிய தன் பாதத்தால் தாக்குண்ட விலங்குகள்,
வலப்புறம் வீழ்வதல்லால் இடப்புறம் வீழ்ந்தறியா
வேங்கைப்புலிகளையும் வேட்டையாடி
வெல்லுகின்ற ''யாளி'' என்னும் மிருகங்கள்
குன்றனைய யானைகளைக் கொன்று அதன் கொம்புகளை
முறிக்கின்ற,

குளிர்சோலையடர் மலைத்தொடர்களிடையே
கூர்வேல் ஒன்றை மட்டும் துணையாய்க் கொண்டு - எனது
போர்த்தலைவன் தனியனாய் வருவதற்கு அஞ்சிடான்!
அவனைப் பிரிந்திருக்கும் நானே
அந்தப் பிரிவென்னும் நோயினால் அவதியுறுகின்றேன்!
பனித்துளி பொழியும் என் கண்களைத் தேற்றி
இனி ஆற்றுவதுதான் எவ்வாறு தோழி?''

நற்கண்ணை பாடி முடித்து நடுங்கினாள் தாயைப் பார்த்து!
''நானிருக்க பயமேன் நங்காய்!'' என்றுரைத்தவாறு
பொற்புடைய புலவர்பிரான் அவையை நோக்கி;
''கற்புடைய இக்குல விளக்கை உங்கள் முன்னே
இளவரசன் நற்கிள்ளி பெற்ற வெற்றிக்குப் பரிசாக
வளமிகு பெருங்கோழிநாய்கர் வழங்குதற்கு முன்வந்துள்ளார்!
விருப்பம் பெண்ணுக்குண்டு நானறிவேன்!
மறுப்பேதும் கூறுமல் ஒப்புக்கொண்டுள்ளார் தந்தை!
தாய்க்கு மட்டும் இது நடக்குமா என்ற தயக்கம்! அதனால் இந்தத்
தமிழ் மலரை கிள்ளியின் தடந்தோளில் சூட்டுதற்குத்
தடையாக யாருமில்லை'' என்றார்!

''தடையுண்டு'' எனத் தணல் மொழி பொழிந்தவாறு
படைகொண்டு வென்று வந்த நற்கிள்ளி அதிர்ந்தெழுந்தான்!
''போர்வாளைத்தான் நான் காதலிக்கின்றேன்;
பூவிதழை அல்ல! அல்ல! அல்லவே, அல்ல!'' என்றான்!
போய்விட்டான் அவையை விட்டு!

தாய்போட்ட கூச்சல் செவியைத் துளைத்திடுமுன்
உலகம் இருண்டு சுற்றியதால் நற்கண்ணை; இதயம்
உடைந்து நொறுங்கத் தரையில் சாய்ந்தாள்!

*

1. * ''அடிபுனை தொடுகழல், மையணல் காளைக்கு, என்
தொடிகழித் திடுதல்யான் யாய் அஞ்சுவலே;
அடுதோள் முயங்கல் அவை நாணுவலே...''

*

(புறநானூறு : பாடல் : 83
பாடியவர் : நற்கண்ணையார்)

*

2. * ''இடம்படுபு அறியா வலம்படு வேட்டத்து
வாள்வரி நடுங்கப் புகல் வந்து, ஆளி
உயர்நுதல் யானைப் புகர்முகத்து ஒற்றி,
வெண்கோடு புய்க்கும் தண்கமழ் சோலைப்
பெருவரை அடுக்கத்து ஒருவேல் ஏந்தித்
தனியன் வருதல் அவனும் அஞ்சான்;
பனிவார் கண்ணேன் ஆகி, நோய் அட,
எமியேன் இருத்தலே யானும் ஆற்றேன்,
யாங்குச் செய்வோம் கொல் - தோழி!...''

*

(அகநானூறு : பாடல் : 252
பாடியவர் : நற்கண்ணையார்)

பொருள் விளக்கம் :

1. மை அணல் = மை போன்ற தாடி. தொடி = வளையல். கழித்திடுதல் = கைவிட்டுக் கழன்று விழுதல். யாய் = தாய். முயங்கல் = தழுவுதல்.
2. வலம்படு = வலிமையுள்ள. வாள்வரி = புலி. புகல்வந்து ஆளி = வெற்றி விருப்புடன் வந்த யாளி எனும் ஒருவகை மிருகம். ஒற்றி = அறைந்து கொன்று.

*



மெல்லக் கண்ணிமைகள் விரிந்து கருவிழிகள் மலர்ந்தபோது;
தன்
இல்லத்துக் கட்டிலிலே நற்கண்ணே; தானிருப்பதுணர்ந்தாள்!
மேகத்தின் சூழலுக்குள் மறைந்திருக்கும் கதிரொளிபோல்
சோகத்தின் ஆழத்திலிருந்து கண்ணேளியைப் பாயவிட்டு,
தன்னருகே குனிந்து நின்ற பொற்கொடியை உற்று நோக்கி,
''தாய் தந்தை எங்குற்றூர்?'' எனக் கேட்டாள்!

''தலைவெடித்து விட்டதுபோல் ''தாம்தூம்'' எனக்குதித்து,
தன்மானத்தை வீலை கூறிவிட்டீரே என்று;
தந்தையைக் கடிந்துகொண்டு - இனித்
தாமதித்தல் இவ்வூரில் ஒருக்கணமும் கூடாதென்று,
பொங்குற்றே உன் தாயார் புறப்பட்டுப்
பூம்புகார் நோக்கிப் போய்விட்டாள்!
இங்குற்ற அவமானத்தால் தலையிறக்கம் வந்ததென்று,
இடிந்து போயிருந்த தந்தை; உன் தாயைத் தொடர்ந்து
ஓடிந்து போன அவள் இதயத்தை ஒட்டவைக்கச் சென்று
விட்டார்''

பொற்கொடியாள் சொன்ன தகவல் கேட்டு நற்கண்ணே;
விற்புருவம் மேலுயர்த்தி, ''வீணுக நான் மட்டும் ஏன்
வாழவேண்டு''மென்றுள்!

''உயிரினுமினிய தமிழ்மொழியை வாழவைக்க
உனைப்போன்றோர் ஓராயிரம் ஆண்டு வாழத்தான் வேண்டும்!''
என்ற குரல் கேட்டு ஏந்திழையாள் திடுக்கிட்டாள்!
அந்தக் குரலுக்குரியோன் நற்கிள்ளி என்றபோது;
எதிரே காணுகின்ற காட்சி மெய்தானு என்று -
எழில் விழிகள் இரண்டின் இமைக்கதவு படபடக்க;
''எந்த உலகில் இருக்கின்றேன் நான்?'' என்று
சொந்தக் கண்களையே நம்பாமல் கேட்டுக்கொண்டாள்!

இந்த உலகில் இனி நமக்கென்ன வேலையென்று
இருவரையும் தனிவிடுத்துத் தோழி மெதுவாக நகர்ந்துவிட்டாள்!

நற்கண்ணை நிலையோ இங்கு;
நரம்புகளில் எல்லாம் இசையரங்கு!
''இரக்கம் பிறந்ததா என்மீது?'' என்று எழுதிக்கேட்டன விழிகள்!
''உருக்கம் சுரந்ததா என்பால்?'' என்று துடித்துத் தவித்தன
இதழ்கள்!
''மகுடமொன்றைத் தலைக்கு அணியும் மன்னவன் மகனே!
- நான்
மகுடமிரண்டை மார்பகத்தில் தாங்கி நின்றும்;
முடிசூட மறுத்திடல் ஏனோ?'' என்று
கொடியிடையாள் கேட்கவில்லை! அஃது அவள்;
முறுவலிலே ஒளிந்திருந்த மௌன வினா!

நிலைகுலைந்து நிற்கின்றாள் நேரிழையாள் எனக் கண்டும்
அலைகடலின் கொந்தளிப்பை அடக்குதற்கு முனையாமல்;
''நான் வந்திருக்கும் நோக்கம் புரிகிறதா?'' என்றான்!

அவள்:-

''தேன் இனிக்கும்! தேளின் நஞ்சு கடுக்கும்!
தேடி, இவையிரண்டில் எதை எனக்கு அளிக்கப்
போகின்றீர்?
வான் பார்த்து ஏங்குகின்ற உழவனுக்கு
வறண்ட காற்றுத்தான் வெகுமானமா? அன்றி
வளம் சேர்க்கும் மழையெனும் அமுதபானமா?
கூன்பிறை வளர்ந்தொரு முழுமதியாகுமா? - அன்றிக்
கும்மிருட்டே என் வாழ்வுக்கு வகுத்த விதியாகுமா?''

அவன்:-


''மாம்பழச்சாறு நிகர் தமிழைத்தான்
மங்கையுன்பால் நான் கேட்டு மகிழக்கூடும்!
மாம்பழ மேனியின்பால் எனக்கு நாட்டமில்லை! உன்
மாத்தமிழ்த் திறன் போற்றும் மனமுண்டு எனக்கு!''

அவள்:-

''திறனைப் புகழ்ந்தமைக்கு மிக நன்றி; அந்தத்
திறனிருக்கும் ஆரணங்கின் காதலுக்குத் தீவைத்தல்
நன்றா?''

அவன்:-

''இருதரப்பின் இதயப்பரிமாறலே காதலுக்கு
இலக்கணமாம்!
ஒருதரப்பின் ஆசைக்கும் அதுதான் இலக்கணமா?''



அவள்:-

''படர்கின்ற முல்லைக்குப் பரிவு காட்டாமல்
இடர்தந்து புறக்கணித்தல் பாபமன்றே?''

அவன்:-

''பாரி மன்னன் தேர்; முல்லைக் கொடியொன்று
படரத்தான் பயன்பட்டதேயன்றி;
பரவிடும் மலரின் மணத்தை - அந்த
மரத்தேர் நுகர்ந்து மகிழ்ந்ததும் உண்டோ?
பாவை நீ என்மீது படர்வதென்றுல் - நான்
பாரியின் மரத்தேராய் இருந்தென்ன பயன்?''

அவள்:-

''நாடாளும் மன்னரின் மைந்தர்தானே -
காடாளும் மாமுனிவர் அல்லவே நீர்!''

அவன்:-

''மாமுனிகளும் மாதர் மடி வீழ்வதுண்டு -
மறைமுகமாய் மதனன் கலை பயில்வதுண்டு!
மன்னர்மகன் நான்; உண்மைதான்!
மண் வளைக்கக் கொண்ட ஆசை;
பெண்ணின் இடை வளைக்கக் கொண்டேனில்லை!''

அவள்:-

''வாளுறையுடன்தான் உறங்குவேன் எனும், தலைவ!
சூளுரையொன்றுரைப்பேன் அறிக!
**வாழ்ந்தால் உமை மணந்து வாழ்வேன்! அன்றி
வீழ்ந்தால் உமது வாள்முனையால் வீழ்வேன்!**''

அவன்:-

கார்கால இடியைப்போல் முழங்குகின்ற
கவிப்பாவாய்; நீ சொன்ன இரண்டுமே நடக்காது!
போர்வாளைத்தான் நான் காதலிக்கின்றேன்
பூவிதழை அல்ல! அல்ல! இதுவும் உறுதி!
அஃதேபோல் அவ்வாளால் உன்உயிரை
அழிக்கமாட்டேன் அதுவும் உறுதி!
வருகின்றேன்; என்னை மன்னித்து
வழியனுப்பி வைத்திடுக!''

இவ்வாறு கூறிவிட்டு,

விழியழகி நற்கண்ணை விடையுளிப்பதற்குக் காத்திராமல்
விரைந்து வந்து வீட்டோரம் நின்றிருந்த தேர் ஏறி அமர்ந்து
கொண்டான்.

தொடர்ந்து வந்த துடியிடையாள் - தேரின்
தூண் ஒன்றைப் பற்றிக்கொண்டு - ''உமைப்
படர்ந்து தழுவத் தாவுகின்ற - இளம்
பருவக்கொடிதான் வதங்குவதோ'' என்றழுதாள்!

''உறையூர்க்கு அவசரமாய்ப் போகின்றேன் இன்று!
ஓரிருகிழமைக்குள் திரும்புகின்றேன் இங்கு!
உன்னோடு உரையாட நேரமில்லை இப்போது;
உளம் திறந்து முழுமையாகப் பேசலாம் அப்போது!'' என்றான்.

தட்டிக் கழிக்கின்றான் எனத் தெரிந்துகொண்டு - தேரில்
முட்டிக் கொண்டழுதவாறு நற்கண்ணை;
''தலைவனே! உமக்காகத் தவமிருக்கும் என்னுள்ளத்தில்
அலைபாய்ந்து ஒலிக்கின்ற பாட்டைக் கேள்'' என்றாள்; - பாடினாள்!

* ''இருமீனின் உடல்போன்றுச் சொரசொரப்புக் கொண்ட
சுறுமீனின் முகத்தில் நீண்ட கொம்புகள் போல்
முட்கள் குத்தும் இலைகள் நிறை தாழை மரங்கள்
முதுயானைத் தந்தம்போல் அரும்பு முதிர்ந்து
மான்களிலே பெண்ணினம்போல் தலைசாய்த்து
மணங்கமழச் செய்கின்ற மகிழ்ச்சி குலுங்கும்
விழாக்களங்கள் அமைந்துள்ள கடற்பரப்பிலும்,
வெற்றிக்கொடி நாட்டுகின்ற வீரர்குலத்தலைவா!
மணிகள் அசைந்தாடும் உன் நெடுந்தேரை; உன்பால்
பணிபுரியும் தேர்ப்பாகன் விரைந்து செலுத்திட; நீயோ
ஒருசில நாள் கழித்து வருவேனென்று
ஓதுகின்றாய் எனக்கு!
உனைப்பிரிந்து ஒருநாளும் இனி
உயிர்வாழமாட்டாள் இவள் என உணர்க!''

நற்கண்ணையின் சோக இசையினூடே; வீட்டோரம்,
நகர்ந்து கொண்டிருந்த அந்தத்தேர்;
நற்கிள்ளி ஆணை கேட்டு நாலுகால் பாய்ச்சலில்
நடுவீதியிற் பறந்து மறைந்தது ஓர் நொடியில்!
புரவிகள் எழுப்பிய புழுதித்துகளைப்
பொருட்படுத்தாது பின்தொடர்ந்தவளைப்
பொற்கொடி வந்து தடுத்தும் பயனிலை! அவளோ
புலம்பிடும் சிலம்புடன் ஓடுகின்றாள்!

*

* ''இறவுப்புறத்து அன்ன பிணர்படு தடவுமுதல்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பி னன்ன அரும்பு முதிர்பு
நன்மான் உழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களம் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப!
இனமணி நெடுந்தேர் பாகன் இயக்கச்
செலீ இய சேறிஆயின்; இவளே
வருவை ஆகிய சில்நாள்
வாழா ளாதல்நற்கு அறிந்தனே சென்மே!''

*

(நற்றிணை : பாடல் : 19
பாடியவர் : நற்கண்ணையார்)

பொருள் விளக்கம் :

இறவு = இருமீன். சுறவு = சுருமீன். பிணர் = சொரசொரப்பு. மருப்பு = யானைத்தந்தம். நன்மான்உழை = நல்ல பெண்மான். உரவுநீர் = கடல். செலீஇய சேறிஆயின் = செலுத்திடச் செல்வாயானால்.

*



களத்தில் வீசிய கைவேல் எனவே
கடுகிப் பறந்தாள் நற்கண்ணே! அவ்வேல்
களிறுடல் புகுந்து வந்தாற்போல
களத்துச் சோர்ந்து பூமியில் உதிர்ந்தாள்!

கண் விழித்துப் பார்த்தபோது; புலவர்
காலடியில் தலையிருப்பதுணர்ந்தாள் - ''மனப்
புண்ணுற்ற மருந்திடுவீர் என நினைத்தேன்;
தண்ணுர்ப் பெருங்கடல் மூழ்கிடு கலத்தை மீட்க,
எண்ணுர் கிள்ளி என்பதை உணர்ந்தும்
மண்ணுற் செய்த பாண்டமாய் எமது மதிப்பை
அவை நடுவே போட்டுடைத்ததேனோ?'' என்று
அழுதுகொண்டே அனல் கக்கும் சொல்லால் கேட்டாள்!

''அம்மா; நற்கண்ணே! அழுதென்னைக் கொல்லாதே!
அவைக் களத்தில் நான் அவசரமுற்றேன் எனினும்
உண்மையில் நடந்தது தெரியாது உனக்கு!
உறையூரான் மகன் உள்ளத்தை அறிவதற்கு,
போர்முனையின் ஓய்வற்ற பாசறையில், உனக்காக;
ஓர் இரவு அவனோடு மனந்திறந்து உரையாடினேன்.

முடியட்டும் போர் பிறகு பேசலாம் - நாளைப் பொழுது
விடியட்டும் வெற்றிச் செய்தியுடன்; எனக்கூறி,
நற்கிள்ளி, புன்னகையைத் தவழவிட்டுப் போனவுடன்,
நம்பிவிட்டேன் நான் அவனை; நாணத்தால் நழுவிப்
போகின்றான் என்று!

தென்றலுக்குத் தடை விதிக்கும் சோலையுண்டா?
தேனருவித் தழுவுதலை ஏற்காத மலைதான் ஏது? - இந்தத்
தென்னவனும் கன்னியுன்னை மணப்பான் என்றே
மன்றலுக்கும் உன் தந்தையுடன் நாள் குறித்து
மண்டபத்தில் அறிவித்து மனநிறைவு கொண்டுவிட்டேன்;
மறுத்தான் கிள்ளியென்றவுடன் நான் மாண்டுவிட்டேன்!

இப்போது

உயிரற்ற உடல்தானம்மா உன்னோடு பேசுவது!
சாறற்ற சக்கைதானம்மா இந்தச் சாத்தந்தை!
கயிறற்ற பம்பரங்கள் சுழல்வதில்லை;
கவிகற்ற உன்நெஞ்சக் கென்நிலை புரியுமம்மா!''

விழியாறு பெருகியோடித் தாடியின்
வெள்ளிமுடி வெண்முத்துக்களைத் தாங்கிநிற்க,
பழிவந்து சேர்ந்ததே எனப் பதைத்துப்போன புலவரிடம்;
மொழியிலே அமைதி குழைத்து நற்கண்ணை, பேசலுற்றாள்!

''வேண்டாம் புலவரே; வேதனைக்கு விடையளிப்பீர்.
சாத்தந்தை என்றும் சாகாத்தந்தை; தமிழுக்கு!
பொன்மணிக் குவியலும் வைர வைடூரிய முத்துக் குன்றமும்,
நன்மணிமாடக் கூடங்களும் கோட்டைக் கோபுரமும்,
தொழுதேத்திப் போற்றுகின்ற கொற்றக்குடை ஆட்சியும்,
தோத்திரத்தால் உயர்ந்துள்ளம் கொள்ளை கொள்ளும் காட்சியும்,
இன்றிருக்கும், நாளை இல்லாமற் போகக்கூடும்!
என்றுமிருக்கும் பணியன்றோ தமிழுக்குச் செய்கின்ற பணி!

எனவே


தமிழ் உள்ளளவும் வாழ்வீர் நீவிர் - இந்தத்
தரணி உள்ளளவும் தமிழும் வாழும்!'' என்றாள் நற்கண்ணை!

''நல்லதம்மா; நான் இனி வாழும் காலமனைத்தும்
மெல்லத் தமிழ் சாகாமல் காப்பதற்கே செலவிடுவேன்!
வெல்லச் சொல் கவிபுனையும் பெண்பாவாய் - நீ மட்டும்,
செல்லத்தான் வேண்டுமோ கிள்ளியினைப் பின்தொடர்ந்து?''

இவ்வாறு கேள்வி கேட்ட புலவருக்கு
எவ்வாறு விடையளிப்பதென்று நாணி;
''உறையூர்க்கு என்ன வேலையாய்ச் சென்றுளார் கிள்ளி?''
என்று
உடனடியாய்ப் பேச்சுதனை மாற்றிவிட்டாள்!

''தித்தனுக்கும் கிள்ளிக்குமிடையே - ஒரு
தத்துவப் போர் நடந்ததாலே
மகன் தந்தை மனத்தாங்கல் விளைந்து - அதனால்
மாற்றூர்க்கு இடம் கொடுத்துப் போனதம்மா!

1. வெண்சங்கம் முழங்கிடவும்
வெற்றி முரசு கொட்டிடவும்
வேல்விழி மங்கையர் ஏற்றும்
விளக்கொளி வரிசை காண்பதற்கும்



விரைந்து வரும் மாலைப்பொழுதுக்குரிய
வீரை வேண்மான் வெளியன் தித்தன் - என்று,

முதுகூற்றனார் எனும் புலவர் - தமிழ்
மதுவூறும் கவிமலரால் புகழ்ந்தார் தித்தனை!

அம்மட்டோ?

2. சீரும் சிறப்பும் செழிப்புறு நாடும்,
சிறிய கண்கொண்ட பெரிய யானைப்படையும் பெற்று,
போருக்கிளையா தித்தனின் ஆற்றல்
பூத்துக் குலுங்கிடும் உறையூர் - என்று;

ஏறுநடைப் புலவர் நக்கீரப் பெருமான்
ஏடு கொண்டெழுதியுள்ளார் தித்தன் பற்றி!
அவனுக்கோர் மகளுண்டு ஐயை என்பாள் - உன்
ஆருயிர்க் கிள்ளிக்கு அன்புத் தங்கை!
அந்த ஐயையினை முன்னிறுத்தி
அவள் தந்தை தித்தன் என்று
பரணராம் பெரும் பாவாணர்,
பாராட்டிப் பாட்டெழுதியுள்ளார் எனில் - அந்தப்
பாவையின் பெருமையைப்
பகர்வதும் எளிதோ?

அதனையும் கேள்!

3. கலகலவெனப் பரல்கள் உருண்டொலிக்கும்
காற்சிலம்பணிந்து ஆம்பல்மலர் மாலைசூடி
அரமிட்டறுத்த பொன்வளையல்கள் பொலிவுற்று
அழகிய முன்கை இரண்டும் அசைந்திட,
முத்துப் பவளமொடு அணிகலன் பூண்டு
மூங்கில் எனவே தோள்கள் பூரிப்புக் கொண்டு
கற்பெனும் பொற்புடைக் கன்னியாம்
கவின்மிகு ஐயையின் தந்தை;
மழையெனக் கொடை வழங்கும்
மாவெண் தித்தன் எனும் மன்னன்!

பரணர் புகழ்ந்த அந்தப் பாவையை மணந்திட
பற்பல வேந்தர்கள் பகற்கனவு கண்டனர்!

நற்கிள்ளிக்கும் அவன் தந்தைக்கும்
நல்லுறவு இல்லையென்று கேள்வியுற்று
நல்ல சமயம் இதுதான் என்றும் - இதனை
நழுவ விடுதல் கூடாதென்றும்,
பவானியாற்றுப் பகுதி ஆண்ட சேரர் தலைவன்

''பல்வேற்கட்டி'' எனும் பெயருடையான்;
தித்தன் மகளாம் தித்திப்பு மாங்கனியை மணப்பதற்கு
முத்திரை ஓலையொன்றுடன் தூதனை அனுப்பிவைத்தான்.

4. ஓலையில் உள்ள குறிப்பில்; உறையூர்க்கிணையான
ஒப்பிலா ஒளிபொழியும் நவமணிகள் பலவற்றை உமக்குக்
கொடுத்தபின், கொள்கிறேன் உமது பெண்ணையென்று,
எழுத்தின்மூலம் உரைத்தது கண்டு,
எது கொடுப்பினும் கொள்ளமாட்டேன்
என் மகளைக் கட்டியெனும் மன்னனிடம் தள்ளமாட்டேன்.

இதுதான் முடிவென்று உன் தலைவனிடம்
இன்றே சென்று அறிவித்திடுக! என்றான், தித்தன்.

சோழன் உரைத்த சொல்கேட்டுக்
கோபம் தலைக்கேறிக் கட்டிமன்னன்,

பாணன் என்னும் பலமுடை வீரனுடன்
படையெடுத்து வருகின்றான் உறையூர்மீது!

காதில் இச்செய்தி விழுந்ததுதான் தாமதம்;
காட்டில் உள்ள புலிகள் எல்லாம் ஒருருவம் கொண்டதுபோல்,

கட்டி, பாணன் இருவருமே எல்லையை மிதிக்காமல்
எட்டி உதைத்துத் திரும்புவதாய்ச் சூளுரைத்து

உறையூர் நோக்கி இளவல் நற்கிள்ளி - போர்ப்
பறை முழக்கிப் போயுள்ளான்'' என்றுரைத்தார் சாத்தந்தை!

தேடிநானும் செல்கின்றேன் என் தெய்வத்தையென்று,
ஆடிக்காற்றில் பறக்கின்ற அன்னத்தின் தூவிபோல் அங்கிருந்து
மறைந்து போனாள்!

காவிரியின் வடகரையில் அமைந்துள்ள ஆமூர்தாண்டி
பூவிரியும் சோலை உறையூர் புறநகரில் நுழைந்தபோது
நற்கண்ணை, விழியிரண்டும் வியப்பால் துள்ளியாட,

5. சிற்றில் முகப்பொன்றில் செந்தமிழ்ச் செவிலி
காவற்பெண்டாம் கவியரசி நிற்பது கண்டாள்!
ஆவல் ததும்பிட அவளிடம் ஓடி,
ஆங்கோர் தூணைப் பற்றியவாறு
அன்னாய்! உன் மகன் எங்கே? என்றாள்!
தமிழை மட்டுமல்ல; தன் மகனையும் காதலிக்கும்
தங்கநிலா நற்கண்ணை என்பதறிந்த காவற்பெண்டு;

என்மகன் எங்கு சென்றுன் என நானறியேன்!
எனினும் அவன் எங்கோ ஒரு போர்முனைக்கே
போயிருப்பான்!
புலிபோன இடம் குறிப்பாகத் தெரியாவிடினும்,
புலி தங்கியிருந்த மலைக்குகையினைப் போலப்
புதல்வனை ஈன்றெடுத்துக் களத்தில்
முதல்வனுய் அனுப்பிய வயிறு இதுதானம்மா!

இவ்வண்ணம் காவற்பெண்டுரைத்த பதில் கேட்டுச்
செவ்வண்ணப் போர்க்களம் நோக்கி நற்கண்ணை
புறப்பட்டபோது;

தடுத்து நிறுத்திய அந்தத் தாய் - தன் மனையில்
தங்கிவிட்டுப் போகுமாறு பணித்திட்டாள்! அவளும் தட்டவில்லை!

''உணவருந்தி, ஓய்வு பெற்று, உறங்கிடுக; நாளை
உதயத்துக்குப் பின்னுல் ஓலையொன்று தந்து
உன்னை ஐயையிடம் அனுப்பி வைக்கின்றேன்!
உடன்பிறந்தாள் பேச்சைக் கிள்ளி மறுத்தாலும்;
நற்கண்ணை - நற்கிள்ளி திருமணம் நடப்பதற்கு
நான் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன்!
ஐயை மாளிகைக்குக் கிள்ளியும் வரக்கூடும்.
அதற்குள் நீ அவன் பிரிவை ஆற்றுமல்,
கையை மேலும் இளைக்கவிட்டுக்
கழல விடாதே வளையல்களை!'' என்று
காவற்பெண்டு செய்த கேலியினுல் நாணமுற்று,
கைவளையல்களை முழங்கைவரை ஏற்றிக்கொண்டாள்!

*

1. **''வீரை வேண்மான் வெளியன் தித்தன்**
முரசு முதல் கொளீஇய மாலை விளக்கின்
வெண்கோடு இயம்ப....''

(நற்றிணை : பாடல் : 58
பாடியவர் : முதுகூற்றனர்)

2. **''சீர் சான்ற விழுச் சிறப்பின்,**
சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செல்லா நல்லிசை உறந்தை....''

(புறநானூறு : பாடல் : 395
பாடியவர் : நக்கீரர்)

3. ''அரிபெய் சிலம்பின் ஆம்பலந் தொடலை,
அரம்போழ் அவ்வளைப் பொலிந்த முன்கை,
இழையணி பணைத்தோள், ஐயை தந்தை,
மழைவளம் தருஉம் மாவண் தித்தன்....''

(அகநானூறு : பாடல் : 6
பாடியவர் : பரணர்)

4. ''மாவண் தித்தன் வெண்ணெல் வேலி
உறந்தை அன்ன உரைசால் நன்கலம்
கொடுப்பவும் கொளாஅ நெடுந்தகையவனே....''

(புறநானூறு : பாடல் : 352
பாடியவர் : பரணர்)

5. ''சிற்றில் நற்றூண்பற்றி, நின்மகன்
யாண்டுளனே? என வினவுதி; என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஒரும்
புலி சேர்ந்து போகிய கல்அளை போல,
ஈன்ற வயிறே இதுவே;
தோன்றுவன் மாதோ, போர்க்களத்தானே!''

(புறநானூறு : பாடல் : 86
பாடியவர் : காவற்பெண்டு)

பொருள் விளக்கம் :

வெண்கோடு = வெளிய சங்கு. செல்லாநல்லிசை = கெடாத நற்புகழ். அரிபெய் = பரல்கள் இடப்பட்ட.
தொடலை = தொடுக்கப்பட்ட மாலை. அரம்போழ் = அரமிட்டு அறுத்த. பணை = மூங்கில். மாவண் = சிறந்த கொடைத்தன்மை கொண்ட. வெண்ணெல்வேலி = நெல்விளையும் வயல்களை வேலியாகப் பெற்ற. நன்கலம் = அணிகலன்.
கல்அளை = மலைக் குகை.


*



உறையூர்த் தித்தனது அத்தாணி மண்டபத்தில்
உறைவிட்டெழுந்த வாட்களுடன் தளபதிகள் நின்றிருந்தார்.
வீரைவேண்மான் வெளியன் தித்தன்;
வீரர்களின் அணிவகுப்பு எவ்வாறு அமைய வேண்டுமென்றும்
வெகுண்டுவரும் கட்டி, பாணன் இருவருக்கும்
தகுந்தபடி பாடம் கற்பிக்கத் தவறக்கூடாதென்றும்
மரக்கிளையில் தொங்குகின்ற மலைப்பாம்பு
வனவிலங்குகளை சுற்றிவளைத்துச் சிக்கவைத்து
எலும்புகளைக் கணுக்கணுவாய் முறித்தெடுத்து
இறுதியிலே இரையாக்கிக் கொள்வதுபோல்
பகைப்புலத்தைப் பலமுனையில் சூழ்ந்தெதிர்த்துப்
பாணன், கட்டி இருவரது பல் பிடுங்க வேண்டுமென்றும்,
கூர்முனை வாள் ஒன்றை விரல்களால் தடவிக்கொண்டே
போர்முறைகள் வகுத்தளித்துக் கொண்டிருந்தான்!

அப்போது அமைச்சர், பணிவாகத் தலைகுனிந்து
அரசன் தித்தனிடம்; ''மன்னவனே!
மாற்றூர் வலிமையினைக் குறைவாக மதிக்க வேண்டாம்.
மற்போரில் திறமுடைய பாணன் என்பான்
கங்கநாட்டுத் தலைவன் பல்வேற்கட்டிக்குச்
சிங்கம்போல் துணையாக வருகின்றான்!'' என்றார்.

''உறையூரின் வளத்திற்கு ஒப்பான
உரைசால் அணிகலன்கள் தருகின்றேன்;
உன் மகளை எனக்களித்திடுக, என்று
என்ன மமதையிருந்தால் கட்டி மன்னன் கேட்டிருப்பான்?
இறப்பெனும் முடிவு எல்லோர்க்கும் உண்டெனும்போது - அது
இளமையில் வந்தால் என்ன; முதுமையில் வந்தால் என்ன!
எப்போது வந்தாலும் என் கொள்கை; உடலில்
தப்பாது ஓடுகின்ற உயிரோடு மானமும்
உடன்கட்டை ஏறுதல் கூடாது என்பதுதான்!''



தித்தன், இவ்வாறு தீப்பிழம்புச் சொற்களாலே விடைபகர்ந்த
பின்னும்,
அத்தாணி மண்டபத்தில் அமைச்சர்பிரான்; இதுகுறித்து
இத்தோடு விட்டுவிடலாம் என்றிராமல்; மன்னனிடம்
''பத்தோடு பதிலொன்றுக என் கருத்தை ஒதுக்கிடாமல்,
பாணன் துணை, பல்வேற்கட்டிக்கு வாய்த்துளதை
பகுத்தாய்ந்து பார்த்து முடிவெடுத்தல் நலம்,'' என்றார்.

''பாணனின் ஆற்றல் பற்றிக் கல்லாடனார் எனும் கவிஞர்,
பாட்டொன்றில் கூறுகின்றார்; பார்வேந்தே கேட்டிடுக!

1. எல்லை கடந்த தொல்லைவில் உள்ள எதிரிகளின் அரண்
அழித்து
ஏறுகளுடன் பசுக்களையும் கவர்ந்து வரும் திறன் பெற்றுத்
திகழ்ந்து
நெய் தடவிய கரிய பூண் அமைந்த நெடுவேல் கையிலேந்தி
நேர்நின்று பகைவரை எதிர்த்து வெல்லும் புறங்கொடாத
புலிப்போத்து
என்று

பாணன் வீரத்தைக் கல்லாடனார் வியந்துரைப்பார்!

2. பல்வேறு வேற்படைகளைக் கொண்டு பகையெதிர்க்கும்
மாவீரன் கங்கநாட்டுக் கட்டியென்று

மாமூலனார் புகழ்ந்துரைப்பார்! இவ்வாறு
பாடல் பெற்ற வீரர் இருவர்–உறையூர்மீது
படைதிரட்டி வருகின்றார் என்ற உண்மை
மன்னர்பிரான் மறத்தல் தீது!'' என்றார்.

ஆழ்ந்து சிந்தித்தே அறிவுரை வழங்கும் அமைச்சர் கருத்தை,
ஆத்திரத்தில் புறந்தள்ளிப் போட்டுவிடாமல் - அரசன்,
தயக்கமுடன் தலையசைத்து அவரை நோக்கி;
''மயக்கத்தில் தள்ளாதீர் என்னை - மானங்காக்க மாற்று
வழிதான் என்ன?'' என்றான்.

''மாவீரன் நற்கிள்ளியெனும் வெண்ணெயினைக் கையில்
வைத்துக் கொண்டு,
மானங்காக்கும் போர்முனையில் வெற்றியெனும் நெய்க்குத்தான்
அழுவாருண்டோ?
மறுப்பொன்றும் சொல்லாமல் மன்னா - இப்போதே
மகன் கிள்ளிக்கு அனுப்பிடுக ஓலை''யென்றார் அமைச்சர்!

''கிள்ளிக்கா? என்மகன் கிள்ளிக்கா? என்னை
எள்ளி நகையாடிவிட்டுப்போன நற்கிள்ளி;

அழைத்தால் வருவதற்கு ஒப்புவானு? ஒப்பமாட்டான்!
அமைச்சரே! அந்த முயற்சி வீண்தான்!'' என்றான் தித்தன்!

''உங்கள் அழைப்புக்குக் காத்திருக்கவில்லையப்பா கிள்ளி!
உறையூரின் சிறப்புக்கு ஊனம் வராமலும்
உயிரனைய சோழர்குல மானம் போகாமலும்
உடன்பிறப்பு ஐயைக்கோர் இழிவு நேராமலும் தடுத்திடவே
உங்கள் உத்திரவு இல்லாமலே நாட்டுக்குள் வந்துவிட்டேன்!
உடன் ஆணை வழங்கிடுங்கள் உங்கள் மகனுக்கு!
உறுபகையை ஓடஓட விரட்டிவிட்டு வருகின்றேன்'' - என்றபடி;

அந்திவானத்தில் அப்போது இறங்கிக் கொண்டிருந்த சூரியனின்
செந்தீ முகத்துடன் நற்கிள்ளி; நாளவையில் நுழைந்திட்டான்!
மகனே, என்றோடி மார்புறத் தழுவிக் கொண்டான் தித்தன்!
மாவீரன் தோள்மீதும் உச்சிமீதும் முத்தமிட்டான்! அவனை
மண்டியிட்டுத் தந்தையின் தாள்வணங்கித் தொழுதபோது
சுண்டிவிட்ட நாணயம் போல் அவையோர் எழுந்து நின்றார்!

அமைச்சர்பிரான் கண்களிலே ஒளியுமிழ; ''உறையூரை
ஆளப் பிறந்தவனே!'' என அழைத்துக் கிள்ளியிடம்,
''கட்டிக்கும், பாணனுக்கும் களத்திற்சென்று - நல்ல
வட்டியும் முதலுமாய்க் கொடுப்பதற்கு வந்துவிட்டாய்'' என
வாழ்த்துரைத்தார்!

''பகை நாட்டான் பாணனை வெல்வதற்குப் படை எதற்கு?
புகை கிளப்பும் யாககுண்ட மந்திரங்கள் போதாதோ?
வேற்படை பல கொண்ட கட்டியினை வீழ்த்துதற்கு,
வீரர்கள்தான் எதற்காக?
வேள்வி செய்து விரட்டியடிக்க முடியாதோ?'' என்று,
விளையாட்டாய்க் கண்சிமிட்டிக் கேட்ட கிள்ளியினை

வெட்கத்தால் தலைதொங்கும் தித்தன், அணைத்தவாறு;
''நடந்தவைகள் நடந்தவைகளாயிருக்கட்டும் மகனே! இனி
நடப்பவைகள் நல்லவைகளாயிருக்கட்டு''மென்றான்!

அத்துடன் அவையில் உள்ள வீரர்களை நோக்கி;
''ஆமூர் விட்டுக் கிள்ளி வந்துவிட்ட சேதியினை அறிவியுங்கள்
நாட்டுக்கு!
அதிர்ச்சியுற்று அஞ்சியோடப் போகின்றார் பகைவர் என்று நமது
அத்தாணி மண்டபத்துப் பேரிகைகள் முழங்கட்டும்!''

இவ்வாறு

தித்தன் வீரைவேண்மான் ஆணை அதிர்ந்தவுடன்
அத்தாணி மண்டபத்துத் தோற்கருவிகள் அதிர்ந்தன!

உறையூர் அரண்மனையின் மதில்கள் அதிர்ந்தன!
உள்நாட்டுப் பாசறை முரசங்கள் அதிர்ந்தன!
ஆயத்தமாகிவிட்டான் போருக்குக் கிள்ளியெனினும்
ஐயையாம் தன் தங்கையினைக் காண்பதற்கு,
அவளிருக்கும் மாளிகைக்கு விரைந்து சென்றான்;
அங்கு நற்கண்ணை வந்துள்ள தகவல் அறியாமல்!

இதற்கிடையே

உறையூர் அரண்மனைக்கு உடனே அழைத்து வரச் சொன்னார்
என்று
ஒரு வீரன் தேர் ஒன்றை தெருவாயில் ஓரத்தில் நிறுத்திவிட்டு,
அந்தி சாய்ந்துவிட்ட காரணத்தால் அகல்விளக்கின் முன்னாலே
குந்திக்கொண்டு கவிதை எழுதுகின்ற காவற்பெண்டை,
அழைத்திட்டான்! அவசரமெனக் குதித்திட்டான்!

பரபரப்பில் எதற்காக என்றுகூடக் கேட்காமல்
பாட்டெழுதும் ஓலையினைச் சுருட்டிப் போட்டுவிட்டு
பூட்டொன்றை வீட்டுக்குக் காவலாய் மாட்டிவிட்டு
புறப்பட்டுத் தேர்ஏறி அமர்ந்துகொண்டாள் காவற்பெண்டு!
உறையூர் அரண்மனைக்குப் போகாமல் - அந்தத்தேர்,
ஒரு காத தூரம் உறையூர் எல்லை தாண்டி ஓடியதால்,
தித்தன்தான் அழைத்திருப்பான் என்று நம்பி,
தேர் ஏறிச் சென்ற செவிலித்தாய் திடுக்கிட்டாள்!
எத்தர்களாம் கட்டியும் பாணனும் செய்திட்ட சூழ்ச்சியினால்
எதிரிகளின் பாசறைக்கு இழுத்து வரப்பட்டோம் என்றுணர்ந்து,
எரிமலையாய் வெடித்தபடி, ''இந்த இழிதகைச் செயலுக்கு,
எவன் வகுத்தான் வீரம் என்று ஓர் இலக்கணம்?''
எனக்கேட்டக் காவற்பெண்டை நெருங்கி;

''பசுமந்தை கவர்ந்தபின்தான்; தாயே;
பகையெதிர்த்துப் போரிடுதல் இந்தப் பாணன் வழக்கம்!
உறையூர் அரண்மனையில் பசுவாக நீ இருந்து
உறவாக வளர்த்தமகன் ஓடிவிட்டான் நாட்டைவிட்டு!
ஒப்பில்லாப் பேரழகி ஐயை எனும் ஒய்யாரியும்
உன் மடியில் தவழ்ந்து வளர்ந்தவள்தானே!

அதனால்தான்;
காவற்பெண்டாம் இந்தக் காராம்பசுவைக் கவர்ந்துள்ளோம்
- உன்
கன்றனைய கட்டழகுப் பெட்டகமாம் ஐயை; இந்தக் கட்டியெனும்
மன்னவனை,

மணந்து கொள்ளச் செய்துவிடு! பின்னர்
மன்னித்து மறந்திடுவோம் உறையூர்மேல் பகையுணர்வை
என்றான் பாணன்!

''மண்வளத்துப் பின்னர் நீங்கள்
பெண் வளத்துப் போவதற்கு - உறையூர்வாழ்
மக்கள் எல்லாம் மரங்கள் அல்லர்! அதனாலே
மறந்திடுங்கள் ஐயைநல்லாள் அடைகின்ற திட்டத்தை'' என்றாள்!

3. **''கொய்யாக் கனியாம் ஐயையினை மறப்பதெனில் எளிதான**
காரியமோ?
கொத்துக் கொத்தாய்ப் பூத்த வேங்கை மரத்தின்
கவினுறு தாதுக்களைப் போன்ற அழகுத் தேமல்கள் நிறைந்து
கருங்கண்களுடன் விளங்கும் கட்டவிழா மொட்டுக்களாய்க்
குன்றென நிமிர்ந்த கொங்கை கொண்டாள் என்று
கோதையொருத்தியைப் பரணர் வர்ணிப்பாரே; அவர்
பாணியில் சென்று நானும் ஐயை முகம்
நாணிடப் புகழ்ந்து பாடிடல் வேண்டும்''

- என்ற;

கட்டி மன்னன் பேச்சுக் கேட்டுக்
காதுகளைப் பொத்திக் கொண்டாள் காவற்பெண்டு!
''பகைவர்களே! நீங்கள் எனை இந்தப் பாசறையில் கொன்றாலும்
பரவாயில்லை;
பசுந்தோகை ஐயையின் வாழ்வைப் பாழ்படுத்த விடமாட்டேன்
அறிவீர்'' என்றாள்!

''அதையுந்தான் பார்ப்போம்; அடே! யாரங்கே?
அடையுங்கள் இவளை ஒரு கூண்டில்'' என்று; ஆணையிட்டான்
கட்டி மன்னன்

*

1. **''இகந்தன ஆயினும், இடம்பார்த்துப் பகைவர்**
ஓம்பினர் உறையும் கூழ்கெழு குறும்பில்
குவையிமில் விடைய வேற்றரு ஒய்யும்
கனையிருஞ் சுருணைக் கனிகாழ் நெடுவேல்
விழவு அயர்ந் தன்ன கொழும்பில் திற்றி
எழா அப் பாணன்.....''

(அகநானூறு : பாடல் : 113
பாடியவர் : கல்லாடனார்)

2. ''குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற்கட்டி நன்னாட்டும்பர்.....''

(குறுந்தொகை : பாடல் : 11
பாடியவர் : மாமூலனார்)

3. ''நாகிள வேங்கையின்
கதிர்த்து ஒளி திகழும் நுண்பல் சுணங்கின்
மாக்கண் மலர்ந்த முல்லையள்.....''

(புறநானூறு : பாடல் : 352
பாடியவர் : பரணர்)

பொருள் விளக்கம் :

இகந்தனவாயினும் = எல்லைகடந்த தூரமாயினும்.
பகைவர் ஓம்பினர் உறையும் கூழ்கெழு குறும்பு = பசுக்களைப் பாதுகாத்து பகைவர் உறையும் உணவு மிகுதியான அரண்!.
குவை இமில் விடைய வேற்று ஆ ஒய்யும் = திரண்ட திமில் கொண்ட காளைகளுடன் கூடிய பகைவர்களின் பசுக்களைக் கவர்ந்திடும்!. சுருணை = பூண். கனிகாழ் = நெய்கனிந்த வேலின் தண்டு. எழாஅப் பாணன் = புறங்கொடாத பாணன்.
நாகிள வேங்கை = கொத்துக் கொத்தாய் பூத்துள்ள இளவேங்கை மரம். நுண்பல் சுணங்கு = நுண்ணிய பலவாகிய பூந்தாது.



பத்து மாதம் சுமந்து பெற்ற தாயினும் சாலப்
பரிவு காட்டி வளர்த்த தாய் காவற்பெண்டு;
பகைவரது பாசறையின் கூண்டுக்குள்ளே
பறவைபோல் சிறகடித்துப் பதைப்பதை அறியாப்
பாசமகன் நற்கிள்ளி, ஐயையினைப் பார்ப்பதற்கு,
பொற்கூரை வேய்ந்துள்ள மாளிகைக்குள் நுழைந்தவுடன்
நற்கண்ணை அங்கிருக்கக் கண்டு அதிர்ந்து போய்
நின்றுவிட்டான்!

''அண்ணை வருக!'' என அழைத்திட்ட ஐயை நல்லாள்; உன்னைக்
கண்ணைக உயிராகக் கருதுகின்ற கவியரசியினைக் காண்க!''
என்றாள்!

''மண்ணையும் மகராசன் கட்டியென்பான் - மணப்
பெண்ணைக உனைக்கொள்ள முற்றுகையிட்டுள்ளான்! - மனம்
புண்ணைக உறையூர் மக்கள் எல்லாம் புறப்பட்டுப்
போருக்குக் கிளம்புகின்றார் - நற்கண்ணையினை;
நாளைக் காலைக்குள் போர்ப்
பண்ணைகப் படைவீரர்க்குப் பாட்டொன்று எழுதச்சொல்!''
என்றுரைத்த கிள்ளியின் கால்வீழ்ந்து;

''மண்ணைகப் போகட்டும் என் வாழ்வென்று முடிவெடுத்து
விட்டீரா? இதற்காகவோ
பெண்ணைக நான் பிறந்தேன்?'' எனக் கேட்டுக் கண்ணீர்
உகுத்தாள் நற்கண்ணை!

''தங்கையினைக் காண வந்தேன் - இங்கும்
மங்கையுந்தன் மையல் கதை கேட்கும் வேதனையா
எனக்கு வேண்டும்?

ஐயை! வருகின்றேன் நான்; நாளை
அதிகாலைப் போர்முனைக்குப் போகின்றேன்!
நற்கண்ணை நல்லதமிழ்க் கவியரசி - அவளுக்கு

பொற்கிழியொன்றைப் பரிசாக வழங்கி நீயே வழியனுப்பி
வைத்திடுக!''

எனக்கூறி நகர்ந்தவனே எதிர்மறித்து;
''தன வணிகன் பெற்றெடுத்த மகள்தான் நான்!
தந்திடுவீர் பரிசென்று தமிழ் எழுதிப்பிழைக்க வரவில்லை!
முந்தி நான் அறிவித்த சூளுரையை
முடிமன்னன் மகனே! உமக்கு மீண்டும் நான்
நினைவூட்டுகின்றேன்!


வாழ்ந்தால் உமை மணந்து வாழ்வேன் - அன்றி
வீழ்ந்தால் உமது வாள்முனையால் வீழ்வேன்
இஃதுறுதி என அறிக!'' என்றாள்!

''இரண்டுமே நடக்காதென்று அறுதியிட்டு
இன்னும் ஒருமுறை கூறுகின்றேன்!'' என
இன்னுச்சொல் இறைத்துவிட்டுச் சென்றுவிட்டான் கிள்ளி!

புயலில் ஆடாத கொடி பார்த்ததுண்டோ;
பொய்யில்லை இதோ இரு கொடிகள்,
புயற்காற்றில் அசைவற்றுப் போயின காண்!

1. **தித்தனிட்ட கட்டளைப்படி நாளவையின் முரச ஒலி;**
திக்கெட்டும் பரபரப்பாய்ப் பரவிடவே,
திகைத்துப்போய் நடுங்கினர்கள் பாணன், கட்டி!
கிள்ளியில்லா நேரத்தில் உறையூரை வென்று
துள்ளி விளையாடவந்த பகைவர்கள்;
முள்ளில் இட்ட ஆடையினை எடுத்தாற் போதுமென்று
''கள்ளியாம் ஐயை எனும் கருங்குரங்குப் பெண்
யாருக்கு வேண்டு''மென்று கூறிவிட்டுப்
போருக்கு வராமலே கடையைக் கட்டி
புளிக்குமிந்தப் பழமென்று கூறி,
இளிக்கும் நரியைப் போல் ஓடிவிட்டார்!

களம் புகுந்தால் புறமுதுகு காட்டவேண்டும் - பின்
உளம் நெகிழ்ந்து கூனிக்குறுக வேண்டும்!
காவற்பெண்டு மட்டும் நமது காவலிலே இருக்கட்டும்;
காலாள், புரவி, களிறு, தேர்ப்படை நான்கும் திரும்பட்டுமென்ற
கட்டி, பாணனது ஆணைகேட்டுச்
சட்டி சுட்டதடா - கைவிட்டதடா என்றெண்ணி
நண்டுக்குஞ்சுகள் வளைநோக்கி விரைவது போல்
நாடு திரும்பியதாம் நலமாக நாற்படையும்!



இந்த
நற்செய்தி உறையூர் மாளிகைக்கு எட்டியதும்,
நற்கண்ணையினைத் தழுவிக்கொண்டு ஐயை நல்லாள்;
''படையெடுத்து வந்த நச்சுப் பாம்பிரண்டும்
பாய்ந்து வரும் கீரியாம் நமது கிள்ளிக்குமுன்
நிற்க முடியாமல் நெளிந்தோடி விட்ட
நிகழ்ச்சியினைப் பாட்டொன்றுய்த் தீட்டுக!'' என்றாள்.

''செத்திருப்பேன் இந்நேரம் உன் அண்ணன் கையால்!
செவிலித்தாய் காவற்பெண்டு வரட்டுமென்றிருக்கின்றேன்!
''நானே முன்னின்று நடத்திவைக்கின்றேன் திருமணத்தை''
என்றார்; அதை
நம்பிக்கொண்டு நானுமின்னும் இருக்கின்றேன் உயிரோடு!
எண்ணியவாறு இனிதாய் என்காதல் நிறைவேறி உன்
அண்ணியாகும் பேறு நான் பெற்றுவிட்டால்
வெண்ணிலவு, தென்றல், தீம்பாகு, தேன்மழையன்ன
எண்ணற்ற கவிதைகளை எழுதிக் குவித்திடுவேன்'' என்றாள்!

அப்போது
தோழியொருத்தி பெருமூச்சு வாங்க ஓடிவந்து பெருங்
கோழிநாய்கன் மகள் உயிர் மூச்சு பறிக்கின்ற சேதி
சொன்னாள்!

''கட்டி, பாணன் எனும் கயவர் இருவரும் - நமது
காவற்பெண்டைச் சிறைக்கூண்டிலிட்டு இழுத்துச்
சென்றுளதால்
செவிலித்தாயை மீட்டுவர - நாளைக்குச்
செருமுனை செல்கின்றார் நற்கிள்ளி!''

இன்பச் செய்தியினைத் தொடர்ந்து - இந்தத்
துன்பச் செய்தி வந்ததாலே;
இரவுணவை மறுத்துவிட்டு, உறங்குதற்கு
இருவருமே தனித்தனி அறைக்குச் சென்றார்!

*

காலையிலே பாணன், கட்டி இருவர் நகர் முற்றுகையிட்டு
காவற்பெண்டுத்தாயை மீட்பேன் எனச் சூளுரைத்து;
நள்ளிரவில் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்த
நற்கிள்ளிச் சோழன் காதில் கதவுதட்டும் ஒலிகேட்க; ''இந்த
நற்கண்ணையின் தொல்லை தாங்க முடியவில்லை'' என
முணுமுணுத்தவாறு அசைந்தெழுந்து சென்று அறையின்
முன்வாசல் கதவுதனைத் திறந்து பார்த்தான்!

''அம்மா வந்து விட்டீர்களா?'' என ஆச்சரியத்தால்
அலறிவிட்டான்!
ஆமாம்! காவற்பெண்டு எதிர்வந்து நின்றாள்!

''மகனே நற்கிள்ளி! மன்னன் கட்டியையும் அவன் தோழன்
பாணனையும்
மாமூலனார், கல்லாடனார் எனும் இருபுலவரும் சந்தித்து,
பகைவர்களின் உயிர்பறிக்கும் போர்முனையில்கூட
பண்பாடு காக்கின்ற நெறிமுறைகள் உண்டு!
உறையூரின் இளவரசியை சிறைபிடிக்கச் சென்றீர்;
ஓடிவந்தீர் நற்கிள்ளி வந்துவிட்ட செய்தியினைக் கேட்டு!
எதிரியின் வலிவு பெருகியதுணர்ந்து நீவிர் எடுத்த முடிவு நன்று!

எனினும் எங்களில் ஒரு தமிழ்க்கவியைக் கைது
செய்தமைக்கு என்ன நியாயம் உண்டு?

கணநேரமும் தாமதிக்காமல் காவற்பெண்டை விடுவித்திடுக!
- அப்படியோர்
கட்டளையினை இப்போதே நீவிர் பிறப்பிக்காவிடில் இன்றேடு
கல்லாடனார், மாமூலனார் உறவு அற்றுப் போயிற்றென
முற்றுப்புள்ளி வைத்திடுக;

இரு புலவர்களும் இவ்வாறு சினந்து கொண்டவுடன்
ஒரு நொடியும் தயங்காமல் எனை விடுவித்தார்!
திருமகனே! உனைக்காண ஓடோடி வந்தேன் - என்
மருமகளாய் நற்கண்ணை இங்கு வந்தாளே; எங்கே?'' என்றாள்!

''தாயே! அடியேனை மன்னித்திடுக; அவளை நான் மணந்து
கொண்டால்
தமிழுக்குக் கிடைக்கவேண்டிய இலக்கிய அணிகலன்கள் பல
கிடைக்காமலே போகும்!
தமிழ் இனமானமும் தடந்தோள் வீரமும் மேலும் உயர்ந்து
சிறந்திட,
அமிழ்தாய்க் கவிதைகள் அவள் இயற்றிட வேண்டும்;
அதை விடுத்து,

அந்தப்புரச் சிறையினில் அந்தப் பாடும் பறவையை
அடைத்துப் போட்டால் அணுப் பயன்தான் உண்டோ,
தமிழுக்கு?'' என்றான்!

''இலக்கியங்கள் தமிழில் வார்த்தெடுக்க;
இல்வாழ்க்கை தடையாக இருக்குமென்று யார் சொன்னார்?
மாந்தோப்பில் குலுங்குகின்ற பழங்களைப்போல்

மங்காப்புகழ் தமிழ்க்கவிதை குவிப்பதற்கு
மணவாழ்வு மறுப்பா கூறும்?
மாதுளைச் சாறுடன் மலைத்தேன் கலப்பதாலே கசப்பா தோன்றும்.

மகனே கேள்; மறுக்காமல் என் வேண்டுகோளை ஏற்றிடுக!''
என்றாள்.

''மறுப்பதாக எண்ணிடாதீர் அம்மா! நான்
வெறுக்கவில்லை நற்கண்ணையினை - ஆனால்;
போர்வாளைத்தான் நான் காதலிக்கின்றேன்.
பூவிதழை அல்ல! அல்ல! அல்லவே அல்ல;'' என்றான்!

''வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது மகனே - ஊரார்
கூறுவதுபோல் உனைப்பெற்ற உண்மைத்தாயாக இருந்திருந்தால்,
தாய்சொல் தட்டாத தனயனாகத் திகழ்ந்திருப்பாய்! இந்தச்
சேய் வளர்த்த செவிலித்தாய்தானே காவற்பெண்டு!
அதனாலே அலட்சியப்படுத்துகின்றாய் என்னை;
அன்புள்ள இளவரசே! நான் வருகின்றேன்'' என நகர்ந்தாள்!

''இதயத்தில் ஈட்டியினை எறிந்துவிட்டீர் தாயே!
இனியும் நான் பிடித்த பிடியில் உடும்பாக இருக்கப்
போவதில்லை!
எனைப் பெற்றெடுத்த தாய்தான் தாங்கள் - அதற்கு
எடுத்துக்காட்டாக; நாளைக்காலையிலே
நற்கண்ணையினை நானே போய்ச் சந்தித்து
நல்ல முடிவை அறிவிப்பேன்''

கிள்ளியின் உச்சிமோந்து வாழ்த்துக்கூறி,
''நள்ளிரவு ஆயிற்று அதனால் நாளைக்கு வருகின்றேன்;
இருவருமே நற்கண்ணையினைப் பார்த்து
இனிய செய்தி கூறுவோம்'' என்றுரைத்து
விழிவடிக்கும் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்தவாறு தன்
வீட்டுக்குத் திரும்பிச் சென்றாள் காவற்பெண்டு!

*

நற்கண்ணையின் தூய காதல் வெற்றியினை நினைத்தவாறு
நற்கிள்ளி இமை மூடி இன்பத்தில் ஆழ்ந்திருந்தான்!
நாழிகை ஒரு சிறிது கழிந்த பின்னர்,
ஆழிசூழ் உலகமே அவளாய் மாற - கற்பனைக்
கனவுலகில் பயணமானான் - காதற்
கிளியுடனே இணையாகப் பறக்கலானான்!

அச்சத்தால், நாணத்தால், மடம், பயிர்ப்பால்
அருகில் வராது அசைந்தாடிச் சென்றவளை

'இச்'சென்ற முத்தத்தால் புலன்மாற்றி
இழுத்தணைத்துப் பஞ்சணையில் போட்டுக்கொண்டான்!
இருமேனி - திருமேனி - ஒன்று கருமேனி; அது அவன் மேனி!
மறுமேனி - மாம்பழ நிறமேனி - மங்கையவள் மாயமேனி!
அமுதகலசங்கள் இரண்டும் நெஞ்சில் அழுந்த அழுந்த - அவள்
குமுதவிழிகளோ குறுகுறுக்க இன்பம்! இன்பம்! இந்தக்

கனவுப்பனியின் பொழிவு கலைத்து
நினைவுக் கதிரோன் முளைத்திடவே
கண்விழித்துக் கொண்ட கிள்ளி;
களிப்பு சிந்தும் முகத்தினனுய் - ஒரு
கால்தூக்கித் தலையணைமேல் போட்டுக் கொண்டான்!

இவ்வாறு

பஞ்சணையில் பரவசமாய்ப் படுத்திருந்த கிள்ளிமீது
பறந்து வந்து விழுந்தது ஓர் ஓலைச்சுருள்!
எடுத்துப் படித்துப் பார்த்த கிள்ளி,
துடித்துப் போய் எழுந்து நின்றான்!
''இன்றிரவு இளவரசி ஐயை
இங்கிருந்து சிறையெடுக்கப்படுகின்றாள்''
ஓலையிலே இச் செய்தி கண்டு
உரக்கச் சிரித்திட்டான் கிள்ளி!
ஓடி ஒளிந்த கட்டிக்கும் பாணனுக்கும்
உடல்தினவு அடங்கவில்லை போலும் - என்
உடன்பிறப்பாம் ஐயையினைக் காப்பாற்ற; இந்த
உடைவாளே போதுமென உறுமிக்கொண்டு,
ஊழித்தீயெனப் புறப்பட்டான் - தங்கை
உறங்குகின்ற மாளிகைக்கு!

*

1. **''வலிமிகும் முன்பின் பாணனெடு மலிதார்த்**
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடுஇன் தெண்கிணைப் பாடுகேட்டு அஞ்சி
போரடு தானைக் கட்டி
பொரா அது ஓடிய.....''

*

(அகநானூறு : பாடல் : 226
பாடியவர் : பரணர்)

பொருள் விளக்கம் :

வலிமிகும் முன்பின் பாணன் = வலிமை மிகுந்த போர் ஆற்றல் கொண்ட பாணன். தார்மலி தித்தன் = வெற்றி மாலைகள் மிகுதியாக அணிந்த தித்தன்.
பாடுஇன் தெண்கிணைப் பாடு = மகிழ்ச்சியொலி கிளப்பும் தோற்கருவியின் முழக்கம். நாளவை = அரசனின் அத்தாணி மண்டபம். போர்அடு தானைக் கட்டி = போரில் பகைவரை வெல்லும் ஆற்றல்மிகு படைகளைக் கொண்ட கட்டிமன்னன். பொராஅது = போராடாமல்.

*



நீலமயிலொன்று தோகை விரித்ததுபோல் அமைந்த
கோலமிகு கட்டிலிலே கோதை ஐயை நல்லாள்
அனிச்சமலர் தேகத்தை அரவுரியன்ன ஆடையால் மூடி;
அண்ணன் வரும் தகவல் ஒன்றும் அறியாமல்,
ஆழ்ந்ததோர் உறக்கத்தில் மூழ்கியிருந்தாள்!
காவற்பெண்டின் முன்னே கட்டியும் பாணனும் ஐயையின்
கட்டழகைக் கற்பனையாய்ப் புகழ்ந்ததொன்றும் மிகையே இல்லை!

பரணர், ஒரு பாவை குறித்து அவள் ஆடையுரித்துப்
பாட்டெழுதினரே; அதற்குச் சரியான எடுத்துக்காட்டாய்ச்
சோழமகள், சொர்ணத்தின் வார்ப்படமாய், காளைகளைச்
சொக்கவைக்கும் பாற்குடங்கள் படைத்தவளாய்க் காட்சி தந்தாள்!

தென்றல் வந்து பலகணி வழியே நுழைந்து
திருட்டுத்தனமாய் அவள் மேலாடை நகர்த்தியதால் வானத்
திசைமுழுதும் பரவி நின்ற விண்மீன்கள்;
திடுக்கிட்டுத் திகைத்துக் கண்சிமிட்டிப் பார்த்து,
மலையிரண்டுக்கிடையே வெண்ணிலவு தோன்றி - அதுவும்,
மாளிகைக்குள் மஞ்சத்தில் குளிர்பொழிவதெவ்வாறு என்ற;
மருமத்தை அறிவதற்கு ஆவல் மிகக்கொண்டு,
மந்திராலோசனைக் கூட்டமே நடத்துகின்ற விந்தை என்னே!

அந்த இரவில்;

காற்றசைத்துக் கொஞ்சுகின்ற திரையினூடே
கரும்போர்வை போர்த்திய உருவமொன்று
கையிலொரு கட்டாரி பிடித்தவாறு - ஐயையின்
கட்டிலுக்கருகே வந்து நின்று,
சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே - அந்தப்
பத்தரை மாற்றுப் பாவையினை உற்று நோக்க;
அப்போது உடன்பிறப்பைக் காப்பாற்ற உடைவாளுடனே
அண்ணன் கிள்ளியும் அங்கே வந்துவிட்டான்!

ஆலயத்துச் சிலைபோல அவளை அபகரித்து ஓடிவிட,
ஐயை என்ன ஊமையா? செவிடா? உயிரற்ற பதுமையா?
அதனால் நச்சு மூலிகையொன்றைக் கொண்டு
அவளை மயக்கமுறச் செய்த பின்தான்
சிலையாக்கிச் சிறையெடுக்க முடியுமென
சிந்தித்து முடிவெடுத்ததுபோல்;
கரும்போர்வை உருவம், கையிலுள்ள
கட்டாரியினைக் கீழே வைத்துவிட்டு
மூலிகை முடிச்சொன்றை - ஐயையின்
மூக்கருகே கொண்டு செல்ல முயன்றபோது;

''மூடனே! மூர்க்கனே! நில்லடா; என்று
வேடனொருவன் விலங்கின்மேல் பாய்வதுபோல்
வீரவேங்கை நற்கிள்ளி தோன்றி - உடைவாளை,
வீசுதற்குக் குறிபார்த்து ஓங்கிவிட்டான்!
இனியும் தாமதித்தால், எதிர்பார்த்தவாறு
இலட்சியம் நிறைவேறுதென்று; அந்த இருட்டுருவம்,
எடுத்தது கையில் கட்டாரியை! அப்போது
தடுத்தது ஐயையின் கை எனினும் - அவளை
நெட்டித் தள்ளிப் படுக்கையில் கிடத்தி
நெஞ்சுக்கு நேரே கட்டாரியை உயர்த்திப்பிடித்த
கரும்போர்வை உருவத்தை நோக்கி,
இரும்பு நெஞ்சன் நற்கிள்ளி உடைவாளை எறிந்தவுடன்;
கட்டிலருகே இருந்த தீபம் கீழே விழுந்து,
காரிருள் எங்கும் கப்பிக்கொண்டதய்யோ!

''ஆ!'' என்று வீறிட்டு அடங்கிய அவலக்குரல் ஓர்
ஆரணங்கின் குரலாய் இருப்பதை உணர்ந்து
''ஐயை! ஐயை! அன்புத் தங்கையே! - உன்
ஆவிபோக்கிடும் எமனுக நானே வந்துவிட்டேனு?''- என்றலறி,
விளக்கொன்றை விரைவாக ஏற்றிக்கொண்டு
விழியிரண்டில் மழைபொழிய அருகிலோடித் துடித்தான் கிள்ளி!

அங்கு கண்ட காட்சி என்னே?
ஐயைக்கோர் ஆபத்துமில்லை!
ஆனால் நற்கண்ணை தான்
உறையூர் இளவல் வீசிய
உடைவாளை நெஞ்சில் தாங்கி
உயிருக்கு விடைகொடுத்துக் கொண்டிருந்தாள் - அவள்,
உருவத்தை மறைத்திருந்த கரும்போர்வை
ஒரு மூலையிலே ஒதுங்கிக் கிடந்ததுவே!



ஐயை, அவளைத் தூக்கி அணைத்துக்கொண்டு
''அண்ணு! இஃதென்ன அநியாயம்?'' என்றாள்!

''இளவரசி! அவரை ஒன்றும் சொல்லாதே!
இது நானுகத் தேடிக்கொண்ட இனிய முடிவு!
உன் எதிரில்தானே சூளுரைத்தேன்; நினைவில்லையா? - அதனை
உன் முன்னிலையில் நிறைவேற்றிக் காட்டிவிட்டேன்!
வாழ்ந்தால் உமை மணந்து வாழ்வேன் - அன்றி
வீழ்ந்தால் உமது வாள்முனையால் வீழ்வேன்!
என்று நான் சொன்னபோது;
இரண்டுமே நடக்காதென்று,
எடுத்தெறிந்து பேசினரே, நற்கிள்ளி!
இதோபார்; யார் வாளால் வீழ்ந்துள்ளேன் பார்!
இளவரசியுன்னை சிறையெடுத்துப் போவதாக
எழுத்தைமாற்றி நான் எழுதி வீசிய ஓலையால்
ஏமாந்துபோனார் உன் அண்ணன்!
எதிரியெனக் கருதிக்கொண்டு
எப்படியோ என் சபதத்தை
அவரையறியாமல் நிறைவேற்றி வைத்துவிட்டார்!
அதற்குநான் உனக்குத்தான் நன்றிபல கூறவேண்டும்!
உனைக் கொல்வதுபோல் நான் பாசாங்கு செய்ததால்தான்
உன் அண்ணனது உடைவாளை முத்தமிடும் பேறு என்
உடலுக்குக் கிடைத்தது!

என் மனத்தில் நான்
எழுப்பிய கோட்டையினைக்
கட்டி முடிக்காவிடினும்,
எண்ணியவாறு என்னுயிரினைத்
திண்ணியராம் தித்தன் மகனுக்கே
அளிப்பதென்ற உறுதியிலே
அணுவளவும் தவறுமல்
அற்புத வெற்றியினைக் கண்டுவிட்டேன்!''

வேதனையின் சாயல்கூட முகத்தில் படராமல் - களத்திலோர்
வீரன் மரணத்தை ஏற்பதுபோல், நற்கண்ணை பேசப்பேச,

''மன்னித்துவிடு நற்கண்ணை'' என்று கதறி
மண்டியிட்டு அவள் தலையைத் தன் மடிமீது வைத்துக்கொண்டான்!
கண்ணீர் வழிந்திட்ட கிள்ளியின் கன்னத்தை, தன்
காந்தள் விரல்களாலே துடைத்திட்டாள் நற்கண்ணை!

''போர்வாளைத்தான் காதலிப்பார் உன் அண்ணன்!
பூவிதழை அல்ல! அல்ல! அல்லவே அல்ல!''
கூர்கொண்ட உடைவாளுக்கு உயிரைத் தந்துகொண்டே
நேர்கொண்ட பார்வையுடன் நேரிழையாள் இதைச்சொல்ல;
வேர் அற்ற மரம்போல நிலையற்றுத் தள்ளாடி, நற்கிள்ளி;

''விடிந்தபின் தாயுடன் ஓடிவந்து உறையூர் அரண்மனையின்
விளக்காக உனை ஏற்றுக்கொள்ளக் காத்திருந்தேன் - அதற்குள்,
முடிந்ததே உந்தன் வாழ்வு என் அறியாமை இருட்டாலே!''
என்றழுதான்!

''அன்னை காவற்பெண்டு வந்துவிட்டாரா?'' என்று
அகமகிழக் கேட்டவாறு தலையைச் சாய்த்தாள்!
குபுகுபுவெனக் கொட்டுகின்ற குருதி நீர்வீழ்ச்சியிலே
குளித்துக்கொண்டே கவியரசி, ஒன்று சொன்னாள்!

'' இனியவரே! இன்றென்காதல் கைகூடியது! எனை,
ஈன்றெடுத்த தாய் எனக்கு எவ்வாறு காவலிருந்தாள் தெரியுமா?''

1. தாமரையின் காம்புகள் விரிந்து மலர்ந்த பூவிதழ்கள்
உதிரும்படி

தரணிவாழ் மக்களுக்கெலாம் வாழ்வளிக்க
காரிருளிலும் மழை பொழியும்! அப்போது
காற்றுல் தூக்கி வீசப்படும் அலைகளின் துளிகளைத்
தடுக்கமுடியாமல்
புறத்தே விடுக்கின்ற சிறிய கரைகளையுடைய
பொற்றுமரைக் குளத்தைக் காத்திடும் காவலன்போல,
எனைப் பெற்றெடுத்த தாயார் கண்மூடாமல்
எனைக்காத்திட்டாள்!
உனைஅடைய நானே; அவளையும் மீறி,
தடாகத்துச் சிறுகரையில் மோதிவெளியேறும்
தண்ணீர்த்துளிபோல ஓடிவந்தேன்!

இப்போது

கண்ணீர்த்துளி சிந்துகின்றீர்; இதுவே நமது காதல்
மணவிழாவின்
பன்னீர்த்துளி எனக்கருதி மகிழ்கின்றேன்!
போர்வாளை மட்டுமே காதலிக்கும் என் கண்ணாளா! இந்தப்
பூவிதழுக்கும் ஒருமுறை அருள்பாலிக்க உமது திருவுளச்
சம்மதமோ?'' என்றாள்!

அரும்புமீசை அவள் இதழில் பொருந்த
கரும்பாய் முத்தம் நூறு கொடுத்தான்!

ஒன்றை மட்டும் பெற்றுக்கொண்டு அப்போதே அவள்
உயிர் பறந்து விட்டதாலே; உறையூரான் மயங்கி வீழ்ந்தான்!

*

(முற்றும்)

1. ''..... ஈங்கைத்
துய்அவிழ் பனிமலர் உதிர வீசித்
தொழில்மழை பொழிந்த பாஅட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்
பெருங்குளம் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே!''

*

(அகநானூறு : பாடல் : 252
பாடியவர் : நக்கண்ணையார்)

பொருள் விளக்கம் :

ஈங்கை = தாமரை. துய் = காம்பு. தொழில்மழை = உலகில் தொழில்களுக்கு முதன்மையான மழை.
பாஅட் கங்குல் = நள்ளிரவின் இருட்டு.
எறிதிரைத்திவலை = வீசுகின்ற அலையின் துளி.
சிறுகோட்டு = சிறிய கரையினையுடைய.

*



ROCK FORT Publications (P) Ltd.
MADRAS - 600083